The coming of உ in the medial position, for purposes of easy enunciation, had already been noted. It remains to remark the formation of the verbal nouns from those forms, by the doubling of the penultimate plosive eg., பல்கு=பலுகு=பலுக்கு.

There is also the palatalisation of dentals in the construction of some of the verbs eg., தீய்ந்த becomes தீஞ்ச. This tendency began just about the time of Cilappatikaaram, which has such forms as அஞ்ஞை for அன்னை, and continued well into the period of Tēvaaram, which has, for example, செயஞ்ஞின்ற for செய்ந்நின்ற. By the time of Nannuul, this has ceased; and that book does not favour such usages; for, in the meantime, the pendulam has gone to the other extreme, as revealed by the inscriptions, where we have the dentalisation of palatals. eg. நாயிறு for ஞாயிறு.

The causal (செய்வி) etc., may be distinguished from the causative, (பிறவினை eg. நடத்து), both differentiated from the ordinary verbs of the primary form. Primary forms, in this work, are almost as a rule, used in the causative sense. eg. வணங்கு; for வணக்கு; பூணும் for பூட்டும் etc.

The distinction between அன்மை and இன்மை seems to be slowly disappearing so much so, the word அன்றி is used in the sense of இன்றி in this book.

It is usual in Tamil for verbs to become deverbalised and nominalised. They receive the special name of வினையாலணையும் பெயர். There is a further change noted in this book, where such words cease to denote any tense, even when possessed of a tense-sign.

The verbs cease to be verbs as such and come to denote the action alone, without emphasising the number and gender, which are usually denoted by the suffix. The suffix in most of the verbs are redundant: their signification viz., tne number and the gender, is already denoted by the subject of the work. It is because of this, that the suffix loses its stress aud disappears altogether in Malayālam. Forms like 'கேட்டது', as a verbal noun, are developed, which, though denoting a tense, do not refer to any gender or number in spite of the suffix 'து'. In this way, a common verb for all genders and numbers are being developed, reminding us of verbs like வேறு, இல்லை, உண்டு, mentioned in Nannūl and அல்ல, in use in modern times, as a common verb. This, therefore, seems to be the persisting tendency in Tamil.

The rules of agreement are not strictly followed. Singular nouns get a plural predicate. The singular nouns come in as 'சிவன்' etc., where, probably, 'ன்' is taken to be indivisible from the Proper name, without any emphasis on அன் as masculine singular. Sometimes, the plural compound, as subject, receives a singular predicate, because of the emphasis on one of the parts of the compound eg., தாய்தந்தை கேட்டான் or கேட்டான். Sometimes this irrigularity in agreement, may be due to the method of emphatic condemnation, something like the usage in திருக்குறள்: "எனைத்துணைய ராயினும் என்னும் தினைத்துணையும் தேரான் பிறனில் புகல்?" (144).

The proper sequence of tenses is also not uniform. In some cases, the the present tenses intervene, in between preterites, possibly as historic present. In between present finite verbs, intervene preterites, for emphasising certainty. The future tense, sometimes, intervenes here, probably, to emphasise something habitual. The verb for 'saying', when placed before the direct speech is begun, is always in the future tense. There is no uniform principle adopted in referring to direct and indirect speeches and many a time, they are mixed up.

The other explanation for all these characteristic features is that the language of the book follows the idiom and idiosyncracy of the Spoken tongue, graphicaly changing its construction of a sentence, according to emphasis, according to the sudden rush of a new idea or new turn of phrase. Interjections like ஐயோ and அடகெடுவாய் vivify this kind of emotional and natural talk. மகிமைதான் என்ன என்ருல், சொல்லுகிறேன்; and பாரையட are idioms and peculiarities of this kind of literature, as proved by the dramas of that age.

The old rule, that the conjunctive participle of the formula 'செய்து' and the finite verb completing it, should have one and the same subject, is honoured more in the breach than in its observance. This conjunctive participle செய்து and the infinite (செய) often interchange, almost as a rule.

There is the conditional participle of the formula செயின் and this takes the 'செய்தால்'. form: eg. ஆடுகின்றுல் etc., for 'ஆடினுல்'. Perhaps it is another form of 'ஆடுகிற்பின்'. It is clear that these wonds denote past tense. The sudden emergence of 'கின்று', as a present tense sign, in the language of Kural, Cilappatikaram and Tevāram, is a riddle. ஆடுகின்றுல் etc , should be studied with reference to this problem. Foms like 'போகின்று' (போயிற்று) denote past tense in the Sangam age, even as it seems to, in these forms like ஆடுகின்றுல், where we have only the instrument ஆல்' as a sign of the conditional, added on to the finite verbs ஆடுகின்று etc. .

What appeared at first sight to be conditionals like குளிக்கில் and இருக்கில், after examination, are found to be peculiar usages, in this book, of verbal nouns in the locative case, meaning குளிக்கையில், இருக்கையில்.

Apart from repetitive words, or frequentative words like கொடு கொடுக்கும், there are other repetitions either emphasising the habitual usage eg., 'வகுவன் வகுவன் என்று', the contiunity eg.. அஞ்சி அஞ்சி. or the intensity of the meaning. There are other kinds of repetition of subject matter, repetition of phrases—அந்தாதி—so familiar to students of folk literature and old epics. There are other kinds of repetitions so usual in ordinary speech.

When the words, with the meaning of the second case, are piled up, it is curious to note, that some come with the case signs, whilst others stand without the case signs, as though, they were in the Nominative case. These are not cases of mixing up of compounds and declined nouns; these have to be taken as cases of ellipses.

In piling up words enumerated, the meaning of 'and' is conveyed in some words by 'உம்', in others by ஒடு 'otu'; in the third by உடன்; and in others by the term without any such participle (which term is called 'செவ்வெண்'.). This mixture is really peculiar. This செவ்வெண் comes to be treated as உம்மைத் தொகை or conjuctive compounds, and declined as one word eg., தாய் தகப்பனொடு.

When relative participles are to be piled up, the old rule was to convert, all those except the last, into conjunctive participles; but, in this book, as in modern times, the relative participles themselves without any change are used. each one of them separately, coming to qualify the noun, at the end. The syntax seems to treat these as parentheses.

Within the genitive compound no word can intervene. But, the feeling, developing to tolerate parentheses, seems to bring, in the middle of such compound a word qualifying the second part of the compound.

The construction, with the help of relative clauses, is, something, unknown to Tamil. But contact with Sanskrit slowly develops this construction, in Tamil, from the time of Nammalwar, if not earlier,eg. உய்வற உயர் நலம் உடையவன் எவன் அவன். In this book, we have any number of such constructions. 'எது அது' is the usual form. In some cases, we do not have this kind of symmetry; we have cases of 'எவ்வளவு அது' (which ought to he அவ்வளவு.)

Though this book is for the common man, which explains the colloquial language of the work, it is after all a version of a literary Purānam. Therefore, literary idioms, based on old usages, are also found in this work. The medial suffix கில் 'kil' showing the ability of the subject to do the work denoted by the verb, is found profusely used in this book. The Viira Coliyam rule that ழ will follow all the rules of Sandhi, prescribed for ல is probably true of the dialect of the author, which fact alone will explain forms like தாட்சி for தாழ்ச்சி. There are also a number of figures of speech, all of which have become rooted in Tamil literature, thanks to the traditional study of Dandin's work, in Tamil land, in addition to ordinary figures, prevalent all over the world: உவமை, உருவகம், வேற்றுப் பொருள் வைப்பு, எடுத்துக் காட்டுவமை, தீதரிசனம், சொற்பின் வருநிலை, சிலேடை, தீபகம் etc., some of which are found expressed, in the most natural way, revealing the beauties of the Spoken tongue.

QUOTATIONS:

The final epilogue actually gives the number of verses taken from Māgha Purānam. A comparison of these verses, quoted in our manuscript with those found in the original work, shows a number of variations in readings, some of which, as found here, are really better.

THE VARIOUS KINDS OF மாகம்:

The மாகம் is connected with Māgha Nakshatra and is the name of the month in which the full moon is found, ordinarily, in the constellation Māgha. This occurs, in what is now called the Māsi month—a period roughly from the middle of February to the middle of March. This work is in praise of a bath during this month, a bath which is here considered to be very holy. Prayaag is mentioned in this book; and this reminds one of the Kumbha Méla which occurs in this period of the year. Māsi Makam festival, also, occurs in this month, though this work has nothing to say, in particular, about this famous South Indian festival. In one place, this Māgha bath is stated to be occuring in three months The first is the Dēva Māgha Bath beginning from the 'ēkādasi' or the 11th day of the bright part of the month in 'Kārttikai' and ending with the ēkādasi of the Mārkazhi month; the second is the Rishi Māgha Bath, beginning from the ēkādasi of Mārkazhi and ending with the ēkādasi of Tai month; the third is Pitru Māgha Bath, beginning from the latter day and ending with the ēkādasi of the Māsi month.

TAI AND MĀRKAZHI:

The bath is taken in the cool waters, at dawn, or before sunrise. From very ancient times, the Tai bath was considered to be famous and holy. The Sangam works refer to this bath by every virgin, who prays for a husband, for herself, and for the rain and prosperity, for the land. This is called Ambā bath (அம்பாவாடல்), since the form of Kātyāyani (amba) is to be made out of the sand, on the banks of the river or tank, in which people bathe. Later on, one gets

the Pāvai fasts and feasts, celebrated in Tiruppāvai and Tiruvempāvai. It is interesting to note, that the name "Tiruppavai-Tiruvempavai" had become the name of the National festival of SIAM and other South Eastern countries. This Pāvai fast is also, with reference to the prayer for rain and fertility, for the land, and, for a husband, for the virgin praying. The festival seems to have been celebrated, at times, in what one now calls, Tai, and at other times, in Mārkazhi. Pāvai was definitely celebrated, according to the references in our Pāvai literature, in Mārkazhi. How, then, can one equate the Tai bath with the Mārkazhi bath? Various methods of calculating the months had come into vogue, from time to time. The calculation, according to the sun, will make the Mārkazhi month, to correspond to the lunar months, Tai and Mārkazhi. There is again the difference in calculating the lunar months themselves; according to the modern usage the lunar month begins with Amāvāsya; and according to this, in the Chingleput district, people speak of Māgha bath, as beginning from Tai Amāvāsya and ending with Māsi Amāvāsya. In former times, there are reasons to suspect, that the lunar month, probably began with the full moon, which is specifically referred to, by Āndāl, in the opening verse of Tiruppāvai. In her age, the Tai festival, as probably occuring in the solar month Tai, was differentiated from Mārkazhi Pāvai, as a separate festival for Manmatha, specially celebrated by the virgins, for being blessed with the husband of their choice and love. The Māgha Purānam mentions a third method of calculating the month, from ēkādasi to ēkādasi.

ĀRDRA:

Mārkazhi is famous for its Ārdra, which is called in Tamil Tiruvātirai, famous as the holy day of Divine Dance. The constellation ORION is the the natural representation of Natarāja in the skies. Aatirai is the day of the swing festival in Malabar; and the 'Tiruppāvai-Tirevempāvai' festival of SIAM was celebrated as a National swing festival. On the Ārdra day women folk fast; and, in the evening, tie round their neck, a tumaric - dyed, string, all reminding one of the Pāvai and Tai fasts.

PRECESSION OF THE EQUINOX:

The Precession of the equinox takes us back to the days of the Orion becoming the starting point of the Zodiac. Later on, for a long time, till the days of Varāha Mihira, Kārttika Nakshatra was considered to be the starting point of the Zodiac, and that day of the year, was celebrated with rows of lights or Dipāvali, as pointed out in the Sangam literature. But, thanks to the precession of the equinox, Asvini became the starting point of the Zodic: and North India celebrates its new year and Dipavali, on this day, which occurs in September-October. The Kārttika bath of the new circle of the sun bacame the Tulā bath. There certainly seems to be a confusion with or a concious mixing up of the Kārttikai and the Mārkazhi fasts and baths. There is a celebration called Pillaiyār Nōnpu, which is celebrated on the Satayam day, the twenty first day after the Kārttikai full moon. Finally, came the Kumbamēlā idea of the

North and the result is the Māgha bath, extending from Kārttikai to Māsi. Probably, the name Tulā-snanam prevented that becombing confused with Māghasnānam. It is clear that the most important fasts and most ancient festivals of South India fall within this period of three montns: the ēkādasi festival and the Sivarāttiri festival, being specifically mentioned and described in this Ammānai itself. This book, in one great sweep, captures the heart and imagination of Tamil land.

DHARMA AND HELL:

This Purānam describes, with the help of the age long stories, the good results flowing from observing this bath and fast. Any good ending in the mythical stories can be described as the direct outcome of this fast. There is a verse in the Purānam, (See verse on Page 22, lines 225) that the Queen of the Heavens, Athithi and Sita were blessed with their respective husbands, thanks to their observing this fast, a fast and a bath similar to the Tai and Pāvai celebrations. The author could havc developed these stories as well. But after all, the Purāna has to end some where; and that is, probably, why the author contents himself with some, out of the many possibe stories.

THE STORY:

The story begins with the description of the sacrifice of Dilipa, the father of Raghu, that great progenitor of the race of Rāma. The conquest of death being an attractive ideal, the story of Mārkandēya and his progenitors is also narrated. The author takes advantage of the oppurtunities, to describe the various kinds of hell, the punishments meted out there, a gruesome description which was probably necessary in that age of Pālayagārs, when might was right. Chastity and household duties, the various kinds of charities and fasts are also described, for giving weight to this work, though at the loss of some poetic interest. The story of the Vanṭānam bird reads like a fable; and the stories of giants and ghosts remind us of fairy tales. Therefore, this work rises to the height and glory of Purāna, fairy tales, fables, mythology, dharmasastra and kalpa sutra. The work is certainly more elaborate and more appealing to the ordinary man, than the Māgha Purānam itself.

TWO PARTS:

The Purānam, probably, ended with the 23rd Chapter, because it winds up there with the blessing song. The further chapters, therefore, must have been added later on, as the second part of this Māgha Purānam. Its trend is also different. In the original Purānam there is no separate prayer for this second part, as found in Ammānai. The Benediction song herein, is probably by an Advaitin; and the trend of the stories seems to suggest the samarasa out-look. These Chapters are in the Ammānai, unusually long. Therefore, they have been separately numbered.

NEED FOR MECHANICAL COPY:

The editing has shown the necessity for introducing the system of mechanical copying in all our manuscript libraries. It, also, had emphasised, in

my mind the immediate necessity, for introducing a course of study in Paleography and editing of manuscripts and inscriptions in our Tamil Honours course, a point which I had the honour of putting forward, as the President of the Tamil section of the All India Oriental Conference, at its session held at Annāmalai Nagar.

EDITIONS:

No uniform principle was followed in the edition of this book. For attracting the attention of the speakers of dialects other than the dialect of this book, and for winning the sympathy of those, who do not take kindly to colloquial forms, the correct forms of words were given in the first portion of the book, the readings in the manuscript being relegated to the foot notes and here the readings have not been omitted even in a single instance. After familiarising the readers with these readings, these colloquial forms themselves were presented in the Text itself. This policy will explain the absence of a uniform principle in editing. The correct and the only scientific way of editing is to present, from the beginning, the readings in the cadjan leaf manuscripts. I had compared the Paper Copy with two cadjan leaf manuscripts available at the Madras Oriental Library, and with the original printed Purānam. Printing is not as yet, all that we desire and it had not been been always possible, with my failing eye sight, to give a copy without any mistake when there was no time, to correct, except during nights, and in haste, to complete the printing before the close of the financial year.

THANKS:

Mr. M. R. Sivaprakasam Pillai, a Copyist of the Manuscripts Library evinced a great interest in the production of this work. He sat with me, in comparing the paper manuscript, with the cadjan leaves and helped me in correcting the proofs. I was surprised at his interest in getting the necessary leaves from another manuscripts, an interest which, unfortunately, does not inspire very many of our scholars. I must thank him. I cannot sufficiently thank Dr. M. A. Duraiarangaswamy for his kindness in going through my illegible notes and proofs. I must also thank the Proprietor of the Press who never grudged carrying out corrections introduced even in the third proof. But for the kindness of the Curator, I could not have, spent six months of my time in an interesting study of the Tamil of the Eighteenth century and I am therefore greatful to him and The Government which permitted me to undertake this work.

Presidency College,
Madras,
12—3—1956.

T. P. MEENAKSHI SUNDARAN.

முன்னுரை

நூலின் பெயர்:—

இந்த நூலின் பெயர் மாகபுராண அம்மானை என ஓர் ஏட்டுப் பிரதியில் கண்டுளது. மற்றொரு பிரதி இப் பெயருக்கு விளக்கம் கூறுவது போல மாகஸ்நான புராண அம்மானை என வழங்குகிறது. மாகபுராணம் என்பது தமிழ் விருத்தயாப்பில் அமைந்த நூலாகும்; 1412 பாக்களாலா கியது. அதிவீரராம பாண்டியர் பாடியது என்றும் வரதுங்க பாண்டியர் பாடியது எனச்சிலர் கூறுவர் என்றும் குறித்து இராமலிங்க குருக்கள் என்பவர், இந்த நூலை 1904-ல் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். அந்தப் பழைய நூலிலிருந்து சிலசெய்யுட்களை எடுத்துக்கொண்டு பழைய புராணப் பிரசங்கிகள் விளக்கங்கூறிச் செல்வதுபோல, இந்த அம்மானை நூலாசிரியர் சுருக்கியும் விரித்தும் பொதுமக்கள் மனத்தைக் கவரும் வகையில் பாடி யுள்ளார். ஆதலின், மாகபுராணத்தின் பெயரே இதற்கும் பெயராயிற்று. அம்மானையாகப் பாடியிருத்தலின். இது மாகபுராண அம்மானை என்ற விளக்கப்பெயர் பூண்டது.

அம்மானை ஆசிரியர்:—

இந்த அம்மானை பாடியவர் வீரபத்திரனார் என்பவர். இவர் தந்தையார் முத்து வீரப்பனார். இவருடைய பாட்டனார் இருளப்பராசர். இவர்கள் காவையூரைச் சேர்ந்தவர்கள். இந் நூலாசியர் தம்மை மணவைப்பதியான் எனக் குறிப்பர். இவருடைய ஆசிரியர், சுந்தரர் என்பவரின் மகனாகிய மீனாட்சிநாதர். இவர் சோழிய (தீக்ஷிதர்) மறையவர்; மதுரைப் புராணம் பாடிப் பரிசில் பெற்றவர்; பாண்டி நாட்டுச் செல்லூரார். வேம்பற்றூர்ச் சோழியர்கள் நம்பிகள் என வழங்கப் பெற்றுத் தமிழ்ப் புலவர்களாக வாழ்ந்தமையை உலகறியும். திருவால வாயுடையார் திருவிளையாடற் புராணம் பாடிய நில்லைத் திருச்சிற்றம்பல நம்பியாரது செல்லி நகர்தானே இச் செல்லூர் என ஓர் எண்ணம் நம் உள்ளத்தில் பிறப்பது இயல்பே. இராமநாதபுரத்து முதுகுளத்தூர்த் தாலுகாவில் செல்லூர் என்ற ஊர் ஒன்று இப்போது உண்டு. மணவை என்பது யாதென விளங்கவில்லை. அது மணக்குடியானால் அந்தப் பெயருள்ள ஊர்கள் பல உள்ளன. காவை யூர் என்பது காவனூரானால், அந்தப் பெயருள்ள ஊர்களும் பல உள்ளன. மதுரைப்புரணம் என்பதும் இப்போது கிடைக்க வில்லை.

புராண ஆசிரியர்:—

இந்த மீனாட்சி நாதர், முன்னோர்கள் விருத்தத்தால் எழுதிய தமிழ்ப் புராணத்திற்கு உரை யருளிச்செய்ய, வீரபத்திரனார் எல்லோருக்கும் விளங்க அம்மானையாகப் பாடினாராம். இங்கே மாகபுராணம் தமிழில் யார் பாடிய நூல் எனக் கூறப்பெறுமை குறிக்கத் தக்கது. அதிவீரராம பாண்டியர் போன்ற பெரியார் பாடியிருந்தால் அந்தச் சிறந்த குறிப்பினை அம்மானை ஆசிரியர் கூறாதுவிடுவாரோ? இப் புராணம் மீனாட்சி நாதரின் முன்னோர் பாடிய நூலோ என ஓர் ஐயம் பிறக்கிறது. விருத்தப் பாவினை மக்கள் அறிந்து கொள்ளாத காலம் அஃ[illegible]ன விளங்குகிறது.

நூலின் பிரிவு :—

இந்தப் புராணம் இரண்டு பிரிவாகத் தோன்றுகிறது. அம்மானை, 23-வது அத்தியாயத்தில் வாழ்த்துக் கூறி முடிப்பது போலப் புராணமும் அங்கே வாழ்த்தும் பயனும் சிறப்பும் கூறி முடிக்கிறது. பின்னைய பகுதி பின்னோர் எழுதிச்சேர்த்ததாதல் வேண்டும். அம்மானையின் பிற்பகுதிக்கெனத் தனியே கடவுள் வாழ்த்தும் உண்டு. நிர்க்குணப்பிரம அல்லது பரசிவ வாழ்த்தாக அது விளங்குதற்கு ஏற்பப் பிற்பகுதி சமரச நோக்குடன் நீண்ட கதைகளைக் கூறிச் செல்கிறது. இதனால், இப்பகுதியினை இரண்டாம் பகுதி எனப்பிரித்து முதல் இரண்டென அதன் அத்தியாயங்களையும் ஒரு பிரதியில் கண்டபடி எண்ணிட்டுப் பதிப்பித்துள்ளமை காணலாம்.

காலம் :—

இந்த நூலின் ஒருபிரதியில் "1035 ஆவது தைமீ 21-மங்கள வாரம் ஆயில்ய நட்சத்திரத்தில் மீனுட்சி யாயிக்காக இராசபாளையம் அப்பாவு குருக்களால்" எழுதப் பெற்றது எனக் காண்கிறோம். 1035 என்பது கொல்ல மாண்டானால், கி. பி. 1860-ல் எழுதப் பெற்றதாதல் வேண்டும்; தை மீ 21-பிப்ரவரி முதல் தேதியாம்; அன்று செவ்வாய்க் கிழமையே ஆம்; ஆனால், ஆயிலியம் அன்று நட்சத்திரம். அதிவீரராம பாண்டியருக்கு முன்னெழுந்ததாக மாகபுராணத்தை ஒருவரும் கூறக்காணேம். 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இப்பாண்டியர் கல்வெட்டு மறைகிறது. இந்த இரண்டு கால எல்லைக்குள்ளேயே இந்த அம்மானை தோன்றியிருத்தல் வேண்டும். பல பிரதிகள் தோன்றும் நிலைமை எழச் சிலபல ஆண்டுகள் கழிதல் வேண்டும். எனவே, 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றிய நூல் இஃது என்றால் பெருந்தவறாகாது.

பேச்சு வழக்கில் இலக்கியம்:—

அல்லியரசாணிமாலை முதலிய நூல்கள் மக்கள் மனத்தினைக் கவர்ந்தது போல, இந்த நூலும் தென்னாட்டில் பொதுமக்களிடை மிகப் பயின்று வழங்கியது போலும். பழைய சிறந்த இலக்கியங்களில் பழகிய நெஞ்சம் எளிதில் இத்தகைய பொதுமக்கள் நூலில் ஈடுபடுவது அருமையே. இதனைத்தானா அச்சிட வேண்டும் என்ற கருத்தெழுவதும் புதுமை அன்று. குடியரசில் வாழும் நாம் அவ்வாறு கருதுவதற்கில்லை. பொதுமக்கள் உள்ளம் ஈடுபடும் நூல் யாது என அறிவதே குடியரசு வாழ்வின் சிறப்பியல்பாம். 18-ஆம் நூற்றாண்டில் வழங்கிய பேச்சுத் தமிழினை விளக்க இந்த நூல் பெரிதுமுதவும் என்ற நோக்கத்தோடு சென்னைக் கைவழுத்து நூல் நிலையத்துள்ள இரண்டு ஓலைப் பிரதிகளோடும் மாகபுராண அச்சேட்டோடும் முழுதும் ஒப்பு நோக்கப்பெற்று இஃது அச்சில் வெளிவருகிறது.

அன்றைய பேச்சுவழக்கு :—சொற்களும் சொற்றொடர்களும்

இந்நூல் வழியே 18-ம் நூற்றாண்டைய தமிழின் ஒலிவகையான சிறப்பியல்களை ஆங்கில முன்னுரையில் குறித்துள்ளமையால் இங்குச் சுருக்கிப் பின்னே தருகின்றோம். இந்த நூலில் வந்துள்ள வழக்குகளைக் கீழேகாண்க:

வடிவாக	எய்யாமல்	கட்டாணி முத்து
இரக்கமுடன் தயவு	கண் கொள்ளாப் பேரழகு	அபமிருத்து
நன்பு	பணிதி	நிட்டூரர்
சோடனை	சிங்காரத் தோப்பு	நாலா விதம்
உபசாரம்	முழைந்து	கூழுட்டை

உடலுடு சத்துரு
காலா காலம்
பாதரட்சை
வக்கணை
வங்காரம்
நாகரிகமான
சிக்கனவே
இதமாக
கொஞ்சமல்ல
ஆக்கினை
மாடம்
கூடம்
உப்பரிகை
மேடை
நேர்வழி
சல்லி
சுக்காம் பாறை
கொடும் பாதை
சலாகை
முள்ளூசி
சாணேற முழஞ்சறுக்கும்
அள்ளுமிருள்
முறுக வறுத்து
கும்பகும்பலாய்
கானல் வீசி
எக்குவயிறு
இளிந்தவாய்
வெண்பசி
கூதல்
கொடுங்காற்று
கொடு கொடுக்கும்
கொப்பளம்
கமர் வெடிக்கும்
நீச்சு நிலை
துட்டுத்தடி
தெள்ளிமை
தண்டியுள்ள
கால்வாரி
வண்ணுயுத பரீட்சை
வசனிக்கும்
தேட்டமெனும்
வாந்திபமாய்
பாந்தகமாய்

ஆக்கிரகம்
ஆக்கிரமம்
குபீர் என்று
பீறி
அருகாண்மை
சோடு
அரசாணி
பூரிதானம்
காப்பு
அகடியம்
தணப்பில்லா
வாகுடனே
வாகொத்த
தினிப்பாய்
அத்துவம்
பலுக்கை
நில்வாழ்க்கை
இழுபட
தாழ் வடங்கள்
தள்ளாட
அசங்கியம்
தந்தபந்தி
அடைவாக
மாலையிட்டு
கைப்பிடித்து
கண்ணுளன்
ரவணீகம்
கங்குபகல்
ஒன்றி
பெருக்கம்
பெருமை தப்பாமல்
உத்தரிகம்
உபதானம்
அபிவாதை
உத்தரபோசனம்
மாலுடனே
கரை தூற்றல்
வலிதான
அசல் வீடு
தொட்டகணவன்
தலையழுக்கு
திருநாள்

கற்பனையால்
ஏகாங்கி
வைதிகம்
பழக்கோலம்
வாட்டரவு
நேமகிஷ்டை
பிரதிட்டை
ஆசமனம்
குணங்கி
வெளுறி
சூலாக
அக்கினிப்பாளம்
ஆயத்துறை
அறக் கொடுமை
கணக்கில் இரண்டெழுதி [வைத்தல்
குண்டக்கம்
துக்குணி
துடிதுடிக்க
வன்கொடுமை
கோதுபட
வரிந்துகட்டி
தொய்யவே
சளப்பட்டு
உத்தண்டம்
விதறிய
கைப்பான
ஓயிலாக
சப்பரமஞ்சம்
மோடி
சுகியான
தூமை
கஸ்தி
வருத்து
தீண்டல்
சோராமல்
மணக்கும்புகழ்
போக போக்கியங்கள்
அகோரமென
கையிலாகு
வண்டன்
வெகுவாக

மெத்த நல்லது
சாலம்
உழறுகிறேம்
வாய் மதம்
கற்பணி
அனுசரி
தடுப்பாக
தன்னிடும்பால்
கூடழிந்து போம்
பாவகமாக
பறக்கவிடு
செப்பமுடன்
பாசை கூறல்
பழி சாட்டி
வாழட்டும்
செய்த குறை
தாக்குடைய
சிங்கார
ஆலாவிருட்சம்
ஆய
நப்புடைய
வாஞ்சையுடன்
கனக்கும் புகழ்
வாழி சொல்வி
வாராயடா
மந்திர பீடம்
சிலது
பூராயம்
வன்னம்
தாட்டிமை
ஓவியமாய்
ஆகமுடன்
ஓதமென
நன்னயமாய்
ரோம புளகிதன்
மெய்ப்பாக
நற்புடன்
சூட்சம்
கோடான கோடி
கதிக்கும்
இனிப்பான
பாங்கான

இன்னுலகு
உற்ற
சித்திரமாய்
கபாய்
சாடு
ஆசு
ஆதாளி
செடியொதுக்கி
நட்ட ணை
ஒளிவைத்து
தவ்வி
கடுவாய்
பூஞ்சாறு
ஒத்தூதுவர்
குறுங்காடை
மாங்காடை
செடிப்புதை
அண்டில்கள்
பலது
இஷ்டலாபம
சட்டமாக
தருகு
சோபம்
தூவும் வெயில்
எக்களிப்பாய்
சட்டரசம்
இஷ்ட கோலாகலம்
தங்குவேட்டை
விருத்தாந்தம்
தென்னன்
அப்படியாக் கொத்த
மாந்தாதி மாந்தர்
உடையவன்
விரசு
ஆவுகின்ற
மாபொருட்டால்
பவுசு
இயல் கொடுமை
மலக்கடி
நரிக்கடுக்கை
சதிகாரன்
பஞ்சா அமுர்தம்

கட்டாக
சமதண்டிணை
சோலி
சிந்தி யொழிந்தது
சூச்சாதி சூச்சம்
ஒய்யாரம்
குந்தனம்-
தீட்டினுள்
பூட்டினுள்
காஞ்சி
தெவிட்டாத
தேசிகம்
ஏமாறி
ஆசை மண்டை கொண்டு
கைவிட்ட சூத்திரம்
நிலை குலைய
சதிராக
காயக்கம்
கனவ
தளும்பாமல்
முற்றூது
மானவன்
மேலில்
வீறுடைய
வாய்த்த
ரஞ்சிதமாய்
இனியான
கயறு
அதிய
ஏகாந்தம்
கோட்டி
இங்கிதமாய்
மஞ்சுமழை
பண்டம் பதார்த்தம்
வரிசையுடன்
மாவாரும்
நீதம்
அழுத்தமுடன்
காந்தினசொல்
காலின்படம்
துடினம்

சிலுக்கு	வயணம்	அடைபணியாரம்
பகுந்து	பாடாக	கவிச்சி
அம்மன்	பக்காக	கொடிக்கயிறு
பொன்போல்	பசப்பி	சிங்கி கொடி
கடவை	கோதம்	சிம்பும்
வீரியமாய்	சலுகை	சின்னமனிதர்
தெளிவார	வர்மம்	மம்மல்
காண்டனர்	துற்சனமே	தேட்டாளா
வயிறு பிசைந்து	சிலாக்கியம்	வலுவீனம்
மூதாக்கள்	வெளிகி	வண்டுருக்கு
சற்பனை	தீங்கனி தின்பண்டம்	முடுக்கினர்
அதிர	கசடன்	சூல் கொண்ட
பாக்கியம்	கிடையாக	வள்ளலார்
கனிமை	நடைமாறி	கார்த்தியல்
அபயமிட்டு	நசைப்படுத்தும்	மாத்தை
கோடு குத்தி	திட்டு முட்டாகி	துல்லிபம்
ஆன பசுக்கள்	நோக்காடு	சொன்னவை
பேர்பாதி	சாக்காலம்	சடுதி
ஊழிவினை	பூததயவு	வாங்கி
தீராட்டக்காரன்	ஆணுவம்	கினைஞோர்
வனைவு	மாய்கை	நடங்கள்
திக்காடி	கெடி	நறுமீர்க்கடுக்கை
மீறு	வழிபாடு	வைத்தானுபதேசம்
நருக்கு கவரடி	பரிவட்டம்	சூடினுர்மதம்
நன்றி	சன்னிதானம்	கொடுபோய்
கேந்திரம்	சன்னிரோதனம்	தேவா அமுர்தம்
குடுமிக்கலியாணம்	சோடசோபசாரம்	எவ்வளவோ அந்தப்பலன்
தேம்புவார்; தேமுவார்	காயத்ரி	அக்கியானம்
அகோர	பச்சைப்பதார்த்தம்	ஏறுமாறுக
சளப்படும்	செகச்சால நாயகன்	மனு எனம்
சாளை	குருவி	ஈளாவர்
சவடு	இசித்த	மணவைப்பதை

அந்தப் பேச்சுவழக்கின் போக்கு:—

அந்த நூற்றாண்டில் வழங்கிய பேச்சு வழக்கினைபற்றிக் கீழே சில குறிப்புக்கள் காணலாம்:

1. பூனும் என்னும் பொருளில் பூட்டும் என்பது வரக்காண்கிறோம். தன்வினை, பிறவினைப் பொருளில் பயின்றுவரவும் காண்கிறோம்.

2. செய்து என்ற வாய்பாட்டு வினையெச்சம், தன் வினைமுதலின் வினை கொண்டுதான் முடியவேண்டும் என்ற விதி இங்குப் புறநடையாகிவிட்டது எனலாம். செய என் எச்சமும் செய்து என் எச்சமும் மாறுடக்காண்கிறோம்.

3. பகுதிகள், கு என்ற ஆக்க விகுதி பெற்று, மலையாளத்தில் போல, அழகு உண்கு கிற்கு, தருகு, சிறக்கு என்றே பெரும்பான்மையும் வருகின்றன.

4. இன்றி என்பதன் பொருளில் அன்றி என்பது வருகிறது.

5. இருக்கையில் என்ற பொருளில் இருக்கில் என்பது வரக்காண் கிறோம்; இவ்வாறே குளிக்கில் முதலியனவை வருதல் காண்க.

6. பண்ணுகின்றுல், ஆடுகின்றுல் என்பன போன்றவை, பெருவழக் காய்ப் பண்ணுகிற்பின், ஆடுகிற்பின் என்ற பொருளில் வருகின்றன. செயின் என்ற எச்சம் செய்தால் என விரிந்து வருவது இயல்பு. அங்குத்தான் கிற்பின் என்பது கின்றுல் என விரிகிறது போலும். பண்ணுகின்றுல் முதலியவற்றிற்கு பண்ணிகின்றுல் என்பது முதலாகப் பொருள் கூறுதலும் கூடும். இந்த இடங்களில் இறந்த காலப் பொருள் தோன்றுவது காண்க. நிகழ்கால இடைநிலையாகக் கின்று தோன்றிய கதை இன்னமும் புதிராகவே இருக்கிறது. ஆதலின், இத்தகையவழக்குகளை மேலும் ஆராய்தல் வேண்டும்.

7. வாட்டரவு முதலியவற்றில் அரவு என்ற விகுதி (தோற்றரவு முதலியனவும் காண்க.) காண்க

8. காரன் என்று முடியும் எத்தனையோ சொற்களைப் படைத்துத்தரக் காரன் என்ற விகுதி இன்று பயனிறது. இதன் வேரைச் "சதிகாரன்" முதலிய சொற்கள் வழியே இந்த நூலில் காண்கிறோம்.

9. இதுபோலப் புத்திசாலி முதலிய சொற்களைப் படைத்துத்தரும் சாலி என்ற விகுதியும் தன்மசாலி முதலிய சொற்களில் இந்த நூலில் வழங் கக் காண்கிறோம்.

10. வினைச்சொற்கள் காலம் காட்டாது வினையாலணையும் பெயராக வருவதனை ஆள்வோன் முதலிய வழக்குகள் விளக்குகின்றன.

11. 'ழ' என்பதற்குப் பதிலாக 'ள' வந்து, ள என்பதன் விதியினைப் பெறுவதனை வீரசோழியம் கூறியுள்ளது. இந்த முறை தென்னாட்டு வழக்கிற்கு மிகமிகப் பொருந்தும் என்பதனைத் தாட்சி மகிட்சி முதலிய சொல்வடிவங்கள் வற்புறுத்துகின்றன.

12. 'கில்' என்பது வழக்கற்றுப் போகவில்லை என்பதனை நேடுகிலும் போன்ற சொற்கள் நிலைநாட்டுகின்றன.

13. கடினம் என்பதனைப் பின்பற்றித் துடினம் என்ற சொல்லும், கனி என்பதன் அடியாகக் கனிமை என்ற சொல்லும், இடர் என்பதிலிருந்து இடர்கின்ற என்பது போன்ற வினையும், தூஷணை என்பதிலிருந்தும் தூஷணி என்ற வினையும், புதிய சொற்களாகப் படைக்கப்பெறுவதும் இந்த நூற்றுண்டின் இயல்பாம்.

14. காண்டான், காண்ட முதலிய வழக்குகள் கண்டான் கண்ட என்பன போலப் பெருவழக்காக வரவும் காண்கிறோம்.

15. பல்கு என்பது பலுகு (பலிகி) என்றுப்ப் பலுக்கு என ஈற்றொற் றிரட்டித் தொழிற் பெயராதலும் காண்க.

16. பெயரெச்சங்கள் அடுக்குவதும் காண்க.

17. ஆரும் வேற்றுமைத் தொகை நடுவே இடைட்பிறவருதல் அருமை. ஆனல், இந்நூலில் "மடிந்த பிள்ளையின் அந்தக் கதை" என்ற பொருளில் "மடிந்த பிள்ளை அக்கதை" என இடையே அகரச்சுட்டு வருதல் காண்க, இந்நூலைய வழக்கிற்கு அந்நாளிலேயே வித்து இடப் பெற்ற தெனலாம்.

18. போனஇடம் போனிடம் என்பது போல மருவி வழங்கலும் காண்க. "பஞ்சா அமுர்தம்" என்பது போலப் புணர்ச்சி வரவேண்டிய இடங்களில் புணர்ச்சி விதி இன்றி வருவதும் காண்க.

19. உம், ஓடு, உடன், செவ்வெண் முதலியவை ஒருங்கு தொடர்ந்து வருதலும் காண்க,

20. "அஞ்சி அஞ்சி" போன்ற அடுக்குகளும் காண்க.

21. இரண்டாம் வேற்றுமை பலபலவாய் அடுக்கி வரும்போது, உருபு சில இடங்களில் தொக்கும், சில இடங்களில் விரிந்தும், ஒருமுறை யின்றி வருதல் காண்க.

21. ஐயோ, அடகெடுவாய், காண் முதலிய உணர்ச்சிக் குறிப்புச் சொற்கள் சொற்றொடரின் இடையிடையே வந்து உணர்ச்சி நயத்தினை வளர்ப்பது காண்க.

22. உயர்வு காட்டும் மரியாதைப் பன்மையாம் பிற்கால வழக்கும் ன்-ள் என்றே முடியும் பழங்காலச் செய்யுள் வழக்கும் ஒருங்குமயங்குவதால் ஒருமைப் பன்மை மயக்கம் போலத் தோன்றுதல் காண்க. தாய்தகப்பன் என்ற செவ்வெண் உம்மைத் தொகைபோல உருபேற்றலும் காண்க. வினையிலும் ஒருமைப் பன்மை மயக்கம் பெருவழக்காம்,

23. காலங்களும் மயங்கக் காண்கிறோம். பேச்சு வழக்கும் நாடக வழக்குமாக இவை தோன்றுவதும் குறிக்கத்தக்கதாம். எதிரே தோன்று வதுபோலக் கூறுமிடத்து இறந்த காலத்திடையே நிகழ்காலம் வரும். தேற்றம் தோன்ற நிகழ்காலத்திடையே இறந்தகாலம் தோன்றும். கூற்றி னைப் பின்கூறி முன்னே 'கூறினன்' எனக்கூறும் வினையை முன் வைக்கும் போது, அந்தவினை பெரும்பான்மையும் எதிர்காலத்தில் அமையும்.

24. பேச்சில்போலச் சொற்றொடரின் முடிபு அவ்வவ் விடத்திற்கு ஏற்பப் பலமுகப்பட்டு மாறி வருதலும் காண்க.

25. "செய்துபோட்டது" போன்ற வழக்கும் காண்க. இத்தத் துணை வினை விணைநிகழ்ச்சி முழுதும் நிகழ்ந்ததனைக் குறிக்கும். இவ்வாறு பல துணைவினைகள் வழங்குவதும் காண்க.

26. தவம் உடையான் என வரவேண்டுவது அத்துச்சாரியை பெற்றுத் தவத்துடையான் என வருதல் காண்க. திருநீலகண்டத்துக் குயவனார் போன்ற பழைய வழக்குகள் நினைவிற்கு வருகின்றன.

27. பல்லில் எழும் எழுத்துக்கள் அண்ணச் சாயல் பெறுவது தமிழில் பழைய வழக்கு; மலையாளத்தில் இன்றைய வழக்கு. மலையாளத் திற் கடுத்துள்ள இடத்தில் இவ் வழக்கு இந்த நூலில் வழங்குவது புதுமையன்று. நிய்ந்த என்பதற்குத் 'தீஞ்ச' என்ற வடிவம் வருதல் காண்க. சிலப்பதிகாரத்திலும் அதற்குப்பின் தேவாரகாலத்திலும் பரவிய இந்த வழக்கு நன்னூலார் காலத்திற்குள் மாறியது; ஞாயிறு நாயிறு என மாறும் வகையில் எதிர்த் தட்டில் பாய்ந்தது; ஆனால், மலையாளத்தில் பிரிந்துசென்றமொழியின் வழக்காக நிலைபெற்றுவிட்டது. இதுகொண்டே மலையாளம் பிரிந்த காலத்தினைப் பல்லவர்கால முடிவென வரையறுக்க லாம். மலையாள நாட்டின் அண்மையில் உள்ளமையால் தென்பாண்டி நாட்டிலும் இந்த வழக்கு இவ்வாறு இடம்பெறுவதாயிற்று.

28. பேச்சு வழக்கில்போலவும் பழைய பொதுமக்கள் இலக்கியத் தில்போலவும் திருப்பித் திருப்பிச் சொல்லுதலும், அந்தாதி வருதலும் சொற்பொருட்பின் வருநிலை வருதலும் இங்குக் காண்கிறோம். உவமை, உருவகம், சிலேடை, நிரனிறை, வேற்றுப் பொருள்வைப்பு, எடுத்துக்காட் டுவமை விளக்கணி முதலியன வாராமல் இல்லை. வேறுபிற நயங்களும் அங்கங்கே கீழ்க்குறிப்பில் சுட்டப்பெற்றுள்ளன.

29. "ஆண்டு வருஷம்" போன்ற தொடர்கள் ஒரே பொருளுள்ள இரண்டு சொற்களா லமைந்தவை. இவற்றில் ஒன்று தமிழ்ச்சொல் லாகவும் மற்றொன்று பிறசொல்லாகவும் வருவது இங்ஙனைய "கேட் வாசல், கிரிசனயில் எண்ணெய்" முதலிய வழக்குகளை நினைப்பூட்டும்.

30. 'மயிமைதான் என்ன எனில்' 'சொல்கிறேன் கேள்' 'வாராயடா வேந்தா' போன்ற வழக்குகள் காண்க.

31. சேர்+ரோமசன்=சேரோமசன் என்பதுபோன்ற மரூஉ வழக்கு களும் காண்க.

32. வினைமுற்றுக்கள் தொழிற்பெயராகப் பாற்பொதுமை பெறும் வழக்கினையும் காண்க. கேட்டிருந்தது எனவருதல் காண்க.

33. எது அது; எவ்வளவோ அது (அவ்வளவு என்பது பொருள்;) முதலிய சொற்றொடரமைப்புகள், யத்-தத் என வரும் வடமொழி மரபினை ஒட்டித் தமிழிற் புகுந்தவை (Relative Construction) இந்த நூலில்பெரு வழக்காகி விட்டன.

34. துல்லியம் என்பது துல்லிபம் என இந்நூலில் வருகிறது. கல்வெட்டுக்களில், முத்திரைபோல, அரசன் கூறியபடியே உள்ளது ' எனச் சரிபார்த்ததின் அடையாளமாக, இந்தச் சொல் காணப்பெறும். அரசன் கட்டளையின் முடிவில் துல்லியம் எனக் கண்டிருக்கும். சரி என்ற பொருளில் இஃது இந்த நூலில் வழக்காகிவிட்டது. துல்யம் என்பது சமம் என்ற பொருளில் வரும் சொல்; துலாமுதலிய சொல்லோடு தொடர்புடையது.

35. வினைமுற்றில் பால்காட்டும் விகுதியாக வருவன குறிப்புப் பெயர்களே (Pronouns) என்பர் அறிஞர் கால்டுவெல். 'நடவுங்கள்' முதலியபோல இன்று வழங்கும் சொற்களில், முன்னிலையைக் குறிக்கும் 'உங்கள்' என்பது விகுதியாக வந்து, முன்னிலையைச் சுட்டக் காண்கிறோம். 'உம்' என்பது அப்படி முன்னிலை விகுதியாக வருவதனை 'நடவும்' என்பதனில் காண்க. இது செய்யும் என்ற வாய்பாடுபோலத் தோன்றுதலின், இடையில் உகரம் கெடுவதும் உண்டு. 'நடவுங்கள்' என்பது 'உம்' ஓடு 'கள்'ளும் பெற்றதே ஆதலின், இங்கும் 'வு' கெடுவது பெருவழக்காகிவிட்டது. 'நடங்கள்' என்ற வடிவம் இந்நூலில் வருதலின் 18-ம் நூற்றாண்டிலேயே வழங்கிய வழக்கு எனலாம்.

ஒலி மாற்றங்கள் :

17-18 நூற்றாண்டில் விளங்கிய ஒலி மாற்றங்களைக் கீழே காண்க.

அ :

அ—எ ஆம். சிறப்பாக வடமொழி ஐவருக்கங்களில் ஒவ் வொன்றிலும் மூன்றாவது எழுத்தாக வருபவை இவ்வாறும்.

(உ-ம்) தண்டனை = தெண்டனை.

அ—இ ஆம். (உ-ம்) அதனால் = அதினால்; வஞ்சனை = வஞ்சினை.

இ—அ ஆம். (உ-ம்) வயிறு = வயறு.

ஐ—அ ஆம். (உ-ம்) யானை = யான. இரண்டாம் வேற்றுமை ஐ—அ ஆகும் எனத் தொல்காப்பியம் கூறுவது நினைவுக்கு வருகிறது. எனவே, அகரம் பின்னுயிராக ஒலிப்பதினும் (Back Vowel) நடு உயிராகவே (Central) ஒலிக்கிறது எனலாம். இதனால் இரண்டு அகரங்களுக்கு இடையே 'ய்' உடம்படு மெய்யாதலும் காண்க. (உ-ம்) மன்னன்(ய்) ஆகும்.

அகரம் உதட்டுச் சாயல் (Labialisation) பெறுவது உண்டு; (உ-ம்) அவர் = அவ்வோர்; மன்னர் = மன்னோர்; தந்தையர் = தந்தையோர்.

பால் காட்டும் விகுதிகளின் நெடில் ஆ குறுகுகிறது. (உ-ம்) வணங்குவார்க்கு (வணங்குவார்க்கு).

ஐ என்ற நெடில் மொழியிடையில் குறுகும் என்ற பழைய விதி போலப் பிற நெடில்களும் மொழியிடையில் குறுகுகின்றன. இவ்வாறு

கொள்ளாமற் போனால் சீர் சிதைவதனை அங்கங்கே கீழ்க்குறிப்பில் காட்டி உள்ளோம்

இ:

இந்த எழுத்து, நாக்கு மிக மேலாக ஓங்கும் நிலையில் ஒலிக்கப் பெறுவதால் 'யி' என்று ஒலிக்கிறது. மெய்யெழுத்தின் பின்னும் இவ்வாறு ஒலிக்கப் பெறுவதால் இந்த யகரம் உடம்படு மெய்யாகாது. இ—எ ஆதும். (உ-ம்) இனம்=எனம்; இயன்ற=ஏன்ற. இதற்கு மறுதலையாக எ—இ, ஆதலும் உண்டு (உ-ம்); ஏம=ஈம. ஈ, ஏ, ஐ, என்பனவற்றின் பின்னும் மெய்யெழுத்தின் முன்னும் வந்து 'ய்' வந்து ஒலிக்கின்றது. (உ-ம்) மை:; ஈய்ந்த; ஏய். இது பழைய கல்வெட்டு வழக்கு.

உ:

குற்றியலுகரம் சில போது குற்றியலிகரம் போல ஒலிக்கிறது (உ-ம்) புக்கு=புக்கி; இருபத்து=இருபத்தி. மொழியிடை உகரமும் இகரமாகிறது. (உ-ம்) அருமை=அரிமை; சிறு மொழி=சிறிமொழி. சிறியிலை என்பது சங்கவழக்கு.

தென்பாண்டி நாட்டில், சொல்லின் முதலில் இயல்பாக இன்று எழுகிற எடுத்தலோசை இல்லாமையால், மொழி முதலில் மெய்யெழுத்தோடு வரும் குறில்கள், நெடிலின் முன், ஒலி இழந்துகிற்கின்றனபோலும். (உ-ம்) புரு=ப்ரு; பலா=ப்லா. மொழி முதலில் தனி மெய் தமிழில் வராமாட்டாமையால் இந்த வல்லெழுத்துக்கள் பின்னே இகரம் பெறுகின்றன; (உ-ம்) பிரு; பிலா. இந்த நூலில், இந்த வழக்கிற்கு ஏற்பப் பல சொற்கள் வருகின்றன. (உ-ம்) புறம்=பிறம்; புரண்டு=பிரண்டு. இரண்டு என்பதன் அகரம் மறைந்து, பின்வரும் ரகரத்தினை ரெ என மாற்றவும் காண்கிறோம். (உ-ம்) ரெண்டு.

உ—இ ஆதற்கு மாறுக இ—உ ஆதலும் உண்டு. (உ-ம்) மறித்து=மறுத்து; குளிர்ந்த=குளுந்த; அடிமை=அடுமை; சிலிர்த்த=சிலுத்த.

குற்றியலுகரம் உயிர்முன் கெடுவது பழைய விதி; கெடாது உடம்படுமெய் பெறுவது பழைய புறனடை. இந்த நூலில் கெடாது உடம்படு மெய் பெறுவது விதியும், கெடுவது புறனடையுமாக மாறியுள்ளன.

பல இடங்களில் ஒ—உ ஆகிறது. (உ-ம்) தொலை=துலை. இதற்குமாறுக உ—ஒ ஆதலும் உண்டு. (உ-ம்) புசித்து=பொசித்து. முன்னைய வழக்கே இந்த நூலின் பெரும்பான்மை வழக்கு.

மெய்யில் முடியும் சொற்களை எளிதில் ஒலிக்க ஈற்றில் உகரச்சாரியை தந்து ஒலிப்பது இயல்பு. இந்தநூலில் இது பெருவழக்காம் (உ-ம்) ஊரு; பாரு. சந்தியில் இவ்வாறு வந்த உகரம் மறையும். ஆனால், அடிச்சொல்லின் அடிப்படை உகரமும் சாரியைபோல மறையக் காண்கிறோம். (உ-ம்) மேரு=மேர்; வயிறு=வயர்; சேறு=சேர். சில இடங்களில் சாரியை உகரம் எழுதப் பெற்றிருந்தாலும் சீரினைசையை நோக்கினால் அஃது ஒலி பெறுது

என்பது விளங்குகிறது. பேருக்கஞ்சி என்பது பேர்க்கஞ்சி என்று ஒலித்தால் மட்டுமே மூவசைச் சீராம். இந்தச் சாரியை மொழியிடையிலும் வருகிறது. (உ-ம்) பல்கு = பலுகு (பலிகு)

ஏ :

இதுவும் இகரம் போல யகரக் கூற்றோடு 'யெ' என்றே ஒலிக்கக் காண்கிறோம், அ—எ ஆதல் கூறினேம்; இந்த 'எ' பின் 'இ' என ஆகிறது. உ-ம்) பலம் = பெலம் = பிலம்.

ஜலம் = சலம் = செலம் = சிலம்.

ஜபம் = செபம் = செபம் = சிபம் = சிவம்.

'ய' என்பதும் 'எ' ஆகும்; 'ஏ' ஈ ஆகும். (உ-ம்) ஈம தெண்டினே. இவ்வாறு 'இ' வருதல் மொழிமுதல் மெய்யொடு வரும் உயிரினைச் செவ்வனே எடுத்த லோசையோடு ஒலியாமையாலும் நிகழலாம் என முன்னர் இகரத்தின் மேற்கூறியமை காண்க.

எ ஏ—அ ஆ ஆதலும் காண்க. (உ-ம்) எல்லாம் = அல்லாம்; வேண்டாம் = வாண்டாம், பின்னைய வடிவமே நூலில் மோனைக்கு ஒத்து வருகிறது.

ஐ :

அய், என்றே இது பெரும்பான்மையும் வரும். (உ-ம்) அய்யர்; பய்ய; நய்மிசாரணியம். எனவே ஐ என்பது மொழிக்கு முதலிலும் குற்றெழுத்தே ஆம் எனலாம். 'கைப்போது' என்பது 'எப்போது' என்பதனோடு எதுகை கொள்வதும் காண்க.

ஐ என்பது மொழியிடையிலும் முதலிலும் கடையிலும் 'அ' என்ற ஒலியே பெறுகிறது. (உ-ம்) தலமுறை; நிலமை; அம்பது; உட. இங்கெல்லாம் அகரம் அண்ணச்சாயல் பெறுகிறது எனலாம். இவ்வாறு, தெலுங்கு முதலிய மொழிகளிலும் 'தலி' 'தல' என வருதல் காண்க.

அறிஞர் கால்ட்வெல் 'ஐ' 'எய்' என ஒலிக்கும் என்பர்; இதற்கேற்ப நைவேத்யம் 'நெய்வேத்யம்' என வருகிறது. ஆனல் 'கருமதை' 'நெருமதை' என வருவது போல, 'நய்வேத்யம்' என்பதும் 'நெய்வேத்யம்' என வருகிறது என்றே கொள்ளவேண்டும். அ—எ ஆதலை முன்னரே கண்டோம். எகரத்திற்கும் அகரத்திற்கும் இடையான திராவிட ஒலிக்கு நெடுங்கணக்கில் எழுத்து ஒன்று, சிங்களத்தில் அமைந்தது போல, இங்கு அமையாமையால் இத்தகைய மயக்கம் வருவது இயல்பாயிற்று.

இந்திய ஐரோப்பிய மொழிநூலின்படி, ஐ என்பது ஏ என்பதன் நெடிலாம். இந்த நூலில் ஏ என்பது ஐ என எழுதப்பெறுகிறது (உ-ம்) கண்ணிலேயும் = கண்ணிலையும். 'ஐ' குற்றெழுத்து என்பது என முன்னரே குறித்தோம்; இங்கு ஏ என்பதும் குறுகிற்று என்பதனைக் குறிக்க 'ஐ' என எழுதப் பெற்றிருக்கலாம்.

ஐ என்பது 'இ' என்றுமாம். தொல்காப்பியத்தின்படி ஐ = அ + இ என்றுமாம். எனவே, இகரமாதல் என்றால், முன்பாதியாம் அகரம் கெடுவது என்றே பொருளாம். எனவே, இஃது இங்கே பின்பாதியில் எடுத்தோசை பெறும் சந்தியக்கரம் ஆதல் வேண்டும். (உ-ம்) குறளை = குறளி. ஆனால், தலைமுறை = தலமுறை என வரும்போது, ஐ = அ இ என்பதில், பின் பகுதியாம் இகரம் கெடுதலின், முன்பகுதி எடுத்தலோசை பெற்று ஒலிக்கும்போது பிற்பகுதி நலிந்து கெடும். ஐகாரத்திற்கு நன்னூலுரை நலிபோசை கூறுவது இதனால் தான் போலும்.

'ஐ' 'இ' ஆதல் போல, இ என்பதும் 'ஐ' ஆம். (உ-ம்) ருசி = ருசை.

ஓ :

உ—ஒ ஆம் எனக் கண்டோம்; (உ-ம்) புசித்தல் = பொசித்தல். அகரம் உதட்டுச்சாயல் பெற்று ஒ என்றுமாம். 'காண்பம்' 'செய்வம்' என்பன 'காண்போம்' 'செய்வோம்' என்பவற்றின் 'ஓ' குறுகி உதட்டுச்சாயல் பெற்ற அகரம் போல் ஒலிக்கின்றவையே அன்றிப் பழைய 'அம்' விகுதி அன்றும். உக = ஓ. (உ-ம்) மூடர் = மோடர்.

ஔ :

இந்த எழுத்தே இந்த நூலில் வரவில்லை. கௌதமன் = கெவுதன் என வருகிறது. இங்கும் முதலிலே வரும் 'க' என்பதன் அகரம் எகரமாயிற்று என்றே கொள்ளுதல் வேண்டும்.

ஆய்தம் :

இந்த நூலில் ஆய்தம் இடம் பெறவில்லை

அ—ஔ :

வந்துதோ என்பது வந்ததோ என வருகிறது. 'வந்து' முதலிய செய்து எனும் வாய்பாட்டுவினை எச்சங்களிருந்து வந்தவையே இந்த வினை முற்றுக்கள் என்பதனை வற்புறுத்த இந்த வடிவங்கள் வழங்குகின்றன போலும்.

உடம்படுமெய் :

ய்—வ் என்பன போல 'ம்' என்பதும் உடம்படுமெய்யாக வருகிறது (உ-ம்) என்ன + ஒ = என்னமோ; பழுக்க + உண்டு = பழுக்கமுண்டு. வகரம் இங்கு மெல்லொலி பெற்றது என்றே கூறவேண்டும். வகரம் இவ்வாறு மகரமாதலையும் இந்த நூலில் காண்கிறோம். (உ-ம்) குவிய = குமிய; விழி = முழி.

வ :

வடமொழி வகரம் தமிழில் ப என்றாகிறது. (உ-ம்) ஈசுபரன்; பார்பதி. இதற்கு மாறாகப் பகரம் வகரமாதலும் உண்டு (உ-ம்) கோபம் = கோவம். வகரம், அடுத்த மெய்யோடு, ஒன்றாக மாறுவதும் உண்டு. (உ-ம்) செல்வம் = செல்லம்.

ய:

'யார்' முதலியன 'ஆர்' என்பன மொழி முதல் யகரத்தினை இழத்தல்போல 'யமுனை' 'யாவர்' முதலியனவும் மொழி முதல் யகரம் கெட்டு 'அமுனை' 'ஆவர்' எனவரும். 'ய' 'ச' ஆதலும் உண்டு. (உ-ம்) அயர்ந்து= அசந்து.

யகரம் இந்த நூலில் பழையதொரு ககரத்தின் இடத்தில் வரும். (உ-ம்) கன்னிகள்=கன்னியள்; துகில்=துயில். இதற்கு மாறுக. இந்தப் பிழையைத் திருத்தும் முயற்சி போல எழுந்து சரியாக வந்துள்ள யகரத்தினையும் ககரமாக்குவதும் உண்டு. (உ-ம்) இடையூறு=இடைகூர்.

ர:

மொழி இடையில் இது பெரும்பான்மையும் மாறையும். (உ-ம்) பார்த்து=பாத்து; நேர்த்தி=நேத்தி; அசந்த; குளுந்த; சிலுத்த. ஈற்றிலும் இது மாறையும். (உ-ம்) தண்ணீர்=தண்ணி. பழைய வழக்கில் ரகரம் மொழி முதலாதல் இல்லை; இந்த நூலில் மொழிமுதலாகவே வருகின்றது. பழைமை போல இரண்டோர் இடங்களில் 'இராமர்' 'அரங்கன்' என இகரமும் அகரமும் முன்வர வருவதும் உண்டு.

மொழி இடையே ரகரம் புதிதாக வருவதும் உண்டு. (உ-ம்) கோவை=கோர்வை; கா=கார். 'ர' 'ல' என மாறுவதும் உண்டு. (உ-ம்) ரட்சி=லட்சி; கிங்கரர்=கிங்கிலியர்

தொல்காப்பியத்தின்படி ரகரம் நாமடி அண்ண எழுத்தாம். இந்த நூலில் பல்லெழுத்தாம் நகர லகரத்தோடு ரகரம் மோனை கொள்வதால் ரகரமும் பல் எழுத்தாயது போலும்.

ல:

இது வல்லெழுத்தின்முன் பெரும்பான்மையும் றகரமாம். எனவே, றகரமும் பல்லீற்றின்பின் எழும் வல்லெழுத்தாதல்வேண்டும். இங்கே 'ல்' என்பது உயிர்ப்பெழுத்தாம் (Voiceless) வல்லெழுத்தின்முன் தானும் ஒலிப்பினை இழந்து உயிர்ப்பெழுத்தாகிறது. இவ்வாறு மாறிய லகர ஒலியைக் குறிக்கவே 'ற்' என எழுதுவர். இந்த நூலின் காலத்தில், மலையாளத்தில் இன்று எழுதப்பெறுவதுபோல, இவ்வாறு மாறிய ஒலியைக்குறிக்க, அடுத்துவரும் வல்லெழுத்தினை இரட்டித்து எழுதி, அதன்முன் 'ல்' என்றே குறித்தனர். காலம் சென்ற திரு. T. K. சிதம்பரநாத முதலியார் எழுதியது இவ்வாறு தான். (உ-ம்) பற்பல=பல்ப்பல; கற்க=கல்க்க. பொதுவாக லகரம் ஒலிப்பொலி (Voice) இழந்து உயிர்ப்பொலி ஆகியதுபோலும். இதன் பயனாக மெல்லெழுத்துப் பின்வரும்போது பழைய விதிப்படி னகரமாகாது ல்-என்றே இந்தநூலில் நிற்கக் காண்கிறோம். இந்த நிலையில் லகரம் றகரத்தோடொக்கும் ஆதலின், ல, ற (ர) மாறுபடின. (உ-ம்) கழறுக=கழலுக; உழல=உழற.

ழ :

ஒலிப்புடைய அண்ண உரசு எழுத்தாம் இது யகரத்தின் அண்மை யதாம், இதற்கு ஒத்த ஒருபுற ஒலி (Lateral) ள என்பதாம். தென் ஞட்டில் 'ழ' 'ள' என்றே ஒலிக்கும். இந்த நூலின் காலத்திலும் அப்படியே ஆம். இரண்டோர் இடத்திலன்றி எங்கும் 'ழ' 'ள' என்றே எழுதப்பெற் றுள்ளது. எதுகைக்கு 'ள' என்பதே பல இடத்தும் ஏற்றதாம்.

ள ;

லகரம்போல ளகரமும் வலிமுன் ஒலிப்பு நிலைமாறி உயிர்ப்பெழுத் தாம்; இது ட் என்பதற்கு ஒத்ததாதலின் ட் என இதனை எழுதுவது பழைய வழக்கம். இந்த நூலில் கள்+குடி=கள்க்குடி என்பதுபோல வரும். மேலே லகரத்தினைப் பற்றிக் கூறியது காண்க.

பல இடங்களில் ளகரத்தின் மெல்லொலியாம் ணகரம் வருதலும் காண்க. (உ-ம்.)நீள் நீர்=நீண் நீர்

மெல்லெழுத்துக்கள் :

ஞ் என்பது இரட்டித்ததுபோல ஒலிப்பதனை வறிஞர்=வறிஞ்ஞர் என எழுதுதல் இந்த நூல் வழக்கு. இது சிலபோது வறிஞ்சர்போலவும் கேட்கும். மெல் ஈறு மெலிமுன் மறையும். ஒவ்வொரு சொல்லினையும் தனித் தனியே ஒலிப்பதன் காரணமாக இவ்வாறு ஈற்று மகரம் மறையாதும் நிற்கும். (உ-ம்.) தீர்த்தம் நீர். இதன் பயனாக, புணர்ச்சி விதியால் வரும் மகரத்தினையும் இயல்பீறாகவே கருதுகின்ற நிலையும் இந்த நூலில் உண்டு. (உ-ம்.)பூம் வாவி. மகரம், பகரம் ஒழிந்த மற்றைய வல்லெழுத்தின் முன், அவ்வவற்றிற்கேற்ற மெல்லெழுத்தாக மாறும். இந்தவாறே ணகர னகரமும் இந்த நூலில் மாறக் காண்கிறோம். (உ-ம்) மாண்பர்=மாம்பர்; வெண் சாமரை=வெஞ்சாமரை; இன்சொல்=இஞ்சொல். நன்மூர்த்தி=நம்மூர்த்தி; உன்தன்=உந்தன்; எதுகைக்கு இந்த மாறிய வடிவங்களே வேண்டப் படும். இதனைத் தடுக்க எழும் முயற்சி, சிலபோது, சரியான மகரத்தினை யும் னகரமாக மாற்றிவிடவும் காண்கிறோம். (உம்) எம்மான்=என்மான்: அம்பது=அன்பது

னகரம் நெடிலின்பின் மொழிநடுவே மறைகிறது. (உ-ம்) நான் மறை=நாமறை; நான்முகன்=நாமுகன். அதாவது இங்கே மகரம்போல னகரமும் அடுத்த மெலியோடு ஒன்றுகிறது எனலாம்.

ன, ற என்றவற்றின் பழைய ஒலிகள் ஆராய்ச்சிக்குரியன. இன்று 'ன' 'ந' என்றே ஒலிக்கும். தொல்காப்பியத்தின்படியோ நாநுனி மடிந் தெழு ஒலியாம். 'ல' இடத்தில் 'ற' வருதலாலும், பல்லெழுத்தாம். தகரத்தினும் அண்ண எழுத்தாம் டகரத்தினும் வேறு ஆதலாலும், 'ற' இந்த இரண்டு வலிக்கும் இடையே பல்லீற்றில் எழும் வலியென் கூறலாம், முன் காலத்தில் னகரம் ணகரத்தின் அண்மையில் ஒலித்திருத்தல் வேண்டும். (உ-ம்) திண்ணு. 'ன்' 'ண' மாறுட்டம் எழுவது இதனாலே

யேயாம், வண்ணம்=வன்னம்; தண்ணளி=தன்னளி, இடையே மெல் லெழுத்து வருதலும் உண்டு. (உ-ம்) நாகணவாய்=நாங்கணவாய்.

வல்லெழுத்து :

த :

இவ்வளவும் கூறியதால் 'ற' 'த' மாறுட்டம் விளங்கும். (உ-ம்) சுற்றி =சுத்தி. தமிழ் நாட்டின் வட பகுதியில் 'ற' 'ட' என்றும்; (உ-ம்) பற்று =பட்டு; தென்பகுதியில் 'ற' 'த' என்றும். (உ-ம்) பற்று=பத்து. இவ்வாறு பொதுவாகக் கூறலாம். இந்த நூலில் தென்னாட்டு வழக்கே பெரிது. இந்த மாறுட்டத்தின் காரணமாக 'த' என்பதும் 'ற' என எழுதப்பெற் றது. (உ-ம்) போற்றி=போர்த்தி. றகரத்திற்கு ஒருவகை டகர ஒலி உண்டெனலாம். யாழ்ப்பாணத்தில் 'இன்று' 'இண்டு' எனவே ஒலிக்கப் பெறும். 'அன்றில்' என்பது இந்த நூலில் 'அண்டில்' என்றும், 'அகன்ற' என்பது 'அகண்ட' என்றும் வருதல் காண்க. 'த' 'ற' மாறுடியபோது தகரமும் டகர ஒலி பெற்றது. (உ-ம்) சூழ்ந்த=சூண்ட. இந்த ஒலி, முகரம் ளகரத்தின் விதி பெறுவதால், வந்ததாகலாம். ஆனால், முகரம் இல்லாத இடத்தில் த-ட மாறுடக் காண்கிறோம். (உ-ம்) ஏந்தலர்= ஏண்டலர். தகரம் ரகரமாதலும் உண்டு. (உ-ம்) போதும்=போரும். றகரம் பெரும்பான்மையும் ர என எழுதப்பெறுவதும் காண்க.

ட, ற என்ற இரண்டும், பின்வரும் வல்லெழுத்தேயாக மாறுவ தனை இந்த நூலில் காணலாம். (உ-ம்) அற்பம்=அப்பம்; முற்பிறப்பு= முப்பிறப்பு; மாட்சி=மாச்சி; காட்சி=காச்சி.

க :

'க' 'ய' ஆம் என முன்னர்க் கண்டோம். வல்லெழுத்துக்கள் உயிரி டையோ, மெல்லெழுத்தின் பின்னோ எவ்வாறு ஒலிக்கும் என்பது மற் றோர் ஆராய்ச்சியாம். வடமொழியில் ஒவ்வொரு வருக்கத்திலும் வரும் 4 வல்லெழுத்தும் தமிழில் வேறுபாடின்றி ஒரு வல்லெழுத்தாகவரும்; வெவ்வேறு ஒலிப்பதால் பொருள் வேற்றுமை தமிழில் இல்லை, ஆதலின், ஓர் எழுத்தின் பலவேறு ஒலிகள் என அவற்றைக் குறிக்கலாம். க என் பது வடமொழி 4 க ஒலிகளாகவும், ஹ, வ என்பனவாகவும் ஒலிக்கும். பகல், பஹல், பவல் எனவரல் காண்க. 'க' 'ய' என்றுமாம் என்றோம்; ஆனால் மகிணன் மயிணன் என வாராது, மவுணன் என இந்நூலில் வந்துளது. ம என்ற உதட்டெழுத்தால், யி என்பதும் உதட்டுச் சாயல்பெற்று வு என ஆயிற்று எனல் வேண்டும். க் கெடுகிறது எனலாம். நாம்கள்= நாம்+கள்=நாம்+அள்=நாமள். தெலுங்கு மொழியில் ம் என்பதன்பின் ப் என்ற ஒலி வளர்வதுண்டு. விஜயநகர ஆட்சியின்பின்னே தெலுங்குச் சாயலும் பரவியதால் நாமள் என்பது நாம்பள் என இந்நூலில் வருதல் காண்க.

வடமொழிச் சொற்கள் :

ஷ-க்ஷ:

'ஷ' 'ச' ஆம். (உ-ம்) தோஷம்=தோசம்; ரிஷி=ரிசி. ஷ ட-வும் ஆம். (உ-ம்)நிஷ்டை=நிட்டை; விஷ்ணு=விட்ணு. பழைய விதியின்படி விட்டுணு

என்றே வரவேண்டும். ஆனால், இந்த நூலில் டகர ணகர மயக்கம் தடை படாமையால் விட்டு என்ற வடிவே யாப்பமைதிக்கு வேண்டப்படுவ தும் காண்க. 'க்ஷ' வும் 'ச' ஆம். (உ-ம்) க்ஷணம் = சணம். பிற இடங்க ளில் க்ஷ பழமைபோல் இரண்டு ககரமோ டகரமோ சகரமோ ஆம். (உம்) பக்ஷம் = பக்கம்; பட்சம். மற்றொரு பேச்சுவழக்கும் இந்த நூலில் காண்கிறோம். 'ஷ' 'ஸ' ஆம். (உ-ம்) கஷ்டம் = கஸ்தி, ஷட்ரசம் என்பது சட்டரசம் என இந்த நூலில் வந்துளது. 'ர' என்பதன்முன் 'அ' வந்து ளது. டகரம் இரட்டித்தது வடமொழி ஒலியை உணர்த்தவேயாம். டக ரம் உயிர் இடை வந்தால் பின்னுள்ள தமிழ் வழக்கில் இன்றுபோல d என்ற ஒலிபெறும்; t என்ற ஒலி தோன்ற இரட்டித்து எழுதப்பெறும்.

இந்திய ஒலி:

இதுவும் வல்லெழுத்தின் ஒலியைப் பற்றியதொரு குறிப்பேயாம். இந்திய நாட்டில் வல்லெழுத்துக்கள் விரைந்தும் நெகிழ்ந்தும் ஒலிக்கப் பெறுகின்றன எனலாம். தமிழில் பழைய முறைப்படி ஒரு மாத்திரையோ இருமாத்திரையோ கொண்ட உயிரும் அரைமாத்திரைகொண்ட மெய்யும் உயிர்மெய்யாக ஒன்றுரும்போது, நீரில் கரைத்த உப்பேபோல, மெய்யின் மாத்திரை மறைய உயிரின் மாத்திரையே ஒலிக்கும். வல்லெழுத்து இவ்வாறு குறைந்த அளவில் ஒலிக்கும்பொழுது நெகிழ்ந்து உரசு ஒலியாக ஒலிப் பதும் உண்டு. இதனை வல்லெழுத்தின்முன் ஆய்தம் இட்டுக் காட்டுவது பழைய வழக்கம்; ஆய்தம் நலிபு என்ற பெயர் பெறுவதும் காண்க.

ஒலிப்பிலா வலி இரட்டல்:

இப்போது மொழி முதலில் வலி ஒலிப்பிலா உயிர்ப்பொலியாம் உயிரிடையேயும் மெலி முன்னேயும் ஒலிப்பொலியாம். இடையே உயிர்ப்பொலியைக் காட்டவேண்டுமானால் வலியை இரட்டித்து எழுதிக் காட்டுவர். Sulphide = சல்பைடு; Sulphite = சல்பைட்டு என எழுதல் காண்க. இரட்டியது இங்கு இரண்டு ஒலியளவு காட்டுவது இல்லை; ஒலிப்பொலியினும் வேறும் உயிர்ப்பொலியைக் காட்டுவதே ஆம். எனவே, மொழிக்கு முதலில் வரும் வல்லெழுத்தே இவ்வாறு இரட்டித்த வல்லெ ழுத்துப்போல ஒலித்தலின் புணர்ச்சி விதிப்படி வல்லெழுத்து மிகுவதனை தனியே வேறு எழுதவேண்டாமற் போய்விட்டது. இதன் பயனாக, பல இடத்து வலிமிகவேண்டிய இடங்களில் வலிமிகாது வந்தமையை அடிக் குறிப்பு விளக்கும். பழைய விதியின் நினைவால் சில இடங்களில் வல்லொற்று இரட்டியது காட்டப்பெற்றுள்ளது, சீரின் முடிவில் விளம்பிதம் வருவதால், அடுத்த சீரின் முதலில் வரும் வல்லொற்று இரட்டவேண்டிய இடத்திலும் புணர்ச்சியினிடையே விட்டிசை வருவதால் வல்லொற்று இரட்டவில்லை என்று அடிக் குறிப்பில் கண்டதோடு இந்தக் கொள்கையையும் அறிதல்வேண்டும்,

இருவலி ஒருவலியே: யாப்பு

இவ்வாறு மொழி முதல் வரும் வலியின் ஒலியினை மொழியிடையே காட்டுவதற்கு வலி யிரட்டித்துவரும் என்றால், இரட்டை வலி இரண்

டெழுத்தாகாது; ஓர் எழுத்தென்றே அதனைக் கொள்ளுதல் வேண்டும். முன், பாகு என்பதிலுள்ள க் என்பதனை k என்றே ஒலித்திருப்பர்; பின் உயிரிடையே g என ஒலித்தபோது, பழைய ஒலியை நினைத்துக்கொண்டவர்கள் புதியமுறையை ஒட்டிப் பாக்கு என எழுதலாயினர். 'பாகு' கம்பர் காலத்து வழங்கியவடிவம் ஆனால், இன்றைய வடிவமோ 'பாக்கு' என்பதாம். உண்மையில் ஒலி மாறவில்லை எனலாம். பொறை, பொற்றை என வருவனவற்றை எல்லாம் இவ்வாறே கொள்ளவேண்டும். எனவே, அசைகொள்ளும் போது இரட்டித்த இடங்களில்வரும் வல்லெழுத்தினை அங்கிருப்பதாகக் கருத வேண்டுவதில்லை. இருப்பது உண்மையில் ஒருமெய்யே அன்றி இருமெய் இல்லை. மெல்லியும் இடையும் இரண்டு மெய்யெழுத்துக்களினிடையேவந்தால் அவை இல்லாதனபோலவே கருதிப் பொருந்துமிடத்து ஒரசையாகக்கொள்வது பழையமுறை. (உ-ம்) 'அந்த' 'செய்து'-நிரையசையாம். இந்த நூலில் மேலே கூறியதுபோல வல்லெழுத்தும் இவ்வாறு இடைவந்தால் தள்ளப்பெறும். (உ-ம்) 'முப்பு' நிரையசையாம்.

பிற வடமொழிச் சொற்கள் :

வ-ப ஆம்; ப-வ ஆம் எனக் கண்டோம் (உ-ம்) ஈசுபரன்; கோவம். பொதுவாக b வ ஆய்; (உ-ம்) பால=வால, 'ப' 'ம' ஆம் (உ-ம்) அபரபக்ஷம்=அமரபக்ஷம். இதனை வகரத்தின் மென்மையாக்கம் என்றும் கொள்ளலாம். ஜலம்=சலம்=செலம்=சிலம் என்ற மாற்றத்தினை முன்னரே கண்டோம். 'ர' 'ற' ஆம். (உ-ம்) துற்குலம். 'ர' 'ழ' ஆம்; (உ-ம்) அமிழ்தம் 'ர' 'ன' ஆம்; (உ-ம்) தர்மம்=தன்மம். லகரம் வல்லெழுத்தின்முன் 'ற' ஆம். (உ-ம்) அல்ப=அற்ப

ஸ ச ஆம்; (உ-ம்) நேசம்; யவ்வும் ஆம் (உ-ம்) நேயம்

ந்யாயம்=ஞாயம் எனப் பல்லெழுத்து அண்ணச் சாயல்பெறும். ஆஜ்ஞா பிராக்ருத விதிப்படி ஆணை என்று ஆம். பின்னர் இஃது ஆக்கினை என்றுயிற்று.

'ஹ' 'க' ஆம். (உ-ம்) மஹத்வம்=மகத்துவம் (தகரம் இரட்டல் அதன் உண்மை ஒலியை மேலே கூறியதுபோலச்சுட்டவாம். த என்பது 'வ'வோடு மய்ங்காமையின் இடையே உ வந்துளது) மக்த்துவம் என்பது இந்த நூலில் மகுத்துவம் என்று வரும். உதடு எழுக்தாம் மகரம் முன்னும், உதடு ஒலியாம் உ பின்னும் வருவதன் காரணமாக 'அ' 'உ' ஆயிற்று; பின்னர் மவத்துவம் என்றும் ஆகும். அம்ரிதம் என்பது அமுர்தம், அமுதம், அமிர்தம், அமிழ்தம் என்றெல்லாம் மாறுவதனையும் இந்தக் கண்கொண்டு காணவேண்டும். முகூர்த்தம் என்பது முகிழ்த்தம் என வரும். இரண்டாம் உகரம் முன்னை உகரத்தினும் வேற்றுமை நயம் (Dessimilation) காரணமாக இகரமாகியது எனலாம்: வண்ண எழுத்தாம் ரகரம் முன்வரும் உகரத்தினை வண்ண ஒலியாம் இகரமாக ஒற்றுமை நயத்தால் மாற்றியது என்று கூறலாம். ரகரம் முகரம் ஆதலும் காண்க, தொல்காப்பியத்தின்படி ரகர முகரங்கள் ஒரே இடத்தில் பிறப்பன. வர்

ணம் வண்ணம் என ஆதல் எனவே, காண்க, இங்கேர் என்பது பின்வரும் மெய்யின் வடிவம்பெறுகிறது. வன்னம் என்றும் ஆம். 'தர்மம்' 'தன்மம்' என ஆதலை முன்னரே கண்டோம். ரகரம் நகரத்தோடு மோனைகொள் வதனையும் குறிப்பிட்டோம். பழைய ஒலிமுறையும், மாறும் ஒலிமுறை யும் மயங்குகின்றனபோலும்.

மாம்ஸம், வம்ஸம், அம்ஸம் என்பனவற்றில் 'ஸ' 'ச' என்றும்: அப்போதும் 'ம்' 'ச' வோடு மயங்காமையின் இடையே இகரம் வர, மாமிசம், வமிசம், அமிசம் என நிற்கும். இது பழைய முறை. ஆனால், தெலுங்கின் தொடர்பால், அங்கு வழங்கும் வடிவம் இந்த நூலில் வழங் கக் காண்கிறோம். (உ-ம்) வங்கிசம், மாங்கிசம், அங்கிசம். அஸஹ்யம் என்பது இடையே மெல்லொலிபெற்று அசங்கியம் என்றதலோடு, 'அசிங் கம் என மருவியும் வழங்குகிறது.

ஏகாதசி முதலியன வற்றில் த எடுத்தலோசைபெறுவதால், ஏகாதேசி முதலியனவாகவே வரக்காண்கிறோம்.

வடமொழிச் சொற்கள், தமிழ்முறைப்படி மயங்காத எழுத்துக்களினி டையே உயிர்பெய்து எழுதப்பெற்றாலும், ஒலிக்கின்றபோது வடமொழி யிற்போலவே ஒலிக்கப்பெறுகின்றன என்பது யாப்பமைதியை நோக்க விளங்குகிறது. ஈசுபரன் சக்கரம் என்பவை ஈச்வரன் சக்ரம் என்றே ஒலிக்கின்றன. வடமொழி வேரூன்றிய நிலை இவ்வாறு வெளியாகிறது.

குறை மொழிகள் :

சுவாதத்தை என்பது தத்தை என்றும், அரவிந்தம் என்பது விந்தம் என்றும், 'அகலிகை' 'அகலி' என்றும், 'கௌதமன்' 'கெவுதன்' என்றும் தலைக்குறையும் கடைக் குறையும் இடைக்குறையாக வருதலும் உண்டு.

நாடோடி மொழி நூல் :

ஒவ்வொருவரும் சொற்களைப் பயன்படுத்தும்போது அதன் பொருளை ஒருவாறு தத்தமனத்திற்கு எட்டும் வகையில் விளக்கிக்கொள்வர். இதற் கேற்பச் சொல்லின்வடிவமும் மாறும். சித்ரகுப்தன் என்ற சொல்லைச் சித்தி ரக்கூத்தன் என்று மக்கள் அழகாக மாற்றிக் கொண்டார்கள். கூத்தன் இங்கே கூற்றம் என்பதன் மரூஉ ஆகி எமனினும் வேறான ஒருவனை வேறு படுத்தும். தீலீபன் என்ற சொல் இந்நூலில் திலீபி என வந்துளதால் 'அரசன்' என்ற பொருள் வற்புறுத்தப்பெறுகிறது என மக்கள் கருதினர் போலும்.

தவறுகள் ;

தவறுகள் எனப்புறக்கணியாது இவ்வாறு மொழிஇயல் மாறுவதாகக் கொள்ளவேண்டுமா என்பது கேள்வி. இவ்வளவும் கூறியதிலிருந்தே இந்தக் கேள்விக்கு ஒருவாறு விடைதருதல் கூடும். மொழியில் எழும் மாற்.

றம் முதலில் தவருகவே எழும்: பரவிய பெருவழக்கானல், "கடி சொல் இல்லை. காலத்துப்படினே"; என இலக்கண வழக்காகிவிடும். ஆத லின், இவ்வாறு எழும் தவறுகள் மொழியின் போக்கை விளக்கப் பேருத வியாம். தவறுகள் ஏன் எழுகின்றன என ஆராய்வதே இருபதாம் நூற்றாண்டில் பெருமை. மக்கள் உள்ளத்தினையோ, சமுதாயத்தின் போக் கினையோ, பேசுவான் மனப்போக்கினையோ, மொழியின் இயல்பினையோ தவறுகள் விளக்குகின்றன என்பது இந்த நாளையமுடிபு. இப்படி ஒவ்வொரு நூற்றாண்டாக ஆராய்ந்தால், பேசும் மொழி மாறிமாறி வரும் போக்கினை அறியலாம். இந்தக்கண்கொண்டே இவ்வளவும் எழுதினேம்.

அம்மானை : யாப்பு :

அம்மானை என்ற பெயரினைக் காணவேண்டும். இத்தகைய இலக்கிய வகையும் 17-18-ஆம் நூற்றாண்டின் வளர்ச்சியே எனலாம். பவானந்தம் பிள்ளையவர்கள் பதிப்பித்த புலந்திரன் களவு மாலையின் முன்னுரையில், அம்மானை என்பது, எல்லா அடியாலும் எல்லாத் தளையாலும் எல்லாச் சீராலும் இரண்டடி ஒத்துவரும் வெண்செந்துறையே எனக் கூறப்பெற் றுள்ளது. வெண்செந்துறை இரண்டடியாலே வந்து, தனித்தனி முடி வதே அன்றி இந்த நூலைப்போலப் பல அடிகளாகத் தொடர்ந்தோடுவது அன்றும். அம்மானை என்பது அம்மானை வரிப்பாடலை நினைப்பூட்டுகிறது. சிலப்பதிகாரத்தில், அம்மானை வரி, வெண்டளையால் வரும் நாற்சீர்கொண்ட நாலடித் தரவுக் கொச்சகமும் மேலும் ஒரு தனியடியும் பெற்று, முழு தும் வெண்டளை விளங்கிவரக் காண்கிறோம். இந்த நடையை இந்த நூல் பின்பற்றினாலும், இடைமடக்காய் வரும்நிலை இங்கு இல்லை; அடி வரையறையும் இங்கு இல்லை; அடிதோறும் இற்று இற்று ஒழுகுதலின் வெண்டளை நியமம் அடியைத் தாண்டிச் செல்வதுமில்லை; அடிக்குள் ளும் அடிநடுவே இரண்டாம் சீரின் முடிவில் விளம்பிதம் என்ற யதி வரு தலின் அங்கும் வெண்டளை பிறழ வாய்ப்புண்டு. இவ்வாறு வரும் அடி கள் தொடர்ந்து வருவதே இந்தப் புதிய அம்மானையின் நடையாம். வெண்டளை பிறழும் இடங்களில் யதி வருவதாகக் கொள்வது மேலாம். விளம்பிதத்திற்குப்பின் புதியது தொடங்குதலன்றோ முறை?

அசைகள் :

இந்த யாப்புவகையினைச் சீர் பிரிக்கும்போது, மிகுதியசைகள் போலப் பல தோன்றும். முதலில் அவற்றினை அடியிடைவரும் கூன் கள் எனக் கொள்ளலாம் எனத் தோன்றும்; ஆனால், ஒலியைப்பற்றி ஆராய்ந்தபோது, சொல்லிடையே வரும் நெடில் முழுதும் நெடிலாய் ஒலியாமையின் நேரசை எனத் தனியசை ஆகாமல், பின்வரும் குறிலொடு சேர்ந்து நிரையசையாகக் காண்கிறோம். இரண்டு உயிர்மெய் எழுத் துக்களினிடையே, மெல்லெழுத்தோ இடை எழுத்தோ வந்தால், அவை இல்லாதனபோலக் கருதி இரண்டு உயிர்மெய்யையும் நிரையசையாகக்

கொள்வது பண்டைய முறையேயாம். இங்கே புதியதாகத் தோன்றுவது வல்லெழுத்தினையும் இவ்வாறு இல்லாததுபோலக் கருதி நிரையசை யமைத்தலாகும். இதனை ஒலிவகையின் ஆராய்ச்சியில் குறிப்பிட்டுள் ளோம். இவ்வாறு எல்லாம் கொண்டு, சீர் பிரிக்கும்போது கூனுக்கு இட மின்றிப்போகிறது. ஒன்றும் சீரும் மூன்றும் சீரும் மோனை பெறுகின் றன. சிலபோது முதற்சீரும் கடைச் சீரும் மோனைபெறும். ந, ர, ல ஓரினமாய் மோனை பெறுதலும் காண்க. சில இடங்களில், மொழி முதலை உடம்படுமெய்யோடு சேர்ந்த உயிராகக்கொண்டால் மட்டுமே மோனை விளங்கக் காண்கிறோம். கலிவெண்பாவிலே போல, இவ்வி ரண்டு அடிகள் ஒவ்வொரு தொடராய் எதுகைபெற்று வரும்; ஆனால், ஒரே போக்காகப் போகாமல் வெவ்வேறு சந்த நயம்பெற்று வருவதனை ஆங்காங்கே அடிக்குறிப்பில் காட்டியுள்ளோம். இந்தப்பாவின் ஈறு இப் படித்தான் முடியவேண்டும் என்ற நியதி இல்லை; உயிரிலும் இடை மெலியிலும் முடியவும் காண்கிறோம். ஆதலின், ஆசிரியத்தின் அக வலோசையின்றிக் கலியின் துள்ளலோசையே, கலி வெண்பா முதலிய வற்றில்போல இங்கு வருதல் காண்க; ஆனால் ஈற்றில் முச்சீராய் முடி தல் இங்கு இல்லை.

சொல்லீறு :

இந்த நூலின் சிறப்பியல்பொன்றினை இங்குக் கூறுதல்வேண்டும். வகையுளி வரும்போது ஒருசொல்லின் ஈற்றுக் குறில் பிரிந்து, அடுத்த சொல்லின் முதற் குறிலோடு சேர்ந்து நிரையசையாம். ஆனால், பேச்சு வழக்கில் ஒரு சொல் முடியும்போது ஓசை நிறுத்தம் இசைத். திரிபாக ஒலிக்கக் காண்கிறோம். ஆதலின், ஒரு சொல்லீற்றின் குறில் மற்றொரு சொல்லொடு சேர்ந்து வேறு சீராக இயையும்போது, ஈற்றுக்குறில் பின்னே மற்றொரு மொழிமுதலுடன் நிரையசையாக, இணையாது தனிக்குறிலாம். நேரசையாகவே இயற்கைச் சொல் நிறுத்த ஓசை பெற்று ஒலிக்கின்றது. இதனையே ஓர் அழகாகக் கொள்கிறார் இந்த நூலாசிரியர்.

பிற அம்மானை :

அல்லியரசாணிமாலை முதலிய பெயர்கள் அல்லியரசாணிஅம்மானை என்பது முதலியவாக, அம்மானை என்றே முடிந்திருக்கவேண்டும் என்று கூற இடமுண்டு. அந்தஅம்மானைகளுக்கும் இந்தஅம்மானைக்கும் ஒரு வேற்றுமை உண்டு. அவை பழைய நூலொன்றை அடிப்படையாகக் கொண்டவைஅல்ல. இந்தநூலோ பழைய மாகபுராணத்தின் விளக்கமாகவே எழுந்தது. ஆதலின், பழைய நூல்களின் போக்கோடு புதுநூல்களின் போக்கும் இங்கே காணலாம். யாப்பமைதியும் அந்நூலினும் வேறும்; அடியின் இடையேமட்டும் வெண்டளை பிறழ்வது இந்நூலின்போக்காம். அந்நூல்களிலோ பிற இடங்களிலும், கதைகூறும் போக்கிற்கேற்ப விளம்பி தம் வருவதால் வெண்டளை பிறழக் காண்கிறோம். இவ்வாறு நோக்கும் போது, இந்தநூல் அவற்றினும் முந்தியதாஎன ஆராய்தல்வேண்டும்.

மாகபுராணம் : மேற்கோள் :

மாகபுராணத்திலிருந்து எடுத்தவையே இங்குள்ள விருத்தச் செய்யுட்கள். கடவுள் வாழ்த்தில் வரும் முதற்பாட்டு மாகபுராண முதற்பாட்டு. இரண்டாவதோ 11-ஆம் பாட்டு. மூன்றாவதும் நான்காவதும் இரண்டாவது பிரிவாக எழுந்த வேறு புராணத்தில் கண்டன ஆதல்வேண்டும். இங்கே பிரதி பேதங்களையும் குறிப்பது நலம். இவற்றை முன்னுரையின் பின்வரும் முதலாம் பிற்சேர்க்கையில் காண்க. இங்கு எடுத்துக் காட்டிய விருத்தங்களின் இலக்கணங்களை அடிக்குறிப்பில் ஆங்காங்கே காணலாம்; ஆனால், முதலில் சில பாடலுக்குக் குறிக்கப்பெறவில்லை யாதலின் அவற்றைக் 2-ஆம் பிற்சேர்க்கையில் காணலாம். இந்நூலில் எடுத்துக் காட்டப்பெற்ற விருத்தங்களின் வகைகளைக் கீழே 3-ஆம் பிறசேர்க்கையில் காண்க. நிற்க. மாகபுராணத்திலிருந்து எடுத்துள்ள செய்யுட்களின் தொகை இந்த பிற்சேர்க்கையில் கண்டபடி 145-ஆம். ஆனால் அம்மானை ஆசிரியர், முடிவில்,

பண்புடனே முன்னோர் படித்த விருத்தமதில்
எண்பதுடன் அன்பத் தெழுவிருத் தங்கலந்து. (பக். 436. வரி 133)

எனப் பாடுகின்றார். இங்கு இந்நூலை இரண்டு பகுதி என நாம் கருதியதற்கு ஏற்ப இரண்டாகப் பிரித்து விருத்தங்களையும் எண்ணியிருப்பது காண்க. ஆனால் 80+57=137 ஆம்; 145 ஆவதில்லை. இந்நூலைப்பதிப்பிக்க உதவிய திரு. சிவப்பிரகாசனார் ஒரு விளக்கம் கூறினார். முன்னுள்ள கடவுள் வாழ்த்துக்களையும், பாயிரத்தில் வந்த விருத்தங்களையும். இரண்டாம் பகுதியில் கடவுள் வாழ்த்தென வருவதனையும், 137 எனக் கூறிப் பாடியபின் கடையில் வரும் வாழ்த்தினையும் ஆக எட்டினையும் விட்டெண்ணினால் 137 ஆகிவிடும் என்பதே அந்த விளக்கம். ஆனால், இரண்டு பாகமாக இந்த நூலைப் பிரித்ததற்கு ஏற்ப இந்த விளக்கம் இல்லை. பாயிரத்தில் எடுத்துக்காட்டிய இரண்டு செய்யுட்களுக்கும், கடவுள் வாழ்த்தில் கண்டவை நீங்கிய பிற செய்யுட்களுக்கும், அம்மானைப் புலவர் தம் நூலில் விளக்கம் கூறிப்பாடிப் போகின்றார். ஆதலின், அவற்றை அம்மானையில் உட்பட்டவையாகவே கொள்ள வேண்டும். இரண்டாம் பகுதியின் முதலில் வரும் கடவுள் வாழ்த்திற்கும் இவ்வாறு பொருள் கூறி விளக்கிப் பாடிப் போதலின் அதனையும் விடுவதற்கில்லை. முடிவில் வரும் வாழ்த்திற்கும் இவ்வாறே விளக்கம் பாடுகிறார். எனவே, முதலில் கடவுள் வாழ்த்தென வரும் நான்கினைமட்டுமே விட்டெண்ண முடியும். "எண்பது உடன் ஐம்பது ஏழு" என அம்மானைப் புலவர் கூறுவதனை "எண்பதுடன் ஏழு; ஐம்பது" என வெவ்வேறுக்கி முதற்பகுதியில் 87 செய்யுள் என்றும், இரண்டாம் பகுதியில் 50 செய்யுள் என்றும் கொண்டால் இரண்டாம் பகுதியில் 50 செய்யுட்களே மேற்கோளாக எடுக்கப்பெற்றுள்ளன எனக் காண்போம். முதற்பகுதியில் இப்போதுள்ள 95-இல், கடவுள் வாழ்த்து 4 போனாலும் 91 செய்யுட்கள் வருகின்றன. இன்னும் 4 செய்யுட்களைக் கழித்தால்மட்டுமே 87 ஆம். எந்த நான்கினைக் கழிப்பது? பத்தாம் அத்தியாயத்தில் வரும் 3,4,5 6-ஆம் விருத்தங்களையும் விளக்கத்தையும் ஒப்புநோக்கினால், இவையே விட்

டெண்ணத்தக்கவை என்பது புலனாகும். இவை நான்கும் ஒரு தொடராகப் புராணத்தில் அமைந்துள்ளன. "ஆலகால முண்டானை வழிபட்டு ஞாலமேல் நெடுநாள் இருந்தான்" என்பது புராணம். ஆனால், அம்மானைப் புலவரோ இப்பாடல்களில் இரண்டாம் வேற்றுமையாக வருவனவற்றை எட்டாம் வேற்றுமையாக்கிப் பாடுகின்றார். 3-4 ம் ஆம் விருத்தங்களின் பொருள்கள் அம்மானையில் இல்லை. புராணத்தின் கருத்துக்கள் வந்தாலும் அவற்றினை அமைக்கும் முறையை மாற்றியமைத்துள்ளார். ஆதலின், அவர் பாட்டிற்கு அவ்விருத்தங்கள் நான்கும் மேற்கோளாகா. அந்த நான்கினையும் விட்டால் முதற் பகுதியில் வரும் விருத்தங்கள் 87 ஆதல் தெளிவாம்.

புராணம் : மாறுதல்கள்

மாகபுராணத்தினையே இந்த அம்மானை பின்பற்றியது என்றாலும், இன்று நமக்குக்கிடைத்த புராணப் பிரதியினும் வேறென்று, நம் அம்மானைப் புலவர் கையில் இருந்திருத்தல் வேண்டும். பாடபேதங்களைக் காண்க. கதைக் குறிப்பிலும் மாறுதல்கள் காண்கிறோம். சித்திரசேனன் கதையில் வரும் பாசண்டர் கபாலி மதத்தினர் எனத் தோன்றுகிறது.

பஞ்சபாதகஞ் செய்திடல் பண்பல செய்தல்
அஞ்சலாது கௌரிய கபாலியர் அடியை
நெஞ்சினிற் றொழுதிடுவை யேனிமிடத்திற் பாவ
நஞ்சரா முன்னிற் றேரைபோ னடுங்கி யோடிடுமே. (28. 9)
என்று புன்மதக் கபாலிய ரியம்பிடக் கேட்டு (28. 11)
ஆன்ற தன்னுழைக் கபாலிய மதத்தினை அடைந்தார்க்கு (28. 13)

எனப் புராணத்தில் வருதல் காண்க. புராணம் இந்த மதத்தின் குரு என ஒருவரையும் கூறவில்லை. அம்மானையோ இவ்வாறு பலரைக் கூறாது ஒருவனையே கூறும். "பாசண்டவாகனிடம் போனான்;" "குழைச்சிடாமல் பூசுங் குருக்களுடை பாதம்" "மாய வேடக் குருக்கள்" "கொடிய பாசாண்ட மதக் குருக்கள் வைத்தான் உபதேசம்" எனப் பாடுதல் காண்க. கபாலி என்ற பேச்சே இங்கு இல்லை. கூன்பாண்டியன் சமணனை கதை அம்மானை ஆசிரியர் நெஞ்சில் இருக்கின்றதுபோலும்.

"ஒருவனு மெங்கு முகந்திருக்கு மாமூர்த்தி
அருகுபரமேசுவரனை அடிவணங்கு மன்னாநீ"

என்பது குருவின் உபதேசம். அருகு என்பது அருகரோ என ஆராய்தல் வேண்டும். குளியாத நோன்பிகளது மேனி நீறு படிந்த திருமேனி யாதலின், குழைச்சிடாமல் பூசும் குருக்கள் என்று ஆசிரியர் கூறினரோ என்றும் ஆராய்தல் வேண்டும். இனி, வண்டான பட்சியின் கதையிலும் சில மாறுதல் உண்டு. குரங்கு முற்பிறப்பில் "நான்மறை அந்தணன் கதலித் தோட்டமுட் புகுந்து வன்பினிற் பலன்கள் பறித்து" உண்டதாகப் புராணம் கூறும் (28. 63). ஆனால் அம்மானையில் கதலி பலா ஆகிறது.

"மாமறையோன் கொல்லிதனில் எண்ணுமலே இனிய பலாக்கனியைத் தோப்புடனே தான்பறித்துக் கூசாமலே நீயும் சாப்பிட்டதாலே" (29. 63)

என அம்மானை பாடிச்செல்கிறது. வாய்ப்பாடலாகப் பல நாள் வழங்கியதன் பயனாக, இத்தகைய மாறுதல்கள் எழுந்தனபோலும்! இப் படிப் பலநாள் வழங்கியபின்னரே ஏட்டில் எழுதப் பெற்றதென்றால் இந்த நூல் 17-ஆம் நூற்றாண்டின் முடிவில் எழுந்த நூலும் ஆகலாம்.

மாகஸ்நானம்: தை-மார்கழி

மாகஸ்நானம் என்பது மாகமாதத்தில் குளித்தலாகும். மாகமாதம் என்பது நிறைநிங்கள் மக நட்சத்திரத்தோடு கூடியிருக்கும் மாசி மாதமாகும். இது சூரியனை ஒட்டிய சௌரமான கணக்குப்படியாகும். செங்கற்பட்டு வட்டத்தில் தை அமாவாசையிலிருந்து மாசி அமாவாசை வரையிலும் மாகஸ்நானம் கொண்டாடப் பெறும். இந்த ஒரு திங்களினை மாக மாதம் எனக்கொள்வது சந்திரனை ஒட்டிய சாந்திரமான கணக்குப்படியாம். சங்க காலத்தில் தைந்நீராடல் என்ற நோன்பு கொண்டாடப் பெற்றதாம். மணமாகாத பெண்கள் நல்ல கணவனைப் பெற நோற்கும் நோன்பாகும் இது. மார்கழிப் பாவை நோன்பே இஃது என்பர் அறிஞர். தைந்நீராடலை அம்பா வாடல் என்று பரிபாடல் கூறும்; தாயுடன் ஆடல் என விளக்குவர் பரிமேலழகர். தாய் என்றால் நீராடும் பெண்களைப் பெற்ற தாயர் அல்லர்; உலகப் பெருந்தாயாம் உலகமயம்மையே ஆம். அம்மையின் வடிவை நீராடுந் துறையில் மணலில்வகுத்து வழிபட்டு நீராடுவதே காத்தியாயனி விரதம் எனப் பாகவதம் கூறுவது இந்த வழக்கினை ஒட்டியே ஆம். அக்கினிபன் கதையில், இந்த நூலில், பெண்கள் அவ்வாறு அம்மை வடிவினை அமைத்து நீராடல் காண்க. பாவை என்பது பாவு என இந்நாள் வழங்குகிறது; அவ்வாறானால் அம்பாவுஆடல் எனப் பிரித்துப்பொருள் கொள்ளுதல் கூடுமோ என்பதனையும், அம்பாவு என்பது எம்பாவு என்றிருந்திருக்குமோ என்பதனையும், அவ்வாறானால் எம்பாவைஎன்ற சொற்றொடரோ அங்குள்ளது என்பதனையும் மேலும் ஆராய்தல் வேண்டும். அந் நோன்பு வகையில் தைந் நீராடலும் மார்கழி நீராடலும் ஒன்றானால், மாத வேற்றுமையை விளக்கி வைத்தல் வேண்டும். மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாள் கொண்டு முடிவதாகவோ, தொடங்குவதாகவோ கொள்ளும்போது இந்தச் சந்திரன் கணக்குவழி வரும் மாதமும் தடுமாறும்; மார்கழியும் தையாம். 'திருவெம்பாவை திருப்பாவை' என்பது சையாம் நாட்டில் கொண்டாடப்பெறும் தேசியத் திருவிழாவின் பெயராக அமைந்துள்ளது. அதுவும் சிலபோது மார்கழியிலும் சிலபோது தையிலும் கொண்டாடப் பெற்ற செய்தியினை அறிகிறோம். மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளை முதலாகக் கொண்டால் திருவாதிரை முதல் தைப்பூசம் வரையிலுமாம்; தைப்பூசத் திருவிழாவினையும் பெண்கள் நோன்பெனவே ஞானசம்பந்தர் பாடுகின்றார்.

"நெய்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும் தைப்பூசம்" என்பது கபாலீச்சுரப்பதிகம். ஆண்டாள்.

"பாற்சோறு மூடநெய் பெய்து முழங்கை வழிவார"

என்று பாடுவதனை இது நினைப்பூட்டுதல் காண்க.நோன்பு முடிந்த பின் கொண்டாடப் பெறும் விருந்தே ஈதாம். தைப்பூசம் இந்த மாகபுராணத்திலும் கூறப் பெற்றுள்ளது. இன்று பெண்கள் தைப்பூசத்தி லிருந்து தொடங்கி, 'மயிலார்' என்ற நோன்பினை மயிலை எழுதிவைத்துக் கொண்டாடுகிறார்கள். ஆண்டாள் காலத்திலேயே தைந்நோன்பும் மார்கழி நோன்பும் வேறு பிரிந்து போயின எனலாம். திருப்பாவையை மார்கழித் திங்களோடும், மன்மத நோன்பினைத் தைத்திங்களோடும் தொடர்புபடுத்தி இரு வேறு நூல்களை ஆண்டாள் அருளிச் செய்திருப்பது காண்க. "தையொரு திங்களும் தரைவிளக்கி" எனவரும் நாச்சியார் திருமொழி மன்மத நோன்பினைக் கூறுதல் காண்க. இவ்வாறு ஒரு நோன்பே காலப் போக்கில் எழும சமுதாயச் சூழ்நிலைக் கேற்ப இருநோன்பாகப் பிரிதலுக்கும் இடம் இருந்தது.

மாகஸ்நானம் : கார்த்திகை

திருவாதிரையன்று பெண்கள் பட்டினி நோன்பு கிடந்து, இரவில் மஞ்சட் கயிறு அணிந்து கொள்ளுதல் இன்றும் பலரிடம் பெருவழக்காம். திருவாதிரையன்று மலையாளத்தில் திருவாதிரைக் களி கொண்டாடப் பெறும். ஊஞ்சல் விளையாட்டே பல இடங்களில் இந்தக் களியாம். ஆண்டாள் பாற்சோறும் நெய்ச்சோறுமாம் நல்லுணவினைக் கூறுவதற்கு ஏற்பக் களி என்பதற்கு ஒருவகை உணவு என்றே பொருள் கொண்டு, களி செய்து படைத்துத் "திருவாதிரை ஒருவாக்களி" எனப் புகழ்வர் பலர். திருவாதிரை முடிவானுல் அத்திங்கள் தொடங்கியது திருக்கார்த்திகை யாதல் வேண்டும். திருக்கார்த்திகை தொடங்கி இருபத்தோராம் நாள் சதையத் தன்று பிள்ளையார் நோன்பென ஒன்று தமிழ் நாட்டிற் பல இடங்களில் கொண்டாடப் பெறுவது இன்றும் வழக்கில் உள்ளது. பிள்ளை என்பது இங்கே கன்னிப் பெண்பிள்ளைகளை உணர்த்துமோ என்று ஆராய்தல் வேண்டும். திருக்கார்த்திகையில் விளக்குமாலை தோன்றுவதனை அகநானூறு கூறும். விளக்குமாலை அன்றே தீபாவளி? பூமியின் அச்சுநிலை மாறுவதற்கேற்பச் சூரியவீதியும் திருவாதிரையிலிருந்து தொடங்கியது போல முன்னொரு காலத்தே தோன்றியது, பின் கார்த்திகையிலிருந்து தொடங்கியது போலவும், பின்னர் அசுவனியில் இருந்து தொடங்கியது போலவும் காட்சியளிப்பது இயல்பு. அசுவனி முதலானதை ஒட்டி அசுவனியில் நிறைதிங்கள் தோன்றும் ஐப்பசியை முதலாகக் கொண்டு வடநாட்டார் தம் ஆண்டினைத் தொடங்குவது காண்க. தீபாவளியோடு தொடங்குகிறது அந்த ஆண்டு. ஐப்பசியில் நீராடுவது துலாஸ்நானம் எனக் கொண்டாடப் பெறுகிறது. துலாஸ்நானம் எனப் பெயர் பெறுதலின் மாகஸ்நானத்தினும் வேறுபிற்றுப் போலும்.

மாகஸ்நானம்: 3 மாதம்

மாகஸ்நானம் இந்நூலின்படி மூன்று மாதங்களில் குளிப்பதனையும் குறிக்கும். கார்த்திகை வளர்பிறை ஏகாதசியிலிருந்து மார்கழி வளர்பிறை

ஏகாதசிவரை நீர் ஆடுவது தேவ மாகஸ்நானம். மார்கழி ஏகாதசி முதல் தை ஏகாதசிவரை ஆடுவது ரிஷிமாகஸ்நானம்; தை ஏகாதசி முதல் மாசி ஏகாதசி வரை ஆடுவது பிதுர் மாகஸ்நானம். இவ்வாறு எல்லாவற்றையும் ஒன்று படுத்திக் கூறுகிறது இந்நூல். அமாவாசை முதலாகவும் பௌர்ணமி முதலாகவும் கொள்வது போல, ஏகாதசியை முதலாகக் கொண்டு மாதத் தினைக் கணக்கிடுவதும் ஒரு முறை போலும். ஏகாதசி, திருக்கார்த்திகை, திருவாதிரை, பொங்கல்நாள், தைப்பூசம், சிவராத்திரி, மாசிமகம் என்ற திருவிழாக்கள் இதனுட்படுதல் காண்க: அனைத்தின் பெருமையும் இதன் பெருமையாக முடிகிறது.

நரகம் :

நோன்பு நோற்கும் முறை, அறம் வளர்க்கும் முறை, அன்றாடைய வாழ்க்கை முறை, பெண்கள் வாழ்வு முதலிய கூறும் அறநூலாகவும் இந் நூல் விளங்க வேண்டும் என முந்துகிறது இந்நூல். வல்லான் எடுத்தோதை வாய்க்கால் என இருந்தநாளில் வல்லடி வழக்கினர்க்குப் பின் வரப்போகும் நரக வாழ்வின் கொடுமை எல்லாம் கூறி அச்சுறுத்தவும் வேண்டியதாயிற்று. இங்குள்ள நரகங்களின் பெயர் முதலியன சரியாக விளங்கவில்லை. அபிதான சிந்தாமணி, மார்க்கண்டேய புராணம், விஷ்ணுபுராணம், தேவி பாகவதம் முதலியவற்றில் கூறியுள்ளவற்றிற்கும் இங்குள்ளவற்றிற்கும் வேற்றுமை உண்டு. ஆனால், வேறுவழி இல்லாத போது அவற்றின் வழி கொண்டு திருத்தவேண்டுவதாயிற்று. மார்க்கண்டேய புராணம் முதலியவற்றில் கூறியவற்றைச் சப்தகல்பத்ருமம் என்ற வடமொழி அகராதி, நரகம் என்ற தலைப்பில் தந்துள்ளமை காண்க. இனி, மாகபுராணம் கூறுவது கொண்டு இந்த அம்மானை கூறுவதனை அறிதல் வேண்டுமாதலின், அங்குள்ள பாடல்களைக் கீழே 4-ஆம்பிற்சேர்க்கையில் காண்க.

கதைகள் :

உலகிலுள்ள கதையில் வரும் நன்மை எல்லாம் மாகஸ்நானத்தால் வந்தனவே என்று கூறும் போக்கில் செல்கிறது மாகபுராணம். ஆனால், எல்லையற்று நீளாதபடி ஒருசில கதைகளே கூறி முடிக்கின்றது. இக்கதை கள் உலகெங்கும் எவ்வாறு எவ்வாறு வழங்குகின்றன என்பது பெரிய தோர் ஆராய்ச்சியாக வளருமாதலின் இங்கு அதனை எழுத இயலாது. இத்தகைய பழங்கதைகளே இவை என்ற கண்கொண்டு இவற்றைப்படித்து மகிழலாம். மாகஸ்நானத்தை மறந்து இவ்வாறு ஓதப் பழகினால் எல்லோ ருக்கும் இந்நூல் இனிக்கும். தீண்டாமை, சாதி முதலியவை வற்புறுத்தப் பெற்றிருப்பதனை அந்தக்காலக் கோலம் என விட்டுவிட்டுக் கதையினைக் கதை யாகப் படித்து மகிழ்வதே வேண்டற்பாலதாம். அவை பழங்கால வரலாற் றுக்குறிப்பாவதன்றி நம்மை நம்பச் செய்யும் ஆற்றல் அவற்றிற்கு இல்லை; நகைப்பே எழுகிறது இன்று; அன்றன்று. பாட்டின் நயமெல்லாம் அங்கங்கே அடிக்குறிப்பில் சுட்டப் பட்டுள்ளன; ஆதலின் இங்கே விரித்தெழுத வேண் டியதில்லை.

பதிப்பு:

இந்தநூலைப் பதிப்பிப்பதில் ஒரே முறையைப் பின்பற்றவில்லை இந்த நூலை அறிஞரும், தமிழ் நாட்டு எல்லாப் பகுதியினரும் ஏற்கும் பொருட்டு, முதலில் திருத்தமான சொல் வடிவங்களையே நூலில் கண்டு, ஏட்டில் கண்ட பாடங்களை அடிக் குறிப்பில் குறித்தோம், பின்னர்ப் போகப் போக ஏட்டில் உள்ள பாடங்களையே நூலில் கண்டோம். உண்மையில் பின்னைய முறையினையே நூல் முழுவதிலும் கையாண்டிருத்தல் வேண்டும். மேலே கூறிய கொள்கையினைப் பின்பற்றி இவ்வாறு ஒரு முறையின்றி வரும் இப் பதிப்பினை உலகம் பொறுத்தருள்வதாக. இப்பதிப்பில் பல பிழைகள் புகுந்துள்ளன. கண்பார்வை சரியாக இல்லாமையாலும், இரவில் திருத்தவேண்டிய கட்டாயத்தாலும், அச்சேறிவந்த விரைவாலும் புகுந்தவற்றில், இன்றியமையாத திருத்தங்களைமட்டும் பிழை திருத்தத்தில் கண்டுள்ளோம். 5-ஆம் பிற்சேர்க்கையை நூலின் முடிவில் பார்க்க.

நன்றி:

இந்நூலைப் பதிப்பிக்கும் வேலையைத் தந்த திரு-சந்திரசேகரனார் அவர்களுக்கும் இதனை மேற்கொள்ள ஆணை தந்த கல்வித் துறைத்தலைவர்க்கும் சென்னைத் துரைத்தனத்திற்கும், ஓலை ஏடுகளையும் அச்சேடுகளையும் உடனிருந்து ஒப்பிட்டு வந்த திரு-சிவப்பிரகாசனார்க்கும், குறிப்புக்களையும் அச்சேடுகளையும் திருத்த உதவிய அறிஞர் டாக்டர் துரை அரங்கனார்க்கும், இதனை மனங்கோணாது அச்சிட்ட அச்சகத் தலைவருக்கும் என் மனங்கலந்த நன்றி உரியதாகும். என்வாழ்நாளில் ஆறுமாதங்கள்வரை நான் இந்தத் தமிழ்த் தொண்டில் இன்பம் பெறுமாறு செய்த இறைவனையும் வணங்கி வாழ்த்துகிறேன்.

சென்னை
12—3—1956

தெ. பொ. மீனாட்சி சுந்தரன்

முதலாம் பிற்சேர்க்கை

புராணச் செய்யுட்கள் வருமிடமும் பிரதிபேதங்களும்

இருவகீவுக்குள் உள்ள முதல் எண் அடியினையும், இரண்டாம் எண் சீரினையும் குறிக்கும். வகீவுக்குள் வாராத i போன்ற ரோமன் எண் மாகபுராணத்தின் அத்தியாயத்தையும் பின்னைய எண் பாட்டின் எண்ணை யும் குறிக்கும். முதலில் உள்ள எண் பாட்டைத் தொடர்ந்து எண்ணுவது

கடவுள் வாழ்த்து

1—1 *1. (4. 4 ஏத்துவாம்)*

2—2 *7. (1. 3—4 பரபுருடனினால்)*
(1. 8 இருப்பை)
(3.3—4 தூயமனத் தோனை)
(4. 1 தராதலமெண்)

3—3 வேறுநூல் போலும்

4—4 ஷி

முதல் அத்தியாயம்

5—1 i *1 (3. 4 சுற்றிய)*

6—2 i *10;*

இரண்டாம் அத்தியாயம்

7—1 ii *1;*

8—2 ii *13; (4. 5 ஓழுக)*

9—3 ii *23; (3. 1 வேக; 3—4 சிக்கும்; 4. 5—6 வழங்கு நலத்ததுவே)*

10—4 ii *34;*

மூன்றும் அத்தியாயம்

11—1 iii *1;*

12—2 iii *11 (4. 1—2 ஊழ்வினையின் பான்மையென)*

நாலாம் அத்தியாயம்

13—1 iv *1 (1. 3 இகல்வேந்தே)*

14—2 iv *10 (3. 4—6 பருங்காழ் மரமென் றுடலுரிஞ்சி)*
(4. 1 நெருங்கு)

15—3 iv *14 (1. 3 டிருண்ட; 2. 5 குழகா; 3. 6 நிமிர்த்த)*

16—4 iv *22 (3. 1 வேலாடல்)*

ஐந்தாம் அத்தியாயம்

17—1 v 1 (3. 3 கைத்திட நீ; 3. 6 பாடலினும்)

18—2 v 11

ஆரும் அத்தியாயம்

19—1 vi 1. இவ்வாறிவன்மாமகிழ்வோங்கியிருக்குநாளிற்
றெவ்வார்வணங்கும்புகழ்போசன்செழும்பொன்
[மூதூர்
ஒவ்வாததீமை கடிவேத உசத்தியன்றன்
அவ்வாழ்வில் வந்த சுவிர்த்தை ஏபயரன்ன
[மன்னுள்

20—2 vi 3 (2. 5 மெளிதில்; 3 ·4-5 கியல்பாமணங்கே;)

21—3 vi 19

ஏழாம் அத்தியாயம்

22—1 vii 1

23—2 vii 8 (2. 6 என வுரப்பி; 3. 3 பற்கறித்திட்)

24—3 vii 14

25—4 vii 27 (3· 4 தினமெதிர்ந்தொ; 4. 4 முடையதால்.)

எட்டாம் அத்தியாயம்

26—1 viii 1 (1. 5 சுவிர்த்தை 4. 3 கருங்குழலீர்)

27—2 viii 24

ஒன்பதாம் அத்தியாயம்

28—1 ix 1 (2. 3 முறப்பதறு)

29—2 ix 16 (4. 1 மன்னும்; 4. 4 தேங்குமால்)

30—3 ix 44 (2. 3 வந்தாரோ)

31—4 ix 48 (3. 4 மறம் வளர்த்த; 4. 4 அரசரினி)

32—5 ix 51 (1. 2—5 தென்றிசையே போய் முடிந்த இடமி
யமபுரிக்குத்; 2. 6 மருவி; 4. 1 ஊனமுறு)

33—6 ix 63 பின்பாடல் பார்க்க

34—7 ix 69 (3. 3 சேடத்தால்)

பத்தாம் அத்தியாயம்

35—1 x 1 (1. 4—5 னி-துரைத்தனனிருப்ப)

36—2 x 3

37—3 x 48

38—4 x 49

39—5 x 50

40—6 x 57

பதினொன்றும் அத்தியாயம்

41—1 xi 1 (3. 4—5 உய்ந்தான்)

42—2 xi 8

43—3 xi 11

பன்னிரண்டாம் அத்தியாயம்

44—1 xii 1 (2. 5 புறத்து)

45—2 xii 9 (1. 6 னேனிவ்; 3. 3 ஆற்றுல்)

பதின்மூன்றும் அத்தியாயம்

46—1 xiii 1

47—2 xiii 12 (4. 4 மற்றவர்க்கு)

பதினாலாம் அத்தியாயம்

48—1 xiv 1 (4. 2 மாசிருங்கன்; 4. 6 கென்றான்)

49—2 xiv 16

பதினைந்தாம் அத்தியாயம்

50—1 xv 1

51—2 xv 2

52—3 xv 3

53—4 xv 4

54—5 xv 9

55—6 xv 15 (2. 3 பகவரை)

56—7 xv 18 (3. 2—4 னன் னெனினுந் தடக்கை பிடித்)

57—8 xv 21 (2. 6 ரான்றேர்)

பதினாறும் அத்தியாயம்

58—1 xvi 1

59—2 xvi 20 (3. 1—3வாயினிகழ்ந்தே தங்கினோ)

60—3 xvi 25

பதினேழாம் அத்தியாயம்

61—1 xvii 1 (2. 2 தீமத்தொழில்)

62—2 xvii 7 (4. 3 ளிரந்திடலும்; 4. 6 சொல்லுவனுல்)

63—3 xvii 29 (4. 4 காறும்)

64—4 xvii 40 (4. 3—4 விரைவிற் கொள்கின்றேன்)

65—5 xvii 44 (1. 2—4 யங்கர் தம் வாகு நாணிடு; 3. 4 நீறெழு)

66—6 xvii 52 (4 ஏன்று வந்து கூற்றேது செய்யுமே)

பதினெட்டாம் அத்தியாயம்

67—1 xviii 1 (4. 2 வளாக)

68—2 xviii 9 (1. 1 கள்ளன்; 4. 4—5 விமலமதாக)

69—3 xviii 17 (2. 6 யீயும்; 3. 5 தாரத்தவையவங் 4. 7—8 புனித மாமால்)

பத்தொன்பதாம் அத்தியாயம்

70—1 xix 1 (2. 3 சுவிர்தனெனுங்)

71—2 xix 15

இருபதாம் அத்தியாயம்

72—1 xx 1 (1. 2 வரன்பின்னும்; 2 அன்றி மதிய மீராறதனின் மாகமதிதான்)

73—2 xxx 18 (2. 2 கதலி: 3. 1—31 பொழிபாற் குழம்பு நீரருந்தி)

74—3 xxx 23 (1. 2 கங்குல்; 2. 1 நிதியிலா 3. 4—5 நாற்றமில் மலரே)

இருபத்தோராம் அத்தியாயம்

75—1 xxi 1 (2. 3—5 னேடெழா அரசரரியேறனன்)

76—2 xxi 31

77—3 xxi 38 (2. 4 வள்வாய்க்; 3. 4 வதைக்கும்)

இருபத்திரண்டாம் அத்தியாயம்

78—1 xxii 1 (1. 3 போகுறு)

79—2 xxii 23 (1. 2—3 பேர்களழித்தே; 2. 2 யாவர்; 3. 3 னேர்ந்தே)

80—3 xxii 26 (2. 5 கோயில்; 3. 1 லெள்ளரும்)

81—4 xxii 28 (3. 3—5 கோலவன முலிதிளக்கும்)

82—5 xxii 34 (1. 1 தேவருக்குந்; 4. 3—4 இருவினையு மீவோனே)

83—6 xxii 45 (2. 1 ஞாலமிசை)

84—7 xxii 51 (3. 3 கொலைவேட)

85—8 xxii 55 (3. 3 செய்தானேல்)

இருபத்துமூன்றும் அத்தியாயம்

86—1 xxiii 1—(4. 6 தாளல்)

87—2 xxiii 6 (1. 6 சான்றுப்ப: 2 பெருகதியினி மலமருளுமீசரனே சதாசிவனே யென்று பேசு 3. 2 நூபாதிநி)

88—3 xxiii 15 (3. 4மருவிநீ)

89—4 xxiii 16

90—5 xxiii 17 (2. 3—4 தூயோய் நினைத்தொழுதேன்)

91—6 xxiii 18 (1. 2 திவாகரனே)

92—7 xxiii 19 (1. 2 மருள் வாழ்வே)

93—8 xxiii 23 (4. 3 ராடிடு)

94—9 xxiii 24

95—10 xxiii 25

இருபத்து நான்காம் அத்தியாயம்

96—1 [1—வேறொரு நூல்]

97—2 xxiv 1 (3. 2 லுயர்ந்த)

98—3 xxiv 11 (4. 5 ரினிதில்)

99—4 xxiv 17

100—5 xxiv 20 (3. 5—ரேனு)

101—6 xxiv 49

102—7 xxiv 65 (1. 1 புதுத்தளி; 2. 2 செழுங்கதிர். 3. 4 டார்த்திட)

103—8 xxiv 78 (3. 1—2 தானவர் வணங்கவரு)

104—9 xxiv 84

105—10 xxiv 86 (1. 4 பராரை)

106—11 xxiv 92 (2. 3—5 மிவளெனக்கே விளங்குமுரிமை)

107—12 xxiv 94 (3. 3—5 உலக மலிந்தன நிறையும் 4. 1 மலிய.)

108—13 xxiv 98

109—14 xxiv 103

இருபத்தைந்தாம் அத்தியாயம்

110—1 xxv 1 (2. 4—6 அருந்துலாத் தட்டில் வைக்கத்)

111—2 xxv 2

112—3 xxv 4 (1. 1 எண்டொகைய 1. 3 யற்கையினி 3. 4 லார்மேற்)

113—4 xxv 25

114—5 xxv 30 (1. 4 மினிய 2. 1—3 ஆன்ற கூடமவை யெல் லாம்)

115—6 xxv 31 (1. 4 சுமித்திரனை)

116—7 xxv 36 (1. 1—3 எட்டி குமர நன்குரைத்தாய்; 4. 4 ககனு)

117—8 xxv 37 (1. 2 இடரிழைப்போர்; 4. 2 வழனிரையக்)

118—9 xxv 59 (1. 2

119—10 xxv 61 (லேனும் = னேனும்)

120—11 xxv 73 (1to 3. 6 ஒன்றில்லை 3. 5 விரதம்

121—12 xxv 77 (2. 4 அன்றிச்; 4. 4—5 நற்றுய் வயிற்றில்)

இருபத்தாரும் அத்தியாயம்

122—1 xxvi 1 (3. 4 அதனிடத்)

123—2 xxvi 5

124—3 xxvi 11

125—9 xxvi 19

126—5 xxvi 53

127—6 xxvi 65 (1. 1 வருபிணி 1. 4 தீர்ந்திடும் 3. 3 லாக்கம்)

இருபத்தேழாம் அத்தியாயம்

128—1 xxvii 1

129—2 xxvii 51

130—3 xxvii 64

131—4 xxvii 72 4. 2—3 யிங்கிவையாடுவார்

132—5 xxvii 101

இருபத்தெட்டாம் அத்தியாயம்

133—1 xxviii 1

134—2 xxviii 6

135—3 xxviii 40

136—4 xxviii 55

137—5 xxviii 56

இருபத்தொன்பதாம் அத்தியாயம்

138—1 xxviii 58

முப்பதாம் அத்தியாயம்

139—1 xxviii 78
140—2 ,, 83
141—3 ,, 84
142—4 ,, 88
143—5 ,, 91
144—6 ,, 92
145—7 ,, 93

2-ஆம் பிற்சேர்க்கை

விருத்தங்களின் இலக்கணம் (விடுபட்டவை)

பக்கம் 1 கடவுள் வாழ்த்து

1-ஆம் பாட்டு 'விளம்-விளம்-மா விளம்''-கலிவிருத்தம்

2-ஆம் ,, '3 காய்+மா' இரட்டித்துவரும் அறுசீர் விருத்தம்

பக்கம் 2

3-ஆம் ,, ஷை

4-ஆம் ,, 4 காய். கொச்சகம்

பக்கம் 3 விளம் விளம் மா விளம்-கலிவிருத்தம்

,, 9 ''விளம் மா மா'' இரட்டித்துவரும் அறுசீர்விருத்தம்

,, 11 ஷை

,, 15 'மா விளம் விளம்' இரட்டித்துவரும் அறுசீர்விருத்தம்

,, 18 ஷை

,, 22 3 கூவிளம்+தேமா-கலிவிருத்தம்; 3 தானதன+தானா என்ற சந்தம்; அடிக்கு 14 எழுத்து

,, 24 4 காய்-கொச்சகம்

,, 28 ஷை

,, 33 மா மா விளம் இரட்டித்துவரும் அறுசீர்

,, 36 ஷை

,, 38 தேமாங்காய்-தேமா-புளிமாங்காய்-தேமா--புளிமாங்காய் தேமா-புளிமா என்ற 7-சீர்ச் சந்தவிருத்தம்; தானன, தந்த-தனதான-தந்த-தனதான-தந்த-தனன என்ற சந்தம்-அடிக்கு 20-எழுத்து

,, 42 மா-மா-காய் இரட்டித்துவரும் அறுசீர்விருத்தம்

,, 45 ஷை

,, 49 ஷை

,, 57 விள+வெண்டளை பெற்ற சீர் 3

,, 66
,, 69 மா-மா-காய் இரட்டித்துவரும் அறுசீர் விருத்தம்

பிறவற்றை அடிக்குறிப்பில் அங்கங்கே காண்க.

3-ஆம் பிற்சேர்க்கை விருத்த வகைகள்

1 *3 சீர் வஞ்சிவிருத்தம்*

1. a வெண்டளை பிறழா மூன்று ஈரசைச்சீர்; அடிக்கு 8-எழுத்துப் பெற்று வருவது.

1. b வஞ்சிச் சந்தவிருத்தம். தனன, தானன, தானனு என்ற சந்தத் தில் புளிமா கூவிளம் கூவிளம் என முச்சீராய் அடிக்கு 9 எழுத்துப் பெற்று வருவது

2-a *4 சீர்க் கலிவிருத்தம்*

(1) 4 காய் வரும் கொச்ச ம்

(2) வெண்டளை வந்த நாற்சீர் விருத்தம். கடைச்சீர் காயாம்

(3) மா+3விளம்

(4) மா+நேரொன்றுசிரியத்தளை+வெண்டளைபெற்ற 2 ஈரசைச்சீர் கள்+வெண்டளையோடு வரும் விளம் அல்லது காய்; அடிக்கு 14 எழுத்து

(5) ஷி: நேர் முதலானுல் அடிக்கு 11 எழுத்து

(6) ஷி: நிரை முதலானுல் அடிக்கு 12 எழுத்து

(7) மா-விளம்-மா-விளம்

(8) மா-மா-விளம்-விளம்

(9) விளம்-விளம்-மா-விளம்

2. b *சந்தக்கலிவிருத்தம்*

(1) காய் விளமானுல் அடுத்தசீர் நேர்முதலாகாது நிரை முதலா கும்; தான என்பது தந்த தத்த தனன என்றும் ஆம்; 'தா' தனனென்றும் வரும்

(1) 3 கூவிளங்காய்+தேமா; 3தானதன+தனு; அடிக்கு 14 எழுத்து

(2) 3 மாங்கனி+புளிமா; 3தனுனதன+தனனு; நேர் முதலானுல் அடிக்கு 16 எழுத்து.

(3) ஷி: நிரை முதலானுல் அடிக்கு 17 எழுத்து

(4) விளங்காய்+விளம்+விளங்காய்+விளம்; தனதனனு+தானனு+ தனதனனு; +தானனு; அடிக்கு 2ச எழுத்துக்கள்.

3. *5 சீர்க் கலித்துறை*

3 a

(1) மா-3 விளம்-மா

(2) விளம்-மா-விளம்-மா-மாங்காய்

3 b சந்தக் கலித்துறை

(1) கூவிளம் + தேமா + கூவிளம் + புளிமாங்காய்; தானன-தான -தானன-தான-தனதானன; அடிக்கு 14 எழுத்து

4 a அறுசீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்

(1) மா-மா-விளம் அல்லது காய் என்ற 3 சீர் இரட்டித்து வருவது

(2) விளம் அல்லது காய்-மா-தேமா என்ற 3 சீர் இரட்டித்து வருவது

4 b சந்த விருத்தம்

(1) 2 (புளிமா + கருவிளம்) + புளிமா + கருவிளங்காய் (தனன-தனந் தனன-தனன-தனந்தனன-தனன-தனந்தனன); அடிக்கு 22 எழுத்துக்கள்

4 c மாத்திரை விருத்தம்

(1) 6 மா; ஒவ்வொரு சீரும் 4-மாத்திரைகள்; அடிக்கு 24-மாத்திரை கு றில் ஒற்றடுத்தால் இருமாத்திரையாம். அடிக்கு 15 எழுத்துக்கள். இதனை 4 காய்ச்சீர்களாகவும் கொள்ளலாம்

5 a எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

(1) விளம்-மா-விளம்-மா-விளம்-விளம்-மா

5 b சந்தவிருத்தம்

(1) தானனு அல்லது தனதான-தந்த என்ற இரண்டும் மும்முறை வந்து தனனு என்பதோடு எழாதல். மாங்காய் + தேமா என் இருசீரும் மும் முறை மடக்கி வந்து புளிமா என்பதோடு முடியும் எழுசீராம். அடிக்கு 20 எழுத்துக்கள்

(2) தனன + தந்தன மும்முறை வந்து தனதனு என முடிதல். மா + கூவிளம் மும்முறை மடக்கி விளம் என்பதனோடு முடிதல்

(3) தான-தானதன மும்முறை மடக்கித் தானனு என்பதனோடு முடி தல். தேமா + கூவிளங்காய் மும்முறை மடங்கிக் கூவிளம் என்பதனோடு முடிதல். அடிக்கு 21 எழுத்துக்கள்

(4) மா விள-விள-விள-விள-விள-மாங்காய். தான-தானன (அல்லது தனதன) மும்முறை மடக்கி வந்து தந்தானு என்பதோடு முடிவது

6 a என்சீர்க்கழி நெடிலாசிரியவிருத்தம்

(1) (3 காய் + மா) இரட்டித்து வருவது

(b) சந்தவிருத்தம். மாத்திரா விருத்தமுமாம். 8 ஈரசைச்சீர்; ஒவ் வொரு சீரும் 4 மாத்திரை

4-ஆம் பிற்சேர்க்கை

மாகபுராணம் நரக—வர்ணனை

கோரைசுகோரையதிகோரை கூறுகின்றமகாகோரை
யேராரலகோரரூபைபிணி யியன்றதாளதாரையுடன்
பாரிலுரைக்கும்பயானகைபின் பகருங்காளவிராத்திரியு
மூரியானபயோற்கடையின் கண்டையுரைக்குமகாகண்டை.

சண்டைகோலாகலியுடன்பிற் சண்டைதாழாப்பதுமையுடன்
கொண்டபதுமாவிதிவீதி கூறுவீமவீசனிபின்
விண்டாரனவிகாரளியும் விரிவச்சிரைபின்றிரிகோனை
பண்டைபஞ்சகோணியுடன் சுதீற்கைபரிவத்துணியுடனே.

சத்தபுமைபின்னட்டபுமை தகுசீர்சீர்த்திமாயையென
வைத்தவிருபத்தெண்கோடி நிரயந்தனக்கும்வருபெயரா
மத்திற்கோடியொவ்வொன்றுக் கையைந்தேநாயகமாகுங்
கொத்துநிரையமொருநூற்று நாற்பானதன்பேர்கூறுங்கால்.

ஆதியானரவுரமு மழுகைதருமாரவுரவமும்
பிதிசெய்யும்பெருந்தமமும் பெருகுசீதமுட்டனமும்
வாதைசெய்யுஞ்சுரோகமுடன் சுகமற்வாழ்நீக்கணமதன்பின்
றீதுதருவாத்தியைசஞ்சீ வனமுமதன்கீழ்செறிசடமும்.

சொல்லற்கரியமகாமாயை தொடுத்தவதிலோபம்மதற்பின்
கொல்லுஞ்சுமீபங்கடங்கடம்பின் குலியுமதிதீவிரவேகம்
வெல்லுங்கராளம்விகராளம் விரியும்விரகம்பன்மிடையே
சொல்லுங்கொடியமகாபதுமந் தியோர்புகுதுஞ்சுவத்திரமும்.

பெரியகாலசூத்திரமும் பிற்தாச்சனவேசூரிமுக
மூரியசுனேமிசாதகம்பின் னெழிசுப்பிரதீபத்துடனே
விரியுங்கும்பிபாகமுடன் வீழுஞ்சுபாகமிகுரூபங்
கரியகிறத்தாருணமங்கி ராசிபவனங்கருதிடிலே.

கூறுமரத்தச்சிக்குண்டங் கூர்மையிருப்புத்துண்டப்புண்
மாறியெழுமாசமவைத்த மகிரமலிந்ததந்தசெந்து
வூறுபங்கலேபமுட னுயிரும்பூதிமாங்கியமுஞ்
சீறுந்திரவத்திராடதன்பின் செருச்சுவாசமென்றுரைப்பார்.

கூருநிருச்சுவாதமுடன் சுதீர்க்கங்கூடசனமலியே
சேருந்துரிட்டமகாநாதஞ் சிறந்தபிறவாகம்பின்னர்
சாருந்துயர்ச்சுப்பிரவாக மிருசமேடம்விறலிடபங்
கூருந்திறற்சல்லியஞ்சிங்கங் கொடியபகுவாய்வியாக்கிரமம்.

கயஞ்சூகரம்பின்சுவானம்விறற் காரியமயிடந்திறல்விருட
மியங்குமேடங்கரானனம்பி னியலுங்கிராகங்கும்பிரம்
புயங்கும்புன்னக்கிரங்கூர்மம் பெருவாயசம்பின்கிருத்திரமுந்
தயங்குமுலூகஞ்சார்த்தூலஞ் சளுகங்கபிதற்கடந்தானும்.

ஆன்றகொடியகண்டகமு மழல்வாய்ப்பூதிவத்திரமுந்
தோன்றுமிரத்தாக்கம்பின்னே சொல்லும்பூதிமிரித்திகையே
கான்றகண்மேதத்துடனே கஞலுங்கொடியதுடாக்கினியு
மேன்றகிருமிக்குழியதல்பி னிழிவுகூறுமமேத்தியமும்.

அழியும்புழையப்பிதிர்திட்ட மயருமுடலத்துதிர்வன்னங்
கழியுஞ்சுவாப்போசனமதற்பின் கான்றவாய்நீருண்டிபின்ன
ரிழிவாற்றன்னீநுகருண்டி யெல்லாநுகருஞ்சருவவுண்டி
பொழியுங்கோரச்சுதாருணமே பொல்லாங்கியற்றுஞ்சங்கடமும்.

கண்ணும்விசாலம்பின்விகட மெரிவாய்கொழிக்குங்கங்கடமே
வண்ணப்புரிடங்கடாகந்தி வருவைதரணியழல்காய்ந்த
திண்ணெனிநுப்புமுழைப்படுக்கை செழுந்தாரணம்பிற்பூரணமும்
பண்ணுங்கொடுமையசிதால வனமுமமத்திபங்கமுமே.

எரிபீடகமுந்திலச்சேக்கு மெறியெந்திரமும்பேரிக்குப்
பரியாலியும்வெம்பாதகர்கள் பதைக்குங்கூடபாசமும்பின்
னரியவுடலின்மருத்தனமு மானசுண்ணதுண்சுண்ண
மெரியிற்றத்தலேர்கசிலை யிகலும்படைவாய்ப்பருப்பதமும்.

இகலிப்பொருமியாமளப்பொருப்பு மிழிமூத்திரமும்பெருமலமு
மிகவுநிறைத்தபெருங்கூப மிடைந்தவிருளேமலிகூபம்
புகலும்பூயகூபமுன் புகலற்காரிதாஞ்சாதனமும்
விகலமில்லாமுசலமுரல் விரியுந்திரிகையெந்திரமும்.

கொடியசிலையின்சகடமும்பின் கொளுவார்நெடியவிலாங்கலமு
மடியாத்தாலவத்திரம்வாழ் வனமுஞ்சகடாமண்டபமுன்
னெடியசம்மோகனத்துடனே நீடுமதிபங்கதமதன்பின்
கடியுந்தத்தகூலமுடன் கனலிற்காய்ந்தவிருப்புருளும்.

பரிந்தவெகுளுக்கத்துடனே பகரற்கரியமகாதுக்கம்
விரிந்துவிளங்குகச்சுமலஞ் சமலாடலமேவிளம்பவொண்ணைக்
கரிந்தவாலாகாலம்பின் கருதாவிரூபம்பயரூபந்
தெரிந்ததியமானாக மேகபாதந்திரிபாயும்.

செறிந்தவெகுதீவிரத்தோடு சேறும்வீசியீருக
வறைந்தவிருபத்தெண்கோடி யளவைநிரையநாயகமாய்ப்
பிறிந்தபகுதியொருநூற்று நாற்பான்முற்றும்பிறழாமன்
மறிந்துவிழவேபுகவிடுவார் பாவமலிவின்வசங்கண்டே.

மாகஸ்நான புராண அம்மானை

ஹரி ஓம்

நன்முக

குரு வாழ்க குருவே துணை

மாகஸ்நான புராண கதை

கடவுள் வாழ்த்து[5]

[1]மஞ்சரி செருகிய கோதை மாமதன்
வெஞ்சர மெனமிளிர் விழிகள் வேதநூற்.
[2]பஞ்சர முறைகிளி பயின்ற மும்மதக்
குஞ்சர முகனடி கும்பிட் டேற்றுவாம்[3]. i

வேறு

பராசரமா முனிமகவைப் பரம்பொருடன் நான்கு
பழமறையின் பிறப்பிடத்தைப் பலவிஞ்சைக் கருவை
விராவுபுகழ் நிலையத்தை வேதாந்தப் பொருளை
வெகுளியில்லாப் பொறையோனை விடையமறுத் தோனை(ச்)
சுராதிபர்தன் குருவனைய மனத்தொளிரும் ஒளியைத்
துகளறுமெக் கலைமுழுதுந் தோய்ந்திடப்பட் டோனைத்
தராதலமேழ் புனிதவியா தனைப்போற்றி யவன்றன்
தண்ணளியே நிலையாகச் சரணமரண் புகுவாம்[4]. ii

---

1. மஞ்சரி : பூங்கொத்து.
2. பஞ்சரம் : கூடு.
3. கணபதி காப்பு.
4. வியாசர் துதி.
5. பதிப்பாளர் தந்த தலைப்பு.

ஆக்கையெனும் புழுக்குரம்பை அணைந்தணையாப் பொருளை
அருளொளியைப் பராபரைக்கும் [1]அப்புறமா மறிவை
நீக்கமின்றி மயிர்முனைக்கீ ழிடமுமாயெவ் வுலகும்
நிறைந்துநின்ற முழுமுதலை நினைவினொழுஞ் சுடரைப்
பாக்கியங்கள் பழுத்தனந்தந் தவக்குறைகள் முடித்த
பழவடியார்க் கருளுதவும் பசுந்துணர்க்கற் பகத்தை
வாக்கில்மன விகற்பத்தில் அளவுபடா வொன்றை
மாசற்ற பெருவெளியை மனவெளியி லடைப்பாம்[2]. iii

வேறு

பால்வண்ணக் கமலமல ரகலாத பருப்பதத்தை(ச்)
சூல்வண்ணப் புயலென்ன(ச்) சூட்டரவில் துயில்வரையை
வேல்வண்ண விழியிமைப்ப மெல்லியல்வாழ் வியன்கிரியை
மால்வண்ண மில்லாத உளத்திருத்தி வணங்குவாம்[3]. iv

---

1. பரஞானம், அபரஞானம் என்ற இரண்டிற்கும் அப்பாலானது.
2. முழு முதற்பொருள் வணக்கம்.
3. மும்மூர்த்திகள் (பிரமன், திருமால், சிவன்) துதி.

மாகஸ்நான புராண அம்மானை

முதல் அத்தியாயம்

பாயிரம்

விருத்தம்

சீர்பெறு மீரறு பருவஞ் சென்றிடும்
பேர்பெறும் வேள்வியைப் பெரிதி யற்றுவான்
வார்பெறு பழுமர வனங்கள் துற்றிய
ஏர்பெறு நைமிசா ரணியத் தெல்லேவாய்.

நடை

5. சீர்சிறந்த வேள்வி சிறந்தபன்னி ரண்டாண்டு
நேர்பெறவே முத்தி நிறைவேற்றும் மாமுனிவர்
வ[1]ழுவாமல் வேள்வி வளரும் பெருவனமாம்
பழுமரங்கள் சூழப் பலசாதி நன்மரமும்
தானே நெருங்கிச் சதாகா லமுமலரத்
10. தேன்வான் மழைபோல் வழிந்தொழுகும் நல்வனமாம்
பூங்கிளிகள் வேதம் புகலவரி வண்டுதும்
மாங்குயில்கள் கூவவளர் நைமிசா ரண்ணியமாம்
காசிபனும் அத்திரியுங் கடுந்தவசு மாபிருகும்
வாசமுள்ள கண்ணுவனும் வளருங் கவுதமுனி
15. புலஸ்த்யர் வதிட்டமுனி புகழ்மீறும் அங்கிராவும்
நிலைக்குமே பெருதவத்தில் நிலைநின்ற கோசிகனும்
முற்கல மாமுனிவன் முளைத்தெழுந்த கும்பமுனி
நற்கருணை பொங்கும் நல்லபரா சரமுனிவன்
மார்க்கண்ட மாரிஷியும் வற்ருத் தவச்சுகனும்
20. ஏற்க விபாண்டகனென் றிப்படிப்பேர் கள்படைத்த
துய்ய தவசுடையோர் துலங்கும் பெருந்தவத்தோர்
வேதமொரு நான்கும் விளங்குகின்ற சாஸ்திரமும்
போத மெனவே புகலுங்கலே ஞானமொடு
புண்ணியமாய் நின்ற புராணமுத லாகமமும்

---

1. ழ எல்லாம் ள என்றே உள்ளன.

வண்ணமெனக் கற்றவர்கள் மறையோது நாவுடையோர்
கரும மெனுமிருட்டைக் காய்கின்ற சூரியன்போல்
தருமவுருக் கொண்டு தவங்கள்செய்யும் புண்ணியர்கள்
கருணைக் கடலானேர் கடியதவ மாமுனிவர்
பெருமை யொடுசிறுமை பேசாத மாதவத்தோர்
சத்த மொடுபரிசந் தழைக்கும் உருவமொடு
தித்திக்கும் நல்லரசம் சிறந்தகெந்தம் என்றுசொல்லும்
ஐம்புலனே யுங்கடந்தோர் ஆணவமா யை-கருமக்
கும்பியென்ற மும்மலத்தைக் குற்றமற வேகடந்தோர்
ஆசை மிகக்கடந்தோர் அலைகடல்சூழ் வையகத்தில்
நேசமென வேதழைக்கும் நெடியசிவ செந்துகள்மேல்
அன்புவைத்துக் கர்ப்போர் அடங்காப் பெருந்தவத்தோர்
[1]நன்புடையோர் ஞான வழிநடக்கும் அறிவுடையோர்
தன்னுயிர்போல் மன்னுயிரைத் தஞ்சமென வேகாக்கும்
பன்னுமறை வேதம் பயிலுகின்ற மாரிஷிகள்
நாட்டமுடன் வேள்விசெய்யும் [2]நைமிசா ரணியமதில்,
வாட்டமில்லா மாதவத்தோன் மரவுரிவார் தார்தரித்தோன்
விரித்த சடையிலங்க மெய்யெல்லாம் வெண்ணீறு
தரித்[3](த)திரி புண்டரமுந் தானே மிகத்துலங்க(த்)
தஞ்சமென்றேர் தம்வினையைத் தான்நீக்கி எந்நாளும்
அஞ்சலென்று தான்காக்கும் அழகான மாமுனிவன்
செக்கமதி தான்பூண்ட சிவகதைக்கு வல்லவனுய்
அக்குமணி மாலை அழகுடனே தான்பூண்டோன்
வேதமெனும் நூல்வழியே விருப்பம் எனநடந்து
பூதலத்தில் தன்மம் பொருந்தும் படியாக
எந்தக் கலைக்கும் இனிய[4]வியாச மாமுனிதான்
விந்தை யுடன்சொல்ல மிக்கபல நூல்கள்தனை(க்)
கற்றவனும் யோகக் கருத்தில் பெரியவனும்
உற்றபுரா ணங்கள்முற்றும் ஓதி யுணர்ந்தவனும்
திருநேத் திரமுடைய சிவனுர் அருள்பெருகும்
அரிய தவவியாசன் அருள்பெற்ற சூதரிஷி
விந்தையுடன் மாரிஷிகள்-[5]விளங்குநைமி சாரண்யத்தில்

---

1. செம்மை.
2. [நய்மி] [ ] என்ற குறிக்குள் இருப்பன தவறு. ஆனல் உச்சரிப்பை விளக்கும்.
3. ( ) என்ற குறிக்குள் உள்ளன விடுபட்டன.
4. 'வி' எனு ஒலிக்கும். 'யவியா' - 'யவ்யா' எனு நீரையசை.
5. விளங்கு-கூன்போலாம்.

வந்தனர்காண் செய்ய மணிக்குழைகள் தாளுட
இப்படியே சூதமுனி ஏகிவந்து அவ்வனத்தில்
செப்பமுடன் வீற்றிருக்குஞ் செழுந்தவத்தோ ரைநோக்கி
வேண்டுமுப சாரமுடன் விரும்பி மிகவணங்கி
பூண்டதவத் தோர்கள் புகழான சூதனையும்
அஞ்சலி வந்தனமா ஆசீர்வா தங்கள்செய்து
மிஞ்ச உபசாரம் வேண்டிமிகத் தோத்திரங்கள்
பண்ணிவெகு அன்புடனே பாங்கான மாதவத்தோர்
வண்ணமென ஆசனமும் வரிசையுட னேகொடுத்து
"இருமிரும்" என்று இணையில்லாச் சூதரையும்
அருகில் இருத்தினர்காண் அப்போது சூதமுனி
சந்தோஷ மாகவேதான் தவமுனிவர் கொண்டாட
விந்தையுடன் ஆசனத்தில் வீற்றிருந்தான் அம்மானே.
அப்பொழுது சூதனையும் அருந்தவத்தோர் கொண்டாடி(ச்)
செப்பமென வேமகிழ்ந்து திருமுகத்தைத் தானேக்கி
வதிட்டன் முதலான மாரிஷிகள் சொல்லுவார்கள்
"அதிட்டமெங்கள் பாக்கியங்காண் அய்யரே யிங்கெழுந்தீர்
வாருமையா சூதரேநீர் வளருங்கலை ஞானமொடு
[1]பூராய மாய்விளங்கும் புராணம்பதி னெட்டினிற்குள்
விரிவாக வேவிளங்கும் மிக்கபிர மப்புராணம்
அரியபது மப்புராணம் ஆனவிட்டு ஞுப்புராணம்
பாங்கான சைவம் பகருகின்ற பாகவதம்
ஓங்கு பவுடியமாம் உற்றநார தீயமொடு
அழகுமார்க் கண்டமுடன் ஆக்கினே யப்புராணம்
வளர்பிரம கைவர்த்தம் மாலிங்கம் மாவராகம்
காந்தமொடு வாமனமும் கருதுகின்ற கூருமமும்
பாந்த முளமச்சம் பாங்கான காரூடம்
பிரம்மாண்டம் என்றுசொன்ன பேரான புராணமதில்
வருமாங் கதைகள்தனே வாகுடனே நீர்தாமும்
எங்களுக்குச் சொன்னீரே ; இன்பமுட னேநாங்கள்
[2]பொங்கமுட னேகேட்டோம் புராணமுனி யேநீர்தாம்
இன்னமெங்க ளுக்கேதான் இனியபுரா ணந்தனிலே
நன்னயம தாகவளர் [3]ரெண்டாம் புராணமெனும்

---

1. தீறைவு : வியப்பு.
2. மகிழ்ச்சி : பொலிவு.
3. இரண்டு 'ரெண்டு' என்றே வருகிறது, 'ந' 'ர' மோனையாம் ; இரண்டாம் புராணம் மேல்வரிசையில் பதுமபுராணமாம்.

பாரப் புராணந்தனிற் பகரு[1]மன்பத் தையாயிரம்
சேர்க்கையுள்ள செய்யுளெல்லாஞ் சிறப்புடனே நன்ருக
ஓதீர் கேட்டோம்; உத்தமரே இன்னமுந்தான்
போதமென வே[2]சிலது கதையைப் புராணமதில்
சொல்லவேணும் முன்னலே சொன்ன கதைகளெல்லாம்
வல்ல தவமுனியே மனதிலுற்றோம். அக்கதையில்
மாகஸ்நா னத்தின் மகிமைசில கேட்டிருந்தும்
மாகஸ்நா னக்கதையை மறந்துமிகப் போனேங்காண்.
இன்ன மொரு[3]தரந்தான் இனிதாக அக்கதையை
நன்னயமாய் எங்களுக்கே நவிலுக வேதெரிய(ச்)
சொல்லுவீர்" என்று சூழ்ந்திருக்கும் மாமுனிவர்
நல்லதவச் சூதர்தனை நாடி மிகக்கே[4]ள்க்க(ப்)
பேரான மாசூதன் பெருகுந் தவத்தோரைப்
பூராய மாய்நோக்கிப் புகலுவான் அம்மானை!

"நல்லது நல்லதுகாண் நல்ல தவமுனிவீர்
அல்ல லறுத்து அருள்கொடுக்கும் நற்காலம்
மாகஸ்நா ன-காலம் வந்தடுத்த தினுலும்
மாகஸ்நா ன-கதையை வாகுடனே உங்களுக்கு
நான்சொல்ல வேணுமென்றே நல்ல விருப்பமாகத்
தேன்கொண்ட பூஞ்சடையீர் தேடிமிக வந்தோம்நாம்;
இன்னமுந்தான் உங்களுக்கே இஷ்டமுடன் நான்தானும்
[5]வன்னமெனச் சொல்லுகிறேன் மாக[6]ஸ்நான காலமதில்
எக்கதையைக் கேட்டாலும் இனிப்பாக வேமகிழ்ந்து
அக்கதையைச் சொல்வதல்லால் அழகான மாதவரே
மாட்டோம்என் றுசொன்னல் மாபாத கங்கள்வரும்
தாட்டிமையாய் எ[7]ன்தன் குருசாமி வியாச[8]ரிட
அருளினு லுமுலகை அளந்தகிரு மா[9]ல்க்கினையாய்
வரிசையுட னேநானும் மகிழ்ந்திருப் பதினுலும்

---

1. ஐம்பத்து என்பது. அன்பத்து என்றே வருகிறது.
2. சில என்பது சிலது என்றே வருகிறது.
3. [தி]
4. ட்க என்பது ள்க்க என்றுளது.
5. வண்ணம்: அழகு.
6. "கஸ்நா" நீரையசையாம்.
7. [ந்] 'என்றன்' என்பது எந்தன் என்றே வருகிறது.
8. டை-உடை என்பது உட என்றே வருகிறது.
9. 'ல்கி' என்பது, ல்க்கி என்றே வருகிறது.

பூமண் டலத்தில் பொருந்துகின்ற பேர்களென்னே
[1]ரோம புளகிதனென் றேவியமா யென்றனையும்
பாங்குடனே யாரும் பகர்வதினு லும்நீங்கள்
தீங்கில்லா மல்நாளும் சிவகிந் தனையோடும்
இருப்பதினு லு-மனத்தில் இட்டமுட னேதானே
விருப்பமாக வேகேட்க மிக்கான புண்யகதை
[2]மாகஸ்நா னக்கதையை மாதவரே உங்களுக்கே
[3]ஆக முடனே அறிந்தமட்டுஞ் சொல்லுகிறேன்.''
என்றுதான் சூதமுனி இருக்[4]குந்தவத் தோர்கள்முன்னே
நன்றுமாகஸ் நானம் நலம்பெறவே தானுரைப்ப
ஆதியந்தம் இல்லாத அரியபர மே[5]சுபரனை
போத மிகநினைந்து புகழ்தோத் திரங்கள்செய்து
சங்குசக்ர பாணியெனுந் தாமோ தரன்தனையும்
பொங்க மெனமனதில் புகழ்தோத் திரங்கள்பண்ணி
வெள்ளை மலர்மேலே [6]வீத்திருக்கும் நான்முகனை
உள்ளத்தில் வைத்து[7] உபசார மாய்ப்பணிந்து
படிக நிறமுடைய பாவைகலை வாணியுட
அடிதொழுது மும்மதமால் யானைமுக னைப்பணிந்து
தங்குரு வான தவமுனியைத் தான்நினைந்து
செங்கை எடுத்துச் சிரசின்மே லேகூப்பி
"விந்தையுள்ள மாதவரே [8]மெய்ப்பாக வேகேளீர்
இந்த உலகுதனில் இனிமாக ஸ்நானபலன்
சொல்லுகிற பேருமில்லை; சொன்னலு மன்புடனே
அல்லல் ஒழிய அவாவாக்கேள்ப் பாருமில்லை;
ஆனதால் நானே அன்புடனே சொல்லவேணும்.
ஞானமுனி யீசுரரே [9]நற்புடன் கேட்கவேணும்.''
என்றுசொல்லி யேசுதன் இனியதவ மாதவர்க்கு

---

1. மயிர்க் கூச்செறிவோன். ரோ-ரே மோனை.
2. 'மாகஸ்நான' என்பது மா஘த்தை என்றே உள்ளது.
3. முழுமனதாய்.
4. 'குந்த' என்பது நீரையசை.
5. "சு" ஸ் என்றே ஒலிக்கப்பெறும்.
6. 'த்தி' 'த்தி' என்றே வருகிறது.
7. குற்றயலுகரம் கெடாது உடம்படு மெய்பின்னே பெற்றுப் பெரும்பான்மையும் வரக்காண்கிறோம்.
8. மெய்ப்பு; உண்மை; நிருபணம்; புகழ்ச்சி.
9. நல்மையுடன்.

நன்றியுட னேயுரைத்த நற்கதைகள் முப்பதையும்
முன்னுள் வடமொழியாய் முதியோர்கள் பாடிவைத்தார்.
அன்னேர் திரட்டும் அழகு வடமொழியைச்
செய்ய தமிழாகச் சித்திரமா கப்பேசி
வையகத்தி லேவிளங்க வரைந்தார் விருத்தமென.
விருத்தப் பாவாக விளங்குகின்ற நற்கதையைத்
திருத்தி யுரைப்படுத்தித் தேசத்தில் யாவருக்கும்
தெரியும் படியாகச் சிதம்பர நம்பியரில்
வரிசை யுடனுதித்த மாசில்லா மாமறையோன்,
பாண்டி நாட்டாளன் பாங்குசெறி செல்லூரான்,
வேண்டும் புகழுடையான் [.....துரைப்] புராணம்
கண்டுதமிழ் செய்த [வள.....] கனகக் கிழியறுத்தோன்,
வண்டுலவுந் தாமரைப்பூ மாலையணி பொன்மார்பன்,
வேதகலை ஞானமொடு மிக்கபல நூல்கள்தனை
போதமென வேதிரட்டிப் பூண்டமணி நூல்மார்பன்,
அஞ்செழுத்தைச் சிந்தையில்வைத் த[1]றிந்தோத மான்றவினை
பஞ்சிலிடுந் தீப்பொறிப்போல் பறந்தோட வேநாளும்
நல்லவழி காணமனம் நற்பதவி சேரும்படி
சொல்லுகின்ற அஞ்செழுத்தின் சூட்சம் அறிந்துசொல்வோன்
அலைகடலைக் கும்பமுனி அடக்கியுண்ட பான்மையைப்போல்
[2]துலையில்லா மெ(ய்)ஞ்ஞான சுருதிபல வாகமங்கள்
தன்னையெல்லாம் நெஞ்சில் தான்கற் றறிந்தபிரான்,
என்னைத் தடுத்தாள்வோன் எனக்கு மதிகொடுத்தான்,
தழைக்கும் பலசமையத் தார்கள் [3]கிரீடியென
வளைக்குங் கடலுலகில் மாவீறு கொண்டவள்ளல்,
தன்மகுரு தேசிகனுஞ் சகலகலை நாயகனும்
நன்மைசெறி சுந்தரமால் நற்புடனே ஈன்றெடுத்த
மீனாட்சி நாதரெனும் வேதகுரு வைப்போற்றித்
தேனுர் செழுங்கமலஞ் சே[4]ரும்புனல் வாவிகள்தான்
சூழுமண வைப்பதியான் துலங்[5]கும்பூமிப் பாலகனும்
நாளும் புகழ்தேடும் [நல்ல.....ளுரதனில்]

---

1. (ரீ) ற—ர தடுமாறக் காண்கிறேம்.
2. "தொ" என்பதுத் "து" என எழுதப்பெற்றுளது.
3. அர்ச்சுனன்.
4. 'கும்பூ' நீரையசை.
5. 'கும்பு' நீரையசை

[1]இன்னிலத்தோர் மெச்சும் இருளப்ப ராசனருள்
மன்னர்தனில் வீரபத்திர மதியூகி பின்னுதித்தோன்
சீர்பெறும் [2]ஈட்டப்பன் சீரங்க நாதனுக்கு
நேர்பெறவே முன்னுதித்த நேயமுத்து வீரப்பன்

பெற்றசிறு பாலகனும் பேசுதமிழ் வாணருக்கு
உற்றதொரு அடிமை உலகோர் தனக்கெளியேன்
[3]ஆவருக்கும் பிள்ளை அடியேன் வீர பத்திரன் தான்
மாவளரு மாகஸ்நான மாகதையை யிப்புவியில்
புல்லறிவி னுலே பொருந்தியம் மானெனை(ச்)

சொல்லிவைத்தேன் யாவருக்கும் தோணும் படியாக(ச்)
சிறியேன் உரைத்தமொழி சி[1]றியமொழி[5]தான் ஆனாலும்
அறியாதான் சொன்னதென யாவருமே கொண்டருளீர்
வண்ண வுலகுதனில் மாகஸ்நான மாகதைதான்
[6]புண்ணியகதை ஆகையினுல் புலவோர் பொறுத்தருள்வீர்

அம்மானை யானாலும் அரியகதை சொல்வதினுல்
எம்மாத் திரநேரம் இருந்துதான் கேட்டாலும்
கோடான கோடிபலன் கொடுக்கும் கொடுநரகில்
வாடாமல் ஈசன் வாழ்பதியி லேசேர்க்கும்
சத்தியமாச் சொன்னேன் தாரணியில் உள்ளவரே

புத்தியுடன் இக்கதையைப் பூராய மாய்க்கேட்பீர்
தழைக்குமிக [7]நைமி சாரணி யத்தவர்க்கு(க்)
குழைக்குண் டலச்சூதன் கூறுவான் அம்மானை[8].

விருத்தம்

பண்டைநாட் டி(லீ)ப னென்போன்
பருதியின் குலத்து வேந்தன்
வண்டுலா மாலை மார்பன்
வதிட்டனை வணங்கிக் கேட்பத்

தண்டலிற் [9]தவத்தோன் முன்னஞ்
சாற்றிய காதை தன்னைக்
குண்டிகைக் கரத்தீர் கேள்மி
னென்றனன் கூற லுற்றான்.

---

1. இந்நிலத்தோர்
2. எட்டப்பன்
3. யாவருக்கும்
4. [f]
5. "தான்" இடைவருகின்போலாம்
6. "புண்ணி" என்பதனை நிரையாக வேனும், னி என்பதனை ஒலியா தேனும் உச்சரிக்க
7. [நயமிய]
8. அம்மானை என்று இவ்வாறு முடிவதால் இந்நூலே அம்மானை எனப் பெயர் பெற்றது
9. பிரித்து எழுதும் முறை தீருதாமோதரம் பிள்ளைப் பதிப்பினை நினைப் பூட்டுகிறது

நடை

ஆதிகா லத்திலந்த [1]அகண்டதோர்பூ மண்டலத்தை(ச்)
சீத மணிக்குடைக்கீழ்ச் செங்கோல் வழுவாமல்
வண்டுலவும் பூமாலை மணிமார்பி லேகண்டு
205. அண்டர் புகழ அனைவருங் கொண்டாட
மன்னர் திரையளக்க வைத்தார் பெருமையுடன்
[2]இன்னுலகை ஆள்வோன் இனிய மகராசன்
பேருந் தி[3]லீபதியாம் [4]பெலத்தால் வளர்படையான்
சாருந் தவமுடையான் தங்கள்குரு வானதொரு
210. வதிட்ட மகாரிஷியை வணங்கி மிகத்தொழுது
கதிக்கும். புகழ்வேந்தன் கருதுவான்: "மாதவரே
மாதவத்தில் மிக்கான மாமூர்த்தி யேயெனது
ஆதி குருவே அடியேனுக் குண்மையென
[5]மாகஸ்நான பலனை வழுத்தவே ணும்" எனவே
215. [6]ஆகம் மிகமகிழ்ந்து அரச னவன்[7]கேள்க்க
வல்ல தவத்தின் வதிட்ட மகாரிஷியும்
செல்லப் புகழ்நாட்டு திலீபதிரா சன்றனக்கு
நன்னய மாகவேதான் நாடி யுரைத்தகதை
தன்னை உங்களுக்கே தான்சொல்லக் கேளுமெனப்
220. பாங்கான மாதவர்க்குப் பழுதில்லா மாசூதன்
ஆங்கே யிருந்தகதை அன்புடனே கூறிடுவான்.

முதல் அத்தியாயம் முற்றும்.

---

1. அகன்றது; கண்டம் அல்லது பிரிவில் லாதது என்றுமாம்.
2. இன்ன உலகு; அல்லது இவ்வுல உலகு.
3. [லா].
4. பலத்தால்.
5. [மாகமாஹாத்தை].
6. அகம்; மனம்.
7. ள்க்க-ட்க-திரு T. K. C. பதிப்பினை நினைப்பூட்டுகிறது.

இரண்டாம் அத்தியாயம்

திலீபதி மகாராசன் வேட்டை

விருத்தம்

மாலிவெண் கவிகை யொன்றால்
வையக முழுதுங் கா[ர்]க்கும்
வேலுயர் தடக்கை மன்னன்
திலீபன்செய் வேள்வி முற்றி
வாலிய புனலில் மூழ்கி
மறையவ ராசி [1]கூறக்
கோலிய சிலையான் வேட்டை
யாடுவான் கு[2]றிக்கொண் டானே,

5. வெற்றிமா லைபுனைந்த வெள்ளிவட் டக் குடைக்கீழ்
உற்ற புவிமுழுதும் ஓவிய மாகஆள்வோன்
மாற்றவர்கள் செங்குருதி மணமீறி யெப்போதும்
ஊற்றெடுத் தெ[3]ந்நாளும் ஒழுகுமுனை வேலதனை
வைத்த தடக்கையான் வளரும் அயோத்திவேந்தன்
10. சித்[4]திர மணிமார்பன் திலீபமகா ராசனென்போன்
ஒருநாள் தனில்வேள்வி உண்மை யுடன்முடித்து
மருவார் புனல்குளித்து வளர்கருமந் தான்முடித்து
அன்புடைய வேதியர்கள் [5]ஆசு மிகக்கூ[6]ற
இன்பமுடன் கச்சை யி [7]றுக்கியுடை வாள்சேர்த்து
15. வச்சிரக் [8]கபாயணிந்து வளர்[9]சாடு தாங்கிதொட்டு
மெச்சும்வரி வில்லெடுத்து விளங்குமம்பு தூணிகட்டி

---

1. [கடர்க்]
2. [ரி]
3. [ன்னு]
4. 'தி' ஒலி இல்லைபோலும்.
5. [அரசு] ஆசி
6. [ர]
7. [கு]
8. நீலியங்கி
9. கைத்தலத்தில் இடும் உறை.

[1]ஆதாளி யோடும் அதிவீர சூரமொடு(ம்)
தாதாடும் பூங்காட்டில் தான்வேட்டை யாடவென்றே
வேட்டைப் [2]படைநெருங்க மிகுத்த[3]படை சேனை மன்னன்
கூட்டத் துடனே கொடியபடை ஆயுதங்கள்
[4]சுத்தி நெருங்கிவரத் துடிதவில்லைக் காளம்பம்பை
கத்துங் கடலொலிபோல் கனபே ரிகைமுழங்க
நடந்து வனம்புகுந்து நால்திசையுந் தான்வளைந்து
அடர்ந்த பெருங்கானம் அழகு [5]கா னையாறு
பாங்கான சோலை பருத்தமலை யின்சாரல்
தீங்காக வேவளைந்து [6]செடியொதுக்கிக் [7]ண்ணிவலை
கட்டி வளைந்து காடுமிகத் தான்வளைந்து
[8]நட்[9]ணையாய் வேட்டை ராசனுமே செய்தானே
பாசக் கயிறுருவிப் பன்றியின்மேல் நாயைவிட்டு
[10]ஓசலிட்டு நிற்பாரும் [11]ஒளிவைத்து நிற்பாரும்
[12]தவ்விப் பயந்து தவித்தோடு மான்மரையைக்
[குவ்வடிய] மன்னர் குத்துவார் வேலாலே
வால்மடக்கிக் காதெடுத்து மருண்டோடும் வெம்புலிகள்
மேல்முடுக்கி ஈட்டிகொண்டு வீசுவார் மன்னர்சிலர்;
மானைத் [13]நுடருவார் மயிலை[14]விரட் டிப்புனுகு
பூனை தனைக்கொல்வார் புள்ளிமான் தனையெய்வார்;
இப்படியே அவ்வனத்தில் இருக்குமுயல் தான்முதலாய்(ச்)
செப்பமுள்ள சிங்கம் சினக்குங்[15]கடு வாய்கரடி
பன்றி முதலாகப் பலமிருக சாதியையும்
கொன்று[16]அந்த மன்னன் கூட்டப் படையுடனே
அந்த வனங்கடந்து அப்பால் ஒருவனத்தில்
வந்தனனே. அந்த வனப்பெருமை யைக்கேள்மோ
வான்முட்ட ஓங்கி வளர்கடம்பஞ் சோலைவனம்
சோனை [17]மாரிபோலே சொரிந்தொழுகும் பூஞ்[18]சாறு

---

1. ஆரவாரம்
2. சேனை
3. ஆயுதம்
4. சுற்றி-எதுகைபார்க்க
5. கான்யாறு-காட்டாறு.
6. காடுவெட்டி
7. [ல்லி]
8. கொடுமை
9. [னை]
10. "வ்" உடம்படுமெய்
11. கண்ணியோ பார்வை மிருகமோ வைத்தல்
12. தாவி
13. தொடர்வார்
14. வெருட்டி
15. கழுதைப்புலி
16. குற்றியலுகரம் கெடவில்லை. உடன்படு மெய்யும் இல்லை
17. [யாறு]
18. தேன்

தோகை மயிலினங்கள் தூயமட மாதரைப்போல்
வாகுடன் கூத்தாட மகிழ்ந்து[1]ஒத்து ஊதுவர்போல்
வண்டுகள் ஊத வரிக்குயில்கள் தாம்பாடக்
கண்டு களிகூர்ந்து கருமந்தி பார்த்திருக்கக்
கூகைகுழ றிக்கூவக் குறுங்காடை சத்தமிட
வாகுலவு [2]மாங்காடை மண்டியொரு பால்கூவப்
பருந்தினங்கள் [3]ஆயப் பருங்கழுகு தானைய
இருந்து கருங்காக்கை இரைக்கும் இருள்வனத்தில்
பெண்ணினை யைத்தடிப் பெருகுமத யானைகில
தண்ணூர் வனத்துள் தான்கூப் பிடுங்குரலும்
இருண்ட செடிப்[4]புதைக்குள் இருக்கும் வரிப்புலிகள்
உருண்டவட்டக் கண்விழித்து உறுமுகின்ற சத்தங்களும்
பன்றி யுடனே பருத்த கருங்கரடி
ஒன்றுக்கொன் றேசிறி உறுமியசத் தத்தொனியும்
புள்ளிமான் தன்னைப் புகழான வான்கலைகள்
தெள்ளிதமயா ஓடித் தேடிக்கூப் பிடுங்குரலும்
அன்னங்கத் துங்குரலும் [5]அண்டில்கள்கத் துங்குரலும்
வன்னமிரு கம்[6]பலது வாய்விட்டார்க் குங்குரல்கள்
அலைசேர் கருங்கடல்தான் ஆர்க்குமொலி போல்முழங்க
மலைப்[7]புடைவில் வாழும் [8]வலியான சிங்கங்கள்தான்
ஆயுங் கருமுகிலை ஆனையெ[ா]ன்று தான்சீறிப்
பாயும்; மலைப்பாம்பு பால்நுரைபோல் சட்டைகள்தான்
தான்கழற்றி யேகிடக்கும்; தழைமூங்கில் பண்ணைதொறும்
ஈனமில் லாமுத்து [9]யெங்குஞ்சித றிக்கிடக்கும்;
கின்னரர்தம் மாதரொடு கெம்பீர மாகவேதான்
வன்னத் தழைப[10]றித்து மண்மேல்பாய் போல்விரித்து
[11]இட்டலாப மாக இருந்துநலம் பாராட்டி[ச்]
[12]சட்டமாகக் கலவி தான்செய்யும் நல்வனமாம்;
சூரியகதிர் பாயாமல் தோற்றமென வேநெருங்கிக்

---

1. கருதி கூட்ட ஊதும் குழல்; [ஒற்று]
2. குறுங்காடையினும் பேரியது
3. ஆயோ எனக்கூவ
4. மறைவு
5. அன்றில்; 'ற்'ட, னை ஒலித்தல் காண்க
6. பல
7. பக்கத்தில்
8. வலியுள்ளது
9. 'ய்' உடம்படு மெய்
10. [தி]
11. இவ்விடபோகமாக
12. சேப்பமாக

காரிருள்போல் கல்லார் கருத்ததுபோ லேயிருட்டி(க்)
கனக்க வளம்பொருந்திக் கண்டவர்கள் கண்களிக்க
மனக்கருத்துக் கெட்டாத வளமைபொருந் தும்வனத்தை[த்]
திலீப மகராசன் சிறப்புடனே தான்பார்த்து
வலியூர் படையுடனே வந்த வனத்திலேதான்
வேட்டைமிகத் தானுட விரும்பியொளி யங்குவைத்து(த்)
[1]தாட்டிமையாய் மன்னவனுந் தானிருக்கும் அப்போது
இரும்பை முறுக்கி இட்டதுபோல் கொம்புகளும்
கரும்பினிய சொல்லர்[2]நெஞ்சில் காட்டுமுலை கனப்போல(க்)
கொம்புடைய மாகலிதான் கூடுமினத் தைப்பிரிந்து
வெம்பி வெகுண்டு வெளியில் மிகக்குதித்து
பயந்துதிரும் பித்திரும்பி(ப்) பார்த்துஅந்த மான்கலியும்
[3]அயர்ந்து தருகாமல் அஞ்சிமிக ஓடுவதை(க்)
கண்டான் அரசன்; கலிமான் அடிப்பிறகே
வண்டாரும் பூமார்பன் வன்னச் சிலையெடுத்து
மங்கையர் மேல்நாடி வருவதுபோல் மன்னவனும்
செங்கைதனில் வில்லெடுத்துச் சிறந்தஅம்பைத் தான்பூட்டி(த்)
[4]துடர்ந்தான் கலிப்பிறகே ; தூயகலி யும்பயந்து
அடர்ந்த பெருங்காட்டில் அதிவேக மாய்விரைந்து
கையிலது சிக்காமல் க[5]டுகியோடிப் போனதுவே;
துய்ய கலிதன்னைத் துடர்ந்துவேட்டை [6]ராணுவுடன்
[7]பத்திவந்த ராசன் பாங்காய் வெகுதூரம்
[8]சுத்தி யலுத்துச் சோர்ந்துயிரு [9]காலசந்து
நாவு மிகவுலர்ந்து நல்முகமுந் தான்வாடி(த்)
[10]தூவும் வெயிலாலே சோர்ந்து உடல்முழுதும்
உலவாய் மெழுகதுபோல் உள்ளமெல்லாம் வெந்துநொந்து
மலைவாய் மனமிளைத்து வாட்டும்பசி தாகமிஞ்சி
நடக்கச் செயலிலாமல் ராசன்வெகு [11]சோபமதாய்(த்)
தடக்கைச் சிலைசோரத் தான்வரும்போ தவ்வழியில்
கண்டான் ஒருசுனைதான் கனத்த தடாகமது
வெண்டா மரைமலர்கள் வெகுங்காடி சூழ்ந்தபொய்கை.

---

1. தாட்டித் (ஆற்றல், வீரம், பெருமை) தன்மை
2. [ற்]
3. அயர்ந்துவிடாமல்; 'தரு கு' கான்க
4. தொடர்ந்து
5. [டி]
6. ராணு-ராணுவம்; படை [சேனை]
7. பத்தி-பற்றி
8. சுத்தி-சுற்றி.
9. காலசந்து-காலையந்து
10. அம்பு சொரிவதுபோலச் சொரியும
11. ஆயாசம்.

விருத்தம்

105. தூயர் மனம்போ லத்தெளிந்து
தண்ணென் றினிதாய்[1]த் துகள்நீக்கித்
தீய ருளம்போ லாயாழ்ந்து
தெரிதற் கரிதாய் இருள்செ[2]றிந்து
பேயர் மனம்போல் மீனினங்கள்
ந[3]றவு தெ[4]வுட்டிப் பெரிதுகள
நேயர் மனம்போல் நீரொழுகிப்
[5]பஞ்சாய் வெள்கி நிறைந்ததுவே.

நடை

விந்தையுடன் ஐம்புலனை வென்றபெரி யோர்கூடை
110. சிந்தையைப்போ லேதெளிந்து சிறந்த குளிர்ச்சியொடு
வஞ்ச ருடைய மனத்தாழம் போலாழ்ந்து
நஞ்சுவிழி வேசையர்கள் [6]நன்னெஞ்சு போல்கறுத்துப்
பித்தர் குணம்போலே பெருஞ்சுனையில் மீனினங்கள்
[7]உத்த நறவையுண்டு ஓங்கி[8]வெடி தாவிவிழ
115. [9]நல்லா றுடையோர்கள் நல்மனம்போ லேயொழுங்காய்ச்
சொல்லார்வெண் பஞ்செனவே தூயநிற மாய்நிறைந்து
பெருகுஞ் சுனைப்புனல்மேல் பெற்றிருந்த தாமரைப்பூ
திருமகள்தன் பொன்முகம்போல் சிறந்த ஒளி[ர்]காட்டக்
காவி மலர்களிரு கண்போல் மிகக்காட்ட(த்)
120. தூவியன்னப் பேடுகள்[10]தான் துலங்கும் நடைகாட்ட(ப்)
பனிலங் [11]களங்காட்டப் பவழம் இதழ் காட்ட
அணிதா மரைஅரும்பு அழகு முலைகாட்ட
இப்படியே லெட்சுமிபோல் இனியகோ லங்காட்டும்
செப்பமூள்ள பொய்கைதன்னை(த்) திலீபதிமன் னன்பார்த்து
125. அச்சுனையி லேகுளிக்க அவனும் மனமகிழ்ந்து
கச்சை அவிழ்த்துக் காவலனு மேகுளித்து(ச்)
சதுரங்க சேனையொடுஞ் சஞ்சலந்தீர்ந் தெக்களிப்பாய்

---

1. [ற்று]
2. [றி]
3. [ர]
4. வி
5. பஞ்சுபோல வெண்ணிறமாய்
6. குறிப்பு :- மங்கல வழக்கு
7. உற்ற.
8. நீமிர்ந்து எழுந்து.
9. நல்லாறு - நல்வழி
10. தாம்.
11. கழுத்து (சங்கு)

மதுர மொழிமன்னன் மனமகிழ்ந்து கரையேறி
உச்சிக் கடன்கழித்து உகந்துநிஷ்டை யும்முடித்து
மெச்சுங்கனி வர்க்கமொடு வேண்டியசெந் தேனருந்திச்
[1]சட்டரசத் தோடமுது தார்வேந்த னும்[2]பொசித்து
இட்டமுட னேதான் இளைப்பும்ஆ [3]றும்படியாய்
எழுந்தபெருஞ் சேனையொடு[4] இஷ்டகோ லாகலமாய்க்
குளிர்ந்தமலர்(ச்) சோலைதனில் கொற்றவனும் வீற்றிருந்தான்;
மன்னனவன் அங்கிருக்க வாய்த்த நெடுங்கதிரோன்
[துன்னக்] கதிர்சுருக்கித் தோன்றுமலை யில்மறைந்து
கோலமுள்ள மேல்கடலில் குளித்து அவன்மறைய
மாலைப் பொழுதுமங்கே வந்திருந்த தாகையினல்
[5]தழைக்குகின்ற தாமரைப்பூத் தானே முகங்குவிய
வளைக்குங்[6]கருங்குவளை மலர்மேல் மலர்வண்டுகள்
மல்லிகைப் பூமேலே மகிழ்ந்து சிறையொதுக்கி
மெல்லவே கண்ணுறங்க வேமாலை வந்ததுவே;
மாலைப் பொழுதுவர மாலைபுனை மன்னனவன்
சீல முடன்அந்தி செய்கடனுந் தான்முடித்து
வேட்டைப் படை யாளர்தன்னை வேந்த னவன்நோக்கி
"நாட்ட முடனேதான் [6]ராக்காலம் ஆனதினல்
வண்ணமுட னேமிருகம் வாய்த்தமலர் ஓடைதனில்
தண்ணீர் மிகக்குடிக்கத் தானேதான் வந்திடுங்காண்
ஆனதால் நீங்கள் அனைவோரும் கண்ணிகட்டி(த்)
தானே ஒளியிருந்து சருவமிரு கங்களையும்
கொன்று பிடியு" மென்று கூறித் திலீபதியும்
அன்றுதங்[7]கு வேட்டையென அரசன் அவனிருந்தான்
மன்ன னுரைத்தபடி வரும்வேட்டைக் காரரெல்லாம்
நன்னயமாய் வார்வளையம் நாட்டி [8]யொளியிருந்தார்;
அப்பொழுது பன்றிகள்தான் அநேகம் பலதிரண்டு
செப்பமுள்ள ஓடைதன்னில் சிறப்பாக நீர்குடித்து
மூன்றும் பிறைபோலே முனைநீண்ட கொம்பாலே
ஊன்றி நிலமுழுதும் உகந்தபஞ்சாய் [9]மூலமெனும்

---

1. சட்டரசம் - அறுசுவை, இரசம் அரசம் எனவருகிறது
2. புசித்து.
3. [ரு]
4. குற்றியலுகரம் கெடவில்லை இப்படி வருவது இந்நூலில் பெருவழக்கு
5. தழைக்கின்ற : எதுகைக்கு "ை" என்றேவரும் 'கு' காண்க
6. ரகரம் நகரத்துடன் மோனைகொள்வது இந்நூல் வழக்கு
7. கீ ; தங்குவேட்டை என்றுமாம்
8. பதுங்கி இருந்தார்; 9. கீழங்கு

கோரைக் கிழங்குதின்று குதித்தோடும் பன்றிகளை
வீரமுட னேவலைந்து வேலுக் கிரையாகக்
குத்தியே சாய்த்துக் குவிக்குந் தறுவாயில்
[2]சுத்துமிருள் கூட்டந் தொலைந்தோட வேகதிரோன்
வருவ தறிந்தடர்ந்த வனத்திலுறை பூங்கோழி
இரவிவந் தான்எனவே இரைந்துமிகக் கூவியதே.
அரசன் அதுவ[1]றிந்து அருக்கனுதித் தானெனவே
வரிசையுட னேவேட்டை மன்னவரைத் தானெக்கிப்
பட்டமிரு கங்களையும் பாங்குடனே காவடிதான்
கட்டிக்[4]கொண்டு வாருமென்று காவலனுஞ் சேனையுடன்
தன்பதியை நோக்கித் தானே வரும்போது
பொன்போல் ஒருமுனிவன் பூண்ட [5]தவத்துடையான்
[6]பேசனந்த காலம் பெருந்தவசு தான்முடித்துப்
போசனமுந் தான்வெறுத்துப் புரிசடையுந் தான்விரித்து
திரமுடனே [7]ருத்திராட்சம் திருநீறுந் தானணிந்து
மரவுரியுந் தான்தரித்து மாமறையுந் தான்துதித்து
மெய்யில்புலித் தோல்சாத்தி விளங்குகுண்ட லம்பூணந்து
கையிலே தண்டேந்திக் கமண்டலமுந் தானெடுத்து
மெல்ல நடைநடந்து விஷ்ணுமதங் கொண்டமுனி
அல்லல் வினையறுத்து அருள்பெருகு மெய்ஞ்ஞானி
மன்னன் தனக்கெதிரே மாயோகி வந்திடவும்
பொன்னிலகு மார்பன் [8]பூராய மாய்நோக்கி
எதிர்கொண்டு தரன்நடந்து இனிய தவமுனியை
மதுவொன்றும் பூமார்பன் வணங்கி அடிதொழுதான்;
விழுந்து நமஸ்கரித்த வேந்தன் முகம்நோக்கி
அழுந்து தவமுனிவன் ஆசீர்வா தங்கள்செய்து
பேரான [9]மன்னனுட பெருமை முகம்நோக்கி
"வாராய் இரவிகுல மன்னவனு க[10]யிருந்தும்
வாட்டமில் லாதகுண மன்னுஇந் நாளையிலே
வேட்டைநீ தானுட விரும்பி வரலாமோ?

---

1. வலைந்து என்பது வளைத்து என்ற பொருளில் வருகிறது
2. சுற்றும்
3. [தி]
4. கொண்டு என்பதன் "டு"; அல்லது ஒலியாது; அலகு பெறுது
5. தவமுடையான்
6. பேசு + அனந்த
7. 'ரு' மொழி முதல் வருகிறது
8. முழுதும் ஆராய்ந்தறிய ஊன்றி நோக்கி
9. மன்னன் உடை
10. 'ய்' உடம்படு மெய்

அரியமாக மாதமென்று அண்ணலே உ[1]ன்தனுக்கு(த்)
தெரியாதோ'' என்றுமுனி செப்பினதால் மாவேந்தன்
அம்முனிவ னோநோக்கி அடிதொழுது தெண்டனிட்டு
''எம்மையா ளுங்குருவே எந்தலே தொண்டனுக்கு
மாகமாதம் என்று[2]சொன்னல் வகையுடைய விருத்தாந்தம்
ஆகமுடன் எந்தனுக்கு அய்யனே சொல்லு'' மென்று
வச்சிர மணிமகுட மாவேந்த னுங்கேட்க
மெச்சும்பெருந்தவத்தோன் விளம்புவான் [3]ஓவியமாய்.
''தென்னு புயசயிலா சிறந்தமாக மாசப்பலன்
பின்னுலே சொல்லுகிறேன் பேச[4]யிப்ப நேரமில்லை;
என்கூட வாரு'' மென்று இனிய தவயோகி
தன்கூட வேகூட்டித் தானெருவா [5]வி-புகுந்து
சீராரு மாமுனிவன் செழும்புனலில் நீராடி
தாராரும் மன்னனையுந் தான்முழுகச் செய்தனனே.
இப்படியே தானிருவர் இன்பமுடன் நீராடிச்
செப்பமுள்ள வேந்தனையுஞ் செழுமுனிபார்த் துக்கூறும்:

விருத்தம்

மாக மாதம் என்பதொன்று மாயப் பிறவிக் கடல்வீழ்ந்து
சோக மான மானிடரை முத்தி தலத்துய்[6]ச் சிடுதோணி;
மோக மான பாவஇருள் தீர்க்கும் விளக்கு; மூழ்குகின்றோர்
நாக நாடாள் பெரும்பதவி நணுக அளிக்க வற்றிதுவே.

நடை

மன்னவா சொல்லுகிறேன் வாஞ்சையுட னேகேள்மோ;
பொன்னுலகோர் மண்ணுலகோர் புனிதமென வேமகிழும்
மாகமாச மெனவே வருகின்ற மாசப்பலன்
[7]வாகிலகு மாவேந்தே வழுத்த என்னல் கூடாது;
[8]அப்படியாக் கொத்த அரியமக மாசபலன்
செப்புகிறேரு மண்ணில் செத்துசெத்து(த்) தான்பிறக்கும்

---

1. [த்]
2. சொல்+தல்
3. அழகாக
4. இப்பொழுது-'ய்' உடம்படுமெய்
5. வி-நேரசை
6. த்தி
7. தோள்; அழகு
8. அப்படிப்பட்ட

மாயப் பிறவி மயக்கக் கடல்வீழ்ந்து
[1]காயக்க மாகக் கவலிலபடு மானிடர்கள்
செய்தவினை தீர்த்துச் சிறப்புடைய மோட்சபதம்
கைமேல் அடையக் கடத்திவிடுந் தோணியிது:
ஆசையென்னுங் காமம் அடங்காத பாவவினை
தோ[2]ச இருள் தீர்க்கும் தூண்டா மணிவிளக்கு;
ஆனதினுல் மன்னு அரியமாக மா[3]சந்தனில்
தானமெவர் செய்தாலும் தன்வினையைத் தானறுத்து
உம்பர் பதிபெறுவார்; உ[4]த்த சுகம்பெறுவார்;
எம்பிரான் வாழும் இனிய பதியடைவார்;
மல்லலம்பும் புயனே மன்னுகேள் முத்திபெற
நல்ல வழியிதுகாண் [5]ராசனே கேளு'' மென்று
பின்னுமந்த மாமுனிவன் பேரான மன்னனுக்கு
நன்னயம தாகவேதான் நட்பாய் உரைத்திடுவான்
''வளமை மிகக்கொடுக்கு மாகஸ்நானம் ஆடுதற்கு
இளவரசே இந்நாள் எடுத்தமுகூர்த் தங்கண்டாய்
இன்றைத் தினம்நீதான் இன்பமுடன் நீராடும்.
நன்றியுள்ள மாபலனை நான்சொல்ல வேணுமென்றுல்
இப்பொழுது நேரமில்லை என்தவசுக் குப்[6]போறேன்
செப்பமுள்ள சீர்வேந்தா செல்வமுள்ள நாடுசென்று
உங்கள்குரு வாகவளர் [7]உத்த வதிட்டரிடம்
திங்கள் வளர்குடையாய் செப்பமுடன் நீகேட்டால்
ஆதி குருவான அழகு வதிட்டரிஷி
ஓதுவார் உன்தனுக்கு உற்றமாக ஸ்நானபலன்''
என்றுமுனி தானுரைத்து ஏகி யவர்போக
வென்றியுள்ள மன்னன் விரைந்து படையுடனே
தன்னூர் புகுந்து தனக்குரிய தேவியர்க்கு(ப்)
பொன்னூல் முனிவன் புகன்றமொழி யும்புகன்று
அந்தநல்ல மாதரையும் அன்று [8]மலர் புனலில்
விந்தையுட னேஸ்நானம் விரும்பியா[ட்] டி(ப்)பணிந்து
பூண்ட புகழுடையான் பொன்னை வெம்பரிமேல்

---

1. காயக்கம் - மோகமயக்கம்
2. ஒ
3. சந்த ; நிரையசை
4. உற்ற
5. 'ரா' மொழி முதல்-ந.ர-மோனை
6. போகிறேன்
7. உற்ற; யுக்த
8. விரிந்த; மலருடைய என்று பொருளா னுல் 'மலர்ப் புனல்'என இருத்தல் வேண்டும்

தாண்டியதி வேகமெனத் தன்குருவா [1]ன-வதிட்டன்
இருக்கு மிடந் தேடி ஏந்தல் அவன் நடந்து
மருக்குலவுஞ் செய்யசடை வதிட்ட மகாரிஷி[2]யை
விந்தையுள்ள இந்திரன்முன் வியாழ குருதனையே
வந்து வணங்கும் வழிபோல் இவனராசன்
விரித்த சடையுடைய வேத வதிட்டர்பதம்
இருத்திவெகு அன்புடனே இறைஞ்சி எழுந்திருந்து
தாங்குமணி மந்திரவாள் தன்னை யவனூன்றிப்
பாங்குடனே கைகட்டி(ப்) பதையாமல் பக்கம்நின்றான்.
மின்பொருந்தும் வாளுடையான் மிகவும் வணங்கினதால்
அன்புடைய வேதகுரு ஆசீர்வா தங்கள்செய்து
"இடைந்தோடி யேமெலிந்து இளைத்தமறு மாற்றலர்கள்
அடைந்தாலுங் காக்கும் அரசேநீ வந்தனையே"
என்று [3]வெகுவாக ஏந்தல் தனைப்புகழ்ந்து
அன்றொருபீ டத்தில்வைத்து ஆதி வதிட்டகுரு
பூராயமாய் நோக்கிப் [4]பொங்கமென வந்த[5]கவை
வீராதி வீரா விளம்" பென்றான் மாமுனிவன்.
ஆசான் மொழிந்ததினல் அன்பான மாதவரே
தேசாரு மன்னனவன் செப்பும் படிகேளீர்!
"படர்ந்த சடாமகுட[6](ப்) பரதேசி காமறைநூல்
கடந்த அரும்பொருளே கருணைப் பெருங்கடலே
உமது கிருபையினல் உலகை யொருகுடையில்
கமல மகள்தழைக்கக் கடவாமல் நீதியொடு
சாமபேத தானதண்டம் தழைக்கஇந்த நால்விதமாய்
மாமறைகள் சொன்ன மனு[7]நீ நங் குன்றுமல்
[8]தாட்சியொன்றும் வாராமல் தரணி [9]தளம்பாமல்
மாட்சியுடன் செங்கோல் வரிசையுட னேசெலுத்தி
அண்ணலே பூமி யாண்டு வருகிறேன்காண்.[10]
வண்ணமென நேற்று வனவேட்டை தானடி
அடியேன் பதிதேடி அன்பாய் வரும்வழியில்
வடிவுடைய செய்யசடை மாமுனிவன் அங்குவந்தான்.

---

1. ன "நேரசை"
2. [யே]
3. வழக்குச்சொல்
4. மகிழ்ச்சி; பொலிவு
5. கவை - காரியம்
6. [ம்]. மறைநூல்கள் + தந்த ;
7. நீதி
8. தாட்சி
9. தளும்பாமல் - தடுங்காமல்
10. அரச இயல் கண்க

கண்டேன். ரிஷியுமென்னைக் கையுடனே தான்கூட்டி(க்)
கொண்டேபோ னார்காட்டில் [1]குளுந்த மலர்ச்சுனையில்;
இற்றைநாள் மாகஸ்நானம் இனிப்பாக ஆடுதற்கு
உற்றமாக மாதமென்றும் உத்த தேதியென்று(ம்)
இன்னளு தயாநியில் என்னைஅந்த மாரிஷியும்
பொன்னார் மலர்(ச்)சுனையில் புனிதமுடன் நீராட(ச்)
சொன்னார்; அவருடைய சொல்லும் மறவாமல்
மின்னார் செழுஞ்சடையீர் விரிபுனலில் மூழ்கினன்நான்;
மன்னும் புகழுடைய மாரிஷியே அம்முனிவன்
நன்னயமா கஸ்நான நல்ல பலாபலத்தை
உங்கள் குருவிடத்தில் ஓவியமாய்க் கேளெனவே
பொங்குந் தவமுனிவன் போயினான்; ஆகையினாலே
அடியேனும் இங்குவந்தேன்; ஆனமாக மாசந்தனில்
திடமுடனே மாகஸ்நானஞ் செய்கின்ற முன்னோர்கள்
மாகஸ்நான தீர்த்தம் மகிழ்ந்தாடும் நல்லிடமும்
மாகஸ்நான மாடுகின்றோர் வரிசையாய்ப் பெற்றபேறும்
நான்[2]கேழ்க்க வேணுமென்றே நல்ல விருப்பமொடு
தான்தேடி இங்குவந்தேன் தான்சொல்ல வேணு'' மென்று
தேசிகனே வேண்டி(த்) திலீபதிரா சன்கேழ்க்க
வாசமலர் வேதனிகர் மாமுனிவன் சொல்லிடுவான்
''அப்படியே உ[3]ன்தனுக்கு அழகுமாக மாசபலன்
செப்பமெனச் சொல்லுகிறேம் சிந்தைகுளி கும்படியாய்
வனத்தி லுனக்குமிந்த மாகஸ்நானத் தின்பலனைக்
கனக்கவே சொல்லிவிட்டோன் காசினியி லேபெரியோன்;
அவனே தவயோகி அவனுக் கினையாரோர்
தவமான மாவேந்தா தானரிது; சொல்லுகிறேம்;
மேதினியி லேஅசுவ மேதயா கம் [4]பலது
[5]போத மெனவே புகழுடனே செய்தவரும்
திரிநேத் திரமுடைய சிவனுருக் கற்புதமாய்
வரிசையுடன் கோவில்கட்டி வாகுடனே வைத்தவரும்
தண்ணீர்த் தடாகந் தழைக்குங் குளங்கிணறு
வண்ணமுடன் வெட்டி வரிசையுடன் வைத்தவரும்
ஏடுதனில் எழுதா இனிய பழமறையை

---

1. குளிர்ந்த
2. கேட்க.
3. [ந்]
4. பல
5. அறிவுக்குத் தக்க செயல்

நாடி யுணர்ந்து நன்ருய்ப் படித்தவரும்
காற்றைப் பொசித்துக் கடிய கொடுவிர தம்
நேர்த்தி யுடனே நேரா யிருந்தவரும்
பஞ்சாக் கினிவளர்த்துப் பண்பாய் அதினடுவே
நெஞ்சாற் புலனடக்கி நெடுந்தவசு செய்தவரும்
அப்பனே வாயுதன்னே அடக்கிமூலா தாரவழி
[1]எப்பொமனத் தைநிறுத்தி எழுந்தபிர காச[2]ஒளிர்
தன்னேக்கண் டன்புடனே தானே யிருந்தவரும்
பொன்னேப்போ லேவிளங்கிப் புகழா யிரமுகமாய்
வருகின்ற கங்கைதனில் மகிழ்ந்தா டினபேரும்
திருநின்ற புண்யநதி தெரிந்தாடப் பெற்றவரும்
[3]இப்படியா விரதம் எடுத்து[4]நே டுகிலுந்தான்
செப்பமுடன் மோட்சஞ் சேருவதி லும்பார்க்க
ஆயிரம் பங்கு அதிக பலாபலன்ருன்
தூயமாக மாசந்தனில் துலங்குபுனல் ஆடுவார்க்கு(க்)
கொடுக்கு மதுகண்டாய்; கோமானே இன்னமுங்கேள்
எடுக்கும் விரதமதில் இனியமாக மாசபலன்;
நல்ல விரதமிது நம்பெருமான் வாழ்கயிலே
எல்லே வழித்துணேயாம்[5]; ஏந்தலே சிந்தைதனில்
எண்ணுங் கருமமதை இப்பிறவி யில்கொடுக்கும்;
வண்ண முடன்சொன்னேன் மற்றவிர தம்வேண்டாம்
மன்னவா [6]கேள்மோ மாகஸ்நானம் ஆடினபேர்
நன்னய மாய்ப்பெற்ற நல்வரத்தை ஓவியமாய்(ச்)
சொல்லுகிறேரும்; கேளு" மென்றே தூய திலீபதிக்கு
நல்ல தவவதிட்டன் நவிலுவான் மாதவரே

விருத்தம்

பேசுபுகழ் மாகமதி நீர்முழுகு பேரால்
வாசவனே முன்சசிய னேந்தினிது வாழ்ந்தாள்;
ஏசற்[7]வி ளங்கதிதி தேவர்தமை யீன்ருள்;
மாசனகர்[3] கோமகளி ராமனேம ணந்தாள்.

---

1. எப்பொழுதும்
2. ஒளி
3. வழக்கு
4. தேடு
5. [ய்]
6. "கேண்மோ" கேள்மோ என்றே வருகிறது
7. விளங்கு + அதிதி
8. சீதை

நடை

"வண்டணிபூ மார்பா வளர்மாக மாசந்தனில்
தண்டுறைபூ வாவியில் [1]ஸ்நானம்பண்ணி பேறுபெற்றோர்
எண்ணவொண்ணுப் பேர்கள் இனியமாகம் ஆடினது
தன்னையும்நாம் உ[2]ன்தனுக்கே சாற்றுகிறோம் மன்னுகேள்:
வன்னமுள்ள இந்திராணி மாகஸ்நான மாடினதால்
பொன்னகர்வாழ் இந்திரர்ச்குப் போயிருந்தாள் பாரியென;
அதிதியெனும் மடவாள் அந்தப் பலத்நாலே
மதியுடைய தேவர்தன்னை [3]மகிட்சியுடன் பெற்றெடுத்தாள்;
தாதுலவும் பூமாலை சனக ராசனீன்ற
சீதையெனும் மாயயில்தான் தீர்த்தமா டும்பலனால்
தாராரும் பூமார்பன் தசரத ராசனீன்ற
சீராம ருக்கேதான் தேவியென வாழ்ந்தாள்காண்.
இப்படியாய் இந்த இனியமாக மாசந்தனில்
செப்பமுட னேமுழுகி(ச்) சிறந்த தவங்கள்பெற்றோர்.
சொன்னேம் இதுநிசமாஞ்; சொல்லுகிறோம் இன்னமுமே.
பொன்னூர் புவியில் புகழ்கொடிய மாவிரதம்
உண்டுகாண்; அவ்விரதம் [4]உகந்துதான் செய்தவர்கள்
வண்டுலவுஞ் சோலை வளர்கயிலா சப்பதியில்
இருந்துமவர் செய்தபலன் எவ்வளவோ அவ்வளவும்
திருந்தவே அங்கிருந்து தேவபோ கங்கள்நுய்த்து
மீண்டுமிந்த வையகத்தில் மிகவே பிறந்திடுவார்;
தூண்டு பெரும்புகழோய் தூயமாகஸ் நானபலன்
நன்றியுடன் செய்தவர்கள் நாரிபா கன்பதியில்
என்றும் நிலைமையென இருப்பார்கள் சொர்க்கமதில்;
ஆனதால் மன்னு அரியமாக மாசபலன்
நான்சொல்ல முற்றுது; நவிலக்கேள் ஆறுமும்;
பேரால் பெரிய பிருகு மகாரிஷியாய்(ச்)
சீரார் தவத்தோன் தெளிந்த மனதுடையோன்
தன்னிடத்தில் அன்புடனே தழைக்கும்விஞ்சை நாடுடையான்
நன்னயமாய்த் தன்னுடைய நற்றாயை யேகூறிப்
பாங்காய் மணிகூடப் பருவதத்தில் மாசஸ்நானம்
ஆங்கே அவன்மூழ்கி அரியபலன் பெற்றகதை
சொல்லுகிறேன் கேளுமென(த்) தூய திலீபதிக்கு
நல்ல தவவதிட்டன் நவிலுவான் மாதவரே

இரண்டாம் அத்தியாயம் முற்றும்.[5]

---

1. த-ஸ்-மோனே 2. [ந்] 3. மகிழ்ச்சி 4. உவந்து
5. "மீனுட்சி யம்மன் துணை-வேலு முருகையர் துணை செய்யவேண்டியது-குருபாதமே கதி" என்று முடிவில் உள்ளது

மூன்றும் அத்தியாயம்

விஞ்சையன் கதை

விருத்தம்(1)

"செல்வமி[1]க யோத்திநகர் தேர்வேந்தே போரேறே
பல்குமழை மு[2]ற்காலம் பன்னிரண்டாண் டிலாமையினுல்
அல்லலுறும் பசியுடற்ற அவனியில்மன் னுயிர்களெல்லாம்
கல்லியகூ வலில்நீரும் வறந்தொழியக் கலங்கினவே.

நடை

5. 'சீராருஞ் செல்வஞ் சிறக்கும் அயோத்தி நகர்
பாராளும் வேந்தா படையால் பெரியோனே
வாரேறு கும்பமுலை மங்கையர்கள் அல்குலெலும்
தேரேறு மாரனிகர் திலீபநிமன் ஞகேளாய்!
பாங்காக முற்காலம் பன்னிரண்டாண் டு [3]வ்வருடம்
10. ஓங்குமழை யில்லாமல் உகாந்த காலமாகி
ஆறு குளம்வற்றி [4]யகண்ட சுனைக்கிணறும்
ஊறு வதுமின்றி ஒளிமிகுத்த சூரியனுல்
மரங்கள் தலைகருகி வாட்டுங்கோ டைவெயிலால்
திரங்கிப் பசும்பூடுங் [2]தீஞ்சுபுல்லுந் தானெரிந்து
15. [6]வத்தாச் சமுத்திரமும் [7]வத்திக் கனல்பறக்கச்
[8]சித்தாறும் [9]வத்திச் சிறந்ததொரு மானிடரும்
பசியால் இடைந்து பறவைமிரு கச்சாதி
கசிவாய் உழன்று கலங்கிமிக வாடிடவே
வெய்யில் கொடுங்கோடை வெயிலக் கினியாலே
20. வைய முழுதும் வறண்டுதண்ணீர் இல்லாமல்
திருவாழ் பொதியமலை சிறந்த இமயமலை

---

1. மிகுஅயோத்தி
2. [க்]
3. 'வ்' முன் சீரில் உள்ள சொல்லின் கடையெழுத்துத் தனிக் குறிலாகப் பின் சீரில் வந்து நேரசையாக ஒலிப்பது வினங்க 'வ்' விரித்தல் விகாரமாக வந்ததுபோலக் காட்டப் பட்டுள்ளது. பிற இடங்களில் அப் படி வராமலும் குறில் நேரசையாம்
4. அகன்ற
5. தீய்ந்து
6. வற்ற
7. வற்றி
8. சிற்றாறும்
9. வற்றி

இருமலேக் குள்ளாக இருக்கின்ற நாடுமுற்றும்
வெந்து மிகக்கருகி வெம்புனமாய்ப் போனதினுல்
அந்தமுள்ள மாயோகி அரிய கொடுந்தவசு
செய்தமகா[ப்] பெரியோன் சிறந்த பிருகுமுனி,
வையம் வறண்டதினுல் மாட்சியுள்ள தொண்டரொடு
நேசமுட னேதான் [1]நிருமதையாற் றங்கரையில்
வாசமெனச் சிலநாள் மாதவசு செய்திருந்தான் ;
[2]வத்தா நிருமதையும் [3]வத்தி உலர்ந்ததினுல்
முத்தார் நகைமுனிவன் [4]முசியாத சீஷரொடு
அந்த இருக்கைவிட்டு அப்பால்வை கு-இடத்தில்
விந்தையுட னேஇருந்துப் வெம்புனல்இல் லாததினுல்
தாழுஞ் சடைப்பிருகு தண்ணீரில் லாதவிடம்
நாளுந் தவசிருக்க நமக்கு[5]மூற்ரு தென்று சொல்லி(த்)
தொண்டருட னேகூடித்—துடிக்குங் கொடியவிட[6]-
கண்டனெனும் ஈசன் கயிலேயங் கிரிக்கடுத்து
ஓங்குமுப்பத் தாருயிரம் ஓச னேயுயர்ந்து
ஆங்கும் பதினுறு யோசனேயால் அடிக்கனத்துப்
பத்துயோ சனேயகலம் பாங்காய் முடிவிரித்து(ச்)
சித்திரம தாகச் சிறந்தமணிக் கூடமெனும்
பார மலேயாம் பரமன்மலேக் கு-மேல்பால்
சீருடனே தானிருக்கும் சித்ரமணிக் கூடமலே—
அம்மலேயின் தன்பெருமை அண்ணலே சொல்லுகிறேும்.
செம்மையுட னேகேளும் ! சிறந்தசந் தனவிருட்சம்
கோங்குடனே சாம்பிராணி கோலமிகு சண்பகமும்
பாங்குடைய மாமருது பழுமரமோ டேஇலவு
இவ்வண்ண மாக இருக்கும் பலவிருட்சம்
செவ்வண்ண மாய்த்தளிர்த்துத் சிறந்த மலர்களொடு
கனிகள் மிகநெருங்கக் கதிரோன் [7]பிரபே[7]யன்றித்
இனிய இருளடர்ந்து எழுந்துபடர்ந் து-நெருங்கி(த்)
தழைக்குமணிக் கூடமலே தன்னில் வெகுகோடி
மழைக்கூந்தல் அரம்பையரும் மா இயக்க மாதர்களும்
கார்திருவ மாதரொடு கடியதவ மாதர்களும்
சேர்ந்து விளேயாடுஞ் செய்யமலர்ச் சோலேகளும்

1. நர்மதை
2. [வற்ரு]
3. [வற்றி]
4. ஊக்கம்குன்ருத
5. முழுதும் பொருந்தீவர முடியாது
6. விடகண்டல் ; அடுத்த அடியில் தொடர்கிறது
7. இன்றி

அஷ்டாங்க யோக அருந்தவங்கள் செய்து மகா-
நிஷ்டை யுடையோர் நெருக்க மொருபாலாம் ;
[1]ஆகாதி எக்கியங்கள் அநேக மிகவளர்த்து
வாகாக வேபெரியோர் மசிழ்ந்திருப்ப தோர்பாலால் ;
ஆசைக் கடல்க்டந்து ஐம்புலனை வென்று மகா-
[பாசாண்டுத.....] பண்ணும் தவமொரு பால் ;
[2]தேவர்களும் தேவர் ஸ்திரீகளுடன் சற்பகப்பூங்[3]-
காவனமும் அங்கே கனிந்து வளர்வதுபோல்
சிறப்பான புஷ்பமது சேர்ந்தகனி மாரசங்கள்
இருக்கும் மலர்க்காவில் இருந்தொழுகுஞ் செந்தேன்கள்
சோனைமழை போல்வடிந்து சுனைகள் மிகநிரம்பி
[4]கானையாறு போலே கனிந்தோட வேவளந்தான்
படரும் மணிகூடப் பருவதத்தின் சாரலிலே,
அடருந் தவமுனிவன் ஆன பிருகுரிஷி[5]
பன்னக சாலைகட்டிப் பரிவான சிஷரொடு
வன்ன மெனஅங்கே வாசம்பண்ணி யேயிருந்தான் ;
இப்படியே மாமுனிவன் இருக்கின்ற நாளையிலே
செப்பமுட னேதான் சிறந்தமணிக் கூடமதில்
வாழ்கின்ற விஞ்சைமன்னன் மணஞ்செய்த தேவியொடு
சூழ்கின்ற துன்பமொடு தூய பிருகுரிஷி
தன்னிடத்தில் வந்து சரணம் சரணமென
வன்னமலர்த் தாளில் வணங்கி எழுந்திருந்து
விஞ்சையனும் மெத்த விசாரம் பொறிதாகி(க்)
கஞ்சமலர்க் கைகள்கட்டி கவலையோ டங்குநின்றான் ;
அங்குகின்ற விஞ்சையனை அழகு பிருகுரிஷி
பொங்கமுடன் பார்த்துப் புகலுவார் : "மன்னரீ
உ[6]ன்தேவி தன்னுடனே உற்ற விசாரமிதாய்
வந்தேதான் நின்றவகை வாகாகக் கூறு" மென்று
அம்முனிவன் கேட்க அடிதொழுது விஞ்சையனும்
செம்மையெனத் தன்னுடைய தீவினையைச் [7]சொல்லிடுவன்
"எந்தேவே எங்குருவே எம்மையா ளும்பரனே
கந்தாரும் பூஞ்சோலை கனக்குமணி கூடமெனும்

1. யாக ஆதி
2. தே-ஸ்தீ-மோனை
3. ம் [ம்] உச்சரிப்பு
4. சோல் வடிவம் காண்க
5. 35 ஆம் வரியில் 'கூடி' என்பது இங்கு வந்து 'கட்டி' என்பதோடு முடியும்
6. உன்
7. சோல்லிவிடுவான்-சொல்லிடுவான்

பாங்காய் வளருமிந்தப் பருவதத்தி லேவாழ்வேன் ;
ஈங்காக இப்பிறப்பில் செய்தறியேன் பாவவினை ;
ஆனதினல் என்னுடைய அழகான தேவியிவள்
மானவரே வீணைதனில் வல்லமையா-னமாது
பருவம் இவளிளமை ; பார்வதிபோல் கற்புடையாள் ;
திருமகளி லும்வடிவாய்ச் சிறந்த அழகுடையாள் ;
நாண மடமச்சம் நல்லியல்பும் பெற்றவள்காண் ;
பூணும் [2]பணிதியெனப் பொன்போல் குணமுடையாள்
கருதுங் கலைஞானங் கற்றுமுழு தும்முணர்ந்தாள் ;
பரம சிவன்மகிழப் பரிவான நாரதரும்
வடநிசைவாழ் மன்னன்(?) மனது மிகமகிழ
[3]அடவாக வே வீணை அருந்தொழிலைக் கற்றவள்காண் ;
கோல நடனமதில் குலுங்கவே வீறுபெற்றாள் ;
[4]வால வடிவுடையாள் ; மங்கையிவ ளுக்குகிக்
இப்புவியி லுந்தேவர் இருக்கும்பதி [விஞ்சையனும்]
எப்புவியி லுங்கிடையா திவள்போல் அழகுடையோர் ;
[5]அழகுடைய தேவிதனை அடி[6]யென்மணஞ் செய்திருந்தும்
வளமை யெனுஞ்செல்வம் வாகுடனே பெற்றிருந்தும்
தேவர்பதி போலே சிறந்தவிஞ்சை நாடுதனில்
ஓவியம தாக உற்றிருந்தும் நானடியேன்
வடிவான ரூபமிக வரிசையுடன் பெற்றிருந்தும்
அடியேன் புலிமுக[7]மாய் ஆனதென்ன ? மாமுனியே !
இந்தவர லாறுதன்னை எங்குருவே [8]யெந்தனுக்கு
விந்தையுடன் சொல்லு'' மென மீட்டு[9]முன்ன மேயுரைப்பான்
''புலிமுகமாய் நானிருந்து புவியிலடி யேன்[10]வாழ்க
வலியவனே முற்பிறப்பில் மாவினைகள் செய்ததுண்டோ ?
ஏதோ அறியேன்நான் இந்தவினை தீரும்படி
தாதாடு பூஞ்சடையீர் தமியேற்குச் சொல்லு'' மென்று
விஞ்சையனு மேகேட்க விரித்த சடைபிருகு
அஞ்சலென்று கையமர்த்தி அன்பாக வேயுரைப்பான் :—

1. மானவன்; மனிதன்; அரசன்; தலைவன்; மானமுடையவன் என்ற பொருளில் வரும், மனத்தால் உயர்ந்த ஞானி என்று இங்குப் பொருள்போலும்
2. ஆபரணம்
3. அடைவாகவே
4. பால
5. அழகு என உச்சரித்தல்; - எதுகை காண்க
6. யே, என்றும் படிக்கலாம், சீரோலி காண்க
7. ஆய் ஆனது என்ற வழக்கு
8. என்தனக்கு
9. தீருமுன்பு
10. வாழ-'கு' காண்க.

விருத்தம்(2)

"வாழ்விடத்து மகிழ்வதுவும் வளம்படும்நல் வாழ்விடத்தே
தாழ்விடத்தி லயர்வதுவுந் தகுதியில்லா(த்) தரத்ததுவே ;
வாழ்விடத்துந் தாழ்விடத்தும் மகிழ்வொட்வா இல்லாமை
ஊழ்வினைப்பால் அமையுமென உரைத்திடுவா ருணர்ந்தோரே.

நடை

வாழ்வுவந்த போது மகிழ்ந்து இருப்பதுவும்
தாழ்வுவந்த போது சலித்து இருப்பதுவும்
புத்தியில்லா மாந்தர்குணம் ; புகழான பாக்கியந்தான்
மெத்தவந்த போது(ம்) மிடிவந் திடும்போதும்
வினையின் பயனெனவே விரும்பார் கலக்கமுறார்
மனதிலடக் கியிருப்பார் வளரும் அறிவுடையோர் ;
பேசுகின்ற பாவமதில் பெரிது சிறிதெனவும்
நேசமுள்ள் விஞ்சையனே நீர்சொல்லு மிரண்டுண்டோ ?
சீறுகின்ற பாம்பின்விஷம் சிறிதாய் இருந்தாலும்
வீறுடனே கொன்றுவிடும் ; மெய்யிதுகாண் ; பார்த்திலீயோ ?
புத்தியிலே அச்சம் பொருந்தாமல் செய்தபாவம்
[1]சுத்தி வளையும் துயர்க்கடலி லே[2]யழுந்த ;
கார்கால மேகமெனக் கடிய கொடும்பாவம்
பூராய மாய்வளரும் ; பொய்[3]யல்ல ; இன்னமுங்கேள்
பாங்காக முற்பிறப்பில் பாராமல் செய்தவினை
தீங்காக இப்பிறப்பில் தேடிப் பிடித்ததுகாண்.
மன்னுநீ முற்பிறப்பில் வளர்மாக மாசமதில்
[4]அன்னளில் மாகஸ்நானம் ஆடி[5]ஏகா தேசிதனில்
தூயவிர த-மிருந்து சொல்லுங்[6]துவா தேசிதன்னில்
[7]தீய்மையுடன்[8]எண்ணையிட்டுத் தீர்த்த[9]ம்நீர் ஆடினதால்
அக்கொடிய [10]தோசம் ஆன புலிமுகமாய்
இக்குவல யத்தில் இருந்தாய்நீ ; இவ்வினையும்
மனது அறியாமல் வரும்[11]பவமென் றெண்ணுமல்

1. சுற்றி
2. "அழுத்த" அழுந்த என வந்துளது ; நாம் அழுந்த என்றுமாம்
3. 'அல்ல' பொய் என்ற ஒருமையின் பயனிலையாம். வேறு இல்லை, உண்டு என்பனபோல இதுவும் ஐம்பாலுக்கும் பொதுவாகி விட்டது
4. அந்நாள்
5. ஏகாதசி
6. துவாதசி
7. தீமை
8. எண்ணெய்
9. 'ம்' கெடவில்லை-உச்சரிப்பு
10. தோஷம் ; தோசமான எனச்சேர்த்துப் படியாமல் எதுகைக்காகப் பிரித்தொலித்தல் காண்க, அல்லது ஆன:- விகாரமான என்றும் கொள்ளலாம்
11. பாவம்

உனதுவினை நின்னை அய்யோ [1]உள்ளாசத்திப் [2]போட்டுதுகாண்.
145. ஆனதினுல் விஞ்சையனே அன்றுசெய்த பாவவினை
கானப் புலிமுகமாய்க் கருத்தயங்(ர்)தே நீவாழ்ந்தாய்.
இன்ன முனைச்கு[3]வினை யகத்த [4]ஒன்று[5]வுண்டு.
நன்னயமாய்ச் சொல்லுகிறேன ; நல்விஞ்சை மன்னவனே!
கேளு'' மென வேதான் கிலேசமுள்ள விஞ்சையர்க்கு(ச்)
150. சூழுஞ் சடைப்பிருகு சொல்லுவான் : ''மன்னவனே
முன்னெருகா லத்திலேதான் முத்துமுடி தான்புனைந்து
[6]இன்னாடு [7]தானுள்வோன் இனிய புரூ[8]ருவனும்.
அவனும் உனைப்போலே அரிய[9]யேகா தேசிதனில்
தவமுடைய மாவேந்தன் தான்விரத மேயிருந்து
155. மறுநாள் துவாதெசியில் வாய்த்தளண்ணை தான்தெய்த்து
[10]நறும்புனலில் [11]மூழ்குகின்ற ராசன் கொடுவினையால்
சுழகும் அவன்[12]குறுகி ஆனசெல்வ மு-மிழந்து
வளமையுள்ள நாடிழந்து வாய்த்தமனை வி-யிழந்து
பசியால் அவன்வாடிப் பாழான தீவினையால்
160. இசையாய் மிகவளரும் இமையோர் பருவதத்தில்
சார்பில் இருக்கும் தாமரைப்[13]பூம் வாவிதனில்
சீர்சேர் புரூருவனும் சென்றுமாக [14][மாஷத்தையிலே]
பரிவாக மாகஸ்நானம் பாங்காய் அவனுடி
அரிய தவவேடம் அன்புடனே தான்பூண்டு
165. தெர்ப்பை விரித்துச் சிறந்தபது மாசனத்தில்
நற்புடனே தானிருந்து நாரா யணமூர்த்தி
தன்பதத்தைப் போற்றித் தானெருமா சமவனும்
அன்புடனே மாவிரதம் அங்கே அவனிருக்க,
நறுந்துளப மாலையணி நாரா யணமூர்த்தி
170. அறிந்துஇவன் நம்மை அன்பாய் எழுபிறப்பும்
மறவாமல் நம்பி மாபத்தி தன்னுடனே

---

1. உள் அயர்த்தி;
2. போட்டது; என்ற வழக்கு அடுத்தவரி யில் ஆனதினுல் என்பதனைப் பாவ வினை என்பதன்பின் கூட்டுக
3. வினையகற்ற; இ-ய மோனை
4. ஒருவழி
5. 'வ்' உடம்படு மெய்
6 இந்நாடு
7. எதிர்காலம் இறந்தகாலத்தில் வந்து-ளது. காலம் காட்டாத பெயர்ச் சொல் (அரசன்) எனக்கொளலாம்.
8. ர
9. ய் உடம்படுமெய்
10. ந-ர மோனை
11. நீகழ்கால எச்சம் காண்க
12. அழகு குறுகி (குள்ளி) என்றவழக்கு
13. பூ
14. மாசத்திலே

நறவார் மலரெடுத்து நாளுமர்ச் சனைபுரிந்து
பூசைசெய்த [1]தொண்டனென்று புண்ணியமா லோனறிந்து
நேசமென வேதான் நெடிய[2]கரு டன்மேலே
விந்தையுட னேயெழுந்து விளங்குந் தவவேடம்
சுந்தரமா கப்பூண்ட தூய புரூருவன்முன்
காட்சி மிகக் கொடுத்துக் கமலமலர்ச் செங்கையினுல்
மாட்சி யுடன் [3]மீவி மாவினையெல் லாந்தீரப்
பொங்கமுள்ள மாயோனும் புகழ்பெறவே யேந்துகின்ற
[4]சங்குசீ ராலவனை ஸ்நானமிகப் பண்ணிவைத்து
மன்னன்செய்த மாவினையை மாயோன் மிகவுரைத்து
அன்னவன்தன் [5]நோயொழித்து அமரர் பதியில்வளர்
தேவரம்பை [6]பரதமதில் சிறந்தஉருவசியும்
ஓவியமாய் இச்சைகொள்ள உற்ற வரங்கொடுத்து
[7]மாயோன் பதிபுகுந்தார். மாகமாதம் என்றுசொல்லும்
நேயமுள்ள தை(ம்)மாதம் நிறைபூர்வ பட்சமதில்
வந்ததுவர் தேசி தன்னில் மண்ணுலகைத் தானளந்தோன்
கந்தமலர்க் கையில் கனத்தசங்கு நீரதனுல்
[8]ஸ்நானமிகப் பண்ணிவைத்த தைத்தாலப் புரூருவனும்
மானமில்லா நீதி வரம்புதப்பி யே[9]நடந்த
பண்ணும் பவமொழிந்து பாங்கான வில்மதன்போல்
வண்ண வடிவுடனே [10]மகிட்சி மிகப்பெருகி
தன்னுடைய நாடுசென்று தழைக்கும் அமைச்சரொடு
பொன்னுமுடி [11]சூட்டிப் புவியை யொருகுடையில்
ஆண்டுவெகு நாளிருந்து அப்பால் அவன்தானும்
வேண்டும் புகழுடனே விண்ணோர் பதிபுகுந்து
மூப்பத்து முக்கோடி தேவர் முனிவருக்கும்
செப்பமுள ராசனென(ச்) சிறப்பாய் இருந்தான்காண்.
மாகமாசம் என்று வழுத்துகின்ற தைமாதம்
ஆகமுடன் மாகஸ்நானம் ஆடுகின்றோர் தன்பலனே(ச்)
சொல்லரிது வானுலும் துன்பமொடு இன்பம்வினை

---

1. [தொண்டென்று]
2. க-கெ
3. நீவி-நீவுதலால் என்றுமாம்
4. ச-ஸ் மோனை
5. அழகினைக் குறுக்கிய நோய்
6. பரத நாட்டியம்; ரம்பையும்
7. மாயோன் என்ற ஒருமை புருந்தவர் என்பதோடு முடிகிறது. மாயோன் முதலிய கடவுட் பெயர்கள் ஒருமையாக உரைப் படவில்லை போலும்.
8. ஸ்-த. மோனை
9. நடந்த
10. மகிழ்ச்சி
11. ரூ

வெல்லரிது யாராலும் வேந்தே கடக்கரிது"
என்று பிருகுரிஷி இனியவிஞ்சை யன்றனக்கு
நன்றியுட னேகூறி நவிலுவார் பின்னுலும்
205. "விந்தை யுடையதொரு விஞ்சையனே நீர்தானும்
இந்த வினையொழிய எங்களைப்போல் வேடமுற்று
அஞ்சாநாள் மாகஸ்நானம் ஆடும்நாள் [1]வாரதினுல்
[2]மஞ்சார் [புயற் [3]ருர்]மாகமா சந்தனிலே
[3]பூறுவ பட்சமதில் புகன்ற பதினெருநாள்
210. வீறுடைய மாகஸ்நானம் மிக்காக வேயாடில்
பதினென்ரும் நாளையிலே பச்சைமா லுக்[4]குகந்து
புதியவகா தேசியுமே புண்ணியனே வந்திடுங்காண்.
அந்தநாள் என்னுடைய அழகு கமண்டலத்தில்
சுந்தரமா க-விருக்குந் தூய நறும்புனலால்
215. உன்னை நீர்ஆட்டி [5]யுனதுடைய பாவவினை
தன்னை விலக்கிடுவோம். தயங்காதே; விஞ்சையனே!
சிந்தா மணிபோலே(ச்) சிந்தித்த காரியத்தை(த்)
தந்தே பலன்கொடுக்குந் தான்பாக்கி யங்கொடுக்கும்;
மலைபோல் வரும்வினையை [6]மாத்திவைக்கும்; பொல்லாத
220. கொலைகளவு கள்காமங் குருத்துரோகம் என்றுசொல்லும்
பஞ்சமா பாதகத்தைப் பறந்தோட வேகொறுக்கும்;
அஞ்சலென்று கா[ர்]க்கும்; அளிக்கும் பரமபதம்;
ஆனதால் மாகஸ்நானம் ஆடு [7]மகரமாசம்
ஞானமாய் நோன்பிருந்து நல்ல குளங்கள்முதல்
225. ஆறுசூன யோடை [8]அழகு சமுத்திரத்தில்
வீறுடனே மாகஸ்நானம் மிகமூழ்கி னேர்களித்த(ப்)
பலன்பெறுவார்" என்றுசொல்லிப் பாங்காய்ப் பிருகுமுனி
நலமுடைய விஞ்சையனே நல்மாக மாசந்தனில்
நீராடச் சொல்லி நிறைத்தவகா தேசிதன்னில்
230. சிராய்க் கமண்டலத்தின் செலத்தால் முழு(க்)காட்டி(க்)
கொடிய புலிமுகத்தைக் கூறுந் தவப்பிருகு
வடிவுடைய வில்காமன் வதனம்போ லேயாக்கி

---

1. வருவதனுல்; வருகிறதனுல்
2. மஞ்சார் (மைந்து - வன்மை பொருந் தீய)புயத்தோய்
3. பூர்வ - வஸர்பிறை
4. உவப்பு நாளுக்குத்தான் போலும்; (த)?
5. உன்னுடைய
6. மாற்றி.
7. மகா என்னும் படிக்கலாம் மாக என்பது தவருக எழுதப்பட்டிருக் கலாம்; 228 ஆம் வரி காண்க
8. அடி நடுவில் வினாம்பம் வருவதால் உடற் படு மெய் வரவில்லைபோலும்.

பாங்கான தேவியொடு பரிவான விஞ்சையனை
ஆங்கே மிகமகிழ்ந்து அனுப்பினர். மன்னுகேள்
235. சீறும் புலிமுகமாய்ச் சிறந்திருந்த விஞ்சையனும்
வீறுடைய மாகஸ்நான மிக்க பலத்தாலே
நல்ல முகமாகி[1]நாரியுடன் வீறுபெற்று
அல்லல் ஒழிந்து அவன்பதிக்குத் தான்போனான்.
மன்னவனும் போக [2]வாய்த்த பிருகுரிஷி
240. தன்னுடைய தேசம் தழைக்கமழை பெய்ததினால்
பகருமணி(க்) கூட பருவதத்தைத் தானீங்கி
நிகரில்லா நல்வளஞ்சேர் [3]நெருமதைஆற் றங்கரையில்
வந்திருந் தார்' என்று வாய்த்த திலீபனுக்கு
விந்தையுள்ள வேத வதிட்டன் விளம்பினனே.
245. விஞ்சையனும் பொல்லாத வெய்ய புலியுருவம்
அஞ்ச[4]னென்று மாறி அவனிருந்த மாகதையை
இன்பமுட னே தான் இனிதாகக் கேட்டவரும்
அன்புடனே சொல்லுமென்று ஆவலுடன் கேள்ப்பவரும்
ஒலியமாகப் படிப்போர் உரைசெய்வோர் [5]என்னாளும்
250. தேவர் பதிபுகுந்து சித்திரமாய் வீற்றிருப்பார்'
என்று வதிட்டரிஷி இனிய திலீபதிக்கு
நன்றியுடன் இக்கதையை நவின்றனர்காண் அம்மாணை.

மூன்றும் அத்தியாயம் முற்றும்.[6]

---

1. நாரி-பெண்-மனைவி-இழிபொருள் அப்போது எழவில்லை போலும்.
2. அவனைச் சீராக்கும் சிறந்த தவம் வாய்க்கப்பெற்ற
3. நருமதை; மோனைக்கு 'நெ' எனல் வேண்டும்; உச்சரிப்பு அப்படி இருந்தது; நர்மதை என்ற உச்சரிப்பின் பின் நி என்றும் நெ என்றும் முதலில் ஒலிக்கலாம்; ந நெ என்றும் நி என ஒலித்திருக்கலாம்
4. [லெ]: அஞ்சன்-ஒளியுடைய சூரியன் போல
5. எந்நாளும்
6. "குருவே துணை" என்று முடியும்

நாலாம் அத்தியாயம்

மிருகசிங்கன் கதை

விருத்தம்(1)

'இரவி குலத்தின் இயல் வேந்தே! இன்னு மாகத் தியல்கேட்டி!
பரவு மமுதந் தாமென்னப். பகருங் கற்ப(?) முதலுகத்திற்
பிரம னளித்த திருப்புதல்வன் குச்ச னென்னப் பேர்படைத்தோன்
விரவு புகழான் கருத்தமன்தன் மகளை விதியின் வேட்டானே.

நடை

5. இரவிகுல வேந்தா! இனியதிலீ பா! உனக்கு
வரிசையுடன் இன்னம் மாகஸ்நா னப்பலனைச்
சொல்லுகிறேன். கேளு' மென தூய வதிட்டரிவி
வல்லமைசேர் மன்னனுக்கு வழுத்துவான்; [1]மாதவரே!
செல்வமிக நாளும் செழிக்கும்க்ரே தாயுகத்தில்
10. [2]சொல்லுங் கலை வாணிபுணர் தூயபிர மா[3]வயத்தில்
மெச்சுங் கலைவேதம் மிகவுடனே கற்றறிந்து
குச்சனெனப் பிள்ளைதன்னைக் குலுங்கவே பெற்றெடுத்தான்.
அந்தநல்ல பாலனுக்கு அழகு கருத்தமன்தன்
சொந்த முடை மகளைத் துதிக்கும் விதிப்படியே
15. [4]மணஞ்செய்து தான்கொடுத்தார். வாகாய் இருவோரும்
அணைந்து சுகமுடனே அன்பாக வாழ்நாளில்
குச்சன் [5]வயத்திலேதான் குவலையமெல் லாம்புகழ
வச்சனென்று ஓர்புதல்வன் வளர்வேத நூல்கள்தனில்
[6]வாட்டமில் லாதவனுய் மாபுண்ணி யத்தானுய்(த்)
20. தாட்டிகம் உள்ளவனுய்ச் சற்குணமா ன-மணியாய்
[7]வச்சர் பிறந்துமிக வளருமூன்றும் பிறைபோல

---

1. என்று சூதர் நைமிசாரணிய முனி வருக்குக் கூறுகின்றார்
2. தானதன சந்தம் வரல் காண்க
3. வயிற்றில்
4. மணம் ஊர் பெரியோர் காணச் செய் வது; பெரியோர் கொடுத்தது எனலாம்
5. ஷி 3
6. ஆற்றல்; உறுதி என்பது பொருள் ஆம்; துஷ்டத்தனம் என்ற இழிபொருள் அப்போது இல்லைபோலும்
7. மகன்; வச்சன் என்ற பெயருமாம்

மெச்ச வளர்ந்துமவன் மேலும்வய தஞ்சானுன்.
அஞ்சு வயசுதன்னில் அழகு[1]நூல் கலியாணம்
[2]ரஞ்சிதமாய்ச் செய்து, நால்வேத மந்திரமும்
25. உபதேசஞ் செய்து, உகந்தபள்ளி தன்னில்வைத்து[3]
[4]நிபமில்லா நால்வேதம் நிரம்பவே கற்றுணர்ந்தான்;
இப்படியே வச்சனுந்தான் [5]இனியான நூல்தெளிந்து
செப்பமுள்ள [6]வாசானிடம் சென்று[7]வழிப் பாடாக
மனது ஒருவழியாய், வளருந் தவநிலையாய்
30. புனிதமென முப்போதும் புனலில் மிகமுழ்கி,
[8]தெற்பைக் [9]கயறு நிரித்து இடைபினிட்டு,
அற்புதமா கக்கலைத்தோல் ஆசனமுந் தானெடுத்து,
கையில் எடுத்த கமண்டலமு மாகவச்சன்
[10]வையப் பிரமசாரி விரதமுமே தப்பாமல்
35. வேதப் பிராமணர்தன் வீடு தொறும்நடந்து
[11]போதம் எனப்பிச்சைப் [12]பொங்கமுடன் வாங்கியுண்டு,
நித்தியவி ரதம்பூண்டு [13]நேமநிஷ்டை தன்னுடனே
[14]முத்திலும்வெண் ணீறுதன்னை முன்னோர்கள் சொன்னபடி
செய்ய[15]திரி புண்டரமாய்ச் செப்பமுட னேபூசி
40. [16]நெய்யருந்தும் எக்கியங்கள் நித்தியப் படிமுடித்து,
காலில் [17]கவசமிடான், கனிந்ததயிர் நெய்யுமுண்ணன்[18],
பாலுடனே மோரும் பகரும்புளி உப்பும்விட்டான்,
சந்தனங்கள் பூசான், தழைந்தமலர் தானணியான்,
விந்தை யுடனே [19]விளித்த அறுசுவையும்
45. தள்ளினுன், கண்ணுடி தான்பாரான், பல்விளக்கான்,
ஒள்ளியதண் ணீர்தாகம் ஓடுக்கினுன், பாய்படுக்கான்,

---

1. உபநயனம்
2. ர மொழி முதல்; சுவர்ச்சியாய் என்று பொருள்; ர ந மோஹ
3. வைக்கப்பெற்று; பெற்றோர்கள் வைக்க; செய்து என் வினையேச்சம் தீர்ந்து வந்துளது.
4. நிபம்-ஒப்பு
5. இனிமையான
6. ஆசனிடம் என்பதுபோல் ஒலிக்கும்
7. முறையாக
8. தர்ப்பை
9. கயிறு
10. உலகத்து; வைதிய (வைதிக) என்றும் இருக்கலாம்
11. பிச்சை வாங்கியதை அறிவு வளர்ப்பது என வெறுப்பின்றி உண்டு
12. மகிழ்ச்சி
13. நியமம்-விரதம் பின்பற்றும் நியமத்தில் உறுதியாய்ப் பதிதல்
14. பூசவேண்டிய இடம் முற்றிலும்; முத்தை விரும்புவதிலும்
15. மூன்று வரியாய்
16. நெய் ஆகுதி பெரும் எஞ்ஞ்ம்
17. சேருப்பு இடான்
18. உடம்படுமெய் மோனைக்கு உதவி கிறது

நித்திரையுஞ் செய்யான்; நிரம்பப் பணிபூணன்;
சுத்தியாய்த் [1]தன்மேலைச் சுசிபடுத்தான் ஆசைவிட்டான்:
இப்படியே வச்சன் இனியபிரம சாரியென(ச்)[2]
செப்பம் உடனே சிறந்ததொரு மாதாபிதா
[3]தன்னை [4]மறக்காமல் தன்குருவைத் தான்பணிந்து
[5]நன்னயம தாக நாளும்வழிப் பாடாக
வேதமொழி தப்பாமல் மிக்கான வச்சனவன்
[6]போதம் எனவேதான் புண்ணியமா க-நடக்கும்
மைந்த னுடைய மகத்துவத்தைக் குச்சனுந்தான்
விந்தை யுடனறிந்து மெத்த மகிழ்ந்திருந்தான்.
தந்தை மகிழத் தாய்மனது தான்கனிய
விந்தையுள்ள வச்சனவன் வேதாக மப்படியே
மகரமாச-முதலாய் வகைமூன்று [7]மாசத்திலும்
பகருகின்ற மாகஸ்நானம் பாங்குடைய காவிரியில்
சென்றுபுனல் தானுடிச் சிறப்புடனே ஈன்றவர்க்கு
நன்றியுடன் வச்சனுந்தான் நடந்து வருங்காலம்[8].
தந்தைதாய்ப் பாதமதில் தான்விழுந்து தெண்டனிட்டு
'எந்தனையும் ஈன்றவரே! இனியதவ சுக்கடியேன்
ஏக விடைதருவீர்' என்றுமக னுங்கேட்க,
வாகுடைய மைந்தனையும் மகிழ்ந்து கனிவாக
'நல்ல' தென வாக்கு நற்பாய் மிகக்கொடுத்து
அல்ல லில்லாமல் அனுப்பினர். [9]இப்பொழுது
பெற்றூர் விடைவாங்கிப் பெரிய தவமுடிக்க
உற்றுன் வழிகடந்தான்; ஓயா வலைகடலில்
வன்ன [10]வயர்கிழித்து [11]வடர்ந்து மிகப்பாயும்
[12]பொன்னி யாறுகண்டு புகழாய் வடகரையில்
ஆகாச மட்டும் அளாவி மிகவளர்ந்து
வாகான பூஞ்சோலை [13]வடர்ந்து இருள் பரந்து

---

1. தன் உடம்பின் புறத்தைப் பகட்டாக்கிக் கொள்ளான்
2. அடி முடிவில் விளம்பம் வருதலின் புணர்ச்சி விதி பெறுவதில்லைபோலும்; வலிமிகல், உடம்படு மெய் வரல், குற்றியலுகரம் கெடல்; பிறதிரிதல் முதலியன நிகழாமல் வரக் காண்கிறோம்
3. தம்மை
4. மறவாமல்
5. அடிநடுவிலும் விளம்பம் வருதலால் ஷெ 2-ல் கூறியபடியாம்
6. ஞான நெறி இது எனவே
7. மாசதிலும் என்பதுபோல் ஒலிக்கும்.
8. வாக்கியம் நீண்டு செலல் காண்க.
9. அப்பொழுது; அ, இ தடுமாற்றம்
10. வயிறு
11. அடர்ந்து; வ் உடம்படுமெய்
12. காவிரி; 13. ஷெ 11

வண்டுகள் பாட வனங்கள் மிகச்[1]சுரக்கக்
கொண்டல் தவழக் கொடுமுடியே டேசிறந்து
நன்னயம தாகவளர் நாராய ணன்மலையின்-
தன்னருகே சென்று சந்தோஷ மாகவேதான்
வச்சனவன் அங்கே வளருங் [2]கல்யா ணநதியில்
மெச்சவொரு மாசம் விளங்கவே மாகஸ்நானம்
[3]போங்கமென வேயாடிப் போசனத்தை யும்வெறுத்து[4]
அங்கிருக்கும் மாதவரோ டணுகி உறவாடி
அந்த மடுவில் அழகான மேல்கரையில்
விந்தை யுடனே [5]விளியதவ மேபூண்டு
பதுமா சனம் [6]விரித்துப் 'பரமனே தஞ்ச' மென்று
[7]அதிய தவமங்கே அன்புடனே தானிருந்தான்.
எள்ளுக்குள் எண்ணெயென எங்கும் நிரந்தரமாய்
விள்ளு மறைப்பொருளாய் விளங்கும் பரமசிவன்
தன்னை மனதில்வைத்து 'சங்கரா தஞ்ச' மென்று
நன்னயம தாக[8] நாட்டிவைத்த கல்போலே
சற்றும் அவன்மன தது[9] சலியாம லேதவசில்
முற்றி யிருந்தான் முசியாமல் வச்சனுந்தான்.

விருத்தம்(2)

பொருந்தும் த்யானத் தினிதிருப்பப் போதார் மடுவிற் றண்ணீரை
அருந்தப் புகுந்த விலங்கினங்கள் அவனை நரனென் றெண்ணுது
பரிந்த வுடலில் தினவகலப் [10]பருங்கல் மரமா மென்[11]றவுடல்
உரசு மருப்பா லிடித்திடவும் உணரான் றவத்தில் நிலைபெற்றான்.

நடை

இப்படியே வச்சன் [12]ஏகாந்த மாகவேதான்
[13]அப்பை யணிந்தவன்மேல் ஆசை தனைநிறுத்தி
கொடிய தவ[14]மிருக்கில் [15]குளுந்தமலர்ப் பூங்கமல

---

1. வனம் கொழிக்க
2. திருநாராயண புறத்தில் கல்யாண தீர்த்தம் உண்டு
3. முறை
4. முன்பக்கம் 2-ஆம் குறிப்பில் பார்க்க
5. உடன்படு மெய்வழியே மோனை; இளிய
6. அகலப் போட்டு
7. அதிக
8. வினம்பம் சீர் தீரப்பும்
9. வினம்பம் வருதலின் வெண்டளை பிறழ்கிறது
10. கல் என்றும் மரம் என்றும்
11. என்று + அவ்வுடல்தன்னை
12. ஒருவரு மில்லாத இடத்தில் தனியே
13. கங்கை
14. இருக்கையில்
15. குளிர்ந்த-உச்சரிப்பு

100. மடுவிலே நீர்குடிக்க வந்தமிரு கங்களுந்தான்
[1]மனுசனென்று சற்று(ம்) மனதில் அறியாமல்,
கனமா யவன்[2]மேலில் கனத்த தினவுதீர
நட்ட மரத்திலேதான் நாடி யுரசுதல்போல்
வட்டச் சுனையில் வந்தமிரு க-முரசி,
105. கொம்பால் இடித்துக் [3]கோட்டிமிகச் செய்தாலும்
அன்பாய் மனதி லதுஉணர்ச்சி யில்லாமல்,
நாட்டியகல்[4] தூண்போல 'நாதனே தஞ்ச' மென்று
மாட்டிலே றுஞ்சிவந்த [5]மனதிலே வைத்துநின்றான்.
இப்படியே மாதவசு [6]இங்கிதமாய் வச்சலுந்தான்
110. செப்பமுடன் செய்வதினல் சிவனும் மனதிரங்கி
[7]சந்திர சடாதரனுர் தவமிருக்கும் வச்சன்முன்னே
வந்தனர்காண். மெத்த மனது மகிழ்ச்சியொடு
[8]துய்யமலர்க் கையாலே துறவோன் தனைத்தட்வி(ச்)
'செய்ய மிருகசிங்கா சிறந்த[9]தவத்துடையாய்!
115. எ[10]ழுந்திடாய்' என்றுசொல்லி எம்பெருமான் பேர்கூற
[11]குளுந்த முகவச்சன் கொடியதவக் கண்[12]முழித்து
பார்த்தானே. அப்போது பவளச் சடைமீதில்
[13]பூத்தமூன் ரும்பிறையும் பொருந்துந்திரி நேத்திரமும்
மானெருகை, யேந்தும் மழுவொருகை தானிலங்க,
120. தேனணி கொன்றைமாலே சிறப்பாக வேதுலங்க
பலகோடி சூரியன்போல் பரிவுடனே சோதிமின்ன
நிலைமீறு மாதவத்தோன் நேசமெனக் கண்டானே.
கண்டான்; எழுந்தான்; கைகூப்பி யேமகிழ்ந்து
வண்டார் கடுக்கையணி வள்ளலார் பொன்னடியில்
125. விழுந்து நமஸ்கரித்து[14] மெய்ப்பாய் [15]மகிட்சியொடு
செழுந்[16]தாளம் பூத்த[17]நகை தேவிபா கன்தனையே

---

1. மனிதன்; மனுஷ்யன்
2. மேனியில்
3. துன்பம்
4. கற்றூண்; புனர்ச்சி இல்லை
5. மனத்திலே என்று வருவதில்லை
6. கருத்தாக
7. சிலனும் என்றபின் இவ்வியற்பெயர் அவன் என்ற பொருளில் வரும் வழக்கைக் காண்க
8. தூய
9. தவமுடையரய்; அந்துச்சாரியை வரல் காண்க
10. 'ளு' என்பதே ரகைக்காம்
11. குளிர்ந்த: தொகை காண்க
1 . விழித்து
13. பா நயம் காண்க
14. உருவெளித் தோற்றம் என்று என்றது உண்மையான காட்சியென்ற உறுதியோடு
15. மகிழ்ச்சி
16. முந்து
17. பல்

பார்த்துப்பார்த் தாச்சரியப் படுவான்; பே ரின்பவெள்ளம்-
[1]ஊத்தெடுத்தா னந்தமென ஒழுகவே [2]கண்ணிலிரு.
தீய கொடுங்கலியால் தியங்குகின்ற மாந்தர்கள்தான்
130. தூயபொருள் கண்டா[3]ப்போல் துறவோன் மிகமகிழ்ந்து
பம்பைகொட்டத் தில்லைமன்றில் பாங்குடனே யாடுகின்ற
தும்பையணிந்[4] தீசுவரனைத் தோத்திரமா கச்சொல்லுவான்.

விருத்தம்(3)

காராழி தந்த விடமுண் டிலங்குங் [5]களனே ! புரங்கள் பொடியக்
கூராழி யங்கை [6]முகிலம்பு கொண்(டே)ட(ய)ருள்கா[7] விளங்கு
[மழகா!
135. போராடல் கொண்டு வருகால னஞ்ச ஒருகால் நிமிர்ந்த
[புகழோ(ய்)
ஆரா லறிந்து கொளலாகும் நின்னை யமலா நினதன்ப னடியேன்

நடை

கோலமுள்ள பாற்கடலில் கொடுமை யெனப்பிறந்த
ஆலகால விஷத்தை அள்ளியுண்ட நீலகண்டா !
தழைக்குந் திரிபுரத்தை தானெரிக்க வேயானை
140. அழைக்கும் நெடியோனை அங்கணையாய்க் கொண்டவனே !
சீறுகின்ற வெங்காலன் சிதைத்துப் பொடியாக
வீறுடனே ஓர்காலால் விழுவுதைத்த மாமூர்த்தி !
உன்னை யெவரறிவார் ? ஓதுமறை மாமுதலே !
[8]என்னைத் தடுத்தாள்வாய். எளியேன் உனதடியேன் !
145. கனன்ற கொடியவிடங் கதிக்கும் [9]அரவமுதல்
அனந்தனெடு வாசுகியை ஆபரண [10][மாய்த்தோய்]
வடவாக் கினிசினந்து வந்தங் கலைமோதும்
கடலேழை யுங்குடித்துக் கனல்தாவு நாளையிலே[11]
அங்கும் ஒருபொருளாய் அமர்ந்துமிக நின்றோனே !
150. பொங்கும்பெரு வுகாந்தம் பொருந்தி முடிநாளில்
வேதன் சிரசுதன்னை வெங்கபால மாயேந்தி

---

1. ஊற்று எடுத்து ஆனந்தம்
2. இருகண்ணில் என இருந்திருக்கலாம்
3. ற்
4. அணிந்த சுவரனை
5. கழுத்துடையவனே !
6. மேகநிறமான திருமாலே
7. அருவ ; 'ரு' வரல் காண்க. அருவி என்பது போன்ற.
8. இரண்டு அடிகளில் 'மா' முன் நிரை முதல் காய் தொடர்ந்து வருதல் காண்க
9. கார்க்கோடகன்
10. மாய்க் கொண்டோய் என இருக்கலாம்
11. பிரளய காலத்தில்

போத அவனெலும்பைப் பூமாலை யாய்ப்பூண்டோய்!
சீறி வருங்க[1]ரியைச் சிதைத்து அ[2]தின்தோலை
வீறுடனே தானுரித்து மிகப்போர்வை[3]போர்த்தினவா
155. வேதமுத லாக விளங்கும்பல வாகமங்கள்
[4]போதமென வேதான் புகலும் பலசமைய
[5]பேதாபே தந்தோறும் பேசுமணி மந்திரமாய்
ஆதார மாகநின்று அருள்கொடுக்குங் கர்த்தாவே!
மண்ணுப்பு னலாய் வளர்தீயாய் மாருதமாய்
160. விண்ணுய் அறிவாய் விளங்குகின்ற மூக்குண பாய்
ஐந்து புலனுய் [6]ஆருதா ரமாகி
விந்தையுடன் நாளும் விளங்குகின்ற மாமுதலே!
மலையரசன் ஈன்ற மயிலான பார்வதியின்
முலையழுந்த வேமார்பில் மெய்த்தகொன்றை மாலையின்தேன்
165. வழிந்தொழுகும் பூமார்பா! வட்டமெனும் வெட்டவெளி
அளந்துநின்ற அவ்வெளியில் அடங்கா [7]வெளியாகி
வாக்குக்கும் பொல்லார் மனதுக்கும் எட்டாமல்
தாக்குமெய்ஞ் ஞானமெனத் தழைக்கின்ற தற்பரனே!
சீரான மைபொருந்திச் சொல்லாழியோ டமர்ந்து
170. போ[8]ரேனும் வேல்போலப் புரண்டாடும் நீலவிழி
மங்கை எனுமுமையாள் மனது பயந்திடவே
அங்கையினுல் [9]ராவணனும் அகண்ட [10]மேருதனை
எடுக்கும் பொழுதிலேதான் இனிய பெருவிரலால்
அடுக்கடுக் காகவேதான் அடர்ந்த இருபதுதோள்
175. நொந்து பொடியாக நொறுங்கி நிலத்தில்விழ
விந்தை யுடன்மிதித்த மிக்கபெல மானவரே!
வடிவுடைய பூமகள்தான் வளருந் திருமால்தான்
கொடியநர சிங்கமெனக் கொன்றநாள் தன்னிலேதான்
[11]சிம்புள் வடிவெனவே சென்றுநர சிங்கமதை

1. [தை]; யானை உரித்த கதை
2. த
3. [போற்றினவா]-ர, த
4. முடிந்த ஞானமாக
5. பேதம், அபேதம், பேதாபேதம்; கடவுளும் பிறவும் வேறு; வேறல்ல; இயல்பால் வேறும் கலப்பால் வேறல்ல வாயும் இருத்தல் என்ற மூன்று தொகைகளை முறையே காண்க. சமயங்கள் தமக்குள் வேறுபட்டும் வேறுபடாதும் இருக்கும் என்றுமாம்
6. மூலாதாரம் முதலிய ஆறு இடங்கள்
7. ஒளியாகி ஒன்றும் இருக்கலாம்
8. ஒரும் அல்லது எந்தும் என இருக்கலாம்
9. ரா மொழி முதல்
10. அகன்ற என்றிருக்கலாம்; அகன்கலாடப்படாத; வடமேரு இருக்கலாம்
11. சரபப் பறவை

வெம்பி மிகப்பாய்ந்து வெறியடக்கும் வித்தகனே!
மாணிக்கம் போல வளர்ந்தமலி யின்மேலே
பூணு மரகதந்தான் பூத்ததொரு விந்தையென
செவ்வண்ண மான திருமேனி யோர்பாகம்
கொவ்வைவாய் அம்பிகையைக் கொண்ட அரும்பொருளே!
பரிவான பாற்கடலில் பாம்பணை மேல் பள்ளிகொண்ட
திருமாலும் நான்முகனுந் தேடியுங்கா ணுதவனே!
தாருகா வனத்தில் தழைக்கும்[1]ரிஷி பத்தினிகள்
சீருடைய கற்பழியச் [2]சித்தாண்டி யைப்போல
[3]கங்காள ரூபமொடு கப்பறையொன் றேயேந்தி
மங்காதபெண்களு[4]ட மானம் அழித்தவரே!
வடவாக் கினிபோல வன்ன வடிவுதன்னில்
சுடலைவாய் வெண்ணீற்றைத் துலங்க அணிந்தவரே!
ஊழிநாள் என்னும் உகாந்தகா லம்முடிவில்
ஆழியான் வேதன் அமரா பதிக்கடவுள்
[5]மூப்பத்து முக்கோடி தேவர்முத லோர்சிரசை
செப்பமுள்ள மாலையெனச் சீராகப் பூண்டவனே!
கரும்பு வளைத்தமலர் கணைதொடுத்துப் போர்பொரு[து]
[6]அரும்புடைய மன்மதனுர் அங்கமெரிந் தேபுகைய
கொண்டதவ யோகங் குறையாமல் எந்நாளும்
வென்றியுடன் இருக்கும் விமலா [7]உனதடிமை
[8]கம்பை யாறுதன்னில் கடுந்தவசு பண்ணுகின்ற
அம்பிகையாள் கைவளையும் அழகு மணிமுலையும்
தூயமணி மார்புதனில் தோற்றமுட னேயழுந்த
நேயமென வேமகிழும் நிமலா! உனதடிமை.

விருத்தம்(4)

மாலாகி யாதி அயனாகி வெள்ளை மதவார ணத்தி னிறையாய்
பாலாழி மேரு முடிசெம்பொன் னுடு பதியாக மன்னு பழையோய்!
வேலாழி கொண்டு பொருதா னவர்க்கும் விறல்வா ன(வ)ர்க்கும்
[விதியாய்
[9]ஆலால மாகி யமுதாகி நிற்கு மமலா நினன்ப னடியேன்.

---

1. 'ரி' மொழி முதல்
2. சித்தனும் ஆண்டி; சிறு ஆண்டியும் ஆம்
3. கங்காளம்-முதுகெலும்பு; பிரமன் முது கெலும்பைக் கொண்டு செல்லும் பிக்ஷாடனவடிவம்
4. மடை
5. இணமோனை
6. புஷ்பபாணம்
7. உனக்குத் தஞ்சம்
8. காஞ்சியில் உமையம்மை தவம் செய்த போது பெருகிவந்த ஆறு
9. தானவர்க்கு ஆலகாலமாய் வானவர்க்கு அமுதமாய் என நீரல் நீறை

நடை

மாலானதும் நீயே. வளர்வேத னும்நீயே.
210. [1]பாலான ஆனையின்மேல் பவனிகொள் வதும்நீயே.
வெள்ளி மலையாய் விளங்குகின்ற பாற்கடலாய்,
ஒள்ளியசீர் பொங்கும் உகந்த[2]சத் தியலோகம்
என்றுசொல் வதும்நீயே. எல்லா வுயிர்நீயே.
அன்றமர்செய் வானவர்க்கும் ஆகாத (அ)சுரருக்கும்
215. நஞ்சான தும்நீயே ; நல்லமுத மும்நீயே.
[3]மஞ்சான தும்நீயே. [4]மழையான தும்நீயே.
கத்தனே ! [5]உந்தன் காரணத்தின் செய்கைதனை
[6]உற்றெவரும் வாயால் ஒதுவார் உண்டாமோ ?'
என்னவே வச்சனுந்தான் இருகை மிகவெடுத்து
220. சென்னிமேல் வைத்துச் 'சிவனேசி வனே' யென்று
தோத்திரங்க ளாகச் சொல்லி மனக்கனிவாய்
வாழ்த்தினன் ; மெத்த வணங்கினர் ஈசன்பதம்.

நாலா மத்தியாயம் முற்றும்.

---

1. வெள்ளை யானையின் மேல்வரும் இந்திரன்
2. பிரமலோகம்
3. வெண்மேகம்
4. மழையே அல்லது கருமேகம்
5. உன்தன்
6. உற்றெவரும் என ஒலிக்கும்; எழுகை நோக்குக

ஐந்தாம் அத்தியாயம்.

பெண்கள் கதை

விருத்தம்(1)

வருக மிருக சிங்கா ! நீ வருந்தி யியற்றுந் தவந்தானும்
பிரம சாரி முறையனைத்தும் பிறழா தியற்றுந் தகுதியினும்
பருகு மமுர்தம் போன்றிடநீ வழுத்திப் புகன்ற பாடலிடம்
விரிகா விரியில் வைகறையில் விரியும் புனலா டியதானும்[1]

நடை

5. இந்தவண்ண மாக இனிதான வச்சனுந்தான்
விந்தையுட னேதொழுது மெய்பணிந்து நின்றிடவே
பரமேசு வரரிரங்கிப் பரிவாய் மனமகிழ்ந்து
சிரமேல் கரம்குவித்துத் தெண்டனிட்ட தொண்டனையும்
பூராய மாய்மகிழ்ந்து புகலுவார் மன்னுகேள் !
10. வாராய் மிருகசிங்கா ! வருந்தியென்னை யேநோக்கி !
பண்ணுந் தவத்தாலும், பழுதுசற்றும் இல்லாமல்
வண்ணமென வேதான் வளரும் பிரமசாரி-
விரதம் வழுவாமல் வேதமுறை யின்படியே
[2]வரிசையுட னேநடந்து வந்த படியாலும்,
15. தேவாமுர் தம்போலத் தித்திக்கும் வாயாலே
[3]மாவாரும் பாடல்சொல்லி மகிழ்ந்துபல தோத்திரங்கள்
செய்த படியாலும், சிறந்ததொரு காவிரியில்
துய்ய மகரமாசம் துலங்கவே முப்பதுநாள்
இனிமையாய் மாகஸ்நானம் இன்பமென ஆடினதால்[4]
20. மனது மிகஉகந்தோம் ; வந்தோம். இனியுனக்கு
வேண்டும் வரங்களெல்லாம் மெய்ப்பாக வேதருவோம்.
பூண்ட தவத்தோய் ! புகலுகிறேம் ஆனலும்
உருக்கமுடனேதான் உகந்துதா னீநின்று
இருக்கும் படியுனக்கு இப்போது நல்வரங்கள

---

1. இந்த விருத்தம் 9-ஆம் அடியின் பின் வரல் வேண்டும். அத்தியாயத்தில் முதலில் விருத்தம் இருக்கவேண்டும் என எண்ணினர் போலும். எட்டில் மேலத்தியாயத்தின் முடிவில் உள்ளது
2. ஒழுங்கு
3. பெருமை பொருந்திய
4. உம் சற்றில் தொக்கது ; பேச்சு வழக்கு

பாங்காய்க் கொடுப்பதற்குப் பக்குவமே போதாது.
திங்காகச் சொல்லவில்லை ; செப்பக்கேள் ! என்னவென்றால்,
பிரமசாரி விரதம் பூணி வழுவாமல்
வரிசையுட னேதான் மகிழ்ந்து செய் [2]தனைலும்
மாதா கடன்முதலாய் வளரும் பிதிர்கடனும்
[3]நீதம் எனவேதான் நீ [4]கழிக்க வேண்டியதால்
தேவர் கடன்முதலாய்ச் சிறந்ததொரு எக்கியங்கள்[5]
பூவுலகி லேமுடித்துப் பொன்போல் மணம்புணர்ந்து
சற்புத் திரரான சந்ததி களீயீன்று
பொற்புடனே வாழ்ந்து பொன்றி மறுசெனனம்
பிரமதே வன்தனக்குப் பிள்ளையா கப்பிறந்து
வரிசையுட னேவேத வழக்கமெல் லாமறிந்து
பெருமை யொடுங்கூடிப் பெருந்தவசு செய்துநிற்கும்
அரிய தபோதனர்க்கு அருள்ஞான நல்வழிதான்
காட்டி, யப்பால் நீதானும் கருதரிய மாமோட்சம்
[6]வீட்டைப்பெ றுவா' யென்று விமலன் விடைகொடுக்க
கேட்டு மிருகசிங்கன் கெம்பீர மாயரவம்-
[7]பூட்டும் புரிசடையான் பொன்முகத்தை யேநோக்கி
'காண அரிதான கர்த்தனே ! முக்கணனே !
சேணுலகோர் போற்றுந் தேவே ! யரும்பொருளே !
அடியேன் ஒருவார்த்தை அன்புடனே சொல்லுகிறேன்.
நெடிய செழுஞ்சடையோய்[9] நேசமென யென்தனுக்கு
திருவுளம் பற்று' மென்று செல்வ மிருகசிங்கன்
வரிசை யுடன்பணிந்து வாகுடனே சொல்லிடுவான் :—
'கர்த்தனே யிப்புனலின் கரையிலிருந் தேயடியேன்
நற்புடைய மாதவசு-நானெளியேன் ! செய்பொருட்டால்
அன்றிருவர் தேடி அறிந்திலா மாமூர்த்தி
இன்றெழுந்து தொண்டனுக்கு இன்பமுடன் காட்சிதந்தீர் !
இந்தப் புதுமைதன்னை எல்லாம் உலகறிய
[9]கந்தச் சடையானே ! கர்த்தனே ! இத்தலத்தில்

---

1. பட்சமாய்
2. செய்து அதினலும்
3. நீதி
4. செய்துமுடிக்க
5. தேவயஞ்சும், பூதயஞ்சும், ரிஷியஞ் சும், பிதுர்யஞ்சும், மானுஷயஞ்சும் என்ற 5 வேள்வி வழியே ஒ ஜவ குடைய கடனைத் தீர்த்தல்
6. (மோட்சமான) விடுதலையை
7. பூணும்; இவ்வழக்கைக் காண்க
8. [ன்]
9. மலர்களின் வாசனை; இயற்கைத்தெய்வ மணமுமாம்.

55. எழுந்தருளி யிங்கே யிருக்கவே ணு' மெனவே
[1]விழுந்த மிருகசிங்கன் மெத்தவே தான்பணிய[2]
செய்ய செழுஞ்சடையான் சிந்தை மிகமகிழ்ந்து
[3]அய்யனும் 'அப்படியே அமர்ந்திருப்போம்' என்றனே.
பின்னும் மிருகசிங்கன் பிராணை மிகப்பணிந்து
60. வண்ணம் எனவேதான் வழுத்துவா னெவியமாய்[4]
'அடியேன் தனியென்ற அய்யருமென் அன்னையரும்
வடிவான வச்சனென்று வரிசையாய்ப் பேருமிட்டார்.
அந்தநல்ல பேரை அண்ணலே [5]நீரகத்தி
விந்தை யுடனே மிருக்சிங்கன் என்று சொல்லி
65. பேரிட்டீர். இப்பேர் பெரிய உலகமெல்லாம்
சீரிட் டெனையழைக்கத் திருவுளம்பற் று'மெனவே
மிருகசிங்க னென [6]வில்லோன் மிகக்கூற
நறுமலர்ப்பூங் கொன்றை நாறுஞ் சடாமகுட-
முடிதுளக்கி, யெங்கோன் முறுவல்செய்து, அன்புடனே
70. [7]வடிவுடைய மாதவசில் வளரும் மிருகசிங்கா !
அருந்தவசு பண்ணி அழகாக வேதான்
இருந்த பொழுதில் இனிய பலமிருகம்
உன்னுடைய [8]மேலே [9]ஊன்றுங்கருங் கட்டையென
வன்ன மிருகம் வந்து மிகஉரச
75. அசையாம லேதான் அங்கிருந்து மாதவசு
வசையில்லா மல்முடித்தாய். மனமிகவும் வாடாமல்
பூராய மாய்விரதம் பூண்டதுகண் டின்பமுற்று,
சீராக வேமிருக சிங்கனென்று பேருமிட்டோம்[10].'
இந்தநல்ல பேரும் ஈரே முலகமெல்லாம்
80. விந்தை யுடனே விளங்க வரங்கொடுத்து
நாரா யணன்மலேமேல் நாதனும் பார்வதியும்
பூராய மாயுலகம் போற்றும்படி யங்கிருந்தார்.
இந்த மிருகசிங்கன் இனிய பரமசிவன்

---

1. திருவடியில விழுந்த: 'விழுந்து'என்று மாம்
2. வாக்கியம் நீளல் காண்க
3. சடையன், அய்யன் எனவழுவாய் பல வடிவில் இங்கு வருவது பெருவழக்கு
4. வண்ணப் பாடல்போல
5. நீர்அகற்றி.
6. வில்லோன் ஒளியுடையோன். வ் என்ற உடம்படு மெய்யோடு 'இனயோன்' இனையோன் என்றிருக்கலாம்
7. தவக்கோல முடைய
8 உடம்பின் மேல்
9 நட்ட
10. 'இட்டோம்' என்றதன்பின் 'என்று வினைக்கி' என்ற சொற்றொடர் தொக்கி நிற்கிறது. பேச்சு வழக்கில் போல வாக்கியம் நீள்கிறது

[1]விந்தமலர் தாள்பணிந்து வேண்டும் வரங்கள்பெற்று
தன்னூர் தனைத்தேடி தான்போகும் போதிலெதிர்
பொன்னுக வந்தோர்[2] பூராய மாய்நோக்கி
[3]சிந்தையுட னே'மிருக சிங்காசி யிப்போது
[4]வந்தியோ வந்தியோதான் மாயோகி வந்தனையோ
என்றுல கோர்[5]கேட்க, எம்பிரான் [6]காரணத்தால்
நன்றியுட னேநடந்து நல்ல மனைபுகுந்து
தாய்தகப்பன் பொற்பாதம் சரணம் எனப்பணிந்து
நேயமென வேதவசு கின்றுஅவன் செய்ததுவும்,
பரமசிவன் வந்ததுவும் பரிவுடனே யேவரங்கள்
வரிசையுட னெதந்து 'வளம்பெற்றில் லறத்தோடே
கூடி.வாழ்' என்று [7]குன்றைவில்லி தானுரைத்து
நாடிவரந் தந்தவும், நட்புடனே தானுரைத்தான்.
மைந்தன் உரைத்தமொழி மாதாபிதா தான்கேட்டு
சிந்தை உகந்து செல்வக் களிப்படைந்து
தன்பிள்ளை தன்னை சந்தோஷ மாய்நோக்கி
'அன்புடைய பிள்ளாய்! அழகு மிருகசிங்கா!
நல்லதொரு பிள்ளை தன்னை நாங்கள்பெற்ற தாகையினல்
அல்லலில்லா மோட்சம் அடையவே [8]முத்திபெற்றோம்
என்றுதான் ஈன்றோ ரின்பமுட னேகூற
அன்று மிருகசிங்கன் அன்புடன்தான் கூறுவான்:—

விருத்தம்(2)

ஈன்று வளர்த்த தாய்தந்தைக்
கெவரே கைம்மா றியற்றிடுவார்
[9]ஆன்ற மதலை நூறுவய
தளவும் அடிமைத் தொழில்புரிந்து
மூன்று புவனத் துள்ளபொருள்
முற்றும் அளித்து முறைமுறையே
[10]ஊன்றி வழிபா டியற்றுகினும்
ஒருநாள் வளர்த்தற் கொவ்வாதே.

---

1. அரவிந்தம்-தாமரை; தலைக்குறை
2. வந்தவர்; உலகோர்
3. பல சிந்தனைகள் நிறைந்தவையோடே
4. வந்தாயோ
5. வியந்து கேட்டு அளவளாவத் (தாமதியாது)
6. சிவனுருக்காக; சிவன் கூறிய காரணத்திற்காக
7. மேருவை வில்லாகக் கொண்ட சிவன்
8. விடுதலை
9. எல்லாம் நிறைந்து அடங்கிய; மாட்சிமைப்பட்ட
10. வழிபாடு ஊன்றி (நிலையாக) செய்தாலும்; "இயற்றுகு" எனவரல் காண்க

நடை

பெற்று மிகவளர்த்த பேரான தந்தையர்க்கு
உற்ற தொருபிள்ளை உதவிசெய்வ துண்டோதான்?
உள்ள வயது மொ[1]ருநூறு தான்வரைக்கும்
தெள்ளிமையாக-அடிமை செய்து பணிந்தாலும்
திரிபுவனந் தன்னிலுள்ள செல்வப் பொருள் தன்னையும்
வரிசையுட னேமெதடி மகிழ்ந்து [2]படைத்தாலும்
வழிப்பாடு தப்பாமல் மகிழ்ந்து நடந்தாலும்
தெளிவாக அன்னையுமே திருத்தி யொருநாள்தான்
வளர்த்த கடன் [3]கழிக்க மாட்டரே! உத்தமரே!
[4]அழுத்தும் உடனேதான் அன்பான பாலர்கள்தான்
தாய்தகப்ப னுக்கேற்கத் தங்கள்குருக் களுக்கேற்க
நேயம் [5]உடனே நிரம்பவழி பாட்டுடனே
தொண்டுசெய்த மாபலன்போல் சுகியான பாலருக்கு
உண்டோ? தவந்[6]தருமோ? உண்மையிது. இன்னமையா!
பெற்றெடுத்த தாய்தகப்பன் பெருகும் அருள், குருக்கள்
உற்றவருள் இல்லாவிட்டால் ஒருபலனும் இல்லையா!
ஆனதால் உங்களுட அருளிருந்த தாகையால்
மானிலங்கு கையான் வரம்பெற்றேன்' என்றுசொல்லி
தந்தையர்க்குந் தாயார்க்கும் தானுரைத்துப் பாலனவன்
[7]சந்திர மௌளிசொன்ன[8] சாத்திரத்தை யு-முரைப்பான்:—
'அய்யரே! என்னை அன்புடனே பெற்றெடுத்த
மெய்யரே! ஈசன் விளம்பினதை யுங்கேள்மோ!
இல்வாழ்க்கை போல் இல்லைமறு வாழ்க்கையென்று
சொல்லினர். இந்தத் தூயஇல் வாழ்க்கைதனில்
குற்றஞ்சில துண்டு[9]வந்த குற்றமில்லா தேபோனால்
மெத்தவே நல்லதுதான் [10]மீறுகின்ற இல்வாழ்க்கை.
கணவன் மொழிதனையே கடவாத பெண்கள்தனை
மணமாலை சூடினவன் வாழ்வான் கயிலைதனில்.
செப்பமுடன் மாலையிட்ட செல்வக் கொழுனனுரை

1. முற்றும்மை
2. அர்ப்பணம் செய்தாலும்
3. தீர்க்க
4. 'ஸு' எதுகைக்கு ஆம்; உறுதி
5. மனந்தில் அன்போடு செய்தல்
6. தவம் இத்தகைய பலனைத் தருமோ?
7. சந்திரமௌலி, சந்திரனை முடியாகவைத்த தவன் வி-தென்னாட்டு ஒலி
8. சொன்ன சாத்திர (ஆகம) உண்மை; வேத வுண்மையுமாம்
9. வ் உடம்படு மெய்
10. உயர்கின்ற

தப்பி மிகநடக்குந் தையல்தனை மாலையிட்டால்
பாழான துன்பமுற்றுப் பழுதாக வேமெலிந்து
ஏழா நரகினுக்குள் இருப்பான் [1]இலக்காக.
உண்ணும் புனலில் உகந்து வாழ்அட்டையது
தண்ணீ ரருந்தத் தானிரங்கு வோன்காலில்
வந்து கடித்துதிரம் வாங்கி[2]வயர் கொண்டபின்பு
விந்தையுள்ள வப்புனலில் விரைந்து[3]போ கும்போல
தீய குணமுஞ் சிறந்த[4]பரத் தைத்தொழிலும்
[5]நேயமுடை யபொல்லா நேரிழையை மாலையிட்டால்
கைப்பொருளு யும்பறித்துக் கனத்தபுக ழைக்கெடுத்து
பொய்ப் [6]பொருளாம் மய்யலையும் பூட்டி யேதுன் பங்கொடுத்து
போவார். கொடியகுண[7]ப் பூவையரை மாலையிட்டால்
[8]மேவலா காதுவய்யா விரும்பவுமே போகாது!
ஆனதால் ஈசுவரனுர் அன்பா[ய்] உரைப்படிதான்
மானம், உடையவளாய் வளர்கற்பும் உள்ளவளாய்,
நல்லகுலம் ஆனவளாய், நற்புத்தி உள்ளவளாய்,
சொல்லுங் கொடியகுண துர்ப்புத் தியில்லாளாய்,
பரிவான பாலர்தனைப் பாங்குடனே பெற்றெடுக்க
அரிய தவம் உள்ளவளாய், அழகில் மிகுந்தவளாய்,
சாந்தகுணம் உள்ளவளாய்த், தயவும் உடையவளாய்,
[9]காந்தினசொல் இல்லாளாய்க் கால்பருத்தாள் இல்லாளாய்,
[10]சிவந்தநிறம் உள்ளவளாய்ச் சிவந்தகூந்தல் இல்லாளாய்,
கவிழ்ந்தகழுத் தில்லாளாய்ச் கனபிணிநோய் இல்லாளாய்,
பூரணசந் திரன்போலப் பொலிந்தமுகம் உள்ளவளாய்,
சீருடைய மாதவரைத் தெரிந்துதொண்டு செய்பவளாய்,
[11]ஓழுக்கம் உடையவளாய் உறுப்பின்குறை இல்லாளாய்,
மூலாத்தாரம் பாம்புபட்சி முழுங்குநதி வாலுடுக்கள்–
பேருமில் லாதவளாய்ப் பெருமைசற்றும் பேசாளாய்
சேருங் குறுங்கழுத்து நெடுங்கழுத்தும் இல்லாளாய்,
காலில் [12]படம்பெரியாள் கைகால் விரல்நெடியாள்

1. அந்த நரகம் வருத்துதற்கு எய்யும் குறி யாக
2. வயிறுஉச்சரிப்பு
3. போவதுபோல; செய்யும் என்ற முற்று வினையாலணையும் பெயராய் இவ்வாறு வருவது அருமை
4. வேசை
5. தீயகுணம்முதலியவற்றில் நேயமுடைய
6. மையல்; கண்மூடிய காமக்கேடு
7. [ம்]
8. கூடுதல்
9. எரியும் சொல்
10. முரண்
11. ஞ துலக்கக்காம்
12. பாதத்தின் முற்பகுதி

கோலியகொட் டாவி[1]நொடி குறட்டையளு மில்லாளாய்
நெடியவளும்இல்லாளாய் நிறைந்தஇடை தான்பருத்து
170. [2]துடினநடை இல்லாளாய்த் [3]துலங்குமுத டில்லாளாய்
சொல்லுகின்ற சாதிதனில் தூய[4]முதல் சாதியுமாய்
[5]அல்லல் சிலுக்கும் இன்றி[6]அபிமான முள்ளவளாய்
[7]இக்குற்றம் இல்லாளாய் இருக்கின்ற[8] பெண்கள்தனை
நற்குலம் பார்த்துஅழகாய் நல்லமணம் செய்திடென்று
175. பொன்னுரும் அம்புலியைப் பூண்ட புரிசடையோன்
சொன்னார்' எனவேதான் தூயதொரு தந்தையர்க்கு
சீராக வேமிருக சிங்கன் உரைத்திடவே,
பூராய மாகவேதான் புகழ்மீறு தந்தையர்கள்
மெத்த மனமகிழ்ந்து விடலை தனைப்பார்த்து
180. 'புத்தியுள்ள பிள்ளாய் புகழ்மிருக சிங்காகேள் !
மகரமா த-மெனவே வளருந்தைமா தம்தனிலே
[9]புகலுமுதல் பக்கமதில் பொருந்தும் பிரதமையில்
நின்றுநீ மாகஸ்நானம் நேசமென ஆடுகின்ற
நன்றியா லுந், தெளிந்த நல்மனதா ன-படியால்[10]
185. உற்ற பரமசிவன் உகந்தருளு நீதானும்
பெற்றிருப்ப தாலும், பிள்ளாய்நீ சொன்னபடி
குற்றமில் லாதபெண்ணை குவ[11]லையமெல் லாமகிழ
மெத்த மகிட்சியொடு விரும்பி மணம்புணர்வாய் !
தேவர்தே வர்புகழுஞ் சிறந்ததொரு மாகஸ்நானம்
190. ஓவியமாய் நீதானும் உகந்தா டினபலன்தான்
ஆயிரங்கண் ணிந்திரன் வாழ் அமரா பதிதனையும்
நேயமென வேநினைக்கில் நிமிஷத்தி லேகொடுக்கும்.
[12]அப்படியாய்க் கொத்த அரும்பலனைச் செய்தவர்க்குச்
செப்பமுள்ள பெண்தான் சிலபொருளோ தானரிதோ ?'
195. என்றுதான் குச்சன் இனிதான பாலனுக்கு
நன்றி யுடன்சொல்லி நட்பாய் மகிழ்ந்தானே.
[13]அஞ்சாமத்தியாயம் முற்றும்.

---

1. சீட்டிகை போடல்; [நெடிகுறுகிவளும்]
2. பரபரப்பு
3. பேரிய உதடு
4. பத்மினி சாதிப்பெண்.
5. துன்பம், தொந்தரவும்
6. தன்மதிப்பு
7. இல்-வளரும் வீடு; இற்குற்றம்: ற், க்; இக்குற்றம்-முன்கூறிய இத்தகைய குற்றம்
8. அக்காலத்தில் பெண் பார்ப்போரின் குறிக்கோள்கள் காண்க
9. பூர்வபக்ஷம்; வளர்பிறை
10. உம் சுற்றில் தொக்கது; மனதாவபடியால் சிவன் உற்றடைந்தார் என்றும் கொளலாம்
11. ல; அ, ஐ
12. அத்தகைய
13. 'ஐந்தாம்'

ஆறும் அத்தியாயம்

சுவாதத்தை கதை

விருத்தம்(1)

இவ்வாற [1]னைய மாக திங்க ளெங்கு மிருக்கு மந்நாளில்
தெவ்வர் வணங்கும் புகழ்போசன் செம்பொன்மூதூர் தனில்
[வாழு
[[2]மெ(ா)வ்வா தி மையட னிலத்தெய்வ] வுயர்ந்த மரபி
[லுயத்தியன்றன்
[[3]நவ்வர ளவில்] வந்த விர தத்தை [4]நன்ன(ர்)மன்னு(கேள் !)

நடை

5. இந்தப் பலன்கொடுக்கும் இனியமாக மாசத்திலே
விந்தையுடன் மாகஸ்நானம் விரிப்னல் ஆடும்நாளில்
சத்துருக்கள் வந்துஹிதம் தான்பணியக் கீர்த்திகொண்ட
புத்தி யுடையவனும் போசரா ச-ஞட்டில்
தேவர் மிகப்புகழத் தெய்வ[5]தன்மை யைப்பொருந்தி,
10. ஓவிய மாகவளர் உயத்தியனென் ரேர்மறையோன்
விரதம் [6]பலதுசெய்து, மிகவே தவங்கள்செய்து,
வரிசை யுடனே வளருஞ்சுவா தத்தையென்று
ஆதித் திருமகள்போல் அழகு நிறைந்திருக்க
மாதர் திலதமென மடந்தைதனை யீன்ருனே.
15. அந்த மடந்தையுமே அன்பாய் வளர்நாளில்,
[7]சுந்தரம் போலவேதான் தோழிமார் தன்னுடனே
[8]இனங்கள் மிகச்சூழ, எல்லோரு மேகனிந்து
தினந்தோறு மாகஸ்நானம் சிறப்பாக வேயாடும்-
காவேரி யாறுதனில் கன்னியெனும் இம்மடந்தை

---

1. வலி மிகவில்லை
2. ஒவ்வா(த) தின்மை(யுடைய) நிலத் தெய்வ (பூசுரர்-மறையவர்) என்றி ருக்கலாம்
3. நவ்-மான்; நவ்வர்-(மானர் என்பது போல) மான்போன்ற பெண்கள்; அவர்களுக்குப் பயன்பட்ட விரதம்
4. [ய]
5. தெய்வத்தன்மை
6. பல
7. அழகு அவரைப் பிரியாதிருப்பது போலத் தோழிமாரைப் பிரியாது; தோழிமாரும் ஓர் அழகுபோல் ஆகி விட என்றுமாம்
8. சுற்றம்; ஒரே வயதான பிறபெண்கள்

20. பூவார் குழலரொடு புக்[1]குமாக [2]மாசத்திலே
வாகான [3]மாகஸ்நானம் வாஞ்சையுட னேயாடில்[4]
பாகார் மொழிமடந்தை [5]பரிவான காவேரி
தன்னைத் தொழுது தழைக்குஞ்சுவா தத்தையென்பாள்
வன்ன முடனே [6]மாத்தோத்தி ரம்பண்ணுவாள் :—

விருத்தம்(2)

25. ஊன மில்லாப் [7]ப[ா]திகற்போ டுரிய புத்தி [8]நல்லமதி
ஈன மில்லாப் பெருஞ்செல்வம் எல்லாமெழுதி[9]த் தரவேண்டி
யான குடகிற் பிறந்தோயே யரங்கற் கயல்போ தாரமுதே[10]
கான மலர்சேர் காவேரி[யைக்] கையாற் றொழுவேன் கண்டாயே[11].

நடை

'குற்றமில் லாமல் கொழுந்தோடி யேவள[ர்]ந்தான்
30. நித்தம் பெருகும் நிகரில்லாப் பேரரும்,
மாசில்லாக் கற்பும் மனமான புத்திதரும்
பேசுகின்ற நல்லறிவும், பேரான யீகையொடு
தூய பெருவாழ்வுஞ் சுகமான மாசெல்வமும்,
தாயே! அடியாள்நான் தானினைத்த தெல்லாம், [12]நீ
35. தந்திடுவீர்! என்னுடைய தாயே! யிலட்சுமியே!
[13]நந்துலவு செங்கை[14]ரங்க நாயகற்கு மாலையென
[15]பகுந்துவரும் பத்தினியே! பால்போல் இனியவளே!

---

1. [கி] இ-உ மாருட்டம்
2. மாஞத்தையிலே' என்றே எங்கும் இருக்கிறது; த் ஒலியாதுபோலும்
3. "மாஞத்தானம்" என்றே எங்கும் உளது
4. ஆடில்-ஆடுகையில், இந்நூல் வழக்கு
5. தேன் பாருபோல இனிக்கும் மொழி பேசும் மடந்தையான அன்புள்ள காவேரி
6. 'மாதோஞ்த்திரம்" என்றுளது
7. ஊர் எனப் பொருள் கீழே கொள்ளப்பட்டுள்ளது; கணவன் என்றுமாம்
8. [பூதவர்]
9. பத்திரம் எழுதிக் கொடுத்ததுபோல உறுதியாக உரிமையாக்குதல் என்ற பொருளில் எழுதித் தரவேண்டி என்று வரும். "அருளி" என்றும் இருந்திருக்கலாம்
10. [யாங்கடகயலபோருமுதே] போது= போரும்; 'போது' போரு என்றும் வரும் போது (பூ) ஆகு பெயராய் மலை என்றும் ஆம்
11. மா, மா, காய் இரட்டித்துவரும் அறுசீர் விருத்தம்; முன்னையதும் இத்தகையதே
12. நீ தந்திடுவீர்
13. நந்து=சங்கு
14. காவேரியும் கொள்ளிடமுமாகப் பிரிந்த போது இடையிலுள்ள இடத்திலுள்ளது திருவரங்கம்; அங்குக் கோயில் கொண்ட திருமால்' அரங்கநாயகன்;' 'ர' மொழி முதலாக வருகிறது
15. 'பகிர்ந்து' என்பது தொகைக்கு ஏற்கும்

மகிழ்ந்துவரும் உத்தமியே! [1]வண்டாரு பூமலர்கள்-
வன்னம் எனச்சொரியும் மாதரசே! காவிரிப்பூம்

40. அன்னையே! உன்னை அடியாள் மிகத்தொழுதேன்.
எளியாள் நினைத்தபடி, எந்தாயே! தாருமென
வழிபாடாய் நித்தம் வளருஞ்சுவா தத்தைபவள்
காவேரி [2]யம்மனையுங் கைதொழுது, மாகஸ்நானம்,
[3]பூவாற் பொலிகுழலாள், பொன்போல ஆடிடுவாள்.[4]

45. இந்தப் படிநிதம்தான் இவள்தொழுது மாகஸ்நானம்
வித்தையுடன் ஆடி[5]வரில் விரதமுள்ள பொற்கொடியைப்
பெற்ற [6]உயத்தியன்றன், பெருமையுட னேகேட்டு,[7]
நற்றவஞ்செய் மாதினுக்கு[ள்] நல்லபுத்தி ஈதெனவே,
மானேர் விழியாள் வடிவழகும், [8]புத்தியையும்

50. வானோர் புகழ்மறையோன் வாஞ்சையுட னேபார்த்து,
'இந்த மகள்தனக்கு இனிதான மாப்பிள்ளைதான்
எந்த விதம்வருவான் [9]எப்படியாக் கொத்தவனே?
அறியோம்?' எனநினைந்து அவனிருக்கும் அவ்வேளை[10]
[11]நருசேர் கடுக்கையணி நாதன் அருள்பெருகும்[12]

55. சீரா[13]ரு மாமிருக சிங்கன் தினையீன்ற
பேரான [14]குச்சனுமோ பெருகும் வுயத்தியன்பால்
வந்து, [15]வுயத்தியனுர் வதன மலர்நோக்கி,

---

1. பூ=பொலிவு; வலிமுன் மெல்லெழுத்தும் பெறும். அதனை இயல்பிருக்கக் கொண்டு பூம்என்றே இந்நூல் வழங்கும்
2. 'அம்மா' என்ற பொருளில் பழங்காலத்தில் வழங்கிய 'அம்மனே' என்பது பெண் தெய்வத்தினைக் குறிக்க 'அம்மன்' என வழங்குகிறது.
3. [பூவாற பொலிகுளலாள்] ல-ள
4. எதிர்காலம் இங்கு வழக்கத்தினைக் குறிக்கிறது
5. வருகையில்
6. [கு]
7. மகளின் விரதத்தைக் கேட்டு
8. ஐ வேற்றுமை இங்குத் தொக்கும் அடுத்து விரிந்தும் வருதல் காண்க; புத்தி வெளிப்படும் செயல் என்க
9. எப்படிக்கு ஒத்தவன்
10. வாக்கியம் நிறைந்தால் காண்க
11. [நறு] நரு=தேன்
12. பெருகு என்ற வினைத் தொகையாகக் கூடியது பெருகும்என பெயரெச்சமாகிச் சீரும் மா என்ற சொல், இடைப்பிறவா மிருகசிங்கன் என்பதோடு முடியும்; பூ என்பதன் முன் 'ம்' கொண்டதுபோல ஆம்; பெயரெச்சம் அடுக்கி வருதல் இப்போது வழக்காயினும் பழைய வழக்கன்று. அவ்வாறு அடுக்கி வருமாயின் முன்னைய எல்லாம் வினை எச்சமாகப் பின்னையது மட்டும் பெயரெச்சமாய் நிற்கும்
13. [று]
14. குச்சனுமே; 'ஏ' ஓ என வருகிறது
15. 'கு' யந்தியன் என்றும் சில இடத்தில் இந்தப் பெயர் படிக்கத் தக்கதாக இருக்கிறது; 'உ' வு என ஒலித்தலும் காண்க

'விந்தையுள்ள மாமறையோ[1]ய்! மிக்காக வுன்மகளே
என்மகன் ஆன இனியமிருக சிங்கனுக்கு

60. பொன்போல் மணமுடிக்கப் புண்ணியா! வேணுமென்று
குச்சமுனி தான்கேட்கக் கோதில்லா மாமறையோன்
[2]மெச்ச மனங்குளிர்ந்து 'மெத்தநல்ல தா'மெனவே
இருபேருஞ் சம்மதமாய் இசைந்து அவர்போனார்.
பரிவாக 'வேமறுநாள் பகலோன் விடியமுன்னம்

65. தோகை மயிலனைய சுவாதத்தை என்றுசொல்லும்
பாகனைய சொல்லாள் பாங்கிமார் மூவரொடு
பொழுது விடியமுன்னம் புகழாருங் [3]காவிரியில்
பழுதில்லா மாகஸ்நானம் பாங்காக ஆடவென்றே
வரும்போ திடைவழியில், [4]வளரும்பெருங் காட்டானை

70. கரிய முகில்போலக் [5]கடவை மிகமறித்து
சிந்த மதங்கள்[6] சிறுகண் பொறிச்சிதற
தந்தி குரல்முழக்கித் [7]தானேதான் வந்திடவே,
[8]வேலினிய கண்மடவார் மிகப்பயந்து வாய்குழறி,
கால்கள் [9]அசந்து கலங்கியேகண் ணீர்சொரிய

75. கையோடு கைநெரித்து கார்[10]குழல்கள் பின்சரிய
'அய்யோ' வெனவெருவி அடர்ந்தபெருங் காட்டுடே
பட்டாடை சோரப் பாடகக்கால் தானிடற,
மட்டாரும் பூமாலை வழுவி நிலத்தில்விழ,
சீரிலகுஞ் சந்திரன்போல் சிறந்தமுகங் களதனில்[11]

80. வேர்வைகள் சிந்த மிகுத்த பயத்துடனே
பின்னே [12]துடர்ந்துவரும் பெரியமத வானைதனை
அன்னமெனும் பெண்கள் [13]அஞ்சிஅஞ்சி யேதிரும்பிப்–

---

1. [i] விளிவரும்போது அண்மை விளி போல் இயல்பாக ழுதப்படுகிறது
2. மனம் மெச்ச, மனம் குளிர்ந்து; விளக்கணி
3. [காவேரி] என்ருல் ஒலி நீளும்; காவெரி என ஒலித்திருக்கலாம்
4. வழியில் வளர்வது காடு; வளர்தல் ஆனைக்குமாம்
5. வழி
6. மதங்கள் சிந்த; முன்பின்னக வரல் செய்யுள் நடையும் பேச்சு நடையுமாம்
7. தனியாக, தனியான நிலையில், தான் தோன்றியாய்
8. கண்ணின் இருநோக்கு; வேல்போலுதலும் இனிமையாதலும்
9. அயர்ந்து; ச ய மாருட்டம்
10. வலி மிகவில்லை
11. 'அது' ஒருமை என்ற எண்ணமே மறைய வெறும் சாயை யாயிற்று
12. தொடர்ந்து
13. அடுக்கு - அச்சத்தின் மிகுதியையும் கால நீட்சியையும் காட்டும்

[1]பா(ர்)த்து நெடுங்காட்டின்வழி பதறியோ டும்வழியில்
[2]ஊத்தில்லாப் பாழ்கிணறு உற்றபசும் புல்மூடி

85. இருந்த வகைகாணூர் ; இந்நா லு பெண்களுந்தான்
[3]பரந்தஇரு ளால்மயங்கி பாழ்ங்கிணற்றி லேவிழுந்து
மாண்டார்கள். பின்னே மலைபோல் வருமியானை
[4]சூண்டநறும் பூங்கூந்தல் தோகையரைக் காணுமல்,
பாரமலைச் [5]சார்பில் படர்ந்தபெருங் காடுதன்னில்

90. [6]வீரியமாய் வந்த வேழமது போனதுவே.
வேழமதால் அஞ்சி வெறுங்[7]கிணத்தி லேவிழுந்து
மாளுகின்ற பெண்களுட மாதாபி தாக்களுந்தான்
'மணக்குமலர்க் கா[8]விரியில் மாகஸ்நானம் ஆடவென்று
இணக்கமுடன் போனபெண்கள் இத்தனைபோ துங்காணும்'

95. என்று சொல்லி யேகினைந்து ஏந்திழைமா ரைத்தேடி
[9]வென்றியுள்ள தந்தையர்கள் விரைந்துமிகத் தேடினரே.
பாதை வழிநெடுகப் [10]பாங்காய் வரும்போது
மாதரடி[11] கண்டு மயங்கியந்தக் கால்தடத்தின்[12]
வழியே வரும்போது, மால்யானைக் காலடிதான்

100. [13]தெளிவாகக் கண்டார், திடுக்கிட்டார். அய்யமுற்று
ஆனையடி பின்னலும் அவர்களடி முன்னலும்
போன வடிபார்த்துப் புழுங்கி, 'யா னைக்குஅஞ்சி
ஓடினர்' என்று உற்றவடிப் பின்னலே
நாடி வரும்போது, நல்ல மடந்தையர்கள்

---

1. 'ர்' இடையில் ஒலியாது

2. ஊற்றில்லா என்றதன் உச்சரிப்பு; ற-த மாருட்டம்; ஊறும் நீரும் இல்லாக என்று பொருள்

3. பரிந்த என்றுளது; வருத்தக் காரணமான என்றுமாம்

4. சூழ்ந்த என்பது சூண்ட எனவருவது இந் நூல் வழக்கு; எ-ந, த-ட, மாருட்டம்

5. சாரலில்

6. கடுமையாய்

7. கிணற்றிலே-த-ரு மாருட்டம்

8. "காவேரி" என்றுளது ஆனல் சீரோலி 'காவேரி' காவிரி என்றும்

9. சிறந்த பெண்களைப் பெற்ற பெருமை; எதுகைக் கேற்பச் சொல்லடுக்கும் வழக்கம், பிற் காலத்தில், சொல் ஒவ் வொன்றும் வெவ்வேறு பொருள் நயத் தோடும் வரும் மொழியின் அழகி னைக்குலைத்தது. இன்றைய அடுக்கு நயத் தமிழுக்குத் தோற்றம் இங்கே காணலாம்

10. தந்தையர் இனக்கமாய், ஒன்றாய்

11. அடிச்சுவடு

12. காலடிச் சுவடு

13. தெளிவாக; க, ர என்று வந்திருக்கலாம்; தெளிவு நிறைய என்றுமாம்; தெளிவு வர என்று தூலை விலை யோடு வந்த வடிவு மாகலாம்

105. கொண்டை தனில்முடித்த [1]குப்பிமயிர்த் தொங்கல்சுட்டி
வண்டணி பூங்கூந்தல் மாலைசிந்தி யேகிடக்க
[2]அழுத்தமுள்ள பட்டுதனை அடர்ந்த சிறுசெடிகள்
இழுத்துமே [3]கொம்புகொண்டு இருந்தவகை கண்டாரே.
இப்படியே பார்த்து இவர்போகும் அவ்வழியில்
110. செப்பமுள்ள பாழ்ங்கிணத்தைச் சித்திரமாய்க், [4]காண்டனரே.
[5]காண்டிடத்தப் பாழ்ங்கிணத்தில் கன்னியர்கள் தான்விழுந்து
மாண்டு கிடப்பதையும் வய[6]றறியக் கண்டனரே.
கண்டார் மிலந்தனிலே கதறியே தான்விழுந்து
வண்டாரும் பூங்கூந்தல் மாதருட வாஞ்சையிலால்
115. கையை முகத்தறைந்து கதறிவெகு வாயழுது
'அய்யோ' வெனவேங்கி அதிர்ந்த இடியோசை
உற்ற அரவமென உயிர்நடுங்கி வாட்டமுற்று,
[7]குத்துவார் தன்வயற்றில்; 'கோகோ' வெனஅழுவார்.
ஏங்கியிவர் தந்தையர்கள் இப்படியே தான்[8]அழுக,
120. பாழ்ங்கிணற்றி லேவிழுந்து பாழாய் மடிந்த[9]தொரு-
மங்கையர்கள் தன்னை மருவிமரு வித்தாங்கி
அங்கையா லேயெடுத்து 'அய்யோ' விதியெனவே
அவரவர்கள் மக்கள்தனை அன்பாய் மடியில்வைத்து
'சிவசிவா' வென்றுமெத்தத் தேம்பிப் புலம்பினரே.
125. முகத்தில் அணைப்பார்; முத்தமிடு வார்; மயங்கி
'செகத்திலே உங்களைப்போல் தேட்டமுடன் காணாரிதே!'
அய்யோ 'எனப்பதறி [10]அசந்துபெரு மூச்செறிந்து
கையால்! [11]வயர்பிசைந்து கலக்கமுடன் விம்மிவிம்மி

---

1. குப்பி = குமிழ் போன்ற கொண்டைத் தீருது; தீருகாய் இல்லாது மயிர்க் குச்சோடு கோக்கப்பெற்றுப் பிடரி யில் இருக்கும் குச்சு; கீழே தொங் கும் மயிர்த் தொங்கலே மயிர்க்குச்சு என்ற ஆபரணம்; சுட்டி-பெண்கள் தலையிலிருந்து நெற்றியில் விழும் ஓர் ஆபரணம்; மாலை = பூமாலை; இவை யெல்லாம் ஒரு தொடர்; இவை தீந் தியே கிடப்ப என்க
2. அழுத்தமாகக் கட்டிய பட்டுப்புடவை
3. கொம்பில் கொண்டு
4. கண்டனரே என்பது முதல் நீண்டு வழங்குகிறது; எதுகை
5. கண்டு-ஷ 4 அந்தாதித் தொடர்
6. [ரே] ஐ-ற
7. குற்றுவார்; குத்துவார் என்றுமாம்; அப் போது குத்திக்கொள்வார் என்று பொருளாம்; த ற
8. அழ; கு-காண்க
9. ஒப்பற்ற-பின் பன்மை வரல் காண்க
10. அயர்ந்து-ய, ச; ர் இடையில் ஒலியாதல்
11. வயிறு-வயர் என்றே உச்சரிப்பு

ஏங்கி மறுகிடுவார். எடுத்து [1]நெஞ்சோ டேயணைத்து
தாங்குவார்; கண்ணீரைத் தாரையொழு கப்புலம்பி,
மாண்டு மடிமேலே மலர்[2]பாவை போல்கிடக்கும்
நீண்ட குழல்மடவார் நேச முகம்பார்த்து,
பொன்போல் மனதுருகிப் 'பூவையரே நீங்களுந்தான்
அன்பாக மாகஸ்நானம் ஆடும் பலனிதுவோ?
என்ன விதியோ? யெம்பிரான் கற்பனையோ?
முன்னல்செய் தகுறையோ?-[3]மூதாக்கள் தீவினையோ?
இடிந்த பெருங்கிணற்றில் இருக்கவோ காட்டானை
[4]துடர்ந்தது அய்யோ! [5]துடியான [6]கூத்துவனே?
[7]என்னமோ காரணந்தான்? இதுஅறியோம்' என்றுசொல்லி
அன்னம்போல் மாதர்முகம் ஆசையுடன் பார்த்தழுவார்.
அழுவார்; மய்ங்கிடுவார்; [8]அடியத்த பாய்மரம்போல்
விழுவார்; புலம்பிடுவார்; வெறிகொண்டார் போலுரைப்பார்.
'ஏங்கியுங்க ளுத்தேடி இருந்துநாங் கள்புலம்ப
பாங்குடைய பெண்காள்! பவளமலர் வாய்திறந்து
வண்ணமுடன் பேசிரோ? வரிவேல் அடர்ந்தகயல்
கண்ணை[9]முழித்துப் பார்க்க [10]கசந்துதோ? அன்னையர்தான்
கொண்டகவ லைதீரக் கொம்பனையீர்! [11]சத்தேதான்
[12]கண்டுலவும் வாய்திறந்து கண்ணைமுழித் துப்பார்த்து
பேசவுந்தான் ஒண்ணுதோ? பெருமையோ? தந்தையரை
நேச முடன்மறக்க நீதியோ? கண்மணியே!
பூரணசந் திரன்போலப் பொருந்து முகக்[13]களையும்,
சீரினிய பூமாலை செறிந்த கருங்குழலும்,
[14]பரிவான கொவ்வைப் பவளம்போல் [15]கனிவாயும்,

---

1. நெஞ்சு = இருதயத்தோடு, மார்போடு
2. வலிமிகவில்லை; திருமகள்போல
3. மூதாதைகள்என்பதன் மரூஉ
4. தொ
5. ஆற்றலான; சூழ்ச்சியான
6. கூற்றுவனே; தற; எமன் என்று பொருள்
7. இன்னம் என்பது போல் என்னம் என ஆகலாம்; என்னவோ என்பதில் 'வ' ம ஆக ஆகி இருக்கலாம்; வ-ம மாருட்டம்
8. அடியற்ற; பாய் மரம் உவமையாக வருமளவு பழக்கமான பொருள் போலும்
9. வி
10. கசந்ததோ—கைத்ததோ அன்னையர் கசந்ததோ கசந்தது பெயர்; கைப்போ என்று பொருள்
11. சற்றேதான்
12. கற்கண்டு
13. அழகு
14. அன்பாக (முத்தமிட்ட)
15. கொவ்வைக்கனி; பவளம் நிறம்; கவி மெத்தனவு

[1]அரிதான மின்னெளிபோல் அடர்ந்தமுத்தின் பல்லழகும்,
திட்டிவைத்த வேல்போலச் சிறந்திடுமைக் கண்ணழகும்,
வாட்டமில்லாப் [2]பொன்னேலை வயங்குகின்ற [3]வார்க்காதும்
பத்தரை [4]மாத்துப் பசுந்தங்கம் போலவேதான்
[5]சித்திர மெய்யழகுஞ், சிலம்பணியுங் காலழகும்,
என்றுதான் காண்போம்! இளமயிலே! என்மகளே!
நன்றியுள்ள தோழியொடு நல்லசிறு வீடுகட்டி
[6]பாங்காய் விளையாடும் [7]பாவனையுங் காண்போமோ?
பூங்கா வனத்திலேதான் பூமலர்கொய் சித்திரமும்,
பந்தெ[8]றிந்து நீங்கள் பரிவாய் விளையாடும்
சுந்தரமுங், [9]கைய்கழங்கு சொல்லியா டுந்தரமும்
என்னென்று சொல்வோம்? [10]இதுவெல்லாந் தான்மறந்து
அன்னையென்றும் பாராமல், அழகுகண்ணைத் தான்மூடி,
நீங்கள் உறங்குவது நேசமோ? புத்தியோதான்?
பாங்காக நீங்கள் பால்கொடுத்துத் தான்வளர்த்து[11]
பச்சைக் கிளிகள் பசியாக வேயிருந்து
[12]வச்சபால் உண்ணுமல் மயங்கியே [13]வாடுதய்யோ?
நன்னய மானதொரு [14]நாங்கணவாய்ப் பட்சிஉங்கள்
பொன்னிலகு பேருரைத்துப் போதவே [15]கூப்பிடுதே!
பேசாம லேநீங்கள் பெருமையா க-வுறங்க
ஆசார மோசொல்வீர்? [16]அய்யோஅய்யோ உங்களுக்கு
நாங்கள்தான் [17]குத்தம் நடத்தினபே ராலுலும்
நீங்கள் வளர்த்த நிகரில்லாப் பொற்பறவை
என்னகுறை செய்ததுகாண்? ஏந்திழையீர், சொல்லு'மென்று
அன்னையர்கள் சொல்லி அழுதேங்கும் போதிலய்யோ!
உயத்தியன் ஆனதொரு உற்ற பிராமணன்றன்
கயல்(க்)கண்சுவா தத்தையுட கமல முகம்பார்த்து

---

1. நகைக்கும்போது தோன்றிப்பின்; மின் போல் மறைதல்; விடாநகை யன்று ஆதலின் அருமை
2. காதனி-பழைய ஓலை போலப் போன் னால் செய்தது
3. நீண்ட; தொன்னாக் காதிருந்த காலம்
4. மாற்று
5. ஒளியத்தீற் போன்ற
6. இளக்கமாய்
7. நடத்தை
8. [ரி]
9. கை
10. இவை என்பதனை ஒன்றாகக்கொண்டு இது என்கிறார்
11. வளர்த்த; வளர்க்கப்பட்டு
12. வைத்த
13. வாடுகிறது ஐயோ!
14. நாகணவாய்; மெலிமிகல்
15. கூப்பிடுகிறதே
16. "ஐயையோ" ஐயோ அய்யோ என ஒதப் பெறும்
17. குற்றம்

விருத்தம்(3)

'அன்னமே தேனே அழகே! யென் கண்மணியே!
முன்னம்யான் செய்த தவத்தின் முழுப்பயனே!
சொ[ர்]ன்னமே! தோளா மணியே[1]! யுனையிழந்து
இன்னமே தெண்ணி யிருந்தே னிருந்தேனே.

நடை

அன்னமே! பூந்தேனே! அமுதே! யென் கண்மணியே!
முன்னம்நான் செய்த முழுப்பயனு லேயீன்ற
தங்கமே! கண்மணியே! [2]தமனியமே! யென்மகளே!
இங்கே உனையிழந்து இருப்பேனே! நான்பாவி!
கோதில்லாக் குச்சமுனி, [3]கொம்பனையே [4]நேத்துவந்து
நீதில்லா வச்சனென்னுஞ் செயமிருக் சிங்கனுக்கு
கலியாணம் பண்ணவென்று கருத்தான என்னிடத்தில்
வலியான குச்சன்ஐயா வந்துஎன்னைக் கேட்டானே!
சம்மதமாய் நான்பாவி 'தருவேன்.' எனவுரைத்தேன்
அம்முனிவ னும்போனன். 'அமைப்புஇப் படியாச்சே[5]
[6]இன்னிஅந்தக் குச்சனவன் என்னைவந்து கேட்டாலே,
அன்னமே! என் ஞ[7]சொல்வேன், அய்யோ! தவக்குறையோ?'
என்று உயத்தியனர் இப்படியே சொல்லிமெத்த
[8]பொன்றுமக ளைப்பார்த்து புலம்புகின்ற நேரமதில்[9]
மவுனம் எனக்காட்டில் வாசமா கத்திரியும்
தவமிருக சிங்கன் தனியே வரும்போது,
[10]சூண்டருறும் பூங்கூந்தல் தோகைமயில் போலவேதான்
மாண்டபெண் களையெடுத்து மடிமேல் மிக்[11]சாத்தி

---

1. துளைபடாத மணி; கல்லி.
2. பொன்
3. கொடி போன்றவளே
4. நேற்று
5. ஆயிற்றே
6. இன்று என்பதன் மரூஉ இன் என்ப தன் மரூஉவும் ஆம்.
7. என்ன; அ நீண்டது.
8. அழிந்து பொலிவு குன்றி இறப்பில் அரிகுறிகள் பெருகும்
9. வாக்யம் நீள்கிறது
10. சூழ்ந்த
11. சாத்திக்கொண்டு; இடையில் 'i' ஒலியாமை

தந்தைதாய் தான்புலம்பத் தமர்கூடி நின்றழுக[1]
சுந்தரஞ்சேர் மாதுசுவாதத்தை யையின்ற
205. வல்லவனு னமறையோன் மறையோது குச்சமுனி
நல்லதொரு பெண்பேசி நட்புடனே போனதுவும்
வாயால் மிகப்புலம்பி, 'மகளேம களே'யென்று
சேயார் மலர்க்காட்டில் தேம்பியழு குங்குரலே
காதார வேகேட்டுக் கானகத்தில் நின்றுநின்று
210. கோதாக வேபுலம்புங் [2]கும்பருகே சென்றுனே.
சென்றுன் மிருகசிங்கன்; செத்தபெண்க ளோக்கிடத்தி
ஒன்றுடே யொன்றுகட்டி, உற்றதொரு தந்தையர்கள்
கூடிப் புலம்புவதைக் கொடிய தவமுனிவன்
நாடியே மெள்ள நற்பாய் யுரைத்திடுவான் :—
215. 'மாண்டபெண் களுப்பிழைப்பரர் வருந்தியழு க-நீங்கள்
வேண்டாம் ஒரு[3]வயணம் [4]விளம்புரேன். நீர்கேள்மோ?
அன்பான பெண்களுடல் அழிந்துமிகப் போகாமல்
பொன்போலத் தானெடுத்துப் போயுங்கள் வீடுதனில்
வாட்டமில் லாமலேதான் வரிசையெண்ணீப் [5]பத்தல்தனில்'
220. போட்டுவைப் பீ'ரெனவே போனுன். மிருகசிங்கன்
சொன்ன படியேதான் சுத்தமுள்ள மாமறையோன்
வன்ன முடனேதான் மாண்டபெண்க ளை-யெடுத்து
[6]கூடழிந்து போகாமல் கோல[7]யெண்ணீத் தோணிதன்னில்
சூடுமலர் மைக்கூந்தல் தோகையரைப் போட்டுவைத்தார்.
225. பேசா மவுனியெனும் பெரிய மிருகசிங்கன்
[8]காசாரும் வன்னமுலைக் கன்னியரைத் தானெழுப்ப
சாவேரி யி-விறங்கிக் கழுத்தளவு [9]தண்ணில்நின்று
சாவோ [10][ருய்வோ[11]ரால்] சாட்சியென வேயிருக்கும்

---

1. 'கு' வரல்
2. கூட்டம் (தெலுங்கு)
3. வழி
4. விளம்புகிறேன் என்றதன் மரூஉ
5. தொட்டி
6. உடம்பு
7. 'ஏ' என்பதன் உச்சரிப்பு 'ய்' உடம் படு மெய்யுமாம்
8. இத்தின மாயவனிந்த
9. தன்னீரில்-உச்சரிப்பு
10. சந்த வேற்றுமைக்காக இங்கு விளைப்பம் வந்தாலும். 'சாவோ ருய்வோ ரார்க்கும்' என்று இருக்கலாம்
11. [ரு]

சூரி யனைநோக்கித் தூயமந் திரமோதி
230. [1]வீரியமா கத்தவசில் மெய்ப்பாக நின்ருனே.
அப்பொழுது சூரியனை[2] அழகு மிருகசிங்கன்–
செப்பமுள்ள மாதவசு தி[ய்]ப்போல் மிகத்தாவ
'[3]எம்மால் மடந்தையர்க்கு [4]ஏ துபிழை? காட்டாதீன
தம்மா லவர்மடியத் தவமிருக சிங்கனம்மை
235. வேண்டித் தவசிருக்க விதியோ?' வெனக்கதிரோன்
நீண்டவிழிப் பெண்கள்தனை நெடியவனப் பாதைதனில்
தானே பயங்காட்டி [5]சற்பினையாய்க் கொன்றுவிட்ட
ஆனை தனக்கு அரியதண்ணீர்த் தாகமதை
சிக்கெனவே யுண்டுபண்ணி [6]சிவமுனிவன் மாதவசு-
240. நிற்கும் இடந்தனக்கே நிமிஷத்தில் ஏவிவிட்டான்[7].
ஆனையது தாகமதாய் அதிவேக மாய்நடந்து
மோனமென வேதவத்தில் முற்றிநிற்கு மாமுனிவன்
தன்பால் வரவுந் தவத்தில்நிற்கு மாமுனிவன்
[8][அன்பான] காட்டாதீன [9]அதிர நடந்துவர
245. கண்டுங்கா ணுதவர்போல கடிய மவுனமாக
வண்டுலவும் பூந்தாரோன் மாதவசில் நின்ருனே.
கானகம் வாழ்யானை காவேரி யி-லிறங்கி
மோன மெனநிற்கும் முனியைநெடுங் கையாலே
தூக்கி எடுத்துத் தூயபெரு மத்தகத்தில்
250. [10]பாக்கியம் போலே பரிவாக வைத்ததுவே.
தந்தி எடுத்துத் தலைமேலே வைத்த[11]தினுல்
விந்தையுள்ள மாதவசில் மிக்க மிருகசிங்கன்
அன்பு பெருகி அருள்செய்ய வேதினைந்து

---

1. அனைத்தையும் பொறுத்து அகப் பகை யோடு பொரும் வீரம்; உறுதி
2. சூரியனை தவசு நீப்போல் தாவ
3. [யே]
4. [யே]-எ, ஏ என்பன ய கரம் முதல் பெற்று ஒலித்து வருதலின் அப்ப டியே அச்சிடப்பெறும்
5. சர்ப்பனை-வஞ்சம்
6. மிருக சிங்கன்
7. சூரியன் விட்டான்
8. முனிவனது அன்போ
9. நடுங்க
10. செல்வம்; விதி என்றுமாம்
11. 'த' 'தி' என்றே வருதலினுல் அவ்வாறே அச்சிடப்படுகிறது

[1]பொன்போல மாகஸ்நாணம் புனலாடு மாபலனில்
நன்னயம தாகவெட்டு நாழிகையின் றன்பலனே
வன்ன மதகரிக்கு வாகாய்க் கொடுத்தோ'மென்று
கையாள் புனலைக் [3]கனிவாக வேயேந்தி
மெய்யானே மத்தகத்தில் விட்டுமவன் கையாலே
தடவினுன் மத்தகத்தை ; தடவும்போ தானேயது
கடல்போ [4]லபையமிட்டுக் கையை மிகச்சுழற்றி
[5]கோடுகுத்திச் சீறிக் கொடுமையெனப் [6]பூமியிலே
[7]சாடி விழுந்தானே தன்னுருவந் தான்மாறி
தேவர் வடிவெனவே தேவர்மட வார்குழ
பூவுடைய மன்மதன்போல் புனிதமென நின்றானே[8].
நின்றதொரு தேவனுந்தான் நெடியதவத் திற்மிக்க
[9]நன்றி செறியும் நல்[10]மிருக சிங்கனையும்
கண்ணுலே நோக்கி[11] கைதொழுது 'மாதவத்தின்[12]-
அண்ணலே! யென்னை யருள்கொண்ட மாதவரே!
மெய்யனே எந்தன் [13]விவரமே சொல்லுகிறேன்
துய்யனே! கேளு'மென்று சொல்லுவான் மாமுனிக்கு:—
[14]கோதில்லாச் செல்வங் கொழுந்தோடி யேபடர
நீதி தழையும் நிடதநாட் டி-லடியேன்
[15]குத்தமில லாத குலவணிகர் [16]வங்கிசத்தில்
[17]சித்திர மான சிறந்த விசு வ[18]-குத்தன்

---

1. 'பொன்போ' என்பது பெருவழக்காக வருகிறது
2. "கொடுத்தோம் என்று" என ஒலிக்கும்
3. அன்பு; நெஞ்சு கனிதல்; இரக்கம்
4. அபயம்; "அ, ஐ ஒக்கும் சஞ்ய முன்" அ, ஐ; அபயமிட்டு-அடைக்கலம் தரும்படி "அபயம்" என்ற ஒலி எழுப்பி
5. தந்தம்
6. மரணவஸ்தை இப்படி எல்லாம் தோன்றியது
7. மோதி
8. ஒரே வாக்யமாக நீட்டி வந்தமையால் நின்ருனே என்பதற்கு ஆனே என்பதே எழுவாயாக முடிந்தது; மாறித் தோன்றிய புதுமை சொற்றொடரிலும் புகுந்துள்ளது. தேவன் என அடுத்து வருவதே உண்மையில் எழுவாயாய் இருந்தீருத்தல் வேண்டும்; பேச்சு நடை இது
9. நன்மை மிக்க
10. 'ல்' ன் என மாறவில்லே. ல் உயிர்ப் பில்லா ஒலியாக வரும்போலும்
11. சீரோடி குறைந்து வரும் இடங்களில் விளம்பம் வரும் எனக்கொண்டு ஆராய்வது சுவையுடையதாம்
12. அடியின் முடிவில் பொருளற்று முடியாமல் அடுத்தவரியில் தொடர்ந்தோடுவது ஒரு நயமாம்
13. வரலாற்றுக் குறிப்பு
14. கோதில்லா-கொழுந்து-தழை என்ற குறிப்பில் தோன்றும் கருத்தோவியம் காண்க. அறமும் செல்வமும் கொண்ட பிரியாத தொடர்பு
15 குற்றம் உச்சரிப்பு
16. வம்சம் தமிழில் வந்த முறை காண்க. வங்கசம் என்ற தெலுங்கு வழக்கோ?
17. அழகான ஒவியத்தை உவமை காட்டு வது வழக்கு
18. 'குப்தன்' குத்தன் என வரும். வணிகர் பட்டப்பெயர்

என்னுடைய தந்தை; என்பேர் தருமகுத்தன்;
கன்னயம தாக நான்வாழும் நாளையிலே
வேள்வி பலசெய்தேன்; வேதம் பலவோதி
தாழ்வில்லா நன்னெறிசேர் சைவப் பிராமணர்க்கு
தானங்கள் தருமம் [1]தாட்சியின்றி யேகொடுத்தேன்.

[2]ஆன பசுக்கள்[3]தனை [4]யாதரித்தேன்; வேதியர்க்கு
பூதானங் கோதானம் புகழ்கன்னி காதானம்
[5]மீதான மாதானம் [6]மெத்தவே பண்ணிவைத்தேன்[7]
எங்களு[8]டவங்கிஷந்தான் இனிமை யுடன்தழைய
[9]பொங்கமுடன் மாகோடி பொருள்தனையுந் தேடிவைத்தேன்

[10]மலைவாழ் திரவியமும் மற்ற திரவியமும்
கலையார் பெருந்தவத்தாய்! [11]கனமாக வேதேடி
[12]நன்னயம தாகவேதான் [13]னன்தேடி வாழ்நாளில்
பொன்னிலகு மைந்தனையும் புகழாக ஈன்றேன் [14]நான்;
மைந்தன் றனையீன்று வரிசையுடன் வாழ்காலம்

விந்தையுட னேதேடி மிக்க பொருளையெல்லாம்
[15]பேர்ப்பாதி யாகப் பெருமையுட னே[16]பகுந்து
சீர்மேவு பாலனுக்குச் [17]செம்பாதி யுங்கொடுத்து
என்பாதி யாக இருக்குந் திரவியத்தை
பொன்போல வேதம் புகலும்பி ராமணருக்கும்

கொடுத்தேன் அழகாகக் கோவில் திருப்பணி[தி]
எடுத்தேன்; சிவாலயங்க [18]ளிம்பமெனக் கட்டிவைத்தேன்
தண்ணீர் குளங்கிணறு தடாகம் படித்துறைகள்

---

1. 'தாழ்ச்சி' தாட்சி என்றே வருவதால் அவ்வாறே பதிப்பிக்கப் பெறுகிறது.
2. "பசுக்களானவற்றை" என்ற பொருளில் "ஆன பசுக்கள்" வருகிறது போலும் உரியதான; எதிர் ஆன என்றும் ஆம்; 'அந்த' என்ற பொருளும் ஆன என் பதற்கு உண்டு
3. "தான்" தம் தன் முதலியன வருவது பெருவழக்காகக் காண்கிறோம்
4. பேணினேன்; உபசரித்தேன்; காத்தேன்
5. மீது (உயர்ந்தது) ஆன மா (பெரிய) தானம்;
6. மிகவே; தேவர் காலத்திலிருந்து வரும் உலக வழக்கு
7. அந் நாளைய தானங்களைக் காண்க
8. உடை என்பது உட என்றே வருதலின் அவ்வாறே பதிக்கப்பெறுகிறது
9. மிகுதி; ஒழுங்கு; போலிவு; மகிழ்ச்சி
10. மலைபடு பொருள்
11. மிகுதி
12. இவ்ய சொல்லும் செயலுமாக; பெரு வழக்காக இந்தொடர் வருகிறது.
13. நான் ஞன் என்றிருக்க முன் 'ன்' கெட வேண்டும்
14. நன மாருட்டமாகலாம்
15. சரிபாதி சம்பாதி என்ற பழைய வழக் குப் பின்னுளில் பேர்ப்பாதி என்றே வழங்கி வருகிறது
16. பகிர்ந்து என்பதன் உச்சரிப்பு
17. ஒ 15
18. இன்பம் வல்லொற்றின்(ப) முன் மேல் லொற்று(ன்) முன்னதற்கினமாய் (ம்) த்திரிவது காண்க

வண்ணமெனக் கட்டிவைத்தேன்; மடம்[1]பலது
கட்டிவைத்தேன்[2](;)
[3]சாலையொடு [4]சததிரங்கள் [5]தழைக்குந்தண்ணீர் [6]பந்தலொடு
300. ஞாலமெல்லாந் தான்மகிழ நற்புண்ணி யங்கள் செய்தேன் ;
செப்பமுள்ள வாழைபலா செய்யசெழு மாந்தோப்பும்[7]
முப்பழங்க ளும்பழுக்க [8]மூண்டுபண்ணி வைத்தேன், நான்;
பாங்கான [9]ஈசுரற்குப் பரிவாக அர்ச்சனைக்குப்
பூங்கா வனம்பலது புண்ணியனே யுண்டுபண்ணி
305. வைத்ததே யல்லாமல் மனதறிய நான்பாவம்—
கர்த்தனே !—செய்யவில்லை, [10]கடவுளே! கீர்கேளும் !
அடியேன்நான் புண்ணியங்கள் அன்புடனே செய்திருந்தும்
கொடுமையுடன் பட்டதுன்பங் கூறமுடி யாது. ஐயா !
நான்பட்ட துன்பமதை [11]நல்லோர்!கேள்! மூவரென்று
310. தான்சொல்லு மூர்த்திகளால் தள்ளரிது; சொல்லரிது ;
ஆனாலு [12]மூழிவினை [13]ஆராலுந் தள்ளுவரோ ?
ஏனை எனதுவினை என்னையே சூழ்ந்துதய்யோ ?
விரித்த சடையுடனே மேலெல்லாம் வெண்ணீறு
தரித்துவெகு ஞானியைப்போல் சங்கக் குழைபூண்டு
315. [14]மாத்திரைக்கோ லு-மெடுத்தும் மாபெரிய சித்தனைப்போல்
[15]நேத்தியுடன் வந்தா(ல்) நிசமுனிவன் என்றடியேன்
கண்டே னெதிர்நடந்தேன் கையார வேதொழுது
தொண்டான ஊழியங்கள் சுத்தமுடன் நானடியேன்
செய்துவந்தே னன்பாக : [16]தீராட்டக் காரனவன்
320. கை(ய்)யசக்கா கத்தொழிலைக் காட்டினன், சண்டாளன்.
அத்தொழிலைக் கண்டு அடியே னிசமெனவே

---

1. பலது பல என்றே வருதலின் அவ்வாறே அச்சடிக்கப்பெறுகிறது
2. அக்காலப் பொது நீலையங்களைக்காண்க
3. இலவச உணவுண்டு கல்வி கற்கும் பல கலைக் கழகம்-சாலைபோகம், காந்த ஸுர்ச்சாலே முதலிய வழக்குகளைக் காண்க.
4. அன்ன சத்திரம்
5. [தீனை] 'தனைக்கும்' என்றும் ஆகலாம் வருவோரைத் தன்னிடத்தே தங்கி விடப்பினைக்கும்
6. வலி மிகவில்லை
7. வாழை, பலா, மா இவற்றின் தோப்பு என ஒன்றாகும்; இடையில் அடைச் சொற்கள் வந்து இவ்வாறு ஒன்றாதல் காண்க
8. வு என உடம்படு மெய்பெற்று உரை வேண்டியது "ம்" பெற்று வந்துளது
9 ஈசுவரன் எனப் பிற இடங்களில் வரும்
10. முனிவரே!
11 நல்லீர் என்பது நல்லோர் என வந்துளது நல்லவரே என்றும்; ய் ?
12. ஊழ்வினை இவ்வாறே வந்துளது; ஊழி என்ற இந்த உலகவழக்கு கலித் தொகையிலும் (130) உண்டு
13. ஆரானலும் என்பது இவ்வாறு வந்துளது
14. சித்தர் கையில் வைத்திருக்கும் மந்திரக் கோல்; தண்டமுமாம்
15. நேத்திரகரமின்றி வருகிறது; உச்சரிப்பு
16. "அடியோடு முடித்து விடுவோன்" எனலாம்; திருட்டாட்டக்காரன் என்றுமாம்

உற்ற திரவியத்தை ஒருமிக்க வேகொடுத்தேன்.
என்னுடைய கைப்பொருளே எல்லா மவன்வாங்கி
[1]நன்னய மாக ரசவாதஞ் செய்வதுபோல்
325. வஞ்சகமா யென்னை மயக்கி யவன்போனான்,
தஞ்சமின்றி யன்றுகெட்டேன். தளர்ந்தேன் வறுமையினால்.
[2]செல்ல மனையாள் [3]திருக்கழுத்துத் தாலிமுதல்
எல்லா மிழந்தேன்; இதுயேது சொல்வேனான்?
[4]உடுத்த துணியுமுண்டோ உண்பதற்குச் சோறுமுண்டோ?
330. கெடுத்துவிட்டான்! பாவி! [5]ஓலேசம் பெரிதானேன்.
வன்ன வுடல்மெலிந்து வயதுபோய் மூப்பானேன்!
என்னுடைய மைந்த[6]னவ னினிய பொருளையெல்லாம்
கண்ணில் மிகமயக்குங் [7]கன்னியர்க ளாசையினால்
உண்ணுமல் வாடி யுகந்ததொரு வேசையர்க்கு
335. கொடுத்து மவனிருந்த [8]குடியிழந்து தான்மெலிந்து
அடுத்தவூ ருக்குமய்யோ! அவன்போனு னுத்தமனே!
இப்படியே நான்மெலிந்து [9]இடர்கின்ற காலமதில்
செப்பமுடன் மாகஸ்நானஞ் சென்றுட வேகாலம்,
தைமாதம், வந்ததினல் தமியேன் மனமகிழ்ந்து
340. [10]மொய்புனலில் சென்று [11]முத்தான மாகஸ்நானம்
தானுட [12]வேணுமென்று தண்ணீர்த் துறைபுகுந்து
நானுடி னேன்காண்! நல்லபத்து நாள்வரைக்கும்.
[13]மோகமுட னப்புனலில் முழுகுகின்ற போது[14]மடியேன்
ஆகந் தளர்ந்து அரைக்கிழவன் ஆனதினல்
345. மூப்பாலுந் சோறு [15]முண்ணு மெலிவாலும்
காப்[16]பான வெம்பிணிநோய் கனத்த படியாலும்

---

1. த-ர மோனை
2. 'செல்வம்' செல்லம் என வழக்கில் வருகிறது
3. 'திருக்கழுத்துத்தாலி' என்றவழக்கு
4. வழக்கு
5. துயரம்
6. 'மைந்தனவன்' என அவன் விரிந்து வருதல் காண்க
7. பெண் என்ற பொருளில் வந்துளது
8. குடியிருப்பும் இழந்து
9. 'இடர்' என்பதிலிருந்து வினைபடைக் கப்பட்டது; இடர்ப்படுகின்ற என்று பொருள் 'மெலிந்து' என்றதால் 'இடறுகின்ற' என்றுமாம்
10. மக்கள் நெருங்கும்; நீர் பெருகும்; பெருமையுடைய
11. பொன்னை என்பது போலக் கொள்க; அழகு; விருப்பம் என்றும் ஆம்
12. வேண்டும் என்பதன் மரூஉ பெரு வழக்காக வருகிறது
13. மயக்கம் என்ற பொருள் இல்லை; ஆசை
14. போதடியேன் என்றிருக்கலாம்
15. மூ மு மோனை; சோறும் உண்ணு என்று பிரியும்; இப்படி ம மோனை கொள்வ தனை இந்நூலில் காண்கிறோம்
16. சிறைப்படுத்துவது போன்ற; காய்ப்பு என்றும் இருக்கலாம்; வெறுப்பு; நீண்டகாலமாய் உரமேறிய என்று பொருளாம்

விடியுமுன் மாகஸ்நானம் விரும்பி[1]நா னுடுதற்கு
முடியாம லய்யா ! [2]நான் முற்றுமே விட்டுவிட்டேன்
வண்ணமுடன் முன்னனில் மாதவரே ! நானடியேன்
350. புண்ணியங்கள் செய்து புகழ்மீறு மாகஸ்நானம்
செய்த பலனிருக்க, தீயான வெம்பசியால்
[3]அய்யோ ! மெலிந்து [4]அரைமூப்பி னுல்வாடி
[5]என்னுடையோர் வீட்டி லேகி யடியேனும்
அன்ன மெடுத்துண்டு அல்லலுட னேயிருந்தேன்.
355. இப்படியே பிச்சை யெடுத்துண்ணும் நாளையிலே
செப்ப முடனொருநாள் சென்று ஒரு[6]வளவில்
கொண்டே னமுது : கொட்டினர் சோறு[7]ரொம்ப ;
உண்டேன் பசியார உற்ற [8]விலாப்பொருமை.
[9]மட்டுமிஞ்சிச் சோறு[10]வயிறு[11]டைக்க வுண்டதினல்
360. [11]திட்டு முட்டாகி [12]திக்காடிக் கொண்டுமாண்டேன்.
பத்துநாள் மாகஸ்நானம் பாங்குடன் ஆடிப்பலன்
[13]இத்திர மாகவளர் தேவலோ கத்தனிலே
பொற்புடைய மங்கையர்கள் [14]போத மிகச்சூழ
கற்பகோ டிக்காலம் கர்த்தனே ! அங்கிருந்தேன்.
365. [15]புகழ்மீறு மாகஸ்நானம் புனலாடி நானடியேன்
பகல்வேளை நித்திரைதான் பரிவாகச் செய்தகுறை
ஆனை யெனப்பிறந்தேன். அய்யரே ! உன்னருளால்
சேனை [16]மகபதிவாழ் தெய்வ[17]லோ கத்தில்வளர்

---

1. [னு]
2. ஷ 1
3. 'அய்யோ' 'கான்' முதலிய குறிப்புச் சொற்கள் இடைஇடையே வந்து உணர்ச்சியைப் புலப்படுத்துதல் காண்க
4. தேயும்; அரைப்பது போல வருவதாம் மூப்பு; அருமூப்பு என்றுமாம், "அரை நீர்" என்ற வழக்குப்போல
5. என்னுடை(ய) ஓர் வீடு ; என் சொந்தக் காரர் வீடுகளில் என்றுமாம்
6. வளவில் = வீட்டுப்புறத்தில்; அ. ஐ
7. நிரம்ப என்பதன் மரூஉ பெருவழக்கா விட்டது
8. விலாப்புடைக்க
9. அளவுக்கு மேலாக
10. வயிறு; நு ஒலியாமை காண்க
11. மூச்சு விடமுடியாமல்-திக்கு முக்கு எம் பதும் உண்டு
12. வாய் குழறி
13. சித்திரமாக என்பது பேச்சு வழக்காக வருகிறது
14. மிக
15. புகழ்மீறு புகழ்மிக்க; இந்த வழக்கும் காண்க
16. இந்திரன்
17. லோ மொழி முதல்

தேவர் வடிவானேன் தேவலோ கந்தனக்கு
370. [1]ஓவியமாய்ப் [2]போறே னுத்தமரே ? யென்றுசொல்லி
போயினு னப்போது புகழ்[3]மிருக சிங்கனுந்தான்
மாய மெனக்கிணற்றில் மாண்டபெண்கள் தான்பிழைக்க
தென்றிசையை நோக்கிச் செய்ய[4]நம னேநினைந்து
வென்றியுள்ள மாதவனில் வீற்றிருந்தான் மாயோனி.

ஆருமத்தியாயம் முற்றும்.

---

1. 'ஓவியமாய்' சித்திரமாய் என்பதுபோல் ய் பெருவழக்கு
2. 'போகிறேன்' என்பதன் மரூஉ
3. [ரு]-ர், p.
4. எமன்

ஏழாம் அத்தியாயம்

சுவாதத்தை உயிர்பெற்ற கதை

விருத்தம்(1)

தீதில் நமனே! புகழ்தரும தேவே! மிருத்தே! அந்தகனே!
[1]ஆதி தரும் வை வச்சுதனே! அழியாக் காலன் ஆனவனே!
[2]பூதம் ஒறுக்கும் புராதனனே! பொதுவாம் பரனே [3]தோத்திரனே!
சோதி [4]நீல னென்பவனே! [5]பரமேட் டிப்பேர் தொல்லோனே!

நடை

5. [6]குத்தமில்லா [7]திமனே கூறுதன்ம தேவதையே!
[8]வெத்தி செறி[9]மிருத்தே! விளங்குபுகழ் அந்தகனே
மெச்சு புராதனமாய் விளங்குகின்ற [10]வச்சுதனே!
[11]அச்சழியாக் [12]காலன் ஆனவனே! எப்போதும்
துய்யபஞ்ச பூதங்களோத் [13]துடினமெனத் தண்டனைதான்
10. செய்யும் புராதனனே! சிவனுக் கிணையானோய்!
தோத்திரனே! நீலச் சோதி நிறத்தோனே!
பார்த்திபனே! யூழி பழையபர மே[14]ட்டியனே!
[15]கண்டனே தென்றிசைவாழ் சமனே! தயாபரனே!
அண்டர்கள் வாழ்த்தும் அகோர [16]மறலியனே!
15. செய்ய வழகு செழிக்குங் கமலமுக
துய்யசித்திர குத்தனுக்குத் [17]துரையாக வாழ்பவனே!
உன்னைத் தொழுதேன் உத்தமனே உன்னடியேன்!

---

1. ஆதி (மனவருத்தம்) தரும்; வைவச்சு தனே-எமலோகத்தின் வழியில்உள்ள வைவச்சுதப் பட்டனத்திற்குத் தலை வனே [ஆதிதருமச்சுதனே] ஆதி தீகமுமச்சுதனே என்றுமாம்; புராதன மாய் விளங்கும் அச்சுதன் எனக் கீழே பொருள் தரப்பட்டுளது
2. உயிர்களைத் தண்டிக்கும் பஞ்ச பூதங் களே எனப் பின்பொருள் கூறப்படு கிறது
3. புகழ்தற்குரியவனே!
4. நீலநிறமானவன்
5. பரம் பொருள் என்ற பேர் உடைய
6. குற்றம்-மருஉ
7. எமன் மருஉ; ய-எ, இ ஆம்
8. வெற்றி-உச்சரிப்பு
9. காவின் கடவுள்
10. அச்சுதன்-அழியாதவன்; வைவச்சுதன் என்பது தலை குறைந்து வந்திருக்க லாம்
11. வன்மை; மூலவடிவம்; உடல்
12. 'ஆனவன்' எனச் சொல்லுருபு விரிதல் பெருவழக்கு
13. 'துடி' என்பதிலிருந்து கடினம் என்பது போல் படைக்கப்பட்ட சொல்; துடிப் பதாக என்று பொருளாம்
14. [ஸ்ட்டி] அன்விகுதி பெறல் காண்க
15. வீரன்; கண்டன் (கொடியோன்) என்ற தன் பொருளும் குறிப்பாக வரும் போலும்
16. 'மறலி' அன் விகுதிபெற்று விளி யேற்று முன்னிலை யாதல் காண்க
17. தலைவன்; திருப்புகழ் காலமுதல் வரும் தெலுங்கு வழக்கு

நன்னயஞ் சேர்கின்ற நல்லவர்க்கு நல்லவனுய்
மாபாத கஞ்செய்யு மாபாவி கள்தனக்கு
20. [1]தீபாவி யாகச் சினந்து அகோரமென
நாடி வருவோய் நமனே யுனதடியேன்
தீதடும் புகழெமனே ! சிறியேன் வணங்குகின்றேன்
மூன்றும் பிறைபோல முளைத்த[2]சிங்கப் பல்லுடனே
நான்றவா யு-மிலங்க நற்கழுத்து மேபருத்து
25. பருத்துக் கறுத்தமயிர் பாங்கான மேனியெல்லாம்
பெருக்கம் என[3] இலங்கப் பெரிய கருங்கடல்போல்
[4]வட்டமிட்ட கண்ணில் வடவாக் கினிபோலே
[கட்டினேன்] தீப்பொறியுங் கரும்புகையு மேபுகைய
ஏறும் புருவமோடு இறுமாந்த பார்வையுமாய்
30. கூறும் வடவைக் கொடியதிப் போல்சிவந்து
காட்டுந் தலைமயிருங் கருமலைபோல்த் தோளுகளும்
வாட்டமில் லாநீல மலைபோல் திரண்டமெய்யும்
[5]எக்கிய பாழ்வயி றும் இருண்ட கரு[6]மேலும்
செச்சச் சிவந்த செழுரத்[7]ந மாலிகையும்
35. சத்த சமுத்திரங்கள் தான்பொங்குங் காலமதில்
[8]பெத்த பெருமுழக்கம் பேசும் பெருங்குர லும்.
நீண்ட பனைமரம்போல் [9]நெடியவளர்ந் தேதிரண்டு
[10]சூண்டளட்டுக் கையுந் துடினவிடி மூச்சும்
இந்தப் பெருங்கோல மெடுத்து [11]அகோரமென
40. [12]விந்தை யுடன்மணிகள் விளங்கும் பரு[13]ங்கழுத்தும்
க[14]ருத்த விளம்பிறைபோல் கனமாய் வளைந்தகொம்பும்[15]

---

1. தீ+பாவி; புனர்ச்சி விதிபெறவில்லை
2. முன் புறம் நீண்ட தூணைப்பல்; இங்குக் கோரப்பல்; வளைந்த தந்தம் போன்ற பல்
3. [யி] உச்சரிப்பு
4. சுழலும் கண்
5. [யெ] எக்கி; உள்ளிழுத்த
6. மேனியும்
7. [த]
8. பெற்ற என்பதன் ஒலி; பெத்தபெரு எனத் தெலுங்கு வழக்கை ஒட்டியும் இருக்கலாம்
9. நெடுக. உ; இ; க், ய; மாநாட்டம்
10. ன, ண; ற, ட; மயக்கம் குன்ற (நீட்டிய இடம் எல்லாம் எதிர்ப்பட்டாரின் கண்முதலிய) தோண்டிய வெட்டி அறுத்த; அல்லது குழ்ந்த என்றதன் விகாரம் ஆகலாம். த-ற மயங்கியதால் ஏற்பட்ட ற-ட மயக்கம்
11. உக்கிரம்
12. கொடு வடிவில் அழகு தரும் மணிகள் விளங்குவது வியப்பு
13. மெலி வரல் காண்க
14. [ரு] ர; ற
15. எமனுக்குக் கொம்பு கூறப்பட்டமை காண்க

[1]நருக்கு கவரடியும் ரத்த மொழுகுகண்ணும்
இடியேறு போலவேதான் [2]இரைந்தபெருங்[3]கனைப்பும்
கொடிய [4]கிடாவான கோலக் கருமகீ[5]மல்

45. [6]கருக்குங் கறுமேகங் கலிந்து படிந்ததுபோல்
இருக்குங் கோரமுள்ள யேந்தலே! தென்திசையோ[7]ய்!
[8]தாரையொடு [9]நாராசந் தழைக்குங் கொடுவேலு
வீரியம தாக விளங்கு மிருப்புலக்கை
தண்டா யுதஞ்சூலம் தழைக்குமங்கு சபாசம்

50. கொண்டபெருங் கையுடைய கொ[9]த்தவி[10]ரே நம்புகிறேன்.
சிவன்மால் பிரமன் தேவர்களும் [11]இந்திரனும்
புவனத்தி லுள்ளோரும் புகழும் பெரியவனே!
உன்னை நமஸ்கரித்தேன்! உன்பாதம் போற்றிசின்றேன்.
வன்னமுள்ள [12]லோக மண்டலமெல் லாமொ[13]றுக்கும்

55. கடிய [14]மிருத்துவுடன் காலனும் அன்புடனே
வடிவுடன்கை கட்டிநிற்க மாபாவ மானபிணி
ஏவல் தொழில்புரியும் மினிதான தொண்டரைப்போல்
ஓவியம தாக உற்றபணி கேட்டுநிற்க
மாரியொடு மாமாரி வாகாய் இருபேரும்

60. சீருடன்கை கட்டிநிற்க தீப்போ லெரி[15]யுகின்ற
[16]எட்டா யுதமு மிலங்குபெருங் கையுடையோய்!
[17]மட்டாரு மார்பா! வணங்கினே னுன்னையுமே.

---

1. இரண்டாக வெட்டியபோன்ற; நருக்கு நருக்கு இரண்டு வடிவம் உண்டு; ர, ற; கவர் அடி = இரண்டாகப் பிளந்த அடி; பேய்களுக்கு இத்தகைய அடி இருப்பதாகக் கூறுவதுண்டு; ந-ர மோனை
2. ஒலிக்கும்; இறந்த காலத்தால் கூறி வருவது தேற்றம் விளக்கப்போலும்
3. கொக்கரிப்பு
4. ருமை (ஆன்); கடா என்ற வடிவமும் உண்டு. கிடா-தென் வழக்குப்போலும்
5. கறுக்கும் கருமேகம்
6. [ன்] அண்மை விளியாகலாம்
7. சக்கரம்
8. அம்பு; ர, ற
9. ற்ற
10. [ரை]
11. செல்வென்னுய் உம்பெறல் காண்க
12. லோ மொழி முதல்
13. [ரு]
14. மெனது ஏவலாளர் வரிசை காண்க
15. எரிகின்ற; பிற இடங்களில் கு எவ்ற சொல்லாக்க உருபாய் (Formative) வருவது இங்கு யு எனவந் துளது.
16. 47-ஆம் வரி முதல் கூறப்பட்டவை.
17. மாலையின் பூவிலுள்ள தேன்

விருத்தம்(2)

நெடிய [1]கோல[ம்] நிணம்பூசுந் தடியை நிமிர வெடுத்[2]தோங்கி
கொடிய தீய பாதகரைக் கொடுபோ தென்முன் [3]எனவுரைப்பீர்
இடியின் முழங்கி[4]க் கொக்கரித்திட் டிருந்தோர் நடுங்க வேகோல
முடைய சமனே! தருமத்தி னுருவே! நின்னைத் தொழுவேனே.

நடை

கொடிய வினைசெய்யுங் கொடும்பாவி கள்தனையே
நெடியதெண் டாயுதத்தை நிமிர [5]வெடுத்தோங்கி
அக்கினிபோல் கண்முழித்து அதட்டியிடி போல்சீறி
[6]வக்கிரப்பல் லைக்கடித்து மண்டுபெருங் கோபமுடன்
'கொடிய நரகமதில் [7]கொடுமையெனத் தள்ளு' மென்று
இடியேறு போல்மொழியும் எமனே! யுனைத்தொழுதேன்.
[8]பாங்கான புண்ணியங்கள் [9]பரிவாகச் செய்தவர்முன்
பூங்கமலம் போலப் பொருந்து முகமிலங்க
கனிவா யிலங்க [10]கல்பமணி மார்பிலங்க
[11]இனிக்கிருபை யோடு [12]மிரக்க முடன்தயவாய்
தூய மதிபோல [13]துலங்கும் நகைதுலங்க
சேய கதிரொளிபோல் சிறந்தா பரணமின்ன
[14]ஜொழுகு வெண்பால்போல் சிறந்த [15]துயி லுந்தரித்து
வீரமுட னேகாலில் வீரகண் டாமணியும்
[16]வடிவாக வேபூண்டு வாகுடைய சந்த்ரவட்டம்[17]

---

1. கோலாம் என்று இருக்கலாம்
2. தன்வினை பிறவினைப் பொருளில்வருவது இந்நூலில் பெருவழக்கு; ஒக்கி எனப் பேச்சு வழக்கில் வருவதில்லை.
3. [இன] உச்சரிப்பு
4. [ப்பக்கரித்திட்] கோக்கரித்திட்டு உரைப்பீர் என மேல் வரியோடு முடியும்; பேச்சு வழக்கு
5. விட; வ, ம; இ, உ; மாநாட்டம்
6. கோணல்
7. கொடுமையாக என்பது கொடுமை என வரும்; கொடுமை என்று கூற
8. தகுதியான நல்ல
9. அன்பாக
10. சடங்கு முறை கூறும் சுற்ப நூலில் கூறும் ருத்ராக்ஷம் முதலிய மணிமாலை.
11. இனிய
12. இரக்கம் தயவு வேறு ஆகக் காண்க. இரக்கம் பிறர் கேட்டு வருந்துதல்; தயவு அதன் பயனுய் உதவ முந்தும் அருளுள்ளம்; அன்பு என்றுமாம்
13. 'துலங்கும்' பேச்சில்போல் அடுத்தடுத்து வருகிறது
14. நிறத்த
15. துகில்-உடை; க, ய;
16. அழகு
17. 'ம்' கெடாமை காண்க

குடைநிழலில் [1]இங்கிதமாய்க் கோலமட வார்சூழ
வேல்போல் விழிமடவார் [2]வெஞ்சா மரம்வீச
[3]மால்சேரும் தங்க வடிவான மேனிமின்ன[4]
அன்பான வெங்கதிரோன் ஆசையுட னேயீன்ற[5]
[6]நன்பா[ய] யுணத்தொழுதேன் நாயகா தஞ்சமய்யா!
[7]தெக்கு புனலோடிச் சிறப்பாய் முடிந்திடத்தில்
செக்கமணி மேடைகளுஞ் செய்யநெடுங் கோபுரமும்
மாடமணி மாளிகையும் வாகுடனே நாளும்வெகு
[8]சோடனையா க-விலங்கும் தூய[9]சயி[10]பின்னியபுரம்
என்று சொல்லும் மாபதிக்கு ஏந்தலென வேவாழ்வோய்[11]
நன்றியுள்ள நல்லினையும் [12]நட்பில்லாத் தீவினையும்
என்னவே சொல்லும் இரண்டு வினை தனையும்
நன்னயம தாக நற்பாய்ப் பகுந்தறிந்து
[13]பாவமொடு மாபலனைப் பகுத்து வழகாக
ஓவிய மாயெழுதும் உற்றசித்திர குப்தன்முதல்
பெரியோர்கள் சூழ்ந்திருக்கப் பெருமையுடன் பீடமதில்
வரிசை யுடன்[14]கொலுவாய் வந்திருக்கு மாமறலி
[15]தன்ம நினைவுடனே தானிருக்கும் புண்ணியரும்
நன்மையுடைய நட்பான மாதவரும்
வரும்போ தெதிர் நடந்து 'வாருங்கள்' என்றுசொல்லி
பரிவான மாட்சியொடு [16]பாங்கா [17]யுபசாரம்
சொல்லி யருகழைத்துச் சுகமான வாசனத்தில்

---

1. இனிமையாக
2. வெண்சாமரம்; சாமுன் ல் ஞ்ஆதல்
3. ஆசை யூட்டும்
4. நல்லோர்க்கு அழகான வடிவோடும் தீயோருக்குக் கொடிய வடிவமாகவும் எமன் தோன்றுவான்
5. விவச்சுதன் என்ற சூரியன் மகன் எமன்
6. நன்பு = நன்மை; நன்பாய் எனப் பிரித்த தால் யகரம் வந்ததுபோலும்
7. தெற்கு; க முன் ற் க் ஆயிற்று; தெக்கு என்பதும் பழைய பிங்கல வழக்கு; தெக்கு நீர் எனத் தேவாரம் வருதலின் நீரைந்த, தீரண்ட என்ற பொருளுமாம். தென் கோடியில் பெரும் புறக்கடலுக்கும் முடிவில் என்று ஆம்
8. சோடினை என்ற வழக்கும் உண்டு. அலங்கரிக்கப்பட்ட அழகு; உருபுச் சொல்
9. எமபுரத்தின் பெயர்
10. [த]
11. [ம்]
12. நற்பில்லா என்றுமாம்
13. தீமையின் பலனும் பாவத்தையும் நன்மையின் பலன் எனும் பெருமை யுடையமா பலனும் புண்ணியத் தையும்
14. தர்பார்; அரச ஓலக்கம்
15. தர்ம; 'ர்' 'ம' முன்; ன் ஆம்
16. ஒத்தபடியாய்
17. உபசாரவார்த்தை; வரவேற்புரை உபசாரம் எனப் படுதல் காண்க

மெல்ல விருத்தி மேன்மையுட னேயுரைக்கும்

105. நல்ல நமனே! நானடியே(ன்) [1]நம்புகின்றேன்
வல்லவனே! அந்தகனே! வரிசையுள்ள நாயகனே!

விருத்தம்(3)

'நடுவா சரண்! நம்பாசரண்! நமனேசரண்! நரகத்
திடுவாய்சரண்! நல்லார்தமை யிமையோருல கிடையே
விடுவாய்சரண்! அமலா! சரண்! வெந்தீவினை யொழியக்
110. சுடுவாய்சரண்'! என்றே முனி புவிவீழ்ந்தடி தொழுதான்[2]

நடை

[3]நடுவான நாயகனே! நமனே மிகச் சரணம்!
கொடிதான பாவிகளைக் கொடுநரகி லே[4]விழுக
இடுவாய்! சரணம்! [5]எம்பெருமா னே! சரணம்'
வடிவான! புண்ணியர்கள் வளர்[6]கயிலை தானடையச்

115. செய்வாய்! சரணம்! தீயான பாவவினை
[7]எய்யாமல் ஓட எனக்கருள் வாயருளே.
சரணஞ் சரண'மெனத் தவஞ்சேர் மிருகசிங்கன்
[8]வரிசையுடன் கைகுவித்து மண்மேல் மிகவிழுந்து
[9]'தெண்ட' மெனப் பணியத் தென்திசைவாழ் மாமறலி

120. கண்டு மனங்களிந்து கடிய தவமுனிமுன்
கருணை வளர்முகமுங் [10]கண்கொள்ளாப் பேரழகும்
வரிசையுள்ள தோளும் மணக்குந் திருமார்பும்
[11]வன்னப் பணிநிமின்ன மாலைமின்ன ரத்னமின்ன
பொன்னின் மகுடமின்னப் பூத்தநகை தான்துலங்க

125. நாலுவகை சேனையொடு நல்[12]விருது தான்முழங்க
[13]மாலுகந்த வெண்குடைக்கீழ் மணிக்கவரி தாலிலங்க
எட்டுத் திசையிலுள்ளோர் இனியகடல் கதிரொளிபோல்

---

1. அடுத்த ந 'ன' எனக் கருதப்பட்டது போலும் ந, ன
2. 3 மாங்கவிச்சீரும் ஒரு புளிமாவுமாக நாற்சீர் வரும் சந்தக்கலி விருத்தம்; 17 எழுத்து;
3. நடுவன்என்ற எமன்பெயரின் பொருள்
4. வீழ-பகுதியின்பின் கு வரல் காண்க
5. நம்பா என்பதன் பொருள்
6. இமையோர் உலகு என்பதன் பொருள்; இமையோர் = அழியா நிலைமை பெற்றோர் எனலாம்
7. அடையாமல்-எய்தாமல்
8. முறை
9. "அடியேன் வணங்குகிறேன்" என
10. இது பெருவழக்கு
11. சந்தம் நோக்குக
12. பெருமையைக்கூறி ஊதும் சின்னம்; விருதுகாளம்; விருது கூறலும் பெறலாம்
13. பெருமைக்குப் பொருந்திய

[1]சட்டமெனச் சூழ்ந்துவரத் தழைக்குங் கதிரொளிபோல்
மெய்குளிர வேபணியும் மி[2]ருகசிங்கன் தன்னுடைய
130. கைபிடித்துத் தான்தூக்கிக் கனகமார் போடணைத்து
'வாராய் மிருகசிங்கா! வரிசையுடன் எந்தனீ
பூராய மாகவேதான் போற்றிப் பணிந்ததினால்
சந்தோஷம் [3]ஆச்சுதுன்மேல்; தயங்காதே யிப்போது
வந்தோம் உனக்காக; வரங்கேளாய்! நான்தருவேன்!'
135. என்றுநமன் சொல்ல இனிய மிருகசிங்கன்
நன்றி யுடன்பணிந்து நமனுடனே சொல்லிடுவான்:—
'வேண்டும் புகழுடையோர்! வெற்றுங்கிணற்றி லேவிழுந்து
மாண்ட தொருநாலு மடந்தையரை யுமெழுப்பி
தந்திடுவீ' ரென்று தவமுனிவ னுங்கூற
140. அந்தகனும் அப்போது ஆகமிக வேமகிழ்ந்து
'மாதவனே நீவேண்டும் வரந்தருவோம்' என்றுசொல்லி
தூதர் தனைப்பார்த்துச் சொல்லுவான் 'நம்முடைய
பரிவான பட்டணத்தில் பாங்காய் இலங்குகின்ற
[4]திருமாது மேவியபூஞ் [5]சிங்காரத் தோப்புதனில்
145. பொன்வாழை யினிழலில் பொங்கமுட னேயிருந்து
மின்போல் விளையாடும் மெல்லியர்கள் நால்வரையும்
கொண்டுவா ரு'மெனவே கோமான் [6]மிகக்கூற
அண்டிநின்ற தூதர்கள்தான் அப்போதி லேவிரைந்து
வளமாய் வளர்ந்திடுபொன் வாழைகிழ லிலிருந்து
150. விளையாடும் பெண்கள்தனை [7]விந்தையுடன் கூட்டிவந்து
விட்டார் மறலிமுன்பு; விந்தையுடன் மாமறலி
[8]கட்டாணி முத்துநகைக் கன்னியரைத் தான்பார்த்து
'கோதையரே யுங்களுட கூடுதனி லே[9]முழைந்து
வாதை[10]யன்றி யேசுகமாய் வாழு'மென்று யேவிவிட்டான்

---

1. முறை
2. [ரு]
3. ஆயிற்று என்பது பேச்சு வழக்கில் மருஉ ஆம்
4. செல்வமுள்ள
5. இன்பமாகப் பொழுது போக்கும் தோட்டம்; உத்யான வனம்
6. மிக' என்பது மனநிலைமையைச் சுட்டுவதாகப் பேச்சு வழக்கில் வரும்
7. தூதர்க்கு இவர்கள் அழகும் இந்தச் செயலும் ஆச்சரியமாகத் தோன்றினை; மறலிக்கும் முன் நடக்கப் போவது அறிந்து ஆச்சரியமான பொருத்தமாகத் தோன்றின
8. சிறந்த முத்தினை ஆணிமுத்து என்பர்; கெட்டிமுத்து என்றும் கூறுவர்; நன்றாகப் புரையின்றித் திரண்ட ஆணிமுத்தே கட்டாணி முத்து. முத்துப் போன்ற நகை (பல்)
9. நுழைந்து. முழை என்பதிலிருந்து வந்த வினையாம்
10. இன்றி என்ற பொருளில் அன்றி வரல் இந்நூல் வழக்கு

அப்போது பெண்களுந்தான் அன்பா யவர்கூட்டில்
செப்பமுட னேமுழைந்து சிறப்பாக நித்திரைதான்
கொண்டவர்கள் போலக் [1]குலுங்க எழுந்திருந்தார்
கண்டுதந்தை தாய்மாருங் [2]கருத்து மிகமகிழ்ந்து
துன்பந் தனைநீக்கிச் சுகவாரி யில்விழுந்து
இன்பமுள்ள மக்கள்தனை [3]யினிப்பாய் மிகவணைத்து
ஆவல் உடனேதான் அவரவர்கள் வீடுதனில்
பூவையரை யுங்கூட்டிப் புகழுடனே சென்றார்கள்.
மங்கையருந் தான்பிழைத்து வாகுடனே தான்போக
பொங்கமுள்ள அந்தகனும் புகல்வான் முனிவனுக்கு:-
'வாராய்! மிருகசிங்கா! வரிசையுடன் சொல்லுகிறேம்.
சீராகக் கேளு'மென்று செப்புவான் மாமறலி.

விருத்தம்(4)

அன்றி யுங்கே ளபமிரு[க]த் தாலவர்
பொன்[4]றல் செய்யார் பொருந்துஞ் செவ்வாயொடுஞ்
சென்ற[5] பிற்பக்கத்[6] தீரேழ்[த்] தினமதி[7]
லொன்றுங் காலம் புனித முடன்தோய[8].

நடை

செய்ய தவமிருக சிங்கா! வுலகிலுள்ளோர்
வெய்ய [9]அடமிருத்தால் மிகமாண்டு போகாமல்
அன்பாக வேதான் [10]அமரபட்சந் தன்னிலேதான்
பொன்போல் வளரும் புகழான செவ்வாயில்
விந்தை யுடனே விளங்குஞ்சதுர்த் தேசிதன்னில்

---

1. உயிர் வரும் குறியை விளக்கும் உயிர் நீலச்சொல்
2. மனம் என்ற பொருளில் மோனைக்காக வந்துளது
3. இன்பம் என்ற பொருளில் இந்நூலில் வருகிறது
4. [றலஞ்]
5. அமரபக்கம்; பௌர்ணமிக்குப் பின்
6. 14-ம் நாள் சதுர்த்தசி
7. [தினமேற்-றொன்றும்]
8. [முடதோய] அடிக்கு 14 எழுத்து; கலிவிருத்தம்; முதற்சீர் மா; கடைச் சீர் விளம் அல்லது காய்; இரண்டாவதும் மூன்றாவதும் தனிகன் வெண்டளையாய் வர மற்ற இரண்டு சீரும் வரும்
9. காலமல்லாத காலத்தில் சாதல்
10. தேய்பிறை; அபரபட்சம்

சுந்தரமாய் நோன்பு சுகமாகக் கொண்டவர்கள்
அழகான மாமுனியே! அபமிருத்து [1]யில்லையென்று
வளமான நான்மறையும் வாகாகச் [2]சொல்லுதுகாண்!
ஆனதால் இப்படியே அரிதான நோன்'பிருந்தால்
180. ஞானமுனி யே! கேளாய்! நல்லபத வி-யுண்டாம்.
உன்னுடைய வாஞ்சையினுல் உற்ற விரதமிதை
நன்னயமாய்ச் [3]சொன்ன'மென்று நமனுன வ-னுரைத்து
போனுன் அவன்பதிக்கே. புகழ்மிருக சிங்கனுந்தான்
தேனுர்பூங் கானகத்தில் சென்ருன் மவுனமென.
185. ஆனதினுல் இவ்வுலகில் ஆர்தாம் ஒருவருமே
மோனமுடன் இவ்விரத முற்றிநம னை-நினைந்து
தோத்திரங்கள் செய்தவர்க்குச் சொல்லும் அபமிருத்து
[4]நீத்திவிடும் பூரணமாய் நிறைவயது டன்வாழ்வார். 188.

ஏழாம் அத்தியாயம் முற்றுப்.

---

1. 'ய்' உடம்படுமெய்; இல்லார்
2. சொல்கிறது
3. 'சொன்னேம்' உச்சரிப்பு; சொல்லின் இடையில் நெடில் குறுகி ஒலிக்கும்
4. நீத்துவிடும்; விட்டுவிடும்; நீங்கிவிடும்; உ; இ

எனக் கூறிவந்தது மெய் யாதல் காண்க

எட்டாம் அத்தியாயம்

புண்ணிய கதை

விருத்தம்(1)

மனையில் வைகி யினிதிருந்த மங்கை [1]தத்தை மாசில்லா
வினையொ ழுக்க முரு(க்)கமலி விமலி சுரசை நால்வரையுந்
தனையொவ் வாத தாயரொடு தந்தை யோரு[2] முகம்நோக்கிக்
'கனவண் டிரையுங் குழல்மடவீர்! கண்ட புதுமை
[3]கழலுகென்ன.[4]

நடை

5. மாண்டு பிழைத்து மனையில் மிகவிருக்கும்
[5]சூண்ட கரியகுழல் சுவாதத்தை யொடுகமலி
விமலி சுரசையெனும் மெய்[6]நாலு பெண்களுட
கமல முகம்நோக்கிக் கனிவான தந்தையர்கள்
'வண்டுலவு பூங்குழலீர்! வரிசையுடன் நீங்களுந்தான்
10. கண்ட புதுமை கனிவாகச் சொல்லு'மென்று
அன்னை யொடுதந்தை ஆதரவா கக்கேட்க
மின்னுமிடைப் பெண்கள் விளம்புவா ரின்றோர்க்கு.
'தேடரிய மாகஸ்நானம் தீர்த்தமா டினபலத்தால்
நாட[7]றிய மாண்டு நமன்பதியி லேதானும்
15. கதலி வனந்தனிலே கனத்தபொன்வா ழை-நிழலில்
விதமுடனே நாங்கள் விளையாடி யேயிருக்கும்
போதுதா னிந்தப் பூலோகத்தி லேவாழ்வோர்
[8]நீத முடனே நிரப்பவே புண்ணியங்கள்
செய்தோர் [9]வழிபாடுந், தியான வெங்கொடிதாய்
20. [10]அய்யம் இடாத அரும்பாவி [11]நிட்டூரர்

---

1. சுவாதத்தை; தலைக்குறை[சுவாதத்தை]
2. தந்தையர் என்பதில் அர் ஓர் என வரு கிறது
3. கழறு என்பதன் மரூஉ
4. 'மா, மா-காய்' இரட்டித்து வரும் அறு சீர் விருத்தம்
5. சூழ்ந்த
6. மெலி மிகவில்லை
7. [தி]
8. நீதி; நகுதி
9. முறையும்
10. ஐயம்; பிச்சை
11. கொடியர்

தங்கள் வழிபாடும், தாமரைப்பூங் கண்ணுலே
பொங்கமுடன் பார்த்திருந்தோம். புண்ணியரே! நீர்கேள்மோ!
[1]நாலா விதமாக நற்புவியி லேபிறக்கும்
மேலான [2]யாணைகடை விளங்கும் எறும்புமுதல்

25. [3]எண்பத்தி நாலுலட்சம் இனிதாம் பலசீவன்
அன்புடனே வாழ்ந்து அறமடிந்து போனலும்
தாக்கும் பெரும்புகழான் [4]சமனுடு [5]புக்குமல்லால்,
போக்குமில்லே; வேறு புகலுமில்லே ; சொன்னேங்காண்!
இப்படியே சொல்லு மெழிலான சீவ[6]செந்து

30. செப்பமுடன் கூடி சிறப்பாய் கருப்பமுற்று
[7]கூமுட்டை போலக் [8]குறைநாளில் மாண்டாலும்,
தாமிட்ட காலஞ் சரியா யிருந்தாலும்
மாண்டாலும் அய்யோ [9]மணக்கு [10]மிரவிமகன்
நீண்டதொரு செங்கோல் நேசமென வேசெலுத்தும்

35. பட்டணமே அல்லால் பரிவாக [11]வேறுமில்லே.
இட்டமுடன் வாழும் எமனூர் பதிதேடிப்
[12]போவோர்கள் தன்னேப் புகல முடியாது;
நாவாலும் எண்ணரிது; நடக்கின்ற பாதைதனில்
எள்ளளவுஞ் [13]சத்தே யிடமுண்டோ? தானெருங்கி

40. தள்ளும் வெகுபெருக்கந் தானிப் படிநிதந்தான்
[14]வண்ணம் எனநடப்போர் வையகத்தி லேதானும்
பண்ணியபா வந்தனேயும் [15]பாங்குள்ளதன் மந்தனேயும்
உடனடு [16]சத்துருவா யுள்ளேகலந் தேதிகழும்
திடமாகப் பார்த்திருந்து சென்றுசொல்லும் மன[17]சாட்சி.

---

1. முட்டை, விதை, கருப்பை, வேர்வை என்ற (நால் ஆகும் விதமாக)நான்கு வகையாகப் பிறப்பன
2. சிறிதான எறும்பு முதல் பெரிதான யானைவரை
3. எண்பத்து; எண்பதின் என இன் சாரியை வருவதால் இகர ஈறு வந்தது போலும்
4. எமன் நாடு; யமன்-சூமன்-சமன்
5. புக்கும் அல்லால் என உம் வருவது காண்க. புக்காலே அல்லால் என்ற பொருளாம்
6. செ-ச
7. கூழ்முட்டை=கெட்டமுட்டை
8. ஏற்பட்ட நாளுக்கு முந்தி
9. கடவுள் மணம் நாறும்
10. சூரியன் மகனை எமன்
11. போக இடம்வேறு; வேறும் என்ற உம்மை பிரிநிலையல்லது தேற்றப்பொருளில் வரும் ஏ போலாம்; முற்றும்மையும் ஆம்
12. போவோர் எண்ணிக்கை
13. சற்றே; த; ற; சற்றும்கூட
14. சந்தப்பாட்டுப் பலவண்ணமாக வருவது போல் நடப்பவர்
15 நல்ல; துணையான; கூவிளங்காய்;
16. சத்து: உள்பொருளின் உருவாய்; சத்துரு என்றுமாம்
17. வலி மிகவில்லே

விந்தை யுடனே விளங்குகின்ற ஐம்பூதம்
சந்திரனுஞ் சூரியனும் தழலான அக்கினியும்
பரிவாம் பகல்காலம் படர்ந்த யிருள்காலம்
விரிவான மாகாலே விளங்கிய அந்திமாலே
ஆங்கார மானசிந்தை யதுவுடனே பாழ்மனதும்
பாங்காக யிந்தப் பதினலு பேர்களுந்தான்
சாட்சிசொல்ல, நாளுந் தழைக்கும் நமன்[1]கணக்கன்
மாட்சி யுடனே மாபாவம் புண்ணியங்கள்
தன்னைப் பகுத்தெழுதி தப்பாமல் வைத்திடுவான்.
நன்னயம தாக நாள்தோறும் புண்ணியங்கள்
வேண்டவே மெத்த விரும்பிமிகச் செய்தவரும்
மாண்டுபோ னலும் வளமீறும் அந்தகனுர்
பட்டணத்தில் சென்று பரிவாக அப்பால்தான்
திட்டம் உடனே சேர்வார் மறுபதிதான்.
ஏமன் பதிக்கு [2]யேகாமல் லோர்பதிக்கு
[3]பூமலர்வாழ் அன்னையரே! போகப் படாதுகண்டீர்
ஆனதி னலே யகண்டலோ கங்கள்தன்னில்
தானிருந்து வாழ்பவருந் தழைக்குஞ்சீவ சந்துகளும்
இருந்து [4]மடிந்திடுநாள் இறக்கின்ற பல்லுயிர்தான்
திருந்தும் நமன்பதியைத் தேடிவரும் பேர்களிலே[5]
வரிசை யுடனேதான் வருமாக மாசந்தனில்
பரிவாக மாகஸ்நானம் பண்ணித் தருமஞ்செய்வோர்
துன்ப வினையுமின்றிச் சொல்நமனுக் கஞ்சாமல்
இன்பம் உடனேதான் [6]யேகுவார் நல்வழியே
[7]காலாகா லந்தனிலே கமழ்பூம் புனல்மூழ்கி
மேலான [8]யீசுவரனை விரும்பியே பூசைசெய்து
தோத்திரங்கள் பண்ணித் தூயபிரா மணருக்கு
[9]நேர்த்தி யுடனே கிரம்பவே மூப்பழந்தான்

---

1. சித்திரகுப்தன்; போக்கக்கூடாது
2. 'ய்' உடம்படு மெய்
3. தீருமகன்போன்ற தாய்மாரே போகக் கூடாது
4. மடியவேண்டிய காலம்
5. வாக்கியம் நீளுதல் காண்க
6. ஏ என்பதன் உச்சரிப்பு
7. காலை(த்தில்) காலை(ந்தனில்:); முதல் சொல்லின்சற்றுகரம் நீண்டது, அந்த நற்குரிய காலத்தில் என்ற பொருள்
8. 'ய்' உடம்படு மெய்; உச்சரிப்புமாம்: [ப] ப, வ;
9. பிராத்தனை செய்து கொண்டதோடு; நேர்த்தியாக என்றுமாம்

[1]தேட்டம் அடங்கச் சிறப்பாய்க் கொடுத்தவர்கள்,
[2]நாட்டம தாக நடப்பார்கள் நல்வழியே.

75. மாகப் புனலாடும் மகரமா சந்தனிலே
ஆக மகிழ்ந்து அரிய பிராமணர்க்கு
இலந்தைப் பழந்தனையே இனிப்பாய்க் கொடுத்தவர்கள்
மலங்காமல் செல்லும் வாய்த்த பெருவழியில்
[3]இடைகூறு மின்றி எள்ளளவுந் துன்பமின்றி

80. அடைவார் நிமிஷமதில். அய்யமில்லை. இனமுங்கேள்!
ஏழைத் தொழிலா யிருக்கும் பிராமணர்க்கு
வாழைக் கனிதான் மகிழ்ந்து கொடுத்தவர்கள்
சொல்லும் வழியில் சிறப்பாய் மகிட்சியொடு
சொல்லுஞ்சிற் றுண்டியுண்டு [4]சுகியான [5]வர்க்கமுண்டு

85. மெல்ல நடைநடந்து மிகவும் இளைப்பாறி
நல்ல [6]வழிதுலைப்பார்! நமனூர் பதியடைவார்.
கனிவான மாகஸ்நான காலத்தி லே[கருத்தேன்]
இனியான வேதியர்க்கு இன்பமுட னேஅளித்தோர்
சீராரு கின்ற செல்வநமன் தன்பதிக்கே

90. பூராய மாக போவார்கள் நல்வழியே[7].
பேசுமறை வேதியர்க்கும் பெரியோர்கள் தங்களுக்கும்
நேச முடனேதான் நெல்லிக் கனிகொடுத்தோர்
எட்டுத் திசையும் [8]யெரிகதிர்போல் சோதிமின்ன
சட்டமுள்ள தேரேறித் தான்நடப்பார் விந்தையென.

95. ஓதி யுணர்ந்த உற்ற பிராமணர்க்கு
[9]பாத ரட்சை தன்னைப் பரிவாய் அளித்தவர்கள்
வாகுடைய [10]சண்டன் வளரும் பதிதேடி
ஏகும் வழியில் இனியகுதி ரை-யேறி
போவார்கள். வேதம் புகலும்பிரா மணருக்கு

100. [11]மாவார் மழைக்கும் வாட்டுங்கொடு வெயிலுக்கும்

---

1. வாங்கினோர் மேலும் தேட விரும்பாத படி
2. நல்வழியே நாட்டமாக (குறிக்கோளாக; விருப்பமாக)
3. இடையூறு; கஷ்ட
4. இன்பமான
5. வர்க்க அன்னங்கள்
6. வழிப்பயணம் முடிப்பர்; தொலைப்பர்;
7. வழியெல்லாம் பூராயம் (முழுதும்) நல்வழியே ஆக
8. 'எ' என்பதன் உச்சரிப்பு
9. அடியுதை அரணம்; செருப்பு
10. எமன்
11. பெரிதாக நிரம்பும்; இச் சொற்றொடர் பயின்றுவரும்; கூவிளங்காய்ச்சீர்

தாழங் குடைதான் தயவாய்க் கொடுத்தவர்கள்
சூழும் பசுங்[1]கா சூண்ட வழிதனிலே,
தேன்மாரி பெய்யுஞ் செய்ய செழுமலரால்
தான்மேயும் பந்தலின்கீழ் தானே மிக[2]யிருந்து

105. பைய யிளைப்பாறிப் பாங்கா யெழுந்திருந்து
மெய்நோகா மல்நடந்து விரைவார், நமன்பதிக்கே.
வாடையால் நொந்து வருந்துகின்ற பேர்களுக்கு
ஆடைதான் வாங்கி அன்பாய்க் கொடுத்தவர்கள்
பொன்னுடை [3]போற்றிப் போம்வழியில் துன்பமின்றி

110. [4]நன்னர் நடைநடந்து நல்வழியே செல்வார்கள்.
வேதப் பிராமணர்க்கும் [5]விருத்தப் பிராமணர்[களு]க்கும்
[6]போதமுள்ள பல்லாக்கும் பூண்சேர் தடி[7]கொடுத்தோர்
வன்னமுடன் பாதைவழி வாகாய் [8]ரதமேறி
[9]பொன்னின் அழகுடனே போவார் நமன்பதிக்கே.

115. நேசம் உடனே நெடியமறை வேதியர்க்கு
ஆசனந் தான்வாங்கி அன்பாய்க் கொடுத்தவர்கள்
இனியநறும் பூங்காவில் இலங்குகின்ற பாதைவழி
[10]கனிமை யுடனிருந்து [11]கடியுதல்க] தானுறி
இருந்தும் எழுந்திருந்து இட்டமுட னேநடந்து

120. திருந்து நமன்பதிக்கே செல்வார் [12]சணப்பொழுதில்.
பரம சிவன்றனக்குப் பரிவாக அருச்சனைக்கு
வரிசையுடன் நந்தவனம் வைக்கின்ற புண்ணியர்தான்
தேடும் புகழினிய தென்றிசைவாழ் எமன்பதி
நாடுமலர்த் தேரேறி நன்றியுடன் சென்றிடுவார்.

125. மாமரமோ டே[13]பலது மரம்வைத்த புண்ணியர்கள்
பூமலருஞ் சோலைவழி பொன்போல் இலங்குகின்ற
மடங்கள் தனிலிருந்தும் வளர்நீழல் தொறுமிருந்தும்

---

1. கா (சோலை); சூண்ட (சூழ்ந்த)
2. ய் உட" படுமெய்
3. போர்த்தி(க்கொண்டு) த-ற மாருட்டம்
4. நன்னர்; அ நீண்டது; நல்ல
5. கீழவர்; நல்லொழுக்கம் உடையவர்; முன்சொன்னவர் அறிவாளிகள் என்ற படி
6. போதம்=படகு (போன்றது) எனல் வேண்டும்; போதவுள்ள என்றும் இருக்கலாம்; ம; வ;
7. உம் தொக்கு வருவது பேச்சு வழக்கு
8. ர மோழி முதல்
9. செல்வச் சிறப்பு
10 கவி என்பதிலிருந்து படைத்துக் கொண்ட சொல்; இவ்வமை
11. 'கடிய வெக்கை' என்றிருக்கலாம்
12. க்ஷனை
13. பல

நடந்து மிளைப்பாறி நமன்பதியே சென்றிடுவார்.
செய்ய சிவாலயங்கள் திருப்பணிகள் பொற்றேர்கள்[1]
துய்ய பொருளழித்து [2]சுத்தமெனப் பண்ணிலவத்தோர்
கொங்குமலர்த் தேனொழுகுங் கோலப் பசுங்காவில்
பங்கமில்லா நற்பூப் பாயல்போ லேவிரித்து
கிடக்குமலர்ப் பாதைவழி கெம்பீர மாகவேதான்
நடக்கும்போ தன்னோர்கள் நல்லமணி மேடையினில்
செப்பமுட னேயிருந்து செல்வக் குளிர்ச்சியொடு
தப்பிதமில் லாதஎமன் தன்பதியைத் தானடைவார்.
வருத்தமுடன் பெற்றெடுத்து வளர்த்தஅன்னை தந்தையையும்
திருத்தமுடன் மந்திரங்கள் [3]செய்வித்தஆ சான்தனையும்
அக்கினிதே வன்தனையும் அன்பாய் முறைப்படியே
[4]வக்கனைய தாக வணங்கிப் பணிந்தவர்கள்
சூரியன் போல்மின்னும் தூயநவ[5] ரத்தினமணி
தேர்மிசையி னேறிச் செல்வார் நமன்பதியில்.
அப்பா! வெண் தாமரைநூல் அன்புடனே தானெடுத்து
செய்ய சிவாலயத்தில் திருவிளக்கு வைத்தவர்கள்
கண்ணுக் கினிதான காட்சி யழகுபெற்று
வண்ணப் [6]பிரபையொடு [7]மறலி மயக்கமின்றி
விந்தையுள்ள சோலைவழி மெய்ப்பாக வேநடந்து
அந்தகனூர்வாழும் அழகு பதிஅடைவார்.
பாலுடனே சாதம் [8]பகரும் அறுசுவையும்
சீலமுள்ள வேதியர்க்குச் சிறப்பாய்க் கொடுத்தவர்கள்
அச்சமில்லாப் பூமி ஆளுகின்ற மன்னரைப்போல்
இச்சித்த தெல்லாம் இன்பமுட னே[9]பொசித்து
[10]சிங்கார மாகச் செல்வ வழிநடந்து
[11]வங்காரக் [12]கூத்தன் வாழும் பதியடைவார்.
வண்ண முடனேதான் வ[13]யறு பசித்தவர்க்கு
அன்னமுடன் நல்லதண்ணீர் அன்பாய் கொடுத்தவர்தான்
பலனேயின்ன தென்றொருவர் பகர முடியாது;

1. இவை எல்லாம் திருக்கோயிலைப் பற்றி யன
2. பொருள் செலவு செய்து
3. செபித்த; அல்லது மந்திர பூசை ஜபம் முதலிய செய்வித்த என்றுமாம்
4. உபசார
5. ந மொழி முதல்; நி ஒலியா ய போலும்
6. ஒளி
7. எம பயத்தால் வரும் மரண மயக்கம்; மறதி என்றும் இருக்கலாம்
8. புகழும்
9. அனுபவித்து
10. உல்லாசமாக
11. பொன்னன; செப்பமான; தெலுங்கு
12. கூற்றன் = எமன்; த ற
13. [யி]

நலமுடைய [1]தந்தையரே ! நமன்வந்து தொண்டுசெய்வான்.
காசிமுதல் சேதுமட்டுங் கனிதான தேசமதில்
பேசு மறையவர்க்குப்[2] பேசும்ஊர் ஈந்தவர்கள்
[3]நட்டனைகள் [4]அன்றி நல்போக போக்கியங்கள்
[5]எட்டத் தனையதிகம் இன்பமுட னேசுகித்து
நல்ல வழிகூடி நற்பாய் இளைப்பாறி
சொல்லும் நமன்பதியைச் சுகமாக வேயடைவார்.
தங்கமொடு வெள்ளிமுத்துத் தழைக்கும் நவமணியை
[6]பொங்கமுள்ள தேதியர்க்குப் [7]புகழ்தானம் பண்ணினபேர்
[8]நாகரீக மானதொரு நல்லமணித் தேரேறி
வாகுடைய [9]தெண்டுடைய மறலி பதிசேர்வார்.
கொடிய பிணியாலே கூறியநோ யாளர்தனை
வடிவாக வேயழைத்து மருந்து மிகக்கொடுத்து
வந்தபிணி யைத்தீர்த்து வாகுடனே விட்டவர்கள்
விந்தையுள்ள தேவரைப்போல் மிக்க பகையுமின்றிச்
செல்வக் களிப்புடனே சித்திரமாய்த் தேரேறி
நல்ல வழிநடந்து நமனூர் பதிபுகுவார்.
தண்ணீர் பழம்பொருந்தி தழைக்கின்ற பூஞ்சோலை
வண்ண முடன்வளரும் [10]வாலைப் பிராமணருக்கு
சந்தோச மாய்மகிழ்ந்து தானமே பண்ணினவர்
சித்தாத செல்வமொடு சேர்வார் நமன்பதியில்.
[11]வெத்திலை யொடுபாக்கு வேதப் பிராமணர்க்கு
நித்தம் மறவாமல் நேயமாய் ஈ(ய்)ந்தவர்கள்
[12]வாசம் பொருந்துகின்ற வண்ணமலர்த் தேரேறிப்

---

1. முன் தாயாரை விளித்துக் கூறினர்; இப் போது தந்தையரை விளித்துக் கூறுகின்றனர்
2. சிறப்பாகக் கூறப்படும்
3. கொடுமை
4. இன்றி
5. எட்டுமடங்கு
6. ஒழுங்கு; பொலிவு
7. புகழத்தக்க
8. புதுமையான
9. த-தெ
10. பாலர்
11. வெற்றிலை
12. வேகம்

பேசும் புகழ்நமனுர் பெருகும் பதியடைவார்.
நெய்யுடனே பூசணிக்காய் நேசமுள்ள நெல்லரிசி
துய்ய பருப்புடனே சுகமாய் மிளகுபுளி
185. உப்புடனே தேங்காயும் உகந்த பலாக்கனியும்
செப்பமுட னேயிளநீர் சிறந்த கரும்புவெல்லம்[1]
சந்தன மொடுகிழங்கு தாம்பூல மூள்ளவகை
விந்தையுடன் மாகஸ்நானம் விரும்பியா டும்நாளில்
[2]தேட்டமுட னேதான் சிறந்தளித்த புண்ணியர்கள்
190. வாட்டும் எமனுடைய வாதனைக்கு [ள்] அஞ்சாமல்
வன்னநெடுந் தேரேறி வாகான சோலைவழி
நன்னயமா க-நடந்து நமனுர் பதிசேர்வார்.
இப்படியே [3]புண்ணியங்கள் [4]இதமாகச் செய்தவரும்
செப்பமுடன் மாகஸ்நானம் சிறந்தா டினபேரும்
195. சந்திரவட் டச்குடையில் தானிருந்து செங்கோல்தான்
விந்தையுட னேசெலுத்து(ம்) மிக்க நமன்பதிக்கு
பெருக்கமுடன் பாதைவழி பெருமை யெனநடந்து
நெருக்குடனே புண்ணியர்கள் நிரம்ப நடப்பார்கள்.
இப்படியே புண்ணியர்கள் ஏகும்போ தில்காலன்
200. செப்பமுடன் அஞ்சிச் சிறப்பாய் எதிர்நடந்து
[5]வண்ணமுடன் தருமநெறி [6]வத்தாம லேவளர்த்த
புண்ணியரே வாரும்'என்று புகழுடனே [7]கையேந்தி
மிக்கவுப சாரமொடு மெத்த மனமகிழ்ந்து
[8]சிக்கெனவே தான்[9]கூட்டிச் சிறப்பாய் அருகில்வைத்து
205. சித்திர குப்தன் சிறந்த கணக்கதனை
புத்தியுடன் சொல்லப் புகழான ஏமனவன்
கல்வினை யொடுபாவம் [10]ரெண்டும் பகுத்தறிந்து

---

1. உம் பெற்றும் பெருதும் வரல் காண்க
2. விருப்பம்
3. அக்காலத்தில் சிறந்தனவாகக் கருதப் பட்ட தானங்கள் இங்கே கூறப்பட்டன
4. இனிமையாக; நன்மையாக
5. அழகுடனே
6. வற்றுமலே
7. கைலாகு கொடுத்து
8. உரிமையாய்
9. கூட்டிவந்து
10. இரண்டும்; ரெ மொழி முதல்

சொல்வி[1]னையும் புண்ணியர்கள் தூய முகம்நோக்கி
ஈசன் வளர்பதிக்கும் இனியபிர மன்பதிக்கும்
நேசமுள்ள பூந்துளப நெடுமால் வளர்பதிக்கும்
கற்பகப்பூங் காவுலவும் கனத்த [2]அம ராபதிக்கும்
பொற்புடனே வாய்திறந்து 'போங்கள்' எனவுரைக்க
காலதண்ட னுனைமன் கனிந்துரைத்த சொல்படியே
சீலமுள்ள புண்ணியர்கள் செல்வார்கள் [3]மோட்சபதி.
அன்புபிர [4]வாகைந்தி அணுகியே மாகஸ்நானம்
[5]நன்புடனே ஆடினபேர் நால்வேதம் சொன்னபடி
விரியுங் கமலமிசை [6]வினிதாக வீற்றிருக்கும்
பிரமன் வளர்பதிக்குப் பெருமையுட [7]னேவிடுவார்.'
என்றுபல செய்திகள்தான் இனிதான பெண்களுந்தான்
[8]நன்றியுட னேயுரைத்து நலிலுவார் பின்னுமவர் :—

விருத்தம்(2)

சுத்தமொடு மாகமதி தோறுமினி தேகி
பத்தியொடு காவிரிப டிந்திடுப லத்தால்
அத்தலியி லெய்தியும டங்கலும றிந்தே
இத்தலியி லெய்தினரி யம்பவெளி தாமோ.[9]

நடை

'மாகமா சந்தோறும் வாகுடைய [10]காவேரியில்
ஆகமுடன் மாகஸ்நானம் ஆடுகின்ற மாபலனுல்
[11]பாங்கார் எமனுடைய பட்டினத்தில் நாங்கள்சென்று
ஆங்கே யிருந்து அவ்விடத்தில் உள்ளதொரு
காரணமெல் லாம்பார்த்துக் காசினியிலே [12]பிழைத்து

---

1. [னை] வினயமான சொல்லுடைய என லாம்; ம் ப்; ன, னை;
2. இந்திரன்பதி
3. பதமோட்சம்
4. யா
5. நன்மை
6. வ் உடம்படுமெய்; மோனைக்குதவுகிறது
7. ஏகிடுவார்; க-வ
8. நன்மை; பெற்றோர்க்கு செய்ந்நன்றி மறவா உள்ளத்தோடு என்றுமாம்
9. பின் விருத்தம் போன்றது. காய்க்குப் பதிலாக விளம் வந்தால் அடுத்த சீர் நிரையில் தொடங்குமாறு பிரித்தால் வகையுளி வராது. இவ்வாறு பிரிக்கும்போது மோனை நயம் தோன்றுகிறது. ஆனால் சந்தப்படியும் பிரிக்கத் தக்க வகையில் அமைந்துளது
10. காவிரி (காவெரி) என் றெழுதிக்கும் போலும்
11. தருதி: அங்கிருந்து வந்தவ ராதலின் அருகு என்றும் அதனைப் பேசலாம்.
12. உயிர் பெற்று

சீருடனே நாங்கள்வந்த செய்திதனைச் சொல்லுதற்குக்
[1]கொஞ்சமல்ல வேகேளீர் கூறுகின்ற பாவவினை
நஞ்சை யொழித்து நல்ல தவத்தில்நின்று
பாவந் தனைநீக்கிப் பரிவான பொற்றேரில்
ஓவியமா க-ஏறி உகந்துமிகப் [2]போறவரை
அன்னையரே! உங்களிடம் ஆதரவாய்ச் சொல்வதற்கு
வன்னப் பெருங்கடலின் மணலெண்ணி கண்டவர்கள்
சொல்லுவார் அல்லாமல் தூயவரே நாங்களுமே
வல்லமையாய்ச் சொல்லிது. மாதாவே! நீர்கேள்மோ!
தன்ம நெறியுடையோர் தன்புகழைச் சொன்னோமே.
கன்ம[3]வினை மாளா கடிந்தேகுந் [4]தீவழியை
[5]போற[க்] கொடுமைகளும் பொல்லா நரகமெனும்
பாரக் கொடுமைகளும் [6]பாங்கா [7]யெமனுடைய
[8]தெண்டனையும் ஆக்கினையும் [9]செய்ய கொடுமைகளும்
கண்டபடி சொல்லுகிறோம். கருத்துடனே கேளு'மென்று
அன்னையரை நோக்கி அழகான கன்னியர்கள்
வன்னமலர் வாய்திறந்து வாகாய் உரைத்திடுவார். 246

எட்டாம்அத்தியாயம் முற்றும்.

---

1. (செய்தி) சிறிதன்று; பேச்சு வழக்கு
2. போகிறவரை (ப் பற்றி)
3. வினையாளர் என்றிருக்கலாம். வினை மாளா(து) என்றுமாம்
4. தீ வழியே; யே-யை;
5. போசீற; [போற] போர-மிக்க என்று கொளலாம்
6. பாங்கு ஆ(கு) = தகுதி ஆகு; பாங்காய்ச் சொல்லுகிறோம் எனலாம்
7. எ என்பதன் உச்சரிப்பு
8. தண்டனையும் ஆக்கினையும்வேறுபடும் ஆக்கினை = ஆஞ்ஞை; ஆனை = கட்டளை
9. அப்பட்டமாக; நீதியான என்றுமாம்

ஒன்பதாம் அத்தியாயம்

பாவ கதை

விருத்தம் (1)

பாவியர்கள் எய்தியிடும் பான்மையது கூறில்
ஆவிதளர் வுற்றுடல மும்பதறு மந்தோ!
நீவிர்அவை விட்டினிது கேள்மினென நீலக்
காவிநிகர் [1]கன்னியர்கள் கட்டுரைசெய் கின்றார்[2]

நடை

5. 'பழியான மாபாவம் பண்ணுவோர் தான்[3]போற
வழியும் அவர்களுட வருத்தமுந்தான் சொன்னலே
அன்னையரே! உங்கள்மனம் 'அய்யோ!' எனப்பதறும்
பின்னேவே றுண்டோ? பேசிலது தான்கொடுமை.
ஆனதினல், தந்தையரே! அறிவு மயங்காமல்
10. தானிருந்து கேளு'மெனத் தழைக்கின்ற நீலவிழி
மங்கையர்கள் நால்வருந்தான் மகிட்சி யுடனிருந்து
பொங்கமுள்ள தந்தையர்க்குப் புகலுவார் அன்பாக.
'[4]ஆணிக் கனகமணி அழுத்துகின்ற பொற்தொடங்கள்
[5]வேண பலதுமின்ன, விந்தைகெடுங் கோபுரங்கள்
15. [6]மாட மணிமேடை வச்சிரக்கல் உப்பரிவக
கூடம் பலதிலங்கக் கோல மிகுசிறப்பாய்
வீதி பலசூழ வேண்டியசெல் வப்பெருக்காய்
கோதில்லா மாநகனர் குடியிருக்கும் பட்டனந்தான்
'எங்கே' யெனக்கேட்கில் இலங்குகின்ற தென்பூமி
20. சிங்கார மாய்முடிந்த தென்திசைதா[ன்] [7]னவ்வூரு

---

1. [ன்னீ] ஏ, னை
2. 3 தானதன தான (தானு) என்ற சந்தக் கலிவிருத்தம்; 3 கூவினங்காய், 1 தேமா; ஏனை நான்கு சீர்; அடிக்கு 14 எழுத்துக்கள்
3. போகிற
4. உரையாணியில்தேய்த்தபின் உயர்ந்தது எனக் கண்ட பொன்னில் இரத்தினங் கள் பதித்த கலசம்; [ஆவி] ஏ, னை
5. வேண்டிய = மிக்க
6. மாடம் எழுநிலை மாடம்; கூடம் கோபுரம்; [மாடத்தினும்வேறு]; மேடை = மேல்தளம், செய்குன்று; உப்பரிகை = உபரிகை, நிலாமுற்றம் போன்ற தாகலாம்.
7. [நவ்வூரு] அவ்வூர். உகரம் சாரியை; நவ = புதிய ஊர் என்றுமாம்.

அகல மொடுஸீளம் ஆன[1]எண்பத் தாருயிரம்
புகலுகின்ற யோசனைதான், புண்ணியரே! ஏமபுரம்.
[2]அ[illegible]டியாக் கொத்த அழகான [3]ஏமபுரம்
தப்பில்லாப் புண்ணியர்க்கு [4]சத்து நேர்வழி[5]தான்.

25. [6]வல்லமையாய்ச் செய்யும் வலுவான பாவியர்க்கு
சொல்லத் தொலையாத தூரம் வெகுதூரம்.
பாரினிய மாமறலி பதிதேடிப் பாதகர்தான்
[7]போ,ம வழி[8]கொடுமை புகல முடியாது!
ஆனதினு லய்யோ! அரும்பா தகர்மயங்கி

30. [9]தானடக்கும் பாதை தனில்[10]வே[ா]ய் நிழலுமுண்டோ?
பரிவான பாம்பின்விஷப் பல்லிலேயு மேகொடிதாய்
அரிதான முள்ளும் அடர்ந்தமுனைக் கல்லுகளும்
[11]சல்லி[12]சுக்காம் பாறைகளும் தானே மிகக்கொடிதாய்
[13]சொல்லும் [14]கொடும்பாதை தூரம் [15]சிலதிடமாம்.

35. இ நப்புச் [16]சலாகையொடு இனியசிறு முள்ளுஞி
நெருக்கி மிகக்கலந்து நெடியமுள்ளுத் [17]தெற்பையொடு
ஈரச் [18]சகதிதனில் [19]இனியமுனைச் சூலமொடு
கூரியவாய் வேலுதனைக் [20]குலுக்கிவைத்த பாதைதனில்
சூரைமுள்ளு மேநெருங்கத் தூ[ய்][21]வெளு(வேல்) முள்ளுடனே

40. காரைகரு வேலுடனே கலந்தபா தைதில்தான்

---

1. [வெ]-உச்சரிப்பு
2. அப்படிக்கோத்த
3. [மே] உச்சரிப்பு
4. சற்று
5. நல்லவர்க்கு இனிமையாகவும் தீயவர்க்குக் கொடுமையாகவும் அவ்வழி தோன்றும்; மேலும் இவ்வாறு தோன்றுவான் எனக் கூறுதல் காண்க
6. தேர்மையின்றி வலுக்கட்டாயமாய்
7. போக்கு
8. வகிமிகவில்லை
9. தாம் நடக்கும்; நடை மாருட்டம்; தான் என்பது பன்மையிலும் வந்ததாகலாம்
10. வேப் பற்றின் நிழலும் உண்டோ? வேறு 'வேர்' என [illegible]ந்திருக்கலாம்; ஓர் என்பது "வோர்" என உச்சரிக்கப் படுவதால் 'வோர்நிழல்' என்றும் இருக்கலாம்
11. கல்லுண்டு
12. சுண்ணும்புக்கல்
13. எதுகைக்காக வந்தது
14. வளைவு வளைவான வழி
15. சில இடம்
16. இரும்புக்கம்பி
17. தப்பை ர-ற; த-தெ;
18. சேறு
19 மோனைக்காக வந்தது. நல்ல கூரான; மங்கல வழக்கு; இனைய=(வருந்த) என்றும் இருக்கலாம்.
20. கலந்து
21. நல்ல கூர்மையான வெள்வேலமுள்

சாணேற வேமுழந்தான் [1]சருக்குமலைப் பாதைகளும்
[2]வாளுள் நடுங்க வழிதிசையுந் [3]தோணுமல்
[4]அள்ளும் இருள்கூட்டம் அடர்ந்திருக்கும் பாதைகளும்,
துள்ள வுடல்[5]நோக, துடிக்க, மனம்பதற
45. கருங்கழுகு டன்காகம் கரும்[6]பிராந் தும்சீறி
பருஞ்சதையைக் கொத்தும் பாதை சிலதிடமாம்.
எட்டி அடிவைக்க எள்ளுமிடம் இல்லாமல்
இட்ட[7] அடிஒட்டி இலங்குஞ் சிலதிடமாம்.
பார[8]வுடை முள்ளுகளும், [9]பாதாளக் கேணிகளும்,
50. சீரில்லா மண்மேடு[ம்] சிறந்திருக்கு[ம்] பாதைகளும்,
[10]கருக்கறுவாள் போலவேதான் கால்கள் தனைநோக
[11]அருக்குஞ்சிறு வோடுகளும், அடர்ந்தமுள்ளு தான்செடியும்
பரிவாக வேநெருக்கும் பாதை சிலதிடமாம்.
அரிதாய் நிழலுமின்றி அனல்போல வேதியாய்
55. கருக அனல்பறக்கக் கட்டாக வேமணலை
முருக வறுத்து, அய்யோ! முன்னே மலைபோலே
[12]கும்பகும்ப லாகவேதான் [13]குமித்திருக்கும் பாதைசில.
செம்மை[14]யன்றி யேகொடிதாய்த் தி[ய்]வாய் இரும்புபோல்
கருக மிகக்காய்ந்து கால்உருகிக் [15]கொப்பளிக்க,
60. எரியுங்கரும் பாறைகளும் [16]இடஞ்சல்வழி முள்ளுகளும்
அடர்ந்திருக்கும் பாதைகள்தான், அய்யோ! சிலதூரம்.
விடங்[17]காற்கு மாபாம்பு மிகவாழ் இடஞ்சிலது.
அக்கினிப்[18]பா ளம்போல, அய்யோ! நிலங்[19]காந்த
தைக்குமிசிக் காட்டில் தழல்[20]கானல் தான்வீசிச்

---

1. சறுக்கு என்றும் எழுதப்பெறும்
2. [வாளுல்] வாளுல் = இடியால் என்ற மரம்
3. தோன்றுமல்
4. செறியும்
5. 'நோவ' நோக என்றே வருகிறது 'கு' வரல் காண்க
6. 'பருந்தும்'என்பதன் உச்சரிப்பு; ப்ராந்து பிராந்து
7. [ய] போல அடியோட்டி என்ற முன் இட்ட
8. உடைவேல்; குடைவேல்; உ-கு மாறுட்டம்
9. பாதாளம்வரை போகுவது போன்ற கிணறு அல்லது குளம். மேலே கிணறு என்று தோன்று தீருப்பது. (Under-ground)
10. கருக்கு அரிவாள்
11. அறுக்கும்; தாவும் செடி 'தாஞ்[வ்] செடி' என்றும்
12. கும்பல் கும்பல்
13. குவித்திருக்கும்; வ-ம மாறுட்டம்
14. இன்றி
15. கொப்புளிக்க என்ற வடிவமும் உண்டு
16. இடைதல்; மனஞ்சோர்தல் உண்டுபண்ணும் வழி
17. காற்கும்; கறுக்கும் காலும் = கக்கும் என்றுமாம்
18. நெருப்பில் காய்ந்த உலோகக்கட்டி
19. எரிந்து பற்ற
20. வெப்பம்

65. [1]சூரு வளிபோலச் சுழன்றுசுழன் றேசெழுந்தீ
[2]வீருகக் காயும் மிக்கபா தைசிலது.
[3]எக்கு வ[4]யறுடனே [5]இளிந்தவாய்ப் பல்காட்டி
மிக்க கொடும்பேய்கள் [6]வேத்தையுறு பாதைசில
கட்டெறும்பு, [7]பூரம், கருங்குளவி, தேனீக்கள்,
70. அட்டை, அரணை, அடர்ந்திடும்பா தைசிலது.
சீறும் புலி, கரடி, சிங்கம்; பல காட்டாணை,
[8]ஏறுடனே, [9]மேதி இடர்செய் இடஞ்சிலது.
நன்றியில்லாப் பாதகரை நடுங்க மிகப்பிடித்து
[10]கொன்றுரத்தங் கள்குடித்துக், கோபித்துப் பல்கடித்து,
75. தீயெழுந்த [11]வெண்பசியால் சீறியகண் தீப்[12]பொறியப்
பேயனவே வல்லரக்கர் பெருகும் பலதிடங்கள்.
வெந்றியுள்ள [13]சென்னியும் மிக்க கருநாயும்
பன்றி மிகச்சூழும் பாதை சிலதூரம்.
கொட்டுங் கொடுந்தேளுங் [14]குலைசெய் கொடுவேட[ர்]
80. நெட்டச் சிறை[15]சற்பம் நெருக்கும்பா தைசிலது.
சீதள மொடுபனியும் சிறந்த நெடுவாடை
[16]கூதல் மிகவாட்டக் [17]கொடுகொடுக்கும் பாதைசில.
பொடிமண் அடிச்சுடவே, புகையவே செந்தீதான்
கடினமெனக் காந்திக் [18]கமர்வெடிக்கும் [19]பாலைத்தில்
85. அள்ளுகின்ற [20]வெண்ணீறும் அக்கினிபோ லேகொதிக்க
முள்ளுஞ் சுடுமணலும் மொய்த்தபா தைசிலது.
மின்னல் இடியும் மிகுந்திடுஞ்சூ ருவளியும்
மன்னும் இருட்டும் மழையுங் கொடுங்[21]காத்தும்

---

1. சுழல்காற்று
2. தனிச் சிறப்பாக
3. உள்ளீழுக்கும்
4. பி
5. இகழப்பட்டு எளிதான; இளிச்சவாய் என்றுமாம்
6. வேதனை
7. பூரான்
8. எருது
9. எருமை
10. கொன்றிரத்தங்கள்; 'ர' மொழி முதல்
11. உணவின்மைகாரணமாகச் சோகையாய் முகம் வெளுத்துக் காட்டும் பசி; இனிவெம்பசி என்றும் இருக்கலாம்
12. பொய
13. செந்நாயும்-ந ன மாருட்டம்; முரணாயி
14. கொலை; உ, ஒ மாருட்டம்
15. நெட்டம் (நெடிய) சிறை (இறக்கை) யுடைய சர்ப்பம் (பாம்பு) ர,ற மாருட்டம்; கொடுவேட (வேடரது) சாபம் (வில்) என்றுமாம்
16. குளிர்
17. நடுங்கவைக்கும்
18. கமர்-பூமிப் பிளவு
19. பாலைநிலத்தில்; பரல்போன்ற நிலமுமாம்
20. வெண்மையான தூசு
21. காற்றும்; த-ற மாருட்டம்

பாங்காக வேநெருங்கும் பாதை சிலதூரம்.

ஆங்கார மண்மாரி [2]அகோரமுள்ள கல்மாரி
[3]அக்கினி மாரி யடருஞ் சிலதிடங்கள.
[4]பொக்களங்கொள் [5]தீயாறு புகையுஞ் சிலதிடங்கள்.
[6]நீச்சுகிலே இல்லாமல் நிறைய மிகப்பெருகி
கா(ய்)ச்சிய [7]வென்னீர்போல் கனன்று சுழிமோதி
ஓடுகின்ற ஆறுகளும் உற்றபெரு ஓடைகளும்
தேடரிய செம்புதனைத் தீப்போல வேயுருக்கி
விட்டகொடும் பாதைகளும் வெம்பா வியர்காலில்
தட்டுருவிப் பாயுந் தழைத்த நெருஞ்சிமுள்ளும்,

விருத்தம்(2)

இன்ன தீய வழியில் இடருறும்
அன்ன பாதகர் யாருந் துணையின்றி
சொன்ன யாவும் இருந்து துயர்செய்ய
மன்ன! [9]இன்னல் மலிந்தழு தேகுங்கால்[10]

நடை

இக்கொடுமை யாக [11]இருக்கும் பெருவழியில்
மெய்க்கொடிய பாதகரை வெகுண்டு மிகச்சீறி
[12]சீறியர வங்ஙடிக்கச் சென்னாய் மிகக்கடிக்க
வீறுடைய பன்றிபுலி மிகவே [13]துடர்ந்துவர
காகங்கள் கொத்தக் கழுகு யெதிர்[14]மரித்து
[15]ஆக மிகநடுங்கி 'அய்யோ' எனக்கதறி
சூறைமுள்ளு தைக்க சுடுமணல்கால் [16]கொப்பளிக்க

---

1. ஹங்காரம்போல ஆங்காரம் என்ற சொல் வந்துளது. ஆ என்ற ஒலி
2. கொடிய
3. நெருப்பு மழை
4. பொக்குளம் = கொப்புளம்; குமிழ்
5. நெருப்பாறு
6. நீந்தக்கூடியது ஆழம். நீற்கக்கூடிய ஆழம்
7. வெந்நீர்; ன-ந மாருட்டம்
8. [ற்]
9. [யி] உச்சரிப்பு உடம்படு மெய்யுமாம்
10. மா+நேர் முதல் ரஸைச்சீர்; வெண்டளை பெற்ற ர வெண்டளை பெற்ற ரஸைச்சீர் மூவசைச்சீர்களை 4-சீர் பெற்ற கலிவிருத்தம்; அடிக்கு 11 எழுத்துப் பெறும்
11. வெ 9
12. அந்தாதித் தொடர்
13. தொடர்ந்து
14. மறித்து; மறித்தலால்
15. உடம்பு
16. கொப்புளிக்க

காரைமுள்ளுப் பாயக் கருங்குளவி கொட்டிடவே
கருநாய்கள் பின்துடர கருங்[1]கறடி முன்மறிக்க
வரும்பேய்கள் [2]பத்திவர வளரும்பா றையேறச்
சருக்கி மிகவிழுந்து ஞானழுது [3]போரவரை
[4]வெரிக்கவே காட்டெருமை [5]வீசுமே கொம்புகொண்டு.
[6]உண்ணு உலர்ந்து, ஒதுங்கநிழல் இல்லாமல்
'தண்ணீர்தண் ணீ'ரெனவே தாகம் பெரிதாஇ
காய்கின்ற தி[ய்]வழியே கால்கள்மிகக் கொப்பளிக்க
வாய்காய்ந்து தண்ணீர்தான் [7]மறு[க்]கவே மரமாய
கொடிய [8]இருட்டிலேயும் கூரியமுள் பாதையிலும்
பொடிமண் சுடப்பதறிப் போகின்ற பாதகரை
இடிபோல் குரல்முழக்கும் எமதூத ரானவர்கள்
[9]கடவாயின் பல்கடித்து கண்கள்அக் கினிபொறிய
பார மலைபோல பருத்த [10]கருத்துடலும்
கோர முகமுங் கொடியரூ பங்களுடன்
இடைவழியி லேமறித்து இடிபோல [11]ஆக்கிரமித்து
தடியெடுத்து வேகமுடன் சண்டாள ரைச்சினந்து
'நில்லடா நில்லுநில்லு நில்'என் றெமதூதர்
சொல்லி [12]உருக்கித் [13]துட்டுத் தடியாலே
வெப்ப முடனடிப்பார் ; வீசுவார் பட்டபுண்ணில்;
உப்பைக் கரைத்து [14]ஊத்துவார் புண்ணெரிய;
இந்தப் படியேதான் எமதூதர் தானடிக்க
'அந்தோ' எனப்பதறி அழுது துயரமுற்று
துன்பம் [15]பொருக்கரிதாய்ச் சோர்ந்து தடுமாறி
[16]குப்பி நடுங்கக் குலைந்தேகும் பாதகரைக்

---

1. கறடி
2. பற்றி
3. போகிறவரை
4. வெறிக்க = வெருவ
5. எப்படியோ ஒருவகையில் வாக்கியத்தை முடித்தல் காண்க; குத்தி எறியும்
6. உள்-நா
7. மறுக்கப் பொறுத்தல்; இல்லாமையால் மரம் சாவ; மரம் இல்லாமையால் கொடிய; செய-காரணப் பொருட்டு
8. இருட்டிலேயும்
9. கடைவாய்; ஐ-அ மாருட்டம்
10. கறுத்த உடல்
11. வலிந்து கைப்பற்றி; அடக்கி
12. உறுக்கி = அதட்டி
13. குறுந்தடியாலே
14. ஊற்றுவார்; புண்ணெரிய ஊற்றுவார் எனமுன் பின்னாய் மாற்றுக; ற-த மாருட்டம்
15. பொறுக்க அரிதாய்; ற-ற மாருட்டம்
16. வயிறு

135. கையோடு கைசேர்த்து கையால் [1]வரிந்திருக்கி
மெய்நோக மேனி வெம்புழுதி யில்புரள
[2]வடிவான மேனியெல்லாம் மண்டியே ரத்தம்பாய
கொடிதாக வேயிழுத்துக் கொண்டேகு வார்சிலரை.
கருக்குமிருப் பு-முளையைக் கா[ய்]ச்சியே, பொல்லாதார்
140. பருத்த மணிமார்பில் பதிய மிகஅடித்து
[3]சங்கலியைத் தான்[4]கோர்த்து சற்றுந் [5]தருகாமல்
வெங்கொடுமை யாயிழுத்து விரைவார் சிலபேரை.
[6]நெத்தி தனிலே நெடியஅனல் [7]தூண்டிதனை
குத்தி இழுத்துக் 'கோகோ' எனக்கதற
145. அக்கினிப்பா ளம்போலே அனல்வீசும் பாறைவழி
சிக்கெனவே தானிழுத்துச் செல்வார் சிலபேரை[8].
சற்றுவி லு-மனது தானிரங்காப் பாவிகளை
கற்றேயுந் தின்டோள் காலனுட [9]கிங்கிலியர்
பாசக் க[10]யறுகொண்டு பரிவாக வே[11]யிருக்கி
150. வீசி அடித்து வெருவியழு துபுலம்ப
[12]சண்ட னூர்புகவே தாவி மயிர்பிடித்து
கொண்டு போவார்கள் கொடுமைத் தொழிலாக[13]
[14]ஆயத் துரையில் [15]அரக்கொடுமை செய்தவரை
நேயக் கணக்கில் [16]ரெண்டெழுதி வைத்தவரை
155. சிவன்கோயில் கொள்ளையிட்டோர்[17] சிவன்கோயி லில-யிடித்து
தவங்கள் அழித்தோரைச் சத்திரங்கள் தானிடித்தோர்

---

1. வரிந்து; இறுக்கி; ர-ற
2. வடிவழகுள்ள
3. சங்கிலி
4. கோத்து
5. தரிக்காமல் = பொறுக்காமல்: காலத் தாழ்த்தாமல்; உ-இ மாருட்டம்
6. நெற்றி; ற-த
7. தூண்டில்தனை-ல் இடையில் ஒலியாமை காண்க
8. முன் பின்னாய் மாறல் காண்க
9. வேலையாட்கள், கிங்கர்என்பதன் மரூஉ
10. யி
11. இறுக்கி; ர-ற
12. எமன்
13. வினைமுன்னும் வினைச்சம் பின்னுமாக வருதல் காண்க
14. ஆயத்துறை = சுங்கச்சாவடி
15. அறக்கொடுமை-முழுதும் கொடுமை
16. இரண்டு (கணக்கு); பின்வரும் ரகரத்தில் முன்வரும் இகரமும் மருவி ரெ என மொழி முதலாம்
17. ஐ உருபு தொக்கும் விரிந்தும் அடுத்து வருதல் காண்க

[1]தன்னுடமை தானிருக்கச் சதியாக வேபிறர்தன்
பொன்னுடைமை கொள்ளையிட்டோர், புகழான வேதியர்கள்
தன்னி[2]யிடு காடுசெப்பு தன்மந் தனையழித்து
160. வன்னமுடன் பிச்சையிட்டு வாழாத பாதகரை
கையிலிருப் பு-முளையைக் கா(ப்)ச்சி மிகவடித்து
'அய்யய்யோ' என்று [2]அலர்த்தி மிகப்புலம்பி
தண்ணீர்தண் ணீரெனவே தகைமீறிப் பகியுடனே
கண்ணீருந் தானோடக் கடியமுள்ளுப் பாததனில்
165. தீயான [4]பாசமதால் சேர்த்து மிகஇ[5]றுக்கி
பேயான தூதர்கள்தான் பெரியதுட் டுத்தடியால்
வெள்ளெலும்பு தான்முறிய மேனியெல்லாம் புண்ணாக
உள்ள மிகக்கலங்க [6]உறுக்கிக் கொடுபோவார்.
புத்தி தனிலெண்ணிப் புண்ணியங்கள் செய்யாமல்
170. [7]பத்தியே பாதகந்தான் பரிவாகச் செய்தவரை
[8]அண்டத் துடன்சேர்த்து ஆண்குறியைத் தா[9]னிருக்கிக்
[10]கண்டத் துடனிழுத்துக் கட்டியே [11]குண் டக்கமென
கட்டி உருட்டியிரு காலாலே [12]எத்தியுந்தான்
[13]சட்ட மென[14]நெரிஞ்சி தழைக்குமுள்ளுப் பாதைவழி
175. பந்தெ[15]றிந்து ஆடுதல்போல் பதறிப் பதறியழ
விந்தையுட னேதூதர் விரைவாய்க் கொடுபோவார்.
பெற்றதாய் தந்தையரைப் பெரியோரை வேதியரை[16]
உற்ற மிகுதன்னி லுதி யுணர்ந்தவரை
பஞ்சாட் சரமுரைத்த பாங்கான தேசிகனை

---

1. தன்உடைமை; அ-ஐ
2. இடுகாடு செப்பு=பிணம் புதைக்கு மிடம்போல் பழக்கி
3. அலட்டி (பிதற்றி) ட-த மாறுட்டம்; அ ற்றி என்றுமாம்; ல-ர மாறுட்டம்
4. பாசக் கயிறு
5. [கு]
6. [உருக்கி] அதட்டி
7. பற்றி=விடாப்பிடியாய்; பாதகத்தான் பற்றி எனமுன் பின்னும் வரும்
8. பிரம்
9. இறுகி
10. கழுத்துடன்
11. கருவுடுக்கும் நீலி
12. எற்றி=உதைத்து; த ற
13. முன்முள்ளை சட்டப் பறம்புபோல
14. நெருஞ்சி
15. [தி]
16. இயற்பெற்றவை அடுக்காய் வருதல்

180. அஞ்சாமல் தூ[1]சணித்து அகந்தைசொல்லும் பாதகரை,
வாக்கிலனல் [2]தூண்டிமுள்ளும் மாட்டி மிக[3]யிழுத்து
காக்கை கழுகுகொத்த கருநாய் கடித்திழுக்கத்
[4]துக்குணியா கச்சதையைத் [5]துடிக்கத்துடிக் க[6]யிர்த்து
சிக்குமுள்ளுக் காட்டுடே [7]தியங்கக் கொடுபோவார்.

185. மனது தனிலறிந்தும் [8]வண்கொடுமை யானதொரு
[9]கனகொடிய பாவவினை [10]கனமாகச் செய்தவர்தன்
கன்னம்வா யூடுருவக் காயுமிருப்[1]புத்தூண்டி(ல்)
தன்னிமிகக் கோ[11][ர்]த்தும் தாழ்ந்த வுதட்டில்கோ[ர்]த்தும்
கொடிய நெரிஞ்சிமுள்ளு குத்தவே மேனியெல்லாம்

190. வடிய வேரத்தம் மண்ணில் மிகப்[12]பிரண்டு
[13]கத்தைக்கத்தை யாய்ச்சதைகள் கழன்று சிதறிவிழ
மெத்தப் புலம்பியழ விரைவாய்க் கொடுபோவார்.
பலநூல்கள் தன்னைப் படித்ததுமெல் லாமறிந்து(ம்)
வலிதான பாவவினை [14]வன்கொடுமை யாகவேதான்-

195. தையலுட னேபகலில் தான்விரும்பி யேகலவி
செய்யுங்கொடும் பாதகரைத் தீயிருப்புச் சங்கிலியை
மூக்கு தனில்கோ[ர்]த்து [15]முழுமிதுங்கித் தான்சோர
நாக்குதனில் தூண்டியிட்டு நல்லீயத் தைக்கா(ய்)ச்சி
கண்ணி லேவார்த்து கடுஞ்சினத்தோ டேயடித்து

200. புண்ணிலே தி[ய்]க்கோலால் புழுங்கவே மேனியெல்லாம்
கருகிடிய [16]பொக்குளித்து காந்தவே, வாய்பிதற்ற
வரியுமுள்ளுப் பாறைவழி இழுத்தோடு வார்சிலரை.

---

1. ஷ
2. தூண்டில்முள்ளும்
3. இ. அ முதலியன யி, ய என எழுதப் பெற்றுள்ளன
4. சிறுதுண்டு
5. துடிதுடிக்க என ஒலிக்க
6. 'ய்' உடம்படுமெய்; அ என்பதன் உச்சரிப்பு காண்க
7. மனம்வாட
8. மிகக்கொடுமை; அல்லது வல்கொடுமை
9. மிகக்கொடிய
10. பெருமையாக; உறுதியாக
11. 'ர்' இடைவரல்; கோர் என்ற அடிச்சொல் ஆக்கப்பெற்றுளது
12. புரண்டு-ப்ரண்டு, பிரண்டு என்றும்
13. கற்றை கற்றை
14. முள் "வன்கொடுமை" என எழுதப் பெற்றது
15. விழி
16. கொப்புளம் கொண்டு

சாத்திரங்கள் நல்லதருமச் [1]சாதகங்க ளோயினிப்பாய்ப்
பார்த்திருந்து புண்ணியங்கள் பண்ணும லேகொடிய
[2]கோவங்கள் கெண்டு குருத்துரோ கங்கள்கொலை-
பாவங்கள் செய்து பலன்[3]வேண்டாப் பாதகரை
துட்டுத் தடியால் [3]துவள மிகஅடித்து
கட்டி இ[4]றுக்கி காதிலேயும் மூக்கிலேயும்
பாரத் தூண்டிகோ[ர்]த்து பதறப் [5]பறபறென்று
[6]ஈரமில்லா [7]வெண்மணலில் இழுத்துக்கொண் டேபோவார்.
ஆன சிவகதைகள் ஆகமங்கள் நால்வேதம்
ஞானமொடு புண்ணியங்கள் நல்ல வழிமுறைகள்
சொல்லவே கேட்டிருந்தும் சூதான பாவமெனும்
அல்லல் எனுந்தோசம் அடர்ந்துசெய்வோர் கள்தனையும்
சித்திரமா கப்பிறர்க்குத் தெரியவே தானதர்மம்
புத்திசொல்லி அய்யோ! பொல்லா [8]தொழில்கள்செய்யும்
பாதகரைச் சீறிப் [9]பருங்கால தூதர்கள்தான்
[10]கோது படக்கட்டிக் கொதிக்குஞ்செம்புப் பாறைவழி
காலில்[11]அடி யொட்டி[12]தை(ய்)க்க கருங்குளவி தேள்கள்கொட்ட
[13]மேலெல்லாஞ் சூரைமுள்ளு வெங்கொடுமை யாய்க்கிழிக்க,
பள்ளந் தனில்விழுந்து பருமேட்டி லேதவழ்ந்து
உள்ளங்கால் நோக ஒதுங்கநிழல் இல்லாமல்
'வெய்ய கொடுமை'என வெருவியே வாய்ப்புலம்பி
[14]'அய்யோ' எனப்பதற அடித்திழுத்துப் போவர்சிலர்.
எண்ணுமல் மாபாவ மெவரேதான் செய்தாலும்
கண்ணுலுங் காதாலும் கண்டுகேட்டுப் போனவரை

---

1. அறத்தை நிருபிக்கும் பிரமாணங்களை; தருமம் செய்யும் லக்கினத்தில் பிறந்தோர் சோதிட சாதகங்களை என்று மரம்
2. கோபங்கள்; ப, வ;
3. வருந்தவாட
4. [ரு]
5. விரைவாக
6. [யி]உச்சரிப்பு
7. வெம்மணலும் ஆம்
8. வலி மிக இல்லை
9. பருத்த
10. இரத்தச் சாறு பிழிந்த கோதாக
11. அடியொட்டி = காலில் தைக்கும்படி நட்டு வைக்கும் கருவி
12. ஏ, ஈ ஐ பின் ய் வரல்
13. மேலி
14. பார்ப்பன வழக்கு; ஆர்; ஆன் ஆள் என்ற விகுதி அர் அன், அள் என வரல்

காதிலிருப் பு-முளையுங் கண்ணிலிருப் பு-முளையும்
[1]போதவே தானடித்துப் புண்ணுய் உடல்பதற
[2]ரிணங்கள் மிகழுழுக ரத்தம்[3]பிதிர் விட்டோட
230. [4]குணங்கில்லா முள்ளுசி [5]குறித்துநட்ட பாதைதனில்
வண்ணமுள்ள வாளரத்தால் [6]வரிஞ்சுவரிஞ் சு-சதையை
உண்ணக் [7]கொடுதது ஓலமிடுங் காக்கை கொத்த
[8]திண்ணும் படியாகத் தியங்கிப் பரிதவிக்க
[9]வண்ணக்கொடுங் காலறவே [10]வரிஞ்சிகட்டிப் போயிடுவார்
235. [11]நட்டணைசெய் வோர்கள்தனை நடுங்க எமதூதர்
கட்டியிழுத் தோடிடுவார் கதறக் கதறவய்யோ !
துட்டத் தொழிலாகத் [12]துறைகடந்த பாவிகளை
எட்டிப் பிடித்து [13]இறுக்கியே பாசத்தால்
சிந்தவே செங்குருதி[ச்] சினந்தே யவர்தோளில்
240. விந்தையுள்ள வேல்முனையால் ஈட்டிமுனை வாள்முனையால்
நை[ய்]யவே தோளில் நருக்கு நருக்கெனவே
[14]தொய்யவே குத்தித் துடிக்கவேகொண் டோடிடுவார்
இப்படியே பாதகரை [15]எமபடர் க-ளடித்து
வெப்பமுள்ள பாதைதனில் வெகு[16]தண் டனைகள்செய்து
245. ஏது துணையுமின்றி இருக்க நிழலுமின்றி
வேதனையால் அய்யோ ! மிகவே மனம்பதறி
வெங்கொடிய பேயெனவே [17]விரட்டிவரும் தூதர்தனை
பங்கமுறு கண்ணுல் பயந்துதிரும் பித்திரும்பி
பார்த்துக்கொண் டேவெருவிப் பதறிக் கலக்கமுற்றுக்

---

1. போத = மிக
2. இணங்கள்-ர, ரெ, ரீ, ர; ரி, ர மோனை;
3. கீழ்ந்த இடம்
4. வனவு
5. போவாரைத் தண்டிக்கவேண்டும் என்று கருதி
6. நீயமித்து; வரைந்து என்பதன் மரூஉ
7. குற்றியலுகரம் கெடவில்லை;
8. தின்னும்; ன ண மாருட்டம்
9. 'வண்ண கொடும்' என ஒலிப்பர் போலும்; நீரைமுதலாகலாம்
10. துணியை வரிந்து கட்டி வேலைக்கு ஆயத்தம் தல்; து, சி ஆதல்
11. நடிப்பு-ஒமாற்றம்; கோடுமை
12. நல்வழி
13. [யிரிக்கியே; இ-யி; ர; ற; உ இ; மாருட்டம்
14. தோய்ந்து இலக்க அல்லது துள்ள
15. 'எமபடர்க்கள்' என உள்ளது; எமன் வேலையாட்கள்
16. தண்டனை
17. வெருட்டி

250. [1]காத்துவெட்டி போலவேதான் கல்[2]இடற நில்லாமல்
அழுதுபெரு மூச்செறிந்து அவரவர்கள் வாயாலே
பழுதுடனே செய்தமகா பாவந் தனைச்சொல்லியும்
போவார் சிலபேர்கள் [3]போரவழி யெங்குமய்யோ !
தீவாயுங் கண்ணுஞ் சினந்த முகமாக
255. ஓங்கு தடியுடனே உக்கிரகோ பங்களுடன்
வீங்கு புயங்களுடன் வெகுகோடி தூதர்கள்தான்
பார்த்த இடங்களெல்லாம் பாறை கருமலிபோல்
[4]கூத்தனுட கிங்கிலியர் கொள்ளிவாய்ப் பேய்போலே
அடிக்க வருவாரும் அதட்டுவா ருந்தடியால்
260. இடிக்க வருவாரும் இனிவிடா தேயெனவே
வெங்கொடுமை யாக [5]வெகுண்டு சினந்துரைக்க
[6]அங்க சந்து தான்வேர்த்து அறிவழிந்து மேல்வெதும்பி
தீய வழியாலுந் தீயான தூதர்கள்தான்
[7]காயம் பதறக் கடினமெனுந் தண்டனைக்கு
265. அஞ்சி மெலிந்து [8]அருண்டோடும் [9]பாதகற்குத்
தஞ்சமும் உண்டோ தான்[10]வேர் துணையுமுண்டோ ?
உடுத்தப் புடவையுண்டோ ? உண்பதற்குச் சோறுமுண்டோ ?
எடுத்துக் குடிப்பதற்கு இனிதான [11]தண்ணியுண்டோ ?
நிற்க நிழலுமுண்டோ ? நின்[12]ருறப் புல்லுமுண்டோ ?
270. அக்கொடுமை யென்சொல்வோம் ? அய்யய்யோ ! மாகொடிது !
நிலமெல்லாம் [13]வெங்கானல் நிரம்ப மிகவீசும்
[14]செலமெல்லாஞ் செந்தீயாய்த் தீயால் புகைகள்மண்டும்
மேல்காந்த கீழ்காந்த மேனியெல்லாந் தான்காந்த[15]
கால்காந்தி யோடுங் கடும்பாத கர்புலம்பி,

---

1. பதுங்கிக் காத்திருந்து வெட்டுவாரைப் போலக் கல் இடற; [காத்து விட்டி]
2. [இடர்] ர, ற
3. போகிற
4. கூற்றனுடை
5. வெகுள்-கீள வேற்றுமை காண்க; வெகுளல்=முன்கோபம்; சினத்தல்=காழ்ப்பேறியது
6. உடம்பில் எலும்பு மூட்டுவாய்; அங்கு அயர்ந்து என்றுமாம்
7. உடல்
8. அஞ்சி ஓடும்
9. பாதகர்க்கு; ர, ற;
10. வேறு; று அலகு பெருமை; உச்சரிப்பு
11. தண்ணீர்உண்டோ; உச்சரிப்பு;
12. பச்சென்ற இடத்தில் நின்று இளைப்பாற; [ர]
13. வெப்பம்
14. ஜலம்; அ-எ
15. காந்தி சொற் பொருட்பின் வரு நிலையணி

275. எங்கே நிழலுமுண்டு? எவ்விடத்தில் [1]தண்ணீருண்டு?
பொங்கும் பனியாலும் பொல்லாத வாடையாலும்
நடுக்குங் குளிராலே நடுநடுங்கி மேல்[2]குறுகி
கொடுக்கும்பனிக் காற்றுமல் கொடியதி [3]எங்கேயுண்டு?
சொல்லுவீர்' என்று துடிதுடித்துப் பாவியர்கள்

280. கொல்லும் புலிக்கஞ்சிக் குறுமுயல்தான் ஓடினபோல்
எமதூதர்க் கஞ்சி ஏக்கமுற்று 'அய்யோ'வென
தமதுடலும் நோகச் [4]சளப்பட்டு தான்நடந்து
பொய்சொல்லா ஏமன் புகழான பட்டணத்தை
மெ(ய்)ப்பதறத் தேடி விரைந்தோடு வார்களய்யோ!

285. இந்தப் படியேதான் எமதூத ரானவர்கள்
விந்தைசெறி ஏமன்முன்னே விட்டார்காண் பாவிகளை.
அப் பொழுது தானெமனர் [5]ஆங்காரங் கோபமொடு
செப்பமுட னேகடைவாய்ச் [6]சிங்கப்பெரும் பல்லில்ங்க
[7]அகண்டவட்ட வாயும் அனலும் கரும்புகையும்

290. [8]உகந்தபெருங் கண்முழியும் ஒங்கும்[9]புரு வக்காலும்
வட்டப்பெரு [10]நெத்தியு மலைபோல் தடிமூக்கும்,
நெட்டைப் பருமுகமும் நெடிய பருவுதடும்,
பாங்கில்லாப் பாதகர்தான் பதைத்து நடுநடுங்க
ஓங்கும் இடிபோல் ஒலிக்கும் பெருங்குரலும்,

295. படரும் அலைதங்கும் பாரக் கடலையுண்ணும்
வடவாக் கினிபோல வளர்ந்த தலை[11]மயிரும்
சிவந்தஆ டையுடுத்திச் சிவந்த[12]ஆடைசாத்தி
சிவந்தமா லைசாத்தும் திரண்ட பெருமார்பும்
பாரமலைப் பாம்புகள்போல் பதினெட்டுத் தோளிலங்க

300. வீரம் உடனே மிகுத்த கருமயிர்கள்
அம்புக் கணைபோல அடர்ந்திருக்க மேனியெல்லாம்

---

1. தண்ணிருண்டு என ஒலிக்கும்போதும்
2. [குறுகி] ர-ற: உ இ: மாருட்டம்
3. எங்கெயுண்டு என ஒலிக்கும்போதும்
4. நடுங்கி-தளர்ந்து-சலம்
5. செருக்கு
6. 'சிங்க பெரும்' என ஒலிக்கும்
7. அகன்ற
8. [உகண்ட]-(தாவும்) என்பது எதுகைக் காம்; உருத்த என்றுமாம்
9. புருவத்தின் கூடை
10. நெற்றி த-ற
11. நீப்போல்ற செம்மயிர்
12. வாடைஎன்றிருக்கலாம் வாடை = மணம் மணமுள்ள சந்தனம்; சாத்தி = பூசி ஆடை முன்னது கீழாடை; பின்னது மேலாடை என்றும் கொள்ளலாம்

வெம்புங் கரும்புகையும் வெய்ய அனல்பொறியும்
சிந்தும்ரத்தக் கண்ணும் [1]சிலுத்த கொடுமுகமும்
இந்துவட்டம் போல்வகீர்ந்து[2] இருக்கும் கரியகொம்பும்

305. [3]கால முடிவில் [4]ககன இடியேறு
போல ஒலிக்கும் பொல்லாப் பெருங்கனைப்பும்,
ஓங்கு [மிருமுகமும்] உகந்த கருமுகிலும்
பாங்குடனே கூடிப் பரிவாய்த் திரண்டதுபோல்
க[5]ருக்குங் கருமேனி கரிய [6]கிடாமீதில்

310. இருக்கும் [7]உத்தண்டம் எவராலுஞ் சொல்லரிது.
ஆலமொடு வேல்[8]குலிசம் சொல்லும்மழு அங்குசமும்
கால தண்டம் வில்லுங் கனத்த இருப்புலக்கை
பாசக் கயிறு[9]பிண்டி பால முதலாக
பேசும் பதினெட்டுப் பெரிய [10]படையிலங்க

315. கையிலங்கத் தீப்பொறிதான் [11]கதிக்குமிரு கண்ணிலங்க
மெய்யிலங்கு வேர்வை வெதும்பி மயிர்சிலுக்க
அண்டமெல்லாம் ஓரடியால் அடித்து [12]நொருக் குங்காலன்
தண்டந் தனையெடுத்துத் [13]தானேங்கி யேசுமற்றி
கடைவாப்பல் நெருங்கக் கடகடென்று தான்கடித்து

320. விடமூச் செறிந்து வெம்பாவி யைச்சீறி
சத்தலோ கந்தனையும் சத்தசா கரந்தனையும்
[14]அஸ்த கிரிமுதலாய் அட்ட வரைதனையும்
பாதாள பூமியையும் பருநாக்கி ஞல்வகீர்ந்து
[15]மேதாக வெம்பசிக்கு வி[16]ழுங்குவோம்' என்றுஎண்ணும்

325. உக்கி ரமனமும் ஓடுங்காப் பெருமூச்சும்
வக்கிரப் பல்காட்டி மழைமேகம் போலவேதான்

---

1. சிலிர்த்த; உ-இ மாருட்டம்; இடையில் ர் ஒலியாமை
2. [யி]
3. பிரளய காலம்;
4. வான
5. [ரு] ற-ர
6. கடா; அ-இ மாருட்டம்
7. கொடுமைதீலை; இறுமாப்பு; உம்மை தொக்கும் விரிந்தும் அடுக்கி வந்தமை காண்க
8. வச்சிராயுதம்
9. வீசி எறி கட்டி
10. படையும் ஒளிர; படைபிடித்தகையும் ஒளிர; இலங்க சோற்பொருட் பின் வரு நீலையனி
11. கதிர்க்கும் ஒளிரும்
12. நொறுக்கும் ர-ற
13. தான் ஒக்கியே-தன்னினை பிறவினை மயக்கம்
14. அத்த கிரி என இருத்தல் வேண்டும்
15. "மேதக" அல்லது "மேலாக" என்ப தன் மரூஉ ஆகலாம்
16. [ள]

காலனே டுமிருத்துக் கடியகுண மாமாரி
ஆலகா ல-விஷம்போல் அகோர நெடுமாரி
துய்ய இருட்டும் சொல்லும்பெருங் கோபங்களும்
செய்யதொரு நோய்கள் [1]இதுவெல்லாம் பக்கமதில்
தூதரைப் போலவேதான் [2]துடின உருவெடுத்து
சாதுவாய்க் கா[ர்]த்திருந்து தா[3]னூழி யங்கள்செய்து
இருக்குங் கொடுங்காலன் இனிய பெருஞ்சபையில்
க[4]ருக்குங் கருமுகில்போல் காட்சியுள்ள மாதூதர்
ஆவி நடுநடுங்க அய்யோ எனப்படதறும்
பாவிகளைக் கொண்டுசென்று பாங்காக விட்டிடவே,
அப்போ தெமராசன் அக்கினிபோல் கண்முழித்து
வெப்ப முடன்சீறி [5]வெரிக்கவே தான்பார்த்து
உதட்டை மிகமடித்து [6]உருக்கியே பல்கடித்து
அதட்டிஇடி [7]யேர்போல அக்கினிமூச் சு[8]வெ[9]ரிந்து
காலதெண் டாயுதத்தைக் கையால் எடுத்தசைத்து
கோல முடியசைத்துக் கொடுங்கண் மிகச்சுழல
உதடு மிகத்துடிக்க ஓங்குபுரு வம்வளைய
[10]விதரிய கோபமொடு மேலுங்கீ ழும்பார்த்து
தீங்கான பாதகர்தன் தேகம் நடுநடுங்க
பாங்கான [11]ஏமன் பார்த்து மிகவுரைப்பான்

விருத்தம்(3)

புண்ணியத்தின் நிலைசிறிதும் எண்ணுமல்
மறத்தொழிலைப் புரிந்து தீமை
பண்ணியபா வத்தொழிலீர் [[12]வந்தாமோ]
வருகவென்று பகரும் வேறு
நண்ணினர்மு கம்பார்த்து நரபதியாய்
இருந்துலகை நடுங்கக் கண்ட
கண்ணிறையர் [[13]வந்தாமோ] வருகவிங்கே
வருகவெனக் கனன்று கூறும்[14].

---

1. இவை எல்லாம்
2. கொடுமையான உருவிருந்தும் எமனெ தீர் சாந்தமாய் இருந்து—முரணணி
3. சிறுவேலே
4. [று] ர-ற
5. வெறிக்க
6 ஷ 4
7. ஏறு (இடியேறு) 'று' அலகு பெருது; உச்சரிப்பு; ற-ர;
8. குற்றியலுகரம் கெடவில்லே;
9. [ரி] ர-ற
10. விதறிய=பதறிய; நடுங்கிய; ர-ற
11. [யே] உச்சரிப்பு
12. வந்தீரோ அல்லது வந்தாயோ
13. ஷ 12
14. அறுசீர் விருத்தம்; 4 காய்-மா-தேமா எனவரும்

நடை

வண்ணமுட னேகூட வருந்துணையாம் என்றுசொல்லிப்
புண்ணியத்தை எண்ணிப் பொருந்தவே செய்யாமல்
[1]கோதுடனே மாபாவக் கொடுந்தொழிலைச் செய்யுகின்ற
பாதகரே! வந்தீரோ! பாவியரே தான்வாரும்'[2]
என்று முகம்பார்த்து எரிஎனவே தான்கூறி
தின்று விடுவார்போல் திரும்பவுமே கூறிடுவான்
பூவுலகிலே நீதான் புகழான வேந்தனென
ஓவியமா கப்பிறந்து உலகம் நடுநடுங்க
[3]பாளாக வேகொடுமை பண்ணியமா பாதகரே!
தேளான பாவியரே [4]தின்மைசெய்த வஞ்சகரே!
வந்தீரோ! வந்தீரோ! வாரும்வா ரு'மெனவே
செந்தீப் பொறியச் சினந்துபின்னுஞ் சொல்லிடுவான்
'இளமையி னுலும் இனிய அழகினுலும்
வளமையி னுலும் மன[5]தெக்க ளிப்பாலும்
தடுப்பார்கள் இல்லையென்று தழைக்கும் மதத்தாலும்
[6]கடுப்பார் முரசதிரக் கலியாணஞ் செய்தபெண்ணை
[7]தன்னூர் மனைகடந்து தானே பிறதாரம்
தன்னை மிகவிரும்புஞ் சண்டாளப் பாதகரே!
வன்னமுடன் இங்கே வந்தாயோ வந்தாயோ[8]
அன்னைதந் தையரழுக அரியமன்னன் முன்மயங்க
எளியோர் மன்திடைந்து யேங்கியேங் கியழுக
பழிசேரும் மாபாவம் பலிக்குமென்றும் எண்ணுமல்
அகாடக் [9]கடமை அடித்து மிகவாங்கும்
மகாபாவி! யிங்கே வந்தனையோ! வந்தனையோ!

---

1. பயனற்ற செயலுடனே
2. வரவேற்புப் போல வருகிறது இழிவுக் குறிப்பு
3. பாழாக-எதுகை நோக்குக
4. தீமை
5. எக்களிப்பு=பெரு மகிழ்ச்சி எக்கு+களிப்பு எனப் பிரிக்கும் Tamil Laxicon; ஹெக்களிக் என்பதன் இடம்; பெ என்பதே ஹெ எனவும் எனவே பெ(i) களிப்பு என்பதே பழைய வடிவம் கன்னடத்திலிருந்து தமிழில் வந்துளது
6. கடிப்பு+ஆர் முரசடிக்கும் கோல் பொருந்திய; எதுகை நோக்குக; இ-உ மாறுட்டம்
7. தன் அரிய வீடு
8. பாதகரே-வந்தாயோ பன்மை ஒருமை மயக்கம் இழிவுக் குறிப்பு
9. அகாட-அகாத மிகுதியால கடமை; கடமை=வரி

எப்போதும் பூமி எமக்கே நிலமை[1]யென்று
[2]கைப்பான பாவங் கனக்கவே செய்துவய்யோ
கோடிகா லம்நரகில் குளித்துக் கிடப்பதற்கு
ஓடியே வந்த உளப்பாத கா!வாரீர்![3]
துய்ய பெரியவரைத் துளபமணி மாயவனைச்

செய்ய செழுமகுடச் சிவனை வணங்காத
வன் கொடுமை யாளர்களே! வாரும்! வாரும் நீங்கள்!
தனம்பொருந்து மாவுலகில் தாய்வேந்த ரெய்ப்பிறந்து
தன்மத்தைச் செய்யாமல் சதியான பாவமெனும்
கன்மத்தைச் செய்தீரே! [4]காணியாட் சிபோல

அந்த வுலகும் அழகான எக்களிப்பும்
விந்தையுள்ள ராசாங்க வீறும் நிசமாச்சோ[5]?
எல்லாம் இழந்து இப்போது தானி[6]தான்
பொல்லா நரகமதில் போய்விழுகப் போறீரே!
குங்குமங் கஸ்தூரி கோதில்லா நற்சாந்து

பொங்கும்[7]வா டைப்புலுகு பூசி [8]ஒயிலாக
மல்லிகைப் பூமேலே மாசில்லாப் பொற்[9]புடவை
மெல்ல விரித்து விளங்க[10]சப்ர மஞ்சமதில்
[11]மோடி யுடனுறங்கும் முத்தானமேனிதனைப்
[12]போட நரகுதனில் பொருந்தியிங்கே வந்தீரோ![13]

என்னவகை சொல்லுவீர் இனிய தவமறியீர்!
நன்னயமா க-நீங்கள் நம்முடைய தூதருக்கு.

---

1. நீலமை-நீலியானது; அ-ஐ மாருட்டம்
2. எ எல்பதோடு கை(கய்) எதுகையில் வரல் காண்க; மொழிமுதலும் கை ஒருமாத்திரையே கைப்பு=பிறருக்கு வெறுப்பாவ; துன்பமான
3. பாதகா வாரீர் ஒருமை; பன்மை; வாரீர் இழிவு சிறப்புத்தோன்றும்; நையாண்டியுமாம்
4. முழு உரிமையோடிருந்தது போலே முடிய உன்மையாய் நீலியானதாய் முடிந்ததோ
5. ஆச்சோ=ஆயிற்றே!
6. நீ-போறீரே (போகிறீரே)
7. வாசனை
8. ஆடம்பரமாக, அழகாக
9. துணி-விரிப்பு
10. மேற்கட்டோடு உள்ள கட்டில் சப்ரம்+மஞ்சம்
11. கம்பீரமாக; கோலமாக
12. நரகுதனில் போட-முன்பின்னாதல்
13. அந்த நாளில் மக்கள் மனத்தை உறுத்தி பாவச் செயல்களை இந்த வரிசையில் காண்க

விருத்தம்(4)

[1]அத்தலையில் உமக்கிதமாய் அ[2]னீதகளைக்
கற்பனை [3]செய் தமைச்சர் தாமுஞ்
சுத்தமுறும் வேதியர்க்குந் [4]தேவருக்கும்'
இடர்வினைத்த துணைவர் தாமுந்
தத்துதிரை சூழுலகில் அறமகல
[5]அமர்வள(ர்)த்த தானை யோரும்,
[6]இத்தலையில் அடைந்திலரே தனியடைந்த
வாயினித்தான் என்செய் வீரே[7].

நடை

அ[8]ன்னாள் உனக்கு அநீதகளைக் [9]கற்பனையாய்
சொன்ன அமைச்சரெங்கே? துர்ப்புத்தி யாகவேதான்
வேதப் பிராமணரை, மிக்கஅன்ன சத்திரத்தை,
நீத முடன்தன்மம் நிறைந்த சிவாலயத்தை,
[10]பங்கப் படுத்திப் பரிவாக வேகெடுக்க
அங்குனக்குச் சொன்ன அன்பான தோழரெங்கே?
தன்மம் இல்லாமல் தயவாய் உனக்கேதான்
கன்மப் பலிக்குப்படி கட்டாகப் புத்திமிக
சொன்ன பேர்எங்கே? [11]சுகியான பேர்களெங்கே?
அன்னவர்க ளுங்கூட அன்பாக வந்தனரோ?
நீமாத் திரந்தனியே நி[12]ருயுதனுய் வந்தனையே!
[13]ஏமாத் திரந்துணைதான் இங்குகூட்டி வந்திலையே?
[14]இன்னியென்ன செய்வாய்' என்று அகோரநமன்
உன்னி உரைத்து [15]உத்தண்ட மாய்ச்சிறி

---

1. அங்கே; உலகில்
2. நீதி
3. செய்யமைச்சர் என்றிருக்கலாம்; செய்த அமைச்சர் என்றுமாம்
4. கோயில் கடவுளர்
5. போர்
6. இங்கே-எமனுலகுக்கு
7. அறுசீர் விருத்தம் முன்போன்றது
8. ந்நா
9. போதனை; காரிய ஏற்பாடு-சூழ்ச்சி
10. இடையூறு
11. செல்வாய் இன்ப மனுபவிப்போராய்த் தோன்றிப் புத்திமதி சொன்னவர்
12. நிராயுதனுய்; ரண மாருட்டம்; படையின்றிப் போதனை செய்து துணையாய் இருந்தவர்; அவனுக்கு ஆயுதம்போலிருந்தனர் என்பது த்வனிக்கின்றது. [ம்]
13. ஏமாத்தி = ஏமார்த்துகிற (வற்புறுத்தும்) ஏமாத்திரம் சிறிது அளவும் என்பது ஏமாத்திரம் என்றுவந்திருக்கலாம்; ஏ இழிவுக் குறிப்பாய் சிறிது அளவு என்றும் பொருளாம்
14. இனி
15. உக்கிரமாய்

415. அண்டங் குலுங்க அதட்டியே பல்கடித்து
சண்டன்மகா சண்டனென்று தான் சொல்லுந் தூதர்தனை
கண்ணுல் மிகநோக்கிக் 'கடியதொரு பாவவினை
[1]எண்ணுமல் செய்தான் இவனை எழுநரகில்
தள்ளுவீர்' என்று [2]சண்டன் உரைக்குமுன்னே
420. துள்ளியே தூதர் துடினம் என எழுந்து
பாதகர் தன்காலைப் பரிவாக வேசேர்த்து
[3]போதமென வேவாரி புலிபோல் மிகச்சினந்து
ஓங்கியே [4]சுத்தி உயரவே தான்தூக்கி
பாங்குடன்கற் பாறையிலே பதற உடல்தகற[5]
425. மண்டை சித[6]ற [7]மாமூளை சிந்திவிழ
கண்டம் ஒடியக் கண்முழி பிதுங்கிவிழ
அடிப்பார்கள் அய்யோ! அடிபட்டுப் பாவியர்கள்
துடிப்பார்கள் [8]மூச்சையெனச் சோர்ந்து கிடப்பார்கள்.
மயக்க முடன்சோர்ந்து மண்ணில் கிடப்பவரை
430. தியக்கந்தீ ரும்படியாய்ச் சிறப்பாக நீர்தெளித்து
பின்னிறுகச் சேர்த்தும் பிடித்தடித்து(ம்) முன்னும்பின்னும்
தள்ளிவெகு தண்டனையாய்த் தாக்கியே பாதகரை[9],
சுடுபா தகமானோர் சோர்ந்து அழுந்துவது
கொடிதாக வேயிருபத் தெட்டுக்கோ டி-நரகம்.
435. இருபத்தெட் டுக்கோடி ஏற்ற நரகினுக்கு
வரிசையுட னே[10]பேரு [11]வழுத்துகிறேம் நீர்கேளீர்!

---

1. வினாவினைப் பொருட்படுத்தாமல்
2. எமன்; சண்டன் என்ற தூதன்
3. யானைக்குட்டி என்றுமாம்; எமன் சொல் வதனைக் கீழ்ப்படிந்து புத்திபுத்தி என்று கூறி என்றுமாகலாம்; போத எனவே = மிகுதியாகஎன்றுமாம்; மவ மாருட்டமாம்
4. சுற்றி
5. ர ற
6. ஷ 5
7. அவர்கள் வாழ்ந்தபோது செருக்கிய 'மாமூளை' எனஇழிவுக் குறிப்பு
8. மூர்ச்சை = அறிவிழந்து விழுந்தநிலை
9. பாதகரை(த்) தாக்கியே என முன்பின் மாறிவரும்; தாக்கியே = தாக்கவே என்பதன் திரிவாம்; வாக்கியம் முற் றெருதொடராய் நின்றது; இரண் டாம் வேற்றுமையாய் வந்தது போக முதல் வேற்றுமையாகப் பாதகமா னோர் என வருகிறது. அழுந்துவது நரகம் என முடியும்
10. உகரச்சாரியை
11. கூறுகிறேம் என்ற பொருளில் வருகிறது

விருத்தம்(5)

பூநிலந்தான் தென்றிசைபோய் முடிந்த இடம்
இயமாபு ரிக்குத் தெற்காய்
மாநரகக் குழாமனைத்தும் ஏழுபுவி
கீழ்பாத லத்தில் வைகும்
மாநரகப் பேர்கள்தனை யனைத்தினு[1]க்கும்
பேருரைக்கி னளவை அன்றுல்
440. ஊன[2]மிலாஒருகோடி நரகத்துக்
கொருபேராய் உரைத்தும் மன்னே[3]

நடை

பூமிபோய்த் தெற்கே பொருந்துமிடம் ஏமபுரம்
அமராபதிக்கும் அடித்தற்குத் [4]மாநரகம்.
பாதாள மட்டும் பரிவான ஆழமதாய்
கோதார் நரகக் குழாமிருபத் தெண்கோடி.
445. இருபத்தெண் கோடி ஏற்ற நரகினுக்கு
வரிசையுடன் பேருசொல்ல மாவரிது கண்டீரே!
கோடிநர கத்துக்கு கூறியபே ரொன்றுக
நாடிருபத் தெண்கோடி நரகினுக்கும் பேர்கேளும்!
[5]கோரை கோரகோரை அதிகோரை மகாகோரை
450. வீரிய கோரரூபை மிக்க[6]தரளதரை
சொல்லிய [7]பயானகையாந் தூயகா ளா ராத்திரி
வல்லிய [8]பயோற்கடம் வாட்டுங் கொடியசண்டை
தீய மகாசண்டை செப்பரிய [9]கோலாகலி
காயும் [10]பிரசண்[11]டை கடிதான [12]தாள்ப்பதுமை

---

1. [னும்]
2. [முடி]
3 அறுசீர் விருத்தம் முன்போன்றது
4. மாநகரம் என இருக்கலாம்
5. [கோரை, கோரை, அதிய கோரை, மகாகோரை] அம் என்ற வடமொழி யில் முடிவன எல்லாம் இங்கு ஐ என முடிந்துள்ளன
6. [காளா தரை]
7. [ம]
8. [பொற் கடம்பி]
9. சண்டகோலாகலம்
10. சண்ட தரம்
11. [டம்]
12. தாட்பதுமை = தாள் = தாமரையின் தா ளம்; சரோருஹம் என்ற வடமொழிப் பெயர் பதுமம்என்றே பொருள்படும்

455. பதிய [1]சலசவதி பகர்வி[2]மை [3]வீசனீயாம்
அதியகொடு [4]கரனீயாம் அடங்கார் வி[4a]கரனீயாம்
விரிவச் [5]சிரையுடனே வெய்ய [6]திரிகோணி
பரிவான பஞ்சகோணி பகட்டுஞ் [7]சுதீற்கையாம்
கொடிய[8]பரி வத்[9]துனீயாம் கூறும் [10]எழுபூமி

460. நெடிய[11]அட்டப்பூமி நினைக்கரிய [12]தீர்க்கமாயை
இப்படிப் பேர்தான் இருபத்தெண் [13]கோடினுக்கும்
செப்புகின்ற பேருஞ் சிறந்திருபத் தெட்டாகும்.
இருபத்தெட் டுப்பேரும் இசைத்த நரகினுக்கு
ஒருநரகுக் கஞ்சு [14]வுயர்ந்த [15]நிசமானுக

465. வளரும் நரகம் மாநூத்தி[16] நாற்பதுதான்
தள(ர்)வில்[17] கொடிதாகத் தழைக்கும்ரா ச-நரகம்
இந்த நரகம் இனியநூத்து நாற்பதுக்கும்
விந்தையுட னேபேரும் விளம்பவே நீர்கேளும்!
ஆதியாம் [18]ரவ்வுரவம் அழல் கொதிக்கும் [19]ரவ்வுரவம்

470. [20]சீதம் பெறுநரகம் தீய்க்குமுஷ்ண மாநரகம்
சுகோரம் எனும்நரகம் சு[ரே]தீக் கணநரகம்
அகோர மெனும்நரகம் அனல் சஞ்சீ [21]வனநரகம்
[22]மாயை நரகம் வதிலோப மா[ன]நரகம்
காயு மகாபதுமம் கர[ா]ளமா ன-நரகம்

475. காலசூத் திரநரகம் [23]கம்ப[ன்] மிடைநகரம்
கோலமிகு [24]சூசிமுகம் [25]கொடுஅசிபத் திரநரகம்
வாட்டிய[சுப் பிரதீபம்] [வம்பிரதாச் சின]நரகம்

---

1. [மிர்தி மீமை]
2. [மம்]
3. வீம வீஷனம் ஷ=ச எனை இந்நூலில் வருகிறது
4. [சு]
4a. ஒ 4
5. குலிசம் இதன் மறுபெயர் வச்சிரம்
6. [வ]
7. தீக்கதரம் என வழங்கும்
8. பரிவத்துளம்
9. [த]
10. [மகா புதுமை] சப்தபூமி என்றுமிருக்கலாம்
11. [வட்டப் புதுமை]
12. [மாதீர்த்தை] தீர்க்கஜலி; மாயை என்ற இரண்டு நரகங்களாம்; மாயை தீர்க்கை என்றிருக்கலாம்
13. கோடியினுக்கும்; உச்சரிப்பு; கோடு =கோடி என்றும் இருக்கலாம்
14. வ் உடம்படுமெய்
15. நியமமாகஎன்றும்; நிசமான ஆழமான என்றுமாம்
16. நூற்று
17. தளர்வு இல்
18. ரௌரவம்
19. மறா ரௌரவம் "மாரவ்ரவம்" அல்லது மாநரகம் என்றிருக்கலாம்
20. தாங்கக் கூடாத குளிராய் இருப்பது தாருணம் அல்லது தாமசம்
21. [வி]
22. [மாய்கை]
23. மேதஸ்தம்பம்
24. ஊசிமுனைத்தது
25. [கொடியகவத்]

[1]கோட்டி செய்யுங் [2]கும்பி கொடியபா கநரகம்
வீழுஞ்[3]சுவர[க] நரகம் மிகு[ரூப] மாநரகம்
480. தா[4]மூரத்தச் சீநரகம் தாக்கிரும்புத் [துண்டபுள்ளு]
மாரியெழு [மாசவத்தம்] மலிந்திடு [5]மாங்கிச நரகம்
[சீரியலங்கிராக]நரகஞ் சித்தமிகு [6]பங்க [7]லோகம்
[8]பூதிமாங் கியநரகம் பொல்லா[9]ஸத் திரநரகம்
காதிசெறி [சுவறசமொடு]கரிய [10]நிச்சு வாநரகம்
485. [சுப்பிரபா க]நரகம் சொல்லிய [11][நா க]நரகம
வெப்புமிகு [சம்மவியே] மிகுப்[பிரபா க]நரகம்
கருங்கரடி வாழ்நரகம் கடியகுண நாய்நரகம்
எருமையெனும் நரகம் எழுந்த [12]விருர் நிநரகம்
பாயுங் கிடாய்நரகம் பகுங்காக்கை சூழ்நரகம்
490. ஆயுங்க ழுகுநரகம் அடற்பாம்பு சூழ்நரகம்
கடிக்கும் நரிநரகம் கவ்வியஆ மைநரகம்
அடிக்கும் புலிநரகம் அடர்பருந்து வாழ்நரகம்
பொங்கு [13]கண் டகநரகம் [14]பூதி பூர்ண நரகம்
வெங்கொடிய [தாக்கம் விபூதிமிருத்தி கை]நரகம்
495. [கசலுங் கொடிநரகம் காத்துடாக் கினி]நரகம்
விசுறுங்கி ருமிக்குழியாய் வெதும்பியவா கீர்நரகம்
[சருவவுண் டி]நரகம் தழைக்குங்கருங் [15]கட்டமொடு
மரமிகுந்த பாழ்நரகம் வழுத்துதற்கு சங்கடமே.

விருத்தம்(6)

[எண்ணு மிசாலம் பினவிகடம் எரிவாய் கொழுகருங் கங்கடமை
500. வண்ணப் புரீடங்க மாதிவிரி வைதாணி யழல்காந்த
திண்ண நெருப்பு முலீப்படுக்கை செழுந்தா ரணம்பின்
[பூரணமும்
பண்ணுங் கொடுமை யசிதார வனமு மத்திப் பங்களுமே[16].]

---

1. துன்பம்
2. கும்பிபாக
3. நாய் வடிவானது
4. மூ
5. மாம்சநரகம்
6. சேறு வடிவான நரகம்
7. உலோகம் உருக்கி வார்த்த நரகம்
8. பூதி மாம்சம் அழுகிய இறைச்சி யுள் எது
9. வாள்
10. நிருச்சுவாச நரகம்; உச்சுவாசம்;
11. பாம்புகள் நிறைந்தது; பின்னையும் பாம்பு சூழ் நரகம் என வருகிறது
12. விருச்சிகம் = தேள்
13. முள்
14. [வத்திர]
15. மலம்; நரக குண்டம் எனக் கூறப்பெறுவன இப்படியெல்லாம் இருக்குமாம்
16. 2 மா-காய் இரட்டித்து அறுசீராய் வரும் விருத்தம்

நடை

கண்ணுக்குந் தோற்றுமல் கடூரமா ன-வெளியில்
எண்ணுதற்கு எட்டாம லிருண்டு விசாலமதாய்
பா(ர்)த்த கண்ணுந் தீயப் பாவியர்கள், கையாலே,
பூத்த நெருப்பைப் [1]போதமென வாரியுண்டு
வெடிக்கவே காய்ந்து வெதும்பு நெருப் பு[2]மூளை
படுக்கை யெனஅழன்று பரதவிக்கு மாகொடிய
பனங்காடு பத்திப் படர்ந்த செழுஞ்சேறும்
கனங்காட்டும் [பிற்பீடகம்] காதிசேர்செக் கு-நரகம்
திரிகைதனில் மாவையிட்டுத் திரிக்குங் கதைபோல
எரியும் அழல்திரிகை இட்டரைக்கு மாநரகம்
ஆலிவா யில்கரும்பை ஆட்டுங் கதைபோலச்
[3]சாலமுள்ன பாதகரைத் தானுட்டி ய-நகரம்
சூரு வளிபோலச் சுழன்முடிக்கு மாநரகம்
[4]காரூட்ட மாகக் காந்துஞ்சுண்ணும் பு-நரகம்
அக்கினி(சு) வ(ா)லநரகம் [5]அலகுசூ ல-நரகம்
மிக்க பலவிதமாய் விளங்கிய [வேதபாதம்]
எரிக்குஞ் சவக்குழியாம் [6]சு[ய்]மொய் மலக்குழியாம்
உருக்கும் இருப்புலக்கை [7]ஊணும் ஒருநரகம்
செக்கச் சிவந்த தீ[ய்]நரகஞ் [8]சீ[ய்]நரகம்
மிக்கதிரி பாதமென விளம்பும் நரகமய்யோ
இந்தப் படியேதான் இருபத்தெண் கோடியென
விந்தை யுடன்சொன்ன வெய்ய நரகுதன்னில்
[9]அகட விகடமதாய் ஆச்சரிய மாகவேதான்
பகருமிரு பத்[10]தெட்டு பரிவான பேருடனே
இருக்கும் நரகமுதல் எல்லா நரகிலேயும்
பெருக்க முடன்தூதர் பேரான பாதகர்த[ர்]ன்
நல்வினையுந் தீவினையும் இரண்டும் பகுந்தறிந்து

---

1. போதம்-போனகம்-உணவு
2. மூளை
3. கூட்டமான அல்லது வஞ்சனையான
4. காரு=சலசை; அல்லது வைரம்கொ ளல்; காருதலும் ஆம்
5. இலேலியாகப் பிரிந்த
6. சு மொய்
7. ஊன்றும்
8. சீ=சீழ்
9. சோதனை சேர்த்தும்; சேர்பவை தாறுமாறுகச் சேர்த்தும் வேடிக்கை யாய் இருப்பது
10. [தெழு]

530. வல்ல கணக்கன் வாசிக்க யேமனவன்
நடுவாக வேபார்த்து [1]நற்கொடிய பாவிகளே
கொடிதாக வேசீறிக் கோபித்து யிந்நரகில்
தள்ளுதள்ளு' என்றுசொல்ல சற்று [2]மனதிரங்கார்
[3]கொள்ளித் தலைதாதர் கொடுநரகில் தள்ளிடுவார்.

விருத்தம்(7).

535. செம்பொன் கலந்த களிம்பறவே தீ[ய்]வா யுருகு மதுபோல
வெம்புந் தீமை யறுமளவும் நிறைய அழலில் வெதும்பிடுவார்
பம்பும் பாவ [4]செடத்தாலே பாரில் புல்லாய்ப் புழுவாகி
நம்புஞ் [5]சிறைப்புள் ளாய்விலங்காய்ப் பசுவாய்ப்
[பின்னே நரராவார்[5a]

நடை

பொன்னில் கலந்து பூரித்த செம்பாலே
540. வன்னியெனுந் தீயுலையில் வைத்துருக்கு வார்போலப்
பாதகர் தன்னுடைய பாங்கான தீமையய்யோ!
கோது அறுமளவுங் கொடிய நரகமெனும்
தீயில் கிடந்து தியங்கி வெதும்பியவர்
[6]தூய்மையுடன் செய்த தோசத்தால் மண்ணுலகில்
545. புல்லாக வும்பிறந்து புழுவாக வும்பிறந்து
சொல்லாரும் பட்சியதாய்த் தொல்மிருகச் சாதியுமாய்
தானே பிறந்து தக்கபசு வாய்ப் பிறந்து
மானிட சென்மமென மண்ணுலகி லேபிறப்பார்.'
என்றுநாலு பெண்களுந்தான் இனிதான தந்தையர்க்கு
550. நன்றியுடன் சொல்லி நவிலுவார் பின்னுலும்:
'அன்னையரே! இந்த அதிசயமெல் லாம்நாங்கள்
வன்ன மறலி வளருகின்ற பட்டணத்தில்
ஓர்[7]பா திசமிருந்து ஓவியமாப்ப் பார்த்திருந்தோம்
பார்மேவும் யேமயுரி பட்[8]டிணத் தோர்திசையில்

---

1. மிகக்கொடிய
2. மனதிரங்காரான தூதர்
3. கொள்ளிக் கட்டை எரிபோலச் சிவந்த தலை
4. உடம்பு
5. இறக்கையுள்ள பறவை

5a. 4-மா 2-காய் அறுசீர் விருத்தம்

6. தூமை-தூய்தன்மை - தன்மை இல்லாமை-அல்லது அப்பட்டமான (தோஷம்) என்றும் கொள்ளலாம்

7. பக்க

8. ட

555. கண்ட புதுமையிது. [1]காணுது யெவ்வளவோ!
[2]அண்டரிது தெண்டனீ தான் [3]அறக்கொடிது சொல்லரிது!'
என்னவே தந்தையர்க்கு யினிதான பெண்களுந்தான்
சொன்னவுடன் தாய்தகப்பன் துடித்து மனம்பதறி
ஏங்கி [4]யசந்து யிடிவிழுந்த [5]பாம்புமென

560. பாங்குடைய பெண்கள்தனைப் பார்த்து மனமறுகி
'போதும் போ தும்! நீங்கள் புகன்றமொழி போதுமய்யோ!
காதுகுளி ரக்கேட்டோங் கடிதாகச் சொன்னீரே!'
என்று [6]கஸ்திப் பட்டு யிக்கொடுமை யைநினைந்து
ஒன்றுமறி யாதவர்போல் ஒடுங்கி மயக்கமதாய்

565. மண்ணில் விழுந்தார் மயக்கம் பெரிதானர்.
வண்ணமுள்ள யேமபுரி மாகொடுமை யைக்கேட்டு
அசந்துதான் மூர்ச்சையென அங்கு கிடந்தவரை
இசைந்த [7]தன் மங்கையர்கள் இருகையா லேதாங்கி
மெல்லவே தானெடுத்து மெய்துடைத்துக் கணனீரைச்

570. [8]செல்லக்கை யால்துடைத்து தேறுதலாய் வார்த்தைசொல்லி
'வருந்தவும் நீர்வேண்டாம். மயக்கமதை விட்டுவிடும்.
''பொருந்துங் கவலைஎன்ன [9]பொல்லாமயங்குவதேன்
உங்களுக்கு வேறே ஒருதுன் பம் வாராது.
பொங்கமுடன் மாகஸ்நானம் புனலாடி னதாலும்

575. புரு[10]சனே தெய்வமென்று போந்து [11]பணிவிடைதான்
வரிசையுட னே[12]நீங்கள் மகிழ்ந்து [13]நடந்ததாலும்
உங்களுக்குப் பாவம் ஒருநாளும் இல்லை'யென்று
இங்கிதமாய்ச் சொல்லி இன்னும் பலதுரைப்பார்:
'புண்ணியத்தை நாளும் பொருந்தி[14]செய்த பேர்களுக்கும்

580. வண்ணமுடன் எக்கியங்கள் வாகாய் வளர்த்தவர்க்கும்
[15]தழைக்கும்பஞ் சாக்கினியில் தவசுசெய்யும் பேர்களுக்கும்

---

1. காணுதது
2. அண்ட அரிது
3. [ஆர] மிக
4. அயர்ந்து
5. உம்மைபொருளின்றி இசை நிறையாக வருவது காண்க
6. கஷ்டம்
7. அவர்களது பெண்கள்என்ற பொருளில் 'தன் மங்கையர்கள்' வந்துளது
8. செல்வக்கை
9. பொல்லாததாய்; பெயர் எச்சமாக வருவது வினைஎச்சமாக வந்துளது
10. ஆ
11. குற்றேவல்
12. தாய்மாரைக் குறிக்கும்
13. நடத்தியதாலும்; பணிவிடை என்பதனை அடியோடு விட்டு வேறு வாக்கியம் போல் போவது பேச்சுநடை
14. வலி மிகவில்லை
15. தனைக்கும் என்ற உச்சரிப்பே யெழுதக் காண்

வகீக்குங் கடல்சூழ்ந்த மண்ணுலகின் [1]நேர்த்தியல்லால்
பின்னவே றில்லை[ப்] பிரமலோ கந்தனக்கும்,
வன்ன நறுந்துளப மாலோன் பதிதனக்கும்,
செங்கைதனில் மானெடுத்த சிவனுர் பதிதனக்கும்,
பொங்க முடனேதான் போகின்ற பேர்களுந்தான்
இந்த உலகுதனில் இருந்துதான் புண்ணியங்கள்
விந்தையுடன் செய்தவர்கள். வேறில்லை கண்டீரே!
தூயபுண்ணி யங்கள்செய்து சொர்க்கத்தைச் [2]சேருவரும்
தீய கொடுமைசெய்து தீ[ய்]நரகஞ் சேருவரும்
இந்தப் புவியில் இருப்பவரே அல்லாமல்
விந்தை யுடனே [3]வேற்புவியோர் இல்லை. அய்யோ!
மனிதர் எனஉலகில் வந்து பிறப்பதுதான்
இனிதாக வேயரிது. [4]யிசையாப் பிறந்தாலும்
எண்ணியே புண்ணியத்தை யி[5]ட்டமுடன் செய்யாமல்
வண்ணமில்லாப் பாவம் வளர்ப்பார்கள் பாவியர்கள்.
ஆனதி னுலே அன்பாக நல்வழிகள்
ஆன துணைத்தேடி அறிவுடைய புண்ணியர்கள்
பாவத்தை நீக்கிப் பரிவான புண்ணியத்தை
மேவியில்ல றத்திருந்து விமலர் துணையாக
கற்புடைய மாதர்களும் கருணையுள்ள [6]யாடவரும்
பொற்பு நிறைபெரியோர் தன்னையே பூசைசெய்வீர்!
தீயான பாவவினை தீயெனவே தள்ளிவைத்து
[7]மாயான புண்ணியத்தை வளர்த்திடுவீர்! உத்தமரே!
நாடு துணைவருமோ? நல்மனைவி மைந்தரொடு
தேடுந் திரவியஞ் சிறந்தஉற வின்முறையும்
வாழ்வுந் துணைவருமோ? மனையுந் துணைவருமோ?
[8]பாழிதுகாண் மாயம்! பாங்கான மின்னொளிதான்!
[9]ஆத்து [10]வருத்தபோல் அடர்ந்த பெருவாழ்வு

---

1. சிறப்பு
2. சேருவாரும்; இடையே நெடில் முழுதும் ஒலியாது போலும்
3. வேறு என்பது வேற் அல்லது வேர் என்றே ஒலிக்கப்பெறும்
4. இயைந்து; இசைவா(க)
5. [ஷ்ட்]
6. 'ய்' உடம்படு மெய்
7. மாஆன = மகத்தான 'ய்' உடம்படு மெய்
8. இது = இதோ தோன்றும் இவை யெல்லாம் பாழ்; சூனியம்; வெறுங் காட்சி
9. ஆற்று
10. வருத்து = வரவு; வெள்ளப்பெருக்கு

610. [1]நீத்திவிடும், ஆக்கை நிலையா தொருநாளும்.
ஆனதி னுலே அமரபட்சம் [2]பூருவபட்சம்
தானிரண்டு பக்கமதில் தழைக்குமே காதேசி
விரதம் வழுவாமல் மெய்யாகச் செய்துவந்தால்
வருமினிது புண்ணியங்கள்; மாயோன் பதிகொடுக்கும்;

615. பாவங் களேநீக்கிப் பாங்கான [3]புண்ணியநதி
மேவியே யாடி வெகுபுண்ணிய மேபெறுவீர்!
மாகஸ்நா னந்தான் மறவாமல் ஆடிவந்தால்
பாகொத்த சொல்லாள் பார்வதிநே யன்பதியை
சேருவார்' என்று செப்பமுடன் நால்வருந்தான்

620. பாரினிய தந்தையர்க்கும் டரிவாய் [4]இனங்களுக்கும்
சொன்னர்கள் இம்மடவார். சொன்ன படியேதான்
பொன்னன தன்மம் புகழ்மீறு மாகஸ்நானம்
ஆடிப் பலனடைந்து அழகுகற் பகநாடு
தேடிக் குடியேறிச் சிறப்பாக வாழ்வாரே. 624.

ஒன்பதாம் அத்தியாயம் முற்றும்

---

1. நீத்துவிடும்
2. பூர்வபட்சம் என ஒலிப்பர் போலும்;
அமர (அபர) = பின்; பூர்வ = முன்;
நீரை நிங்களுக்குப் பின் முன்; தேய் பிறை வளர்பிறை
3. புண்ய நதிஎன ஒலிப்பர் போலும்
4. சுற்றத்தாருக்கும்

பத்தாம் அத்தியாயம்

புக்கரன் கதை

விருத்தம்(1)

என்று மாதவ வதிட்டனு மனமகிழ்ந் துரைப்ப
நன்று நன்றெனக் கேட்டுணர் நரபதி திலீபன்
வென்ற தீவினை முனிவரன் விளம்பிய கதையுள்
ஒன்று கேட்டிட விருப்பமுண் டுரைத்தியென் றுரைத்தார்[1]

நடை

5. விந்தை செறியும் இனிய தவவதிட்டன்
சிந்தை கனியத் திலீபதி [2]ராசனுக்கு
முன்னடந்த மாகதையை முற்றும் எடுத்தோத,
அன்னவனுங் கேட்டு [3]ஆக மிகமகிழ்ந்து
பரிவாக வேவதிட்டர் பாதந் தனைப்பணிந்து
10. வரிசையுட னேதொழுது மன்னவனும் பின்னுரைப்பான்
'எந்தன் குருவே! யெம்பிரா னே!யெனக்கு
விந்தை யுடனே விளம்பினீர்! இக்கதைக்குள்
இன்னம் ஒரு [4]செய்தி எளியேனுன் [5]கேள்க்குகிறேன்.
வன்னத் தவமுனியே! வரிசையுட னேயுரைப்பீர்!
15. பாங்குடைய மாமறலி பட்டணத்தின் விஸ்தீர்ணம்
ஓங்குமெனப் பத்தாயிரம் யோச னேயெனவே
தேவரீர் தொண்டனுக்குத் தெரியவே செப்பினதால்,
மாவிசால மாயிருக்கும் மாமறலி பட்டணத்தில்
இந்தநா லு பெண்களுந்தான் எத்தனைநாள் அங்கிருந்தார்?
20. விந்தையுட னேபிழைத்து மேதினியி லேதானும்
அவர்கள் வருமளவும் அவர்களுட [6]சரீரம்,

---

1. இச்செய்யுள் மா-விளம்-மா என 5 சீர் வரும் கலித்துறை
2. ர மொழி முதல்
3. மனம்
4. [illegible]
5. கேட்க்றேன்-'கு'
6. சரீரம் என்பதன்பின் பிற வந்தும் 'தான்' வருதல் காண்க. அது என்ற பொருள் போலும். சரீரம் என விட்டொழித்துப் பின் அது எனச் சுட்டு வது போலாம்

தவஞ்சேர் மகாமுனியே! தானழியா ம-லிருந்த
காரணமும் [1]எந்தனுக்கு [2]கட்டாகச் சொல்லு'மென்று
[3]சீரனைங்கு மாவேந்தன் [4]தேசிகனைத் தான்கேட்க
அப்போதி லேவதிட்டர் அழகு திலீபனுக்கு
செப்பம் உடனே சிலது கதை [5]யுரைப்பான்

விருத்தம்(2)

வெய்ய தீயவர் எமபுரத் தெல்லையை மேவ
அய்யி ரண்டுடன் இரண்டுநாள் சென்றிடும் அரசே!
துய்ய நன்னிலை [6]யாளரோர் நிமிஷத்தில் துலைப்பார்
தைய லாருமோர் திங்கள(ச்) சமன்பதி யு[7]றைந்தே[8]

நடை

கொடிதாக வேவளரும் [9]கூத்தன் பதிதனக்கு
நெடிதான புண்ணியர்கள் நிமிஷத்தில் போய்ச்சேர்வார்.
அரிதான தன்மமின்றி அறக்கொடுமை பாவியர்கள்
பரிவாக வேதான் [10]பனிரெண்டு [11]நாளில்சேருவார்.
இந்தநாலு பெண்களுந்தான் எமன்பதியில் ஓர்மாசம்
சிந்தைகனிந் தே[12]விருந்தார். திலீபதிமன் னு!கேள்மோ!
இப்படியே யங்[13]கிருக்கி லினிய மிருகசிங்கன்
செப்பமுட னேதவசு செய்யுங் கொடுமையினால்
[14]சண்டனு [3]மோ வந்தான்காண்! தவயோகி சொன்னபடி
வண்டலரும் பூங்கூந்தல் மடவார் பிழைத்தார்காண்.

---

1. எல்லாவனுக்கு-எங்கும் இவ்வாறே வருவது இந்நூல் வழக்கு
2. ஒன்றுகத் தீர்ட்டி ஒர்அமைப்பாக
3. சீர் பொருந்திய
4. குருவை
5. வதிட்டர் உரைப்பான்என வரல் காண்க; பழைய செய்யுள் வழக்கும் புதிய பேச்சு நடையும் கலத்தல்
6. [யாளலே]
7. [ரை]
8. முன்னது போன்ற கலித்துறை; இப் பாட்டுக் குளகமாய், முடியாது வந்து-னது; வேறு ஒருநூலில் இருந்து எடுத்ததுபோலும்
9. கூற்றுவன் என்பது: கூற்றன் எனவும் வரும்; த, ற
10. பன்னிரண்டு; உச்சரிப்பு
11. நாளில் சேர்வார் என ஒலிப்பர் போலும்
12. 'வ்' உடம்படு மெய்
13. இருக்கையில் என்ற பொருளில் இருக்கில் வருகிறது; இந்நூல் வழக்கு
14. சண்டனுமே ஓ-ஓ போலப் பிரிநிலை தேற்றம் என்ற பொருளில் வருகிறது

வடிவான மாவேந்தா! வளரும் அருந்தவத்தால்
முடியாத காரியந்தான் மூவுலகி லேயுமுண்டோ?
ஆனதினுல் [1]உந்தனுக்கு அறியவுமே சொல்லுகிறேம்.
மானிடர்கள் வாழும் மண்ணுலகி லேதானும்
மாண்ட உடலதுதான், மன்னு! முதல்யுகத்தில்
[2]ஏண்டலரும் மங்காமல் இருக்குமொரு மண்டலந்தான்.
நன்னயமா க-வளரும் ரண்டாம் யுகந்தனிலே
வன்னமுடன் முப்பதுநாள் வரைக்கும் இருந்திடுங்காண்.
வருமினிய மன்னுகேள்! வளரும்மூன் றுயுகத்தில்
இருபதுநாள் மட்டும் இருக்கும் அழியாமல்.
இந்தக் கலியுகத்தில் இறந்தவுடல் [3]சோராமல்
[4]சொந்தமுடன் பத்திரமாய்ச் [5]சோரவிட்டே வைத்திருந்தால்
பத்துநாள் தானிருக்கும் பழுதுமிக வாராமல்.
சத்தியமாய்ச் சொன்னேம், தாவேந்தா! யின்னமுங்கேள்!
இந்தநல்ல பெண்களுந்தான் இசைக்கும் [6]அவமிருத்தால்
மூன்றும் யுகத்தில் முழுதுமே மாண்டார்கள்.
மாண்டுமவர் போனலும் [7]அழியாம லேகட்டு
[8]ஏண்டதொரு மூப்பதுநாள் இருந்ததுகாண் சோராமல்
செத்த [9]பிரே[கி]தத்தைத் [10]தீமாலே சூட்டாமல்
உற்ற மனிதனிலே ஓவியமாய் வைத்திருந்தால்
'வேதப் பிராமணர்க்கு வேத[11]மென்ன? காலமென்ன?
ஒதுசிவ பூசையென்ன? உற்றநேம நிஷ்டையென்ன?
பூண்ட கருமமென்ன? போசனங்கள் தானுமென்ன?
[12]தீண்டல்அல்லோ?' என்று தேர்வேந்தா நீகேட்டால்
அதுக்குவகை தானுமுண்டு அரிய பிரே[கி]தத்தை

---

1. உன்தனுக்கு
2. ஏந்து அலரும் த-ட மாருட்டம்
3. வாடாமல்
4. உரியதீலியில்
5. எண்ணெய் இறங்க [சோரவிடுதே]
6. அகால மரணம்
7. கட்டு அழியாமல்; முன் பின்னுக வந்-துளது
8. ஏன்றது ஒரு; ற-ட
9. [ரே] கி வந்துளது காண்க
10. நெருப்பில் எரித்தலேந் தீமாலே சூட்டு தல் என்கிறர்
11. என்ன ஆகும்
12. தீட்டு

[1]புதுப்பித்து மண்மீதில் [2]போட்டாலே தீண்டல்கண்டாய்!
அலங்காரஞ் செய்யாமல், அன்றுசெத்த காயமதை
மலங்காமண் தீண்டாமல் வைத்திருந்தால் தீண்டலில்லே
என்றுதான் வேதமெல்லாம் இன்பமுட னே[3]சொல்லுது.
70. நன்றுதான்! [4]குத்தமில்லே; [5]ஞாயமிது; தீண்டலில்லே;
ஆனதால் இந்த அரிவையர்கள் [6]தன்னுடலே
தேனினிய வேதியர்கள் சிறப்பாய் அலங்காரம்
செய்யாமல் மண்ணுமிகத் தீண்டாமல் பத்திரமாய்
தூய்[7]எண்ணெப் பத்தலிட்டுச் சோ[8]ராமல் வைத்திருந்தார்.
75. இந்தப் படியேதான் இறந்துதிரும் பப்பிழைத்து
வந்தவர்கள் மெத்தஉண்டு மன்னவா! கேட்டிலேயோ?
இன்னம் உனக்கே இனிதாய் ஒருகதைதான்
நன்னயமாய்ச் சொல்லுகிறேம். ராசனே நீகேள்மோ!
திருந்து முதலுகத்தில் செ[9]றிந்த [10]நந்தி யில்மறையோன்
80. இருந்தான். அவன்மடிந்து [11]இயம புரம்புகுந்து
அந்தகனைக் கண்டு அநேக நரகமதில்
விந்தை யுடன்கிடந்து, மெலிகின்ற பாவிகளை
பாங்காய்க் கரை[12]ஏத்திப் பழைய படிகூட்டில்
ஆங்கே அவனுழைந்து அன்பாக வாழ்ந்திருந்தான்.
85. நாட்டும் புகழ்மணக்கும் இரண்டாம் யுகந்தனிலே
தீட்டிய வாள்ராமன் செங்கோல் வளர்நாளில்
வேதப் பிராமணன்ருன் விரும்பியே பெற்றெடுத்த
போதச் சிறுபாலன் பொன்போல வேமடிந்து
பின்னும் பிழைத்தகதை, பெருமானே! ஒன்றுமுண்டு.
90. இன்னமும்நீ கேளா யினியமூன் ரும்யுகத்தில்
வா[13]சுதேவ ரானவரும் மணக்கும்புகழ் தம்பியொடு.

---

1. குளிப்பாட்டி அலங்கரித்து
2. போட்டால் மட்டுமே; ஏ பிரிதீலே; போட்டுவிட்டால் என்ற பொருள்
3. சொல்லுகிறது
4. குற்றம் இல்லே
5. நியாயம்; முறை
6. தம்முடலே
7. எண்ணெய்த் தொட்டி
8. [ரு]
9. [றி]
10. நந்தி என்ற ஊரில்
11. ய மொழி முதலாகாதென இகரம் றிந்திலில் பெற்று வருகிறது
12. ஏற்றி
13. [சி]

வீசுபுக ழானதொரு விஞ்சைமந்தி ரம்படிக்க
தப்பிதமில் லாவேத சாத்திரமெல் லாபறிந்து
ஒப்பில்லா வேதியன்பால் உகந்துமந்தி ரம்ப[1]டிக்கில்
அம்மறையோன் பிள்ளை அலைமோது மாகடலில்
செம்மையுட னே[2]குளிக்கில் சீறுங் கொடுமுதலை
கொன்று [3]வதுதின்னக் கொடிதாய் மடிந்தபிள்ளை
வென்றியுட னேமீண்டு மேதினியில் வந்தகதை
உண்டுகாண். இப்படியே உலகத்தி லேமடிந்து
சண்டனூர் [4]புக்கியல்லோ தான்செய்த புண்ணியத்தால்
வேண்டிய பேரிந்த மேதினியி லேபிழைத்து
நீண்ட சுகமுற்று நிரம்பவளர்ந் தா'னெனவே
வன்னத் தவவதிட்டன் வரிசையுட னேகூற
பொன்னின் மகுடம் புனைந்த திலீபதிதான்
பரிவாக வேகேட்டுப் பரமகுரு வைவணங்கி
'அரிதான மாதவனே அய்யனே என்குருவே!
மண்ணில் இறந்து மறலி பதிபுகுந்து
வண்ணமுள்ள [5]காயம் வரிசையாய் அழியாமுன்
பிழைத்தவர் [6]தன்கதையைப் பெருமை யுடனேதான்
தழைக்குஞ் சடையீர்! தான்சொல்ல வேணு'மென
மண்டலத்தை யாளும் மாமன்ன வன்கேட்க
அண்டர் புகழ்வதிட்டன் அன்புடனே சொல்லிடுவான்:
'ந்தியம் பதியெனவே, ராசனே ஓர்பதிதான்.
விந்தைசெறி யப்பதியில் வேதப் பிராமணரில்
காலையந்தி நேமநிஷ்டை கடிய சிவபூசை
மேலும்வெகு நீதமொடும் இனிய[7]தப்ப னத்துடனே
மந்திர கருமம் வழுவாமல் மாகஸ்நானம்
விந்தையுடன் செய்திடுவோன் மிக்கசிவ தோத்திரங்கள்

---

1. படிக்கையிலே
2. குளிக்கையிலே
3. வ்-உடம்படுமெய்
4. புக்கு அல்லோ; உரம்-இகரம்போல் ஒலிக்கப்பெறுவது காண்க
5. உடம்பு
6. தம்
7. தர்ப்பணம்; ர்-இடையில் ஒலியாமை; ன-ண மாருட்டம்

[1]தன்னை,மகா தான தன்மகிமை தப்பாதான்;[2]
சொன்ன மொழிமறவான்; தூயபுனி தமுள்ளோன்;
திரிகாலம் எக்கியங்கள் செய்து வருமறையோன்;
அரிதான புண்ணியத்தை அன்பாய் வளர்த்திடுவோன்;
[3]புக்கரன் என்று புகலுகின்ற பேருடையோன்;
செக்கர்வான் திங்கள் சேருஞ் சடையானை
அன்பாய் மனதிலுன்னி [4]ஆனகிளை சுற்றமொடு
பொன்போல் மனைவியொடு பொருந்துமில் ல[5]றத்திருந்து
தேவர் பெருமான்போல் சிறந்த[6]போக போக்கியங்கள்
ஓவியமாய்த் துய்த்து உலகில்வளர் நாளையிலே,
பாங்கான மாமலி பக்கத்தில் நிற்கின்ற
ஆங்காரத் தூதர்தனை அனல்போல் மிகநோக்கி
'விந்தையுடன் பூவுலகில் விரைந்து மிகவேகி
நந்திப்பட் டணந்தனிலே நான்மறையோர் தங்களிலே
வாழுகின்ற புக்கலனை வாகுடனே யேபிடித்து
சூழுகின்ற பாசமிட்டுத் துடினமென வேகீங்கள்
கொண்டுவா ரும்'எனவே கூத்தன் மிகக்கூற,
சண்டனைப் போல்தூதர் தான்விரைந்து பூவுலகில்
நந்திப்பட்ட ணம்புகுந்து [7]நற்பேர் மயக்கமதாய்
விந்தையுள்ள புக்கலனை விட்டு [8]யகோரமென
கொடிய நமன்தூதர் கூறுகின்ற புக்கரனை
வடிவாக வேபிடித்து மறலிமுன்னே விட்டனர்காண்!
அப்பொழுதி லேயெமனும் அரிதான புக்கரனை
செப்ப முடன்கண்டே திடீரென் றெழுந்திருந்து
எதிராய் நடந்துவந்து இனியமலர் வாய்திறந்து

---

1. தன்னை-தப்பாதால்; தன்மகிமை தப்பா தான் முடிபு காண்க
2. தப்பாதாஞய் என்றெல்லாம் கொள்க
3. புக்கலன் எனப் பின் மயங்கும்; ல-ர
4. கிளையான
5. [ர]
6 இன்ப அனுபவப் பொருள்கள்
7. புக்கலன் என்ற பெயரைப் புக்கரன்என மயங்கி உண்மையான புக்கலனை விட்டுவிட்டுப் பெயர் மயக்கத்தால் புக்கரன் என்பவனைக் கொண்டு சென்றனர்; ர, ல மயக்கம்
8. [ய்] ய, உடம்படுமெய்

'துதிசேரும் புண்ணியரே' யென்றுபல [ஸ்]தோத்திரமாய்

சொல்லியுப சாரமொடு தூய்[1]கையி லாகுதனில்
மெல்லமெல்லக் கூட்டிவந்து விளங்கியபீ டத்தில்வைத்து
கருணை முகம்நோக்கிக் கனிவாக வார்த்தைசொல்லி
விரிவான பஞ்ச [2]விடையங் களையறுத்து
மாதவா! [3]யின்ன மண்ணுலகி லேநீர்தான்
போதமுட னேவாழ புண்ணியரே நாளிருக்க
இப்போ [4]திடைமத்தியில் இங்கேநீர் தான்[5]வரவும்
செப்பமுடன் நான்காணச் செய்தமகா புண்ணியந்தான்'
என்று [6]வெகுவாக எமராச னு-முரைத்து
வென்றியுள்ள தூதர்தன்னை வெ[7]றிக்கவெறிக் கச்சீறி
'கொடிதான புக்கலனைக் கொண்டுவரச் சொன்னதற்கு
வடிவான தன்மமொடு வாழ்ந்திருக்கும் புண்ணியரை
கொண்டிங்கே வந்தீரே! கொடியமகா தூதர்களே!
அண்டர் புகழும் அரியதன்ம [8]சாலிதன்னை
இப்பொழுது கூட்டிவந்தீர் என்ன இது?கொடுமை!
செப்பமுடி யாதெனவே சீறியந்தத் தூதர்தன்னை
'பாங்குடனே நீங்கள் பண்ணியகுற் றப்பொறுத்தோம்.
தீங்கில்லாப் புண்ணியரைச் சீக்கிரத்தி லே[9]நீங்கள்
கொண்டுபோய் நீங்களிவர் கூட்டிலே விட்டுவிட்டு
[10]வண்டலனும் புக்கலனை [11]வன்மையாய்க் கொணரு'மெனக்
கூத்தன் மிகவுரைத்துக் குணமான புக்கரனை
பார்த்துவெகு அன்புடனே பரிவாகக் கூறிடுவான்:
'நீரிங்கே வந்ததினல் நின்னுடைய [12]மாசனங்கள்
பார்தனிலே மெத்தப் பதறிப் [13]புலம்புதுகாண்!

---

1. கை இலாகு-பிறர் கைகளை மரியாதையாகத் தாங்கி நடத்தல்
2. ஐம்புலன்; ஐம்பொறிகள் கண்டு மயங்குவனவற்றை
3. ய் உடம்படு மெய்; இ என்பதன் உச்சரிப்பு
4. இடைமதியில் என்று ஒலிப்பர் போலும்
5. வரவும்=வருதலும் புண்ணியம்
6. மிக என்ற பொருளில் வெகுவாக என வழங்குவது காண்க
7. [றி] ர-ற
8. சாலி என முடியும் சொற்கள் பல
9. தவறு செய்ததன் காரணமாக நீங்கள் நீங்கள் எனப் பன்முறை கூறி வற் புறுத்துகின்றார் போலும்
10. வண்டன்=மின்டன்-மறவன்; ல எ
11. [ன்] எ, ணை;
12. பெருஞ் சுற்றம்
13. "மாசனங்கள் புலம்புது" என்ற வழக்கு கீனைக் காண்க

ஆனதினுல், வேதியரே! அன்னேர் பயங்காமல்
தானிப்போ தேகு'மென்று சண்டன் மிகச்சொலவே,
நல்லதொரு புக்கரனும் நமனே மிகப்பார்த்து
சொல்லு வான்அந்த தூயநம னுக்கேதான்.
'நன்னயஞ்சேர் அந்தகனே! நட்பான நாயகனே!
உன்னுடைய பட்டணத்தி லுள்ள புதுமைமுதல்
கொடிய நரகுங், கொடுநரகி லேகிடந்து
மடியாமல் மாயும் மாபாவி யர்துயரும்,
தெண்டனையும் பொல்லாத தீங்கான காரியமும்,
கண்டுநான் [1]போறதற்குக் காவலனே! கீர்விடைதான்
தாரு'மென வேதியனும் தானே மகிழ்ந்துரைக்க,
வீரியஞ்சேர் மாமறலி [2]'மெத்தவே நல்ல'தென்று
புண்ணிய வானுன புக்கரனே யுங்கூட்டி
வண்ணமுள்ள [3]யேமபுரம் வடிவையெல்லாந் தான்காட்டி
பாவியர்கள் தான்கிடந்து பதறிப் பதறிய[4]யப்போ
ஆவி குலையும் அருநரகுங் காட்டினரே.
[5]நாயுண்டி ரவ்வுரவம் நடுக்குமகா ரவ்வுரவும்
காயுங்கொடு விசசனமுங் காந்திய[6]வுப் புச்[7]சேறும்
[8]கத்திக்கா டு-கொடிய [9]காலாக்கினி [மயானம்]
[10]பத்தித் துளைக்கும்[11](ரம்) பங் [12]கிருமிப் பங்கணமும்
ஊடுரு விப்பாயும் உற்ற [13]புழு[கு]க்குழியும்
நாடி [14]யகண்டிருக்கும் நற்கொடிய [15]தீச்சேறும்
வ[16]றுத்தமண [17]க்காடு [18]வாளிரு(ள்) [19]சூ கரமரமும்

---

1. 'போகிறது' கிற 'ற' அல்லது 'ர'என்றே முழுதும் கெட்டோ வருதலின் அவ் வாறே பதிப்பிக்கப்பெறும்
2. 'மெத்த நல்லது' என்ற வழக்கினைக் காண்க
3. 'ய்' உடம்படுமெய்; ஏ என்பதன் உச் சரிப்புமாம்
4. அப்போது; 'து' கெட்டது
5. சுவாபோனம்; சாரமேயாதனம்
6. லவணம்
7. பங்கம்
8. அசிபத்ர வனம்
9. கால சூத்'ரம்' அல்லது கும்பிபாகம் வல்லீச் சுவாலம்
10. பற்றி
11. க்ரகச் சேதம்; சஸ்திரம்
12. க்ருமி பக்ஷம்
13. க்ருமீசம்; புழுரு எனக் 'கு' சற்றிச் வரும் போதும்
14 அகன்றிருக்கும்
15. மகாபங்கம்
16. [ரு]
17 ற்
18. 'அந்ததா மிச்ரகம்; தாமசம்
19. பல்றி; [ற] கூட சால்மலி; றறும் என் றும் இருக்கலாம் சூர்ப்பகருண்டம்

கறுத்துருக்கும் வைதரணி; கடியதொரு தீப்பாறை[1]
இப்படியே சொல்லும் எண்ணவொண்ணுப் பாழ்நரகில்
வெப்ப முடனழுந்தி [2]மெலியுகின்றோர் மேனிமுற்றும்
195. அட்[3]டை [த்] துளைக்க அடர்ந்துகரு நாய்கடிக்க
எட்டியே நீர்நாய் [4]இழுக்கச்சில பேர்கிடப்பார்[5]
புண்ணுக மேனியெல்லாம் புழு[கு]ச்சொரியச் சீயோடே
[6]அண்ணுந்து நீக்கழுமேல், அய்யோ! சிலர்கிடப்பார்
இருப்புநெடு வூசிதன்னை யெரியவே தான்கா(ய்)ச்சி
200. நெருப்பெரியக் கண்[7]ணுதனில் நிறுத்தியழு வார்சிலர்கள்
[8]சென்னீர் ஒழுகத் திரண்டு[9]ரண்டுந் தான்சோர
புண்ணீருங் கண்ணீரும் [10]பொசிந்து[11]பிதிர் விட்டோட
பாரப் பனங்கருக்கால் பதறச் சதைகள்தன்னை
கோரத் துடனரிந்து கொடுநாயின் முன்போட்டு,
205. வன்னமுள்ள வாளரத்தால் [12]வதைக்கச் சதைகள்தன்னை
சின்னஞ்சின் னமாகச் சிதற வறுத்தபுண்ணில்
உப்புநீ ரைக்கா(ய்)ச்சி [13]வூத்துவார் தான்பதற
செப்புக் குதிரைதனைத் தீ[ய்]ப்போல வேகா(ய்)ச்சி
அக்குதிரை மேலே அரும்பா தகர்தனையே
210. [14]தைக்க [15]யிருத்த தானமுவார் அய்யோசிலர்
மலையுச்சி யிலே [16]த்தி [17]வர்மமுடன் தள்ளிடவே

---

1. நரகின்பெயர்கள் நரகத்தின் இயல்பைக் குறிக்கும்; அங்கங்குள்ள கொடுமையில் நரகர் வாடுவர்
2. மெலிகின்றோர் பகுதி உகரம் பெறல்
3. வலி மிகவேண்டாதஇடத்தில் மிக்கு வருகிறது
4. 'இழுக்க சில' என ஒலிப்பர் போலும்
5. எதிர் காலம் பயின்று நிகழ்தலைக் குறிக்கும்
6. மேல்நோக்கி
7. உகரச் சாரியை
8. செந்நீர் = இரத்தம்; ந, ன; ண் என்பதனோடு எதுகை கொள்வது காண்க. ன ண
9. இரண்டு கன்கள்; ர மொழி முதல்; இரண்டு என்பதன் உச்சரிப்பு
10. கசிந்து
11. பிதிர்ந்த துளிகளாய் வெளிப்பட்டுப் பலதுளி பெரு வெள்ளமாய்
12. பதைக்க
13. [வூ] ஊ என்பதன் உச்சரிப்பு; ஊற்று வார்; த ற
14. உறைக்க
15. ய், உடம்படு மெய்; யி-என்பதன் உச்சரிப்பு மாம்
16. ஏற்றி; த ற
17. உட் பகை

தலைதகர மூளைசிந்த தான்விழுந்து [1]தானழுவார்.
கொடிய பனியாலுங்-[2]கொடுகொடுத்த [3]காத்தாலும்
நடுநடுங்கி மெத்த நடுங்குவார் அய்யோ!சிலர்.
இப்படியே பாழ்நரகில் [4]இடைந்துமகா[ப்] பாவியர்கள்
வெப்ப முடன்கிடந்து வெ[5]ருவி யழுவாரை
மெய்யான புக்கரன்முன் மெத்த விரக்கமுடன்
'அய்யோ' வெனப்பார்த்து அருள்கண்ணீர் தான்சோர,
நீதான பாழ்நரகில் நியங்கி மயக்கமொடு
பேய்போல் [6]அலற்றும் பெரும்பாவி கள்முகத்தை
கண்ணுலே நோக்கிக் கருணையுட னே'நீங்கள்
புண்ணியங்கள் செய்யாமல் [7]போனீர்களோ' என்முனே[8].
[9]என்று பிராமணன்தா னிரக்கமுட னேகேட்க
நன்றிசெய்யாப் பாதகர்தான் நடுங்கி மிகக்[10]கூர்வார்:
'பூவுலகில் புண்ணியங்கள் போதவே செய்யு[11]கின்ற
தேவரீர் நாங்கள்செய்த தீவினையை நீர்கேளும்!
புண்ணியத்தைச் செய்யாமல் [12]போதவே பூவுலகில்
எண்ணரிய பாவம் இனிப்பாகச் செய்ததினுல்
பேய்போல் அல[13]றிப் பிதற்றி மகாகொடிய
[14]தீயிலேயும் பாழ்நரகில் நியங்குகிறேம். புண்ணியரே!
கொடிய கொல்களவு கூசாம லேபுரிந்து
சுடுங்கொடிய தீ[ய்]நரகில் துடிக்கிறேம். மாதவரே!
மாலையிட்ட மங்கையுல்லாள் மனையிலிருந் தேவாட
[15]சாலமுடன் அய்யோ! தழைக்கும் [16]இடும்பாலே

---

1. தான், சோறுபொருட்பின் வருநிலையினை என ஆசிரியர் கருதுகிறர் போலும்
2. குளிரால் நடுங்கச்செய்யும்
3. காற்றலும்; க, ற
4. சோர்ந்து
5. [று]
6. [த்து]
7. [போலிகளோ]
8. ஏ சற்றசை; ஒஇன்றி வந்தால் செய்யுள் எனத் தோன்றவில்லை போலும்; வினை முற்றின இவ்வாறு சற்றசை யோடு கூறுவதனை விலக்கப் பெய ருக்கு முன்அடி நடுவே வைப்பதும் காண்க
9. அந்தாதித் தொடர் காண்க
10. கூறுவர்; று-ர் என ஒலித்தல் காண்க; எதிர்காலம் "பின் வருவதுபோலப் பேசினர்" எனக் குறிக்கும்
11. உகரச் சாரியை பெற்றுச் செய்யு என வரல் காண்க
12. மிகவே
13. [றி]
14. தீயைக் காட்டிலும் பாழான (நரகடிய)
15. ஏமாற்றம்; நடிப்பு
16. செருக்கு; கொடுமை

235. பிறதார மேலாசைப் பிடித்து விரும்பினதால்
அரிதான பாழ்நரகில் அய்யோ! [1]உழறுகிறோம்.
கன்றிசெய்த பேர்தனக்கு நவிலரிய துன்ப[2]மிட்டோம்.
மன்றில் இருந்து வழக்கோரம் [3]பேசுகின்றோம்.
தன்னுயிர்போல் மன்னுயிரைத் தானெண்ணிப் பாராமல்

240. வன்னமுள்ள சீவசெந்து மயங்கித் துடிதுடிக்க
கொன்று[4]வயர் தான்வளர்த்தோம். கூவிதனே யேகுறைத்தோம்.
[5]கன்றுக்குப் பாலில்லாமல் கட்டி மிகக்க[6]றந்தோம்.
வேதப் பிராமணரை மிக்க[ப்] பெரியவரை
[7]கோதுடனே வாயாலே குற்றமுறப் பேசுகின்றோம்.

245. கண்ணிலேயுங் கண்டறியாக் கடுப்பா தகப்பிழையை
மண்ணிலேதான் [8]சொன்னவினை மாநரகில் வாடுகிறோம்.
வஞ்சனைகள் செய்தோம்; [9]வாய்மதங்கள் [10]பேசுகின்றோம்.
தஞ்சமென்ரு ரைக்கெடுத்தோம். [11]சாட்சிநிசம் என்றுரைத்
[தோம்.
எளியோரைத் தானடித்தோம். இரப்பவர்க்கு மிட்டறியோம்.

250. வழியடைத்தோம். ஈன்றெடுத்த மாதாவைத் தானடித்தோம்.
தந்தை பசித்திருக்கத் தாயார் மிகவாட
விந்தையுட னே[12]பொசித்த [13]வினையால் அழுந்துகிறோம்.
வந்த விருந்தைவிட்டு வாசல் கதவடைத்து
நிந்தனை யாகவீட்டில் நேசமுடன் உண்டிருந்தோம்.

255. [14]வீட்டில் நெருப்பையிட்டோம்; மிக்கான கறபழித்தோம்.
[15]தாட்டிமையால் மேலவரைத் தான்பேசி னேங்கொடுமை.
தன்மந் தனையழித்தோம்; [16]தன்பிறப்பைத் தானிகழ்ந்தோம்.
கன்மமென்று பாராமல் [17]கல்(ப்)பணியைத் தானழித்தோம்.

---

1. [கு] கலங்குகிறோம் ர-ற; உழலுகிறோம் என்றும் இருந்திருக்கலாம் ர-ல
2. செய்தோம்; அன்னமிட்டோம் என்பது போன்றே தீ யிட்டோம் என்பது போன்றே கொள்ளலாம்
3. நிகழ் காலம் வரல் காண்க. பேசி நின்றோம் என்றுகலாம்
4. வயிறு என்பது வயர் என வரும்
5. புளி மாங்காய்
6. [ர]
7. கோது, குற்றம் என வேறுபடுத்தல் காண்க. பயனிலாச் சொல்லும் கொடிய சொல்லுமாம்; இம்மைப் பயனும் மறுமைப் பயனும் என வேறுபடுத்தலாம்
8. வீண்பழியாகக் கற்பித்துச் சொன்ன
9. வாய்க் கொழுப்பு; மதியாது பேசும் செருக்கு
10. நிகழ்காலம் இறந்த காலத்தின் இடையே வருகிறது; பேசி நின்றோம் என இருக்கலாம்
11. பொய்ச் சாட்சி
12. பு
13. (வினைக்குக் காரணமான) செயல்
14. ஆத்தாயிகள்
15. செருக்கு
16. உடன் பிறந்தார்
17. கற்கோயில் முதலியன

கருப்பந் தனையழித்தோம்; கடிய மருந்தையிட்டோம்;
பெருக்கமுடன் பிச்சையிட்டுப் பேராக வாழ்ந்தறியோம்.
தாகமுடன் ஓடிவந்து [1]தண்ணீர்குடிக் கும்பசுவை
[2]மோகமுட னேகலித்தோம் முதியாரைத் [3]தூசணித்தோம்.
ஒருதெய்வத் தைவணங்கி [4]ஒருதெய்வத்தை யேபழித்து
[5]பெருமையுடன் பேசினதால் பெரு[6]ணைத்தி லேகிடந்தோம்.
கற்றோரைத் தான்பழித்தோம்; கன்னியரை [7]வேறுபண்ணி
பெற்றோரை விட்டுப் பிறர்மனையி லேவாழ்ந்தோம்.
வன்னச் சமர்முகத்தில் மாவேந் தனைவிடுத்து
[8]தன்னுயிரை பேணித் தானோடி வந்துவிட்டோம்.
நல்லவிர தந்தனிலும் நல்லமாவா [9]சி-தனிலும்.
சொல்லும் [10]பவுரணியில் தூயதீர்த் தக்கரையில்,
செங்கண்மால் ஈசன் திருவளர்நல் லிடந்தனிலும்
பொங்கமுட னேஸ்திரீயைப் பொருந்த [11]அனுசரித்தோம்.
கொடுப்பார் அருகிருந்து 'கொடுக்காதே' என்றுசொல்லி
[12]தடுப்பாக வார்த்தைஅய்யோ! தான்சொன்ன [13]தீயாலே
வெய்ய கொடுநரகில் விழுந்து கொடியபுழு
மெய்யைத் துளைக்க மெலிவுகொண்டோம். புண்ணியரே!
மாகமா ஸந்தனிலே வாகுடனே மாகஸ்நானம்
ஆக மிகமகிழ ஆடியறி யோமய்யோ!
[14]அன்புடனே மாகஸ்நானம் ஆடுகின்ற புண்ணிய[15]ரை
[16]தன்னிடும்பா லேபேசித் தான்பழித்தோந் [17]தோணுமல்.

---

1. "தண்ணீ குடிக்கும்" என்ற ஒலி
2. (செருக்கின்) மயக்கத்தால்
3. தூஷணை என்பதிலிருந்து பிறக்கும் வினை; தூஷி என்ற பகுதியும் உண்டு
4. வேறொரு
5. செருக்கினால் பழித்துப் பேசினதால்; பேசுதல் இகழ்தல் என்ற பொருளில் வருகிறது; உடன் = ஆல் என்றும் பொருள்படல் காண்க
6. கொழுப்பு மயமான நரகம்
7. கன்னிமையழித்து. தொடர்பிலா இரு செயல்கள் ஒரு வாக்கிய மாக்கல் காண்க. கன்னியர் பெற்றோரை விட்டு வருமாறு வேறுபண்ணி என்றுமாம்
8. தன்னுயிர் = எம் உயிர்; தன்மையில் படர்க்கை
9. கூவிளங்காய்
10. பௌர்ணமி-நீறைதிங்கள் நாள்
11. கூடினேம்
12. தடையாக
13. தீமையாலே; தீப்போன்ற தீமையும் ஆம்
14. பக்தி
15. [ரை]-ஏ, ஐ
16. அந்தை
17. தோன்றுமல்

பாங்கான [1]புஸ்லியத்தைப் படிப்பவரை நிந்தஸ்லயாய்
ஆங்காரந் தன்னுல் அறிவுகெட்டே பேசுகின்றோம்.
ஏழையரைத் தானடித்து இனிய பொருள்ப[2]றித்து
வாழு மனையில்வைத்து வாழ்ந்துண் டிருந்தோங்காண்.
சிவனை மிகமறந்தோம்; திரு[3]நீர் தனமறந்தோம்
[4]பவமென் றறியாமல் [5]பரஸ்திரீயைத் தான்சேர்ந்தோம்.
பஞ்சாட் சரமறந்தோம்; பாடிக்குஞ்சிவ தோத்திரத்தை
நெஞ்சார வேமறந்தோம். நீதி தனைகெடுத்தோம்.
இப்படியே பாவவினை எண்ணுமலேநாங்கள்
வெப்ப முடன்செய்து விழுந்தோம் நரகாதில்.
சீறுங் கொடு[6]நரகால் சிக்கி மெலிந்துவிட்டோம்.
வேறு துணையுமில்லை [7]விலகிக்கரை யேறுதற்கு.'
என்றுதான் பாவியர்கள் இந்த மொழிகூற.
வென்றியுள்ள புக்கரனு மெத்தவே தான்கேட்டு
மனது மிகவிரங்கி வாடிக் கிலேசமொடு
தினையளவு புண்ணியமுஞ் செய்து [8]அறியீரே?
புத்திகெட்ட மாந்தர்களே! பூவுலகி லேதருமம்
முத்திக்கு நல்லதுவே; முற்றும் வழித்துணையே.
அப்படி யேதருமம் அறிந்து[9]செய்யாட் டாலுமய்யோ!
செப்ப முடனே சிவனை நினைந்[10]தீர்களோ?
செய்ய சடாமகுடச் சிவனை மனதில்வைத்தால்
வெய்ய கொடும்பாவம் விரைந்தோடிப் போயிடுமே'.
என்று[11] இந்த வேதியனும் இன்பமுட னேகூற
துன்றுங் கொடுநரகில் துவக்குண்டோர் சொல்வாரே:-
'புண்ணியமுஞ் செய்தறியோம்; [12]விபூதி யணிந்தறியோம்;
கண்ணுதலோன் மந்திரத்தைக் காதாலுங் கேட்டறியோம்;

---

1. புண்ணிய நூலை
2. [தி]
3. தீருநீறு; உச்சரிப்பு
4. பாவம்; பவம் பிறப்புக்கு வழி என்று மாம்
5. [பல] பன்மையும் பழியுமாகலாம்
6. நரகில்; நரகின் கொடுமை காரணமாக
7. 'விலகி கரை' என்றெலிப்பர்; ஏறுதற்குத் துணையுமில்லை; முன்பின்ஆதல்
8. [வ]
9. செய்யாவிட்டாலும்
10. தீ என ஒலிக்கும்
11. [வி]
12. வி கூன்போல் ஒலிப்பின் மோனைவரும் "வி" இல்லாமலே இருக்கலாம்

தேவரீர் தம்மைச் சிறப்பாகக் கண்டதினால்
பாவங்கள் தீர்ந்தோம்; பரகெதியைப் [1]பெற்றோமய்யா!
பங்கம் உறுமல் பாற்நரகத் தைநீக்கி
எங்கள் தனைத்தூக்கி இப்போது நீர் [2]விடுத்தால்
புண்ணிய பலனுமக்குப் புகழுமுண்டு; சொர்க்கமுண்டு.
வண்ணமுள்ள வேதியரே! வணங்கினேம் என்றுசொல்லி
ஆற்நரகி லேகிடந்து அழுது புலம்பிமெத்த
தேளிலேயும் பொல்லாத தீப்பா தகர்கூற
கூத்த னெனும்இயமன் கோலமறை வேதியரை
பார்த்து மனங்குளிர்ந்து பகருவான் ஓவியமாய்:
'வேதப் பிராமணரே! [3]வினியநாட் டின்மகிமை
போதமுடன் கண்டீரே! போமுங்க ளூர்தனிலே
நீர்மாண்டு [4]போனீரென்று நின்னுடைய தேவியோடு
சீர்மிறும் பாலகருஞ் சிறந்தஇன பந்துக்களும்
வாடி மயங்குகிறார்; வருந்திமிகச் சோம்புகிறார்.
கூடழிந்து போகுமுன்னே குல[5]வேதி யா!நீர்தான்
சீக்கிரத்தில் போ'மெனவே தென்திசைவாழ் மர்மறலி
வாக்கினு லேகூற மாமறையோன் சொல்லிடுவான்
'மெய்யரே! தென்றிசைவாழ் வித்தகரே! நாயகரே!
அய்யரே! சொல்லுகிறேன். அண்ணலே நீர்கேள்மோ!
எண்ணப் பெருநரகில் இடைந்து [6]மயங்குவரை
கண்ணுலுங்கண்டு கடந்துமிகப் [7]போவர்களோ?
கையெடுத்து [8]என்னைக் களிந்து மிகவேண்டி
மெய்துடிக்க வய்யோ! வெருவியழு வாரைவிட்டு
போகமனங் [9]கூடுதில்லை; போனலுந் தன்மமில்லை.
வாகுடைய வேந்தே! மனது [10]மயங்குதுகாண்!'

---

1. "பெற்றெமய்யா" என்ற ஒலி
2. விட்டால்
3. வினித = தண்டிக்கப்படும்; இவ்விய என்பது 'வ்'என்ற உடம்படுமெய் பெற்று வினிய என வந்திருக்கலாம்
4. "போனிரென்று" என்ற ஒலி
5. வேதியா ஒருமை; நீர் பன்மை
6. மயங்குவாரை ஆ குறுகல்
7. போவார்களோ வே 6
8. [யெ]
9. கூடுவது இல்லை; கூடுகிறது இல்லை
10. மயங்குகிறது

என்றுசொல்லி வேதியனும் இன்பமுடன் அங்குநின்று
[1]கொன்றைவில்லி யைநினைந்து கூறினன் தோத்திரமாய்.

விருத்தம்(3)

335, ஆற ணிந்த சடைமுடி யண்ணலை
[2]பாற ணிந்த மழுவாள் படையனை
நீற ணிந்த நிமலனை மாதொரு
கூற ணிந்த கொழுஞ்சுடர்க் குன்றினை[3].

விருத்தம்(4)

கங்கை சூடுங் [4]கடுக்கைச் சடையனைத்
340. திங்கள் சூடிய தீநிற வண்ணனை
அங்கை மீதில் அழலெடுத் தாடியைப்
பங் [5]கை யாசனன் [6]ஏத்தும் பரமனை.

விருத்தம்(5)

சாம வேதனை தற்பர வா(ழ்)வினை
காம னுகங் [7]கறுக்கிய [8]கண்ணனை
345. [9]வாம மேவு மடவரல் தன்னொடு
[10]ஈம மேவி யிருக்கும் இறைவனை.

நடை

'சாமவேத மாகவளர் தற்பரச தாசிவனே!
காமனங்கந் தீயாக காய்ந்தி[ய்]தக் கண்ணுனே!
வாமபா கந்தனிலே மயேசுவரியை பாகம்வைத்து
350. [11]ஈமம் எனுஞ்சுடலை தனிலே யிருப்பவனே!'

---

1. குன்றைவில்லி-மலையை வில்லாகக் கொண்ட சிவன்
2. பருந்து (மழுவிலுள்ள பகைவர் இறைச் சியில் மொய்ப்பது)
3. மாவொன்று-வெண்டளை வரும் ஈரசைச் சீர் இரண்டு-விளச்சீர் ஒன்று ஆக நாற்சீராலாகிய கலிவிருத்தம்; பின் வரும் 3 விருத்தங்களும் இவ்வாறே யாம்; நேர் முதலாஞல் அடிக்கு 11 எழுத்து வரும் கட்டளை விருத்தமாம். கீழே விளியாகக் கொள்ளப்பெறும் பெயர்கள் இங்கே ஐயுருபு பெற்றே வருகின்றன. மேற்கோள் போலும்
4. கொன்றை
5. க; அ-ஐ; தாமரையில் இருக்கும் பிரமன்
6. [ஏற்றும்] த-ற;
7. [ரு] தீய்த்த
8. நெற்றிக்கண்ணனை
9. இடப்பாகம்
10. [யீ]
11. ஷ 10

என்றுவெகு தோத்திரமாய் இனிய பிராமணனும்
நின்று சிவனை நினைந்து மிகவாழ்த்தி
'அண்டர் புகழ்தேவே! அடியேனுன் உந்தனுக்கு
தொண்டனே யானால்' சுவாமி! கருத்திரங்கி
இந்த நரகில் இடைந்து வருந்திமிக
சிந்தை கலங்கும் தீயான பாதகர்தன்
பாவ வினை தீர்த்துப் பரமசிவ னே! [1]யிப்போ
ஓவிய மாக உயர்ந்தகரை சேர்த்திடுவீர்!
அய்யனே!' யென்று அரிதான புக்கரனும்
துய்யமலர்க் கைகூப்பித் துதித்து வணங்கினசொல்,
வாதையா க-நரகில் மயங்கிய பாதகர்தன்
காதிலே தான்விழுந்த காரணத்தால், மன்னவனே!
அன்னேர் பவந்தீர்ந்து அருநரகைத் தான் [2]கழித்து
பொன்னுர் கயிலாசம் [3]புக்கினர் எல்லோரும்.
அந்தப் புதுமைதனை அந்தகனும் பார்த்துநின்று
'இந்தப் பிராமணனை இங்கழைத்தோம் [4]நம்பள்குலம்'
என்று நமனினைந்து இனிய பிராமணனை
நன்றி யுடன்மகிழ்ந்து நட்புடனே கூறிடுவான்:
'வேதப் பிராமணரே! மெய்யான புண்ணியரே!
நீதம் உடையவரே; நேசமுட னேயுமக்கு
நல்ல வரமொன்று நான்தருவேன். நீர்தாமும்
சொல்லுகின்ற பூவுலகில் சுகமாக வேயிருந்து
உள்ள வயதுமட்டும் ஓவியமா க-வாழ்ந்து
தெள்ளு புனல்சடையான் சிந்தை கனிவாக
புண்ணியங்கள் செய்து, பூசுரரே! நீர்தானும்
வண்ண முடனே வளர்கயிலா சந்தனக்கு
விந்தை யுடனேதான், வேதியா!செல் லும்போது
எந்தனுட பட்டணத்தில் ஏகிநீ வாராமல்

---

1. இப்போது
2. பாவக் கடன் கழித்து; தீங்கி
3. புக்கனர்
4. நம்தவர; அல்லது அழைத்தது நம் காரியம். 'நம்பள்' என்ற வடிவம் காண்க

[1]அங்கிருந்தாப் போலே அரனுர் பதிபுகுந்து
பொங்கமுட னீடுழி பொருந்திநீர் வாழ்ந்திடுவீர்!'
அய்யரே!' யென்று அன்பா யொருவரந்தான்
துய்ய மறலி சுகமாக வேகொடுத்து,
பின்னும் ஒருவரந்தான் பேசுவான் விந்தையெனச்:-
'வன்னமுடன் இக்கதையை வாகுடனே கேட்டவர்கள்
அன்பாய் படித்தவர்கள் அபமி[2]ருத்தும் இல்லாமல்
பொன்போல் வயது[3]முத்திப் பூவுலகி லேவாழ்ந்து
[4]இருப்பார்கள்' என்றுசொல்லி இரண்டு வரமளித்து
மருப்பார் கிடாவூர்தி வாகுடனே யேபோனுன்.
இந்தநல்ல புக்கரனும் இனிதாகப் பூவுலகில்,
வந்து மவன்கூட்டில் வரிசை யுடனெழுந்து
வாடுகின்ற சுற்றம் வருத்தந் தணித்தீர்த்து
நாடுதனில் நீடுழி நல்மறையோன் வாழ்ந்திருந்தான்.

விருத்தம்(6)

கால காலனைக் கண்ணெரு மூன்றுடை
சூல பாணியைத் தொன்மறை யாளனை
ஆல காலமுண் டானை வழிப்பட்டு
ஞால மேல்நெடு நாளிருந் தானரோ[5]

நடை

காலகா ல-சிவனைக் கண்மூன் றுடையவனை
சூலபா ணியனுன சுந்தரத்தை மாபொருளை
ஆலகா ல-விசத்தை அமுதாக வுண்டவனை
கோலம் உடையானைக் கும்பிட்டு நாள்தோறும்
சிந்தை தனில்நினைந்து சிறப்பாய் [6]வணங்குவர்க்கு
வந்த வினைதீரும்; வாழ்வார்கள் நீடுழி. 402

பத்தா மத்தியாயம் முற்றும்.

---

1. உலகில்
2. [று]
3. முற்றி; த-ற
4. [யி]
5. விருத்தம் (3) போன்றது
6. வணங்குவார்க்கு ஆ-அ எனக். நூ கல்

பதினென்றும் அத்தியாயம்

சம்பு கதை

விருத்தம்(1)

மாசறு வதிட்டன் என்பான் பின்னரும் 'மன்னர் ஏறே!
ஆசறு ராமன் பாரில் அரசியல் நடத்துங் காலை
பூசுரன் புதல்வன் மாண்டு போயவன் உயர்ந்தான் என்னப்
பேசிய காதை தன்னைப் பேசுவேன்' என்று சொன்னன்[1]

நடை

5. குற்றமில் லாததவக் கொடிய மகாவதிட்டன்
'சித்த மகிழ்ந்துமிக தேசமெல்லாந் தான்புரந்த
மன்னர்க்கு மன்னு! வளரும் பெரும்புகழ்சேர்
[2]தென்னற்குத் தென்னு! திலீபதிமன் னுகேள்மோ!'
வாட்டமில்லாப் பூவுலகை வாகாக ஒருகுடையில்
10. [3]தாட்டிகளஞ் சேர்ராமர் தானுரும் நாளையிலே
புத்திசெறி மாமறையோன் புனிதமுட னீன்றமைந்தன்
செத்துப் பிழைத்தகதை செப்புகிறேன். நீர்கேள்மோ!'
என்று வதிட்டன் இனிய திலீபதியை
நன்றியுட னுக்கி நவிலுவா னுவியமாய்:
15. 'தேவர் பதிபோல் சிறப்பை மிகப்பொருந்தி
[4]பாவகமா க-வளரும் பரிவான பட்டணத்தில்,
[5]அழகு மிகப்பொருந்தும் அயோத்தியா புரிதனிலே
வளமையுள்ள வேந்தர்களும் மந்திரிமா ருஞ்சூழ
தந்துணைவ ராகவளர் தம்பி பரதனெடு

---

1. "வீர-மா-தேமா" மூன்றும் இரட்டித்து வரும் அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்
2. தென்னன் = பாண்டியன்; தென்னனே எனப் புகழ்வது தமிழில் சிறப்பு. பிறந்த அரசரிலும் சிறந்தவனே என்க; எனுக்கும் எனனே என்றுமாம்
3. ஆற்றல்
4. வெளிவடிவம் = ஒப்பு [பாவகம்]
5. அழகு என்று ஒலித்து துகை கொள்ளும்

20. [1]விந்தைசே ரிலட்சுமணன் இனிதான சத்துருக்கன்
தன்னுடனே கூடித் தயங்காமல் செங்கோலும்
நன்னயமாய் ராமன் நடத்துகின்ற நாளையிலே,
அந்த நகர்தனிலே அரிய பிராமணரில்
விந்தையுள்ள வேதமெல்லா மினிதாகக் கற்றறிந்து[2]

25. துய்ய பிராமணன்முன் சுகமாக வேயீன்ற
செய்ய சிறுமைந்தன் செத்துமிகப் போனகால்!
மாண்ட குழந்தைதன்னை மாசில்லா மாமறையோன்
[3]பூண்டமனை யாளுடனே புதல்வன் றனையெடுத்து
தேசம் புகழுஞ் [4]சிராமன் வாழ்மனையில்

30. வாசல் தனில்கிடத்தி மைந்தன் முகம்நோக்கி
'அய்யய்யோ!' என்பான்; அழுவான்; [5]பர தவிப்பான்;
கையால் முகத்தறைவான்; கதறுவான்: விம்மிடுவான்;
சோர்வான்; விழுவான்; துணுக்கென் றெழுந்திருப்பான்;
மார்போ டணைப்பான்; 'மகனேம கனே'யென்பான்;

35. 'உன்னை யிழந்து உலகில் இருப்பேனே?
பொன்னே! மணியே! புகழான பாலகனே!
கண்ணே! எனதுடைய கண்மணியே! நாயகமே!
வண்ணம் முடையவனே! மகனே!யென் பாலகனே!
[6]இன்னுலகில் முற்றும் இனிதாகத் தேடிலும்

40. உன்னைப் போல்பிள்ளை யுண்டோ? [7]யிளவரசே!
மாமணியே! தேனே! வாடா மருக்கொழுந்தே!
பூமணியே! பிள்ளாய்! புண்ணிலிட்ட தீப்போல
என்னைத் துடிக்கவிட்டாய்? [8]யிருந்து ப[9]றக்கவிட்டாய்!

---

1. விந்தை: பெருவழக்கு
2. 'கற்றறிந்த' வை இருக்கலாம் 'அறிந்து கன்ற' என்றும் முடியலாம். வாக்யம் கருத்தொருமையின்றி நீளுகிறது
3. தாலி பூண்ட; இல்லறம் பூண்ட
4. [ஸ்ரீ]
5. பரிதவிப்பான்; விரல்கள் அடுக்கி ஒருகையில்ஒரு சரிமுடிந்தும் இரு சரி முச்சரிகை வளர்ந்தும் மனக் கலக்கத்தினை ஒலி நயத்தில் காட்டுவது காண்க
6. இன்ன(இப்படிப்பட்ட) உலகில்; இன்று இவ்வுலகு என மருவியதும் ஆகலாம் இன் = இனிய என்றுமாம்
7. 'ய்' உடம்படுமெய்; அவன்குடிக்கு இள வரசு
8. யி-இ என்பதன் உச்சரிப்பு
9. ற [ர]

உன்னை[1]யெப்போ காண்பேன்? உத்தமனே! [2]நீர்தானும்
சீரான தோழரோடு சிறப்பாய் விளையாடி
பூராய மாகவரும் புதுமையினிக் காண்பேனே?
நீலக் கருங்குடுமி[3]நெத்தியோ உன்னழகோ!
கோலமணிச் சுட்டி குலுங்கு முகத்தழகோ!
இந்த வடிவையெல்லாம் என்றுதான் நான்காண்பேன்?
மைந்தனே!' யென்று வாயால் மிகப்புலம்பி
'என்ன விதியோ [4]யிதுகருமம் என்றறியேன்.
வன்னமுள்ள மைந்தனல்லோ[5] மாதாபி தாக்களுக்கு
செய்ய [6]கருமமுண்டு; சீரான மைந்தருக்கு
அய்யய்யோ! [7]செய்கரும அன்பாய் முடிப்பதுண்டோ?
குற்றமொன்று செய்திலனே! கொடிது [8]யிதுபாவம்!
நித்தம் [9]படிக்கரும நீதி மறந்திலனே!
மண்ணுலகி லில்லாத [10]வால மரணமிது
வண்ணமுட னிப்போது வந்த [11]வகையுமென்ன?
இந்த அபமி[12]ருத்தது [13]யவராலே [14]யென் [15]மகர்க்கு
[16]வந்துதோ நானறியேன் மகனே' யெனச்சொல்லுவான்.

விருத்தம்(2)

மன்னன் முறைதிற[17]ம்பில் வான மழைவழங்கா;
பின்னர் இருநிலத்தில் சாவு பிணிவளரும்;
அன்ன மு[18]றையே அ[19]றிந்தேன் இராகவனுர்
தன்னரசு நீதி தவ(ற்)[20]றுல் விளைந்ததென்றே.[21]

---

1. எப்போது; இத்தகைய சொற்கள் ஈற்றுத் 'து' கெட்டுப்'போ' என்றே முடிகின்றன. ஆதலின் அவ்வாறே அச்சிடப்படுகின்றன
2. ஒருமைக்குப் பின் நீர்தான் என்ற வழக்கு
3. நெற்றி; ற, த;
4. 'ய்' உடம்படுமெய். இ என்பதன் உச்சரிப்புமாம்
5. அல்லவோ
6. கடமையான செயலாக அமைந்தது
7. அந்திக் கருமம்
8. ஷ-4
9. நித்தியக் கட்டளைகளான செயல்களைச் செய்யும்போது அவற்றின் அடிப்படையான அறநிலையை; கருமமும் நீதியும் என்றுமாம்
10. பால; ப. வ:
11. வழி
12. [று]
13. ய் உடம்படுமெய்; எ என்பதன் உச்சரிப்புமாம்
14. ஷ-13
15. மகற்கு
16. வந்ததோ; து என முடிவனவற்றின்முன் வரும் த து என வருதல் காண்க; உதட்டுச் சாயல் பெறுகிறதுபோலும்
17. [ப்]
18. [ரை]
19. [ரி]
20. [ரா]
21. நாற்சீர்க் கலிவிருத்தம்; அடிக்குப் பதினொன்று எழுத்து. வெண்டளை தப்பாமல் சீர் எல்லாம் வரும்

நடை

65. 'செப்பமுடன் பூவுலகாள் சீர்வேந்தர் [1]தன்னீதி
தப்பினு லேமழைதான் சற்றுந்தான் பெய்யாது;
சாவும் பிணியுமுண்டு; தாரணியில் குற்றமுண்டு;
ஓவியமா க-வேதம் [2]ஒளித்துவிடும்; பொய்யாகும்'
என்றுதான் வேதம் இனிதாகச் சொன்னதினால்
70. நன்றியுள்ள ராமன் நன்னீதி தப்பினதால்
எ[3]ந்தன் மகன்மடிந்தான்' என்றே யவனினைந்து
'[4]விந்தைபுட னீதி மிகவில்லா ராசன்முன்னே
மைந்தனையும் போட்டு மனைவிதனை யுங்கொன்று
எந்தனுட சீவனையும் இப்போது [5]மாய்க்கிறேன்.
75. நீதியில் லாத நெடிய சிலைவேந்தன்
போதமுடன் நன்ருய் பொருந்திவா [6]ழட்டு'மென்று
பரிவான மைந்தனையும் பாங்காய் மிகக்கிடத்தி
அரிதான [7]ராமனுமேல் அடர்ந்[8]து பழி[9]சாட்டி
சாவேன' [10]எனவேதான் தக்கது[11]பாசைகூறி
80. மாவேந்தன் வாசலிலே மறையோனுங் காத்திருந்தான்.
இப்படியே வேதியனும் இறந்தமைந் தனைக்கிடத்தி
வெப்பமுடன் பாசைவைத்து வெங்கொடுமை யாகவேதான்
அரண்மனைவா சல்தனில் அவனிருக்குங் காரணத்தை
கரியமுகில் ராமருந்தான் காதாரக் [12]கேட்டனனே.
85. வில்லுக் கதிகமெனும் வேந்தர் திலதமென்றே
சொல்லுஞ் சிலைராமன் தூதர் தனைநோக்கி
'இந்தச் சணமே இனியமந் திரிமுதலாய்
விந்தையுள்ள [13]வேதியொடு மிக்கதவ மாமுனிவர்

---

1. தந்நீதி
2. பதுங்கிக்கொள்ளும்
3. ன்
4. நீதியில்லாமை அந்நாளைய விந்தை
5. மாய்த்துக் கொள்கிறேன்; மாயவைக்கி றேன்
6. [ழெ] வாழ ஓட்டும்
7. ராமன் மேல், ராமன் மேலும் என்ற உயர்வு சிறப்பும்மை ராமனும் என வருதல் காண்க; உகரச்சாரியையும் ஆம்
8. த என்றிருக்கலாம்; (மனத்தால்) காக்கி னெனுமாம்
9. குற்ற[ம்] ஏற்றி; சாற்றி; த-ட மாருட்டம் வழக்கில் வந்தது. சாற்றி என்றுமாம்
10. [இனவே] எ-இ மாருட்டம்
11. ஆணையிட்டுக் கூறி
12. ராமர் கேட்டனனே எனவரல்
13. வேதியரோடு; வேதி = பண்டிதர்

மன்னர்மன்னர் தங்களையும் வரிசையுட னிப்போது
நன்னயமா க-வழைத்து நாடியிங்கே வாரு'மென்று
தாரா[1]ரும் மார்பன் தசரதரா மன்கூற
பூராய மாய்த்தூதர் போயழைத்து வந்தனரே.
தூய பெரும்புகழான் சுமந்திரன் முதலான
நேயமந் திரிமாரும் நிகரில்லா வேந்தர்களும்
வாமதே வ-முனிவன் மார்க்கண்டன் காசிபனும்
[2]நாமறைசொல் கார்த்திகேயன் நல்லதொரு சாம்பாலி
நன்னயஞ்சேர் நாரதனும் [3]நற்பெரிய கோதமனும்
வன்னமுள்ள உற்கலனும், மாபெரிய யோகிகளும்
வேதப் பிராமணரு [4]மினிய புரோகிதரும்
சீதைமண வாளனெனுஞ் சீராமன் தன்[5]கொலுவில்
வந்துமிகக் கூடினர்காண். வளரும்மணி மண்டபத்தில்
விந்தை யுடன்கொலுவில் வீற்றிருக்கு மால்ராமன்
நேர்த்தி யுடனே நிறைந்தபெரி யோர்கள்தமை
பார்த்து மிகவும் பகருவான் மன்னுகேள்!
'நாமறியக் [6]குற்றம் நடத்தவில்லை யிப்புவியில்
மாமறையோ னீன்ற மைந்தன் மடிந்ததற்கு
'பழிசாட்டிச் சாவோ' மென்று பாசை மிகக்கூறி
தெளிவாக [7]யென்மீதில் தீய[8]குத்தந் தான்காட்டி
வேதப் பிராமணன்முன் மிகவே யிருக்கும்வகை
நீதமுள்ள மாதவரே! நிகரில்லாப் [9]பூசுரரே!
சுமந்திரன் முதலான தூயமந் திரிமாரே!
நமதுடைய குற்றமென்ன? [10]நாமறையோர் சொல்வதென்ன?'
என்றுதான் ராம னிரக்க முடன்கேட்க
நன்றியுள்ள வேத நான்முகனுக் குச்[11]சரியாய்

---

1. [ரு]
2. நான்மறை என்பதன் உச்சரிப்பு
3. மிகப் பெரிய; நன்று பெரிதாகும்
4. மோனை காண்க
5 ஓலக்கம்; தர்பார்; -தெலுங்கு
6. குற்றம் நடத்தல் என்ற வழக்கு
7. ய் உடம்படு மெய்
8. குற்றம்; த-ற
9. வேதியரே
10. நான்மறை என்பதன் உச்சரிப்பு; இடையில் மெல்லெழுத்து நடுவின் பின் ஒலிக்கப் பெருமை
11. ஒப்பாக

115. இருக்கின்ற நாரதனும் [1]மினியராமர் சொல்கேட்டு
பெருக்கமுட னேபார்த்துப் பேசுவார் ஓவியமாய்:
[2]கோதண்ட பாணியெனுங் கோவே! குலவேந்தே!
தாதொன்றும் பூமார்பா! தசரதரா மா! கேள்மோ!
[3]இஞ்சொல்மறை மாதவன்ரு னினிப்பாக வேயின்ற
120. [3]மஞ்சன் மடிந்தகதை மன்னவா! சொல்லுகிறன்.
மூந்தும் யுகந்தனிலே [4]முடியாத மாதவசு
விந்தையுள்ள வேதியர்க்கு மிக்கவே [5]பலித்திடுங்காண்.
நன்னயஞ்சேர் மாவேந்தே! [6]ரெண்டாம் யுகந்தனிலே
வன்னமுள்ள மாதவசு மாவேந்தர்க் கேபலிக்கும்.
125. பரிவாகச் சொல்லுகிறேம்! பாங்காய்மூன் ரும்யுகத்தில்
அரிய வணிகருக்கு அழகு தவம்பலிக்கும்
[7]கா[8]ரா மணிப்புயனே கலியுகத்தில் சூத்திரர்க்கு
சீரா[9]ரு மாதவசு செப்பமுட னேபலிக்கும்.
இப்படியே நால்வருக்கும் மினியதொரு காலமதில்
130. செப்பமுட னேபலிக்குஞ் சீரான நற்றவங்கள்.
ஆனதா [10]லின்னில(ம்) ஆளரசே! சிலைவீரா![11]
[12]நானுரைக்க வேகேளீர்! ரெண்டாம்யுகம்[13]யிதுகாண்!
இந்த யுகத்தில் இனியதொரு ராசாக்கள்
சிந்தையுடன் மாதவசு [14]செய்தகுறை தானுமில்லை.
135. சொன்னே னுமக்குமின்னம் சொல்லுகிறே னிவ்வுகத்தில்
மன்னுகேள்! சூத்திரன்காண்! மாதவசு பண்ணுகிறான்.
அந்தக் கொடுமையினுல் அரிதான வேதியன்சொல்
மைந்தன் மடிந்துலிட்டான்; மற்றோர் குறையுமில்லை.
ஆனதால் மாவேந்தா! அரிதான பாவமிது
140. [15]தானகற்றி[ல்] விட்டாலே [16]தாட்சியில்லை, யிப்போது

---

1. ம் இரட்டித்தல் சிறப்பும்மையை எடுத்துச் சொல்வதால் போலும்
2. இன்சொல்; 'ம்' ச முன் ஞ் ஆதல்
3. மைந்தன்-தர, ச;
4. முடியாத; அரிய
5. கைகூடும்
6. ந-ரெ மோனை
7. நீலமாம் மணி
8. [ரு]
9. [று]
10. இந்நிலம்
11. [ரு]
12. ஷை 6
13. இ என்பதன் உச்சரிப்பு
14. செய்ததால் வரும் குறை
15. [தானகத்த]; த-ற
16. தாழ்ச்சி

மாண்டு கிடந்ததொரு மைந்தன் பிழைத்திடுவான்.
வேண்டும் புகழுமுண்டு. வேந்தனே! இன்னமுங்கேள்!

விருத்தம்(3)

எண்டிசை யாளு மன்னர் இயல்பினுல் செங்கோல் ஓச்சி
மண்டலந் தன்னில் தத்தம் வருணத்திற் கியலா(ச்)
[செ[1]ய்கை
115. கொண்டவர் தம்மை(த்) தண்டங் குறித்திடா(க்)கொற்ற
[வேந்தர்
விண்டதீ நரகந் தன்னில் வீழ்வர்காண் வேந்தர் வேந்தே![2]

நடை

'அட்ட திசைமுற்றும், அண்ணலே! ஓர்குடைக்கீழ்
கட்டியே யாளும் கனகமுடி மாவேந்தா!
நன்னிலத்தி லேவாழும் நான்குசா தி-புடையோர்
120. தன்னடத்தை விட்டு தாட்சியுற வேநடந்தால்,
மண்டலத்தை யாளும் மாமன்னர் தர்மவரை
தண்டனைசெய் தேயொடுக்கி சிறந்தகுலா சாரமதாய்
தப்பாம லேநடக்கத் தான்திருத்திக் கொள்வார்கள்.
மெய்ப்பாக வ[3]ன்னீதி விளங்காத [4]ராசர்கள்தான்
125. வெங்கொடிய தீ[ய்]நரகில் விழுவார்கள்.'என்று சொல்லி
பொங்கமுள்ள வேதம் [5]புகன்றிருக்கு தாகையினுல்
உன்னுடைய தேசமதி லுற்ற [6]அபசாரம்
நன்னயஞ்சேர் நாயகமே! [7]நடந்திருக்கு திப்போதே.
ஆனதினுல் மன்னு! அழகான நாடுமுற்றும்
130. தானடைந்து பார்த்துச் சாற்றுகின்ற குற்றமதை
[8]தாக்குடைய பிள்ளோ[9]யிப்போ தானே பிழைத்திடுங்காண்!
நீக்கிவைத்தா யாமாகில் நீதிமிகக் குன்றுது.
தேச மிகவாழுஞ் செங்கோல தளம்பாது;

---

1. [ங்]
2. விருத்தம் (1) போன்றது
3. ந்நீ; ந, ன
4. ரா-மொழி முதல்
5. புகன்றிருக்கிறது ஆகையினுல்
6. குற்றம்
7. நடந்திருக்கிறது
8. நடைப்பட்ட; இறந்த
9. இப்போது

தோசமில்லை.' என்றுமெத்தச் சொன்னர்கா ணூரதனும்.

165. [1]நாரதருங் கூறிடவே [2]ராம ரதுகேட்டு
'[3]காரியமாம்' என்றுசொல்லி கருத்தில் மிகமகிழ்ந்து
தம்பி பரதனையே தானேக்கி யேபார்த்து
'வெம்புகின்ற மாமறையோன் விடமே பிழைக்[4]கமட்டும்
வேதப் பிராமணன்த[ா]ன் விடமே யுட[ன்]கூடு
170. சேதமெனப் போகாமல் சிறந்தயெண்ணை தோணிதனில்
பத்திரமா கப்போட்டுப் பாங்குட்னே [5]காரு'மென்று
சித்திரமில் ராமன் சிருடனே கச்சைகட்டி
உடைவாளுஞ் சேர்த்து ஓங்குபுகழ் வில்லெடுத்து
அடைவாகத் தூணிகட்டி அதிவேக மாகவேதான்
175. [6]நற்புடைய வேதியர்கள் நன்றாக வேவாழ்த்தி
[7]புட்பகவி மானமதில் புனிதமுட னேயேறி
தன்கோயில் [8]வாசல்தனில் தான்கிடக்கும் பிள்ளையது
அன்பாக வேபிழைக்க அரசன் கவனமதாய்
இங்கார [9]ராமன் இனந்து[10]மந்திர வாளுருவி
180. சங்கார ருத்திரன்போல் தானடந்தான் மேல்திசையில்.
[11]மேல்திசையில் தேரை விரைந்து மிகநடத்தி
மாலவனுங் குத்தம் வாகாய் [12]விளங்கினன்காண்!
அந்தத் திசையில் அரியகுத்தங் காணுமல்
விந்தையுட னேவடக்கு மிக்க திசைகிழக்கு
185. இம்மூன்று திக்கிலுமே [13]இராமன் விரைந்தேகி
[14]அம்மூற்க மாக]அழகிய பொற்றேரை
தென்திசையி லேநடத்தி சீர்வேந்த னும்போக

---

1. அந்தாதித் தொடர்;
2. நா-ர மோனை
3. செய்யத்தக்கது
4. கும்; க, ரு
5. காவும்
6. 'நட்புடைய' என எதுகை கொள்ளுதல் காண்க; எனவே நற்புஎன வருவதனை 'நட்பு' எனக் கொள்ளலாம்
7. குபேரவீடமிருந்து இராவணன் பெற்றது; இராவணன் அழிந்ததும் ராமர் பெற்றார்
8. வாயில் என்பதன் உச்சரிப்பு
9. அரசன், ராமன் என இடையிடையே எழுவாய் வருதல் காண்க
10. 'மந்த்ர' என ஒலிக்கும்
11. அந்தாதித் தொடர்
12. தேடினன்; 'உண்டா' என அறிந்தான்; அருவழக்கு; விளக்கினன்?
13. 'ரா' மொழி முதலாகாமல் இகரம்பெற்று வருகிறது;
14. அமோகம் என்பதுபோல அமூர்க்கம்

[1மன்றிக்கருமுகிலாய்] மலியடிவா ரந்தனிலே
ஒடிவரு(ம்) 2ஆத்தருகே 3உன்னிதமா க-வளர்ந்து
நாடி விசாலமொடு நற்பாக நிற்கின்ற
4ஆலா விருட்சமதில் 5அடவாயோர் கொம்புதனில்
மேலாகக் காள்ஈட்டி மிக்க தலைகீழா
நின்ருன் தவசொருவன்; நிற்கும் அருந்தவசை
குன்ரு6ருந் திண்புயமால் குலுங்கவே கண்டானே.
கண்டான் 7அதிசயமாய்; கடுந்தவசில் நிற்கின்ற
பண்டார முன்னுகப் பாங்குடனே வந்துநின்று
மதுரம் பெருகுமலர் வாய்திறந்து 8இவ்வனத்தில்
9அதிய மகாதவசு ஆனலும் பண்ணுகிரூய்!
உன்போல் தவசில் ஒருவருந்தான் நின்றதில்லை:
அன்பாக நீதான் அருமறையோ னுனலே
சாலோக சாமீப 10சாரூபசா யுச்சியமெனும்
நாலாம் பதம்பெறுவாய்; ராசனீ யானுலே
இந்த வுலகமெல்லாம் 11இனியுனக்குத் தொண்டுசெய்ய
விந்தையுடன் செங்கோல் வேந்தனென 12வுண்டிருப்பாய்.
இந்த13ரெண்டு சாதிதனில் இனிதாக வேநீதான்
14யெந்தநல்ல சாதி?யெனக்குரீர் சொல்லு'மென
கோச15லேதை சாதிபதி கூறவே விந்தையுடன்
நேசமுட னேதவசில் நிற்போ னுரைத்திடுவான்:-
'மன்னவா! நீயா16ரு வந்த வகையேதோ?
17நன்னயமாய்ச் சொல்லு'மென ராமருமே கூறிடுவார்:-
தப்பிதமில் லாதவாய்மை தசரதரா ச-னின்ற

1. மந்திக் கருமுகமாய்; கருமுக மந்தி போலக் கோம்பில் நின்ருன் எனக் காண்க த-ற மாருட்டம்
2. ஆற்றருகே; த-ற
3. உயரம்
4. ஆல; ஆ நிலல்
5. அடைவாய்
6. [று]
7. அதிசயமாய்; அ-எ;
8. [யி]
9. அதிக-க, ய; தவசு அரியதே ஆனலும் என்க
10. சாரூப சாயுச்யமெனும் என ஒலிக்கும்
11. [இமனுக்கு] உனுக்கு என்றும் வரும்
12. அனுபவித்திருப்பாய்; உவந்திருப்பாய் என்றும் இருக்கலாம்
13. இரண்டு
14. எ-என்பதன் உச்சரிப்பு
15. ல; அ, ஐ
16. [று] யார் உகரச்சாரியை பெற்றது; ர,ற
17. ந ர ர மோனை

[1]நப்புடைய பாலன் ராமன் காணென்பேரு[2],
உள்ள படிதானும், உத்தமனே! நீர்தாமும்
விள்ளும்.' எனவே வேந்தன் மகன்கேள்க்க,

215. ஆல மர்த்தில் அருந்தவசு பண்ணுகின்ற
கோலத் தவத்தோன் கூறுவானே வியமாய்:-
'[3]வாராய்! தசரதனுர் வாஞ்சையுட னீன்றெடுத்த
[4]ஸ்ரீராமா! கேளீர்! செப்புகிறேன் என்பேரு
சம்புகாண். கூட்டுடனே சாகாமல் நான்தானும்

220. நம்புங் கயிலேபோக நான்தவசு பண்ணுகிறேன்.
சாதியிலே சூத்திரனுன். தார்வேந்தா! கேளு மென
ஓதினன் ராமனப்போ [5]ஓதியவாய் மூடுமுன்னம்
வீசினன் வாளுருவி [6]வேறுரெண்டு கூருக
[7]ஓசி விழுந்தான்; [8]கிறுபத் தவமழிந்தான்.

225. சூத்திரனு டயதவசைத் தூய சிலைராமன்
[9]மாத்தின தாலே வானில் [10]நிரை தேவரெல்லாம்
பொன்மாரி பூமாரி பொழிந்து அழகாக,
[11]மின்மாரி வில்மாரி வேந்தன் தனைவாழ்த்தி
'செங்கோல் [12]தளம்பாமல் தீமையொன்றுஞ் சூழாமல்

230. பொங்க முடனீதி புண்ணியரே நாட்டிவிட்டீர்!'
என்றுசொல்லித் தேவர்கள்தா னின்பமுட னேவாழ்த்தி
நன்றியுள்ள வேந்தா! நல்வரந்தா னுந்[13]தனுக்கு
வேண்டியதைக் கேளெனவே விண்ணோர் மிகக்கூற
[14]பூண்ட சிலைராமன் பொன்னுலகோ ரைப்பார்த்து

235. 'எனக்கும் ஒருவரந்தா னினிதாக நீர்தருவீர்!

---

1. நட்பு; நேப்பு (அன்பால் உருகுதல்) என்றுமாம்
2. பேர்; உகரச்சாரியை பெற்றது.
3. 'வாராய்' எனத் தொடங்கும் வழக்கினை அந்நாளைய நாடகங்களிலும் காணலாம்
4. [ஸ்ரீ]
5. [மோ]-ம் உடன்படுமெய்
6. இரண்டு வேறு கூருக
7. கீச்சென்ற மிக்குரிப்பு மெய்ப்பி
8. கிறுபம்=மயக்கம்; செருக்கு
9. மாற்றினதால்; த, ற;
10. நிறை ர-ற
11. மின்னலோடு பொழியும் மழைபோல வில்கொண்டு அம்பு மழை போழியும்
12. அலையாமல்
13. ன்
14. சிலைபூண்ட

கனக்கும் புகழ்மறையோன் காதலுட னேயீன்ற
மைந்த னுயிர்பிழைக்க வரந்தருவீ' ரென்றுமன்னன்
விந்தையுடன் [1]கேட்க விளம்புவார் விண்ணவர்கள்,
'ஈசனெனுஞ் சூத்திரனை நீர்[2]கடிந்த மாத்திரமே,
மாசில்லா வேதியன்சொல் மைந்தன்பிழைத் தா'னெனவே
தென்னிலங்கை ராவணனைச் [3]செயித்தசிலை ராமனுக்கு
அன்னவர்கள் [4]வாழிசொல்லி அன்புடனே யேபோக
கோதண்ட ராமன் குலுங்குமணித் தேர்[5]விரைந்து
தாதொன்றும் பூஞ்சோலை தழைக்குமயோத் தியாபுரிக்கு
வந்தான். வரும்போது மாண்டபிள்ளை தானெழுந்து
விந்தை யுடனே விளையாடித் தான்திரிய
கண்டான்; மகிழ்ந்தான்; கனிந்தான்; கருணைமிக
கொண்டான். அப்போது 'கொற்றவர்கள் வாழி'யென்று
வரிசையுட னுவலர்கள் வாழ்த்தினர்; வேதியர்கள்
'அரசு தழைக்க' வென்றே ஆசீர்வா தங்கள்செய்தார்.
பேரான மாமுனிவர் [6]பேச்சொண்ணாக் காட்சியென்று
பூராய மாகவேதான் போற்றியே தான்மகிழ்ந்தார்.
மைந்தன் தனையே மடிய மிகக்கொடுத்து
சிந்தை மிகநொந்த செல்வப் பிராமணனும்
[7]கோசலை ராமன் [8]குளுந்த முகம்நோக்கி
'மாசில்லா வேந்தே! மாமண்ட லாதிபனே!
என்னுடைய பிள்ளை இறந்துமிகப் போகாமல்
நன்னய மாகவேதான் இரட்சித்தீர் என்னுயிரை.
ஊழிகா லஞ்சுகமா யுத்தமனே வாழ்'மென்று
வாழி மிகச்சொல்லி மைந்தனையுந் தான்கூட்டி
போனான் அவன்பதிக்கு. புகழ்மீறு ராசனுமே
போனார். அரண்மனைக்குள் போயினர் எல்லோரும்.'
என்று வதிட்டன் இனிய திலீபனுக்கு
நன்றியுடன் இக்கதையை நற்பாக வேமொழிந்தான். 264

பதினென்றும் அத்தியாயம் முற்றும்.

---

1. வேண்டிக்கொள்ள
2. கடிந்த அம்மட்டிலே
3. க=செ
4 வாழ்த்து
5. தேரில்
6. பேசிப் புகழ முடியாத; பேசொணாத
7. கோசலையின் மகனை இராமன்
8. குளிர்ந்த;-உ, இ; இடையில் ரகரம் ஒலியாமை

பன்னிரண்டாம் அத்தியாயம்

கிருஷ்ணன் கதை

விருத்தம்(1)

பின்னரும் வதிட்டன் என்னும் பெருந்தகை 'அரச ரேறே!
மன்னிய துவாப ரத்தின் மறிகடல் புக்[1]கு மாய்ந்தான்;
பன்னெடுங் காலஞ் சென்று பாலனுய்(ப்) பிழைத்த காதை
தன்னையான் கூறக் கேட்டி' என்றது சாற்ற லுற்றான்[2]

நடை

5. பின்னையுந்தா னந்தப் பெரிய தவமுனிவன்
பொன்னின் முடிபூண்டு பூவுலகை யாளுகின்ற
[3]ரார் திலீபதியைச் செப்பமுட னேநோக்கி,
'வா[4]ரா யடாவேந்தா! வளருந் துவாபரத்தில்
துய்ய[க்] கருங்கடலில் தூயமறை யோன்புதல்வன்
10. மெய்யாய் மடிந்து வெகுநாளை யின்பிறகு
பாலன் வடிவாய் பாங்காக வேபிழைத்து
[5]கோலமென வந்ததை கூறுகிறேரும். மன்னு! கேள்!
பொன்னுலகம் போல புகழு [6]மினிவளரும்
நன்ன யமதாக நாளுந் தளம்பாமல்
15. வந்தி ருகரெனவே வாகுடனே மேல்திசையில
விந்தையுடன் வளரும் மிக்கான பட்டணங்காண்!
அந்தநல்ல பட்டணத்தில் அன்புடனே தானிருக்கும்
விந்தையுள்ள வேதியரில் வேதமெல்லாங் கற்றறிந்தோன்,
தீதில்லா [7]மெஞ்ஞானஞ் சிறந்த[8]விஞ்சை த(ா)ன்முதலாய்

---

1. [கி]
2. முன் விருத்தம் போன்ற அமைப்பு
3. [கு]
4. கி-ஆ
5. முன்னைய கோலம்போலவே
6. இனிய
7. மெய்ஞ்ஞானம்; ய்-இடையில் ஒலி யாமை
8. வித்தை

ஓதி மிகவுணர்ந்தோ னெழுக்கம் மிகவுடையோன்,
வல்லமை யானோன், மா[1]மந்திர பீடமென
சொல்லும் பெரும்புகழான், தூய வறிவுடையோன்,
[2]தெய்வகுரு வைப்போல் சிறந்த பெருமையுள்ளோன்.
வையம் மணக்கு மாசில்லா நல்மறையோன்.
[3]சாந்தி பதியெனவே தழைக்கின்ற பேருடையோன்.
[4]வாந்தக மாக மனையா ளுடன்கனிந்து
தெய்வேந் திரன்போல் சிறப்பாக வாழ்நாளில்
மையலருங் கண்ணுள் மாசில்லாப் பொன்மதிபோல்
[5]பொற்புங் குணமும் [6]போதமுள்ள மெய்யறிவும்
அற்புத மாக அரிய [7]நவமணிபோல்
ஒருபுதல்வ னீயின்று [8]வுலகமெல்லாங் கொண்டாட
வரிசை யுடனேதான் மைந்தனையுந் தான்வளர்த்தார்.
அஞ்சு வயசுதனில் அரியநூல் கலியாணம்
[9]மிஞ்சு மறைப்படியே மிக்காக வேமுடித்து
[10]பள்ளிக்கு வைத்துப் பரிவான வேதமெல்லாம்
[11]தெள்ளிமையா க[12]வருத்திச் சிறப்பாக வேவளர்த்தார்.
இந்தப்படி சாந்திபதி யென்றுசொல்லு மாமறையோன்
மைந்தன் தனை[13]யும் வளர்த்துவரும் நாளையிலே.
மாகமா தமெனவே வளருகின்ற தைமாத-
[14]மாகமுள்ள [15]பூருவபக்க மடைந்த பிரதமைதான்
வந்தா [16]லன்னகரோர் [17]மாகத்தா னம்மிதமும்

---

1. மந்திரத்திற்கு இருப்பிடம்
2. பிரகஸ்பதி
3. சாந்திபன்-பதி என்பது பல பெயரிலும் முடிவாக வருவதால் இங்கும் கொண்டனர் போலும்
4. பந்தகமாக; உறவாக;
5. அழகு
6. உணர்வு
7. புது மணி; பல சிறப்புகளால் ஒன்பது மணியின் அழகும் ஒருங்கு அமைந்த மணிபோல என்றுமாம்
8. வ் உடம்படுமெய்; உ-என்பதன் உச்சரிப்புமாம்
9. விஞ்சும்-சிறந்த
10. பள்ளிக்கு வைத்தல் என்ற வழக்கு
11. தெளி என்பது தெள்ளிஎன விரிந்து மை ஈறு பெற்றது; அறிவு நுட்பம் பார்மல்
12. வரும்படியாகச் செய்து;
13. உம்மை
14. மாதமாக உள்ள; ம்-உடம்படுமெய்: உயிர்ந்தோர் அல்லது சாந்திரங்களின் மனத்தில் (கருத்தில்) உள்ள என்றுமாம்; ஆகம்=மனம் என்றும்
15. பூர்வபக்கம் என ஓலிக்கும்
16. அந்தகரோர்
17. [மாகஸ்நானம்]

விந்தை யுடனே விருப்பமென [1]யாடிடுவார்.
இப்படியே மாகஸ்நான மெல்லோரு மாடுவதால்
செப்பமுள்ள சாந்திபதி சிறப்புடனே பெற்றெடுத்த
மைந்தனல்ல தோழரோடு வாகுடைய மேல்கடலில்
சிந்தையுடன் மாகஸ்நானம் தினமாடி யேவருவான்.
நன்னயமாய்ப் பாலனிவன் நட்புடைய மாகஸ்நானம்
'என்னசொல்லி மூழ்கிடுவான்?' என்றுள்ளீ மன்னு! கேள்!

விருத்தம்(2)

அரியகிட் டிணனே வேதா அச்சுதா அடிய னேநீர்
விரிதிரைப் பிரவா கத்தில் மேவியே மாகத் திங்கள்
உரியநீ ராடும் [2][வாரதால்] உளமகிழ்ந் தொல்லை யெய்தி
பரிவுறக் கா[ர்]த்துநீயே படர்கரை ஏற்று வாயே![3]

நடை

'அரிதான கிருஷ்ணு! அச்சுதா! மாவேதா!
அரி!சாம- கிருஷ்ணு! அரிநமோநா ராயணனே!'
என்றுமந் திரமோதி யினி(ய)தோத் திரங்கள்செய்து
[4]வென்றியுள்ள மாகஸ்நானம் விரும்பிநா னுடுகிறேன்.
அரிராம தேவே! யச்சுதா! மாவேதா!
பரிவா யெணைக்கா[ர்]த்து படர்கரைதா [4]னேத்திடுவாய்'
என்றுஇந்தப் பாலன் இப்படியே மாகஸ்நானம்
நன்றியுள்ள தோழரொடு [5]நடந்தாடு மோர்நாளில்
[6]தண்டியுள்ள பேருடனே தான்தோத் திரம்பாடி
மண்டு மகிலகடலில் மைந்தன் முழுகிடவே
முழுகுகின்ற பாலகனை முழங்குங் கடல்திரைதான்
[7]நழுவவே கால்வாரி நடுக்கடலில் போனதுவே.
அன்பான பாலகனை அலைகொண்டு போனதினால்

---

1. ய்-உடம்படுமெய்
2. போதால், அல்லது நீராடு மாற்றால் என்று இருக்கலாம்
3. முன்னைய விருத்தம் போன்றது
4. ஏற்றிடுவாய்
5. நடந்து நடைமுறையாக
6. மிகுதி
7. கால் நழுவவே,

பொன்போல தோழர் புனலில் மிகமூழ்கி
வந்துகரை யேறிநின்று மறையவனுர் பாலகனை
விந்தையுடன் காணுமல் மெய்சோர்ந்து [1]அம்புருவாய்
தண்ணீர் தனிலிறங்கித் தடவி மிகப்பார்த்து
கண்ணீர் ம[2]றுகிடவே காணுமல் 'அய்யோ'வென்று
ஓடி மிகவந்து வுள்ளசெய்தி தன்னையெல்லாம்
நாடியே [3]சாந்திபற்கு நடுக்கமுறச் சொன்னரே.
'கடலில் முழுகுகின்ற காலைதனைக் காணே'மென்று
விடலையர்கள் சொன்னதினுல் மிகநொந்து தான்பதறி
காய்ந்த [4]இருப் பூசிதனை காதில் நி[5]ணித்ததுபோல்
வாய்ந்ததொரு [6]தாயர்தந்தை [7]மருகின்ருர் அப்போது
பெற்றெடுத்த மாதாவும் பிள்ளையுட வாஞ்சையினுல்
கத்திஞள்; மெத்த கதறினு ளய்யோ!'வென்ருள்;
மண்ணில் விழுவாள்; மகனேம கனேயென்பாள்[8];
எண்ணி யழுவாள்; 'இழந்தேனே! உன்னை அய்யோ!
கடலில் கொடுத்தேனே! காணுமல் போனேனே!
விடலையே! பிள்ளாய்! வினையிவ் பயனிதுவோ?'
என்றுசொல்லித் தாயழுது '[9]இனிதாளபிள்ளையொடு
[10]பொன்றிவிடு வே'னென்று புலம்புன்ற வேளைதன்னில்
சாந்திப ஞன தக்க செழுமறையோன்
மாந்தருடன் கூடி மாகடலில் தானிறங்கி
தெள்ளிமைசேர் மைந்தன் செத்த கொடுமைதனை
உள்ளத்தில் வைத்து [11]உற்ற அறிவுகொண்டு
[12]'இன்னிஞன் மெத்த [13]இரங்கி யழுதிடினும்
வன்னக் கடலில் மடிந்தபிள்ளை வந்திடுமோ?'

---

1. [அம்புருவாய்] அன்புருவாய்
2. [ரு]
3. சாந்தீபன் என அப்பெயர் வருதல் காண்க
4. [யி]
5. [னி]
6. தாய் தந்தையர் எனற்பாலது; ர, ற;
7. மறுகுகின்ருர்; கு-வேண்டா இடத்து வருவது போன்றமையைக் கருதப்பட்டது போலும்
8. இறந்தகால வினையின்பின் எதிர் காலம் வந்தமை
9. [யி]
10. [ஞ]
11. [வு] யுக்த என்றுமாம்
12. இவர் தான்
13. [யி]

என்று மனதுதனை [1]இளகாம லேயொடுக்கி
அன்று மசனுடைய அன்பான தோழர்தனை
விந்தையுட னேபார்த்து மெத்த விசாரமதாய்
'[2]யெந்தன் மகனுடைய [3]யினிதான தோழர்களே!
95. உங்க ளுடன்கூடி வுறவாடி யேகிதந்தான்
பொங்கு மலைகடலில் புனலாடு மென்பாலன்
என்ன சொன்ன னுங்களிடம்? [4]ஏதுசொல்லி யிப்புனலில்
வன்னமுட னுடிடுவான்? மைந்தரே! சொல்லு'மென்றான்
நீதில்லா மாமறையோன் தியக்கமுட னேகேட்க
100. சூதில்லா தோழர் சொல்லுவா ரன்புடனே
'எங்களுட தோழன் [5]இனிப்புனலா டும்போது
'சங்குசக் கரபாணி தாமோ தராமுகுந்தா
அச்சுதா ராமா அரிதேவா [6]கிஷ்(ட்)ண'வென
மெச்சியிந்த மந்திரத்தை விரும்புதலா க-நிதந்தான்.
105. நாவினு லோயாமல் நாலு[7]திரம் ஆறுதிரம்
ஓவிய மாய்ச்சொல்லி உற்றபுனல் மூழ்கிடுவான்.
இப்படியே நித்தம் இனியபுன லாடிடுவான்,
செப்பமுட னீரில் சிறந்து முழுகினன்காண்.
இந்தப் புனலி லிறங்கி முழுகினவன்
110. விந்தை யுடனே மீண்டுவரக் [8]காணே'மென்று
பாலர் மிகக்கூறப் பரிவான வேதியனும்
சீலமுட னேகேட்டு சிந்தை மிக மகிழ்ந்து
தன்மனைவி யைநோக்கி சாந்திபனு ன-மறையோன்
பொன்போல் முகமலர்ந்து பூராய மாய்மகிழ்ந்து
115. 'வா[9]ராய்நீ பொற்கொடியே! மகன்மாண்டு [10]போனனென
கா[11]ரார் கருங்குழலே! கவலைப் படவேண்டாம்.

---

1. [யி]
2. யெ-என்பதன் உச்சரிப்பு என்;
3. [யி]
4. [யே]
5. இங்கே அல்லது இவிய
6. 'கீஷ்ண' என ஒலிக்கும்
7. தரம்; முறை
8. 'காணுமென்று' என ஒலிப்பர்
9. [ரு]
10. 'போனனென' என ஒலிக்கும்
11. ஷ.9

நம்முடைய பிள்ளை நாள்தோறுஞ் சொன்னமொழி
இம்மையிலே [1]சோராது. [2]இறந்தமகன் வந்திடுவான்.
அண்டமெல்லாந் தானளந்த ஆதிதிரு மால்மூர்த்தி
கொண்டுவந்து நம்மகனைக் கொடுப்பார்.நீ யஞ்சாதே'
என்றுமனந் தேறுதலா யேந்திழைக்குத் தானுரைத்து
நன்றியுட னேயிருவர் நட்பாக வாழ்ந்திருந்தார்.
இந்தக் கதைதான் இப்படியே தா[3]னிருக்கில்
விந்தையுட னேர்கதைதான் [4]விளம்புமேும் மன்னுகேள்!
என்று வதிட்டன் இனிய நீலீபதிக்கு
[5]நன்றி யுடன்சொல்வான் ராசனே நீகேளாய்!
வாசுதேவ ரின்ற லமந்தருட மாகதையை
பேசுவோம் மன்னு! [6]பலபத்திர ராமருடன்
தம்பியான மாயவரும் தானே கனிவாக
உம்பர் மகிழ உகந்திருவ ரும்[7]சோடாய்
வளர்ந்துவரும் நாளையிலே மாசில்லா வேதமெல்லாம்
[8]தழைந்தகுரு தன்னிடமாய்த் தான்கற்றூர் மன்னவனே!
சாதிக்குண் டான தனுசாஸ் திரமுடனே
நீதிநூல் முற்றும் நிரம்பவே தான்படித்து
அண்ணனெடு தம்பியுந்தான் அனைவோருங் கொண்டாட
[9]வண்ணு யுதபரீட்சை வசையறவே கற்றறிந்தார்
இந்தப்படி வித்தைபல இளவலெனுங் கிருஷ்ணனெடு
விந்தை யுடன்படித்து விஞ்சைநூல் கற்கவென்று
மனதி லவர்நினைந் நு வாகா யிருவருந்தான்
அனமுலவுஞ் சோலைசெ[10]றி அழகுவந்திப் பட்டணத்தில்
இருக்கின்ற வேதியரில் இனியகா சிபர்குலத்தில்
பெருக்கமுட னேதான் பிறந்திடுஞ்சாந் திபன்தனக்கு

---

1. வீணுகாது
2. [பி]
3. இருக்கையிலே
4. விளம்புகேரும்
5. ந-ர மோனை
6. 'பலபத்ர' என ஒலிப்பர் போலும்; பல ராமன்
7. இணை
8. தனைந்த என்றே எதுகை கொள்ளும் வேதம் மனத்தில் தனையுண்ட என்றுமாம். தன்னினை பிறவினைப் போலில் வரும்
9. வண்ண ஆயுத என்பதன் மரூஉ. பரீட்சை = ஆராய்ச்சி; பழக்கம்
10. [தி]

நல்ல தொருவிஞ்சை நட்பாய் வருமெனவே
சொல்லரிய வீரர் தூயபட்ட ணங்கடந்து
வந்தி நகரமென [1]வசனிக்கும் பட்டணத்தில்
விந்தை யுடன்வந்து மிக்கான சாந்திபனே
கண்டு தொழுது கையால் மிகப்போற்றி
அண்டர் புகழ்வீர ரன்பா யுரைத்திடுவார்.
'அய்யனே! மெ(ய்)ஞ்ஞான அரும்பொருளே! மாதவரே
மெய்யனே!' யென்றுமெத்த வேண்டுமுப சாரமொடு
[2]வன்னமணி மாயவனும் வாகான மூத்தவனும்
நன்னய மாய்ச்சொல்லி நட்பாய் மனமகிழ்ந்து
[3]அடியார்கள் விஞ்சையின்மேல் ஆசைவைத்து மாதவரே!
வடிவாக வந்[4]தாம்; [4]ஙனது மகிட்சியொடு
எங்க ளிருவருக்கு மினியவிஞ்சை மந்திரத்தை
பொங்கமுடன் சொல்லிடுவீர்! புண்ணியரே!' யென்றுமெத்த
வாசுதே வன்[5]பாலர் மனதுகனி வாய்க்கூற
தேசுசேர் சாந்திபனுந் திருக்கண்ணு லேநோக்கி
இருவர் குணந்தனையு மினியவழ கு-தனையும்
அருமறை யோன்கண்டு ஆச்சிரிய மாய்மகிழ்ந்து
'அப்படியே நல்ல' தென அரியவிஞ்சை மந்திரத்தை
செப்பமுடன் சொல்லி சிறப்பாக வே-[6]வருத்தி
தனுசாஸ் திரமுதலாய் சாற்றிய வேதமொடு
மனுநீதி தன்னையு[7]மோ வருத்திவைத்தா னம்மறையோன்
அம்மறையோன் சொல்படியே அன்பாக வேதமெல்லாம்
செம்மை யுடன்படித்துத் தெளிந்து இருபேரும்
குருவான சாந்திபனே கும்பிட்டுத் தான்போற்றி
விரிவான விஞ்சையொடு வேதமெல்லாந் தான்படித்து
தந்தவரே! கேள்மோ! சார்ந்தகுரு தெட்சணைதான்
விந்தையுடன் நாங்கள் மிகக்கொடுக்க வேணுமல்லோ?

---

1. கூறும்
2. நீலவர்ண ரத்தினம் போன்ற
3. உம் அடியார்களாகிய நாங்கள்; நன்மையில் படர்க்கை
4. மகிழ்ச்சி
5. குமாரர்கள்
6. வரச்செய்து = கற்பித்து
7. 'ஓ' ஏ என்பதுபோல வருதல் காண்க

தேவரீர் சிந்தைதனில் [1]தீட்டமெனு மாபொருளை
ஓவியமாய்க் கேளு'மென உறுதியுட னேயிவர்கள்
சொன்னதால் அம்மறையோன் [2]தூயமுட னேபார்த்து
மன்னவர்க ளாரோ? வானவரோ? [3]நாகத்தரோ?
175. காந்[4]தருவ ரோ[5]இவர்கள் கடிய [6]இயக்கர்களோ?
வேந்தர் புதல்வரென வேடமுற்று வந்தாரோ?'
[7]என்று பலநினைவாய் [8]யெண்ணி மனந்தனிலே
'நன்றியுள்ள பாலரைப்போல் நான்கண்ட தில்லை'யென
சாந்திப[9]ன் தானெழுந்து தன்தேவி [10]கிட்டேகி
180. [11]வாந்திபமாய் மைந்தர்சொன்ன வார்த்தை யுரைத்தனனே.
அப்பொழுது மங்கையவள் அழகுடைய நாயகனை
செப்ப முடனேக்கித் தேன்மொழியாள் கூறிடுவாள்:-
'தூண்டு புகழுடையீர்! தூயகட லில்விழுந்து
மாண்டதொரு பிள்ளைதனை வரவழைத்துத் தாருமென்று
185. வேதப் பிராமணரே! மிக்கான தொண்டரிடம்
போதமுடன் கேளு'மெனப் பூங்கூந்த லாள்கூற
'அப்படியே நல்ல'தென்று அழகுடைய சாந்திபனும்
செப்பினசொல் மாறுத [12]சீசர் முகம்நோக்கி
'நேசமுடன் சொல்லுகிறேம் [13]நீங்கள்குரு தெட்சணைதான்
190. ஆசையுடன் கேட்டபொருள் அன்புடனே [14]தாரோமென்றீர்.
என்னுடைய பாலகன்ரு னிந்தக் கருங்கடலில்
வன்னமுடன் நீரா(ட்)டில் மாண்டுமிகப் போனுன்காண்.
அந்தநல்ல பாலகனை அன்புடனே தானழைத்து
தந்திடு வீ'ரென்று சாந்திபனுங் கூறினனே.
195. ஆசான் மிகக்கூற [15]அச்சுதனும் [16]மூத்தவனும்

---

1. விருப்பம்
2. தூய்மையுடன்; மை = அம்
3. நாகதரோ (நாகலோகத்தவரோ) இவ் வாறு ஒலிக்கும்போலும்
4. [து]
5. [யி]
6. ஷ-5
7. [யெ]
8. ஷ-7
9. [ந்]
10. கீட்ட ஏகி என்பதன் மரூஉ
11. பாந்தவமாய்
12. ஜ
13. தரோமென்றீர் என ஒலிக்கும் ("நரு வோம் என்றீர்")
14. கண்ணனும்
15. பலராமனும்

[1]கூசாமல் 'அப்படியே கொடுக்கிறேம்' என்றுசொல்லி
வி[2]றுடனே தேரேறி வில்லெடுத்து [3]உக்கிரமொடு
சீறிக் கடற்கரையில் சிங்கமென வந்துநின்றார்.
கரியவனும் மூத்தவனுங் கடற்கரையில் வந்துநிற்க
வருணன் அதுவறிந்து வாடி மனந்[4]தளன்று
சீக்கிரத்தில் ஓடிவந்து 'தெண்ட' மெனப்பணிந்து
[5]'ஆக்கிரமத் தோடும் அடியேன்மேல் கோபமுற்று
கரிய[க்] கருங்கடல்மேல் கண்ணனே! வந்துநின்ற
பெருமையென்ன? சாமி! பேசு'மென வேவருணன்
அன்புடனே கேட்க, அன்றுதிரு மாயவனும்
நன்வருண னைப்பார்த்து நடுங்கவே சொல்லிடுவார்
'எங்கள் குருவாக [6]யிருக்கும் மறையவனுர்
பொங்கமுடன் பெற்ற புதல்வன்புன லாடவந்தால்
கொன்றுவிட லாமோதான்? கொன்றதொரு பாலகனை
இன்றழைத்து வாரு'மென [7]யெம்பிரான் சொல்லிடவே
வருணன் மிகப்பயந்து மாயோன் தனைப்பணிந்து
'குருவுடைய பாலகனைக் கொல்லவில்லை நானடியேன்.
பஞ்சன னென்று பழிகார ராட்சதன்றான்
[8]அஞ்சனந்தோய் மாலே அலைகடலி லேயொருவன்
இருக்கிறான்; பொல்லாதான்; [9]ஈனம் இரக்கமில்லான்
[10]மருக்குலவு மாலோய்! மாபாவி ராட்சதன்றான்
கொடிய முதலையெனக் குருக்களுட பிள்ளைதனை
துடினம் எனப்பிடித்துச் [11]சோர்வு[12]செய்து போட்டானே
[13]என்னமோ? நானறியேன்! இடையூறு ராட்சதனுல்
வன்னமுள்ள பாலனுக்கு வந்ததுபோல் [14]தோற்றுதய்யோ!

---

1. மனமஞ்சிப் பின்வாங்காது
2. [று]
3. "உக்ரமொடு" என ஒலிக்கும்
4. தளர்ந்து; த-ற
5. ஆக்கிரகம்=சுடுங்கோபம்; விடாப்பிடி
க-ம
6. ய்-உடம்படுமெய்
7. யெ-6
8. மை(போலக் கரிய)
9. [யி] ஈனம் என்ற எண்ணமோ? ஈனிக்கம் என்பதும் வழக்கு
10. மாலையின் வாசனை குலவும்
11. தளர்ந்துவிட
12. செய்துபோட்டான் என்ற வழக்கு
13. என்னவோ ம் உடன்படுமெய்யா?
14. தோற்றுகிறது ஐயோ

ஆனதால், சுவாமி! அடங்காத ராட்சதனை
தானிப்போ து-பிடித்து சதிசெய்த வண்டனிட
நெஞ்சைப் பிளந்து [1]நிணத்[2]குட லீப்பார்த்தால்
[3]மஞ்சு நிறமாலே! மைந்த னிருப்பான். காண்!'

225. என்று வருணன் இந்தவகை சொன்னவுடன்
வென்றியுள்ள மாயோன் மிக்க[4]இடை கூர்வேலால்
கோலப் பெருங்கடலில் [5]குபீரென்று தான்பாய்ந்து
பாலைப்போல் வெண்மையதாய்ப் பரிய வுடலோடும்
இருக்கின்ற ராட்சதனை யெம்பெருமா னுந்தேடி

230. பெருக்க முடன்பிடித்துப் பீ[6]றிவயற் றைக்கிழித்து
பார்க்கும்போ தில்வயற்றில் பரிவான பிள்ளையன்றி
தாக்கும் புகழ்[7]தவளச் சங்குமொன்று தானிருக்க
கண்டான் முகுந்தன்; கையிலே தானெடுத்து-
கொண்டான்: கடலிலிட்டுக் குதித்தான் நெடுந்தேரில்;

235. தேரில் அவனேறித் தென்றிசையைத் தானேக்கி
வீரியமா கத்தேரை விரைந்து நமன்பதிக்கு
[8]அருகாண் மையாக வர்சுநனு மூர்ந்தவனும்
பெருமை யுடன்நடத்திப் பேரான சங்கமதை
[9]ஊதினுல் வாயில்வைத்து [10]ஊதும்போ தண்டமெல்லாம்

240. போத மிகநடுங்கிப் பூமி கிடுகிடென
அதிர்ந்த படியாலே, அஞ்சியே மாமறலி
எதிர்ந்தோடி வந்து [11]யினியதடந் தேர்மேலே
[12]வெள்ளி மலைபோலே மிக்ககரு மாமலைபோல்
தெள்ளிமையாய் நிற்குஞ் [13]சீராளர் பாதமதில்

245. பொங்க முடன்வணங்கி 'புண்ணியரே [14]சோடாக

---

1. கோழுத்த
2. [கு]
3. மேகம்
4. [யி] இடை=இடம் அல்லது சமயம்
5. விரைவுக் குறிப்பு
6. [ரி] கீறி
7. வெண்மை
8. அருகாக; சொல்வழக்கு
9. ஊதினால்; ஊதினுல் எவ்வும் இருக்கலாம்
10. வ்-உடம்படுமெய்; அந்தாந்
11. ய்-உடம்படுமெய்
12. பரமன் வெள்ளிமலை; கிருட்டினன் கருமாமலை; நிறவேறுபாடு
13. சீராளர் என்ற சொல்வழக்கு; இயற்பெயர் அன்று இங்கு
14. இணையாக

இங்குவந்த காரியமென்? ஏந்தலே! சொல்லு'மென
மாமறலி கேட்க [1]மணிமரக த-மாலோன்
தாமரைக் கண்ணேக்கித் தானுரைப்பான் விந்தையுடன்:
'தென்றிசையோய்! யெங்களுட தேசிகனுர் பிள்ளைதனை
இன்றழைத்து வா'வெனவே யேந்தல்மிகக் கூறினதால்
'நல்ல' தெனவே நமனும் மிகப்பயந்து
சொல்லு மலைகடலில் துடியாமல் மாய்ந்ததொரு
பாலகனை மன்னு! பழையபடி போலவேதான்
மால்மகிழக் கூட்டிவந்து மறலியுமே விட்டனனே.
[2]அப்போபல பத்திரரும் அழகுதிரு கிரு[3]ட்டினன்தான்
செப்பமுள்ள தேசிகன்சொல் செல்வக் குமாரனையும்
பரிவான தேரில்வைத்துப் பாங்குசெறி வந்தியெனும்
திருநகரில் [4]வந்துநல்ல தேசிகன்பால் மைந்தனையும்
[5]கொண்டுவந்து விட்டுக் [6]குலுங்கஅவர் பாதமதில்
'தெண்டம்' எனப்பணிந்து செப்புவார் பின்னுமவர்:-
'எங்களுடகுருவே! யின்னமும்நீர் வேண்டியதை
பொங்கமுடன் சொல்லு'மெனப் போற்றி யிவர்பணிய
தேசிக னுங்கேட்டுச் சிந்தை மிகமகிழ்ந்து
நேசமுள்ள சீசர்தனை நி[7]ரம்ப மிகப்புகழ்ந்து
உங்களைப்போல் மண்ணுலகி லுற்ற குருக்களுக்கு
பொங்கமுள்ள [8]தெட்சணைதான் புகழ்ந்து கொடுப்பவரார்?
வண்ணப் பெருங்கடலில் மடிந்ததொரு பாலகனை
நன்னயமாய்க் கூட்டிவந்து நம்மயக்கந் தீர்த்தீரே!
இந்த வுலகி லினிதாக உங்களைப்போல்
விந்தையுடன் கண்டறியேன் மிக்கபுக ழைப்படைத்தீர்!'
என்றுதான், சாந்திபனு மிருவரையுங் கொண்டாடி,

---

1. மரகத மணிபோலப் பச்சை(கரிய)நிறத் திருமாலைய கண்ணன்
2. அப்போபல என ஒலிக்கும்
3. [ஷ்டினன்]
4. தேசிகன்பால் வந்து,
5. கொண்டுவந்து-ஒருசொல்
6. வியக்க
7. [ம]
8. த=தெ; வடமொழியில் வர்க்க எழுத்துக்களில் மூன்றுவது. அகரமுடன் வருவது, தமிழில் எகரமுடன் வரும்

நன்றி யுடன்வாழ்த்தி [1]நாயகம்போல் மன்னவரே!
சுகமாக வுங்களுட தூயபதி தான்சேர்ந்து
அகமகிழ வாழு'மென்று ஆசீர்வா தங்கள்சொல்லி
சாந்திபனுந் தானனுப்ப தம்பி தமையனுந்தான்
வாந்தகமாய்ப் பட்டணத்தில் வந்திருந்தார். மன்னவனே'
என்று வதிட்டன் இனியகட லில்வீழ்ந்து
அன்று மடிந்த[2]பிள்ளை அச்கதையைச் சொன்னனே.
இப்படியே மூன்றுகதை இனிய திலீபதிக்கு
செப்பினதால் மெத்தச் சிந்தை மிகமகிழ்ந்து
'அய்யரே! இக்கதைதான் அடியேன் தனக்குரைத்தீர்!
மெய்யரே! யந்த மிருகசிங்க னனரிசி
கலியாணஞ் செய்து கனிந்துஇல் லறத்திருந்து
மலிவாக வாழ்ந்தகதை மாரிசியே சொல்லு'மென்றான். 184

பன்னிரண்டாம் அத்தியாயம் முற்றும்.

---

1. நாயகமனி
2. பிள்ளையின் அந்தகைய கதை; 6-வேற்

றுமைத் தொகை நடுவே சுட்டு வரல் காண்க

பதின்மூன்றும் அத்தியாயம்

மிருகசிங்கன் கலியாணம்

விருத்தம்(1)

'வாளென்ன வரிநெடுங்கண் மடநல்லார் மாமதன
வேளென்னக் காதலித்து விரும்புமெழில் விறல்வேந்தே!
கே'ளென்ன [1]அருந்ததிதன் கேள்வனவன் கேட்டகதை
கோளின் [2]னல் படாது[3]கொளக் கூறுவான் [4]றுடங்கினனுல்.[5]

நடை

5. 'வாளிணங்கு கண்மடவார் மதன்போ லிருக்கின்ற
ஆளழகா! கேண்மோ!' வென் றரிய தவவதிட்டன்
தேசாரு கின்ற திலீபன் முகம்பார்த்து
காசார் முலே[6]வடமீன் கணவ னுரைப்பானே.
'குச்சர் மகனுன கொடிய மிருகசிங்கன்
10. [7]பச்சைக் கொடிஇடத்தான் பாத மிகப்பணிந்து
வந்தரு ளன்றுமுதல் மவுன மெனக்காட்டில்
விந்தை யுடன்திரிந்து மிருகசிங்க னுனவன்தான்
அரிதான வாசாவை அனுசரித்து ஓவியமாய்
பெரிதான விஞ்சைமுற்றும் பேராகக் கற்றறிந்து
15. விஞ்சைப் [8]பதினுலும் மெய்ப்புடனே ஓதிவைத்த
[9]இஞ்சொல் குருவை இ[10]ட்டமுட னேவணங்கி
சீரான மாகுருக்கள் சிந்தை கனிவாக
பேரான செம்பொன் பெருக்க முடனீ[ய்]ந்து

---

1. [யருந்ததீன]
2. [வி] உன்னத்தில் வாங்கிக் கொள்வ தில் வருந்த மின்றிப்பெற
3. [கு]
4. தொடங்கினன்
5. காய்ச்சீர் நான்கு வரும் நாலடித் தாவுக் கொச்சகமான கலிவிருத்தம்
6. அருந்ததி கணவனும் வசிட்டர்
7. உமையை இடப்பாகம் கொண்ட சிவன்
8. வேதம்-4; வேதாங்கம்-6 உபாங்கம்-4 ஆக 14
9. இன்சொல்
10. [ஷ்ட்]

குருதெட் சனியெனவே கும்பிட் டவரடியில்
அரு[1]ளுற்ற மாயோகி ஆசான் விடைவாங்கி
கடவு ளுரைத்தபடி கலியாணம் பண்ணுதற்கு
திட[2]மீறு மிருகசிங்கன் சென்றான் அவன் பதிக்கு
தன்னூர்தனி லேவந்து தாய்தகப்ப [3]னேவணங்கி
மன்னும் புகழுடையீர் மணஞ்செய்து வையு'மென்றான்
மைந்தன் உரைகேட்டு வாகான குச்சமுனி
முந்தவே கேட்டு [4]முகிழ்த்தமைவைத்து தானிருந்த
ஒண்டொடியை யீன்ற உயத்தியனுர் பக்கல்வந்து
நன்றியுடன் பெண்கேட்டு நாளு முகிழ்த்தம்இட்டு
வேத முறைபடியே மிக்கபல வேதியரை
போதவே தானழைத்துப் [5]பூரிதா னங்கொடுத்து
[6]அரசாணி வைத்து அழகுமணப் பந்தலிட்டு
வரிசையுடன் ஓமம் வளர்த்து[7]நிறை கும்பம்வைத்து
தூயசுவா தத்தையர்க்கும் [8]துடிமிருக சிங்கனுக்கும்
நேய முடன்[9]காப்பு நீள்மறையோர் தான்பூட்டி
அக்கினி முன்னிலையாய் அந்தணர்கள் சாட்சியென
மிக்க மறைவேதம் விளம்புகின்ற சொல்படிக்கே
மங்கைசுவா தத்தைக்கும் [10]வன்மிருக சிங்கருக்கும்
பொங்க முடன் மங்கல[11]நாண் பூட்டினுர் விந்தையுடன்.
இப்படியே வேதியர்க ளிருவருக்குங் கலியாணம்[12]
செப்ப முடன்செய்து சிறப்பாய் விருந்தருந்தி
சந்தோச மாகத் தானிருக்கும் போதிலேதான்
[13]கந்தார் கருங்குழலார் கன்னியர்கள் மூவருந்தான்
இந்தச்சுவா தத்தைபர்க்கும் [14]இனிமிருக சிங்கருக்கும்

---

1. [ன]
2. மீக்க என்ற பொருளில் இந்நூலில் பல முறையும் வருகின்றது
3. ஒருமை காண்க; பேச்சுவழக்கு
4. முகூர்த்தம்; முகூர்த்தம் வைத்திருந்த = முன்னரே திருமணத்திற்கு ஏற்பாடாய் இருந்த
5. சிறப்புகளில் பார்ப்பனருக்கு நன் கொடை
6. அரசமரக் கொம்பு வைத்து மணப்பந்தலில் கீழ்த் திசையில் நடுதல்
7. பூரண கும்பம்
8. புத்தி கூர்மையான
9. காப்பு-பூட்டி = காப்புக்கட்டி
10. தவவன்மை
11. [ன] நான் பூட்டினுர் = தாலி கட்டினுர்
12. கலியாண முறை கூறப்பெற்றுள்ளது
13. கந்தம் + ஆர் வாசனைபொருந்திய; கந்து
14. இனி = இனிய; இந்நூல் வழக்கு

விந்தையுடன் கலியாணம் மிகமுடிந்த செய்திதனை

பாங்காக வேகேட்டுப் பாவையர்கள் மூவருந்தான்
ஆங்கார மாக அடங்காப் பொருமையினால்
மனங்கள் மிகப்பதற மணக்கோலப் பந்தல்தனில்
[1]சினங்களுடன் வந்துநின்று தீப்[2]பொறியக் கண்கள்ரெண்டும்
'எப்படிநீர் வேதியரே! எங்கள்தனை யேயகற்றி
துப்பிதழ்வாய் [3]பெண்ணுதனைத் தூய மணம்முடிப்பீர்?
ஞாயமோ? இந்தநெறி நல்லதோ? நீர்தாமும்
நேயமுடன் கலியாணம் நீதமின்றி யேமுடித்தீர்!
எங்களுட தோழி[4]யல்லோ இந்த[5]சுவா தத்தையென்பாள்
மங்கைதனை யிப்போ மணஞ்செய்தீர் வஞ்சகமாய்.

நாட்டமுடன் கலியாணம் நால்வரையுஞ் செய்யால்
தேட்டமுடன் [6]சுவாதத்தைதனைச் சிறப்பாய் மணமுடித்தீர்!
ஆனதால் மாதவரே! [7]அடியார்கள் மூவரையும்
தேனினிய பந்தலிலே சிறப்பாய் மணமுடிப்பீர்.
அல்லவென்று நீர்தாம் [8]அகாடமாய்த் தள்ளிவைத்தால்

சொல்லரிய சாபம் சொல்லுவோங் கண்டீரே!
ஆசையால் நாங்கள்வந்தோம் [9]அல்லவென்று நீர்தடுத்தால்
[10]தோசங்காண் சொன்னேஞ் சொன்னேம் பழிவருங்காண்!'
என்றுஅந்த மூவருந்தான் இனி[ய]மிருக சிங்கன்முன்னே
நின்று வழக்காடி நிட்டூரம் பேசுவதை

குச்சர் மகனுன கொடிய தவயோகி
அச்சமுடன் கேட்டு [11]அறிவழிந்து தென்னவினை?
பெண்ணுசை [12]யன்றிப் பெரும்பதவி [13]சேர வென்றேரும்.

---

1. சினங்காட்டும் செய்கைகள்
2. பொறி என்பதிலிருந்து வந்தவினை அல்லது பொறிகள்
3. பெண் உ-சாரியை
4. அல்லவோ; மரூஉ
5. வலிமிகவில்லை
6. சுவா என்பதனைக் கன்போல் ஒரு க. சுவா இல்லாமல் தலைக்குறையாய் 'தத்தை' என்பது மட்டும் வரலாம்
7. முன்னிலை
8. அகடியம் = அநீதி; பொருந்தாதது
9. அல்லது; தீயது; இல்லை என்ற பொருளில் வந்ததும் ஆகலாம்
10. தோஷம்
11. அறிவழிந்தது என்னவினை; அறிவழிந்தது (மயங்கி) என்னவினை என்றும் இருக்கலாம்
12. இன்றி
13. சேர்க எவ்றிருந்தோம்; பதவி சேர ஆசையை அன்றி (பகைத்து) வென்றேரும் என்றும் ஆகலாம்; வகிந்து பொருள் கொள்ளுதலாகும் இது

தண்ணருங் கங்கைச் சடைக்கடவுள் ஓவியமாய்
இல்லறமே நல்லறங்காண் இனிதான மங்கையரில்
நல்லவ ளாய்ப்பார்த்து நன்மணமே செய்திடென்றார்.
அப்படியோர் பெண்ணுதவீ அன்பாய் [1]மணமுடிக்கில்
இப்படி யுந்[2]துன்பம்! எம்பிரான் காரணமோ?
ஒருமடந்தை யன்றி ஓவியமாய் மூவரையும்
திருமணந்தான் செய்வதுண்டோ? சிவயோகி களுக்[3]கடுக்கோ?'
என்று பலநினவா யெண்ணி மிருகசிங்கன்
ஒன்று முரையாமல் ஓவியம்போ லேயிருந்தான்.
இந்த வருத்தமொடு இம்முனிவ னிங்கிருக்க
விந்தையுடன் பாரதத்தை மேருதனில் தீட்டிவைத்த
வேத வியாசனென்பான் மிருகசிங்கன் தன்கருத்தை
போத முடனறிந்து புகலுவான் மன்னவனே!
'வாராய்! மிருகசிங்கா! மனதுதனி லே[4]வேறுய்
பூ[5]ராய மாய்நாலு பூவையரை மாலையிட்டால்
[6]எந்தவித' மென்றுசொல்லி எண்ணி மயங்காதே
அந்தமுள்ள நால்வரையும் அன்பாய் மணம்புணர்ந்தால்
[7]குத்தமேவே றில்லை, [8]கொடிய தவமுனிவா!
[9]உற்று ஒருகதைதான் ஓதுகிறேன் நீகேள்மோ.
முன்னொருகா லத்தில் முடிசூடும் ராசர்தன்னில்
நன்னயஞ் சேர்அயோத்தி நாடாளு மாவேந்தன்
[10]மாந்தாத[ர] னென்றுசொல்லு மன்னன் ஒருவனய்யா!
பூந்தா மரையாள்போல் புனிதவடி வுள்ளவராய்
[11]ஐம்பதுபெண் தன்னை அரசன் அவனீன்று
ஐம்பதுபெண் தங்களையும் அன்பா யொருநாளில்

---

1. மணம் முடிக்கையில்
2. துன்பம் (வருவதாக) ஏதற்கு
3. அடுக்குமோ? அடுக்கு = அடுப்பது; நிறைவு என்றுமாம்
4. மனம் வேறுபட்டுக் கலங்கி; வெவ்வே றுய்
5. [ரு]
6. என்ன முறை வழி
7. குற்றம் என்றே எதுகை கொள்ளும். குற்றம் என்று இது வேருக வினங்குவ தில்லை என்று பொருள்
8. கொடுமை தவத்தின் மேற்று
9. உற்றுக் கேள்மோ என்றுமாம்
10. மாந்தாதா என்பது ஆன்பால் விகுதி பெற்றது மாந்தாதா என்றும் இருக்க லாம்
11. 100 பெண்கள் எனப் பாகவதம் கூறும்

[1]சவுரி மகரி[2]சிக்குத் தானே கலியாணம்
அவனிதனில் செய்தகதை, அய்யா!நீ கேட்டிலியோ?
இன்ன முனக்கு இயம்புகிறேன் சந்திரன்தான்
நன்னயம தாக நட்பாயிரு பத்தேழு
பெண்கள் தனையும் [3]பெருக்கமுடன் மாலையிட்டு
பண்புடனே வாழுகின்ற [4]பாங்கு தெரிந்திலியோ?'
என்று வியாசர் இனிப்பாய்ப் பலகதையை
நன்றியுடன் சொல்லிடவே நல்ல மிருகசிங்கன்
'ஆ'மென்று கேட்டு அந்தமூன்று பெண்களையும்
பூ[5]மன்றும் பந்தலிலே புகன்ற பிரமமெனும்
மணத்தின் படியாக மங்கையொரு மூவரையும்
[6]தணப்பில்லா மல்மகிழ்ந்து தானே மணம்புரிந்தான்.
இப்படியே நால்வரையும் இனிதாக மாலையிட்டு
செப்பமுட னேமிருக சிங்கனுமே [7]வாழ்ந்தா'னென்று
மன்னர் மிகவணங்கும் வாய்த்த திலீபனுக்கு
நன்னயமா கவதிட்டன் நட்பா யுரைத்தனனே.
அப்பொழுது மாவேந்தன் அரியகுரு வைநோக்கி
செப்பமுடன் போற்றிச் செப்புவான் ஓவியமாய்:
'எந்தன் குருவே! இனியதொரு மாபொருளே!
விந்தையுடன் தொண்டனுக்கு விளம்பினீர் இக்கதையை.
இந்தக் கதைதனிலே எனக்குமொரு [8]காரியந்தான்
சிந்தையுட னேசொல்வீர். தேசிகரே! மண்டலத்தில்
பிரமமொடு க்ஷத்திரியன் பேசும் வணிகன்முதல்
வருமினிய சூத்[தி]ரனெடு வளர்நாலு சாதி[9]யுண்டோ!
[10]சாதியிந்த நால்வருக்கும் தா[11]னடங்கும் கலியாணம்

---

1. சவுரி
2. ஷ
3. செல்வமாக
4. தன்மை
5. மன்று (சபை) பந்தல்; மன்றல் (வாசனை) பந்தல், பூ மன்று பந்தல்= பொலிவான கலியாணப் பந்தல் என்றமைத்தும்; 'ம்' இருக்குமானால் மன்று (வாசனை) என்ற பெயரிலிருந்து ஒரு வினையை மன்றும்(வாசனைசெய்) என ஆசிரியர் படைத்துக்கொண்டார் போலும்
6. நீங்குதல் இல்லாமல்
7. 'வாழ்ந்தனென்று'னை ஒலிக்கும்
8. விஷயம்
9. உண்டோ 'ஓ' ஏ என்பதன் பொருளில் வரும்
10 முடிபு காண்க
11. நடக்கும் என்றிருக்கலாம் நாலு சாதியில் எட்டு மணம் அடங்குதல்என்று மாற்

நீதி தனையும் நெடியதவ மாயோகி
என்றுசொல்லு கின்ற இனிய சவுபரிதான்
அன்று[1] வன்பதுபெண்களீ அன்பாய்ப் புண்ர்ந்ததுவும்
சொல்லவே ணு'மென்று தூய திலீபதிதான்
நல்ல தவமுனியை நட்புடனே கேட்டானே.
வேந்த னவன்கேட்க மிக்க தவவதிட்டன்
வாந்தக மாய்நோக்கி வழுத்துவான், 'மன்னுகேள்!

விருத்தம்(2)

பேணிய பிரம்மம் தெய்வம் ஆரிடம் பிரசா பத்யம்
பூணுமா சுரங்கந் தப்பம் புகலிராக் கதம்பி சாசங்
காணவே யுரைத்த எட்டுக் கடிமணம் இதனில் நாலு
மானுயர் மறையோர்க் காகும் மற்றவர் உரைக்குங் காலே![2]

நடை

பிரம மணமென்றும் பேசுகின்ற தெய்வமென்றும்
வருமினிய வாரிடமாம் வளரும்பிர சாபத்தியம்
[3]மாசுங் கந்தப்பம் வண்கொடிய ராட்சதமாம்
பேசு பிசாசெனவே பேராக வெட்டுமணம்.
இந்த மணமெட்டில் இனிதான நாலுமணம்
விந்தை யுடைய வேதியர்க ளுக்காகும்.
நன்னயமாய்ப் பின்னே நவின்றதொரு நாலுமணம்
சொன்னபல சாதிய[4]ர்க்காம், சொல்லுகிறோம். நீகேளாய்!
பிரம மொடுதெய்வம் பேசுகின்ற [5]ஆரிடமும்
வரும்பிரசா பத்தியமும் மாமாறையோ ருக்காகு
மாசுரமே நல்லோய் வளர்ந்திடுகந் தர்ப்பமுந்தான்
தேசுசெ[6]றி மன்னவர்க்குஞ் செட்டிகளுக் கு-மாகும்
வாகில்லா ராட்சதமும் வளரும் பி[7]சாசுவமும்

---

1. ஐம்பது இதன்முன் குற்றியலுகரம் கெட்டதுபோலும்
2. 'விளம்-மா-மா' என்று வரவேண்டும் இரட்டித்த அரசீர் விருத்தம்
3. முன் அடியில் சற்று மகரமும் இவ்வடி முதல் அகரமும் சேர்ந்து மா எனுமாய்
'வ' என்பதனோடு போலே கொள்ளும்
4. [ரி]
5. [யா[
6. [சி]
7. பைசாசம்

மோகமுள்ள சூத்திரர்க்கும் முழுபாவி யர்க்காகும்.
இப்படியாச் சொன்னது எட்டு வகைமணமும்
செப்பமுடன் இன்னஞ் செப்புவோம் மன்னுகேள்!
145. பிரம மென்றுசொல்லும் பேரான நல்லமணம்
வரிசை யுடன்பெண்ணை வாகா யலங்கரித்து
சொந்தமுள்ள மாப்பிள்ளையைச் சொல்லி யழைத்துவந்து
விந்தையுட னேதான் மிகக்கன்னிகா தானமென
கொடுப்பதுவு முத்தமந்தான். கொற்றவா [1]இப்பலனை
150. [2]எடுத்துரைப்ப(து?) ஒது இருபத்தெழு தலைமுறையின்
[3]பிதிர்க்கள் கரையேறும்; பெரிய பதவியுண்டாம்.
மதுப்பூ மலர்மார்பா! வளர்ந்திடுதெய் வ-மணங்கேள்!
யாகங்கள் செய்வோர்க் கழகான கன்னிகையை
வாகுடனே தானம் மகிட்சியுடன் செய்தாலே
155. அதி[4]க பலன்காண்; அழிவுமொரு நாளுமில்லை;
பதினெழு தலைமுறையின் படர்பிதுருஞ் சொர்க்கம்புகும்.
ஆரிட மான அழகு மணங்கேளாய்!
[5][ஓர்பசு[ப்] பெற்ற(ம்) [6]உறுதி விலைவாங்கி]
சீரான பெண்ணைச் சிறப்பான மாப்பிள்ளைக்கு
160. பூராய மாகப் புகழ்ந்து கொடுத்தாலே
[7]அதிக மகாபலன்காண்! ஆறு தலைமுறையின்
பிதிர்க்கள் நரகம்விட்டு பேரான சொர்க்கம்புகும்.
பேரான மன்னு! பிரசாபத் தியமணந்தான்
சீராக [8]எக்கியங்கள் சிறப்பாக வேமுடித்து
165. வந்த மறையவர்பால் [9]வரிசையொன்றும் வாங்காமால்
சிந்தை மகிழ்ந்து [10]திணிப்பாய்க் கலியாணம்
செய்து கொடுக்கிறது, தேர்வேந்தா! மெத்தவுமே
துய்ய பலன்காண்! தோகைவயற் றில்பிறந்த

---

1. [யி]
2. முடிபு காண்க உரைப்பதோ? இரு என்றும் இருக்கலாம்
3. பிதிர்க்கள் பலர்பாலாயின் ஏறும் என்ற செய்யும் முற்றேடு முடிவதுஅருமை; பலவின் பாலாகக் கொண்டனரோ? பின்னும் காண்க
4. [ய]
5. பசுவும் எருதும் பெற்றுக்கொண்டு பெண்கொடுத்தல் ஆரிடமணம்
6. [ஒரு]
7. ஷ-4
8. [யெ]
9. பரிசம்
10. கெட்டியாய் [னி]

சந்ததியா லெட்டுத் தலைமுறையி னுள்ளபிதிர்
செந்திருசேர் சொர்க்கம் சேருங்காண். தப்பாது.
இந்தநா லு-மணமு மினியபிராமணர்க்கு
விந்தை யுடன்பொருந்தும். இன்னமுமே நீகேள்மோ!
குலமும் பெருவனமுங் கூர்ந்து மிகப்பார்த்து
நலமுடைய பெண்தனையும் நட்பாய்க் கொடுக்கிறது
தேசுடைய மாவுலகைச் சிறந்தாளும் மன்னவனே!
[1]ஆசுர மென்று அன்பாகச் சொல்லிடலாம்.
மாப்பிள்ளை யும்பெண்ணும் மருவியே கள்ளமதாய்
தோப்பிலேயுங் காவிலேயுஞ் [2]சுகியெம் எனக்கூடி(க்)
காணுக் களவாகக் [3]கலந்துவப்பா லேமணந்தான்!
நாணமல் பூணுவது நல்ல[4]கந்தப் ப-மணங்காண்!
படையில் எதிர்த்துவெட்டிப் பாங்கான பெண்ணுதனை
கொடிதாக வே-[5]யெடுத்துக் கொண்டே-கி யேமணந்தான்
பண்ணுவது [6]ராசதமாம். பாங்கான நித்திரையில்,
பெண்ணுதனைப் புல்குவது பிசாசுமணங் கண்டாயே!'
என்று தானிந்த எட்டுவகை நல்வணமும்
நன்றி யுடன்உரைத்து நவிலுவான் பின்னுலும்.
வேதப் பிராமணர்க்கு மிக்க [தருப்பையர்க்கும்]
போதமுள்ள வேந்தருக்கும் புகழான [அன்பர்க்கு]
வாகான செட்டியர்க்கும் வன்னமுள [க்] கோ(வ)லர்க்கும்[7]
பாகான சூத்திரர்க்கும் பரிவான [பட்டர்(க்)கும்]
இந்தநல்ல நால்வருக்கும் இப்போது சொன்னதினுல்
விந்தையுடன் [8]கைபிடிக்க மெத்த [9]விசேசமன்னே!

---

1. வேறு வகையாகவும் கூறப்பெறும்
2. 'சுகம் அனுபவிப்போம்'-சுகியன் என்பது காண்க. சுகிப்பெம் என்றும் இருக்கலாம்
3. கலந்து உவப்பாலே
4. கந்தர்ப்பம்; ர் இடையே ஒலியாமை
5. சிறையெடுத்து (abduction)
6. ராக்ஷதமாம் க்ஷ = ச
7. இடையர்கள் கோவைசியர்; கோபர் என்றும் இருக்கலாம்; ஒவ்வொரு சாதியிலும் இவ்விரு பிரிவு கூறுகிறர். தருப்பையர் = புரோகிதம் செய்வோர்; 'அன்பர்' வர்மர் என இருக்கலாம்; பட்டர் பத்தர் என இருக்கலாம்
8. வலிமிகவில்லே கைப்பிடிக்க = மணக்க
9. சிறப்பு மன்னு மன்னே என வந்துளது 'ஓ' என்பதன் வழக்குப் பெரிது இந்நூலில்; மன்னே அசையுமாகலாம். ஆனல் இந்நூல் வழக்கன்று மன்ரு என்றும் இருந்திருக்கலாம்

சொன்ன மறைப்படியே தூயதிருக் கல்யாணம்
நன்னயமாய்ச் செய்தாலே நல்ல புகழுடனே
செல்வ முடையவரய்த் தீநோய் [1]விபத்துமின்றி
கல்வியுள்ள பாலகரை கனமாக வும்[2]சன்று
நன்முக வாழ்ந்திருப்பார். ராசனே! இன்னமுங்கேள்!
இன்றேநான் சொன்னபடி [3]யேருட்ட மாய்[4]நழுவில்
செல்வம் பிழையாகும்; தீநோயா லே[5]மெலிவர்.
கல்வியின்றிப் பிள்ளையின்றி கனத்த வறுமையுடன்
துன்ப வினைப்படுவார். [6]சொன்னேம்' எனவநிட்டன்
அன்புடனே எட்டுவகை அரிய திருமணமும்
'சொன்னேம்' எனவே தூய திலீபனுக்கு
நன்முகச் சொல்லி ராசனே! பின்னமுங்கேள்
சவுபரி மகாரிஷியின் தன்கதைதான் சொல்லுகிறேன்!
அவனி தனில்புகழா [7]ரழகுகாம் புலியமெனும்
தேசந் தனில்வாழ்வோர்; சிறந்த தவமுடையோன்;
பாச வினையறுத்தோன்; பஞ்சவிட யத்தைவென்றோன்;
தன்னுயிர்போல் மன்னுயிரை தான்காக்கும் புண்ணியவான்;
மன்னுபல கோடியுகம் வாழ்கக் கண்டமுனி;
தவத்தில் மகாபெரியோன்; சாந்திரா யண[8]விரதன்;
சிவத்தில் உணர்வுவைத்தோன்; தேகநிலை கண்டறிந்தோன்;
தத்துவத்தோ டேஇனிய சாத்திரமெல் லாமறிந்தோன்;
[9]அத்துவமுங் கண்டோன்; அடர்ந்த நெடுஞ்சடையோன்;
[10]காத்துடனே நீரும் கடியசரு கும்பொசித்து

---

1. ஆபத்து; (தீ) மரணம் என்றுமாம்
2. [யி]
3. ஏருட்டம்=(சொன்னதற்கு) மாருக
4. வழுவினால்; தீநோய் பிறழ்ந்தாலும்; தீமையில் மெல்ல மனம் நழுவுவதைக் காட்டும்
5. பிழைந்தவர் என்பது தோன்ற எழுவாயாக முன் 'பிழையாகும்' என்ற முடிவினிருந்து தோன்றும்; இவ்வாறு முடிபுமாறி வருவது பேச்சு வழக்கு
6. 'சொல்கிறேன் கேள்' எனத் தொடங்குவதும் 'சொன்னேம்' என முடிவதும் காண்க
7. காம்பில்யம்; பி,பு; துருபதனது தலைநகருக்கு இந்தப் பெயர் உண்டு; தேசம் எனக் கூறுதலின். பாஞ்சால தேசத்தின் ஒரு பகுதியாம்
8. விரதம் பூண்டோன் [விரதம்] இவ்வாறு பெயர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வாக்யமாக அடுக்கிவரும்
9. ஆ அம் என ஆகியுள்ளது அத்துவா-மோக்ஷ வழிகளாம் மந்திரம் பதம், வர்ணம், புவனம், தத்துவம், கலை என்பன
10. 'காற்றும்' என்றே எழுகை கொள்ளும்

மாற்றிய யோகம் மவுன மெனவிருப்போன்;
அவனிதனி லே-நடக்கும் அதிசயங்கள் [1]கண்டிருப்போன்;
சவுபரி என்று தான்சொல்லும் பேருடையான்;
ஒருநாள் தவசிருக்க உகந்துமன திச்சையொடு
மருவாரும் கானகத்தில் வளர்கமல [2]வோடைதனில்
சீரான மாமுனிவன் சென்று[3]வந்த மாபுனலில்
பூராய மாய்த்தவசு புனிதமுட னேயிருக்க,
எண்ணியபு னல்தனிலே இறங்கினான்; அப்புனலில்
வண்ணமுட னேயிரண்டு வாளைமீன் [4]சோடாக
வாழ்ந்திருக்கக் கண்டான் மாமுனிவன் கண்மூடி
ஆழ்ந்த புனலில் அமுங்கித் தவத்திருந்தான்.
ஏதும் கினையான்; இறையோன்மே லன்புவைத்து
ஓதுங் கலிமுனிவன் உகந்துபனி [5]ரண்டாண்டு
இருந்தான் புனல்தனிலே. இருக்கும்போ தம்மீன்கள்
[6]மருந்தான தன்மம் வளர்போன் கினைபோல
[7]ஒண்ணுபத்து நூறு ஒருகோடி [8]வெள்ளமென
எண்ணுதற்குங் கூடாமல் இருமீன் [9]கலித்ததுவே.
இப்படியே [10]சோடுரெண்டு எனஇருந்த மீன்க[11]ளது
செப்பமுடன் [12]பலிகிச் செழும்புனலில் மொய்த்ததுவே.
கண்மூடி யோகங் கடவுள்தனை யேகினைந்து
[13]தண்மீறு மாபுனலில் தானே யிருந்தமுனி
துய்ய தவம்நீங்கித் தூயமலர்க் கண்விழித்து
செய்யசெழு மீன்[14]பலுக்கைச் செப்பமுடன் கண்டானே.
கருணையுட னேபார்த்துக் கருத்தில் மிக[15]நினைப்பான்:

---

1. கண்டு வியந்து எழாமல் இருந்தபடியே இருப்பவன்
2. [ரோ] வளர் என்பதனைக் கூனக்கி கமல மலரோடை என வந்திருக்கலாம்
3. அந்த: உவந்த என்றுமாம்
4. சோடு = இனை
5. [ரெ] உச்சரிப்பு
6. அழகான தன்மம் தழைப்பதுபோல
7. ஒன்று; உச்சரிப்பு
8. பேரெண்
9. தழைத்தது
10. சோடாகிய இரண்டு; ரே உச்சரிப்பு
11. அது பன்மையின் பின்னும் வருகிறது; சரியையேபோலும்; பின்னே மோய்த்தது எனத் தொகுதி யொருமைக்கு ஏற்ற எழுவாயுமாகலாம்
12. பல்கி; பலுக்; உ, இ
13. குளிர்ச்சி மிக்க
14. பல்குதல்; பலுக்கு என்ற வடிவைக் காண்க
15. எதிர்காலம் காண்க; எண்ணத்தினைப் பின் கூறுவதாலோ?

240. 'பெருமையுடன் இல்லறத்தில் பே[1]ருக வேணுமென.
'இந்தப் புனலில் இனித்தவசு நா[2]மிருக்கில்
விந்தை யுடனிரண்டு மீன்தான் [3]இருந்துதன்னுள்.
அரிய மகாதவசு யான்முடிக்கும் முன்னுக
[4]விருக்கையிலும் [5]அய்யோ மிகக்[6]கலிப்பா கப்[7]போச்சே!
245. என்ன ம[8]குத்துவந்தான்!' என்றே சவுபரிதான்
நன்னயமா க-நினைந்து 'நல்ல'தென்றே [9]யாசரித்து
இல்வாழ்க்கை தானறியான்;[10] இனியசிற்றின் ப-மறியான்
[11]நில்வாழ்க்கை யாக நினைகின்ற யோகமுனி,
செப்பமுடன் பார்த்து சிரித்து இல்வாழ்க் கை-மகிமை
250. 'இப்படி யோ' வென்று யெண்ணி மனந்தனிலே,
தூய தவமுனிவன் துறவு[12]நீக் கி-வெளியில்
நேயமுடன் வந்து நினைப்பா னொருநினைவு.
'கலியாணம் பண்ணியிந்தக் காசினியி லேநாமும்
மலிவாக இல்லறத்தில் வாழவே ணு'-மெனவே
255. பொங்க முடன்நினைந்து புகழ்சேர் சவுபரிதான்
அங்குநின் று[13]ற்போல அயோத்தி நகரடைந்தான்.
சடைகள் [14]இழுபடவே [15]தாவடங்கள் தானிலங்க,
நடைகள்மிகத் [16]தள்ளாட நரைத்தமீ சை-முகமும்
[17]குண்டலமுங் கைக்குடையும் கோல மரவுரியும்
260. [18]தெண்டும்புலி யாசனமுஞ் சிவந்த[19]வெள்ளைப் பல்லுடனே.

---

1. [ரு]: இல்லறத்தில் பெரும் பேருதல் வேண்டும் இந்த இனம் பெருக்க என நினைப்பான்
2. இருக்கையில், இந்த நூல் வழக்கு
3. இருந்தது (இருந்துது; பின்னைய 'து' முன்னைய 'த' என்பதைத் து ஆக் கிற்று) + அந்நாள்; ந, ன மாருட்டம்
4. [இருக்கை]வ்.உடம்படுமெய்
5. அய் = ஐ
6. தழைத்தல்
7. போயிற்று-ற, த ஆய்: த-ச ஆயிற்று
8. க கு ஆயிற்று
9. மனத்தால்மீன்(ஒழுக்கினைப்)பின்பற்றி;
10. அறியாஞய் என வினைமுற்று எச்சமாய் வரும்; இடைப்பிற வருவதுபோலாம்
11. தன்னிலில் நிற்பதே வாழ்க்கையாகக் கொண்ட
1 . நீங்கி; அப்புறம் தள்ளிக்கனைந்து என்ற பொருளில் நீக்கி எனலாம்
13. [ப்] உச்சரிப்பு; போலிருந்தே
14. [யி] உச்சரிப்பு
15. தாழ்வடங்கள்; ருத்ராக்ஷம் முதலியன
16. மூப்புமைக்குறி
17. காதில் தவரிகன் பூண்பது;
18. தண்டு
19. தகை முநர் கோன்றும் அலங்கோலம்

பார்க்க [1]அசங்கியமாய்ப் [2]பய்யநடந் தேமுனிவன்
[3]மார்க்கமுள்ள மன்னனெனும் மாந்தாதான் முன்னேகி
மிக்க[ப்] பெருந்தவத்தோன் விரைந்து வருதலுமே
[4]சிக்கெனவே மன்னன் செம்பொன்மணி மேலடைவிட்டு
கீழேகுதித் தோடிவந்து கிருபையுள்ள மாமுனி[5]யின்
தாளி லவன்வீழ்ந்து 'சரணம்' எனப்பணிந்து
'அய்யரே! மிக்க அருந்தவஞ்செய் மாதவரே!
மெய்யரே! யென்பால் விரைந்துவந்த காரியமென்?
சொல்லு'மென மாவேந்தன் துதித்து மிகக்கேட்க,
நல்ல பெருந்தவத்தோன், ராசன் முகம்நோக்கி
'மன்னவா! சூரியகுல வமிசத்தின் ராசாக்கள்
நன்னயமா கக்கேட்ட நட்பான காரியத்தை
'இல்லை'யென்று சொல்லாம லீவார்க ளாகையினுல்,
வல்லவனே! யுன்னிடத்தில் வந்தோம்,நாம் [6]காரிய்மாய்.
வ[7]ன்ன மயில்போல வரிசையுட னேயினிய
அன்னம்போல் நீயீன்ற [8]அன்பது பெண்கள்தனில்,
மன்னுலோர் பெண்தனையும் மாலையிட்டு [9]எந்தனுக்கு
நன்முகத் தாருமென்று நல்முனிவன் கூறிடவே
மாந்தாதா ஞனமன்னன் மாமுனிவன் தன்னுடைய
பூந்தா துறைசடையும், பொடிநீறு பூத்தமெய்யும்,
தாடி யுடன்வெள்ளைத் [10]தந்தபங்தி யி[11]ன்னழகும்
நேடிய வேல்வேந்தன் நிரம்பமலர்க் கண்ணுலே
கண்டு அசங்கிதமாய்க் கருத்தில் மிகநினைப்பான்:[12]
'வண்டுலவு கூந்தல் மடைந்தையெனும் நன்மகளோ
[13]பெண்ணுருசை தானறியாப் பெரிய தவமுனிக்கு

---

1. அசஞ்சயம்; அசங்கம் என்றும் வரும்; அவலட்சணம் என்று பொருள்
2. பைய; = மெல்ல 'ஐ' அய் என்றே வருகிறது; தென்னாட்டு வழக்கு
3. ஒழுக்கம்; சன்மார்க்கம்; நீதி நெறி; பின்னுளைய வழக்கு
4. விரைந்து
5. [யு] இ-உ
6. நோக்கம்; குறிப்பு
7. [ன்ன]; எதைக் காண்க
8. ஐம்பது
9. [யெ]
10. பல்வரிசை
11. ன் விரிந்து சீரின் உச்சரிப்பினைக் காட்டும்; பிற இடத்தும் இப்படியோ?
12. எதிர்காலம்; பின்வரும் நிகழ்வு
13. பெண் உருசி; சுவை; இன்பம்; இ ஐ

வண்ணமுடன் கலியாணம் மகிழ்ந்துசெய்வ தெந்தவிதம்?
[1]இன்னி இவன்தனக்கு 'இல்லை'யென்று தானுரைத்தால்
வன்ன முனிவன் மா[2]சாபஞ் சொல்லிடுவான்.'
எனறு பலவிதமா இருதயத்தி லேங்கினந்து
290. நன்றி செறிவேந்தன் நல்முனிவ னீத்தொழுது
'வல்ல தவமுனியே! வாக்கிலைல் கேட்டபொருள்
இல்லை'யென்று நானுரையேன். இனிக்கேளுர். என்குருவே!
[3]நாட்டும் புகழுடைய ராசகன்னி யர்-நடத்தை
[4]தாட்டிகமே சொல்லுதற்குத் தான்அரிது. அம்மடவார்
295. கண்ணுக் குகந்தவர்தன் கழுத்திலே மாலையிட்டு
வண்ணமுடன கலியாணம் மகிழ்ந்து [5]முடிப்பது!காண்!
ஆனதினால் மாமுனியே அடியேனுல் [6]முற்றுது.
மானவரே! கேளும் மங்கையர்கள் சம்மதமாய்
உந்த[7]னுக்கு மாலை ஓவியமா கப்போட்டால்
300. சிந்தையுடன் கலியாணஞ் செய்துதரு வே'னென்று
[8]மல்லலணி மன்னன் வழுத்தவே யம்முனிவன்
[9]நல்லது நல்லதுகாண் ராசனேகீர் [10]சொல்படியே
மங்கையர்கள் சம்மதித்தால் [11]மாலையிட்டு, நீர்தாமும்
அங்கவர்கள் சம்மதந்தர னுகாத காரி[12]யத்தில்
305. வேண்டாம் எனமுனிவன் விந்தையுட னேகூற,
தூண்டாப் பெரும்புகழ்சேர் துரையான வன்கேட்டு
தன்வாசல் மந்திரியாம் தழைக்கும்புகழ்க் காஞ்சுகியை,
அன்பாக வேயழைத்து [13]அடவாகச் சொல்லிடுவான்:
'இம்முனி வன்தன்னை இட்டமுட னேதானும்
310. நம்முடைய மக்களின்பால் நட்புடனே யேகூட்டி

---

1. இவி அல்லது இன்றி என்பதன் மரூஉ
2. சாபம் சொல்லல் என்ற வழக்கு
3. நா ரா மோனை
4. வலியவரே; தவ வன்மையோ?
5. கலியாண நடத்தையாம் முறை முடிப்ப
தாகும்
6. முற்றும் என்னுல் நிறைவேற்ற முடியாது
7. ம
8. அழகு; செல்வம்; வளமை
9. ந, ரா மோனை
10. சொல்லும்படியே
11. 'மாலையிட்டும் 'காரியத்தில் வேண்டாம்' எனமுடியும் பேச்சு வழக்குக் காண்க; முடிபு இடையே மாறுகிறது
12. காரியமானுல் (ஆகும்பக்கத்தில்)வேண்டாம் = மாலையிடும் மணம் வேண்டா எனமுடியும்
13. அடைவாக = முறையாக

மங்கையர்முன் இம்மூனியை வரிசையுட னேகாட்டி,
இங்கு[1]சொன்ன செய்தியையும் [2]ஏந்திழைமா ருக்குரைத்து
வாரு'மென வேந்தனுமே வாஞ்சையுட னேயனுப்ப,
சீருடைய மந்திரியும் தேசிகனே யேகூட்டி.

315. சென்றனே. மங்கையர்கள் சிறந்திருக்கும் மாளிகையில்
கின்றான் தவத்தோன். நிகரில்லா மந்திரிதான்
[3]நன்னயஞ் சேர்கின்ற ராசமட வார்கள்தனை,
[4]அன்னவனும் பார்த்து அரசனவன் சொன்னதெல்லாம்
சொல்லியே யிந்தத் துறவோனை யு-மழைத்து,

320. [5]வல்லியர்கள் கண்ணெதிரே வாகுடனே விட்டனனே.
அப்பொழுது மாமுனிவன் அரியதவக் கோலமதை
செப்பமுட னேமறைத்துச் [6]சிங்கார மன்மதன்போல்
[7]நன்னயஞ்சேர் கிளர்தியான பெண்கள் கண்ணில்
[8]கன்னல் சிலைமதன்போல் காட்டினான் தன்கோலம்.

325. ஒப்பில்லா மன்மதன்போல் உருக்காட்டும் மாரி[9]சியை
[10]செப்பு முலைமடவார் [11]சித்திரமா கப்பார்த்து
ஆசை மிகப்பெருகி யிதான [12]கற்புமின்றி
நேசமுள்ள மாரிசிமேல் [13]நெம்பவே மோகமுற்று
மந்திரியை நோக்கி 'மன்னவன்சொல் தட்டாமல்

330. இந்த ரிசிக்கு இனிமாலே தான்நானும்
சூட்டுவேன்' என்றுஒரு தோகை மிகக்கூற,
மீட்டு மொருமின்னுள் 'வேந்தர்சொல்லை தட்டுவேனோ?
தட்டேன் ஒருநாளும் தகப்பன்மொழி [14]சோராமல்

---

1. வலிமிகவில்லை
2. [யே]
3. ந-ரா மோனை
4. மந்திரி என்றபின் அன்னவன்என வரல் காண்க
5. கொடி போன்ற பெண்கள்
6. அழகு சிருங்காரச் சுவைக்கேற்ற என்று மாம்
7. ந-ர மோனை
8. கரும்பு (வில்)
9. வி
10. செப்பு (சிமிழ்) போன்ற
11. விரித்தீரமாக; வியப்பாக; அழகாகவென்று மாம்
12 நிறை; வெளித் தோன்றுமல் மனத்தை நிறுத்துதல்-
13. [ரெ] நே ரெ மோனை காண்க. நிரம்பவே என்பது ரெம்ப, ரோம்ப நோம்ப என்றெல்லாம் மருவும்
14. தவறுமல்

மட்டாரும் மாலையிந்த மாமுனிக்குச் சூட்டிடுவேன்.'

335. என்றிப் படியே இனிய[1]அன்ப துபேரும்
நன்றிசெறி மாமுனிக்கு நல்லாசை கொண்டாரே,
அப்பொழுது மந்திரியும் அதிசயத்தை யேபார்த்து
[2]இப்புதுமை!' என்று [3]ஏகிவந்து ராசன்முன்னே
சொன்ன னிதுநடத்தை. தொல்புவியை ஆளுமன்னன்

340. பொன்னுரு மாதவத்தோன் புதுமை தனைப்பார்த்து
உள்ளம் மகிழ்ந்து [4]ஒருநாள் முகிழ்த்தமதில்
[5]வள்ளமுலைப் பெண்களதனை [6]மாலையிட்டுத் தான்[7]கொடுத்து
'போங்கள்' எனவே புகழ்முனிவன் பின்னுலே
பாங்குடைய பெண்கள்தனைப் பரிவாய் யனுப்பினனே

345. அந்தமகாமுனிவன் அன்பதுபெண் கள்தனையும்
வித்தையுட னேகூட்டி விரைந்தேதெ ஞன்வனத்தில்
நல்ல இடம் பார்த்து [8]நற்பார் புனல்[9]கரையில்
இல்லறத்துக் கேற்ற இடமென் றவனறிந்து
புனித முடனேதான் பொன்னுலகு [10]தச்சனையும்

350. மனதில் நினைந்தான். 'வருக'வென்றே மாமுனிவன்.
அம்முனிவ னும்நினைக்கில் அழகு விசுவகர்மன்
செம்மையுடன் வந்து தெரிசித்தான். அன்புடனே
வந்த விசுவனையும் வாகுடனே யேபார்த்து
'இந்த [11]இடத்தில் இனிதாயொ[12]ரு பட்டணந்தான்;

355. அன்பது பெண்களுக்கு அன்பது மாடகூடம்;
பொன்போல் சமையு மெனப் புகலவே கம்மியனும்
தவமுனிவன் சொன்னபடி தையலன்ப துபேர்க்கும்

---

1. ஐம்பது
2. இது புதுமை அல்லது இப்புதுமை (என்ன!)
3. போய்த் திரும்பி வந்து
4. குறித்ததொரு நாளில்
5. கிண்ணம்போல அடி வளைந்த கல்வல் நாழி போன்ற பெருத்துக் குவிந்த
6. மணம் செய்து என்ற பொதுப் பொருள்; மாலை இடுவித்து என்றுமாம்
7. கன்னிகாதானம் செய்து
8. நன்மை நிறைந்த
9. லகரம் றகரமாகத் திரியவில்லை
10. உலகத் தச்சன்; உலகின் தச்சன் என மாறவில்லை; விசுவகர்மன் விசுவன் எனக் குறுகும்
11. [பி]
12. ரு-ர் என ஒலிக்கும்; இல்லையேல் ஒரு கூன் போலாம்

நவமணியி னுலும் நல்லபசும் பொன்னுலும்
வெள்ளியி னுலும் [1]மினியவயி ரத்தினுலும்
ஒள்ளிய தாக வுற்ற அரண்மனைதான்
[2]மாடமொடு கூடம் மணிமா ளிகைமுகப்பு
மேடையொடு கோபுரமும் மிக்க[3]ரத்ன உப்பரிகை
[4]வங்கார மேடைகளும் வர்ணக்கடை வீதிகளும்
[5]சிங்கார்த் தோப்புகளுஞ் சிறந்த மணிமதிலும்
பூங்கா வனமும் புனிதமல ரோடைகளும்
பாங்கான தச்சன் படைத்தானே ஓவியமாய்.
இப்படியே [6]கண்ணுளன் இந்தநல்ல பட்டணந்தான்
செப்ப முடன்வகுத்தான். சீரா[7]ரு மாயோகி
அன்பது பெண்களுடன் ஆன முயிழ்த்தமதில்
பொன்போல் குடிபுகுந்து பூராய மாகவுமே
இல்லறத்துக் கான இனியசெழும் பால்[8]பசுக்கள்
நல்லதொரு பட்டுமெத்தை [9]ரவணிகப் பொன்னூஞ்சல்
ஏவல் தொழில்கேட்க [10]இனிதான தாதியொடு
பா[11]வக மானபல [12]பண்டம் [13]பதார்த்தமொடு
பொன்னுடை பொற்பணிதி புனிதநெல்லு பட்டைகள்
மின்னேர் இடையார்க்கு வெவ்வேறு தான்[14]சமைத்து
இட்டமுட னேகொடுத்து [15]இனியந்தப் பெண்களிடம்,[16]
விட்டுப் பிரியாமல், மெய்[17]முனிவன் வாழ்ந்திருந்தான்.
இந்தப் படியேதான்.இனிய சவுபரிதான்

---

1. இ னைப் பிரியும்; மி னை ஒன்றுய் நீற் பதால் மோனை கொள்ளும்
2. மாடம், கூடம், மாளிகை முகப்புமேடை கோபுரம் உப்பரிகை. மேடை என்ற பருதிகளைப் பிரித்தறிக
3. ரத்ன எனை ஒலிக்கும்
4. போன்; அழகுஎன்றுமாம்; பங்கரம் என் பது தெலுங்கு
5. உத்யான வனம்
6. கண்ணுளன் = கண்ணுய் + கம்மாளன் எனறவற்றின் மயக்கம்;கண்ணைழுத் தாளன் என்றுமாம்
7. [நு]
8. தீபு காளைம்
9. ரமணிய (மனம் கவரும்): ம-வ மாருட் டம்; ய-க மாருட்டம்
10. [யி]
11. [வ]; மனத்தீற்றுகந்த
12. பண்டம்; நட்டுமுட்டு முதலியன; நீள் பண்டமுமாம்
13. பதார்த்தம் = சமையலுக்கு வேண்டு பவை; கீழே பட்டை = கூடைகளுக்கு
14. உண்டுபண்ணி
15. [யி]
16. இடம் வாழ்ந்திருந்தான்
17. மெளனிவ்வில்

விந்தையுடன் பெண்களொடு விரும்பிவளர் காவையிலே
[1]பூந்தா துறைகூந்தல் பூவையரைப் பெற்றெடுத்த
மாந்தாதான் என்னும் வடிவான மாவேந்தன்
மக்கள் தனங்ணைந்து [2]வருத்தம் பெரிதாகி
[3]சக்க(ர்) மதிபூண்ட சிவனுர் அமைப்பிதுவோ!
காட்டி விருப்போன்; கனிகாய் சருகுதின்போன்!
நாட்டில் [4]வளமறியான்! நல்ல சுகமறியான்
பெண்ணு[5]ருசை தானறியான்! பெண்கள் சுகமறியான்!
[6]பண்ணுஞ் சிவயோகம் பாங்கான ஆண்டிபின்னே
வன்னமயில் போல வடிவான பெண்கள்தனை
அன்னம்போல் கூட்டி அனுப்பினேம்! [7]தோணுமல்.
பொன்போல் வளர்த்த பொன்மேனி தான்வாட
அன்பிலா மாமுனிபின் அனுப்பினேம், அம்முனிவன்
எங்[8]குகொண்டு போனனே? எவ்விடத்தில் சென்றனே?
[9]கங்குபகல் காணுத காட்டிலே மக்களய்யோ!
என்னதுன்ப முற்றனரோ? எவ்விடஞ்சல் ஆனரோ?
அன்னவர்கள் தன்னிலத்தை அய்யோ! அறிந்திலனே!
என்றுஅர சன்எண்ணி யினியமக்க ளைத்தேடி
[10]ஒன்றி' யெனக்காட்டில் ஓவியமா க-நடந்தான்.
காடெல்லாம் தேடிக் காணுமல் மாவேந்தன்
வாடி வரும்போது வளருஞ் சவுபரிதன்
ஆச்சிரமங் கண்டான்; அன்பாய் மனமகிழ்ந்தான்;
மாட்சியுள்ள பட்டணத்தை வாகுடனே பார்த்துநின்றான்.
வண்ணமணி யால்வகுத்த மாடமா ளிகைமுகட்டில்
பொன்னின் குடங்கள் [11]பூரித் திருப்பதுவும்

---

1. இருபர் பெரு வழக்கு
2. மனவருத்தம்; மெய் வருத்தம் என்ற பொருள் இல்லை
3. செக்கர்; செவ்வானம் செக்கர்மதி என்ற தொகையில் ரகரம் இடையில் ஒலியாமை காண்க
4. நாட்டின் வழக்கம்; அல்லது செல்வ வாழ்வு
5. ருசி; உருசை எனவுமாம்
6. சிவ யோகம்பண்ணும் என்க; பண்ணும் சிவயோகமுடைய என்ற பொருள் படிந்துவிட்டது
7. இவை எல்லாம் தெரியாமல்; (அனுப்பி னேம்)
8. [கோ]
9. கங்குல் (இரவு) பகல்; இடையில் 'ல்' ஒலிக்கப்பெறவில்லை
10. ஒருவனுக
11. நிறைந்து; பருத்து

மேடைகள் தோறும் மிக்கான பொற்கொடிகள்
ஆடுகின்ற [1]சித்திரமும் அலங்கரித்த கோபுரமும்
பூங்கா வனமும் புகழுடைய வீதிகளும்
பாங்கான ஓடைகளும் பண்ணு மணிமதிலும்
இருக்கின்ற கோலமதை யேந்த லிவன்பார்த்து
[2]பெருக்க முடன்மகிழ்ந்து பேரான மூவுலகும்
இந்தப் பதிக்கு [3]இணையல்ல வென்றுசொல்லி
விந்தை யுடன்நடந்து [4]வினியமக்க ளோத்தேடி
மன்னன் வருதல்கண்டு, மகளொருத்தி யோடிவந்து,
பொன்னின்பா தத்தில் புனிதமென வேதொழுதாள்.
[5]தொழுத மகள்தனையே தூய மணிமுடியோன்,
பழுதறவே தானெடுத்துப் பரிவாய் மிகவாழ்த்தி
'சுகமா யிருக்கிறாயோ? சுந்தரமே! யென்மகளே!
அகமகிழ மாலையிட்ட அரிய கணவனெடும்
நன்றாக யிருக்கிறீரோ? நட்பாக வாழ்கிறீரோ?[6]
குன்றுத செல்வமுறு கொம்பனையீர்! எங்களையும்
மனதில்நினைப் பீர்களோ? மறந்துமிகப் போனீர்களோ?'
எனவே தகப்பனுந்தான் இந்தமொழி கூறிடவே
மகளான வள்பார்த்து மனது மகிட்சியோடு
'சுகமாக வாழுகிறேஞ்; சொல்லவொண்ணாச் செல்வமய்யா!
[7]பாலால் குறையுமில்லை; [8]பாக்கியத்தில் தாட்சியில்லை;
மேலாம் பரமான வெகுவாழ்வைப் பெற்றிருந்தும்,
என்மனதி லய்யா! யிருக்கு தொருகுறைதான்.
நன்மையுடன் சொல்லுகிறேன். நன்கணவ னெனரிசி
[9]சணப்பொழுது மென்னைவிட்டுத் தானே பிரிந்ததில்லை.

---

1. அழகும்
2. மிகுதி; உனதிறைவு
3. [யி]
4. வ்-என்ற உடம்படுமெய்யொடு கூடிய இவீய என்பதும் வினைத் தொடங்கி விந்தையோடு மோனை கொள்ளும்
5. அந்தாதித் தொடர்
6. முன்மகனே என அவளை மட்டும் கேட்டான்; இப்போது பன்மையாக எல்லோரையும்பற்றி வினவுகிறான்;மனப் போக்கின் விரிவு காண்க
7. உனவு முதலிய அனுபவத்திற்கு உபலக்ஷணம்
8. பிற செல்வம்
9. கூ

இணக்கமுடன் என்பால் இருப்பதினல் என்னுடைய
தங்கை யொடுதமக்கை தனக்குமே வாழ்வுமில்லை.
இங்கிது [1]ஒன்றுகுறைகாண் ஏதும் [2]மறித்துமில்லை'
என்று மகள்சொல்ல யினிதான மாவேந்தன்,
அன்றவள் சொல்கேட்டு, அப்பா லொருமகள்தான்
இருக்கு மனைதனிலே [3]இவ்வேந்தன் வருதலுமே
கருக்கு மலர்க்கூந்தல் கன்னிதான் அன்புடனே
வந்து வணங்கினுள்காண்! வணங்கு மகள்தனையே
விந்தை யுடன்எடுத்து, மெத்தவே தான்வாழ்த்தி
'மகளே! யுனக்குவென்ன மனக்குறைதான் சொல்'லெனவே
செகவேந்த னும்கேட்டுத் தேன்மொழியாள் வாய்மலர்ந்து
மூந்தினவள் சொன்ன மொழிபோ லவள்தானும்
விந்தையுடன் சொல்லிடவே வேந்தனும் மெய்மகிழ்ந்து
அன்பதுமக் கள்மனையில் அவன்நடந்து தான்கேட்க
அன்புடைய மக்களெல்லா மன்றொருத்தி சொன்னதுபோல்
தகப்பன் தனக்குரைக்கத் தார்வேந்த னுங்கேட்டு
மிகுந்த களிப்புடனே மெய்மகிழ்ந்து ஓவியமாய்
மருக னெனுப்ரிசியை வாயார வேவாழ்த்தி
பெருமை யுடன்மகிழ்ந்து பெண்களையு மேபார்த்து
'இனிய கணவனெடு இட்டபோக போக்கியமாய்
கனிவாக வாழு'மென்று காவலனு மேவாழ்த்தி
மக்கள் விடைகொண்டு மன்னன் பதிபுகுந்தான்.
மிக்க புகழ்சேரு மின்னர் அன்ப துபேரும்
ஒருத்திக் கொருமூன்று உற்றபிள்ளை வீதமென
பெருக்கமுடன் பெற்றார்கள். பிள்ளையுமவ் வீதமென
மக்கள் தனைப்பெற்று மடுவிலுறை மீன்போல
மிக்க கிளையாகி மிகுபே(ர்)த்திப் பேரனுமாய்
கூடி நெடுங்காலம் குறையாத செல்வமதாய்

---

1. ஒரு குறை காண் என இருக்கலாம்; காண் இல்லாமல்இருக்கலாம்; காண் என்பதனைக் கூடுக ஒலிக்கலாம்
2. மறித்தொன்றும் இல்லை-[ரு]
3. [யிவ்வோன்] இவள் = இவ்வோன் என வருவ்போலும்

நீடுங் கிளையுடனே நெடியபட் டணமாகி
அடியடி வாழையென அன்பாய் முனிபுதல்வர்
வடிவுடனே செல்வமொடு வாழ்ந்தார். காண்! மன்னவனே!
இந்த மகாமுனிவன் இல்லறத்தி லேயிருந்து
சிந்தையுடன் வாழ்ந்த செயலீர் தான்கேளாய்!
பாங்கான யிம்முனிவன் பனி[ெ]ரண்[1]டாண் டு-வருஷம்
[2]வாங்காம லேபுனலில் வண்ணத் தவயோகி
இருந்து தவசு இயற்றுகின்ற நாள்தனிலே
திருந்துமக ர-மாதஞ் சிறப்பாகவே குறுக்கே
வந்த படியாலே மாகஸ்நானம் ஆடும்பலன்
இந்த முனிக்கு விப்போ கொடுத்ததுகாண். 468

பதி(ன்)மூன்றும் அத்தியாயம் முற்றும்.

---

1. ஆண்டு வருஷம் தமிழும் பிறமொழியு மாய் வரல்
2. நீங்காமல்

பதினொலாம்[1] அத்தியாயம்

நித்திய கருமம்

விருத்தம்(1)

பேரியற்கை முனியுரைத்த கதைகேட்டு
மனமுவகை பெரிது கூர்ந்து
தாரியற்கை மணிமவுலித் தனிவேந்தன்
முனிவரனீ முன்னஞ் சாற்றும்
நாரியர்க்குள் [2]வடமீனிற் கற்புடைய
நால்வரொடு நவைதீர் வேதச்
சீரியற்கை மிருகசிங்கன் இல்லறத்தின்
வாழ்ந்ததினி செப்பு மென்றான்[3]

நடை

5. பெருமை தவவதிட்டன் பே[4]ரக [5]இக்கதைனய
வரிசையுடன் சொல்லிடவே மாவேந்தன் தான்கேட்டு
'மாதவனே முன்பு வரிசையுட னெந்தனுக்கு
போதமுடன் சொன்ன புகழான மாகதையில்
திருந்துந் தவத்தான் சீரார் மிருகசிங்கன்
10. அருந்ததிபோல் கற்பில் அதிகமெனும் [6]சுவாதத்தை
கமலி விமலியொடு சுனக முலிச்சுரஎ.ச
உமைபோ லிருக்கும் உத்தமியார் நால்வரொடு
வாழ்ந்துஅவ னில்லறத்தில் மகிழ்ந்து யிருந்தகதை
சூழ்ந்த பெருந்தவத்தீர்! சொல்லவே ணு'மெனவே
15. சீரார் திலீபதியும் சிந்தைமகிழ்ந் தேகேட்க,
பூராய மாய்வதிட்டன் புகலுவான் ராசனுக்கு:-

---

1. பதினொன்காம்
2. அருந்ததிபோல்
3. 4 காய்- 2-மா வரும் அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்
4. [ர]
5. [யி
6. [மா சுவாதத்தை]

[1]வாரா யடா! வேந்தா! மண்ணுலகில் வாழ்பவர்கள்,
பேரான இல்லறத்தில் [1]பெருமைதப்பா மல்நடந்தால்
இவ்வுலகில் கீர்த்தியுண்டு. [2]யேந்தலே! பிற்காலம்
அவ்வுலகந் தன்னி லதிகமுள்ள மோட்சமுண்டு.
இந்தரெண்டு காரியமும் இனிதாக வில்லறத்தில்
விந்தையுட னேதான் மேவுவோர்க் குப்பலிக்கும்.
ஆனதினு வில்லறத்தி லறிவுடனே தானிருந்து
மானமுடன் வாழுவது மன்னவா! [3]உத்தமங்காண்.
மாமறைசொல் தேவர்களு மற்ற[4]தொரு மூவர்களும்
பூமிதனில் மானிடராய் பிறக்கரிது புண்ணியனே!
மானிட ராகவுந்தான் வந்து பிறந்தாலும்
தானமொடு [5]வில்லறத்தில் தான்வாழ்வா ரீதுகண்டாய்!
இல்லறமே நல்லறங்காண்! இல்லறத்தின் தன்[6]நடத்தை
சொல்லுகிறேன். மன்னு! சுடரோ னுதிப்பதற்கு
முன்னுறு நாழிகையில் [7]முழித்து [8]யெழுந்திருந்து
[9]பொன்னுறும் ஈசுவரனைப் போற்றி மனம்நினைந்து
சட்டமுட னேதழைத்த [10]சன்னிமூ லியின்பால்
எட்டி நடந்து [11]யினியபூண் நூலதனை
காதின்மே லிட்டுக் கனத்த[12]உத்த ரீகமதை
போத முடன்தலையில் புனைந்து வடமுகமாய்
இருந்து ஒருதுரும்பை யெடுத்துநிலத் தில்போட்டு
கரங்கள்தான் நீட்டாமல், கண்ணெடுத்துப் பாராமல்
வாயு[ம்]மிகப் பேசாமல், மவுனமாய் எச்சில்தனை
நேயமுட னேகாறி நிலத்தின் [13]உமியால்
[14]இருமலத்தைப் போக்கி எழுந்திருந்து லிங்கமதை

---

1. பெருமைதப்பாமல் என்ற வழக்கு
2. ஏ என்பதன் உச்சரிப்பு
3. எல்லாவற்றினும் சிறந்தது
4. ஒரு = ஒப்பற்ற
5. குற்றியலுகரம் கெடாமல் வர உடம் படுமெய் பெற்றுளது
6. நடைமுறை
7. வி
8. குற்றியலுகரம் கெடாது பின் வரும் எழுத்திற் கேற்ற யகர இடைநிலை பெற்றது
9. பொன்போல் (ஒளியாகத்) தோன்றும்
10. சனி-சன்னி என ஆயிற்று; சனி மூலி வடசீமைக்கு
11. வி-8
12. மேலாடை
13. உமிழாமல்
14. மலம், சலம்

வரிசையுட னேயிடது மலர்க்கையா லேபிடித்து
தண்டா மரைநதிகள் தன்னருகில் சென்றவுடன்
கொண்டுதான் [றெதிகையைக்] கொண்டு வலதுகையால்
ஒருபாத் திரத்தி லுகந்தசெழு நீர்முகந்து
வரிசையுட னே[1]சவசம் மன்னவா! செய்வதுகாண்.
பாத்திர[2]மில் லாட்டால் பாங்கான நீர்க்கரையில்
நேர்த்தியுட னேயிருந்து நேயமுட னேசவசம்
பண்ணுகின்ற தண்ணீர் பரிவாக வேயோடி
தண்ணளிசேர் மாபுனலில் தானேதான் கூட்டாமல்[3]
ஒருமுழத் தூரத்தில் ஒதுங்கியே மிகவிருந்து
பரிவுடனே மாசவசம் பண்ணுகின்ற போதிலேதான்
ஒருதரங்கோ சத்துக் குற்றமண்ணிட் டுக்கழுவி
பெருமை யுடனே பேசும்வலக் கைதனக்கு
அஞ்சுவிசை மண்ணிட்டு அன்பாக வேகழுவி
மிஞ்சுமிடக் ஈகக்கு மிகவுமே பத்துவிசை
மண்ணிட்டுத் தேய்த்து வரிசையுட னேகழுவி
[4]தண்ணிட்டுப் பின்னும் தடக்கைரெண்டு பேகூட்டி
ஏழு விசைகழுவி இனியரெண்டு கால்தனையும்
சூழும்பதி னஞ்சுவிசைத் தூயமண்ணிட் டுக்கழுவி
பின்னும் ஒருக்கால் பேரான மன்னவனே!
மன்னுகோ சத்திலேதான் மண்ணிட்டுத் தான்கழுவி
வாசமுள்ள நீரையள்ளி வாய்கொப்ப ளித்துநன்றாய்
ஆசமன மூன்றுதரம் அன்புடனே பண்ணியபின்
தண்ணீரி னல்முகத்தை தான்கழுவி யப்பாலே,
வண்ண முடனேதான் வாய்த்தமூக் முள்ளுமரம்
பால்மரத்தின் பாலேகி பாங்குடனே யங்குநின்று
[5]வால்மதி போல்முகந்தான் வாகுடைய காந்தியுமாய்

---

1. கால் கழுவல்; சௌசம்; சவுசம்; இந்த நூலில் ஒள என்பது அவு என்றே எழுதப் பெறுகிறது. ஒள வேண்டா என்பார் கொள்கை காண்க
2. இல்லாவிட்டால்
3. இந்தத் தூயமுறையை மறந்ததே இந்த நாடு
4. தண்ணீர்விட்டு
5. வெண்மை

விந்தை யுடைய [1]விடலையுட [2]பல்பிலம்போல்
70. தந்த [3]வலுவுந் தருவாய்' எனவுரைத்து
செய்ய சிறுவிரல்போல் சிறந்தபன்னி ரண்டுவிரல்
துய்ய கடைநீளந் [4]துகளவேபல் கொம்பொடித்து
தந்தம் விளக்கித் தனிவாயுங் கொப்[5]புளிக்க
அந்தமுடன் தந்தம் அன்றுவிளக் கா-நாளில்[6]
75. பத்துவிசை எட்டுவிசை பாங்குடன்வாய் கொப்பளித்து
சுத்திசெய்து அப்பால் தூயபுன லி-லிறங்கி
[7]சங்கற்பஞ் செய்துகொண்டு தண்ணீரி லேமுழுகி
பொங்கமுள்ள தேவர் புகழ்ரிசிகள் மாபிதிர்க்கள்
தன்னை நினைந்து தர்ப்பணம்பண் ணிக்கரையில்
80. வன்னமுடன் வந்துவெள்ளை வத்திரங்கட் டி-யதின்மேல்
உத்தரிகங் கட்டி யுகந்தசுத்தா ச-மனந்தான்
புத்தியுடன் செய்து புகழ்குலாசா ரப்படியே
[8]திருநீர் திருநாமம் செப்படமுட னேதரித்து
வரன்முறைதான் தப்பாமல் வாகுடனே சந்திபண்ணி
85. அ[9]த்த கிரிமேலே ஆதித்தன்[10]தோன் று-மளவும்
சித்த முடனே சிவயோகத் தி-லிருந்து
வளத்துடனே வெங்கிரோன் வரும்போ தெழுந்திருந்து
கிழக்குமுகம் நின்று கெடாத[11]வுப(த்) தானமென்ற
மந்திரத்தைச் சொல்லி வலக்காதை தான்மூடி
90. அந்த முடைய [12]அபிவாதை மந்திரத்தை

---

1. இளைஞர்; தலைமகன்
2. பல்லின்பலம் (வன்மை) பலம் = பிலம்; ப, பெ, பி; 'பற்பலம்' 'பல்ப்பலம்' என எழுதப்பெறும்
3. வன்மை; வலிவு-வலுவுஎன வரும்
4. தீகழுவே என்பதன் உச்சரிப்பு இ, உ; ழ;ள
5. [பி] உ-இ
6. சிலநாட்களில் பல்விளக்கலாகாது என்ற முறை உண்டு
7. செய்வதற்குமுன் கூறும் மனவுறுதிக் கட்டுரை; நூலிப் பிழுதல்
8. திருநீறு
9. [ல்த்த]
10 தோன் என்பது கூன்போலாம் அல்லது 'ஆதித்தன் தோன்' என ஒலித்திருக்கலாம்; வல்லெழுத்தும் இவ்வாறு இடையில் விடப்படுவது பிற இடத்தும் காண்க
11. உபத்தானம் உபதானம் என வரக் காண்க. சந்தியவந்தன முடிவில் கூறும் நூல்
12. தவ் கோத்திரம் பெயர் முதலியன கூறி வணங்கும் மந்திரம் அபிவாதனம்

சொல்லி முடித்து தூயவோ மம்வளர்த்து
அல்லலற [1]ஏன்றமட்டும் அழகுடன்தா னங்கள்செய்து
இந்தப் படியே இனிமூன்றே முக்கா[2]ல்க்குள்
விந்தை யுடன்நடத்தி மேலொருசா மத்தினுள்ளே
பூராய மாக புகலுகின்ற மாவேதம்
பாரா யணம்படித்துப் பகற்சாமம் [3]ஒண்ணரையில்
தருப்பை முதலான சமுத்து[4]வெல்லாங் கொண்டுவந்து
விருப்ப முடன்[5]கடிகை மேவுபதி னஞ்சினிலே
மெச்சுகின்ற மாபுனலில் விந்தையுடன் நீராடி
உச்சிக் கடன்கழித்து [6]வுகந்த[7]பிர மெக்கியந்தான்
செய்துநல்ல தேவருக்குஞ் சிறந்த ரிசிகளுக்கும்
துய்ய பிதிர்க்களுக்கு ; தூயதர்ப்ப ணங்கள்பண்ணி
அப்பா லவனுடைய ஆச்சிரமந் தன்னில்வந்து
[8]தப்பாத சூரியனைச் சத்திதனை வி[9]ட்ணுதனை
[10]குஞ்சரனை ருத்திரனைக் கோலமுடன் பூசைபண்ணி,
மிஞ்சுஞ் [11]சுவானபெலி மிக்கான காக்கைபெலி
பூதப் பெலியுடனே புகலும் பெலிகொடுத்து
நீதி தவறுமல் நித்தியமு மப்படியே
[12]தலக்கடையில் வந்து தயங்கும்[13]அகதிகளை
[14]மலக்கமன்றி யேயழைத்து வந்து[15]வுப சாரமொடு
சாதம் படைத்துத் தானுமொரு நல்விடத்தில்
போத முடனிருந்து புகழார் கிழக்குமுகம்-
ஆகவே பொற்கலத்தில் அமுது தனைப்படைத்து
தாகமுட னேயின்ற தாயார் தகப்பனுடு
தன்குருக்கள் மாகிழவர் சார்ந்த விருந்துடனே

---

1. இயன்றமட்டும்
2. ற்=ல் க்; மூன்றே முக்கால் நாழிகைக் குள்
3. ஒன்றரையில்
4. வ் உடம்படு மெய்; முன்சொல் வட சொல்; உகரம் கெடவில்லை
5. நாழிகை
6. வ்-உடம்படுமெய்
7. வேதமோதலே பிரம எஞ்ஞ
8. வருவதில் தவறுத
9. [ஷ்ட்]
10. யானை (முகனும் விநாயகன்)
11. நாய்க்குச் சோறிடல்; பலி=பெலி
12. வீட்டு வாயிற்படியில்; தலைக்கடையில் என்பதன் உச்சரிப்பு
13. அதிதிகள் அல்லது அதிதிகளை
14. மனமயக்கம்
15. ஷ 6

அன்புடைய பாலர் அடர்ந்ததொரு நோயாளர்
பாங்கான [1]கெற்பம் படைத்த மடந்தையர்க்கும்[2]
ஆங்கே யமுதளித்து அப்பால் புனிதமொடு
சித்திர [3]அன்னம்வைத்துச் சிறப்பாய் பழையதொடு
120. சுத்த முடனே சுடுசாத மானலும்
நகங்கள் படாமல் நல்ல[4]தெரிவிதன்னுல்
சுகமுட [5]னுங்கும்போது சொல்லும் இனித்தகறி[6]
முன்னேயே வுண்டு [7]மொய்த்தபுளித் த[8]லெரித்தல்
பின்னேயே வுண்டு பெருமையுட [9]னேக[10]சில
125. பாலுடனே மோரு பாங்காய் தயிர்கூட்ட
வேலுடைய மன்ன மிகவுமே சாப்பிடுவார்.

விருத்தம்(2)

குண்டிகைக்கைப் பகைவருக்குக் [11]குக்குட[12]அண்-
டத்தளவாங் கொள்ளுஞ் சோற்றுப்
பிண்டமிரு நாலாகும் முயர்வானப்
பிரத்தருக்கவ் விரட்டி பேசி(ல்)
எண்டிசையும் புகழ்ந்திடும்இல் லறத்தினருக்கு
எண்ணென்கு(ம்) [13]இயம்ப லாகும்
130. [14]தண்டுறுகைத் தலைப்பிரம சாரிக்கு
வயிறுகொள்ளு மளவுந் தானும்.[15]

---

1. கர்ப்பம்
2. பெரியோர் மெலியோர் இவருக்கு முதல் இடம் தருதலே சிறப்பு என்ற பழங் கொள்கை
3. [ய] சித்திரான்னம் சித்திர அன்னம்என பிரிந்தே வருகிறது. வெல்லம், தயிர், புளி, எள் முதலியவற்றேடு சமைத்த அழகிய அல்லது சிறந்த சோறு
4. தெரிவு; உ-இ; கண்டதன்ன உண்ணுது உடலுக் குகந்தது என ஆராய்ந்து
5. உண்கும்போது வலி (கு) முன் மெலி (ண்) அதற்கின(ன்)மாக மாறும்
6. [தி]
7. மிக்க
8. காரம்
9. உண்டு முடிய
10. சிறிது; பழைய வழக்கு
11. கோழி
12. முட்டை
13. [யெய்ம்பலாகும்]
14. [து]
15. முன் விருத்தம்போன்றது

நடை

[1]கையில் கமண்டலந்தான் காட்சியுடன் வைத்திருக்கும்
துய்யசங்கி யாசியர்க்குச் சொன்னதொரு கோழிமுட்டை
பிரமாண மாகவெட்டுப் பிடிகவளம்; பேசாமல்
வரிசை யுடனேதான் [1]வானப்பிரத் தந்தனிலே
திரியுமெஞ் ஞானியர்க்குச் சிறந்தபதி [2]னுறுகவளம்;
பெருமையுட னில்லறத்தில் பெரிதாக வாழ்பவர்க்கு
சொல்லியமுப் பத்திரண்டு சோற்றுப் பிடிகணக்கு
வல்ல பிரமசாரிவ[3]யறுகொள்ளு மட்டுமுண்பான்
என்றுதான் வேதம் இயம்புதுகாண் மன்னுகேள்!
நன்றியுடன் இப்படியே நற்போ சனமருந்தி
பொங்கமுடன் [4]உத்திர போசனஞ்செய் தேயெழுந்து
பங்கமில்லாச் செங்கையொடு பரிவான வாய்காலும்
மண்தொட்டுத் தான்கமுவி வாய்கொப்பி ளித்துநன்றாய்
பண்பொடுசுத் தாசமனம் பண்ணிப் [5][பிரதாயம்]
செய்து [6]வழக்காகச் சிவனே மனம்நினைந்து
கையினுல் நாபிதொட்டு காட்டியே [7][அரசமளம்]
நன்னயம தாய்ச்செய்து நற்தாம்பூ ல-மருந்தி
பொன்னிலகு ஈசன் புராணங் கூறப்படித்து
அப்பாலே தானிருபத் தாறேகால் நாழிகைக்கு(ள்)
தப்பா மனவாழ்க்கைத் தன்கருமந் தான்பார்த்து
செய்ய செழுங்கதிரோன் சென்றடைந்த காலமதில்
பொய்கை தனில்சென்று புனிதமுடன் கால்முகங்கள்
அன்புடனே சுத்தம்பண்ணி அந்திக் கடன்கழித்து
பொன்பெறுகா யத்[8]திரியை பொங்கமுட னேசெபித்து

---

1. வானப்ரத்தம் என ஒலிப்பர்
2. [பதினுற்] பதினாறு என்பதன் உச்ச ரிப்பு; குற்றியலுகரம் அலகு பெறு மை
3. பி
4. உத்தரா போசனம் என்பதன் உச்ச ரிப்பு; உ 'வு' என்று உச்சரிக்கப்படு தல்போலஎழுதப்பட்டது. புன்றும் படிக்கலாம். உணவு முடிந்ததும் மந்திரத்தோடு உட்கொள்ளும் நீர்
5. ப்ராணயாமம்
6. வழக்கம்போல்; முறையாகவென்றுமாம்
7. ஆசமனம்; வா என எழுதியதனைப் பிரித் தெழுதினாபோலும்
8. [ஸ்த்]

முன்போலக் கருமமெல்லாம் முடித்து[1]இன [2]பெந்துடனே
அன்பாக வே[3]அசனம் அருந்தியே கையலம்பி
ஆச(ம)னஞ் செய்து அழகுடனே ஏப்பமிட்டு
வாசமுள்ள தாம்பூலம் மனமகிழ வேயருந்தி
படுக்கைவீடு புகுந்து பஞ்ச[4]ணைமே லேயிருந்து

[5]வடிப்ப[ம்]முள்ள [6]தென்முனிவன் மாலுடனே சோடாக
சொல்லும் முசுகுந்தன் தூய கபிலரொடு
நல்[7]வயின தேயரென்று நாட்டிலுரை [8]அய்வரையும்
மனது தனில்கினைந்து மாமந் திரமுரைத்து
[9]புனல்கொண்ட செய்யசடைப் பொருளை மனதில்வைத்து

பூரண கும்பமொடு புனைந்ததிரி நெய்த்தீபம்
சீருடைய மன்னு! செய்யதலை மாட்டில்வைத்து
தலைகிழக்க தாக தான்கொண்ட தேவியொடு
விலைபெறு[10]பா யில்படுத்து மிகவே யுறங்குவது
நன்றிதுகாண் மன்னு! நவிலுகிறேன். நீர்கேளும்!

வென்றி யுடையோய்! மிகுத்திடுதன் னூர்கிழக்கு;
மாமன் [11]வளவில் வந்திருந்தாற்[12] தென்திசைகாண்;
நேமமுட னூருவழி நேர்ந்தாலே மேற்குமுகம்
வடக்கே தலைதனையும் வைத்துப் படுத்தாலே
கெடுத்துவிடும் வாழ்வுதனைக் கிலேசத்தை யுண்டுபண்ணும்

ஆனதால், வேந்தா! ஆகா [13]வடதிசையில்
[14]மானமுட னேதலையை வைத்துப் [15]படுக் காகாதே.
இப்படியே சொன்ன [16]யினியபடுக் கைதலத்தில்
செப்பமுள்ள [17]யம்மவாசி சி[18]றந்த[19]பவரனையாம்

---

1. [யி]
2. பந்துக்களுடனே; அ, எ
3. உணவு
4. [னை]
5. வடிவழகு
6. அகத்தியர்
7. கருடன்
8. ஐவரையும்
9. சிவனை
10. படுக்கை என்ற பொதுப் பெயர்; புனர்ச்சி என்பதற்கு இடக்கரடக்க லுமாம்
11. வீட்டில்
12. [ர்]
13. ஆகாத
14. பெருமை
15. படுக்கு(படுத்தல்)ஆகாது ப்-ஒலியாது போலும்
16. இ என்பதன் உச்சரிப்பு; ய் உடம்படு மெய்யுமாம்
17. ய் உடம்படுமெய்; அமாவாசை
18. [ர]
19. பெரனை; பெளர்ணமி;

ரதசப்த மி-யெனவே நல்லதெட்ச ணுயனமும்
180. [1]விதமுத்தி ராயணமும் மிக்க[2]புண்ணிய காலமெனும்
ஏகா [3]தேசிதனிலும் இனியதுவா [4]தேசிதனிலும்
வாகாக வேதான் மற்றவிர தங்கள்தனில்
செய்ய ஸ்திரி போகமதைச் செப்பமுட னேநீக்கி
துய்ய வனுபோகந் தோகையுட னே [5]சுகித்து
185. முன்சாமந் தன்னில் முழித்துரெண்டாஞ் சாமமதில்
மின்போலி டையாளோடு மிகவும் விகீயாடி
சொன்னமூன் ருஞ்சாமம் தூய மலரணையில்
நன்னயமா க-வுறங்கி நாலாஞ்சா மந்தனிலே
கண்விழித்துத் தானெழுந்து கரியமா லேப்பாடி
190. பண்புடைய வேதம் பகர்ந்தபடி தப்பாமல்
இந்த வழியுடனே இல்லறத்தி லேயிருந்து
விந்தையுடன் வாழ்ந்தவர்க்கு மிக்கசெல்வ முண்டாகும்.
மனத்தில் [6]உருத்திரனுடன் மாலுட னிருபையினல்
நினைத்தபடி கூடும் நெடுந்நா[7]ள்ப் புவிதனிலே
195. கோடி மகாகோடி கோடிகா ல-மிருப்பார்.
நாடிய வேதம் நவின்றமொழி தப்பாமல்
குச்சமுனி யின்ற கோல மிருகசிங்கன்
இச்சை யுடைய இல்லறத்தி லேயிருந்து
இந்தப் படிதான் [8]எள்ளளவும் தப்பாமல்
200. விந்தை யுடனே மேதினியில் வாழ்ந்திருந்தான்.
ஆனதால், மன்னா! அழகு மிருகசிங்கன்
மான முடனே மணந்தபெண்கள் நால்வருடன்
[9]கற்புநிலை தன்னைக் கடவாமல் வாழ்ந்தகதை
நற்புடனே சொல்லுகிறேன். நன்றுக் கேளு'மென்று
205. சோ[10]ரு இன்ற செய்ய தவவதிட்டன்
பூராய மாகப் புகலுவான் மன்னனுக்கே. 206.

பதினலாம் அத்தியாயம் முற்றும்.

---

1. வகையான
2. 'புண்ய' என்றெலிக்கும்
3. தசிதனிலும் என்பது சிறந்தெலிக்கும்
4. ஷுத்
5. பிறநாளில் இன்பமுற்று.
6. [வ]: உச்சரிப்பு தி ஒலியாது போலும்
7. ட்=ள்ப்
8. [யெ]
9. பெண்கள் கற்புநிலை; இவன் கற்புநிலை கடவாமையும் ஆம்
10. [ரு]

பதினேந்தாம் அத்தியாயம்

கற்பு நிலை

விருத்தம்(1)

[1]அன்ன வூர்தியும் ஆழியஞ் செல்வனுங்
கன்னல் ஊறுசொற் காரிகை பாகனும்
என்னு மூவர் முதலெவத் தேவுந்தான்
மன்னு காதல ரென்பர் மடந்தைமார்[2].

நடை

5. பொங்கு புகழ்வேந்தே! புகலக்கேள்! கற்புடைய
மங்கையர்கள் [3]செய்கை வழுத்தவே நீர்கேள்மோ!
வாஞ்சை யுடனே மாலையிட்ட நாயகனே
[4]தேஞ்ச மதியைச் [5]சேருஞ் சிவனெனவும்
பங்கையப் பூமேல் பழகும் பிரமனென்றும்
10. சங்கு தனையங்கை தனில்வைத்த மாயனென்றும்
இருதயந் தனில்நினைவாய் [6]இம்மூன்று மூர்த்தியிலும்
அதிகம் புருசனென்று அழகான கற்புடைய[ர்]
மாதர் மிகநினைப்பார். மன்னவா! [7]யின்னமுந்தான்
போதமுள்ள கற்புடைய பூவையரைச் சொல்லுகிறேன்.

விருத்தம்(2)

15. பித்த ஞகினும் பேதைய ஞகினும்
மத்த ஞகினும் மாண்பில ஞகினும்
உத்த மத்திரு ஒப்பவள் கேள்வர்தம்
பக்தி யோடவள் [வப்படி நிற்பர(ால்)][8]

---

1. அன்னம் ஊரும் பிரமன்
2. நேர் முதலான அடிகள் ஒவ்வொன் றிற்கு 11எழுத்து. மா+வெண்டளை இடைவரும் முச்சீரென நாற்சீர் கொண்ட கலித்துறை
3. செயல்; ஒழுக்கம்
4. தேய்ந்த-த-ச
5. மதியைச் சேரும் என்பது அநுவழக்கு; செயற்கை
6. [பி]
7. ய்-உடம்படுமெய்
8. மா-3 விளம், எனை நாற்சீர் பின்வருக நேரும் வெண்டளை அடிக்கு 11 எழுத்து கலிவிருத்தம்

நடை

இன்ப முடனே எல்லோருந் தான[1]றிய
அன்புடனே மாலையிட்டோன் அறிவில்லா ஞஞலும்
மடையனவ ஞஞலும் மாபேய ஞஞலும்
[2]வடிவுசேர் கற்புடைய மங்கையர்கள் தானவனே
நிந்தனே [3]பேசாள் நேசமுள்ள தெய்வமென்று
சிந்தை மிகமகிழ்ந்து தினந்தோறும் பூசைசெய்து
கணவன்மொழி தப்பாமல் [4]கட்டாக வேகடந்து
குணமாகத்தொண்டு செய்வாள் கோதில்லாக் கற்புடையாள்.

விருத்தம்(3)

பிணிய ஞயினும் பெற்றியை நீக்குறுங்
தணிய மர்ந்து தகமைய ஞகினும்
அணியி லாதவ ஞகினும் அன்பர்தம்
பணிவி டைத்தலை நிற்பர்நற் பாவைமார்.[5]

நடை

பிணியாள ஞஞலும் பேதமையோன் ஞஞலும்
பணிதியொடு [6]நற்தூசு பாங்காகச் சூடுதற்கு
கைப்பொருளு மில்லாமல் கடிதான துன்பமொடு
மைப்போ லழுக்குடனே வறுமைகொண்டோ ஞஞலும்
அன்புடைய நாயகனென் றறிவுடைய மங்கையர்கள்
இன்பமுட னேயவர்கள் இசைத்தபடி யேநடப்பார்.

விருத்தம்(4)

அழகு மின்றி யறமிகு மூப்பெய்திக்
கிழவ ஞயவன் கிட்டிய குட்டநோய்
பழவி னைப்படி யெய்தினும் பாவைமார்
மழவ னென்ன [7]மவுணரை யெண்ணுவார்.[8]

1 [தி]
2. அழகு
3. மங்கையர்கள் எல்ற பன்மை ஒருமை யோடு முடிவது பேச்சு வழக்கு பேசான் பேசார்கள் என்பதன் மரூஉம் ஆகலாம்
4. மரியாதை கட்டுப்பாடு முறை
5. நிரைமுதல் அடிக்கு 12 எழுத்து முன்னைய விருத்தங்கள்போலாம்
6. தற்றூசு (தாமோதரம்பிள்ளை தம்பதிப் பில் இம்முறையைக் கையாண்டார்)
7. கவவர்-மகிழர் க. வ: இ. உ
8. ஷ-5

நடை

அழகில்லா ம-லிருந்து அதிலே கிழவனுமாய்
[1]சூழகுழத்த சோறுங் குட்டநோய் [2]மேலாடி
மெத்த அசங்கிதமாய் விருத்தாப் பியமுடனே
உற்ற கணவ [3]னுறுவறிஞ ஞனலும்
கற்புடைய மாதர் கருத்திலிங் தனேநினையார்.
'நற்புடைய காம'னென்று நாயகனேப் பேணிடுவார்.
[4]ஏதைப் புகழ்ந்து [5]இனிக்கணவன் சொன்னலும்
போத முடன்னிவலும் புகழ்ந்து களிந்திடுவாள்.
வெப்பமுட னேர்பொருளே வெறுத்துமிகச் சொன்னலும்
அப்படியே கற்புடையாள் அவளும்மி னேப்பாளே.
காதுசெவி டானலுங் கண்குருடு [6]ஆனலும்
[7]ஓதிமம்போல் நாயகன்தான் ஊமையவ னுனலும்
கைக்கா லுடன்மூக்குக் காதுகுறை யானலும்
மெய்யான கற்புடையர் வேறே [8]மனதெண்ணுமல்
அவனே கணவனென்றும் ஆசையுள்ள காமனென்றும்
சிவனுமவ னுமெனவே சிந்தையுடன் பூசைசெய்வாள்.
எவனெருவ னுனலும் இனியசிலே மன்மதன்போல்
அவனிதனில் மிக்க [9]அழகுடையோ னுனலும்,
தன்னே விரும்பிச் [10]சாதகமாய் வார்த்தைசொல்லி
பொன்னேக் கொடுத்தாலும் போதமுட னே[11]பயங்கள்
[12]இணக்கமுட னேயுரைத்து எளிய குலத்திலே[ரீ][13]
செனிக்கும் படியாகச் சினந்து வுரைத்தாலும்[14]
கற்புடைய மாது [15]கலகமிடா [16]ளாசைவையாள்

---

1. கோள கோளப்புமாம்; தெசிழ்ச்சி
2. மேலாடி:மேலே பூசியதுபோ லிருப்ப
3. [ருவரிஞ்ஞன்] ஞானபதன் உச்சரிப்பு; ர-ற
4. [யே]
5. [யி]; இனிய
6. [வா]
7. அன்னம்; மனைவி அன்னம் போல் இருந்தது; ஓதிமம் (அவன்) புளிய மரம்போல் என்றுமாம்
8. கருவினங்காய்ச்சீ
9. [ய]
10. மறைப்பாய்; பிரமனாயாய்: அனு கூலமாய்
11. அச்சம் ஊட்டும் சொற்கள்
12. பொருத்தமாய்
13 தாள்
14. சபித்தாலும்
15. கலவனேடு கலகமிடாள்
16. பிறன்மேலாசை யையாள்

பொற்புடைய நாயகற்கும் பொன்போல் லுரையாளே.

65. மன்னுமலர்ப் பந்தலிலே மாலையிட்ட நாயகன்தான்
பின்னு மலர்க்குழலைப் பிடித்து [1]வடித்தாலும்
காலா லுதைத்தாலுங் [2]கனன்றுமெத்த வைதாலும்
பாலா[3]ரு மென்மொழியாள்[4] பதையாள்; மவுனமென்பாள்[5].

விருத்தம்(5)

தன்க ரத்திற் றலைவ னளி[6]த்திடு
70. பொன்க [7]ரத்தல் பிறரைப் புகழ்ந்திடல்
வன்க [8]றத்தில் [9]சிலுகிட [10]வாய்விடல்
மின்க ரக்கு மிடையர் விரும்பிடார்[11]

நடை

வரிசை யுடனேதான் மாலையிட்ட மாபுருசன்
பரிவுடனே கைகொடுத்த பணத்தில்[12]சிறு பாடாக
75. பாங்காக வேயெடுத்துப் பக்கத் தொருவனைத்தான்
ஆங்கே யுவகையொடு அன்பாய்ப் புகழுவதும்,
கொண்ட கணவனொடு கொடுஞ்சினங்கொண் டேசிறி
சண்டையிட்டு வை[ய்]து தண்ணீர்க் கரை[13]தூத்தல்;
வெப்பமுட னேபிறரை மேவுவாள் [14]செய்வதல்லால்
80. செப்பமுள்ள கற்புடையாள் [15]செய்திலாள் ளித்தொழிலை.
பொன்னணிந்து நற்[16]பிடவை பூண்டு அழகுடனே
கன்னல் மதன்போல(க்) கண்ணெதிரே கண்டாலும்

---

1. வ்-உடம்படுமெய்
2. கோபித்து
3. [று]
4. [i]
5. மௌனமே பதிலாகக் கூறுவாள் ஒளவாராமை காண்க
6. [ந்]
7. [தி] ஒளித்திடல்
8. [ற] கறம் = கொடுமை; மனம் கறுவுதல்
9. சண்டையிடல்
10. உரக்க வாய்க்கு வந்தபடி பேசுதல்
11. முன் விருத்தங்கள் போலவாம்
12. சிலுவானம் சிறுதேட்டு, சிறுபாடு, கணவனுக்குத் தெரியாமல் தனக்கெனச் சேர்த்தல்
13. தூற்றல்
14. [ன்]; கணவனினும் வேறுனவனோடு கூடுவள்
15. துணிவுபற்றி இறந்த காலம்
16. புடவை; ஆடவர் துணிக்குப் பெயராய் வருகிறது உ. இ

அவனே யறிவுடையாள் அங்கண்ணுல் நோக்காமல்
தவமான சிந்தையொடு தன்புருச னை-நினைப்பாள்.

85. சட்டமுள்ள மாகொழுனன் தா[1]னுங்கு சோற[2]தின்மேல்
இட்ட [3]கறியி [4]லினிக்கறிதான் ஏதெனவே
உங்கவே பார்த்து, ஓவியமாய் நற்கறிதான்
அங்கையால் வைத்து ஆசாரத் தோ-டேநின்று
ஆசைக் கொழுனனுக்கு அன்பாக வேயமுது

90. நேசமுட னூட்டுவது நிகரில்லாக் கற்புடையாள்
'ந[5]ன்குல தெய்வம் நமக்குப் புருசனல்லால்
பின்னெரு தெய்வந்தான் பேரான மாவுலகில்
இல்லை' யெனவே யினிதான கற்புடைய
வல்லிக் கொடியார் மனதில் நினைத்திடுவார்.

95. மனைக்குரிய நாயகர்க்கு [6]வலிதான துன்பம்வரில்
தனக்குவந்த துன்பமென தான்நொந்து சோர்ந்திடுவாள்.
[7]மணமிகுந்த பந்தலிலே மாலையிட்டுக் கைப்பிடித்த
கணவன்சோ று[8]ங்குமுன்னங் கற்புடையா ளுண்ணுளே.
[9]அசல்வீடு சென்றிருந்து அசலா ருடன்சிரித்து

100. கசிவாய் விளையாடாள். கணவனுக்கு முன்னுறங்காள்.
வீட்டுப் [10]புறம்படுக்காள் [11]வேறே சயனமிடாள்
[12]தொட்ட கணவன்பின்னே தூங்கி யெழுந்தறியாள்.

விருத்தம்(6)

தங்கு கேள்வரை யீன்றெடுத் தார்தமைப்
பங்க மில்லாப் பகைவரை யோகரை
105. துங்க நீதிக் குரவரைத் தொன்முறை
மங்கை மாதர் வழிபட்டு வாழ்வரால்[13].

---

1. உன்கு; நுங்கு-வினுங்கு (கலி-54)
2. [ர]
3. [ரி]
4. இவிய
5. நன்குலம் என்பது அருவழக்கு
6. பெரிய (மலையாளம்)
7. மணப் பந்தலிச்சீர்நிரப்ப மணமிகுந்த பந்தல் என்கிரு-'மிகுந்த' (சிறந்த) பந்தலொடுபோம் மணம்=கலியா ணம்; வாசனை என்ற பொருளும் குறிப்பாக வரும்; பின்னையது மிகு ந்த என்பதோடு சேரும்
8. ண்
9. அயல்
10. வெளியே
11. கணவனே விட்டு; கணவனன்றிப் பிறர் தொடாமை சீதையின் பரனேயே இராவணன் கொண்டு போனதால் அறிக
12. தமிழ் மரபு
13. முன் விருத்தம் போன்றது

நடை

தன்னுடைய நாயகனைத் தானீன் றெடுத்தவரை[1],
மன்னுமறை வேதியரை, மகாதவசு செய்பவரை,
ஆன குருக்கள்தனை, அறிவுடைய புண்ணியரை'
மான முடையவள்தான் வழிபாடாய்ப் போற்றிடுவாள்.
விட்டுப்[2]பிரி யாக்கொழுனன் வேறேயொரு பெண்ணுதனை
தொட்டுக் கலந்தாலுஞ் சொல்லரிய கற்புடையாள்
அந்தமட வாளோடு [3]வண்டிக் கலகமிடாள்.
சொந்தத் [4]துணைவியெனத் [5]துவண்டு [6]கனிமைசெய்வாள்;
தன்னூரு தான்கடந்து தானெரு வூர்தனக்கு
[7]பொன்னூரு மாகொழுனன் போனானே யாமாகில்
கன்றுதனைக் காணுத [8]கற்ரு விரங்குதல்போல்
நன்றுடனே துன்பமின்றி நற்பாய் வருக'வென்று
தெய்வந் தனைநோவாள்; சிறப்பா யுடல் பேணுள்
மையுலவுங் கண்ணியரில் [9]மான முடையவள்காண்.

விருத்தம்(7)

கொழுநன் மாண்டிடில் கோதையர் செந்தழல்
தொழுது சூழ்கி துணைவன் நரகிடை
தழுவி னலுந் தடக்கை பிடித்தெடுத்
[10]தெழுதி' யென்னத் துறக்கத்தில் [11]ஏற்றுவார்[12]

நடை

ஆசைக் கணவன் அய்யோ மிகமடிந்து
தோசத்தி னுலே சுடுநரகில் வீழ்ந்தாலும்
கற்புடைய மின்னுள் கணவனுட னக்கினியில்

---

1. பெற்ற மக்களை
2. 'பிரி' கூன்போலாம்; ப் ஒலியாது போகலாம்
3. வ் உடம்படுமெய்-அண்டி அடுத்து
4. தங்கை
5. பரிவுகாட்டி
6. கனிகரம்; கனிவு = அன்பு; [கனிமை]
7. 'பொன்னூரு' என முன்வந்தது
8. [கத்தா] கன்றுள்ள பசு
9. கற்பு என்ற பொருளில் மானம் வருகிறது
10. 'எழுவாய்' என்ன
11. [ஏத்துவார்]
12. முன் விருத்தம்போல தரைமுதலாதலில் அடிக்கு 12 எழுத்து

பொற்புடனே வீழ்ந்து[1] பொல்லா நரகமதில்
கிடக்குங் கொழுனனிடங் [2]கிட்டியே கை[3]பிடித்து
எடுத்துக் கரையே[4]ற்றி இனிய புருசனோடு
வீரசொர்க் கந்தன்னில் [5]வீற்றிருப்பா ளென்றுசொல்லி
சிருடைய மன்னு! செப்புதுகாண் வேதமெல்லாம்.
ஆசைப் புருசன் அசலூர்க்குப் போகிடும்நாள்
வாசல் [6]கடக்காள்; மயிர்கோதாள்; பூமுடியாள்;
மஞ்சள் [7]குளியாள்; வாயிலங்கப் பாக்கருந்தாள்;
[8]அஞ்சனந் தீட்டாள்; அழகுசந்த னம்பூசாள்;
[9]வெள்ளை யுடுத்தாள்; மேனி மிகக்குளியாள்.
கள்ளமில்லாச் சிந்தை கற்புடையாள் நீதியிதே.

விருத்தம்(8)

பூத்திடு முதல்நாள் தன்னில் பு[10]லச்சிபோல் மகளிர் [11]நீங்கல்
[12]கா[ர்]த்திடு மற்றைநாளிற் கலிமறை யாளர் [13]செத்தோர்.
[14]நீத்திடு மளவு மேகம் நிறைந்திடு[15] மூன்றும் நாளில்
[16]பார்த்ததில் பாதி நீங்க நாலில்நீர் படி[17]வ தாக[18]

நடை

சிலையுடைய வேந்தா சிறப்புடைய மங்கையர்கள்
[19]தலையழுக்க தாக தான்ஒதுங்கு மந்நாள்தான்
தீண்டா பெரும்[20]புலச்சி; சீர்வேந்தா! ரெண்டாம் நாள்

---

1. வாக்கியம் நீளுதல் கண்க வேறுவாக்கியம் வரல் முறை
2. அருகில் சென்று
3. வகிமிகவில்லை
4. [த்தி]
5. ஷை-ச்
6. கடவாள் என்பது கடக்காள் என்ற வடிவம் இந்த நூலுக்கு முன்னரே கொண்டுவிட்டது
7. 'மஞ்சள் குளி' என்ற வழக்கு; பூசல்; பின் குளியல் வருகிறது
8. மை
9. வெண்புடைவையன்று; அதனைக் கட்டுக் கழுத்தியர் உடுப்பதில்லை; சலவையானவை; பளபளப்பானவை என்று பொருள்
10. லை ஐ = அ (சமுள்)
11. தொடாது நீங்குக; அல்; வியங்கோள்
12. தொடாமல் பாதுகாத்திடுவாய்
13. புலைமை போய் பார்ப்பனத் தன்மை வந்தாலும் செத்த மறையோரைத் தீண்டுவதில்லை; உருவகம்செத்தோர் போலக் காத்திடு
14. நீங்கிக் கலையும்
15. நிறைந்திடும் அதுபோல
16. மனத்தாற் கண்ட அத்தீட்டில்
17. [ய]
18. 'வினம் மா தேமா' இரட்டித்து வரும் அறுசீர் விருத்தம்
19. பூப்பு
20. புலைச்சி

[1]மாண்டமறையோர்[2] தீண்டல்; [3]மார்க்கமுடன் மூன்றும்நான்
நீர்கொண்ட மேகம் நெருங்கிக் கலைவதுபோல்
பார்க்கின்ற [4]தீட்டம் பரிவாய்க் கலைந்துவிடும்.
வேலாருங் கண்ணுர் மிக்கதொரு நாலாம்நாள்

150. பாலாரும் மாபுனலில் பாங்குடனே மூழ்கிடுவார்.
இப்படியே [5]சுதகமாய் [6]யில்லறத்தைத் தானீங்கி
செப்ப முடனே தீண்டல்கண்ட [7]மூன்றுநாள்
சூதாட லாகாது, தூங்கவுமே யாகாது.
தாதாடும் பூம்புனலில் தான்குளிக்க லாகாது.

155. எண்ணெயிட லாகாது. [8]இலையருந்த லாகாது.
வண்ணமுள்ள கூந்தல்தனில் மலர்முடிக்க லாகாது.
பல்விளக்க லாகாது [9]பகர்ந்தழுத லாகாது.
மெல்லவே யூர்பாதை மிக[10]நடக்க லாகாது.
பேசவு மாகாது. பெருஞ்சிரிப்பு மாகாது.

160. நேசமுட னேசிலனை நினைக்கவுந்தா னாகாது.[11]
அலங்கார மாகாது; அனுபோக மாகாது.
மலங்காத மன்னா! மாவிரத மாகாது.
[12]ஒன்றுக்கொன் றேதானு முகந்துதொட லாகாது
வென்றியுடன் தேர்[13]திருநாள் [14]வினைந்துகாண லாகாது.

165. பொங்க மெனச்சாந்து பூசவுமே யாகாது.
இங்[15]கிதுகாண் [16]குத்த மேந்திழையார் தங்களுக்கு.'

---

1. இறந்த
2. 'தீண்டாது விடுக' என்ற பொருளில் பழைய எதிர் மறை வியங்கோள்; தீண்டத் தகாதோர் அவ்வாறு பிறரை வேண்டிக்கொண்டிருப்பர்; இச் சொல்லே 'தீண்டாமை' என்ற பொருளைத் தருவதாயிற்று-மலையாளத்தில் பெருவழக்கு
3. முறையாக
4. தீட்டு; அம் பெற்றுவருகிறது
5. மாதவிடாய் விலக்கம்
6. இ என்பதன் உச்சரிப்பு
7. [முன்னொருநாள்]
8. வெற்றிலை
9. வாய்விட் டழுதல்
10. நடத்தல்; நடக்க என்ற செய்வினை எச்சத்தால் வந்த வடிவம்
11. புதுமைக் கொள்கை!
12. ஒருவருக் கொருவர்
13. தீருவிழா
14. தீட்டு நீங்குதற்கு முன் முடிந்துவிடும் என்பதால் விரைந்து
15. இது; தொகுதி ஒருமை; இங்குக் கூறியன எல்லாம்
16. குற்றம்; ந, ற

என்று மனுநூல் இனிதாகச் [1]சொல்லு துகாண்.
[2]துன்று புகழ்மன்னு! [3]தூரதா ளானபெண்கள்
நாலாநாள் நீராடி நாயகனைக் கைதொழுது
170. [4]பாலான பஞ்சகவ்வியம் பாங்காக வேயருந்தி
சூரியனைக் கைதொழுது துலங்குமனை யில்வந்து
சீரினிய இல்லமதைச் சிறப்பாகச் சுத்திபண்ணி
தன்கணவன் கண்டு தன்னை மிகவிரும்ப[5]
பொன்பணிதி [6]பூட்டிப் பொன்னுடை தானுடுத்தி
175. அலங்காரம் பண்ணி அழகு மலர்முடித்து
[7]விலங்காமல் கொழுனனுடு மிகவாழும் நாளையிலே
கெற்பந் தரித்தால் கேடுடைய பொல்லாதார்
[8]அப்ப [[9]உறவு] [10]அகற்றியே, பார்ப்பதற்கு
கோர மெனும்வடிவைக் குறித்தங்கே பாராமல்[11]
180. [12]பாரமுள்ள வஞ்சகஞ்செய் பாவி பழக்கமின்றி
நற்புடனே கெர்ப்பமதை நன்முக வேவளர்த்து
பொற்புடனே புத்திரரைப் புனிதமுடன் பெற்றெடுப்பார்.
இப்படியே வேதம் [13]இயற்றுகின்ற கற்புமுறை
தப்பிதம்வா ராமல் தழைக்கும் புருசனுடு.
185. விட்டுப் பிரியாமல், விந்தையுடன், [14]வாழ்ந்தாக்கால்
அட்ட திசைமுற்று மடங்காப் புகழ்படைத்து
பொங்க முடன்வாழ்ந்து புகழார் சிவலோகம்

---

1. சொல்கிறது; சிறு வேர் கொள்ளவில்லை போலும்
2. நெருங்கும்; மேலும்மேலும் உண்டாகும்
3. தீண்டாமை காரணமாகத் தூர இருத்தல் வேண்டுமாதலின் தூரம் என்றலே தீட்டு என்ற பொருள் பிறந்தது
4. பால் மற்றைய நான்கிற்கும் உபலக்ஷணம்
5. [பி] பணிதியை விரும்பிப் பூட்டி எனினும் ஆம்; அப்போது கணவன் கண்டு எவ்பதற்குக் கணவன் தன்னைக் கண்டு எனப் பொருள் கொள்ளாமல் கணவனைத் தான் தரிசனம் செய்து என்ற பொருள் கொள்க
6. பணிதியைத்தான் பூட்டிக்கொண்டு இவ்வாறே பின்னும் பொருள்கொள்க தன்னைப் பூட்டி என்றுமாம்
7. கூடுதலை எதிர்மறையால் கூறும் இடக்கரடக்கு வற்புறுத்தல் பொருட்டுமாம்
8. [அப்ப] உச்சரிப்பு
9. [உறவு]
10. [அகத்தியே] உச்சரிப்பு
11. அப்போது பார்க்கும் வடிவும் உறவாடும் பண்பும் கருவில் படியும் என்பது ஒரு நம்பிக்கை
12. பேரிய; கொடிய
13 நடத்துகின்ற
14. வாழ்ந்தக்கால், இடை அகரம் நீஞர் விகுதியுடன்; விட்டுப் பிரியாமல் தழைக்கும் புருவனுடு வாழ்ந்தக்கால் என முடிபு கொள்க

அங்கும் நீடூழி அன்பாக வாழ்ந்திருப்பார்.
இல்லறத்தைப் பார்க்க இனிதா யொருவிரதம்
சொல்லரி[1]தோ மன்னு! சொல்லுகிறேன் இன்னமுங்கேள்!
புண்ணிய நோன்பு[2]வேண்டாம். புகழ்மீறு தவம்வேண்டாம்.
வண்ணமுடன் தீர்த்தம் மகிழ்ந்தாட வேவேண்டாடம்.
யாசகங்கள் வேண்டாம். அரியஇஷ்டை யும்வேண்டாம்.
பாகுமொழி யார்தமக்கு பர்த்தாவே தெய்வமல்லால்
வேறு தவமில்லை: மிக்கான [3]புண்ணியமில்லை.
கூறுகின்ற தெய்வம் கொழுனன்காண்! கண்டாயே!
கணவன் தனையிகழ்ந்து கருதுகின்ற பெண்களுக்கு
[4]மணமான தெய்வமில்லை. வளருஞ்சிவ பூசையில்லை;
புண்ணியமு மில்லை[ப்] புகழான தன்மமில்லை.
வண்ணமுள்ள தீர்த்தமில்லை; வளரும் [5]பலனுமில்லை.
விரதங்க ளுண்டோ, மேலும் புகழுமுண்டோ?
வரிசையுட னில்லமதில் வளமை சிலதுமுண்டோ?
ஒன்றுமில்லை. கொண்டவனை [6]யுறுத்துடன்பே ணுதவள்க்கு
என்றுமில்லை மோட்சம் இனிதான மன்னவனே!
கொடுநரகில் வீழ்ந்து கொதித்து வெகுகாலம்
[7]மடிவார்; புவியில் வருந்துவார்; கண்டாயே!
இந்தப் படியேதான் இனிதான மாமறைதான்.
விந்தையுடன் சொன்னபடி மிருகசிங்கன் மாலையிட
கன்னியர்கள் நால்வருந்தான் கற்புத் தவறுமல்
வன்னமுடன் பூவுலகில் வாழ்திருந்தார் மன்னவனே![8]

பதினேந்தாம் அத்தியாயம் முற்றும்.

---

1. ஓ-ஏபோல் தேற்றப் பொருளில் வருதல்
2. 'வேண்டா' சற்றில் ம் பெற்று வரும் வேண்டாம் ஒருமை; வேண்டா பன்மையைப் பின்னர் வேறுபடுத்தியது உண்டு
3. 'புண்ய' எ ன்பதுபோல் ஒலிக்கும்
4. மணம்; தெய்வத்திற்கு இயற்கைமணம் உண்டு என்பது கவி மரபு; மணம் திருமணம் என்ற குறிப்பும் உண்டு
5. புண்ணியச் செயலும் அதனால் வரும் பலனும் எல்லாம் கடவுள் ஆதல் போலக் கணவனுமாம்
6. [யுரு] கோபித்து; தன்னைப் போலவே னையும் பேணிப் பாராட்டாதவட்கு
7. வருந்துவார்; அழிவார்
8. கற்பு நெறியை வீரிப்பதற் கென்றே இந்த அத்தியாயம்வந்தது புராணப் பிரசங்கத்திற்கு ஏற்றது

பதினேழாம் அத்தியாயம்

மிருகண்டன் கதை

விருத்தம்(1)

இங்கிவர்கள் வைகலும்இ சைந்தினிது வாழ்நாட்
டிங்கள் நுதல் [1]மெல்லிய(ல்)சுவா தத்தைதிரு வொப்பாள்
பங்க[2]மறு நற்கிரக முச்சமொடு பார்க்க
மங்களநல் லோரைதனில் மாமகவை யீன்றாள்.[3]

நடை

5. இப்படியே இல்லறத்தில் இருந்து மிருகசிங்கன்
செப்புமுலை மாதரொடு செல்வப் பெருக்காக
கற்புநிலை சோராமல் காசினியோர் கொண்டாட
நற்புடனே வாழும் நல்மிருக சிங்காசி
பொங்கமுடன் மாலையிட்ட பூவையர்கள் நால்வரிலே
10. திங்கள்நுதல் சுவாதத்தை செல்வித் திருவயிற்றில்
ஈசன் செயலால் இனியகெற்பந் தான்தரித்து
நேச முடனே நிறைந்த[4]திங்க ளாகமுற்றி
நல்ல சுபதினத்தில் நவக்கிரக உச்சமதில்
வல்லிக் கொடியிடையாள் மைந்தன் தனையீன்றாள்.
15. பெற்ற புதல்வன் [5]பிரச மலர்முகத்தை
உற்ற தவயோகி ஓவியமா கப்பார்த்து
இந்தக் குழந்தை யினிப்பிறந்த நாள்முகி[6]ழ்த்தம்
விந்தை யெனமகிழ்ந்து மிக்க தவப்பயனால்
வந்தான் எனவே வரிசை யுடன்கனிந்து
20. [7]நந்தாப் பிதிர்க்கடனும் நல்ல தவநிலையும்

---

1. [மெல்லியசுவா]
2. [மு] உச்சநீலி ஒன்று; பார்வை வேறு
3. அடிக்கு 14 எழுத்து; 3 தாவதவ + தான(தானு); கூவிளங்காய் 3+தே மா1வரும்நாற்சீர் சந்தக்கலிவிருத்தம்
4. தீங்கள்போல
5. தேவ் (உள்ள)
6. [i]
7. கெடாத

செய்வான் எனமகிழ்ந்து சீரான மாபாலன்
மைவாருங் கானகத்தில் வருந்தி நமைப்போல
வடிவான மாதவசு மகிழ்ந்து புரிவான்காண் !
கொடிதாய் அவன்மிருக குழாங்கள் பலகோடி
வந்து வுரசுகிலும் மருப்பால் இடுக்[1]குகிலும்
சிந்தை கலங்காமல் செய்வான் தவசெனவே
எண்ணி மனந்தனிலே இனிய புதல்வனுக்கு
வண்ண'மிரு கண்டு'வென வைத்தான் திருப்பேராம்[2]
இந்தப் படிதான் இனிய மகன்பேரு
விந்தையுட னேகூறி விரும்பி வளர்நாளில்
சீரான மாபாலன் சிறந்தமூன் ரும்பிறைபோல்
பூமாய மாகவேதான் புவியில் வளர்காளில்
அஞ்சு வயசுதனில் அரிய[3]நூ லுந்தரித்து
மிஞ்சும் பலகலையும் மிக்கபல சா[4]த்திரமும்
வேதமொடு ஆகமமு [5]மினியதொரு மந்திரமும்
நீத முடனே நிரம்பவே யோதிவைத்தார்.
இந்தப் படியே யினிமிருகண் டென்பானும்
விந்தையுடன் வேதம் மிகப்படிக்கு மந்[6]காளில்
வயசும் பதினுருய் வளர்கலைக்கு வல்லவனுய்
புயமீறு மாமுனிவன் புதல்வன் வளர்நாளில்
நற்கருணை யாளன் நல்ல மறைவேதன்
முற்கல னென்றுசொல்லும் முதிய பிராம்மணன்முன்
அன்புடனே பெற்ற அழகு அருந்தநியை
[7]பொன்பு[8]றவே கேட்டுப் புகழுமிரு கண்டுவுக்கு
சாதி மறைநாலுஞ் சனங்கள் மிகவறிய[9]

---

1. [கி] கு-கி இடிக்கிலும்என்பதன் இடை யே கு
2. பேர் வைத்தானும் என சற்றில் 'ம்' இல்லாமலும் இருக்கலாம்
3. பூன் நூல்
4. [ஸ்த்]
5. ம்+இ; மோனை
6. [ன்னு]-ன, ந
7. பொற்புறவே என்பதில் 'ற்' மெலித்தது தொகைக்காக நன்புபோலப் பொள் பு ஆம்
8. [ர]-ர, ற
9. திருமணத்திற்கு வேதம் சாட்சி, பொது மக்கள்சாட்சி; வேதநெறி இலட்சியம் மக்கள் நடைமுறைக்குச் சாட்சி

போதமுடன் மாலையிட்டு பொன்போல் வளர்நாளில்
கமலை எனும்மடவாள் கமலத்தோன் [1]கற்பனையால்
அமல விழிகுழைய அரியகெற்பந் தானுகி
நான்மறைக்கும் வல்லவனுய் நல்ல தவத்தோனுய்
[2]பூமகிழ நல்ல[ப்] புதல்வன் தனையின்று
வண்ண முடனே வளர்த்து அழகாக
கண்ணுவ மாமுனிவன் கனிவாகப் பெற்றெடுத்த[3]
சிலைபோல் நுதலாள் சிறந்த வரிவிழியாள்
குலையென்பாள் தன்னைக் கோல மணமுடித்து
வரிசை யுடனே வாழ்கின்ற [4]வந்நாளில்
[5]கரிய மலர்ப்பூங் கருங்கூந்த லாள்விமலை
பாங்காக கெற்பம் படைத்து வுலகறிய
ஓங்கு மறைக்கு முயர்மனைக்கும் வல்லவனுய்
சும[6]தியென் றுசொல்லுந் தோன்றல் தனையின்று
தமதுடைய சுற்றம் தானறிய வேமகிழ்ந்து
சுந்தரம் போல சுமந்தூரிசி யென்பான்த(ா)ன்
விந்தை யுடன்பெற்ற மெய்மகளாள் சத்திதனை
கலியாணம் பண்ணிக் கனியும் பெருமையொடு
மலிவாக வாழ்நாளில் மங்கை யெனுஞ்சுரசை
சுற்ற மறிய சுவாதனென்றோர் பாலகனை
[7]முத்துமுலை யாளீன்று மூவுல குங் கொண்டாட
பிருகுவென்பான் பெற்ற பெண்ணுதனை வாஞ்சையுடன்
வரிசையுடன் மாலையிட்டு மகிட்சி யுடனேதான்
இந்தப் படியேதான் [8]இனிநா லு பெண்களுந்தான்
விந்தை யுடன்பெற்ற மெய்ப்பான பாலருக்கு
வரிசையுடன் கலியாணம் மகிட்சி யுடன்முடித்து

---

1. விதியால்
2. பூமி
3. [து] செய்த என்ற பொருளில் செய்து பிற இடங்களிலும் வரும். செய்யப் பட்டு எனலாம்
4. [ன்னு] ந; எ
5. நீலம்
6. [தி] த-ர
7. முற்றும்; எதுகைநோக்குக. முத்துமாலை யணிந்த என்றல் மேலே சுற்றம் என்பது சுத்தம் என ஒலிக்கும்
8. இவிய

திருவளரும் பாக்கியமொடு சிறந்த[1]இல்வாழ்க் கை-நெறிதான்
குன்றுமல் காளுங் குலந்தழைக்க வாகுதிகள்
நன்றுகச் செய்து நல்ல பிதிர்க்கடனும்

75. வழுவாம லேநடத்தி வாய்த்த மிருகசிங்கன்
தெளிவான சிந்தையொடு சிறந்துவளர் நாளையிலே,[2]
மிக்கதவ யோகனென்னும் மிருகசிங்கன் தானீன்ற
மக்களொரு நால்வர்தனில், வாய்த்தமிரு கண்டுவுக்கு
மைந்தரன்றி யே,யினிய மக்களொரு மூவருந்தான்

80. [3]சுந்தரன்போல் மைந்தர்தமைச் சுகமுடனே தானீன்றார்.
பரிவான மாமுனிவன் பாலரொடும் பேரரோடும்
திருமா தி[4]ணையான செல்வமட மாதரொடும்
வேதந் தவறுமல் இனிய பிதிர்க்கடனும்
போத முடன்செய்து பொருந்திய புண்ணியவான்.

85. தானந் தவங்கள்செய்து தழைக்கும் மகரமாதம்
ஆனகிளை சுற்றமோடு அரிய புதல்வரோடு
மாகஸ்நா னமாச மாபுண்ணி யங்களொடு
பாகொத்த சொல்லுமையாள் பாகன் தனைநினைந்து
[5]வைதிகந் தப்பாமல் மாபுண் ணியவிரதம்

90. செய்து [6]அழகாகச் சிறந்த[7]இல்ல றத்திலேதான்
காப்பு தரித்த கன்னியரோ டேவாழ்ந்து
மூப்பு வருமுன்னே முற்றுமனை வாழ்க்கைதள்ளி
மக்களொரு நால்வருக்கும் மதியுரைத்து மாலையிட்ட
மைக்கண்சுவா தத்தையையும் வடிவு கமலையையும்

95. விமலை யொடுசுரசை மின்னுரை யும்மிவர்கள்
தமது புதல்வரிடந் தானே மிக[8]இருத்தி
யேகாங்கி யாக [9]இனிய மிருகசிங்கன்
வாகான காளில் வளரு [10]மவுனியென

---

1. [யி]
2. வாக்யம் நீள்கிறது
3. சோக்கன் சுந்தரம் (அழகு) என்றுமாம். சு என்பது மேல் 'மை' என்ப நோடு ஒரே மாத்திரை அளவினதாம்
4. [னை]
5. வை [வய்] செய் தெதுகை
6. [வ]
7. [யி]
8. [யி]
9. வெ-1
10. [மௌ] எவ்பது மவு எள ஒலிப்பின் சந்தத்திற் கியையும்

சஞ்சார மாகத் தவங்கள் பலதுசெய்து,
பஞ்சாக் கினிநடுவே பாங்காய்த் தவமுடித்து
[1]காற்றைப் பொசித்து கானச் சருகுதின்று
[2]கூற்றை யுதைத்தோன் கோலப் பதம்நினைந்து
காவு தனிலுங் கடியகல் பாறையிலும்
தூவும் [3]பனியிலையுந் [4]தூத்தும்வெயில் காற்றிலேயும்
இனிய மிருகமொடு இவனு மிருகமென
கனியும் மிருகசிங்கன் காட்டில் மிகுத்திருந்து
உடல்பழுத்து நாளேறி உற்றவய துமுடிந்து
சடலந் தனைப்போட்டுத் தானுமொரு தேவனென
ஆருக்குங் கிட்டாத அரியசத் தியலோகம்
சீருற்ற யோகி சிறப்பாக வேயடைந்து
கூறு மொருகற்ப கோடிகா லமிருந்து
நாறுங் கடுக்கைபுனை நாதன்முன்னுள் சொற்படியே
தப்பாம லேபிரமன் தன்பால ணுப்பிறந்து
ஒப்பிலா மாதவசு உணர்ந்த நிதாகரற்கு
ஞான நிலைகாட்டி நற்பதவி தான்கொடுத்து
தேனுல்வு கொன்றை சேருஞ் சடாமகுட
நாதன் கிருபையினுல் நல்ல மிருகசிங்கன்
பாதி மதிபூண்ட பரமன் பதமடைந்தான்.
சீராரு மிருகசிங்கன் சிவனுர் பதமடைய
காரா[5]ருங் கூந்தன் [6]கன்னியர்கள் நால்வருந்தான்,
மைந்த ருடமனையில் மகிட்சி யுடனிருந்து
விந்தை யுடனே மேதினியில் வாழ்நாளில்,
பரிவான கற்புடைய பாவையர்கள் [7]நால்பேரும்
கரிய குழல்வெளுத்து கனிவா யிளமையும்போய்
பூப்போ லிலங்குசடம் போத மிகத்தளர்ந்து

---

1. [காத்தை]
2. [கூத்தை]
3. பனியிலேயும்; ஏ, ஐ;
4. தூற்றும்
5. [ரு]
6. மணமாகதவர் என்ற பொருள் இல்லை; பெண்கள்
7. வழக்குமொழி

மூப்பும் பெரிதாய் முகஞ்[1]சுரித்துப் பல்வீழ்ந்து
கந்த மலர்போல காட்டுமுக மந்திரைந்து
அந்தங் குறைந்து அதிகிழ மாகினர்காண் !
இப்படியே தாய்மார் இனியவிருத் தாப்பியமாய்
செப்ப முடனிருக்கச் சிரான மக்கள்தனில்
மூத்த மகனுக முனைத்தமிரு கண்டு[2]வென்பான்
பார்த்தினிய தாய்மார் [3]பழக்கோல மா[4]னரென்று
போத நினைந்து புத்திரனில் லாததுன்ப
வேதனையா லய்யோ ! மிருகண்டு சிந்தைநொந்து
'முன்னுள் தவக்குறையோ [5]மூதாக்கள் செய்குறையோ ?
இ[6]ன்னுளில் குற்றம் எவர்க்குநாம் செய்தோமோ !
சிவனே ! மிதுபாவம் தீரவே நான்தானும்
தவமுடைய தாயரொடு தழைக்குமனை யாளோடு
தேடரிய கங்கைநதி சென்று மிகத்தீர்த்தம்
ஆடிவரு வோ'மென்ற அன்பாய் மனம்நினைந்தான்.
[7]எண்ணி இவனிருக்க [8]இனியந்தப் பட்டணத்தை
வண்ண மெனவாழும் மாபெரிய மன்னவனும்
தன்தேவி யோடுந் தழைக்கும்பெருஞ் சேனையெடும்
பொன்பேரலே கங்கை புனிதமுட னேயா[9]ட
மன்ன னவன்நினைந்து வளருகின்ற காசிதன்னை
நன்னயமா க-நோக்கி நடந்தானே அன்புடனே.
காவல[வ]ன் செல்ல கண்டுமிரு கண்டுவென்பான்
மாவளருங் காசி மகாகங்கை ஆடுதற்கு
சுது நமக்கு [10]இனிய துணையெனவே
தாதுல வுங்கூந்தல் தாய்மார்கள் நால்வரையும்
கையுடனே கூட்டி கலியாணம் பண்ணினதோர்
தையலி யுங்கூட்டி தான்நடந்தான் மன்னவனே !

---

1. களித்து; முதுமையில் வெறுப்புக்குறி; முகந்தீரைதல் வேறு கூறப்பெறும்
2. வ்-உடம்படுமெய்
3. கீழ்ப்பழம்
4. ன னை ஒலிக்கும்
5. மூதாதைகள்
6. ந்நா
7. பொருள்தொடர் அந்தாதி
8. [யி]
9. [டி]
10. ஷெ-ச

அன்பான காசிநதி ஆசையுட னேயாட
பொன்போல வேநடந்து [1]போனான்மிரு கண்டுமன்னா!

155. இப்படியே தாய்தனையும் இனிய மனைவியையும்
செப்பமுட னேகூட்டி திரண்டதண்ட [2]காரண்ணிய
மார்க்க மெனநடந்து வாஞ்சையுட னே[3]போகில்
சேர்க்கையுள்ள தாய்மார்கள் சிறந்தமூப் பான திலுல்
கால்கள் அசந்து கடியதுய ரம்பெருகி

160. [4]மேல்களது வேர்வைசிந்த மெத்தமுக [5]வாட்டரவாய்
மெல்லமெல்ல வேநடந்து விருத்தாப் பியமுடனே
அல்ல லுடனேவரும் அன்பான தாய்மார்தன்
கருணைமுக வாட்டரவைக் கண்டுமிரு கண்டவனும்
அறிவு மிகமயங்கி [6]அய்யோ வெனயிரங்கி

165. வழியு மிகத்[7]துலைய வாகுடனே தாய்மாரும்
தெளிவாய் வழிநடக்கச் செப்புவா னேவியமாய்.
'அன்னையரே! நீங்கள் அதிக வழிநடந்து
[8]கன்னியுடல் முற்றுங் கலங்காதீர்! மெல்லமெல்ல
வாரும் இதோகாசி வாகுடனே [9]தோணுதம்மா!

170. பாரும்' எனச்சொல்லிப் பாங்காய் வழிகூட்டி
ஆதரவ தாக அக்காசி யினமகிமை
போதமுடன் தாய்மார்க்குப் பொன்போல் லுரைத்திடுவான்:-

விருத்தம்(2)

தாயில வர்க்குந் தந்தையில் லாதே தளர்வோர்க்கும்
நோயுடை யார்க்கும் நுண்பொரு ளில்லா வறி[0]னோர்க்கும்

175. வாயிலி கந்தே வன்கிளை தள்ள [11]மறுதேசம்
போயின வர்க்குங் காசியல் லாதே புகழுண்டோ[12]

---

1. இடையில் நெடில் குறுகும்; அல்லது மிரு என்பதனை மிரு என ஒலிக்கக் கூறுவேனும் கொள்க
2. கூ வினங்காய் அல்லது 'லீ' ஓலியாது என்க. அரண்ய மார்க்கமென நடத்தல் என்ற வழக்கு
3. போகையில்
4. உடலின் மேற்புறங்கள்
5. வாட்டம்; தோற்றரவுபோல அரவு விகுதி
6. [வ]
7. தொலைய
8. கன்றி
9. தோன்றுகிறது அம்மா
10. [ஞ்ஞோ]-உச்சரிப்பு; அ ஓ எனவழ தல் காண்க
11. [ரு]
12. கூவினம், தோழ, கூவினம், தோழ, புளி ராங்காய் எனஐந்துசீர் வரும் கலித் துறை. அடிக்கு 14 எழுத்து இவ்வாறாமாட்டும் நேரொன்றாசிரியத் தளை; பிறவெல்லாம்

நடை

தாயுடனே பெற்ற தகப்பனில் லாதவர்க்கும்
நோய்கொண்ட பேர்க்கும் நுண்பொருளில் லாதவர்க்கும்
இகழ்ச்சியுட னேசனங்கள் [1]ஏசியே தள்ளிடவே
மகிழ்ச்சி கெடவே மறுதேசம் போனவர்க்கும்,
இருந்த விடம்விட்டு எடுப்பட்ட பெண்களுக்கும்
தெரிந்து தெரியாமல் [2]தீபாவஞ் செய்பவர்க்கும்
ஆனதொரு [3]சாக்காலம் அடுத்திருந்த பேர்களுக்கும்
மான மழிந்து வரம்பழிந்து போனவர்க்கும்
சிந்தை தெளிந்து சிறப்பாக வேதவசு
விந்தை யுடனே மிகவேதான் செய்பவர்க்கும்,
பிள்ளையில் லாதவர்க்கும் பெருந்தாயா தி-யாலே
உள்ள முடைந்து[4] உடல்மெலிந்த பேர்களுக்கும்
காசியே தஞ்சமல்லால் கரிய கடல்சூழ்ந்த
தேசத்தில் வே[5]றைபுகல் செப்பரிது. கேளு'மென்று
அன்னை யர்க்குச் சொல்லி அழகுமிரு கண்டவனும்
பின்னுமந்தக் காசி பெருமைதனைச் சொல்லிடுவான்.
பேசுமஞ்சு [6]குரோசம் பெருந்தூர வட்டமென
காசிதனைச் சுற்றி கருதுகின்ற நான்குதிக்கும்
உள்ளசிவ செந்துவெல்லாம் உற்ற சிவனருளால்
கள்ளமெனும் மாயக் கவலை தனைநீக்கி
பொங்கு[7]சங் கற்பம் பொருந்தும் விகற்பங்களை
அங்கொழித்து நாளும் ஆனந்தம் சேருவதால்,
[8]தானவனு னவேந்தர் தழைக்குங்கா சித்தலத்தை
ஆனந்த கானமென்று அன்பாகச் சொல்வார்காண்.
இந்த மகிமை இலங்குகின்ற காசிதனை

---

1. [யே]
2. தீய; தீப்போன்ற: ஒற்று மிகவில்லை
3. சாங்காலம்
4. உகரம் கெடவில்லை
5. வேறே என்பது வேறை என்றும்; ஐ ஒரு மாத்திரை ஆம்; ற [ய்] என்பது போலாம்
6. குரோசம்: கூப்பிடு தூரம்; 2¼ மைல் என்றுமாம்
7. சித்த விருத்தி அடையும் வேறுபாடுகளை
8. சீவ போதமின்றித் தாம் சிவத்தோடு ஒன்றுன தலவேந்தர்

விந்தையுட்டன் யாரேனும் விரும்பியே வந்தடைந்தால்
கன்ம வினையொழியுங்; காசினியி லேமீண்டு
சென்ம மெடாமல் சிவனுன [1]கர்த்தாபின்
205. மயலான பாவ[2]இருள் மாளும் படியாக
[3]அயிலேச னென்றுசொல்லு மான சிவாக்கினியில்
காந்திச் சுடுவதினல் காசி நகர்தனக்கு
வாந்தகமாய்ச் சொன்ன மயானமென்று பேராச்சு.

விருத்தம்(3)

ஈண்டபிற விப்பெருநோய் மானிடரித்
தலையடைந்தே [4]யிறக்குங் காலைக்
210. [5]கோண்டலைவெண் ணிலவெரிக்கு(ஞ்) செம்பவளக்
காடனைய கொழுங்கோ டரம்
ஆண்டகைவந் த(ங்)கெய்தி யவர்முடியை
மடியிருத்தி யன்பி னேடு
தீண்டரிய (வ)லது[6]கன்னத் தோங்கார
முரைத்து[7]முத்தி சேர்த்து மன்றே.[8]

நடை

பிறவியெனுஞ் சாகரத்தில் பிறந்து பிறந்துமெத்த
இறந்துவிடு மானிடர்கள் எவரேனு மற்றுமுள்ள
215. ஈயோ டெறும்புமுதல் எச்சிவ னுனலும்
[9]சேயாள்சேர் காசிதனில் சென்றிக்கும் போதிலேதான்
பரம சிவனுன பரஞ்சோதி யானபொருள்
வரிசையுடன் கிட்டவந்து மாளுவோர் தன்தலையை
எடுத்து மடியில்வைத்து இனியவலக் காதுதனில்

---

1. [கற்த்தவ்வியம்]
2. [யி]
3. 'அயிலேசன்' என மற்றேர் பிரதியில் உள்ளது. அயில்=வேல்; மூவிலை வேலாம் சூலம்கொண்ட சிவனுடைய அக்கினி; அகில+ஈசர் (எல்லாவற் றிற்கும் தலைவர்)=அகிலேசர் என மருவது அயிலேசர் என மருவியது என்பதே மேல். அக்கினி=ஆக்கினை என வேறு பிரதியில் உள்ளது பொருத்தமில்லை
4. [தி]
5. பிறையின் கோலை வினவு
6. காதில்
7. [முற்றி]
8. 4 காய்-மா-தேமா என வரும் அறுசீர் விருத்தம்
9. செய்யாள்

220. [1]வடிப்பமுட னேங்கார மந்திரத்தை யேஉரைத்து
தீங்கான பாவத் திரகம் [2]புக்காம்ல்
பாங்கான மோட்ச பதவியே யீந்திடுவான்.
ஓர்பொழுது காசிதனில் உற்றங் கி நந்தாலும்
சீர்பெரிய மோட்சபலன் செப்பரிது மெத்தவுண்டாம்.
225. போதப் பலன்கொடுக்கும் புண்ணியதே [3]க-மாக்கும்
நாதன் மலரடியில் நற்புடனே சேர்த்திடுங்காண்.
தீய குணங்கோபம், சீரழிக்கும் மூப்புபிணி
காயும் வறுமை கடிய கொடும்வெகுளி[4]
தன்னி லழுந்தார்; சாலோகந் தான்பெறுவார்.
230. மன்னு புகழ்பெறுவார் மாபுண் ணியமாவார்
[5][இதனினல்ப்] புண்ணியந்தான் இனியசா யுச்சியபதம்
[அதிக]பாவவினை அ[6]றும்வினைகள் தான்இன்றி.
என்று மிருகண்டு [7]இனிக்காசி யின்பெருமை
நன்றி யுடனுரைத்து நற்தாய்மா ரைக்கூட்டி
235. மெல்லமெல்ல வேகடந்து வேண வழிதுலைத்து
செல்வஞ் செழிக்குந் திருக்காசி சேர்ந்தனரே.
அணிசேருங் காசிதனில் அன்புடனே வந்துமங்கே
[8]மணிகருணை யென்றுசொல்லு மாபுனலி லேமுழுகி
தேவ ரொடுரிசிகள் சிறந்த பிதிர்க்கரியும்
240. ஓவியமா க-நினைந்து உற்றதர்ப்ப ணங்கள்செய்து
மற்றுமுண் டான வானநேம நிஷ்டையெல்லாம்
முற்றுமே செய்து முடித்து[9]சிவ பூசைசெய்து
ஆங்கே யிருக்கும் அகதிபர தேசியர்க்கும்
பாங்குடனே யன்னம் பரிவாக வேபடைத்து

---

1. வடிப்பம் = வடிவம்; அழகு
2. புகாமல் என உச்சரிப்பு
3. கம்-மா க்கும் என்பதுபோல ஒலிக்கும் முன் மொழியின் நின்று பிரிந்து வரும் குறில் நேரசையாகவே ஒலிக்கும்
4. அவ்வவற்றின் அடையினை நோக்குக; சீர்; அழகு வெகுளி கோபத்தினும் வேருகக் கூறப்பட்டுள்ளது. முன் கோபமாம்
5. இந்த இரண்டடிகள் இடையே வரிபினைத்து எழுதப் பெற்றுள்ளன
6. [ரு]
7. [யி]
8. "மணிகர்ணிகா" என்பதன் தமிழ் வடிவம்: இது கங்கையில் நீராடுந்துறை; காசியில் உள்ளது
9. வலி மிகவில்லை

245. வண்டிறைக்குங் கொன்றைபுனை வள்ளலார் கோயில்வந்து
[1]துண்டி வினையகனைத் தொழுதுதேங் காயுடைத்து
அப்பமொடு முப்பழமும் [2]அடைக்காயுந் தீங்[3]கரும்பும்
செப்ப முடன்படைத்துச் சிறப்பாக வேதொழுது
[4]கால வயிரவனை கைதொழுது கோயில்சுற்றி

250. மாலிலபோ லேயிருக்கும் வன்னப் [5]பிரகாரம்.
அஞ்சிலேயும் வீற்றிருக்கும் [6]ஆவரண தேவதையை
வஞ்ச[7]மன்றி யேபணிந்து வளரும் நந்தி யைத்தொழுது
விசுவநா தர்தனையும் விசாலாட்சி யம்மனையும்
கசிவாக வேதொழுது கைகூப்பித் தெண்டனிட்டு

255. தோத்திரங்கள் செய்து சுகியான தாயரொடு
[8]நேர்த்தியான அர்ச்சனைகள் நிரம்பவே செய்தபின்பு
தாயா ருடன்மீண்டு தல[வி] [9]வாச மாகவேதான்
சேயார் மிருகண்டு சென்றிருந்தான் ஓர்மனையில்.
[10]மற்றநாள் வெய்யோன் வருமுன் னெழுந்திருந்து

260. உற்றசெழுங் கங்கையிலும் உகந்த மணிகருணை
என்றுசொல்லு மாபுனலில் இனிதாய் தலைமுழுகி
வென்றி யுடைய வேதியரு டன்கூடி
தேடக் கிடையா திருக்காசி யெல்லை[11]சுத்தி
[12]மோடி யுடனே முளைத்தசிவ லிங்கமெல்லாம்

265. அன்புடனே கண்டு அருச்சித்துப் பூசைசெய்து
பொன்போல அத்தலத்தில் புனிதமிரு கண்டவனும்
விந்தை யுடனே மிருகண்டு லிங்கமென்று
சிந்தையுட [13]னேர்லிங்கத்தைச் சிறப்பாய்ப் [14]பிரதிட்டைப்பண்ணி

---

1. காசியிலுள்ள விநாயகர் பெயர்
2. வெற்றிலைப் பாக்கு
3. [ன்]
4. காலபைரவர்
5. பிரதட்சணம் வரும் ப்ரகார வினவு
6. சுற்றுப்புறம்
7. இன்றி
8. பிரார்த்தனை செய்துகொண்டது
9. [பா] கேத்திரத்தில் வசித்தல் ஒரு புண்ணியம்
10. அடுத்தநாள் [ஞா]
11. சுற்றி
12. கம்பீரமாய்; வியப்பாய்
13. 'ஓர்' என்பது கூன்போலாம் அல்லது லிங்க நீரையசையாம்
14. ப்ரதிட்டை பண்ணி என ஒலிக்கும்

நல்லதொரு தாய்மார்கள் நால்பேர்க்கும் இங்கிதமாய்
அல்ல லொழியும்படி ஆனசிவ லிங்கமதை
பிரதிட்டை பண்ணிப் பெருமையுடன் சிந்தையுற்று
மருமொய்த்த வில்வமதால் மகிட்சியுடன் பூசைசெய்தார்.
தாய்மா ருடன்இவனும் தனியஞ்சு லிங்கமதை
நேயமுடன் நாள்தோறும் நிரம்ப மனப்பிடிப்பாய்
ஒருவருஷ காலம் உற்றகா சி-தனிலே
வரிசையுடன் லிங்கமதை மகிட்சியுடன் பூசைசெய்தார்,
இப்படியே பூசை யினியமிரு கண்டுவென்பான்
செப்பமுடன் செய்து[1]வரில் சிறப்பா யொருநாளில்
பாங்கா யெழுந்திருந்து பயின்றதொரு தாயைதொடு
ஆங்கே மிருகண்டு அழகு மணிகருணை
தன்னிலே நீராடித் தர்ப்பணஞ்செய் தன்புடனே
வன்னமுடன் பூசைபண்ணி மத்தியா ன-வேளை
வேதன்மால் காணுத விசுவநா தர்-கோயில்
போதமுள்ள [2]தாய்மாரொடு போற்றி வலமாக
வந்தார்கள்; அப்போது மத்தியான லெய்யிலால்
கொந்தார் கமலமுக கோதையர்கள் நால்பேரும்
வெயிலால் முகம்வாடி மெத்த மயக்கமதாய்
அயிலேசர் சன்னதிமுன் அசந்து விழுந்தனரே.
விழுந்தமட வாருயிர்கள் மெய்யைவிட்டு நீங்குமுன்னம்
குளிர்ந்த மதிச்சடையான், [3]குணங்கிவிழுந் தார்சிரசை
எடுத்து, மடியில்வைத்து யினிய வலச்செவியில்
வடிப்ப முடனே வளர்தார கப்பிரமம்
என்றுசொல்லு [4]மந்திரத்தை [5]இனிப்பவள வாய்திறந்து
குன்றைச் சிலைவளைத்தோன் கூறினன் மன்னவனே! 291.

பதினேழும் அத்தியாயம் முற்றும்.

---

1. வருகையில்
2. 'தாய்' கன்போலாம்: மா'குறி ஒலிக்கும் எனலாம்
3. குணகி-சோர்ந்து.
4. ஓங்காரம்
5. இனிய

பதினேழாம் அத்தியாயம்

மார்க்கண்டு கதை

விருத்தம்(1)

ஆங்க[ண்]^{1}ணிறந் திடுநால்வரை யறிவுற்றிடு மைந்தன்
தாங்கி^{2}யெடுத் தீயின்முழில் தனிநீதியின் முடித்தே
பாங்காயொரு குமரன்தனை(ப்) ^{3}பயந்தேயவன் தன்னுல்
தீங்கொன்றிய காலன்றனைச் செயி^{4}த்தானென வுரைத்தார்^{5}

நடை

5. என்று வதிட்டன் இனிய திலீபனுக்கு
நன்றியுடன் சொல்லி ^{6}நவிலுவான் பின்னுலும்
இப்படியே கண்மூடி இறந்ததொரு மாதர்தனை
செப்ப முடன்எடுத்துச் செய்யுந் தொழில்முறையாய்
தூய மறையவர்கள் சூழ்^{7}இடு காடுபு^{8}க்கி

10. தாயரெனும் நால்வருக்கும் தழல்மாலை தான்சா^{9}த்தி
செய்ய புனல்மூழ்கிச் சீரான நால்வருக்கும்
துய்யமறை சொன்னபடி சூ^{10}தகமுந் தான்கழித்து
வேதியர்க்குண் டானபடி மிக்க தொருகருமம்
ஆதரவா க-முடித்து அழகுமிரு கண்டவனும்

15. ^{11}மைந்தனென் றைப்பெற்று மைந்தனு லேகொடிய
அந்தகனைக் கொன்றுனென் றழகு திலீபதிக்கு
வன்னத் தவவதிட்டன் வரிசையுட னேகூற

---

1. [ளிர]
2. எடுத்துத்தீ என்பது எடுத்தீஎன நீற்கி றது
3. பெற்று
4. [ற்ரு]
5. 3 தானத்தன-தான-என்ற சந்தம் 3 மாங்கனி + 1 மா என்ற தாற்சீர்க் கலிவிருத்தம்; அடிக்கு 16 எழுத்து
6. மோனைக்காக வரும் சொல்; சொல்லின் பொருள் நயம் காட்டும் நுட்ப வேற் றுமை மறைதல் காண்க எதிர்காலம் பின் கூறப்பெறுவதனைச் சுட்டுவதாம்
7. [யி]
8. புக்கு
9. [ற்றி]
10. உற்றார் இறந்ததால் வரும் தீட்டு
11. மைந்தன் ஒன்று என்ற வழக்கினைக் காண்க; மைந்தன் குழவிபோலவாம்

மன்னவனுங் கேட்டு வதிட்டர் தனைவணங்கி
'வேதமெல்லாங் கற்ற மிருகண்டு பெற்றபிள்ளை
கோதில்லாக் காலனைத்தான் கொன்றுன்கா ணென்றீரே!
எந்தவித மிக்கதையை யென்குருவே! என்[1]தனுக்கு
விந்தையுடன் சொல்லு'மென்று வேந்தன் மிகக்கூற
ஞான வதிட்டர் நட்புடனே தான்கேட்டு
[2]மானபர னுன்தொரு மன்னனுக்கே சொல்லிடுவான்.
'வாரசய்! திலீபதிகேள்! வளருமிரு கண்டவனும்
சீரான தாய்மார்க்குச் செய்யுங் கடன்கழித்து
தன்தேவி தன்னுடனே தழைக்குங்கா சி-நகரில்
பொன்போ லிருந்து புண்ணியதீர்த் த-மாடி
தனக்கொரு பிள்ளை தான் வேணு' மென்றுசொல்லி
மனத்தில் நினைந்து வளரும் பராபரனை
எண்ணி மனத்தில் இனிய கொடுந்தவசு
பண்ணினனன் மாதவசு; [3]பண்ணுங் கொடுமைகண்டு
தானுக நின்றுடுந் தற்பரா னந்தசிவன்
வானோர் புகழும் வன்மிருக சிங்கனுட
மைந்தனென்று சொல்லும் வலியமிரு கண்டுமுன்னே
வந்தவனை நோக்கி 'வாராய்! மிரு கண்டே! நீ
மனத்தி லுரிமையொடு மாதவசு பண்ணுகின்றாய்
உனக்குவேண் டுங்கரும மோ'தென்றார் [4]ஈசுவரனும்
அப்போ மிருகண்டு அரனை யடிதொழுது
'செப்பாருங் கொங்கை தேவி யிடத்தோனே!
அய்யா! சரணம்! அமலா மிகச்சரணம்!
கையாரு மான்மழுவா! காளகண் டாசரணம்!
தழையுஞ் சடாமகுடச் சம்புவே! யானடியேன்
மழைமுகங் காணுமல் வாடும் பசும்பயிர்போல்
பிள்ளை யில்லாமல் பித்தரைப்போ லேனானும்
உள்ள மெலிந்தேன்; உடைந்தேன்; மயங்குகின்றேன்.

---

1. [ந்]
2. தன்மதிப்புள்ளோன்
3. அந்தாதி வாக்யம்
4. சற்பரன் என ஓலீப்பர் [ப]

என்[1]சோ புந்தீர, யேந்தலே! என்தனுக்கு
பொன்போலே பாலன் புண்ணியரே தாரு'மென்று
கனிந்து மிருகண்டு காத லுடன்கேட்க
50. [2]குனிந்த மதிச்சடையான் கூறுவா னேவியமாய்:
'வாராய்மிரு கண்டேநீ மகன்வேண்டும் என்றுசொல்லி
சீராகக் கேட்டாயே! செப்புகிறேம் உ[3]ன்தனுக்கு
[4]நூறு வயதுடனே லோகமெல்லாந் தானிகழ
ஓ[5]றுங் குணமுந் தீய [6]மடைத்தொழிலும்
55. போதவே செய்து பொல்லாதா னென்றுசொல்லும்
பேதமை யான பிள்ளே தா[7]னும் வேணுமதோ?
நல்ல குணமும் [8]நலந்தசிவ பூசையின்மேல்
சொல்லுங் கருத்தும் [9]தேசிகமும் நான்மறையும்
அன்புடனே கற்றவனுய் அழகு[10]பதி னுர்வயதில்
60. பொன்போல் மேனியுள்ள புதல்வன்தான் வேணுமோ? சொல்'
என்று பரமசிவன் இன்பமுட னேகேட்க
நன்றி யுடைய நல்லமிரு கண்டுசொல்வான்:

விருத்தம்(2)

'புன்மை மகவை யான்வேண்டேன்
பொருந்தும் வயது குறைந்தாலும்
நன்மை பயக்கும் நல்லுணர்வும்
நன்னீ தியினுல் நிலம்புகழும்
65. தன்மை பயக்க ஒருமகவைத்
தரவே வேண்டு மருளென்னத்
தொன்மை மறையோ னறைந்திடலும்
தோகை பாகன் அருள்செய்வான்[11]

---

1. கேஷ
2. வணந்த
3. [த்]
4. த-ல மோனே
5. [ரு]
6. அறியாமையான
7. இழிவு சிறப்பும்மை
8. 'நலந்த' என்ற வழக்கு; நலமான; நயந்த; நலம் என்பதன் அடியாகப் பிறந்த வினை; திருவாசகம்போலப் பழையது
9. தேசமொழி நூல்கள்; தேவாரம்போன்ற வற்றிற்கு இடம்
10. பதினறு
11. "மா-மா-காய்" இரட்டித்துவரும் அறுசீர் விருத்தம்

நடை

பொல்லாத பிள்ளை, புண்ணியரே! நான்வேண்டேன்.
வல்லாள னெனபிள்ளை வயது குறைந்தாலும்,
புத்தியொடு வித்தை[1][ப்] பொருந்துகினற சாத்திரமும்
சத்தியமுந் தப்பானுய் சதுர்வேத வல்லவனுய்
[2]தாரும்' எனக் [3]கெஞ்சித் தாளில் மிகப்பணிய
சிருலவுங் கொன்றைச் சிவனர் மிகக்[4]கூர்வார்:—
'அப்படியே உ[5]ன் தனுக்கு அரியபதி னர்வய[6]தில்
செப்பமுள்ள வேதமெல்லாந் திறமாகக் கற்றறிந்து
பாலன்நாம் தந்தோ'மென்று பரம சிவன்மொழிந்து
வாலமதிச் செஞ்சடையான் மறைந்து மிகப்போனன்.
ஈசன் மறைய [7]இனியமிரு கண்டுவென்பான்
வாசமுட னேதான் வரம்பெற் றினிதாக
தன்மனை யில்வந்து தன்தேவி தன்னுடனே
கள்மை யுடன்கூடி நட்பாக் வர்ழ்ந்திருந்தான்.
இப்படிவாழ் நாளையிலே யீசன் திருவினுல்
செப்ப முடனே தேவி [8]மருத்துதிதான்
திங்கள் [9]நம்போல் [10]சிறந்த முகம்[11]வெளுறி[12]
கொங்கை முனைகறுத்துக் கொடிபோல் இடைதுவள
மன்னும் பசுநரம்பு வாகாக வேதுலங்க[13]
அன்ன நடையாள் அழகுகெற்பம் ஆகினளே.
மங்கை [14]சூலாக வரிசைமிரு கண்டவனும்
அங்கேகி மந்தம் அழகுடனே தான்முடித்து,
பரிவாக வாழ்நாளில் பத்துமா தம்நிறைந்து

---

1. இரண்டாம் வேற்றுமை யுருபாம் ஐமுன் வலி மிகுதலின் அந்த ஐ னை மயங்கீப் பிற ஐ முன்னும் வலிமிகுத்தெழுதப் பெறுகிறது
2. ஒப்போன் இரப்புரை என்ற வேற்றுமையைப்பார்க்கவில்லை; 'சயும்'
3. இனிமையாக இரங்கி
4. கூறுவார் என்பதன் உச்சரிப்பு; நு-ர்
5. [ந்]
6. தி, சி
7. [யி]
8. [மருந்ததி]
9. [ர]
10. கெ-9
11. வெளிறி-னி-ஞ மாருட்டம்
12. [ரி]
13. கருவுற்ற குறிகள்
14. கர்ப்பமாக

அரிய நவக்கிரகம் அஞ்சு[1]முச்ச மாயிருக்க
[2]பொன்[3]கேந் திரத்திருக்கப் புனிதநல்ல வேளையிலே
மின்போ லிடையாள் விளங்குஞ்ச தைய[4]நாளில்
பொன்னுலகோர் கொண்டாடப் புகல்நான் மறைதழைய
[5]வன்ன மணிபோல மைந்தனையு மீன்றெடுத்தாள்.
மைந்தன் பிறந்த வார்த்தை தனைக்கேட்டு
வித்தையுள்ள வேதியரும், மிக்க பெரியவரும்,
ஞான முனிவர்களும், நல்ல தபோதனரும்,
வானவரும் வந்து மகிழ்ந்தாச் சரியமுற்றார்.
அப்பொழுதி லேவியாசன் ஆனகெணி தம்பார்த்து
செப்பமுள்ள பாலனுக்குச் சிறப்பாக சாதகமும்
வித்தை யுடனெழுதி வேதத்தில் ஆராய்ந்து
மைந்தன் தனக்கு மார்க்கண்டன் என்றுசொல்லி
பேரு மிகக்கூறி பேர்பெரிய மாமுனிவன்
சீருட னே[6]வாழ்த்தி சென்று ரவர்பதிக்கே
போயினர். அன்புடனே புதல்வன் தனையின்றோர்
நேய முடனே நிரம்ப மனம்மகிழ்ந்து
பாலன் தனைப்போற்றிப் பரிவாக வேவளர்க்க,
சீலமுள்ள பாலன் சிறப்பாய் மிகவளர்ந்தான்.
பிள்ளைமதி போல்யிந்தப் பிள்ளை வளருவதை
கொள்ளும்புகழ் நாட்டோருஞ் சிறந்த முனிவர்களும்
இன்பமுட னேபார்த்து 'இவர்செய்த புண்ணியத்தால்
அன்புடனே யீசன் அவதரித்தான் பிள்ளையென'
என்று மகிழ்வார் இக்குழந்தை யைப்பார்த்து
'[7]நன்றி இவனழகும் நல்ல முகத்தெளிவும்
பார்க்கத் [8]திகட்டாது பாலன் வடி'வெனவே

1. [மி] உ, இ
2. குரு
3. [சே] கேந்திரம் இலக்கினத்தி லிருந்து 1-4-7-10 ஆம் இடங்கள்
4. நட்சத்திரம்
5. [வண்ணை]
6. வாழ்த்திச் சென்றார் ஒரு மொழியாம்; செல் தனினின்; முழுதும்முடிந்த தனைக் காட்டும்; செல் என்ற பொருள் இல்லை; பின் போயினர் என வருதல் காண்க
7. நல்ல
8. தெவிட்டாது எவ்பதன் உச்சரிப்பு இ, எ; வ், க; வ என தெகிழ்வதனைத் தீருத்தமாகப் பேசமுயல்வோர் இயல்பான வகரத்தினையும் க எனத் தீருத்துவதல் பயன் இது.

[1]சேர்க்கை யுடன்கூடி சிங்கார மாய்ப்பார்ப்பார்
இப்படியே யாவர்களும் இங்கிதமா கப்பார்க்க
செப்பமுட னேவளருஞ் சீரான மைந்தனுக்கு
மாதந்தோ றுஞ்சட்ங்கு வரிசை யுடன்முடித்து
போதமுடன் பிள்ளைதனைப் போற்றி மிகவளர்த்து
வடிவுடைய வேதம் [2]வழுத்தும் படிக்கேதான்
[3]குடுமிக் கயலியாணம் கோலமுட னேமுடித்து
உபநயனம் பண்ணி [4]ஒழுங்காவே [5]நூல்சாற்றி
[6]அபமில்லா வேதமொடு அழகான சா[7]த்திரமும்
வசையறவே வோதிவைத்து மார்க்கண்ட னென்றுசொல்லி
இசையவே தான்வளர்த்து [8]இருந்தார் மகிழ்ந்தாரே.
இப்படியே தாய்தகப்பன் [9]இன்பமுட னேவளர்த்து
செப்பமுள்ள வேதமெல்லாந் தீர்க்கமுடன் கற்றறிந்து
கல்விக் குரியவனுய்க் கண்டோர் மகிட்சியுற
செல்வக் குமாரனுந்தான் சிறப்பாய் வளர்நாளில்,
அரிய பரமசிவன் அன்றுசொன்ன சொற்படியே
பரிவான பாலகனும் [10]பதினுர் வயசானன்.
மைந்தன் தனக்கு வயது[11]பதி னுருக
அந்தமுள்ள தாய்தகப்பன் அழகுமக னேப்பார்த்து
சோம்புவார் கண்ணீர்தான் சோருவார் ; மூச்சுவிட்டு
[12]தேம்புவார் அய்யோ ! வென்பார் : [13]தேமுவார் நொந்திடுவார் ;
இப்படியே தாய்தகப்பன் இனியமக னேப்பார்த்து
வெப்பம் பெரிதாய் விசாரத் துட னிருக்க
மார்க்கண்டன் கண்டு மாதா பிதாவடியை
பூக்கொண்டு போற்றிப் புகலுவா னன்புடனே.

---

1. கூட்டுறவானவர்
2. ஓதும்
3. சௌளம்
4. ஒழுங்காகவே; இரண்டு வடிவமும் வரும்
5. பூனூல்
6. அவம்; வின்; வ-ப
7. [ஸ்த்]
8. [யி]
9. ஷ-8
10. பதினறு
11. பதினறு என்ற வடிவம் சரு கெடும் போது தோன்றுகிறது
12. விம்மியழுவார்
13. மெலிவார்; பின்எழுந்த வேறுபாடு; ஒரே வடிவான சொற்கள் இரு பொருள் தரும்போது பொருளுக்கேற்ப அவற்றின் வடிவினையும் வேறுபடுத்தும் இயற்கை நெறியைக் காண்க

'அன்னையரே! நீங்கள் அடியேனைக் கண்டுகண்டு
வன்ன மலர்க்கண்ணீர்ம[1]றுகி யழுவதென்ன?
சொல்லு வீ'ரென்று தூயபுதல் வன்கேட்க,
நல்லமக னைப்பார்த்து நற்பாகச் சொல்லிடுவான்:

145. 'வாராய்! மார்க் கண்டே! மைந்தனில்லா மல்நாங்கள்
சீராய் மதிசேரும் சிவனை மிகப்போற்றி
செய்ய தவசு செய்யும்போ துமகனே
அய்யனெனும் [2]ஈசன் அதிக கிருபைவைத்து
பரிவா யுனக்குப் பதினை[3]று வயதிலேதான்

150. அரிதாக [4]வார்புதல்வன் அன்புடனே தந்தோம்'என்று
நன்னய மாய்ச்சொன்னர்; நாதனர் சொல்[4]படியே
உன்னையே பெற்றெடுத்தோம். உனக்கு வயதும்இப்போ
ஈசன்அன்று சொன்னபடி இப்போ[5] வயதுஅய்யோ
பேசும் [6]பதினை[7]பெற்றிர்இனிக் காலனுந்தான்

155. வந்திடுவான் அய்யோ வருங்கால னுக்குவகை
எந்த விதமென்று எண்ணி மனம்இடைந்து
வாடினும் அப்பா! மகனே! உனைநாங்கள்
தேடாரி தே'என்று செப்பினர் விம்மலுடன்.
தாய்தகப்பன் சொல்லத் தழைக்குமார்க் கண்டனவன்

160. நேயமுட னேகேட்டு நெடுமூச்சு தானெ[8]றிந்து
தந்தைதாய் தன்னைத் தான்நோக்கி யேபாலன்
விந்தை யுடன்பார்த்து விளம்புவான் ஓவியமாய்:
'என்னிலை நீங்கள் இருபேரும் தான்மயங்கி
பொன்னென நெஞ்சும்அய்யோ! புண்ணாக வேவேண்டாம்.

165. ஆலகா ல-விசத்தை அன்றுதே வர்க்காக
[9]சாலமென வுண்ட சம்புசிவ சங்கரற்கு

---

1. [ரு]
2. [யி]
3. று ஒலியாமையால் நேர்நேர்; பின் நிரை வரும்
4. தீரிபு இல்லை
5. 'இப்போ' தீரும்பத் தீரும்பச் சொல்லுதல் மனத் தடுமாற்றம்
6. பதினை என்ற வடிவமும் வருகிறது
7. 'பெற்றீரினி'என்பது சீருக்காக இவ்வாறு ஒலிக்கும் நீ-பெற்றீர் என முடிதல் காண்க. அவற்றின் சிறப்பினை எழுத்துப் பன்மையில் முடித்தபடி
8. [தி]
9. வியப்பு

[1]அடுமையெனப் பூண்டு அரியசிவ பூசைபண்ணி
கொடுமை யுடன்என்னைக் கொல்லவரும் காலனையும்
கொன்றுதா னிந்த குவலயம்எல் லாம்மகிழ
என்றுஞ்சா காதவரம் எம்பிரான் தன்அருளால்
பெற்று வருவேன். பெருங்கவலை யைநீங்கள்
அற்றுவிடு வீர்'என்று அரும்பா லகன்கூற
தன்பிள்ளை சொன்னமொழி தாய்தகப்பன் தான்கேட்டு
பொன்போல் மனது பூரித்துச் சொல்லிடுவான்.[2]
'சொல்லும் முற்காலம் சுவேதகேது என்றொருவன்
கொல்லும் நமன்வீசும் கொடியபா சத்தாலே
கட்டுண்டு மெத்தக் கலக்க முறும்போது
மட்டுண்ட கூந்தல் [3]வல்லிபங்க ளைசிவன்
அன்று அருள்செய்தான் ; அவனைக்காப் பா[4]ற்றிநின்றான்
நன்றியுள்ள பிள்ளாய்! நன்றுக இன்னமுங்கேள் !
அட்ட திசைபுகழும் அரிக[5]சலா தன்பால'ன்
எட்டு வயசுடனே இருக்கின்ற நாளையிலே
காலனுன ஏமன் கனத்தெழுந்து வெம்பாசம்
மேல்எறிந்து முன்நாள் வெகுண்டு பிடிக்கும்நாளில்
'பாதி மதிதனையே பவளச் சடையில்வைத்து[6]
ஆதி சிவனுக்கு அபய'மென்றான் அப்போது
அந்தகனை நீக்கி அரியசலா தலமகனை
நந்தியென்று பேரும் இட்டு நாட்டமுடன் முன்னுக
வைத்துஅவனைக் காத்தார் வருகாள மாவிசத்தை
புத்தியுள்ள விண்ணவர்க்காய்ப் பொங்கமுடன் வாரியுண்டார்.
சலந்தரன் என்றுஒருவன் தழைக்கும் கொடுமையுடன்
குலம்கெடுத்து [7]மய்யோ கூற்றனைப்போ லேவாழ்ந்தான்.
வல்ல மையாக வாழும் சலந்தரனை
கொல்லவே வேண்டிக் [8]குலுங்கமணித் தண்டைஇட்ட

---

1. அடிமை; தொகை நோக்குக; உச்சரிப்பு
2. தாயோடு தகப்பன்என முடிவு கொள்க
3. கொடி போன்ற உமையைக் கூருக உடையவன்
4. [டி] காப்பாடி என்ற பேச்சு வழக் குண்டு; ற, ட
5. சிலாதன்
6. வைத்த-அகரவீறு உகர வீறுய் வருவது இந்நூல் வழக்கு
7. [வ]
8. குலுங்கி ஒலிக்க

195. காலின் பெருவிரலால் காசினியில் வட்டமென
கோல முடன்கீறிக் கொன்ருன் [1]அதனுலே.
விலேயில்லாப் பொன்[2]மேரை வில்லாக வேவளைத்து
வலியதொரு வாசுகியை வரிசைநா ணுய்ப்பூட்டி
அரிய திருமாலே அங்கணையா கப்பூட்டி
200. திரிபுரத்தை முன்னுளில் தீயாய் எரித்துவிட்டார்.
ஆராலும் வெல்லரிய அந்தச்சூ ர-னைமுன்னுள்
சீராடும் போர்முகத்தில் திரிசூலத் தால்அவன்தன்
மார்பு தனில்குத்தி மண்ணிலேபோ டாதபடி
வீரமுட னேஅவன்ஊ[3]ன் மிகவடிய மட்டுமய்யா
205. சூலத்தா லேயேந்தித் துடியான வன்மடிய
[4]சாலத்தால் ஈசுபரனும் தான்நின்ருன் [5]காரணமாய்.
நீண்ட அரவத்தை நெடுமார்பி லேபூண்டு
தாண்டவமா கச்சுடலே தன்னிலே ஆடிநின்ருன்.
மனங்கொண்டு வந்துபொரும் மன்மதனைத் தான் எரித்து
210. அனங்கன்என்று பேருமிட்டான். அழகு குபேரனேயும்
அன்பான தோழன்என்று [6]அல்லோருந் தான்மகிழ
பொன்போல பாக்கியத்தைப் பூராய மாய்க்கொடுத்தான்.
வேதமுடி யில்இருந்தான்; மின்னிடையாள் தன்னுடனே
போதமுடன் மன்றுதனில் புனிதமுடன் ஆடிநின்ருன்;
215. இந்தவித மாகவேதான் எங்கும்பல காரணமாய்
விந்தையுடன் நின்று விளையாடும் காட்சி[7]களைப்
பொடியான வெண்சாம்பல் பொலியுஞ் சுடுகாடு
குடியாக வேஇருந்து கோலமென வாழ்பவனே
பொற்பினிய [8]தாரகாவனம் பொலியும்ரி[9]சி பத்தினிகள்
220. கற்பை அழித்தவனைக் காணேண்ணுக் காரணனே.[10]

---

1. [அதனுலே]
2. மேருவை; மேரு மேர் என வழங்கல் காண்க
3. [ன்] இரத்தம் வடிய
4. ஜாலம்; மாயை
5. உபாயமாய்; மூலமாய்
6. எல்லோரும் என்பதின் தீர்பு அல்லது பகைவரும் என்ற பொருளாம்
7. [ய] காட்சியனே என்ருெலிப்பர்போலும் க, ய
8. "வனம்" கூன்போலாம் தார்க வனம் என்ற உச்சரிப்புமாம்
9. ஷி
10. 2ஆம் வேற்றுமை அடுக்கு

பரம சிவனே பரிவாக வேவணங்கி
அரியசிவ பூசைபண்ணி அர்ச்சித்து, எ[1]ந்நாளும்
சாகாம லேபுவியில் தானிருக்க வே,மகனே!
வாகாக வேவரந்தான் வரிசையுட னேவாங்கி

225. வாரும்பிள் ளாய்!'எனவே மாதகப்பன் தானுரைக்க
சீருள்ள மார்க்கண்டன் சிந்தை மிகமகிழ்ந்து
தகப்பன் அடிதொழுது தாயார் விடைவாங்கி
மகத்துவமாய் [2]ஈசுவரனே வாகுடனே பூசைபண்ணி
அன்பாய் மனதில்எண்ணி அழகு[3] குறுமுனிவாழ்

230. பொன்போல் ஒளிரும் பொதியமலைச் சார்பில்வந்து
ஆர்க்குங் கடலின் அலைவாய்க் கரையோரம்
மார்க்கண்ட லிங்கமென்று மணலினால் லிங்கம்ஒன்று
அங்கையால் உண்டுபண்ணி அழகு மலர்எடுத்து
பொங்கமுடன் சாத்திப் பூசித்தான் பாலகனும்.

235. இப்படியே பாலன் இனிமூன்று வேளையிலும்
செப்ப முடன்மூழ்கிச் சிறந்த மலர்எடுத்து
உள்ளன்பி னேடும் உகந்து ஒருபிடிப்பாய்
வெள்ளைச் சடையானே விரும்பியே பூசைசெய்து
இப்படிமார்க் கண்டன் இருந்துசிவ பூசைபண்ண

240. முப்புரத்தை வென்ற முதல்வன் மனதுகந்து
பாலன்மேல் அன்புவைத்துப் பண்ணும்பூ சைக்கிறங்கி
கோலமுள்ள ஈசுவரனும் குடியிருந்தான் லிங்கமதில்.
இந்தவண்ண மாக இவன்இருந்து பூசைசெய்ய
அந்தகனும் அப்போ தகோரம் எனச்சீறி

245. [4]கடவாயின் பல்விளங்கக் கரிய கருமலைபோல்
வடவாக் கினியெனவே மண்டியகண் தீப்போல
இருண்ட மலைபோல இருதோளும் தான்துலங்க
உருண்டவட்டக் கண்காந்த உத்தண்ட கோரமென
ஏமதண்டம் தான்எடுத்து இனியபா சம்எடுத்து

---

1. [ன்னு]
2. 'ஸ்பரனே' என ஒலிக்கும்
3. [குரு] அகத்தியர்
4. கடை

250. பூமண் டலம்நடுங்கப் பொல்லா [1]மிருத்துவுடன்
வெட்டுங் கருங்கிடாமேல் வீறுடனே தாணேறி
அட்ட திசைகடுங்க அடங்காத மாகாலன்
மார்க்கண் டனைப்பிடிக்க மனதில் அவன்நினைந்து
ஆக்கிர முடனே அடங்காச் சினத்துடனே
255. விந்தையுட னேபூசை மிகச்செய்யும் பாலனிடம்
வந்துநின்று காலன் மாபாசம் தான்எடுத்து
சிவபூசை பண்ணுகின்ற சிறியோன் கழுத்தில்இட்டு
பவமான ஏமன் பதறவே தான்இழுத்தான்[2].
அப்போது மார்க்கண்டன் அகோர நமன்முகத்தைத
260. செப்ப முடன்பார்த்துத் திருவாய் மலர்ந்துரைப்பான்:
'வா[3]ராயடா! [4]ஏமா! மலர்எடுத்து மாசிவனை
பூ[4a]ராய மாகவேநான் போற்றியே பூசை[5]செய்யில்
கொடிதாய் எனைநெருங்கிக் கொடியகா ல-பாசம்
இடநீதி யோ?கெடுவாய்! [6]எமனே!நான் சொல்கிறேன்கேள்!

விருத்தம்(3)

265. அந்தமில் லானை ஆதியில் லானை அடியார்தம்
பந்தனை நீக்கிப் பாசம றுக்கும் பழையோனை
வந்தனை செய்து பூசைபு ரிந்தேன் வாயார
எந்தன்பி ராணை யே[7]த்திடுங் காலும் இடைநிற்பாய்! [8]

நடை

ஆதியந்தம் இல்லானை அடியார்கள் துன்பவினை
270. போத முடன்அறுக்கும் புண்ணிய னைப்போற்றி
வந்தனையாய்ப் பூசைபண்ணி மலர்சாத்தி [9]மூயமட்டும்

---

1. மிருத்து என்ற துணையான்
2. [ல்] ல, ள;
3. [ரு]
4. [யே]
4a. ஷெ-3
5. செய்கையில்
6. [யெ]
7. [த்றி], க ழ
8. வினை-மரை-வினைமரை மாங்காய் எவ 5 சீர் வரும் கலித்துறை; முதல் தனையும் மூவிருந் தனையும் வெண்டளையாய் வரும்
9. முடியுமட்டும்; 'உ' அ என ஒலித்தல் காண்க; நீரம்புதல் எனவரல் பதிற்றுப் பத்து வழக்கு

எந்த னிடத்தில் எமனேநீ வாராதே!
பக்கத்தில் நில்'லெனவே பாங்கான பாலனவன்
[1]சிக்கென வேபின்னும் செப்புவான் வாய்திறந்து:
'வாரா யடா!எமனே! வாகாக மூ[2]வேளையும்
சீராகவே தீர்த்தம் சிறப்புடனே தான்ஆடி
உள்[3]அன்பி னோடு உகந்து மலர்எடுத்து
கள்ளணி கொன்[4]றைக் கடவுளா ரைநினைந்து
பாங்குட னேபூசை பண்ணும லோனும்[5],
திங்குடனே மாபாவம் செய்து உலகுதனில்
அடுத்தோரைக் காய்ந்து அன்னம் பசித்[6]தவர்க்குக்
கொடுத்துஉண்ண மல்சோறு கும்பி மிகபரக்க
தின்று கொடுமையுடன் தீய பலகருமம்
நன்றிகெடச் செய்யும் நலமில்லாப் பாவிகள்போல்,
எண்ணி னினையாதே என்னிடத்தில் வாராதே!
முன்னவனைப் போற்றி முடிக்கிறேன் பூசைகண்டாய்!
இந்தப் புவியில் இருக்கின்ற பேர்கள்எல்லாம்
விந்தையுடன் பெண்ணைசை மிக்கபொருள் மேலாசை
மண்[7]ஆசை யோடு மகிழ்ச்சியுடன் பெற்றெடுத்த
கண்ணன சேயாசை, [8]கருமம்எனும் மும்மலத்தை
தானே சுமந்து [9]சளப்படும்இக் காயமதை
[10]ஆன நிலைமைஎன அலங்காரம் செய்யாசை
தள்ளினேன். பார்ராய்! [11]சவடிங்கு] வைக்கவில்லை.
வெள்ளி மலைபோல் விளங்கும் பராபரனை
சிந்தையில் வைத்துத் தினமும்சிவ பூசைபண்ண

---

1. உறுதியாக
2. வே குறுகி ஒலிக்கும்போலும்
3. பிரித்து எழுதப்பெறுதல் காண்க
4. றை அ.ஐ
5. வாக்ய முடிபு மாறுகிறது
6. [ர்க்]
7. பிரித்து எழுதப்பெறுகிறது
8. ஆசை பிறப்பதற்குக் காரணமான கருமம்; கருமம் இங்கு ஆணவம் மாயை என்பவற்றிற்கும் உபலக்கணமாம் அதனாலேயே கருமம்மெனும் மும்மலம் என்பர். ஆசை என்பதனைக் கருமமுடன் கூட்டாது 292 ஆம் வரியில் செய்யாசை என்பதோடு கூட்டலாம்
9. நுன்பப்படும்
10. நீலியானது, வெண்கோவணம்இல்லாத வல்என்பது இலாத வெள்கோவணத்தான்என வருவது போன்ற வடநூல் வழக்கு; இந்நூலில் பயின்று வரும்
11. கவை

எந்தனுக்கு ஆசை இருக்கு தடா! எமனே!
நாடியே என்பால் நணுகிநீ வந்தாலே
கேடு வருங்காண் கிட்டாதே போ'[1]எனவே
மார்க்கண்டன் சொல்ல மாமறலி தான்கேட்டு
ஆர்க்கமுடன் சீறி அகோரம்எனப் பல்கடித்து
கடகடெ னச்சிரித்துக் கடைக்கண் நெருப்பெரிய
விடலை தனைப்பார்த்து விளம்புவான் கோபமுடன்.
'வாடா! அடா[2]மோடா! [3]வயணம் தெரியாமல்
[4]பாடாக மெத்தப் படித்தவன்போல் சொன்னயே!
ஆங்காலம் எல்லாம் அரும்பூசை பண்ணுமல்
சாங்காலத் தில்பூசை தான்முடித்தாய்! புத்தியில்லாய்!
செப்பமுடன் இப்போ சிவனைப்பூ சிப்பதுநீ
[5]எப்படி என்முல் இயம்புகிறேன். நீகேள்மோ!
காலாகா லத்தில் கருதுகின்ற மாபொருளை
மேலாம் பரமாக விந்தையுட னேதேடி
பேணிநீ வையாமல் பெருமையுடன் [6]ராக்காலம்
வேணவே தேடும் விதம்போல தானுச்சே!
அப்படி போல அரியசிவ பூசை[7]புண்ணியம்
செப்ப முடன்நாளும் செய்து முடியாமல்
இப்போது சிவன் இறந்துவிடுங் காலமதில்
தப்பாமல் பூசைபண்ணி தான்இருந்தாய்! எந்தவிதம்!
இன்னமும் உனக்கு இயம்புகிறேன். இப்போது
வன்னமுடன் பூசைபண்ணும் மதியைநீ தான்கேளாய்!
நாய்கடிக்கும் முன்னே நற்கம்பு தான்தேடி
நீஎடுத்து நின்முல் நின்னை நாய் தீண்டாது.
சீறி[8]யே நாய்தான் சினந்துகடிக் கும்போது
வீ[9]றுடன் கம்பின்றி வெ[10]றுங்கையை நீஓட்டி-

---

1. [யெ]
2. மூட
3. நீலமை; விவரம்
4. பெருமையாக; வருத்தப்பட்டு
5. எப்படி என்முல் சொல்லுகிறேன் என்பது பேச்சுநடை
6. இரா
7. 'புண்யம்' என ஒலிக்கும்
8. [ரீ]
9. [ரு]
10. [ரு]

தள்ளி னுல்போமோ? [1]சத்துமதி கெட்டவனே!
உள்ளது நான்சொன்னேன் ஓவியமாய். இன்னமுங்கேள்!

325. வெல்லும் செயகாலம் மிகவே வருநாளில்
கொல்லும்வேல் கொண்டு குலுக்கி எறிந்தாலும்
தையாது கண்டாய்; தைத்தாலும் புல்லாகும்;
மெய்யாகச் சாக்காலம் மிகவே வருங்காலில்
புல்கொண்டு மெல்லப் போத வெறிந்தாலும்

330. சொல்லுவதென்? வாள்போல் துணித்து விடும்[2]பாராய்!
ஆனதி னுலே, அறிவில்லா மா[3]மோடா!
ஞானம்என்ன? பூசைஎன்ன? நான்சொல்ல, இன்னமுந்தான்
வன்னமுட னேகேளும்! வாகான லோகமெல்லாம்
பொன்[4]னங் குடை[5]கீழ்ப் போதவே ஆளுகின்ற

335. வண்ணமுள்ள ராசாக்கள் வாகுடைய தேவர்முதல்
விண்ணரசன், பாற்கடலில் மிகவே உறங்குகின்ற,
ஆதி நெடுமாலும் [6]அகண்ட பகிரண்டமெல்லாம்
போத முடன்சமைக்கும் பூமேல்அயன் தன்னுடனே
மற்றுமுள் ளோரும் வளர்[7]திசையில் உள்ளவரும்[8]

340. [9]பற்றுஇல்லா ஞானிகளும் பாலனே என்னுடைய
பாசக் கயிறில் பட்டுமுன்று போவரல்லால்
நேச முடனே நெடியபா சந்தனிலே
இக்காத பேர்களுண்டோ? சீசீ!நீ என்னசொன்னாய்?
[10]பக்காகவே முழித்துப் [11]பசப்பிமெத்தச் சொன்னலும்

345. உன்னை விடுவேனே உன்உயிரைத் தான்பிடித்து
நன்னய மாக நான்கொண்டு போவேனென்று
காலன் மிகக்கூறக் கடும்பூசை பண்ணுகின்ற
பாலன் மிகக்கேட்டுப் 'பரமனே தஞ்சம்'என்று

---

1. சற்று
2. உவமைகள் காட்டிப் பேசுவது காண்க
3. மூடா இந்நூல் வழக்கு
4. [னு]
5. வலி மிகவில்லை
6. அண்ட அல்லது அகன்ற
7. திக்பாலகர்கள்
8. உம், ஒடு, செவ்வெண்எல்லாம் அடுக்கி வருதல்காண்க
9. [பத்தியில்லை]
10. பக்கு=பக்குவமாக; கவர்படு பொருளாய் வசனநயம்
11. இன்முகம் காட்டி ஏய்த்து

ஆதிலிங் கத்தருகே அடுத்து மிகஇருந்து
[1]கோதமுள்ள காலனையுங் கூறுவான் பாலகனும்:
'ஏனடா! காலா! எவர்கள்தான் என்றாலும்
மானிலகு செங்கை வள்ளல்மேல் அன்புமுற்றி
பூசனை செய்யும் புகழான தொண்டர்தமை
[2]தோசம்என் றெண்ணுமல் துயரம்விளை வித்தவர்கள்
கொடிய நரகக் குழியில் விழுவரென்று
வடிவான வேதம் வழுத்துவது கேட்டிலையோ!
எவர்கள் தனைப்பிடித்து [3]இடுக்கம்நீ செய்தாலும்
சிவன்அடி யாரைத் தீங்குசெய்ய லாகாது.
தீங்குநீ செய்யில் சிவபூசை செய்பவர்க்கு
பாங்குள்ள மா[4]சலுகை பரமசிவன் கண்டாயே.
தேசம்எல்லாம் ஓர்குடையில் சிறப்புடனே ஆளுகின்ற
ராச ருடதூதர் நாடியொர்குற் றம்விளைத்தால்
அக்குற்றம் வேந்தன் அன்பாய்ப் பொ[5]றுப்பதல்லால்
பக்கத் தொருவர் பாங்காய்ப் பொறுப்பார்களோ?
ஆனதால் ஏ!நமனே! அரனுரைப் பூசைசெய்யும்
ஞான மனதுஉடையோர் நற்பெருமை யைக்கேளு!
வண்ணமணி [6]மேரை வாகாக வேபிளக்க
பண்ணுவார்; நீண்ட [7]பார சமுத்திரங்கள்
ஏழையும் ஓர்கையில் ஏந்தி உளுந்தெனவே
தாழ வுருட்டித் தான்உண்டு போடுவர்கள்.
மண்ணை விண்ணுக்கி மலையைத் திரணமாக்கி
விண்ணை மண்ணுக்கி வேதனெடு தெய்வபதி-
ஆளும் அரசனையும் அணுவாகச் செய்திடுவார்.
நாளுஞ் சிவனடியார் நற்பெருமை சொல்லரிது,
கண்டா யடா! எமனே! கருதுகிறேன். நீகேளாய்
வண்டாரும் பூந்துளப மாலையணி மாயவனும்

---

1. க்ரோதம்
2. தோஷம்
3. இடுக்கண்
4. ஆதரவு
5. [ரு]
6. மேருவை
7. பாராவாரம்; கரை; பெருமைஎன்பு பொருளும் தவலிக்கும்

வெள்ளக் கமலமிசை வீற்றிருக்கும் வேதாவும்
தெள்ளுபுகழ் விண்ணவரும் தெய்வேந் திரன்[1]முதலாய்
என்னென்ன குற்றம் இடராகச் செய்தாலும்
வன்ன மதியை [2]வளந்த சடைமீதில்
வடிவுடனே வைத்த வள்ளல் பரமசிவன்
அடியவர்க்குத் துன்பம் அணுகாது, ஒருநாளும்.
நன்னயமாய்ச் சொன்னேன்! நமனே!நீ எண்ணுமல்
சொன்னதெல் லாம்பொறுத்தேன். தூரப்போ நில்லாதே!'
என்று மார்க்கண்டன் இந்தப் படிக்கூற
வென்றியுடன் காலன் மிகச்சீறி யேகேட்டு
அக்கினிபோல் கண்கள் அகோர மெனச்சிவக்க
வக்கிரத்தந் தங்கடித்து [3]வர்மமுட னே[4]கூர்வான்

விருத்தம்(4)

திருவிலி வேதியச் சிறுவன்! கேட்டிஎன்
பெருவலிக் கெதிர்நின்று பேண வல்லவர்
ஒருவரைக் காட்டுதி யுரைத்த ஈசனும்
வெருவர நின்றுயிர் [5]வெருளக் கொல்கிறேன்.[6]

நடை

'சீர்கேடா! சற்றும் திருவில்லா [7]நிர்மோடா!
காரியக் கேடா கருதினுய் தோணுமல்
ஏதும் அறியா இனியசிறு பிள்ளைகண்டாய்!
வாதுஎன்முன் னேகூறி [8]வரம்பழிந்து பேசாதே
சீர்கேடா! என்நடத்தை தெரியாது உ[9]ன்தனுக்கு.
[10]போர்கெட்டாய்! இப்போ பிராணந் தனையிழந்தாய்!
நீயோ எதிராக நின்றுபய மில்லாமல்:

---

1. உம் இன்றி வரல் காண்க
2. வளர்ந்த
3. பகை
4. கூறுவான்
5. [விரள] விரவ என்று மிருக்கலாம்
6. வின வின-மா-வின என நாற்சீர் வரும் கலிவிருத்தம் நீரை முதல் அடிக்கு 13எழுத்து
7. மிக்க மூடா
8. மரியாதை
9. [ந்]
10. பிணம் என்ற பெயராவாய்; முன் பெய ர் கெட்டு

400. பேய்போல பேசுகிறாய். பிடித்திடுவேன் [1]இப்போது.
எந்தலோ கத்தில் இருக்கும்பேர் தன்னுலும்
எந்தனையும் வெல்லவல்லார் இருக்கிறா ரோபாராய்!
வரிசை யுடனே வாகாகப் பூசைபண் ணும்
பரம சிவனும் பயப்படவே உன்உயிரை
405. கொண்டு[2]போ ரேன்'என்று கொடிய மகாகாலன்
அண்டம் நடுங்க அகோரம்எனப் பல்கடித்து
கண்கள் நெருப்பெரியக் கடுமூச்சு தான்எ[3]றிந்து
மண்கள் நடுங்க மணித்தோளைத் தான்புடைத்து
கையை முறுக்கிக் கடியபா சம்எடுத்து
410. செய்ய ராகுகேது திங்கள்தனைப் பாய்ந்ததுபோல்
வேகத் துடனே விடலமே லேநடக்க
பாகொத்த சொல்லான் பயந்து மிகநடுங்க
வீசிஞன் பாசம் வெங்கொடிய மாகாலன்
பாசக் கயறு பரமன்மே லும்பூசை
415. பண்ணுவோன் மேலும் பரிவாக வே[4]விழுக
வண்ண முடைய மார்க்கண்ட[5]ன் தான்பயந்து
திட்ட முடைய சிவலிங்கத் தைத்[6]தாவி
கட்டிப் பிடித்துக் 'கடவுளே தஞ்சம்'என்றான்.
அப்போது காலன் அரியபா சம்வீசி
420. வெப்பமுடன் இழுக்க விடலமனம் அஞ்சிநிற்க,
கண்டானே ஈசன்! கருத்தில் மகாகோபம்
கொண்டானே! மின்னல் கொடிவீசி ஞ[7]ற்போல
[8]லிங்கம் தனில்இருந்து நெடிய பரமசிவன்
வெங்கொடுமை யாய்எழுந்து விண்மண் மிகநடுங்க
425. சீறி[9] யகோரம்என சிறப்புடன்ஓர் கால்ஓங்கி
வீ[10]றுடைய காலன் மிக்கமணி மார்புதன்னில்

---

1. [யி]
2. போகிறேன்
3. [தி]
4. விழ
5. [ந்]
6. [யா]
7. [ப்]
8. நடல மோனே
9. [தி]
10. [ரு]

எட்டி [1]மிதித்தார்; இடிபோல் உதைவிழவே
துட்டன் மறலி துணுக்கிட்டு நெஞ்சொடிந்து
வாயினல் கண்ணினல் வளர்கின்ற மூக்[2]கதினல்
செய்ய குருதி திரண்டுஓட நெஞ்சுவழி,
வீசியபா சஞ்சோர்ந்து மெய்சோர்ந்து கைசோர்ந்து
காசினியில் ஏமன் கருமலிபோ லேவீழ்ந்தான்.
காலன் மடிந்துவிழ கைகுவித்து அருச்சனைசெய்
[3]பாலனுமோ கண்டான். பயமற்று இருந்தானே!
பூசைடண்ணும் லிங்கமிசை பொன்போல் மிகளழுந்த
ஈசனையுங் கண்டான். இருகையா லேகூப்பி
தொழுவான்! பணிவான்! தூயஆ னந்தம்என
அழுவான்! கனிவான்! ஆடுவான்! பாடிடுவான்!

விருத்தம்(5)

விடபு யங்கம தாக நாணெடு மேரு மால்வரை வில்லியை
படிய ளந்தவன் நெடிய சாயக மெனந யந்திடும் பரமனை
கொடிய மூவெயில்[4]நொடியிற் றீயென முறுவல் கோலிய
அடியின் மாமலர் புனைகு வேனையும் மறலி யோகொல [குமகனை
அடர்வனே.[5]

நடை

வடமேரு வைச்சிலையாய் வகைத்துநெடு வாசுகியை
நெடுநாணு கப்பூட்டி நெடுமால் கணையாக
தூய திரிபுரத்தைத் [6]தோணு மலேநகைத்து
தீயாய் எரித்தபிரான் செங்கமலச் சீரடியை
ஒலியமாய்ப் பூசைபண[7] உற்ற சிறுவனைத்தான்
பாலி எனும் எமனே பதறவே [8]கொல்லுறவான்.

---

1. மிதித்ததே இப்படியாயிற்று
2. அதனல் அதினல் என வருகிறது; அது சொல்லுருபு
3. பாலனுமே என்பது பாலனுமோ என வருதல் காண்க
4. [நொடியி லிரென]
5. 'மா கனிவான்' முன்று முறை வந்து விளச் சீர் கொண்டு முடியும் எழுசீர் சந்த விருத்தம் தனனதந்ததானதந்த தான தந்த தனதனு
6. நகையும் தோன்றுமல் புன்முறுவ லாய்; முப்புரம் தோன்றுமல் என்று மாம்
7. [ணு மு] பன்னும் உக்த (உற்ற) என்றுமாம்
8. கொல்கிறவன்; ஆல் காண்க

கொந்தார் சடையானைக் கொன்றைப் புனைந்தானை
செந்தா மரை[ப்]போல சிவந்தபா தத்தானை
மதனை எரித்தானை, மழுமான் எடுத்தானை,
சிதறிய வெண்பூதி திரு[1]மேல் அணிந்தானை,
என்னைக் கா[ர்]த்தானை என்னுடைய நாயகனை
வன்னமுடன் பூசைசெய்யும் மாசில்லாத் தொண்டர்தமை
வல்லமை யோடும் வருகின்ற மாமறலி
கொல்லுவா னேஅவனைக் கொல்ல முடிந்திடுமோ?
ஆனை உரித்தானை அகண்டவெள்ளி வெற்பானை
கானமலர் வேதன்முடி கையால் களைந்தானை
கங்கை முடித்தானை, கரிய திருநெடுமால்
பொங்க முடனேதான் பூசிக்கும் புண்ணியனை,
வெள்ளை விடையானை, வேத முடியானை,
எள்ளுக்குள் எண்ணெனை எங்கும் நிறைந்தானை,
[2]சண்டனைக் கொன்றுனைத் தான்கனிந்து பூசைசெய்யும்
தொண்டனைத் தான்எமன் சூதுசெய்ய [3]மூற்றிடுமோ?
சொல்லுங் குபேரனுக்குத் தோழமை யானேனை
வல்ல வி[4]சரவை மாலெனப் பூண்டோனை,
இமைய வரையீன்ற ஏலக் கருங்குழல்பெண்
உமையை இடத்தில் உகந்துஅன்பாய் வைத்தவனை
நன்னய மாக நாடிப்பூ சித்தவரை
என்னசெய்வான் பொல்லா இடர்செய் கொடுங்காலன்?
மாயப் பிறவி மயக்கம்எனும் சாகரத்தை
நேய முடன் கடக்க நெடுந்தோணி யானவனை,
ஈசன் அடியார் இடர்செய் மலக்காட்டை
நேச முடன்எரிக்கும் நெடியஅக் கினிப்பொறியை,
[5]சிவநிந் தனைபேசும் செய்யதக்கன் யாகமதை
கதன முடன்அழித்த கண்ணுதலை அன்புடனே

---

1. மேல்
2. முன் யுகங்களில் இவ்வாறே நடந்த கதை
3. முடியுமோ
4. ஆ
5. சிவபிரான் புகழ் அடுக்குப் பெயர்க ளாக வருவது பல பல சீர்களின் சந் தங்களோடு வருதல் காண்க

வடிவுடனே பூஎடுத்து வரிசையாய்ப் பூசைபண்ணும்
அடிய வரைவெல்ல ஆமோ நமனுலே?
பஞ்சபூத நாயகனே பழமறைவே தன்குருவை
நஞ்சையுண்ட வாயானே, ஞானக் கொழுந்தானே.
ஆதிப்பொருளானே, அணுவாக நின்றானே,
சோதிப் பழம்பொருளைத் [1]துலையாப் பெருவெளியாய்
மும்மூர்த்தி கள்போற்றும் முதலே, மலராலே
செம்மையுடன் பூசைசெய்தால் தீங்குண்டோ அந்தகனால்?
முக்குணத் தானே மூன்று தொழிலானே
சிற்குணத் தானைத் தேடரிதாய் நின்றானே
தற்பரனைத் தேவர் சபையில் நடித்தானே[2]
உற்பனனைப் போற்றினவர்க் குண்டோ நமன்மயக்கம்?

விருத்தம் (6)

மூன்று கண்உடை [3]முத்தி நாதனே
நான்ற வார்குழல் நங்கை பாகனைத்
தோன்றும் அன்பினுல் தொழுத அன்பர்மேல்
ஏன்று(ம்) அந்தகன் ஏது செய்யுமோ?[4]

நடை

'மூக்கட்[5] பொருளே மூவருக்கு மூத்தோனே
மைக்கண் உமையை வாமபாகம் வைத்தானே
அன்பினுல் எந்தன் அய்யனே நான் பூசைசெய்யில்
வன்பினுல் ஏமன் வருவானே அக்ச[6]மன்றி
சூலக் கரத்தானைச் சோதி நிறத்தானை
காலனைக் கொன்றானைக் கடைநாளில் நின்றானை
சூரியனுர் பல்லுவிழத் துவள அடித்தானே
வீரியமாய்க் [7]கனியை] வெங்கை யொடித்தானே

---

1. தொலையா
2. விடமுண்டபின் சந்தி தீருத்தம்
3. மூவர் அல்லது மூத்த என்றிருக்குமோ பின்பார்க்க
4. மாவிளம் மாவிளம்என வரும் நாற் சீர்க் கலிவிருத்தம்
5. [ரப]
6. இன்றி அன்றி என வரும்
7. இந்திரன்?

தேவதே வப்பொருளே தேடஅறி யாப்பொருளே
பாவம்அறுக் குப்பொருளைப் பணிவார்க்குக் காலன்உண்டோ?'
என்றுமார்க் கண்டன் இனியசிவ னேநோக்கி
நின்றுமிக தோத்திரங்கள் நேசமுட னேபாட
பரம சிவன்மகிழ்ந்து பாலன் தனைநோக்கி
'அரிதாகப் பூசைசெய்யும் அன்பனே! அஞ்சாதே!
மனத்தில்[1]வே றன்றி மா[2]இரக்க மாய்என்னை
நினைத்து நீபூசை நேசமுடன் செய்ததினால்
என்றைக்குஞ் சாகாமல் இனியபதி னா[3]ர்வயதாய்
வென்றியுடன் நீஇருப்பாய் [4]விடலா'யென் றேகூறி
அங்கையால் உச்சி அவனை மிகத்தடவி
பொங்க முடனே புனிதமார்க் கண்டனுக்கு
வேண்டும் வரங்கொடுத்து வெண்பிறையை நீர்சடைமேல்
பூண்ட பரமசிவன் பொன்போல் மிகமறைந்தான்.
ஈசன் மறைய இனியமார்க் கண்டனவன்
நேசமுட னேபூசை நிறைவே[5]ற வேமுடித்து
தந்தைதாய் வாழுந் தக்க மனைபுகுந்து
விந்தையுடன் போற்றி விமலரையும் பூசைசெய்து-
பெற்ற வரங்கூறிப் பெற்றெடுத்தோர் தன்னுடைய
உற்ற கவலைநீக்கி ஓவியமாய்ப் பாலனவன்
பூமிபிர தட்சணமாய் புண்ணியதீர்த் த-மாடி
மாபிறை யைப்பூண்ட வன்னைச் சடாடவியான்
சொன்ன படியே துலங்கும்பதி னா்வயதாய்
நன்னய மார்க்கண்டன் நற்புடனே தான்இருந்தான்.
பட்ட நமனும் பரம சிவன்அருளால்
திட்ட முடன்எழுந்து சிவனை மிகத்தொழுது
'அடியேன் அ[6]றியாமல் [7]அபசராஞ் செய்துவிட்டேன்
கடுவிச[8]த்தை உண்ட கடவுளே நீபொறுப்பாய்

---

1. வேறு என்னம் இன்றி
2. [யி] நெஞ்சு நெகிழ்ந்து
3. று
4. விடலையில் விளி
5. [ற]
6. [ரி]
7. குற்றம்
8. ஷ

தோணுமல் தொண்டன் [1]துற்ச[2]னமே செய்துவிட்டேன்.
தாணுவே நீபொறுத்து தமியேன் தனைக்[3]காரும்!
குற்றம் வரும்என்று குறித்தறியா மல்அடியேன்
சிற்றறிவாய்ச் செய்தேன். சிவனே! பொறுத்தருளும்?'
என்று வணங்கி இனியபுத்தி [4]பெற்றேன்என்று
வென்றியுள்ள காலன் விரைந்து பதிபுகுந்தான்.
இப்படியே மன்னு! இதுமுன் கதைநடத்தை
செப்பினேம். ஈதெல்லாம் சிறந்தமார்க்கண்ட னுட
தகப்பன் தனையீன்ற தனிமிருக சிங்கன்முன்னுள்
மகுத்துவமாய்ச் சொல்லும் மாகஸ்நா-னமாடும்
புண்ணியப் பே[5]றென்று புவியாள் திலீபனுக்கு
வண்ணத் தவவதிட்டன் வாகுடனே சொன்னனே.

பதினேழாம் அத்தியாயம் முற்றும்.

---

1. துஷ்டத்தனம்
2. [ண]
3. காவும்; ர் வரல் காண்க
4. 'பெற்றெனென்று'என ஒலிக்கும் போலும்; அல்லது று அலகு பெறுது போலும்
5. [ரெ]

பதினெட்டாம் அத்தியாயம்

புண்ணிய தீர்த்த கதை

விருத்தம்(1)

பகலவன் குலத்து வேந்தன் கேட்டலும் பண்பி னுலே
அகமகிழ்ந் தினிது[1]நோக்க வையநீ யோது[2]மாற்றல்
மகரவா தித்த னுற்ற மதிதொறுந் தெண்ணீ ராடச்
செகதலம் வாழ்க்கை வைப்பில் தீர்த்தங்கள் எவையாம்
[செப்பாய்[3]

நடை

5. பரிதி குலத்தில் பாங்காக வேபிறந்த
வரிசை திலீபதியும் வதிட்டர்சொன்ன காதைதன்னை
சிந்தை யுறக்கேட்டுச் செப்புவான் பின்னுலும்:
'எந்தன் குருவே! எளியேன் மிகவ[4]றிய
சொன்ன கதையில் துலங்குகின்ற தைமாதம்
10. நன்னய மாக ஞாயிறு விருங்காலம்
மாகமாத தீர்த்தமென்று வரிசையுட னேஉரைத்தீர்.
ஆக மகிழ அழகான மாகஸ்நானம்
விந்தையுட னேஆட, வேதப்பொரு ளே!எனக்கு
இந்த உலகில் இனியபுண்ணி ய-தீர்த்தம்
15. சொல்லும் அய் யா!'என்று தூய திலீபதியும்
வல்ல தவத்தோனை வணங்கி மிக[5]கேட்க
திக்கடங்காக் கீர்த்திகொண்ட திலீபதியைத் தான்நோக்கி
மிக்க தவவதிட்டன் [6]விளம்புவான்: 'மன்னுகேள்
மகர இரவியான மாகமா[7]சத் தையிலிந்த
20. செகத்தில் உண்டான தீர்த்தமெல்லாம் நன்னீரே.

---

1. நோக்கி-செய என்பதும் செய்து என்பதும் மாருட்டம்
2. [ம் வாரததால்]
3. 'வினமா தேமா' இரட்டித்து வரும் அறுசீர் விருத்தம்
4. [ரி]
5. வலியுகவில்லை
6. எதிர்காலம் வருவதனை நோக்குக
7. [ஞ]

தாட்டிமையாய்த் தான்இருக்கும் தன்பதியைத் தான்குழும்
மாட்டுக் குளம்புமுதல் வாவி குளங்கிணறு
நல்லோய்! சுனையாறு நாடிய [1]ஏரியோடை
எல்லாப் புனலும் இனியபுண்ணி ய-நீராம்

தாட்சிஇல்லா இந்நீரில் தழைக்குஞ் [2]சிலாக்கியமாய்
மாட்சியுள்ள வேதம் வழுத்துமந தியைக்கேளாய்.
நினைத்த கருமமொடு நீள்பதவி யுங்கொடுக்கும்
கனக்கும்பிர யாகை கருது[3]மைய [4]சாரணியமாம்

இங்கிதஞ்சேர் [5]அவந்திநதி இனிய சரையுநதி
சிங்காரப் புண்ணியநதி சேருஞ்சிவ கங்கைநதி
வரிசைத் துவரைநதி வாழ்த்தியகார் நீலகண்டம்
பெரிய அலைகடலாம் பேசுங்குரு பூமியொடு

யமுனையொடு காஞ்சிநதி அருளான கோதாவரி
கமலமலர் துங்கபத்திரி கருதிடுங்கிட் டிணை-வேணி
[6]கண்டகை பெண்ணையாறு காவேரி கொள்ளிடமாம்
மண்டலங்கள் போற்றும் வைகையாறு மெய்ப்[7]பொருனை

வளருதிரி யம்பகமாம் மணக்குங் [8]கிருதமாலி
தழையும்ஒங் காரநதி தாட்சியில்லாச் [9]சோணைநதி
வாகுடைய [10]காளாஞ்சி மகுத்துவ[11]புக்க ர-முடனே
ஆகமிழ் சிந்துநதி [அகண்டயணி ய(ர)ஞ்]சேது
[புருசோத் தமமுடனே] புகலுகின்ற கோகரணம்

[12]பிருகுநதி [13]வேதகிரி பேசுஞ் [14]சரசோதி
இதுமுதலா கத்தீர்த்தம் எங்கும் பலதுஉண்டு
மதுமலர்ப் பூமார்பா! வாகாக இன்னமுங்கேள்!
இத்தீர்த்த மெல்லாம் இன்னுலகில் கண்டாயே!
அத்தீர்த்த மாடுவர்க்கு அதிக பலாபலந்தான்
கொடுக்கின்ற தீர்த்தங் கூறக்கேள்! மன்னவனே!

---

1. [யே]
2. சிறப்பாய்
3. [நயமிய]
4. 'சாரண்யமாம்' என ஒலிக்கும்
5. அவந்தியிலுள்ள தீர்த்தம்;
6. சாளக்கிராமம் உண்டாகும் ஆறு
7. தாம்பிரபரணி
8. கிருதமாலா-மச்சாவதாரம் செய்த ஆறு
9. River Son
10. காளாஞ்சன தீர்த்தம்
11. புஷ்கர தீர்த்தம்; புட்கரம்; து ஒலியாது
12. மேற்கடல் தீர்த்தம்
13. பக்ஷி தீர்த்தம்
14. சரசுவதி

வடுப்படா தீர்த்தம் மானத தீர்த்தமாகும்
மான(த) தீர்த்தமென்றுல் வகைகேளாய் மாவேந்தே
ஆனமெய்,வாய் கண்மூக்கு அழகுசெவி இந்தஅஞ்சால்
வருகின் றதுபாவம். மன்னவா ! இந்தஅஞ்சும்
கருதியபஞ் ச-விடையங் கண்டா யிதுஅடக்கி,
இருப்பதுவே, தீர்த்தம் இசைந்தாடப் பெற்றதுவாய்.
விருப்ப முடன்யாகம் விந்தையுடன் செய்தாலும்
சிவதி ரவியத்தில் சிந்தைவை[ய்] யாததுவும்,
தவஞ்செய்வ தும்குகைக்குள் தானே இருப்பதுவும்,
சொன்னபடி தப்பாமல் சுகமாய் நடப்பதுவும்,
நன்னயமா என்னுளும் நன்றுய் மகிழுவதும்,
வேத[ப்]பா ராயணந்தான் விந்தையுடன் செய்வதுவும்,
நீதமுடன் [1]காலகாலம் நேமநிஷ்டை செய்ததுவும்,
மந்திரங்கள் ஓதுவதும், மா[2]சிவங்கள் பண்ணுவதும்
விந்தையுடன் யாவருக்கும் மெல்லியதாய் பேசுவதும்,
மனதயிரி யத்துடனே மாவீரி யத்துடனே
[3]சினத்த குணமின்றிச் செழுஞானம் பேசுவதும்,
உயிர்வதை செய்யாமல் உற்றமனம் நன்மையெனும்
இயல்பாய் நடப்பதுவும், இனியசிவ பூசைநன்றுய்
செய்வதுவும், மன்னு ! தீர்த்தமாடு தற்குநிகர்.[4]
ஒய்யார் இப்புவியில் ஓவியமாய்த் தீர்த்தபலன்
சொன்னேமடா வேந்தா ! சொல்லுகிறேம் இன்னமுந்தான்.
நன்னய மாக்கேளீர் நற்தீர்த்தம் ஆடுகிலும்

விருத்தம்(2)

கள்ளைப்பொய்க் [5]குறளை வாயன் கடியசொல் கொடிய நெஞ்சன்
தள்ளருங் களியன் தூர்த்தன் தண்ணளி இல்லா லோபி
உள்ளத்தில் மலத்தை வைத்து உடல்மேலுங் கழுவி நன்றுய்
வெள்ளநீர்(க்) கங்கை தோய்ந்தும் [6]வியன்மலரெய்த] மாட்டான்[7]

1. காலாகாலம்
2. செபம்; அ, எ, இ
3. சினந்த; சினமாகிய குணம் என்றபடி
4. தீர்த்தமாடுதல் என்பதற்குத் தத்து

வார்த்தம் கூறப்பட்டது

5. [குளி] ஐ-இ ஒலி காண்க
6. வியன் நலம் எய்தமாட்டான்
7. முன் விருத்தம் போன்றது

நடை

75. களவுசெய்வோன் கோள்உரைப்போன் கடிய கொடியநெஞ்சன்
வளமையன்றி யேகாமம் வள(ர்)ப்போன் அறிவுகெட்டோன்
தூர்த்தன் இரக்கமில்லான் சொல்கேளான் மாலோபி
பார்த்திருக்க உண்ணும் பாவியெனும் பாவியர்கள்
கித்தம் புனலில் நேசமுடன் மூழ்குவது

80. வெற்றிபுனை வேந்தா! விளம்புகிறேன் நீர்கேள்மோ!
பாவ மெனுமலத்தை பாங்காய் மனதில்வைத்து
ஓவியமாய் மேல்அழுக்கை ஓடுகின்ற தண்ணீரில்
கழுவினது போலேயல்லால் கசடான பாவவினை
தெளிவுடன்நீ ராடிகிலும் தீராது கண்டாயே!

85. வெங்கொடிய பாவவினை வேண மனத்திருக்க
பொங்குகங்கை [1]யாடிகிலும் போமோ கருமவினை!
அப்படிப் போலே அறிவில்லா மானிடவர்
செப்பமுடன் மேல்அழுக்கைத் தெண்ணீரால் தான்தேய்த்து
குளித்ததைப் போலே கொடிய மனக்கசடர்

90. [2]சுளித்த[3]தண்ணீ ரா[4]டிகிலும் [5]துலையாது பாவமய்யோ!
தானத்தை செய்தாலும் தவங்கள்மெத்த செய்தாலும்
ஞானத்தைச் செய்தாலும் நற்பூசை செய்தாலும்
[6]மனதில் கொடிய மாசிருக்கு மாமாகில்
புனிதமுடன் நற்பதவி போயணுக மாட்டாரே.

95. வஞ்சகமும் சூதும் மனதுள் மிகவருத்தும்
பஞ்சுபோல் [7]வெளிகிப் பழுதுசற்றும் இல்லாமல்
இனநன்மை யாக எல்லார்க்கும் நல்லவராய்
மனநன்மை யாக மடையன்போல் வாழ்ந்தாலும்,
பொங்கமுடன் தீர்த்தம் புகுந்தாடில் என்னபலன்!

100. கங்கையாட வேண்டாம்: கயிலைப் பதிஅடைவான்.

---

1. ஆடுகிலும் உ-இ
2. கழித்த
3. [ந]
4. டு
5. தொ
6. மனத்தில்
7. வெளிகு = வெளுகி, வெளிறி = வெள்ளமையாய்

ஆனதால் மன்னு! ஆனமன நன்மையில்லான்
வானர்தொழுங் கங்கை மகிழ்ந்துதான் ஆடிலும்,
பஞ்சாக் கினிநடுவே பாங்குதவஞ் செய்தாலும்,
மஞ்சாருந் தோள்வேந்தா! மாட்டாரே நன்மைபெற[1]!
ஓவியமாய் மனதில் உருந(ன்)மை யானவர்கள்
பாவங்கள்கோடி பண்ணினு லும்மோட்சம்
உண்டுகாண். கோடிபெண்ணே உகந்து மணந்தாலும்
அண்டர்தொழும் மாகயிலை அடைவான் இதுநிசமே.
நல்லதவஞ் செய்ததுவே ஞானதீர்த் தங்காணும்;
அல்லல் அறுக்கும் அருள்ஞான மாதீர்த்தம்:
ஆடினவர் இந்த அரும்பிறவி தான்அறுப்பார்;
நீடும் பதம்பெறுவார்; நினைத்தபடி தான்பெறுவார்:
மாசென்று அழுக்கறுப்பார் மானததீர்த் த-மிதுவே
தேசொன்று மார்பா செப்புகிறேன் இன்னமுங்கேள்!
பூமியில்எங் நாளும் பொருந்துகின்ற தீர்த்தமெல்லாம்
நாமுரைக்க ஒண்ணாது; நாட்டு மனுசருட
நல்ல வடிவுபோலும் [2]நார[வடிவு போலும்.
சொல்லரிய் தீர்த்தம்பல சொன்னேம் உனக்காக.
வண்ண [3]அசுவமேதி வளர்ப்பதிலும் மாலதிக
புண்ணியங் கண்டாய் பொருந்துகின்ற மாகஸ்நானம்.
வாகாக வேதான் மகிழ்ந்துதா[ன்] [4]ஞடாதான்
ஆகாத பாவமின்றி அரியதவஞ் செய்யாதான்
தானமொடு கோதானம் தழைக்கும் மகாவிரதம்
மோனமொடு அஞ்செழுத்தை முற்றும் நினையாதான்
காசினியில் மன்னு! கடியதொரு பாவியென்று
தோசத் தொழில்புரிவான் சோறுமின்றி யேவாழ்வான்.
அன்புடனே [5]ஈசுபரனை அரும்பூசை பண்ணினவன்
நம்பிவல மாகவந்து நாளும் வணங்கினவன்
சிவதோத் திரங்கள்செய்வோன் சிவனடியா ருக்குமிக

1. பாவம் செய்தவர் எல்லாம் பாவம் தீர்வர் என்று கூறியது மனமாறி மனத்தே பாவம் இன்றி நீராடியபோதே யாம்
2 நாரி = பெண்கள்
3. அசுவமேத யாகம்
4. ஆடாதானே [நா] தவஞ் செய்யாதவன் முதலியவன்
5. ஈஸ்பரனை எனவும் ஓலிப்பர்

130. தவவழியா க-நடப்போன் தழைக்குமகா மாகஸ்நானம்
சென்றுடப் பெற்றபலன் திலீபதிமன் னு[1]கேளாய்!
என்றே வதிட்டன் இனிவுரைத்தும் பின்னுரைப்பான்:

விருத்தம்(3)

*வஞ்சகம் இல்லா நெஞ்சே நெஞ்சாம்
மறுமனை செல்லாத் தாளே தாளாம்
செஞ்சொல் உரைக்கும் நாவே நாவாம்
செழுநிதி வீசும் கையே கையாம்
135. அஞ்சிந டுங்கி யேதிலர் தாரம்
அவையகம் நோக்காக் கண்ணே கண்ணும்
எஞ்சமில் லாதே இப்பரி சுடையோ
ரெய்திய விடமே என்றும் புனிதம்.[2]

நடை

வஞ்சகமில் லாத மனதுதான் நல்மனது.
மிஞ்சும் பிறர்மனையில் மிதியாத காலேகால்.
நன்மைதனைச் சொல்லுகின்ற நாவதுவே நல்வரவு[3].
140. பொன்மையுடன் யாசகர்க்குப் பொருளீயுங் கையேகை.
அஞ்சி நடுங்கி அகோரமென வேபார்த்து
[4]இஞ்சொல் பிறர்தாரம் இனிநோக்காக் கண்ணேகண்.
இந்த நெறியில்வாழ் இனியோர் இருந்தஇடம்
சிந்தை மகிழ்மன்னு! செப்பரிது! நற்புனிதம்.
145. [5]இப்படியாக் கொத்த [6]இருமுறட்டுப் பாவியர்கள்
செப்பரிய புண்ணியநதி சென்றுடி னலும்அய்யோ!
நல்ல பதவியன்றி [7]நாயிலையுங் கீழாக
சொல்லுங் கொடுநரகம் துஞ்சுவான் கண்டாயே.

---

1. பன்னினவன் முதலானவனுய் இருத்தல் மாகஸ்நானம் சென்றுடப்பெற்ற பலன்(130-131 வரி)
2. ரஸைச்சீர்.8. ஒவ்வொரு சீரும்4 மாத்திரைகள்; ஒற்றடுத்த குறில் நெடில் போல இரண்டு மாத்திரை பெறும் மாத்திரா விருத்தம்
3. உகரச்சாரியை (பேசும்)
4. இன்சொல்; ன, ஞ
5. இதற்குமுன் சிலவரி விடுபட்டன போலும்
6. முரட்டு; முருட்டு
7. நாயிலேயும்

இன்னமுங்கேள் ! மன்னு ! [1]இவ்வுலகி லேதீர்த்தம்
வன்னமுடன் ஆட வாகுடனே [2]போறவர்கள்
முதல்நாள் வினையகனை முற்றுமே பூசைபண்ணி
பிதிர்கள் தனைநினைந்து பேசியதர்ப் பணம்முடித்து
தீர்த்தக் கரைபுகுந்து சிந்தையுடன் என்றமட்டும்
நேர்த்தியுடன் வேதியர்க்கு நேசமுட னேதானம்
போதவே செய்து புனிதநீ ரில்மூழ்கி
பிதிர்தேவ தைநினைந்து பெருகும் [3]தீர்த்தமிடத்தி
நன்னய மற்றுமுள்ள நல்லகரு மங்கள்செய்து
தன்னுடைய வீடுசென்றோர் தானடைவார் மேல்வீடு.[4]
இதுவுந்தான் அல்லாமல் இன்னமொன்று சொல்லுகிறேம்:
மதுவுந்தும் பூமாலை மன்னவா ! நீகேள்மோ !.
பொருள்மேல் மனதுவைத்துப் பெருஞடையான் பால்நடந்து
வரிசையுடன் கூலியென மாபொருளைத் தான்வாங்கி
சொல்லுகின்ற தீர்த்தம் சுகமாக மூழ்கும்பலன்,
நல்லபொருள் ஈ[ய்]ந்தவர்க்கு நான்சொன்னேம் அஞ்சுபங்கு ;
நீரில் முழுகுவர்க்கு நேசமுடன் பங்குஒன்று ;
சீரிசையும் மன்னு ! சினேகித மானபேரை
வண்ண முடன் நினைந்து மகிழ்ந்து[5]தெற்பை தான்முடித்து
தண்ணீரில் போட்டு தான்முழுகு கின்றபேர்க்கு
ஏழுபங்கு; நல்ல இனிதான தோழனுக்கு
சூழு புகழ்மன்னு; சொன்னேம்ஒரு பங்குமுண்டாம்.
இப்படியே தீர்த்தம் இசைந்தாடப் போனவர்கள்
செப்ப முடன்அந்த செல்வ நதிக்கரையில்
[6]மலர்களைந்து நன்றுன மாபுனலி லேமூழ்கி
நலம்பெற வே யன்று நல்லு(ப)வா ச-மிருந்து
தன்பிதிரைத் தான்நினைந்து தண்ணீர் மிக[7]விறைத்து
அன்புட னேதீர்த்தம் ஆடுவது நல்லதுகாண்.
ஈதெல்லாம், மன்னு! இனிதான மாகஸ்நானம்
போத முடன்ஆடும் புண்ணியர்கள் செய்யும்முறை.

---

1. [யி]
2. போகிறவர்கள்
3. தீர்த்தம்
4. வீடு கிலேடையுள்ளிட்ட சொற்பின்வரு நீலியனி; மனு; மோட்சம்
5. தருப்பைப்புல்லி
6. [மயிர்]
7. [ரை]

இவ்வண்ண மாக இசைந்துபுனல் ஆடுவார்கள்
கைவண்ண மான கலைபயிலும் வேதியர்க்கு
வாழைப் பழத்துடனே வழுத்தும் இலந்தைப்பழமும்
சூழும்நெல் லீப்பழமும் தூயவெள்ளை நெல்லரிசி
பாக்குடனே வெற்றிலையும் பகருகின்ற பூசணிக்காய்,
[1]சேக்கும்எள் ளுண்டைமுதல் சீரான [2]பண்டமெல்லாம்
வேதப் பிராமணர்க்கு [3]இனியமாகஸ் நானக்காலம்
போத மெனக்கொடுத்துப் போசனத் துடன்[4]சோமன்
கம்பளிச் [5][சிற் றாணுடனே] [6]கனியாக வேகொடுத்து
நட்பன்திருக் கோவில்சென்று நறுநெய் விளக்கேற்றி
தீபதூ பமுதலாய் [7]சிறப்பு மிகநடத்தி
மா[8]பரவுஞ் செய்யசடை வள்ளல்தனை வணங்கி
மீண்டு மனைபுகுவார், வேதமது சொன்னபடி
மாண்டபுகழ் மன்னா! மறைசொல்படி தப்பாமல்
பரிவாக மாகஸ்நான[9]ம் பாங்குடனே ஆடினபேர்
திருவளருந் தேவபதி சென்றுபோ கங்கள்துய்த்து
ஈசன் பதம்பெறுவான் என்றுமிருப் பார்[9] கயிலை
வாசமுடன் இப்படியே மகிட்சியுட்ன் செய்யாமல்
பலநினை வாய்[10]கருமம் பாருலகில் செய்பவர்கள்
கலமுடனே வாழ்நாளில் நடுக்குந் துயரமுற்று
வீண்கால மாய்ப்போக்கி [11]வீழ்வான் கொடுநரகில்
[12]பூண்பூண் மார்பா புகழ்வேள்வி செய்தாலும்
தரும முடனே தானம்பல செய்தாலும்
[13]வரிசையுள்ள மாகஸ்நான மாடினபேர் பெற்றபலன்
தான்பெறவே மாட்டார்கள் சத்தியங்காண், மன்னவனே!
நான்உனக்குச் சொன்னேனென நல்ல விதிட்டரிசி
செய்யமலர் வாய்திறந்து தேசமெல்லாந் தான்ஆளும்
துய்ய தீலீபதிக்குச் சொல்லினன் இக்கதையை. 206

பதினெட்டாம் அத்தியாயம் முற்றும்.

---

1. சிவந்த பதமான
2. பண்டம் என்பது தின்பண்டமாதல் காண்க; பதார்த்தம் பிறபொருளாம். முன் நாம் கூறிய விளக்கம் இங்கும் பொருந்தவில்லை
3. [வி]
4. துணி
5. சிற்றாண்டி என்பது சோமன் கம்பளியோடு பொருந்தும்
6. கனிவாக
7. திருவிழா நைமித்திகம்
8. [ய] மா = அழகு எதுகை நோக்குக
9. ன்
10. ஒலிமிகவில்லை
11. ஆழமான
12. ஆபரணம் பூணும்
13. மேனி காண்க

பத்தொன்பதாம் அத்தியாயம்

சுவாதன் கதை

விருத்தம்(1)

என்றுமொழிந் திடும்வதிட்டன் பின்னுமா
கத்தினியல் எடுத்துச் சொல்வான்
தொன்றுபடு பாதகரில் சுவாதனென்னுந்
தொழுகுலத்தோன் தொலையுங் காலை
ஒன்றுமனப் பின்னி[1]றக்க ஊகத்தால்
முத்திநிலை [2]உற்ரு னந்த
நன்றிபடு காதையினைக் கேட்டிநர
பதியென்ன நவில்வ தானன்.[3]

நடை

5. என்று வதிட்டன் [4]யினியமாகமா சத்[5]தபலன்
[6]நன்றி[7]யிட் டியெனவே ராசன் றனக்குரைத்து
பின்னுமந்த மாகபலன் பெருமைதனைக் கேளு'மென
நன்னயமா கவதிட்டன் ராசன் றனைப்பார்த்து
" வாரா யடா!வேந்தா வளரும்பிர ம-குலத்தில்
10. சீராக வந்துதித்த செல்வச் சுவாதனெனும்
வேதப் பிராமண்ன்ரூன் மிகக்கொடுமை தன்னுடனே
போதமுட னேவாழ்ந்து பொல்லாதா னென்று[8]சொல்லி
மண்ணிலே வாழ்ந்திருந்து வயது[9]முற்றும் பிற்காலம்
தன்அறிவும் பூத தயவுமனத் தில்வைத்து

---

1. [ர]
2. [வு]
3. '4 காய்-மா-தேமா'வை வரும் அறுசீர் விருத்தம்
4. இ.உச்சரிப்பு
5. மாசத்தின் [தை]; அ, ஐ
6. நல்மை; அறம் உ, இ
7. இற்று ற-ட; அல்லது பாவம் போக்கும் எனல்
8. சொல்லப்பெற்று செயப்படு வினைப் பொருளில் செய்வினைவருவழக்கு; 'சொல்ல' என இருக்கலாம்
9. வயது முற்றுதல் எனல் காண்க

15. உற்ற சுவாதன் ஓலியமா க-மோட்சம்
பெற்ற கதைதன்னைப் பேசுகிறேன் நீகேளாய்!
மன்னு [1]எனவே வளரும் வதிட்டமுனி
பொன்னன வாய்திறந்து புகலுவான் ஓர்கதைதான்;
[4]சந்திரனைப் போலத் தழைக்கும் முகமடவார்
20. வந்து குளிக்கும் மா[2]நிறும[த்] தையாற்றில்
பக்கத்தில் நின்று படர்ந்துவெகு சீதளமாய்
மிக்க[க்] கதிரொளியு மிகப்பாயா மல்நெருங்கி
பூந்தாது சிந்தும் பூஞ்சோலை தானடர்ந்து
சூழ்ந்திருக்கும் பட்டணமாம்; தூயமறை யோர்வாழும்
25. சீரான பட்டணமாம்; செல்வமிகு பட்டணமாம்.[3]
பூராய மாகப் புகலும் களங்கபுரி
என்றுசொல்லும் பட்டணத்தில் இருக்கும் பிராமணரில்
நன்றியில் லாதான்; நல்லறிவு தானுமில்லான்;
எள்ளளவும் தானம் இனிதாகச் செய்தறியான்:
30. கள்ள மனத்[6]துக் கசடன்: சுவாதனென்று
பேருடைய வேதியன்தான்; பேரான மாவேந்தே!
சீருடைய வேதமொடு [5]சிறக்குகின்ற சாத்திரமும்
ஆகம புராணமொடும் அரிதான விஞ்சைகளும்
வாகுடைய மந்திரமும் மற்றுமுள்ள சாத்திரமும்
35. நேயமுடன் நன்றாய் நிரம்பவே கற்றறிந்தும்[6],
சூயுந் தொழில்அறியான்; இனித்தோர்க்கும் இட்டறியான்;
வித்தை களைக்கற்று மிகக்கொடுத்த புண்ணியர்க்கும்
புத்தியுடன் தெட்சணைதான் போதக்கொடுத்தறியான்;
பெற்றூர்க்கும் அயலோர்! பிச்சையென்றூர் தங்களுக்கும்.
40. உற்றூர்க்கும் சற்றும் உதவாத லோபியென[7]
வாழுங் கொடியோன்; [8]வாரிகடந் தேயேகி

---

1. [வெ]
2. நருமதை; ர-ற
3. தீருப்பித் தீருப்பிச் சொல்லுதல் அம்மானையின் போக்கு
4. [தை]-: மனத்து என்பது மனத்தை என வந்திருக்கலாம்
5. கு-வரல் காண்க
6. வாக்கியம் தீரும் முறையை நோக்குக
7. என்று பிறக்கூற
8. கடல்நீர் (ஆறு) என்றுமாகலாம்

சூழுகின்ற தானம் [1]துடர்ந்தோடி யேபெறு[2]வோன்;
பொருள்மேல் மனதுவைத்து புகழ்வித்தை கற்றதல்லால்
வரிசையுள்ள வித்தையின்மேல் மன[3]மினிந்து கற்ற[4]தல்ல
தீயிலேயும் [5]பொல்லாத தீண்டாதான் [6]சுயந்தாலும்
பேயிலேயும் பொல்லானுய் பிரியமுட னேயிரப்போன்;
சாங்[7]கும்பி யேபெரிதாய் தன்னுசை யேபெரிதாய்
வாங்கு[ம்]வித்தை யல்லாமல் வழங்குவித்தை தானறியான்[8]
எண்ணிய பாவம் இனிப்பாகச் செய்ததல்லால்
புண்ணியஞ் சற்றும் போதவே செய்தறியான்;
செம்பொன் னெடுவெள்ளி செழும்பவள முத்துடனே
கொம்புடைய பால்பசுக்கள், குங்குமங்கள் சந்தனங்கள்,
எள்ளுப் புயறு இனியபட்டுப் போர்வைகளும்
ஒள்ளிய நெல்லரிசி உகந்த கவுரிமயிர்,
இதுமுதலா ன-சரக்கு ஏராள மாயெடுத்து
[9]அதிக விலையாக வியாபாரம் பண்ணிடுவான்.
ஒருவ னிடத்தில் உகந்துகூ லி-வாங்கி
வருமினிய தீர்த்தம் மகிழ்ந்தாடி யாபலனே
காசுக்கு விற்பான்; காலியந்தி நேமநிஷ்டை
பூசைப் பலன்தனையும் பொருளாசை தன்னுலே
விற்றுப் பணம்வாங்கி, விற்றவீட் டில்சோறும்
மெத்தவே யுண்பான்; வேத வெளிகடந்தோன்[10]
இப்படியே நாள்தோறு மினியபொருள் மேலாசை
செப்பமுடன் வைத்துத் திரவியங்க ளுத்தேடி.
மண்ணில் புதைப்பான்; வணங்கான் [11]ஒருவருக்கும்;

---

1. தொ; உ, ஒ
2. ஒன் என முடியும்; பெயர் வடிவம் போலும்
3. 'இனிந்து' என்ற வழக்கினைக் காண்க; விரும்பி
4. இல்லை இன்மைப் பொருளில் அல்மை வருவது இந்நூல் வழக்கு
5. பொல்லாதவற்றை
6. [யி]
7. சாடராக்வி உள்ள வயிறு
8. முணமி வருதல் காண்க
9. இந்த அடியில் மோனை இல்லை. விலையாகவ்-யாபாரம்என பிரித்து மோனை கொண்டனரோ?
10. மிகப் பரந்த வேதவழியின் எல்லையையும் மீறினவன்
11. ஒருவரையும்; வணங்குதல் அடங்குதலாதல் ஒருவருக்கும் என்பதே ஆம்

வண்ணமுடன் தன்மனையில் மனமகிழ்ந்து உண்டறியான்;
அன்னியர்வீட் டில்சோறும் [1]யாசகமா கப்பொருளும்
[2]தன்னமையா கத்தேடித் தருமந் தனைப்பிறர்க்கு
[3]ஈத்து[4]இந்த வண்ணம் மெய்யில்லா ஸாமறையோன்

70. மெத்தவொரு கோடிபணம் விந்தையா க[5]தேடி
புண்ணியமுஞ் செய்யாமல் போசனமுஞ் செய்யாமல்,
மண்ணில் புதைத்து வாழுகின்ற நாளையிலே,[6]
கோப்புடைய மாவிளமை குறைந்து மயிர்நரைத்து
மூப்பும் முகஞ்சுரித்து[7] முற்றுமுடல் தான்திரைந்து

75. [8]நடைமாறிக் கர[9]லசந்து நடுக்குந் தலையுடனே
[10]இடையாக வீட்டில் இடக்கும்போ தென்சொல்வான்!
'அய்யோ! வென்னவினை? அனியாயஞ் செய்தேனமோ?
கையிலரைக் காசுவரக் கண்டிலேன் வீணுக
வீட்டில் இருந்து வீண்பொழுதா கச்சோறு

80. [11]தேட்டில்லா மல்நாமும் [12]தின்னக் கருமமிதோ!
பாங்குடனே தானதன்மம் பரிவுடனே நான்நடந்து-
வாங்குதற்குக் காலும் நடக்க [13]வணங்கலையே!
என்னசெய் வோம்?அய்யோ! இதெல்லாம் நமதுவிதி!
அன்னியர் வீட்டில் அன்பாகச் சோறுவுண்ண

85. நமக்குக் [14]கொடுத்திலையே! நன்முக வேபொருள்தான்
[15]தமக்கென்று என்ன சம்பாத்தி யங்கள்செய்தோம்?
அய்யோ!' எனவே அருமறையோ னும்புலம்பி
மெய்சோர்ந்து மெத்த வியா[16]குலமாய்ப் பின்நினைப்பான்:.

---

1. அ-ம மோனை யாசகம் ஆசகம் என் றெழுதித்தனோ?
2. உறவாக; இணக்கமறிந்து
3. விற்று; த. ற
4. [யி]
5. வலிமிகவில்லை
6. வாக்யம் நீண்கிறது; வாழ்ந்தான்; வா ழும்போது என வருதல் இயல்பு. உடம்படு புணர்த்தனோ?
7. நெற்றுல் வழக்கு
8. காலால் நடக்கின்ற கோலம்
9. அயர்த்து
10. படுக்கையில் கிடத்தல்
11. சம்பாதித்தல்
12. தின்ன; ன, ண
13. வணங்கவில்லை-இயக்கமுடியவில்லை
14. கொடுத்தது இல்லை; கொடுத்து வைக்க வில்லை
15. நம் தமக்கு என்று
16. [கு]

'ஓடி நடந்து ஒருகோடி மா[1]பொருள்தான்
தேடினதே யல்லாமல் [2]சீவன்முத்தி யாகும்படி
புண்ணியத்தைச் செய்யாமல் போனே'மென் றேமனதில்
எண்ணி அசந்து இடைந்து [3]பரதவித்து
[4]துற்புத்தி போக்கித் தூய பிராமணனும்
நற்புத்தி யாக நன்மனத்தி லே[5]யெண்ணுவான்;
'ஆங்காலம் எல்லாம் [6]ஆச்சினிமே லேநமக்கு
போங்கால மாகியுந்தான் பொருளாசை [7]தீரலியே!
[8]பொருளாசை யைவெறுத்தோர் புண்ணியஞ்சேர் மாபெரியோர்!
அரிய பொருள்மேலே ஆசைவைத்தோர் தான்சிறியோர்!
பேராசை! அய்யோ! பேசும் பொருள்மேலே
தீராத ஆசை [9]தெரியா தொருவருக்கும்

விருத்தம்(2)

நலங்கெ டுத்திடும்; நா[10]ணம ழித்திடும்;
குலஞ்சி தைத்திடும், குற்றம ளித்திடும்;
[11]பலன்த விர்த்திடும்; பாவத்தில் தள்ளிடு
மிலங்கு மாசை யிதற்கிணை யில்லையே.[12]

நடை

'அய்யோ! பொருளாசை அழகைக் கெடுத்துவிடும்;
பொய்யாத வெட்கமதைப் போக்குங் குலங்கெடுக்கும்;
வசைப்படுத்தும்; புண்ணியத்தை மாற்றிவைக்கும்; பாவமெனும்
[13]நசைப்படுத்தும்; பொல்லா நரகுதனி லேவீழ்த்தும்;
இப்படியே பண்ணும் இவியபொரு ளாசையிது

---

1. வலிமிகவில்லை
2. சீவனோடு இருக்கும்போதே உலக மயக்கமின்றி விடுதலை பெற்றுக் கடவுளுடன் ஒன்றி இருத்தல்
3. பரிதவித்து
4. துர்ப்புத்தி; எதுகை நோக்குக
5. 'யென்னு' தீரையசை
6. ஆயிற்று-இவி
7. தீர இல்லையே
8. அந்தாதித் தொடர்
9. தீராதது என்பது தெரியாது
10. [ந] ந, ண
11. [ம]
12. மா + கூவிளை (காய்)3 அல்லது வெண்டளை இடைவரும் 3 சீர் எனவரும் கலி விருத்தம் அடிக்கு 12 எழுத்து
13. குற்றம்

தப்பா'தென் றே[1]மறுகி தவித்துப்பின்னு மேநினைவான்
'ஆசை யெனும்விலங்கில் அகப்பட்டுக்கொண் [2]டெந்நாளும்;
தோ[3]சமெனும் பாவவினை [4]தோணுமல் செய்திகந்தோம்.
இனி[5]நாமள் சாகுமுன்னே யினியதரு மங்கள்செய்து
[6]கனியான மாகயிலை காணும் படியாக
தேடுந் திரவியத்தைச் [7]சிலவுசெய்து மாபலனை
தேடுவோம்' என்று சிந்தைதனி லேநினைந்து
இருந்தான் இரக்கமொடு இருக்குமந்த நாள்தனிலே,
திருந்ததுவே கள்ளர் தீமறையோன் வீடுதன்னில்
கன்ன மிடநினைந்து கடுகியவன் வீடுதனில்
[8]வன்னக்கூ லிகொடுத்து வயற்றுக்குச் சோறுவுண்டு
அந்த மனையில் [9]அடவாக வேபடுத்து
விந்தை மறையோன்தன் வீடுதனில் கன்னமிட
கள்ளர் எழுந்திருந்து கன்னமிட்டு வீடுதனில்
மெள்ளப் புகுந்து வேதியனை யும்பிடித்து
அஞ்சியே கொஞ்ச அடித்து[10]அவன் வாய்தனிலே
மிஞ்சவே சீலைவைத்து மிக்க பொருளையெல்லாம்
கள்ளர் மிகவடுத்துக் கடியவிரு ளில்போக
மெள்ளவே வெய்யோன் விடிந்தான் மறையோனும்
பொழுதுதிக்கக் கண்டான் பொருள்களவு போனதினால்
அழுது புலம்பி 'அய்யய்யோ!' வென்றுசொல்லி
வாடி மனம்[11]தளந்து வயதெரிந்து [12]கண்ணீர்சிந்த-
தேடுந் திரவியத்தைத் தேடியழு வான்மறையோன்;
'அய்யோயீ தென்னவிதி? அரும்[13]பலனைச் செய்யாமல்
[14]மெய்நோக, கால்நோக, மெத்த வருத்தமொடு

---

1. [ரு]
2. [எ்ன்னாளும்]
3. ஞ
4. தோன்றுமல்
5. நாம்
6. கவிவான
7. செலவு
8. சோற்றுவிலை வன்னம் = சோறு; தெலுங்கு
9. அடவாகவே
10. [ய]
11. தளர்ந்து
12. "கண்ணீ" நிரையசை அல்லது கண்ணி என்ற உச்சரிப்பு
13. பலன் தரும் புண்ணியத்தை
14. மெய்ந்நோவ

ஓடி யலைந்துமெத்த ஓவியமா கநாமள்
தேடுந் திரவியத்தைத் திருடர்கொண்டு போனரே!
இன்னிஎன்ன செய்வோம்? இறையோன் விதிப்படியே
பொன்னே இனித்தேடப் போமோ? பொருளரிதே!
பொருள்மேலே ஆசைவைத்துப் பொருள்தேடி னேம்நாமள்

பொருளான புண்ணியத்தைப் போதவே தேடவில்லே.
இப்படியே தேடும் இனிய திரவியத்தை
செப்ப முடன்வைத்துத் தின்று சுகித்தோமோ!
அப்படியுஞ் செய்யாமல் யாசகர்க்கும் [1]ஈயாமல்
தப்பிதமாய்ச் சோரருக்குத் தான்கொடுத்துப் [2]பாத்தோமே.

புலியர் மிகக்கொடுத்த பொன்வாங்கி யும்பலனே
விலேப்படுத்திச் செப்பொன் வேணவே தேடிவைத்தோம்.
பூமண்ட லத்தில் பொருளாலே செய்தவினே
நாமுரைக்க வேணுமென்றுல் நாவில் அடங்காதே.
தாண்டிக் கடலேறி தானங்கள் [3]வாங்குகின்றேன்.

வேண்டும்பொரு ளாசையினுல் வேத முறைதவிர்ந்தேன்.
அந்தியனுஷ் டானமொடு [4]ஆசைமனந் [5]தற்பனங்கள்
மந்திரங்கள் பூசை மறந்தோம் பொருளாலே;
சிவபூசை அரிபூசை [6]செய்தோமில்லே இப்புவியில்.
பவந்தீர்க்கும் பிள்ளேயாரைப் பணிந்துபூசை செய்யவில்லே

[7]சூரியநம[8]க் காரமொடு சொல்லும்சி ருத்திரமும்
சினிய வேதமுந்தான் திருத்தமாய் ஓதவில்லே.
[9]தின்கனிதின் பண்டம் சிறந்தமறை வேதியர்க்கு
யான்கொடுத்தே னில்லே; யரியபிச்சை யிட்டறியேன்
நந்தவனம் நல்லதண்ணீர் நல்லமடம் பூஞ்சோலே

விந்தையுடன் உண்டுபண்ணி மேதினியில் வைக்கவில்லே

---

1. [யீ]; ஈயாத குற்றம் செய்து
2. பார்த்தோமே; ரகரம் இடையில் ஒலி யாமை; கண்ணேதீரே இழந்தோமே
3. தீகழ்காலம்போலப் பழைய செயல் கள் தோன்றுகின்றன
4. ஆசமனம்
5. தர்ப்பணங்கள்
6. 'செய்தோ' = நீரை; அல்லது நெய்யை குறுகும்
7. 'சூர்யநம' என ஒலிக்கும்
8. [ஞக்]
9. தீங்கனி
10. தீங்கனி

வில்வ[1]இலை ஒன்றெடுத்து மிக்க சிவன்தனக்கு
நல்வழிசே ரும்படியாய் [2]நான்[3]சாற்றி யேயறியேன்
சிவலிங்கம் பூசைபண்ணி சிறந்தசா ளக்கி[4]ராமம்
பவமகல வேதியர்க்குப் பரிவாக [5]சயவில்லை
துளசிபயிர் செய்துவந்தத் துளசியிலே ஒன்றெடுத்து
துளபமணி மாயவர்க்குச் சூட்டிப்பூ சித்[6]தேனில்லை.
துய்யசிவ ராத்திரியில் சொல்லும்ஏகா தேசியினில்
செய்ய விரதமய்யோ! சிறப்பா[7]யிருந் தேனில்லை.
இப்புண் ணியபலத்தை யிழந்துபொரு ளாசைவைத்து[8]
செப்புமுட னேதேடுந் திரவியந் தான்போச்சே.
இன்னியென்ன செய்வோம்? எமக்குந் துணையாக
வன்ன முடன்தருமம் மனதறியச் செய்யவில்லை.
பங்க மிகச்செய்த பாவிக்குப் புண்ணியந்தான்
பொங்க முடன்உண்டோ? பொல்லாங்கு செய்துவிட்டோம்!
ஆகுநா ளெல்லாம் அரும்பாவஞ் செய்தபின்பு
சாகுநா ளய்யோ! தருமந்தான் வாய்த்திடுமோ?
நடந்தோடி புண்ணியந்தான் நான்செய்ய நாளுமில்லை.
இடந்த கிடையாச்சு! [9]இலேசமோ மூப்பாச்சு,
[10]முத்திய [11]நோக்காடு முதுமையொடு [12]சாக்காலம்
[13]அற்றிய நாளாச்சு அய்யோ! நமன்வரவும்
கால மடுத்திருக்க கண்கண்ட தர்மநெறி
ஏலவே செய்தோமில்லை. இனியென்ன [14]செய்வமய்யா!
என்று புலம்பி இனிய சுவாதனவன்
நன்றி யுடன்பின்னும் நல்லறிவு தான்தோன்றி
செய்த [15]பவமொழிந்து தேடரிய முத்திபெற்ற

---

1. [யி]
2. [ஞ]
3. சாத்தி
4. [ரு]
5. [யி]
6. 'சி' கூவ்போலாம் அல்லது 'தே' குறுகி ஒலிக்கும்
7. 'ரு' i போல் ஒலிக்கும்; அல்லது தே குறுதம்
8. வைத்ததால்
9. துன்பமே மூப்பென்ற வடிவு கொண்டது
10. முற்றிய; த, ற
11. நோய்; காடு என்ற சது
12. சாங்காலம் சாக்காலம் எனவருகிறது
13. அத்திய = சேரும்; த, ற
14. செய்வோம் என்பதில் நெடில் இடையில் குறுகி உள்ளது
15. பாவம்; இந்நூல் வழக்கு

துய்ய மறையவனும் துற்புத்தி தான்நீங்கி
[1]பூத தயவும் பொருந்தும் இரக்கமொடு
நீத நினைவுடனே நிரம்ப மனம்மகிழ்ந்து
'இளமை வயதுதன்னில் எண்டிசையும் தான்ஒடி
190. வளமையுட னேதானம் வாங்குகின்ற நாளையிலே
[2]காசியாத் தங்கரையில் கமண்டலமேந் துப்பெரியோர்
நேசமுடன் சூழ்ந்திருக்க நெடிய சபைகடுவே
இருந்து வியாசர் இனியமா[3]கஸ் நானபலன்
பொருந்தவே சொன்ன [4]பொருளில் சிவகதைதான்
195. காதில் விழு[5]அன்று கனிந்தன்பாய்க் கேட்டிருந்தோம்.
போதமுடன் மாகஸ்நானம் புனிதமா யாடினபேர்
செய்த வினையொழிந்து தேவர் பதியடைந்து
அய்யன் பதவி அடைவரென்று சொன்னரே.
ஆனதால் நம்மாலே ஆகாது மற்றுமொன்று.
200. தான தவஞ்செய்யத் தானும்முடி யாது.[6]இனி
மாகப் புனலில் மகிழ்ந்தாடு வதேபலன்
ஆகு'மென நான்மறையோன் அடவாய் மனம்நினைந்து
அன்புடனே மாகஸ்நானம் அழகு நருமதையில்
ஒன்பதுநாள் தான்மூழ்கி, யுற்றதொரு பத்தாம்நாள்
205. ஓடும் புனலில் உகந்துமுழு கும்போது
நீடு மறையோன் நிரம்பமூப் பானதினால்
பனியால் உடல்நடுங்கி படபடத்துக் கால்நடுங்க
தனியே யலமலந்து தள்ளாடி மெள்ளமெள்ள
'அரிகோவிந் தா'வெனவே அன்றுஅவன் சொல்லியந்த
210. விரிபுனலி விட்டு வெளியிலே றும்போது
தட்டுண்டு வீழ்ந்தான் தரையில்; அவன்மடிந்தான்.
மட்டுண்ட பொன்னூட்டில் மகிழ்ந்துசில நாளிருந்து
மீண்டும் மற்றுசெனனம் வேதியனு கப்பிறந்து[7],
[8]காண்ட பலன்கொடுக்கும் கனத்தபிர யாகைகதி
215. தன்னில் ஒருமாதம் தழைக்கும்புகழ் மாகஸ்நானம்
நன்னயமா க-முழுகி நான்மறையோ னும்மாண்டு,

---

1. உயிர்களிடத்தில் தயை (அருள்) இரக்கத்தினும் வேறுபடுத்தப்படுகிறது
2. காசியாற்றங்கரை
3. [ஞ்தாவ]
4. பொருளின்; பொருள் (கதை) களில் வைத்து
5. [ய]
6. [யி]
7. பிறந்து. மான்டு அடைந்துஎன்று நீரு தல் காண்க இவை எல்லாம் முற்றுக வரல் வேண்டும்
8. கண்ட காண்ட என வரும்

பிரமலோ கம்அடைந்து, பிரம னுடசபையில்
ஒருகற்ப கோடி கால்ம் [1]உகந்திருந்து,
அப்பால் மறுசெனனம் அழகான காசிதனில்
220. [2]தப்பாத மாமறையோன் தன்மகனு கப்பிறந்து,
தேவர் புகழுஞ் செப்பமுள்ள கங்கைதனில்
ஓவிய மாக ஒருமாத மாகஸ்நானம்
ஆடினன்; அந்த [3]அரிய பலாபலத்தால்
நாடும் புகழ்மறையோன் [4]நாட்டமுட னேமடிந்து
225. அரிஅயனுங் காணுத [5]ஆனந்த சோதிபதம்
பெருமையுடன் பெற்றான்; பிறவா [6]கதியடைந்தான்.
ஆனதினுல் மன்னு! அனியாய [7]மாகொடுமை
தான்நடத்தி வாழ்ந்த சண்டாள மாமறையோன்
[8]ஆகின்ற காலமெல்லாம் அனியாயந் தானடத்தி
230. சாகின்ற காலமதில் தழைக்கும் நருமதையில்
பத்துநாள் மாகஸ்ஞனம் பரிவாக மூழ்குபலன்
சித்திரப் பொன்னுடு சென்றுவெகு நாளிருந்து
செய்ய மறுசெனனம் செல்வப் பிராமணனுய்
வையகத்தி லேபிறந்து வளர்ந்துபிர யாகையிலே
235. ஒருமாதந் தான்மூழ்கும் உற்ற பலத்தாலே
பிரமன் வளர்பதியில் பெருமையுடன் சென்றிருந்து
மூன்றும் பிறப்புதனில் முதியமறை வேதியனுய்,
[9]மான்றேர் அருள்பெ[10]றுகும் வளமான காசிதனில்
வந்து பிறந்து மருமணக்குங் கங்கைதனில்
240. திங்கள் தனேமுடித்த செய்ய சடைக்கடவுள்
பங்கய பொற்கமலப் பாதமிகப் பெற்றுன்காண்![11]
என்று வதிட்டன் இனியசுவா தன்கதையை
வென்றியுள்ள வேந்தனுக்கு விளம்பினன் ஓவியமாய். 243

பத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

---

1. முதற்சீர் கடைச்சீர் மோனை
2. தவறு செய்யாத
3. [ய]
4. கடவுள் நாட்டமாக
5. இன்ப அறிவான சிவபதம்
6. வலியிகவில்லை [நு] நெதி; [செல்வம்]; ஆகலாம்; நெறி நேதியாக வந்திருக்கலாம் நதி = வணக்கம் எல்லோரும் வலங்கும் சிவப்பேறு என்றுமாம்
7. பெரிய
8. வாழ்கின்ற
9 மான்றோர்
10. [ரு] 'கு' வரல் காண்க
11. கதையைத் திருப்பித் திருப்பிச் சொல்வதனை இத்தகைய இலக்கியங்களில் உலகெங்கும் காண்கிறோம்

இருபதாம் அத்தியாயம்

வீமன் ஏகாதேசி கதை

விருத்தம்(1)

என்றுமுனி வன்பின்னும் இரவிகுலத் தின்வேந்தே
நன்றிமா கமதியின் நலத்தையா ரேநவில்வார்
[1]அன்றிமக ரமதியீ ருறுமதி தனிலதிகம்
வென்றியிமை யோர்தம்முன் (பிக)மகவான் போல்
[விளங்கும்.[2]

நடை

5. என்று வதிட்டன் [3]இனியகதை தான்கூறி
வென்றி யுடைய வேந்தன் திலீபதியை
வல்லமுனி வன்நோக்கி [4]மாகமதி யின்பலத்தை
சொல்ல முடியாது, சொல்லவல்லார் ஆ[5]ருமுண்டோ?
பாங்காய் வளரும் பன்னிரண்டு மாதத்தினில்
10. திங்கில்லா மாதம் செல்வமக ர-மாதம்
பூராய மாகப் புகலுகிறேம். பொன்னுட்டில்
சீராக வேவளரும் தேவாதி தேவருக்கு
மன்னவ னுக வளருகின்ற இந்திரன்போல்
பொன்னின் மக ர-மாதம் புரவலனும் மன்னவனே!
15. மகரமா தம்நீரில் மகிழ்ந்து முழுகு[6]வர்க்கு
வெகுபுண்ணி யங்கள்வரும்; விரதம் இருந்தவர்க்கு
மகரரா சி-யுதிக்கும் வாகான தைமாதம்
புகலுகின்ற சூரியன்தான் பொங்கமுட னேவரும்நாள்
அதுமகர மாதம், அம்மாதத்[7]தி லேயெழுந்து

---

1. [அன்றி மாகமதிய மீருர்தலில் மாக மதிய]
2. காய்ச்சீர் 4 வந்த நாலடித்தரவு கொச்சகம். மாச்சீர் 6 வந்த அறுசீர் விருத்தமாகவும் கொள்ளலாம் 3-ஆம் அடி அன் 'அன்றி மாத மீராறதவில் மாக மதிகம் என வரும் 4-ஆம் அடியின் கடைசி 2 சீர்போல விளங்கும் என்ருல் மிகஎன்பது இராது; அப்போது அடிக்கு 15 எழுத்து
3. (யி)
4. [மகரமதி]
5. [ரு]
6. ஆர் என்றே பேச்சு வழக்கில் வருவது அர் என வருவது பாப்பன வழக்கு
7. 'தி' கூன்போலாம்; அல்லது 'அம்மா, நீரையசையாம்

20. கதிர்வருமுன் நீராடில் கனபலன்காண். கோமானே!
ஓவியமா க-மகரம் உதித்ததைமா தம்பிறக்கில்
பாவங்க ளெல்லாம் பயந்து நடுநடுங்கி
எங்கே [1]கெதியெனவே ஏங்கி மிகக்கதறி
பங்கமுடன் அய்யோ! பறந்தோடிப் போய்விடுங்காண்.

25. ஓவிய மாக உலகில் பிறந்தவுடன்
மேவிய [2]மாகஸ்ஞானம் விந்தையென வேயாட
விண்ணுலகில் வாழும் மிகத்தேவர் காந்தியெல்லாம்
மண்ணுலகில் நன்னீரில் வந்தடங்கு மென்றுசொல்லி
வேலுடைய மன்னோர்[3] மிகவணங்கு மாவேந்தே!

30. நால்வேத சாத்திரமும் நன்றாய் [4]மொழியிதுகாண்!
[5]ஆணவமாய் கைகருமம் அடக்கி யறிவுமுற்றி
[6]தானுபதத் தைநினைந்து தவத்தி லிருப்பவர்க்கும்
சீராடும் போர்[7]க்களத்தில் சினந்துவரும் வாள்முனையில்
போராடி வீரசொர்க்கம் புனிதமுடன் [8]பெற்றவரும்

35. தாண்டியதோர் வெய்யோன் தான்வளருந் தைமாதம்
வேண்டியே [9]மாகஸ்நானம் விரும்பினபேர் பெற்றபலன்
மன்னா! கிடையாது. [10]மாகஸ்ஞ ன-பலத்தை
என்னாலுஞ் சொல்லுதற்கு எட்டாது. காவலனே!
ஆரேனும் மானாலும் [11]அதியமக ர-மாதம்,

40. நேரே எழுந்திருந்து நெடிய மலையருவி
தன்னிலே மாகஸ்நானம் தான்ஆடி ன-[12]பேர்க்கு-
வன்னப் பலன்பெறுவார் மாமோட்சத் தைக்கொடுக்கும்.
ஆறு குளங்கிணறு அணுகி முழுகினவர்
வீறுடனே மாமோட்சம் மெத்தப் பெறுவார்காண்!

45. முதல்நாள் புதுக்குடத்தில் முகந்துதண்ணீர் [13]வைத்திருந்து

1. கதி=போக்கு
2. [மாஞ்தானம்] மாஸ்தானம் என்று கொள்ளலாம்
3. "மன்னவர்" மன்னோர் என மருவிற்றுப் போலும்
4. மொழிகிறது
5. ஆணவம் மாயை கருமம் என்ற மும்மலம்
6. சிவன்தாள்
7. [ற்]
8. பெற்றவர்க்கும்
9. [மாகஸ்த்தானம்]
10. [மாஸ்த்தானம்] மாகத்தானம்
11. அதிக; பிறந்த
12. பேர்க்குக் கொடுக்கும் என முடிக்க பிற புண்ணியம் செய்வோர் பெறும் மோட்சம் என்க
13. வைத்திருந்து குளித்தால் (குளித்தோர்)

காசி தனில்சென்று கங்கைதனில் மூழ்குகின்ற
நேசப் பலன்பெறுவார்; நிமலர் பதம்பெறுவார்.
இப்படி [1]மாகஸ்நானம் இனிதாக வேயாடி
செப்பமுட னேவிரதம் சீரா இருப்பவர்கள்

50. எண்ணெயிட்டு மூழ்காமல் இனிதாகத் [2]தெண்ணீரில்
வண்ணமுட னேமூழ்கி மாத முடிவுதனில்
வேதப் பிராமணர்க்கும் மிக்க பெரியவர்க்கும்
போதமெனத் தானதன்மம் பொங்கமுட னேகனிவாய்
கொடுத்து மகாவிரதங் கூட்டி முடித்தவர்கள்

55. [3]வடுப்படாக் காட்சிபெற்று வைகுண்டந் தான்அடைவார்
தப்பிதம்இல் லையுனக்கு சாற்றினே மிப்பலனை
எப்படிக்கொத் தபேரும் [4]யியம்ப முடியாது.
சீரான மன்ன திலீபதிரா [5]சாவேயின்னம்
ஆராலு [6]மாகபலன் ஆளவிட்டுச் சொல்லரிது.

60. சொல்லத் துலையாத சுகியான மாகபலன்
சொல்லுகிறேம். இந்தத் தொல்லுலகை [7] ஓர்குடையில்
கோலமுட னாளுகின்ற குருகுலத்தின் வேந்தர்தனில்
வேலுடைய செங்கை மிக்கதொரு பாண்டுமன்னன்
தாட்டிகமாய் ஈன்றெடுத்த தன்மர் தனக்[8]கினைய

65. திட்டிய வேல்வீரன் சிங்கமெனும் போர்வீரன்
மகரமா தந்தனிலே வரும் ஏகா தேசிதனில்
அகமகிழ நோன்பிருந்து அவன்பெற்ற பேறுதனை
நன்னயமாய்ச் சொல்லுகிறேம். நற்பான வீமனவன்

---

1. [மாகஸ்த்தானம்]
2. தெளிந்தநீர் கலங்கிய நீரை விட்டிற்குக் கோரைந்து தெளிய வைத்தநீர்
3. குற்றமில்லாத தெய்வஞானம்
4. பி-இ
5. 'வே'போல் ஒலிக்கும்
6. மகரமாதம் தைமாசம். தைந் நீராட லே இங்குக் கூறப்படுகிறது தை அமாவாசையி லிருந்து மாசி அமா வாசைவரை மாகமாசம் என்று சாந் தீராயனக் கணக்கில் ஒரு முறைப் படி வழங்கப்பெறும். ஆதலில் மாக ஸ்நானம் எனப்பெறும். ஆனல் இந் த நூல் கணக்குப்படி ஏகாதசியில் தொடங்கும். கார்த்திகை முதல் மார் கழி; மார்கழி முதல் தை: தை முதல் மாசி; ஆக மூன்றும் மாகஸ்நானம் எனப் பெறுதலைப் பின்னே காண் போம்
7. எது சொல்லத் தொடங்கினலும்; உலகம் என்று தொடங்கி வினாத்து வினாத்தும் பின் கதைக்கு வருவது காண்க
8. இனையவர், தீட்டிய வேல் (வீரன்) பெயரைச்சுத்தில் இடைப் பிறவரல் காண்க

தன்னுடைய ஆசானைச் சாஷ்டாங்க மாய்வணங்கி
"என்குருவே! என்தேவே! எங்கள் குடிக்கரசே!
பொன்வளரும் புண்ணியரே! பூசுரரே! தேசிகரே!
அடியேன்விண் ணப்பம்ஒன்று. அய்யரே! சொல்லுகிறேன்.
வடிவுடனே தான்கேட்டு வாக்குரைப்பீர் எந்தனுக்கு.
[1]திரியோத னன்முதலாய் சோர நூற்றுவரும்
பெரிய சகுனியொடு பே[2]ரான மன்னவரும்
என்னைப் பழிக்கிறார்; இனி[3]யசிங்கம் பேசுகிறார்
வன்னமுள்ள வீமன் மடையனே ஏ[4]தோதான்
விரதம் இருந்தறியான் மிக்கஏகா தேசிதனில்
ஒருபோதும் உண்ணுமல் உகந்து இருந்தறியான்
ஏற்றமுள்ள வீமன் ஏகா தெசிதனிலே
[5]சோத்தை[6]உங்கி ருனெனவே சொல்லிச் சிரிக்கு[7]கிறார்
[8]பொழு துதிக்கு முன்னுக போகுமென்றான் [9]செய்யாட்டால்
பழுதில்லா மல்குருவே! பசிபொ[10]றுக்க மாட்டேனுன்.
உள்ளதுதான் சொன்னேன். உத்தமனே! [11]என்னுடையோர்
மெள்ள நகையாமல் வீணனென்று சொல்லாமல்
ஏகாதே சிவிரதம் இனியிருக்க வும்வேணும்.
வாகாக வேஅடியேன் வயிறும் பசியாமல்
[12]உங்கவும் வேணும். உகந்தஏகா தேசிபலன்
பங்கமின்றி ஓர்வருஷப் பலனும் பெறவேணும்.
இந்தப் படியிருக்க எனக்கு [13]மதிஉரைத்தால்
விந்தையுள்ள மாதவரே! விரதமிருந் துமுடிப்பேன்.
உண்ணுமை லேவிரதம் ஒருபோது மேயிருக்க,
தண்ணரு மாகுருவே! தாங்காது என்னுலே;
இதுக்கு வகைஎனக்கு இனிதாகச் சொல்லுமென

---

1. து. தி
2. [ரு]
3. இனிய கூட்டம் கூடி எம்மை ஏசிப் பேசுகிறார் என்றும் ஆம்
4. [யே]
5. சோற்றை
6. உண்
7. 'கு' காண்க
8. சூரியன்
9. செய்யாவிட்டால்
10. [ரு]
11. என்னைச் சேர்ந்தவர்கள்
12. ஷ-6
13. புத்திமதி

95. [மதத்தோளும்] போர்வீமன் வணங்கி மிகக்கேட்டான்.
தன்மர் தனக்கினியோன் தாழ்ந்து மிகக்கூற
நன்மைசெறி மாகுருக்கள் நவிலுவார் வீமனுக்கு:
சீராறும் பாண்டுபெற்ற செல்வமுள்ள மால்வீமா!
வாராய்! உனக்கு வசமுடனே [1]சொல்லுறேன்கேள்!
100. தேவர் புகழுஞ் சிறந்தமக ர-மாதம்
ஓவிய மாக உகந்துவளர் மாபிறையில்
ஏகாதே சிவிரதம் இருந்தாயே யாமாகில்
வாகாக தா[2]னேஒரு வருஷப் பலன்கிடைக்கும்.
பட்டினியோ டேவிரதம் பண்ணுதற்கு உன்னுலே
105. கிட்டாது என்று [3]கெடிவீமா சொன்னயே.
நான்சொன்ன சொல்படியே நற்பான மாவீமா!
தான்விரதம் நீஇருந்தால் தானேகோ டி-பலனும்.
சூரியனைக் கண்டவுடன் தொலைந்த இருள்போலே
[4]ஆரிவிடும் பாவம்; அகன்றுவிடும் நில்லாது,
110. கங்கை முதலாய் கனத்தபிர யாகைதனில்
பொங்கமுடன் நாளும் போய்முழுகு கின்றபேர்க்கு
வீறுடைய லோகமெல்லாம் மிக்காகக் கொண்டாட
நூறுஅசு வயாகம் நூடங்காமல் செய்தவர்க்கு
பொன்மேரு போலே பொருளை மிகக்குவித்து
115. நன்மையொடு தானதன்மம் [5]ரொம்பவே செய்தவர்க்கும்
வாகாகச் சொல்லும் [6]மாகமாத தைதனிலே
ஏகா தெசிவிரதம் இருந்தபலன் போல்எவர்க்கும்
பாதிப் பலன்தானும் பாங்காய்க் கிடையாது.
தாதுலவும் பூமார்பா [7]தமிழ்வீமா! இன்னமுங்கேள்!
120. ஓசைக் கடல்சூழ்ந்த உலகத்தில் உள்ளவர்கள்
நேசமுட னேநோன்பு நிரம்ப[8]இருக் கும்பலன்கள்

---

1. சொல்லுகிறேன்
2. 'னே' என ஒலிக்கும் அல்லது ஒரு என்பது கூறிபோலாம்
3. ஆற்றல் உள்ள
4. ஆரி துலை காண்க
5. ந-ர மோனை; 'ர'தானே?
6. மாகமாதம் தைமாதம் என முன்னரே விளக்கியமை காண்க
7. இனிய
8. [யி]

தன்னேஒரு தட்டிலே[1]யும் தழைக்கும்ஏகா [2]தேசிபலன்
தன்னேஒரு தட்டிலேயும் தான்வைத்து [3]தூக்குகின்றுல்
ஏகா தசிபலன்தான் இருக்குங் கனமாக.

125. வாகான வீமா! மாபெரிது இவ்விரதம்.
இவ்விரதம் போலே இனிமேல் விரதமில்லே.
செவ்விதா ன-விரதம் சிறப்பா [4]இருப்பதற்கு
[5]வழிபாடு சொல்லுகிறேம். வரும்ஏகா தேசிதனில்
தெளிவான வீடுதனே சிறப்பா யலங்கரித்து

130. சுத்திபண்ணி நோன்பிருந்து தூயபுன லில்மூழ்கி
புத்தியுட னேமனேயில் போதவே நெல்[6]பறத்தி
பூரணகும் பம்வைத்து பொன்[7]பரிவட் டந்தரித்து
சீரிணங்கும் தங்கமதால் திருமாலே யுண்டுபண்ணி
அக்கும்பத் தில்சாத்தி [8]யாகுவா [9]கனம்புரிந்து

135. மிக்க[10]சன்னி தான மிகு[11]சன்னி ரோதனமாய்
பூசை புரிந்து பூவெடுத்துத் தான்சாற்றி
நேசமுள்ள சாஸ்திரத்தின் நெறிகள்தப் பாதபடி
[12]சோடசோப சாரமுடன் துளபமணி மாயவனே
தேடியே பூசை சிறப்பாக வேமுடித்து

140. வெந்த பயறுடனே வேகுகின்ற சிற்றாணும்
முந்தவே தின்னுமல் முற்றியதேங் காய்கரும்பு
[13]பச்சைப் பதார்த்தம் பாங்காக வேயிளநீர்
இச்சை யுடன்பொதித்து இவ்வண்ண மாகப்பூசை
கண்ணுறங்கா மல்இருந்து கங்குல்நாலு சா[14]மத்திலும்

145. வண்ண முடனே வளருஞ் சிவகதைகள்

---

1. லே=லை
2. தொன்றும் தே எல்லாம் ஏகாதசியில் உள்ளது ஒலிக்கும்
3. தூக்கி நிறுத்துப்பார்க்க முடியுமானால்; கின்று காண்க
4. [யி]
5. வழி முறை
6. பரப்புவித்து; ர, ற
7. துவி
8. ஆவாஹனம் - எழுந்தருளும்படி கட வுளே மந்திரம் ஒலித்து அழைத்தல்
9. [த]
10. கடவுளே ஆவாஹிக்கச் செய்தல்
11. கடவுள் சுற்றிக் காட்டும் இடத்தில் அமைத்தல்
12. 16 உபசார வழிபாடு
13. வெள்ளரிக்காய் முதலியன
14. மத்தி நிரையசைபோலாம்

புண்ணியபு ராணப் புகலுந்திரு மால்கதைகள்
[1]எ ண்ணெழுத்தோன் சொல்ல[2] இனிதாகக் கேட்டிருந்து
இந்தப்படி [3]ராமுழுதும் இனிதாக [4]முழித்திருந்து,
விந்தையுள்ள வெய்யோன் விடிந்துதைய மாகுமுன்னே
மெத்த விருப்பமொடு வேண்டியுப சாரமொடு
சித்திரம்போல் கும்பமிசைத் திருமாலைப் பூசைசெய்து
குருக்கள் தனையழைத்துக் கும்பமொடு சாமியையும்
உருக்க முடன்கொடுத்து ஓவியமா சுத்தானே
வேதப் பிராமணர்க்கு மிகுபோ சனங்கொடுத்து
ஆதவனும் கீழ்பால் அன்பாய் எழும்போது
தன்கிளைஞர் சூழத் தாய்தந்தை தான்சூழ
நன்மை யுடனே நல்விருந்து தான்சூழ
இருந்தமுது தானருந்தி இனியவிர தம்முடிக்கில்
பொருந்து புகழ்வீமா! பூமி தனில்[5]பிறக்கார்'.
என்றுதான் வீமனுக்கு ஏகா தெசிவிர தம்
நன்றியுட னேகுருக்கள் நற்பாய் மிகமொழிய
'நல்ல'தெனப் போர்வீமன் நற்குருக்கள் சொன்னபடி
சொல்லும்ஏகா தேசிதனில் சோம்பாமல் நோன்பிருந்தான்.
தன்குருக்கள் சொன்னபடி தப்பாமல் கும்பம்வைத்து
பொன்[6]னுருவும் பண்ணிப் பூசைமிகச் செய்தானே.
பகல்கால முற்றும் பட்டினியோ டேயிருந்து
[7]செகச்சால நாயகனைச் செழும்பூசை செய்ததினால்
கொடிய பசிமிகுந்து [8]குரூவி முகம்வாடி
நெடிய போர்வீமன் நெஞ்சுலர்ந்து வாய்காய்ந்து
தாகம் பெரிதாகித் [9]தவித்துப்பசி தாங்காமல்
[10]ஆக மெலிந்து ஆயாச மாய்ச்சோம்பி

---

1. எழுதியதனைப் படித்து எண்ணங்களை விளக்கும் புராணப்ரசங்கி
2. [பி]
3. இரா
4. வி
5. பிறவார்
6. விக்கிரகம்
7. மாயம் வல்ல திருமாலை
8. வாடி வதங்கி
9. 'ப்' ஒலியாதுபோலும் அல்லது 'பசி' கூன் போலார்
10. உடல்

சீவன் விடுவார்போல் [1]நியக்கும் பெருமயக்கம்
[2]ஆவல் மிகுந்து 'அய்யோ'! வெனவேங்கி
சிங்காரத் தோப்புதனில் [3]திண்டோ தரவீமன்
பொங்க முடன்சென்று பொங்கு ப்சிக்காக
ஆடுங் குலையிளநீர் [4]அய்ஞ் ஞூறு தான்குடித்தான்.
நீடும் பலாப்பழந்தான் நிரம்பஓ ராயிந்தான்
தின்ருன்காண் அப்படியுந் தின்று மவன்பசிதான்
குன்ரும லய்யோ கொடுமையா கக்காந்த
அந்தப் பசிதனக்கு ஆற்ருமல் போர்வீமன்
விந்தை யுடனே விளங்கும்இரண் டாயிரமாம்
[4a]வாளைக் குலைப்பழத்தை வாயார வுண்டுமவன்
தேளைப்போ லேதுடித்துத் தியங்கினன் மாபசியால்.

விருத்தம்(2)

மொழியார் கரும்புப் பெருங்கட்டு
மூன்னூ ரருந்தித் தீ[5]ந்தேதறல்
வழியார் கதலீ நெடுங்குலைகள்
ஈரைஞ் ஞூறு வ[6]குத்துண்டு
பொழியா(ன்) [7]குழம்பு மிகவருந்திப்
போகா துயிரைப் புறங்காத்து
[8]விழியா[ர்]விருந்து நிசிகழித்துப்
புலரிப் போதின் விரைந்தெழுந்தே.[9]

நடை

கரும்பிலே மூந்நூறு, கட்டுடனே தேன்குடங்கள்
திரும்ப ஒரு நூறு தீ[10]ன்பால் குடம்நூறு
[11]மருத்துமோர் ஆயிரந்தான் வாழைப் பழக்குலைகள்

---

1. தீகைக்கும்
2. அவலம்; ஆவலித்தல்
3. திண்டோன்தரள், குண்டோதரன் போல வோ?
4. ஐந்நூறு
4(a). வாழை வகை
5. [ன்]
6. [ரு]
7. குழம்புப்பால்
8. வீழித்து
9. மா.மா-காய் இரட்டித்துவரும் அரசீர் விருத்தம்
10. ம்
11. மறித்தும் வகை காண்க

பெருக்க முடன்றின்று பேரான போர்வீமன்
உடல்விட்டுச் சீவன் ஓடியே போகாமல்
திடமபெற்ற வீரன் தியக்கமொடு தான்வருந்தி
பசி[1]த்தாகம் மீறிப் பாரவுடல் தான்சோம்பி

195. [2]இசித்தமுள்ளுத் தூண்டி(ல்)தனில் ஏறிட்ட மீன்போலே
கண்ணு முறங்காமல் கடிதாக ராமுழுதும்
வண்ணமுட னேமுழித்து மாவேந்த னும்இருந்தான்.
இப்படியே வீமன் இனியஏகா தேசிதனில்
செப்பமுடன் ராமுழுதும் திருந்தவே முழித்திருந்து

200. காலைப் புனல்முழுகிக் கதிரோன் உதிக்குமுன்னே
மாலைத் தொழுது மாபூசை தான்முடித்து
நெய்விட்டுச் [3]சோத்தை [4]நீகள மிகப்பிசைந்து
கையிட்டு ளெண்டைசெய்து கடிய பசியாலே
உலர்ந்தநெஞ்சு தா[5]னிகழ [6]ஊத்தியநெய் சோறுதனை

205. அல[ர்]ந்த வரைப்போலே ஆவலுடன் வாரியுண்டு
பொரிக்கரியோ டேதுவட்டல் புனித பருப்புடனே
[7]நருக்குங் கறிகுழப்பு ரோம்பவிட்டுச் சோறுஉண்டு
வெள்ளமெனப் பால்குழம்பு விட்டுத் தயிருடனே
அள்ளுப்[8]பர மானமுடன் [9]அடைபணியா ரஞ்சோறும்

210. உண்டும் அவன்பசிதான் ஒடுங்காம லேவீமன்
வண்டுலவும் பூந்தோளான் வாயுமக னைதினுல்
வெங்கொடிய மாபசியால் வேந்தன் அ[10]றமெலிந்து
பொங்குகின்ற வா[11]யுவையுண்டு பொல்லாப் பசிதணிந்தான்.
மாமலரும் பூமார்பா! மன்னு! நிலீபதியே!

215. வீம[ன்]ஏகா தேசியென மிக்கபே ருண்டாச்சு.
ஆனதினுல் இவ்விரதம் அரிதான மாவிரதம்.
நான்சொன்னேன் இவ்விரதம். [12]நடத்தை புகலரிது.

---

1. வலிமிகல் காண்க
2. இருத்த-ழ,ச
3. சோற்றை
4. நீன
5. நெகிழ
6. ஊற்றிய
7. ந- ரொ மோனை
8. பாயசம்
9. [ய]
10. [ர[
11. 'யு' 'ய்' போல் ஒலிக்கும்
12. நடத்தலால் வரும் பயன்

இந்த விரதம் எவரே முடித்தாலும்
அந்த மெனவே அடைவார்கள் புண்ணியபலன்
துன்பக் கடல்வீழ்ந்து துவளுகின்ற பாவிகளே
இன்பக் கரைசேர்க்க இவ்விரதம் மாதோணி;
பண்ணும்பல வேள்விதனில் பாங்காய் உயர்ந்ததுதான்;
வண்ணமுடி வேந்தா! வளர்க்கும் அகவயாகம்.
மலைகள் தனிலேதான் வாகாய் உயர்ந்தாலே
சிலையுலவு கையாய்! செய்யமகா மேருகிரி,
சிவகணத்துக் குள்ளே சிறப்பாய் உயர்ந்தகணம்
தவமுடைய மன்னுகேள் தரணியுண்ட [1]மாயவனும்.
பொங்கமுள்ள மாநதியில் புகழான புண்ணியநதி
சிங்கம் நிகர்மன்னு! சீரான கங்காநதி.
நட்சத் திரங்கள்தன்னில் நற்பாய் உயர்ந்ததுகேள்
[2]அட்சமில்லா வேந்தே! அழகான சந்திரன்காண்.
பகரு விரதமதில் டாங்கான மாவிரதம்
மகரரவி [மாதத்ததனில்] மாகஸ்நா ன-விரதம்[3].
கொடிய மகாவிசத்தைக் கொப்பளிக்கும் பாம்பினங்கள்
வடிவுடைய மாகருடன் வரும்போதி லேபயந்து
ஓடுவது போ[4]லேயல்லோ உகந்திடுதை மாதமதில்
நீடியதோர் வெய்யோன் நிறைந்துவரும் நாளையிலே
பாவமென்ற தீவினைகள் பதறிப் பயந்துஅஞ்சி
ஓவியமாய் வே[5]ரோடே ஒருமிக்க கெட்டுவிடும்.

விருத்தம்(3)

மதியில்லா வானம் போன்றும் மலரில்லா வாவி போன்றும்
நிதியில்லா இளமை போன்றும் நெய்யில்லா அடிசில் [போன்றும்
நதியில்லா நகரம் போன்றும் நட்பில்லா உறவே போன்றும்
விதியினுல் மாகத் திங்கள் புனல்புகான் விளச்சம் அன்றே.[6]

---

1. ஆசிரியர் சைவர்
2. அச்சம்; தெய்கை நோக்குக கூ ச னை வருவது இந்நூல் வழக்கு
3. தடுத்துக்காட் டுவமையணி
4. 'லே' 'லே'போல் ஒலிக்கும்
5. [ரே]
6. காய், மா, ம இரட்டித்துவரும் அறுசீர் விருத்தம் விள, மா, மா இரட்டித்து வரும் விருத்தம் எனினும் ஆம்: அப்போது மதியில்லா முதலிய காய்ச் சீரை. மதியிலா முதலிய விளச்சீராக் கொள்க

நடை

இனியதொரு சந்திரன்தான் இல்லாவா னம்போலும்
வனசம்எனும் தாமரைதான் இல்லாவா விபோலும்
இலங்குகின்ற கைப்பொருள்தான் இல்லான் இளமைபோலும்,
துலங்கவே நெய்வார்த்துச் சோரவுண்ணுச் சோறுபோலும்.
நிதியில்லா ஊர்போலும், நட்பில்லா ராசைபோலும்,
விதியினுல் மாகஸ்நானம் விரும்பாதான் [இக்குணமே.]
எந்த விரதம் இனிதா யிருந்தாலும்
விந்தையுள்ள மாகஸ்நானம் விரதமிருக் காதவர்க்கு
பலியாது மன்னு! பலனுமில்லை சூரியன்முன்
மலிவான தையின் மகரத்தி லேவரும்நாள்
விடிய எழுந்திருந்து வெம்புனலி லேயிறங்கி
வடிவான ஈசுபரனை மனதில் மிகநினைந்து
சிவசிவா ஓம்நம சிவாயசி வாய[1]வென்று
பவம்[2]றவே முக்காலும் பாங்காக வேஓதி
'அரிகோவிந் தாராமா! அரிநாரா யணதேவா!
அரிகரி!யென் றேபுனலில் ஆடுவான் தேவர்பதி
சென்று மகிழ்ந்து சிறந்ததெய்வ மாதருடன்
நன்றியுட னேகலந்து நட்பாக வீற்றிருப்பான்.
வாகாக வேதான் மாகஸ்நா னபலனை,
ஏகா தெசிவிரதம் இருந்தோர் பெரும்பலனை,
வேதங்கள் கூட விளம்ப மிகஅரிது.
பாத(க)ங்கள் செய்யும் பாங்கான மானிடர்கள்
இந்த விரதம் எடுத்தாரே யாமாகில்
எந்த வினையும் எரிந்து மடிந்துவிடும்.
மோட்சமெனும் வீடுபுக முற்றுமிது மாபொருள்காண்.
மாட்சியுள்ள மன்னு! வரிசையுடன் சொன்னேங்காண்'.

---

1. [மெ] 2. [ர]

270. என்று வதிட்டன் இனிய திலீபதிக்கு
வென்றியுடன் சொல்லி விளம்புவான் பின்னுமொன்று.
'தவம்பெருகும் வேந்தே தழைக்கும்மாக [1]மாததையிலே
சிவராத் திரியெனவே சிறப்பாய் ஒருவிரதம்
உண்டுகாண். அந்த உற்றவிர தபலனை
275. கண்டுசொல்ல முற்றுது. கனவிரதப் புண்ணியத்தால்
வேடன் ஒருவன் விளம்புஞ் சிவலோகம்
நாடிஅடைந் தா'னென்று நல்வதிட்டர் சொல்லுகிறார். 277

இருபதாம் அத்தியாயம் முற்றும்.

1. மாதத்திலே

இருபத்தொன்றும் அத்தியாயம்

வேடன் கதை

விருத்தம்(1)

முகமனெடு நீதிசொல் முனிவனிது கூறவே
அக மகிழ்வி னே[1]டிதோர் ஆச்சரிய மென்றனன்.
சிகரவரை மீதின்வாழ் சிவனிசியின் மான்மியம்
புகரினைய தேசிகா புகல்தியென வோதினன்[2].

நடை

5. முகம்மலர்ந்து இக்கதைதான் முனிவன் மிகக்கூற
சகம்புரந்த மன்னன் சிந்தையுட னேகேட்டு
அன்பு பெருகி ஆச்சரிய மாய்மகிழ்ந்து
பொன்பொருந்தும் வேந்தன் புயங்கள் மிகமீறி
[3]சிங்கேறு போலேவளர் திலீபதிரா சன்குருவை
10. பொங்க முடன்வணங்கிப் [4]புகரினைய தேசிகனை
'சிகரமிகு வெள்ளிமலைச் [5]சிவனிசியின் மான்மியத்தை
புகலு'மென வேகேட்கப் புகலுவா னேவதிட்டன்.
'தவம்பெருகும் மன்னா! தரணியா ளுந்திலீபா!
சிவனுக் குகந்த சிவனிசியின் மான்மியத்தை
15. சொல்லுமேறும். வேதஞ் சொல்லுங்கும்ப [6]மாத்தையுடன்
நல்ல[7]மீன மாதம் ரெண்டும் பொருந்தும்தினம்
பாங்கான திங்கள் பதிந்தெழுந்த நாளையிலே
தீங்கில்லா மன்னா! சிறந்த அமரபட்சம்

---

1. [டேடோன்]
2. விளங்காய்-வின இரட்டித்து வந்த நாற் சீர்க்கலிவிருத்தம் தனதனன தானனு தனதனன தானனு என்ற சந்தம் என்னுமிடத்தில் 'தா' வரும்
3. சிங்க ஏறு
4. சுக்கிராச்சாரியர்
5. சிவன் நீரி; சிவநீரியுமரம் வெள்ளிமலையிலுள்ள சிவனது இரவு; சிவனுக்குரிய நோன்பு பிற இரவுகள் சத்திக்குரியவை
6. மாதம் மாத்தனன வருகிறது கும்பம் மாசி
7. மீனம்=பங்குனி

பதினாலாம் நாளில் பகருஞ் சதுர்த்தசி
அதிக சிவன்தனக்கு அற்புத மானகாலம்.
அரகரா! சம்போ! [1]அன்னாள் மகிமைதனை
ஒருவரால் சொல்ல ஒவ்வாது. காவலனே!
ஆனதால் அந்த அரிய சிவனிசியில்
தேனுலவும் வில்வஞ் சிவனுக்குச் [2]சாத்துகின்றால்
அவரே கயிலாயம் அடைவார்; பதம்பெறுவார்:
புவனமெல் லாம்புரப்பார்; புண்ணியனென் றேயிருப்பார்.
யாகத்தி லேஅதிகம் அசுவ மேதயாகம்.
[3]வாகொற்ற மன்னா! மலையில் மகா[4]மேரதகம்
வேதத்தி லேசாம வேதம் அதிகம்-மிக
ஒதும் விரதமதில் [5]உயர்ப்புச் சிவனிசிகாண்.
வானமுட்ட வேவி[6]றகு வடுக்கியதி லேதியை
தானிட்டா லேநெருப்பு [7]சணத்திலே நீரு[8]க்கும்
பாருலகில் செய்யுகின்ற பாவமெல்லா மோர்விறகு;
சீருலவு கின்ற சிவனிசியோர் அக்கினிகாண்!
அப்படியா[ய்] க்கொத்த அதிக சிவனிசியில்
செப்பமில்லா வேடன் சிவனப்பூ சித்தகதை
நன்றியுடன் [9]உன்தனுக்கு நானறியச் சொல்லுகிறேம்.
வென்றியுள்ள வேந்தா! விருப்பமுட னேகேளாய்!
சாகரமே ஏழுமையா தான்சூழ [10]மண்டபத்தில்
சாகரமென் றேபேரு தான்பெற்ற வோரு[11]ரு
அவ்வூரைச் சுற்றி அலைகடலைப் போல்வளைந்து
செவ்வே யிலங்கும் சிறந்ததொரு நற்கோட்டை

---

1. அந்நாள்
2. சாத்துகின்றார் அல்லது சாத்தி நின்றால் அல்லது சாத்த முடியுமானால்
3. தோள் ஒத்த (Symmetrical) அல்லது தக்க; 'வாருகொற்ற; என்பதன் மரூஉ வும் ஆம் வா கொற்ற மன்னா என்றுமாம்
4. மேரு அதிகம்
5. உயர்பு என்பது பழைய வடிவம். 'ப' என்பது b யென்ற ஒலி சில இடத்துப் பெற்றபோது பழைய ஒலியை இரட்டித்த பகரம் இட்டே எழுதினர் போலும்
6. [ர]
7. கணத்திலே
8. [ரா]
9. [த்]
10. மண்டலத்தில்
11. [று]

கோட்டையொடு கோபுரமும் கோலமிகு பூங்காவும்
தாட்டிகமா கவளரும் ச(ர)கர[1]மென் றூர்அடுத்து
பொங்கமுட னேவாழும் பொல்லாத மாவேடன்
அங்குலன்என் றேபேரு அவனுக் [2]களித்திருக்கும்.
சற்றும் இரக்கமில்லான்; தழல்போல் சிவந்தகண்ணன்;
குற்று[3]டைவாள் சே(ர்)த்திருக்கும் கொடிய மருங்குடையான்;
வெங்கொலைக்கு அஞ்சான் வேட்டைமே லே[4]கனிந்தோன்;
செங்குருதி தோய்ந்து சிவந்திருக்கும் கைகதத்தான்;
வேட்டைக் க[5]றியை வெதுப்பாமல் ப[6]ச்சையோடும்
தாட்டிமை யாக தானருந்துஞ் சண்டாளன்;
ரத்தக் [7]கவிச்சியொடு நா[8]றமுக மும்வாயின்
முத்துவெள்ளைப் பல்லில் மொய்த்தலுத் தைவீசும்
ஈரமில்லா நெஞ்சன்; இனத்தோடே தான்கூடி
சிருடனே வாழ்ந்தறியான்; தீயிலேயும் பொல்லாதான்,
ஒருநாள் அவன்புகுந்து [9]உருவேட்டை தானுட
திருவாரும் வேடன் சிந்தை தனில்நினைந்து
[10][காலுக் கவசமிட்டுக் காடுதாங்கி சேர்த்து]
மாலுக் கிணையாக வரிந்துகருங் க[11]ச்சைகட்டி
உடைவா ளுஞ்சேர்த்து ஒங்குவில்லுந் தானெடுத்து
படையாருந் தூணிகட்டி பருத்தகம்பி ளிக்கயரூல்
கொண்டை வரிந்துகட்டி [12]கொடிக்கயறில் நாய்பிடித்து
சண்டனைப்போல் வா[13]ருவலி தானும் பலதெரித்து
வனத்தில் பறவைகளும் வல்விலங்குந் தியங்கியஞ்ச

---

1. என்ற ஊர்
2. அளிக்கப் பெற்றிருக்கும்
3. [யிர்]
4. விருப்பமுடையான்
5. [ரி]
6. [ட்]
7. புலால் நாற்றம்
8. [ர]
9. அஞ்சத் தக்க; 'உறு' என்றுமாம்
10. காலு + கவசம்; ஆக = கவசம்; காலாக எனச் சிந்தாமணி பாடும் இங்கும் "காலுக் காசமிட்டு" என்றிருக்கலாம்; கா-சை என்றிருக்கலாம். சாலக்கவசம் என்பது வலியாகிய கவசம் என்றும். சை என்பதற்கு மோனையாகச் சாடுதாங்கி என்பதே ஏற்றது. சாடு = கையிலிடும் உறை; அதனைச் சாடு தாங்கி எனவும் கூறலாம். கரடு தாங்கி எனக்காற்பரடுக்கிடும் உறையும் ஆகலாம்
11. [ட்]
12. கொடிக் கயிறு = முறுக்கேறின கயிறு
13. [று] வார்; உகரச்சாரியை

சினத்த முகவேடன் சென்றனே. வேட்டையின்மேல்
வெங்கொடிய வேடன் விரும்பி மிகநடக்க
[1]சிங்கிகொட்டிப் பேய்கள் சிரித்து[2]வா ளாளியிட்டு
'இன்று நமக்கு இரைகிடைக்கும் என்றுசொல்லி
70. வென்றியுடன் கூத்தாடி வேடன்பின் னேதுடர,
வன்னமுட னேமிருகம் வாழுமிடங் கள்பார்த்து
நன்னயமாய் மெல்லமெல்ல நடந்து மிகப்போனான்.
குருந்து மருதுவகை கோங்குபுன்னை வேல்கடம்பு
திருந்துபலா வன்னிவில்வம் செவ்வகத்தி [3]மாதகீமா
75. அத்தி[4]செவிந் திவேங்கை ஆலமரஞ் சூரைபன்னீர்
இத்தியொடு [5]நாங்குளுவு இலவுடனே தேக்குமரம்
அரசுடனே செண்பகமும் [6]ஆவரையாங் காரைநெல்லி
வரிசையுடன் பாதிரியும் மணக்குகின்ற வெள்ளுளுவை-
இதுமுத லாக இலங்கும் பலவிருட்சம்
80. மதுமலர்ப்பூ வண்டாட வானமுட்ட வேவளர்ந்து
கதிரோன் கிரணங் காண திருளடர்ந்து
[7]விதறும் பலமிருக மேவுந் தனிக்காட்டில்
அக்கினியி லுங்கொடிய ஆங்காரப் புனவேடன்
மிக்க நடுகாட்டில் விரைந்து வரும்போது
85. அவ்வனத்தில் சிங்கம் ஆனமத்த கம்பிளந்து
செவ்விய கொம்புஞ் செழுமுத் துடன்குருதி
திடத்துடைய வானரங்கள் செழும்மா தளம்பழத்தை
உடைத்தது போல ஒருபால் மிகக்கிடக்கும்.
[8]புத்தில் கருங்கரடி பொங்கமிட னேவர்யை
90. வைத்து[9]ருஞ்சுஞ் சத்தம் மண்டு மொருபாலாம்
புலியா னதுசீறிப் [10]புதையில் [11]பதிபோட்டு

---

1. துணங்கைக் கூத்து: முடக்கிய இரு முழங்கைகள் கொண்டு விலாப் புடைகளில் அடித்துக் கொண்டு அத்தாளத்திற் கேற்ப ஆடுதல்
2. வைதாளி = புகழ்ந்துபாடும் பாட்டு; வ-ஆ. ஐ
3. மாதுளை
4. செவந்தி
5. நாருலி
6. ஆவிரை
7. நடுங்கும்
8. புற்றில்
9. றி; உ, இ
10. புதையல் (மறைகை)
11. பதுங்க

வலியான பன்றிதனை மண்டி யடிக்குமோர்பால்.
செவ்விய மானுடனே சிறந்தகலை புல்வாயும்
[1]தவ்வி விளையாடித் தானோடும் மோர்பாலாம்.

95. கொம்போடு கொம்புசிக்கிக் கொண்டு கருங்கலைகள்
[2]சிம்புந் தலைகுலுக்கிச் சினந்துபா யுமோர்பால்.
குறுமுயல்க ளஞ்சி குதித்தோடு மோர்பாலாம்.
கருமுகில்போல் யானை கதறு மொருபாலாம்.
செந்நாய்கள் [3]அஞ்சல்வைத்துச் சிறுபுள்ளிமா னேவிரட்டி

100. பின்னோடும் பன்றி பெருஞ்[4]சலவன் முன்னோடும்.
விறுங் [5]கொடியரவம் சிறந்தவிஷப் பல்லுளைந்து
வீறுடைய புத்தை விட்டுவெளி யேவூர்ந்து
மூச்சு விடும்போது மூச்சான தீ[ய்]த்தாவி
[6]காச்சுநின்ற நல்மரத்தைக் காயு மொருபாலாம்

105. [7]நாங்கண வாச்சி நற்பான பூங்கிளிகள்
பாங்குடைய காக்கை பருந்து குயில்மயில்கள்
[8]அண்ட லுடன்நாரை ஆந்தை[9]பிரூச் செங்கோழி
வெண்டரளக் கொக்கு வெள்ளன்னந் தாராக்கள்
காடை கவுதாரி கம்புளுட னேவலியன்

110. பாடி வருஞ்சிட்டு பட்சிவகை கும்புகும்பாய்
இருக்கும் வகைகண்டு இனியந்த மாவேடன்
பெருக்க முடனே பேரான கண்ணிவலை
திருத்தி மிகப்பதித்து செடியொதுக்கிக் கண்ணிகுத்தி
உருத்தெரியா மல்கண்ணிகள் [10]ஊன்றிவலை வார்வளைந்து

115. கால்கண்ணி தன்னுடனே காடைப் [11]பொரியேத்தி
நூல்கண்ணி மண்ணில் நோகாம லேபுதைத்து

---

1. தாவி
2. நன்றாய் இழுத்தல்
3. அஞ்சல் ஓடுவார் ஒருவர் ஒருவர்பின் ஒருவராக ஓவ்வோர் இடத்தில்இருந்து ஓடுவதுபோல-Relay
4. விதையடித்த பன்றி அல்லது பெண் பன்றி
5. கொடிய
6. காய்த்து; த, ச; ய் இடையில் ஒலி யாமை
7. நாகணவாய்; மெலி இடைவரல்; குழந் தைப் பேச்சில் போல்'சி' கடைவரல்
8. அண்டங்காக்கை அல்லது அன்றில்
9. புரு
10. [ஈன்று]
11. பொறிவைத்து

தந்திர மாகத் தனிக்காட்டி லேவேடன்
விந்தை யுடனே மிருகந் தனையொதுக்கி
வில்லா லெ[1]ய்தும் விரட்டி நெடியகவண்
கல்லா லெறிந்தும் கையால் மிகக்கலைத்தும்
பட(ர்)ந்த மரங்கள்தனில் பாங்குடனே தானேறி
உடும்பு கலைத்து ஓடுகின்ற மான்மரமேல்
[2]பேயிலேயும் மாகொடி தாய் பின்துடர்ந் தேகடிக்கும்
நாயைவிட்டு [3]ஏவி நற்பறவை போல்கூவி
பன்றி யடிபா[ர்]த்துப் [4]பத்திக் கலையடியை
வென்றி யுடன்துடர்ந்து வேட்டையா டும்வேடன்,-
அன்று பகல்முழுதும் அரியவேட் டையாடி
ஒன்றுங் கிடையாமல் ஓவியமா கவிளைத்து
வெயிலிலேயுங் காற்றி[5]லேயு மெத்தவே தான்வாடி
தையிரியமுங் குன்றித் தாகம் பெரிதாகி
'அய்யய்யோ இன்று அருங்காட்டி லேவேட்டை
செய்யவந்த நேரமிதோ சிறுபறவை வாய்க்கவில்லை.
என்னசெய் வோ'மென்று [6]இருந்து இவன்புலம்[7]பி
பொன்னிலகும் வெய்யோன் போய்மறைந்தான் மேல்கடலில்
பொழுது மிகமறையப் பொன்போல முன்மாலை
பழுதில்லா மலுலகை பாங்குடனே யாளு[8]மன்னோர்
வன்னமுட னேமடிந்து மறுமன்னர் தோன்றுமுன்னம்
[9]சின்ன மனிதர் சிரமெடுத் ததுபோலாம்
மாலைப் பொழுதாகி [10]மம்மலா கக்கறுத்து
கோலமுள்ள மாதருட குழல்போல் இருண்டதுவே.
எங்கும் இருண்டு இருள்காலம் வந்ததினால்
அங்குநின்ற வேடன் [11]அசந்துஇனி என்னசெய்வோம்!
அய்யோ!சிவ னே! யென்று [12]அழுகா மனதுடனே

---

1. [யி]
2. பேயினும்
3. [யே]
4. பற்றி
5. லே
6. [யி]
7. ப; செய, செய்து மாருட்டம்
8. மன்னவர்
9. சிலப்பதிகாரம் iv-11-12
10. அந்திநேரம்; மம்மர்
11. அயர்ந்து
12. அழுது அல்லது அழாத குறையாய் அல்லது அழுதான் என்றும் இருக்கலாம்

மெயயசந்து கண்ணீர் வெள்ளம்போ லேசோர

இன்றுநாம் வேட்டைக் கெழுந்தவே ளீப்பலன்றுன்
ஒன்றுங் [1]கிடைக்கிலேயே! ஒண்டொடியும் பிள்ளைகளும்
பட்டினியோ டேயிருந்து பசியால் மிகமயங்கி
எட்டியெட்டி யேபார்த்து[2] ஏங்குமே பிள்ளைகள்தான்.
அடிப்பாளோ பிள்ளைகளை! அழுதழுது கண்ணீரை
வடிப்பாளோ? என்னையுந்தான் வைவாளோ? தானறியேன்.
[3]இன்னிநான். சும்மா [4]ஏதுமின்றி யேபோனுல்
அன்ன நடைமாது அய்யோ! மயங்கிடுவாள்.
ஆனதி னுலே அன்பான மைந்தருக்கு
தானுண[ர்]வு வொன்றுகொண்டு தான்போவ தல்லாமல்
சும்மாநாம் போனுலே சொல்லரிய வேடன்மகள்
நம்மாணை மக்கள்தனை நடுங்க மிகஅடிப்பாள்.'
என்று[5]அந்த வேடன் இடைந்துமனம் புண்ணுகி
நின்று திகைத்து நினைவான் ஒருகருமம்.
வண்ணமுடன் இக்குளத்தில் வனத்தில் வளர்மிருகம்
தண்ணீர்உண; ஓடிவரும் தப்பாது; [6]ஆனதினுல்
இந்தக் குளத்தருகே இலங்கியவில் வ-மரத்தில்
விந்தையுட னேஏறி வில்லேந்திக் கொண்டேதான்
[7]'ஒளிவைத்து, நாமும் ஒளித்து மிகவிருந்தால்
[8]வளிபத்தி இங்கே வருமிருகம் நீர்குடிக்க
அப்போது அம்புகொண்டு அடர்மிருகத் தைமாய்த்து
தப்பாத மைந்தருக்குத் தான்கொண்டு போவொ'மென்று
மனதில் அவன்நினைந்து வளர்ந்திடுவில் வமரத்தில்
தனுவுடனே தானே தைரியமா யிருந்துகொண்டு
வில்லெடுத்து நாணேற்றி [9]வினியகணை தான்பூட்டி
நல்லமிரு கம்பிடிக்க நற்பா யொளியே[10]ற்றி

---

1. கிடைக்க இல்லையே
2. முடிபு மாறுகிறது
3. இன்று; இனி
4. [யே]
5. [ய]
6. [யா]
7. கண்ணிவைத்து
8. வழிபற்றி; எதுகை
9. வ்-உடம்படுமெய்யோ?
10. [த்தி]

இருந்தான்; இருட்டுதனில் இருக்கும் பெரமுதுவேடன்
பொருந்தான் விழிமயங்கான்; புத்திரர்தன் ஞசையினுல்
'இந்தமரம் வில்வம்; இலைநெருக்கம்; அம்புதொட்டால்
முந்துகொம்பு தட்டிவிடும்; முகமும் தெரியவில்லை'.
175. என்றுடை வாளுருவி எதிர்நிற்குங் கொம்பிலையை
ஒன்றுஒன் ருய்க் கொய்து ஓவியமாகப் போட்டு
நித்திரைதான் வாராமல் நெருங்கிவில் வத்தழையை
[1]பத்தியிருந்த வேடன் பறித்துமண்ணில் போட்டனனே.
இப்படியே வேடன் இனியவில்வத் தைப்பறித்து
180. செப்ப முடனே தெரியாமல் போட்டிடவே
வண்ண மரகதம்போல் வளர்ந்தசிவ லிங்கமொன்று
மண்ணி லொருவருக்கும் வாகுடனே [2]தோணுமல்
வில்வ மரத்தடியில் மேன்மையுட னேமுளைத்து
நல்ல சிவலிங்கம் நற்பா யிருந்ததுவே.
185. இந்தவே டன்ப[3]றித்து இனிதாகப் போட்டவில்வம்
அந்தலிங்க முடியில் அழகாய் விழுந்ததுவே.
போட்டவில் வத்தழைதான் பொன்னுலிங்க மாமுடியில்
நாட்ட முடன்விழுந்[4]து ஞாயமிது என்போலாம்?
அரிய சிவனிசியில் அன்பாக வே[5]முழித்து
190. வரிசையுடன் ஈசுபரனே [6]மகிட்சியுடன் வில்வமதால்
அருச்சனைதான் பண்ணுவர்போல்[7] அன்பாக இவ்வேடன்
பெருக்கமுடன் [8]ராமுழுதும் பெருமையுட னேவிழித்து
உண்ணமை லேதானும் [9]உத்தபனி தன்னுலே
தண்ணுர் புனலில் தான்மூழ்கி ஞ[10]ற்போலே
195. வேடன் நனைந்திருந்து வில்வத்தால் ஈசுபரனே
நாடியே ராமுழுதும் நல்லஅர்ச் சனைபுரிந்தான்.
இவ்வேட னைப்போல இனியமால் நான்முகனும்

---

1. பற்றி
2. தோன்றுமல்
3. [ரி]
4. த; உ, அ; வினையீற்றில் மாருடல்.
5. விழித்து
6. மகிழ்ச்சி
7. போல் (ஆம்) எனக
8. இரா
9. உற்ற
10. [ப்]

செவ்வித மாகவளர் தேவேந்திரன் முதலாய்
மற்றுமுள்ள [1]பேரும் வனவேடன் போலிருந்து
உற்ற சிவனே உறுபூசை [2]பண்ணுவரார்?
இந்தப் படிவேடன் இவ்வனத்தி லேயிருக்க
சொந்த வேடிச்சி[த்] துணைபிரிந்த அன்றிலென
கணவன் தனைத்தேடி கற்புடைய மாமயிலாள்
மணம்புரிந்த நாயகனே வரவுமிகக் காணுமல்
குண்டுமுத்து மாலை [3]குலுங்கு மிருமுலைமேல்
கண்டினிய சொல்லாள்·கண்ணீர் மிகவடித்து
'கானகத்தி லேவேட்டை கனிந்தாட வேபோன
[4]மானவனே யின்னம் வரவுந்தான் கா[5]ணேன்அய்யோ!
எவ்வனத்தில் சென்றனனே? எத்தூரம் போனனனே?
எவ்விடத்தி லேஓடி இனிக்காண்பேன் நாயகனே!
அய்யய்யோ!' வென்று அழுதுநின்று வேடன்மகள்
[6]கைவிரித்துச் சிந்தைநொந்து கலங்கியே சொல்லிடுவாள்:

விருத்தம்(2)

பேதைப் பருவத்தே வந்தென்னைக் கைப்பிடித்தாய்
ஈதித் துணைநாளு மென்னைப் பி[7]ரிந்தறியாய்
காதற் கணவாயிக் கங்குலிடை மீளாமல்
ஏதுற் றனை இடையூ [8]றேதென் றறியேனே[9]

நடை

'ஆசைக் கணவா! அஞ்சு வயதிலேதான்
பாசமுடன் என்னைப் பரிவாகக் கைப்பிடித்தாய்.
கைப்பிடித்த நாள்முதலா, கண்ணுளா! நீதானும்,
மெய்ப்புடனே என்னையு[10]மோ விட்டுப் பிரியாயே.

---

1. பேர்களிலும்
2. பண்ணுவார் ஆர்
3. குலுங்க
4. மனிதனே
5. குறுகி ஒலிக்கும்
6. கையாற்றின் குறி
7. [றி]
8. [டு]
9. மா+வெண்டளை இரண்டுவரும் 3 சீர்; மூவகைச் சீர் எல்லாம் காய்ச்சீர்; அடிக்கு 13 எழுத்துக்கள் வரும் கலி விருத்தம்
10. ஓ, ஏ

சீரான மன்னு! [1]தேட்டாளா! ராத்திரிநீ
வாராம லேஇருந்த மார்க்கமென்ன மோ?பாவி!
வேட்டைக்குப் [2]போனிடத்தில் வேட்டை [3]கிடைத்திலேயோ?
வாட்டமுடன், அய்யோ! வழிமயங்கிப் போயினேயோ?
சென்ற வனத்தில் [4]திகைப்பூட்டி லேமிதித்து
நின்ற விடம்[5]பிறழ்ந்து நெடுந்தூரம் போயினேயோ?
அன்புடைய வேடா! அருங்காட்டி லேயுனக்கு
துன்பம்வந்தால் யார்எனக்குச் [6]சொல்லுவா ரிங்கிலேயோ!
வில்லெடுத்து அம்பெடுத்து வெகுண்டுவரும் வெம்புலிமேல்
வல்லமைகொண் டெய்யாமல் [7]வலுவீன மாகவெய்த
அம்புபட்டு வேங்கை அதட்டிவுனைத் தான்சீறி
கொம்படர்ந்த காட்டில் கொன்றுமிகப் போட்டதுவோ?
பாம்பு கடித்ததுவோ? பட்டினியோ டேமயங்கி
சோம்பிக் கிடந்தனையோ? சூதாய் முடிந்ததுவோ?
எங்கணவா! உன்னை இனித்தேடி [8]வாரதற்கு
பங்கமுள்ள முள்காட்டில் பாதை யறிந்திலனே!
என்றுவே டன்மனைவி ஏங்கிஏங்கி யேயழுது
நன்றியுள்ள மைந்தரொடு நன்மனையி லேஇருக்கும்-
போதில், நெடுங்கதிரோன் [9]பொல்லா திருளைவென்று
மேதினியில் வந்தான். விடிந்துதைய மாகினதே.
சூரியன்வந் த-வுடனே துலையா[ய்]ப் பெருங்காட்டில்
வீரிய மாகவேதான் வேட்டைபோ னவேடன்
வில்வ மரத்தில் விடிய முழித்திருந்தும்
வல்லமையா க-மிருகம் வாயாமல் தானிறங்கி
மக்களையும் தேவியையும் மனதில்மிக வேதேடி.
சிக்கெனவே பாதைவழி சென்றுவரும் போதிலேதான்,
[10]ஒருமகனைத் தான்இடுக்கி ஒருமகனைத் தான்நடத்தி

---

1. காப்பவனே
2. போன இடத்தில்
3. கிடைத்தது இல்லையோ
4. வழி தெரியாமல் திகைக்க வைக்கும் பூடு
5. [பிரண்டு]
6. இவை நீலி வினக்கு
7. பலஹீனம்
8. வருகிறதற்கு
9. பொல்லாத + இருளை
10. அவலச்சுவையின் வடிவம்

கரியகுழல் பின்சோரக் கண்ணீரு முன்சோர
அழுது மிகப்புலம்பும் அன்னநடை வேடன் மகள்
வழிதெரியா மல்காட்டில் வரும்போது [1]இவ்வேடன்
கண்டான். மனைவியையுங் கையேந்தும் பாலனையும்
கண்டானே! கவலையுற்றுக் கட்டிக்கொண் டேயழுதான்!
மக்களோ டேயழுது மனைவி மனந்தேற்[2]றி
சிக்கெனவே தன்வீட்டில் சென்றிருந்து விந்தையுடன்
பாங்குடனே நாள்தோறும் பரிவான மாவேடன்
[3]மாங்கிஷத்தை யேபொசித்து வாழ்ந்திருக்கும் அ[4]ன்னாளில்
மெத்த வயது[5]முற்றி மெலிவா யுடல்பழுத்து
செத்தானே வேடன். செத்தவுடன், மன்னவனே

விருத்தம் (3)

[6]அஞ்சன[க்]கி ரித்தொகுதி யன்னகரு மெய்யர்
[7]மஞ்சிடியெ னக்குமுறும் [8]வாய்மையர்கள் வாழ்வாய்க்
[9]கிஞ்சுகமெ னத்தெறுசி னத்தினர்வ தைக்கின்
நெஞ்சினர்கள் [10]காலபடர் வந்தனர்நி றைந்தார்[11]

நடை

சீலவன வேடனுந்தான் செத்தவுட னேகொடிய
நீலமலை போலவளர் நெடியயம தூதர்கள்தான்
இடியேறு போல்முழங்கி இருகடைவாய்ப் பல்விளங்க
கொடிய அனல்பொறிதான் கொப்பளிக்க வேஇருகண்,
வீசுபா சமெடுத்து வேடனுயி ரைப்பிடிக்க

---

1. [யி]
2. ற
3. மாமிசம்
4. அந்நாளில்
5. முற்றி
6. மை
7. மேகஇடி
8. பேச்சினர்
9. கிஞ்சுகம்–முருக்க மலர் எனக் கோபத்தால் சிவத்தல் 'கிஞ்சுகம்' என்பது மோனைக்கு ஏற்கும்; செம்மரம் ஆம்
10. யமதூதர்
11. 3 தந்ததன+தானு; தந்த தத்தவும் ஆம்; 3 விளங்காய்+தேமா நிரை முதற்சீர் பின்வரின் விளமாம்; விளத்தின் பின் தேமா புளிமாவாக வரும் இவ்வாறு கொள்ளும்போது மோனை நயம் தோன்றும் நாற் சீர்க்கலிவிருத்தம் அடிக்கு 14 எழுத்து

ஆசையுடன் [1]ஏமபடை அகோரமென வேகூடி
[2]"எற்றெற்று" வென்றுசொல்லி யினியபாசத் தைவீசி
சற்று மிரக்கமில்லாச் சண்டாள வேடனை[3]தான்
"கொட்டுகொட்டு" வென்றுசொல்வார்; கொடிதான வாளாலே
"வெட்டுவெட்டு பாதகனை விடா[4]தேபிடி" யென்பர்சிலர்
"உடலிறுகக் கட்டி உயர மிகத்தூக்கி
கொடியவனைக் [5]மேதள்ளி குத்தும்இந்தச் சூலமதால்."
என்று எமதூதர் இவ்வேடன் தன்னுயிரை
வென்றி யுடனே விரைந்துபிடிக் கும்-வேளை
வேடன் பய்ந்து விழியஞ்சும் அப்போது
தேடரிய கோடி செங்கதிர் ஒன்றுக
திரண்டதொரு காந்தியெனத் திசையெட்டு மேவிளங்க
விரைந்துஒரு புட்பரதம் வெகுவிந்தை தன்னுடனே
சிவகணங்கள் கொண்டுவந்து, செத்தவே டன்உயிரை
[6]தவம்பெறவே வைத்துத் தான்கொண்டு போயினரே.
சந்திரனை வெங்கிர(ர)ணந் தான்பிடிக்கு முன்னுக
வந்து விலக்கினர்போல், வலிய சிவகணங்கள்
பொற்புடைய தேர்மீதில் பொன்வே டனையே[7]ற்றி
நற்பாய்ச் சிவகணங்கள் நாடிக் கொடுபோக,
கண்டு எமதூதர் கண்கள் மிகச்சிவந்து
[8]வண்டுறுக்கித் தோள்குலுக்கி மாவேக மாயுரைப்பார்:
"பாதகமே செய்யும் பழம்பாவி வேடனைத்தான்
போதமுடன் பொற்றேரில் பொங்கமுட னேயெடுத்து
கொண்டுபோக நீதியுண்டோ? கொண்டுதான் [9]போரவர்கள்
அண்டரோ தானு[10]ரோ அறிவோம்" எனச்சொல்லுவார்.[10]
"பாங்கில்லா வேடனைத்தான் பரிவாய்க் கொடு[11]போறீர்!

---

1. [யே]
2. கொல்; வீசுவீசு
3. வலி மிகவில்லை
4. குறுகி ஒலிக்கும்
5. ஷெ-4
6. புண்ணியம்; ஸ்தவமும் ஆம்; புகழ்ச்சி
7. [த்தி]
8. உதட்டை மடித்துக் கடித்தல்-தீருநெல்வேலி வழக்கு
9. போகிறவர்கள்
10. முன்கூறியது தமக்குள்; பின்கூறுவது சிவகணங்களை நோக்கி
11. போகிறீர்

நீங்கள்யார்? சொல்லிடுவீர். நில்லு!நில்லு! போகாதீர்.
நாங்கள்கொண்டு போகவந்தோம். நற்பில்லா வேடனைத்தான்
நீங்கள்கொண்டு [1]போறவகை நின்றுசொல்லு! மாதூதா!
இவ்வேடன் சற்றும் [2]சுவதிரக் கமில்லாமல்
செவ்வேபர மேசுபரனைச் சிந்தை நினைந்தறியான்.
அப்படியா[ய்]க் கொத்த அரும்பாவி யைநீங்கள்
எப்படித்தான் தேர்மேல் [3]இனிக்கொண்டு போயிடுவீர்?
திடமாகச்சொல்லிடுவீர்! [4]தீர்க்கமுடன் [5]சொல்லாட்டால்
விடுவதில்லை வேடனையும். விடோங்கா ணுங்களையும்.
பொற்புடனே புண்ணியங்கள் போதவே செய்துமண்ணில்
கற்பகோடி காலம் கனிந்துமிக வாழ்ந்தாலும்
மும்மூர்த்தி க(ள்)ளுடனே முனிவரொடு தேவர்கள்தான்
செம்மையுட ஞரேனும் தேவர்கோ ஞலும்
தாட்டிகமா எங்கோன் நமன்தன்ன ணை–கடக்க-
மாட்டாரே! சொல்லு மாபாவி வேடனைத்தான்
[6]இங்கைவிட்டுத் தான்போவீர்! [7]இனி[8]விடா தாமாகில்
உங்கள் தனையும்விடோம், உடல்பிளந்து கொன்றிடுவோம்.'
என்று எமதுதர் இந்தமொழி தான்கூ[9]றி
மன்றில் நடிக்கும் மாயேசுப ரன்தூதர்
வெகுண்டு மிகக்கேட்டு விழியெரியக் கோபமுற்று
[10]அகண்டபகி ரண்டமெல்லாம் அதிர்ந்து கிடுகிடென
ஓ[11]றி[12]யாங் காரமிட்டுச் சிவகணங்கள் காலர்தனை
வீறுடனே நேரக்கி வெடுவெடெனக் கூறிடுவார்:
:இந்தளம னைப்போலே எத்தனைகோ டி-எமனை
வந்தான்; இறந்தான். மதிகெட்ட தூதரே!கேள்!
அட்டதிக்கு[ம்] வேந்தருக்கும் ஆழிமால் நான்முகற்கும்

---

1. போகிற
2. [யி] சுவிரக்கம்; சுகை இரக்கம் என்று மாம்
3. [யி]
4. உறுதியாக
5. சொல்லாவிட்டால்
6. இங்கு
7. [யி]
8. விடாதாம்=விடாமை
9. று
10. அண்டபகிர் அண்டம்
11. [ஈ]
12. ஆ என்ற ஒலி

சட்ட மிகக்கொடுத்தான் தனியான மாமூர்த்தி.
எங்கள் எசமான் [1]இனிய பரமசிவன்
பொங்கமுடன் உத்தரவு பொ[2]ரேமடாபாவி!
ஆளும் பரமனுக்கு அடிமைகீ முடிமையென
[3]தாளுமுங்கள் [4]கூத்தன் தன்னடிய ரேகீங்கள்.
எங்க ளுடன்சினந்து [5]எதிர்த்து [6]பொருதுதிறம்
பொங்கமுடன் [7]காண்பம்"என்று புல்வாயின் மேலேபுலி
சீறியே தான்பாய்ந்த தி[8]றம்போல் சிவகணங்கள்
வீறுடனே மாகாலன் விட்டதொரு தூதர்தனை
தாக்கி நொருக்கித் தவிடுபொடி யாயுடலை
ஆக்கியே செங்குருதி ஆறுபோ லேஓட
அடித்துஅவ ராயுதத்தை அங்கையா லேபிடுங்கி
[9]மூடிக்கினர்:அப்போ முறிந்தோடி னர்காலர்;
எமனுட தூதர் இடைந்தோடி யேபோக
பூமலரும் தேர்கடத்திப் போனர் சிவனிடமாய்.
இந்த எமகணங்கள் இறைவனுட தூதர்கையால்
சிந்தைநொந்து செத்தம் தேகமெல்லாம் தான்வடிய
செங்குருதி கக்கித் திரும்பித்திரும் பிப்பார்த்து
பொங்கமுள்ள வெய்யோன் புதல்வனெனுங் காலனிடம்
சென்று'கோ' என்றழுது தேகம் [10]பிளந்துதென
வென்றியுட னேகாலில் விழுந்து துயரமுற்றார்.
இருபத் தொன்றும் அத்தியாயம் முற்றும்.

---

1. [யி]
2. [ரோ]
3. தாழும்; எதுகை
4. கூற்றன்
5. [யெ]
6. பொரு திறம்; து வரும் காண்க
7. காண்போம்
8. [ர]
9. மூடுக்கினர்; உ. இ: ஆயிதங்களோ உட லில் உட்புகுத்தினர்; ஒட்டினர் என் றுமாம்
10. பிளந்ததுஎன

இருபத்திரண்டாம் அத்தியாயம்

சிவனுடன் எமன் வழக்காடு[தல்] கதை

விருத்தம்(1)

போழ்ந்த மெய்யர் [1]பொருமுறு முயிர்ப்பினர்
வீழ்ந்து தாளை வணங்குறும் வேளையில்
ஆழ்ந்த கேள்வி அறிஞ்ஞ நமன்றனை
சூழ்ந்தி ருந்த அவையினைச் சொல்லுவாம்.[2]

நடை

5. 'இந்த விதம் மன்னு! எமதூதர் தானமுது
வந்து நமன்காலில் மலைபோல வேவிழுந்தார்.
அப்பொழுது காலன் அடர்ந்த பெருங்கொலுவில்
செப்ப முடன் இருந்த சித்திரந்தா னேகேளும்!
என்று வதிட்டன் இனிய திலீபனுக்கு
10. வென்றி யுடன்சொலுவான்: 'விரைந்து சிவகணங்கள்
அடித்த அடியாலே அலறி எமதூதர்
திடுக்கிட்டுக் காலன் திருக்காவி லேவிழுந்தார்.
அந்தநல்ல வேளைதனில் ஆங்கார மாயேமன்
சுந்தரஞ்சேர் பீடமதில் சூல்கொண்ட மேகமென
15. இருண்டகரு மெய்யிலங்க இரு[x]கண்ணும் தீப்பொறிய[x]
[3]உருண்டமலை போலே உயர்ந்து [4]பருதோளிலங்க[x]
நாட்டமுட னிவ்வுலகை நடுங்க [x]மிகப்பார்க்கும்[x]
தாட்டிக மான தனிக்கா[x]லர் மூவருந்தான்[x]
நீல மலைபோல நெடிய க[x]ருமலைபோல்[x]
20. ஆலகால விஷம்போ லன[x]ல்வீசு மாமுகமும்[x]

---

1. [பொருமுரு யிற்பினர்]
2. மா-மா வினவின னெவரும் நாற்சீர்க் கலிவிருத்தம்
3. உருண்டு புடைத்து விம்பி ஒங்கும்
4. [x]வெற்ற குறிக்குள் இருப்பன மற்றொரு பிரதியில் கீடைத்தவை; இப்பிரதியில் செல்லரிப்புண்டவை

தோளிலங்க என்பது மற்றொரு பிரதி

[இ]ரத்தப் பருமுழியும் நடுக்குமேல் [1]வீசையும்
[2]உத்த கருமயிறு முதடும்வீரப் பல்லு_னே
பாங்குடனே தெண்டெடுத்துப் பார மலிபோல
வீங்குபுயம் தன்னுடனே [3]விருபுறத்திலு மேயிருக்க
குட்டங் [4]குறைநோய் குளிர்சுரம் வெப்புவறுமை
திட்ட முடனே சிறந்தஉருத் தானெடுத்து
பக்கத்தில் நின்று பணிவிடைகள் தான்கேட்டு
மிக்கவே நிற்க மெய்மறதி சோம்புநெட்டி
கொட்டாவி தூக்கங் கோளுடனே பொய்களவு
நிட்டூரங் கோபம் நெடியபசி லோபமுடன்
ஆசைகு[5]ரோ தங்கொடிய ஆங்காரத் துற்குணமும்
நேச முடனே நெடிதான [6]ஏவலர்போல்
கரிய உருவெடுத்துக் கைகட்டி பக்கமதில்
பெருமையுட னேவல்செய்யப் பெரியோர்க ளானவர்கள்
தானேநெருங் கி - யிருக்கச் சத்தரி[7]சி மார்சூழ
ஞாஞ திபரான நல்முனிவர் கூட்டமொடு
புத்தியொடு சாத்திரங்கள் [8]போதவா [8]ராய்ந்திருக்கும்
[9]சித்திர குப்தனெடு சிறந்தமனு [10]விக்கியானம்
ராசாக்கள் சூழ்ந்திருக்க நல்ல சபைநடுவே
நேசமுட னேயிருக்கும் நெடியபுய மாமறலி
வண்ணமுட னேவீழ்ந்து மயங்குகின்ற தூதர்தனை
கண்ணுறவே நோக்கிக் கனல்வீசு மூச்செறிந்து
அண்டபகி ரண்டமொடு அலைகடலை வற்றிடவே.
உண்டுவிடு மாசினமா யுக்கிர முகத்துடனே
சிங்கப்பல் லுக்கடித்துத் தீயெரிக்கக் கண்சுழற்றி
வெங்கொடிய காலன் வேகத்துட னேபார்த்தான்.

---

1. மீசை
2. உற்ற
3. வ்-உடம்படுமெய் மோனைக் குதவுவது காண்க. [விருபுற]
4. [குர]
5. [ரே]
6. [ப]
7. சி
8. [ரு]
9. [சித்திரக்கூத்தன்] என்பது மற்றோர் பிரதி
10. விஞ்ஞானம்; சிறந்த அறிவு; பேச்சு வழக்கில் உள்ள வடிவம்
11. [ஸ்]

அப்பொழுது மாசபைதான அடங்கியே மிகப்பயந்து
செப்பமுடன் நடுங்கிச் சித்திரம் போ லேயிருந்தார்.
போதச் சபைநடுவே புலிபோ லிருந்தயமன்
தூதர் தனைப்பார்த்துச் சொல்வான் 'உங்களைத்தான்
அடித்தவன்யார் இப்படித்தான்? அடர்கொடிய தூதர்களே!
[1]வடிப்பமுட னேசொலுவீர்! மனிதரோ? தேவர்களோ?
காந்துருவ ரோ?சொலுங் [2][காக்கடிய] வியக்கர்களோ?
[3]மாந்தாதி மாந்த[ர]ர்களோ வலிதாய் அடித்தார்கள்?
சொல்லுங்கள் இப்படித்தான் துxடுக்கா யடித்தவரை x
கொல்லுவே னெங்சே குடிபோ xகிலுங்[4]தொடர்வேன்.x
எப்பதியோ ரானலும் எத்தூதரானலும்
செப்முடனேயவரைச் செயம்பண்ணி னலொழிய
கோபந்தீ ரா'தெனவே கூத்தன் மிகச்சீறி
தீபமெனக் கண்காந்தத் தீயகுணத் தூதர்தன்னைப்
பார்த்தா னப்போது பாங்கான [5]ஏமபடர்
கூத்தான காலனைத்தான் கும்பிட்டுச் சொல்லிடுவார்:
'தேவரீர் சொற்படியே தீயான வேடனைத்தான்
ஓவியமா கப்பிடித்து [6]உறுபாசத் தாலிறுக்கி
கொண்டுவரு முன்னுகக் 'கொண்டுபோக வொட்டோ'மென
அண்டவழி யாகவொரு அழகான பூந்தேரும்
சிலதூத ரானவருஞ் சிக்கிரத்தில் ஓடிவந்து
கொலைகார வேடனைத்தான் கோலநெடுந் தேரில்வைத்து
எங்கள் தனைமுடுக்கி யினியந்தப் பாவிதன்னை
பொங்கமுட னேஎடுத்துப் போனர் வடதிலயசயாய்.
அப்பொழுது நாங்களுந்தான் அவரை மிகத்[7]துடர்ந்து
செப்பமுள்ள வேடனையும் திருப்பினேம் அந்நேரம்
அக்கொடிய தூதர் அதட்டியெங்கள் ஆயுதத்தை

---

1. செப்பமாக; தீரமாக
2. காற்கடிய காற்றுப் போல விரைந்து செல்லும்
3. தேவாதிதேவர் போல மாந்தாதிமாந்தர்களோ லெப்படைத்துக் கொள்ளப் பெற்றது போலும்
4. [ட்]
5. [யே]
6. [யு]
7. தொ

சிக்கெனவே தான்பிடிங்கித் தேகம் [1விருக்கிடவே]

75. 'போடுபோ டென்று சொல்லிப் போட்டாரத் (தூதுவர்கள்)
வாடினே மய்யோ மறுத்தென்ன சொல்லிடுவோம் ?
பட்டசள மெத்த வ2ப்பா பாழ்வேடன் தன்xனுலேx
தட்டழிந்து வந்தோம் 3சாமியவர் சொன்னxது கேள்x
சொல்லவுமே போகாது சொன்னவாய் xவெந்துவிடும்x

80. வல்லமை யானதூதர் மண்டலத்தில் நாங்xகளென்றுx
இருந்தோம் இதுவரையும் எங்கோவே யxத்தூதர்x
திருந்தவே சொன்னமொழி செப்பரிது கண்xடீரேx
சண்டனுங்கள் ஏ4xமன் தான்எங்கள் [சாமிக்குத் தொண்டுபல]
தொண்டர் கீழ்த் தொண்டனென்றே xசொல்லி மிகப்போனன்5x

85. 6என்று நமன்றூத ரிந்தமொழி தான்கூற
வென்றிபுனை காலன் விருப்பமுட னேகேட்டு,
சிவகண நாதரென்று சிந்தை தனில்த்தெரிந்து,
தவமுடைய சித்திரகுத்தன் றன்னை வரவழைத்து
'கரியவன வேடன் கணக்கை7க்கொடு வா'வெனவே

90. வரிசை யுடன்சொல்லி 'மாகணக்கைத் தான்பார்த்து
வண்ணமுள்ள வேடன் வாகுடனே புண்ணியங்கள்
பண்ணினது முண்டோ? பா8ர்த்துநீ சொல்லு' மென்று
காலனவன் கேள்க்கக் கணக்கன் கணக்கவிழ்த்து
சிலமுடன் பா9ர்த்துச் செப்புவா னேமனுக்கு:

95. பே10ரான வேடன் பிறந்தநாள் 11தன்முதலாய்
சி12ராக வேதான் செத்துவிட்ட நாள்வரை13க்கும்
பாவத் தொழிலைப் பண்ணினதே யல்லாமல்

---

1. விறு விறுக்க
2. [ய் யா] என்பது மற்றொரு பிரதி
3. 'சதி கேடா சொன்னது கேள்' என்பது மற்றொரு பாடம்
4. [யே]
5. இதற்குப்பின் இரண்டு ஏடுகள் (174, 175) இல்லை. மற்றொரு பிரதியில் உள்ளபடி கீழே தரப்பட்டுள்ளது
6. [யெ]
7. க் ஒலியாது போலும்-கொடு கூறுமாகலாம்
8. [பார்த்து]
9. ஷ.8
10. [ரு]
11. தான்; அது என்றுமாம்
12. ஷ.5
13. [றை]

ஓவியமாய்த் த[1]ர்மம் ஒருபோது செய்யவில்லை
பாரிலுள்ள பேர்கள் பண்ணுகின்ற பாவமதில்
100. சி[2]ருகெட்ட வேடன் செய்பாவ மெத்தவென்று
சித்திர குத்தன் சிறப்புடனே தான்கூற
புத்தியுள்ள [3]யேமன் பூ[4]ராய மாய்க்கேட்டு
'உடையவன் பா[5]ர்த்து ஓவியமா க-அளிக்கில்
தடையுண்டோ நம்மாலே? தாங்க [6]யெளிதாமோ?
105. நன்று நன்று மெத்தவிது ஞாயம்போ லேதுமில்லை'
யென்றுதான் கால னிருந்துமிகச் [7]சொல்லிடுவான்.

விருத்தம் (2)

'ஆக்கிய போக மளித்தே
போக்கிடி லாரே புரப்பார்?
நோக்கிய [8]ஈசன்முன் னெங்தே
110. [9]தூக்கிய [10]நம் குறை சொல்வோம்.[11]

நடை

உண்டுபண்ணி வைத்தோ ருடனே யழிக்கவென்று
[12]மிண்டுசெய்தா [13]லின்னி வேறே பொருளுமுண்டோ ?
பரமே[14]சுப ர-னிடத்தில் பாங்காக [15]நங்குறையை
வரிசையுடன் [16]சொல்வமென மனதில் மிகநினைப்பான்:
115. 'கொடுத்தபேர் மீண்டு [17]கொடுவில்லை யென்று சொல்லில்

---

1. [ற்]
2. உகரச்சாரியை
3. ய் உடம்படுசெய்; உச்சரிப்புமாம்
4. [ரு]
5. ஷ்-1
6. ஷ்-3
7. எதிர்காலம்காண்க; கூற்றினைப்பின் கூறுதலால் போலும்
8. [யி]
9. ஆராய்ந்து முடிவு செய்த; சீர்தூக்கிய; மேல்எழுந்த என்றுமாம்
10. [நன்] நாம் நம ஆவது போல நான் என்பதும் நன் என வேற்றுமையில் வருமோ? சிலபோது 'ன்' க முன் ங் எனப் பேச்சில் திரிவதனை மாற்ற'ன்'என எழுதுவதுபோல இங்குவரும்.'ங்' என்பதனைத் திருத்த வேண்டாத இடத்திலும் திருத்தினரோ ?
11. முச்சீர் அடி வருதலின் வஞ்சிவிருத்தம் ஈரசைச்சீர் மூன்றும் இடை இரண்டு தனையும் வெண்டளைபெற்று ஈற்றுச் சீர்கள் மாவாய் வரும்; அடிக்கு 8 எழுத்து
12. வலுக்ககட்டாயம் கொடுமை
13. இனிஎன்பது விரிந்து நிற்கும்
14. [ஞ்] ஸ் என ஒலிக்கும் இந்தப் பிரதியில் 'ஸ்' ஞ் என்றே வரும்
15. [ன்]
16. சொல்வம் என்பதன் உச்சரிப்பு.
17. கொடுக்கவில்லை

தடுக்க ஒருவருண்டட்டோ? தந்தா ருடன்வழக்கோ?
[1]ஞாய முடனே நடுவுமில் லாததொழில்
[2]நேய மென[3]யிருந்தால் நீதி[4]யல்ல[ப்] பாவம் வரும்
கா[5]ண்ட ஞாயந்தனையே கண்ணுதலோ னுக்குரைத்து
மீண்டு [6]வருவ' மென்று மெத்த[7]விசாரமொடு
நேசமுட னேகாலன் நெடியகிடா மேலேறி
யீ[8]சன் கொடுத்த முத்[9]திரை யேமதண்டம் பாசமொடு
மற்றுமுள்ள ஆயுதமும் வாகுடனே தானெடுத்து
உற்ற சித்திர குத்தனையும் ஓவியமா கக்[10]கூட்டி
வரிசையுட னித்தொழில் தான் [11]வாண்டா மெனச் சொல்லவே
[12]விரசுடனே காலன் வெள்ளிமலைக்கே நடந்தான்.

விருத்தம்(3)

வெள்ளிமால் வரையின் கண்ணே
வெளிமுகட் டொளிகள் விம்மும்
தள்ளரு மணியாற் செய்த
தமனியக் கொடி(யி)ன் வாயி
வெள்ளரும் [13]வினையத் தெய்தி
யெருமை விட் டிறங்கிக் கால
ஞெள்ளிய நந்தி பால்போய்த்
தன்வர வுரைத்து நின்றான்[14].

நடை

காலன் விரைந்து [15]கனகமுக டாவுகின்ற
கோலவெள்ளி மால்வரையின் கொடுமுடிபா லேயேகி

---

1. ஞாயம் நியாயம்; நேர்மை; நடு=நடு நிலை; ஓரவின்மை
2. விருப்பம்
3. 'ய்' உடம்படுமெய்
4. அல்ல-பன்மை; இங்கே அது என்ற தோன்று எழுவாய்க்கு ஒருமை யாய்ப் பயனிலையாம்
5. கண்ட முன்னும் இவ்வடிவம் வந்துளது
6. வருவோம் என்பதன் உச்சரிப்பு
7. சிந்தனை; கவலை.
8. [ஈ]
9. 'தி' ஒலியாது போலும்
10. கூட்டிக்கொண்டு
11. வேண்டாம் என்பதன் உச்சரிப்பு; மோனை காண்க
12. விரைவு
13. விநயம்; அழகு
14. 'விள-மா-தேமா' இரட்டித்து வரும் அறுசீர் விருத்தம்
15. முகடு (வான் உச்சியை) ஆவுகின்ற (விரும்பும்) என்றும்; கனகமுகடு=பொன் முகடு; வெள்ளிமலையின் உச்சி பொன்னும் என்றுமாம்

வெட்டுங் கரியகிடா விட்டு மவனிரங்கி
அட்ட திசை யெட்டுமின்ன அரியபசும் பொன்னுலே
135. செய்தநெடுங் கோயிலின்வாய் சென்று அவன்முனும்
அய்ய னுடவாச லன்பாகக்காத்[1]து நிற்கும்
நந்திபால்ச் சென்று 'நான்வந்தே,னென்று சொல்லி
விந்தையுள்ள ஈ[2]சுபரற்கு விளம்'பென்ரு னன்னேரம்
நந்திதேவ னடந்து நாதன்மலர்த் தாள்பணிந்து
140. கிந்தையில்லாக் காலன்வந்து நிற்கிரு னென்று சொல்லி
திருநந்தி தான்கூறச் சிவனுர் மனமகிழ்ந்து
'வரிசையுள்ள-காலா வா'வென் றருள்புரிந்தான்.
[3]ஈச னு[4]ரைத்தவுட னினியதொரு மாகாலன்
வாசமிகு பூங்கடுக்கை வள்ளலார் தன்னடியில்
115. சென்று விழுந்து 'சிவனே!' யெனப்புகழ்ந்து
[5]என்றுமவ னிற்கு மிடத்திலே நின்ருனே.

விருத்தம்(4)

பங்கயத் துறையு மாதி[6]விரிஞ்சனும் [7]பதின்மர் தாமுஞ்
சங்கொடு திகிரி யேந்திச் [8]சலதியிற் துயில் கொள் வானும்
மங்கையிந்தி ராணி[9]கோவும் வானக முலகுக்குங் [10]கோவும்
150. செங்கதிர் கிரணத் திண்டே ராறிரு [11]செல்வர் தாமும்[12].

நடை

பிரமதே வன்முதலாய்ப் பேசுசக்[13]கிர பாணியெனும்
திருமாலு மிந்திரனுந் தேவரொடு [14]பன்னிரண்டு
சந்திரருஞ் சூரியருந் தழைக்கு ம[15]ருத்துவரும்

---

1. [ற்]
2. [ஷ்]; ச் என்ற ஒலி
3. [யீஷ]
4. [றை]
5. [யெ]
6. பிரமன்
7. அஷ்ட வசுக்களும் இரண்டு மருத்துக்களும்
8. கடலில்
9. [கோவவ]
10. சந்திரன்
11. 12 சூரியர்
12. 'வின-மா-தேமா' இரட்டித்துவரும் அறுசீர் விருத்தம்
13. கி ஒலியாது போலும் [கிற]
14. 12 சந்திரர் என்பது காண்க
15. [று]

விந்தைசெறி மாயியக்கர் வேழமுகன் மாமயிலோன்

155. வருணன்முத லக்கினியும் வளரு நி[1]ருதியோடு
பெருமைக் குபேரனெடு பெரும்பார மாவுலகை
தாங்குமாதி சேடன் றனிவீர பத்திரனும்
ஓங்கு வயிரவரு முத்தண்ட நாரதனும்,
ஞான முனிவர்களு நற்பான விஞ்சையரும்

160. ஆன தெய்வ [2]கன்னியருட னட்ட வசுக்களொடு
கங்கையொடு சித்தர்களுங் கலிவாணி பூமகளும்
பொங்கமுடன் மற்றேரும் புவனத்தி லுள்ளோரும்
தானே மிகச்சூழ்ந்து தங்கள் கவலைகூற
மானெடு செங்கை [3]வள்ளலார்க் கின்பமுற்று

165. [4]சொல்லுக்குச் சொல்க்கொடுத்துச் சுகமாய் வரங்கொடுத்து
அல்ல லொழிய அவர்கள்குறை தீர்த்தபின்பு
[5]விடக்கண்ட ரான சிவன் வேடன்மே லன்புமு[6]ற்றி
கடைக்கண்ணல், [7]மெள்ளவரும் காலன் றனைப்பார்த்தான்.[8]
அப்பொழுது காலன் அய்யன்நோக் கம்பார்த்து

170. செப்ப முடனே செழுமலர்ப்பூங் காலடியில்
பாச மொடுபடமும் பாங்கான யேமதண்டும்
நேச முடன்வைத்து நெடுமலோபோ லேவிழுந்து
'ஆதி பொருளே! அடியேன் சரணம்!' என்று
நீதியுடன் தான்பணிந்து நிரம்ப உரைத்திடுவான்:

விருத்தம்(5)

175. தேவருக்குத் தேவே! சிவனே! மறைமுதலே!
மூவருக்கு முத்தொழிலுங் கற்பிக்கும் முன்னோனே!
காவற் கடவுளே! கண்மூன் றுடையோனே!
யாவர்க்கு மாயா இருவினைக்கு மேலோனே[9]

---

1. [நி]
2. கன்னிகளுடன்; க ய; கன்னி நிரையசையாம்; னியரு என்பது ன்யரு என ஒலிக்கப் பெற்று நிரையசையாகலாம்; உடன், ஒடு உம், உம் இல்லாதசெவ்வெண் எல்லாம் ஒருங்கு என்னுப் பொருளில் ஒருதொடராக வருவது காண்க
3. வள்ளலார்க்குக்கூற (முன்வரி) வள்ளல் இன்பமுற்று
4. கூறிய ஒவ்வொன்றிற்கும் தக்க விடை கொடுத்து
5. விஷத்தைக் கழுத்தில் வைத்தவராக சிவனர்
6. [த்தி]
7. மெல்ல; ல, ள
8. இதுவரை மற்றொரு பிரதியில் கண்டது
9. நாற்சீர்க் கலிவிருத்தம்; கடைச்சீர் காய்ச்சீரும் முன் 3 சீர் வெண்டளையும் பெற்றுவருவன

நடை

'தேவர்க்குத் தேவனெனச் சிறந்து வளர்முதலே!

ஓவியமா கவளரும் உற்ற மறைப்பொருளே!
[1]நம்மூர்த்தி யான நான்முகன்மால் ருத்திரனுய்
இம்மூன்று பேர்க்கும் இனிய தொழில்கொடுத்தோய்!
முக்கண் ணுடையாய்! மூவர்க்கு முற்பிறப்பாய்
மிக்க வுதித்தாய்! வினைகள்ஒன்றும் இல்லாதாய்!

இனிய பிறப்பிறப்பு இல்லாத காரணனே!
[2]தனியே முளைத்தவனே தழைக்கும்[3]பிர பைக்கடலே
அடியார்க் கடியவனும் அண்டமெல்லாந் தான்வளரும்
வடிவுடைய சுவாமி! வரிவில்லா லேயடித்த
[4]பார்த்தன் தனக்கு பாசுபதம் ஈ[ய்]ந்தவரே!

[5]மாத்தில்லாத் தங்கம் மணி[6]மேர் வளைத்தவரே!
ஆசைக் கடல்கடந்தே அம்மையெனும் [7]பார்பதியை
நேசமுட னேதோயும் நிமலா! நிராயுதனே!
சுடலை தனில்நடிக்குஞ் சுதரா [8]பஞ்சமந்திர [னே]
கடலே! கரியுரித்த கர்த்தனே! உத்தமனே!

புதிய மலரெடுத்துப் போற்றிப் பணிந்தவர்க்கு
அதிகமோட் சம்கொடுக்கும் அண்ணலே! அற்புதமே!
சீறிவரும் நஞ்சைச் செழுங்கையால் வாரியுண்டு
வீறுடைய தேவருக்கு வேண்டமுது தான்கொடுத்தாய்!
சந்திரச டாதரனே! சாம்பசிவ சங்கரனே!

வீந்தைசெறி வெண்ணீறு மெய்யெங் கணிந்தவனே!
அரவம் அணிந்தவனே! அக்குமணி பூண்டவனே!
வரமருளுந் தேவே! மான்மழுவுங் கொண்டவனே!
நெற்றிவிழி தன்னுலே நெடிய சிலமதனை

---

1. நன்மூர்த்தி என்றுமாம்
2. தான்றேன்றி
3. ஒளி
4. அர்ச்சுனன்
5. மாற்றில்லா
6. மேரு
7. பார்ப்பதியை அல்லது பார்வதியை
8. ஈசானம், தற்புருடம், அகோரம், வாம தேவம், சத்யோஜாதம் என்ற ஐந்து முகங்களில் ஐந்து மந்திரம்

இற்று விழவெரித்த ஈசுபரா! முப்புரத்தை
வெல்ல நகைத்தெரித்த விமலா! அடியனென்று
சொல்லுகிறேன். இந்தத் தொல்லுலகோ ரண்டமெல்லாம்
உண்டுபண் ணும் படிக்[1]கி ஓவியமா கத்தொழிலை
வண்டுல[2]றுங் தாமரைமேல் வாழ்பிரம தேவனுக்கு
தான்கொடுத்தீர் அய்யா! சகலத்தை யுங்[3]காக்க
தேன்துளப மால்தனக்குச் சிறப்பாய் வரங்கொடுத்தீர்.
சங்கரிக்கும் மாதொழிலை தனியான ருத்திரர்க்கு
பொங்கமுட னேகொடுத்தீர் புண்ணியரே! தப்பாமல்.
இந்தவித மூவருக்கும் இனியதொழி லைக்கொடுத்து
[4]நந்துலவு நீர்க்கடலை நல்வருண னுக்களித்தீர்.
எங்கும் உலாவிவர இனியவா யு-தனக்கு
பொங்க முடனே புரிந்தீர் ஒருதொழிலை
வன்ன முடனே வளருங் குபேரனுக்கு
பொன்னுடனே செல்வம் பொருந்திவா ழும்படியே
அளகா புரிநகரை அன்பா யவர்க்களித்தீர்.
வளமேது சொல்வேன்! மாகொடிய பாவிகளைத்
தெண்டிக்கும் மா[5]பொருட்டால் தீயான மாதொழிலை
தொண்டனுக்குத் தந்தீர். சொல்லுவதே என்கொடுமை!
மூவருக்கும் முத்தொழிலை முக்கண்ணா! நீகொடுத்தாய்.
தேவருக்கு ராசனெனத் [6]தெய்வேந்திர னேவைத்தாய்.
ஆகாசம் ஓடிவரும்[4]அம்புலியைச் சூரியனை
வாகாகத் [7]தெண்டினைக்[8]கு வைத்தீர் துருவனையும்.
தீங்கில்லா மல்வளரும் திரிபுவன வேந்தருக்கும்
ஆங்கப் படிதொழிலை அமைத்[9]தீரது தப்பாமல்
ஆக்கினையுஞ் செங்கோலும் அழியாம லேயவர்கள்
பாக்கியமும் பெற்றுப் [10]பவுசுடனே வாழுகிறார்.

---

1. [கு]
2. [ர]
3. [காற்க்க]
4. சங்கு
5. காரணத்தால்
6. தேவேந்திரனை
7. வற்புறுத்த; (சரியாக ஓடச்செய்ய)
8. [கி]
9. குறுகும் போலும்
10. பெருமை; மதிப்பு

சோக நாள்தோறும் சிவனுக்[1]கினை தான் பொய்யாமல்
பூராய மாகப் புவனமெல்லாம் வாழுகிறார்.
தமியே னுடன்தொழிலை சாமிபங்கம் பண்ணிவைத்தால்
எமதுமேல் [2]குத்தமில்லை யினியா ருடன்சொலுவேன்!
என்னுடைய மாதொழிலை யினியழிவு [3]பண்ணுகின்றால்
பின்னெருவ ரா[4]ரைப் பேணித் திருத்திவைப்பார்?
தர்மம் நிலைப்பதுண்டோ? தவங்கள் வளர்வதுண்டோ?
[5]கர்மம் மிகத்தழையுங்; [6]காலங்கள் பொய்த்துவிடும்;
சத்த சமுத்திரமும் தளும்பி யணைகடக்கும்;
சித்திரமாய்ச் சொன்ன சிவாக்கினையும் பொய்யாகும்;
வடவாக் கினிசினக்கும்; மண்டலத்தை யுண்டுவிடும்;
தடையேது மில்லை! சாமி!யென்மேல் [7]குத்தமில்லை?
உலகம் சேரேழும் ஓர்நொடியி லேமாயும்.
நலமுட னேசொன்னேன்! நாயகமே! நீர்தாமும்
அடியே னுடதொழிலை அடியழித்தால் [8]இன்னியந்த
கொடியநர கங்கா[ர்]க்கக் கூடுமோ என்னுலே?
எல்லார்க்கும் நற்தொழிலை யீந்தீர். கருணைவைத்து
பொல்லா நரகமதைப் பொருளா யெனக்களித்தீர்.
இந்தநர கத்தொழிற்கு [9]இடைகூறு வந்ததென்றால்
கொந்துலவு செஞ்சடையீர் கூறுவதே! நீர்கொடுத்த
[10]படமொடு முத்திரைக்கோல் பாசக் கயறுதென்டு
கடவுளேயிந் தா'வென்று காலனுரைத் (துத்)தொழுதான்.

விருத்தம்(6)

காலனுரைத்து(க்) கதைமுத் திரை[11]படங்கள்[12]
நாலிடை வைத்திடலும் [13]நம்பன்அது கண்டுமேல்
கோல முறுவல் குறுநிலா நின்றெரிய(ச்)
'சால வுனக்குவந்த தாழ்வே' தெனஉரைத்தார்.[14]

---

1. 'சி' ஒலியாதுபோலும்
2. குற்றமில்லை
3. பண்ணுகின்றதால்; கின்றால்' என வரு தல் காண்க
4. ரே ஒன்றுமாம்
5. தீவினை
6. மழை முதலிய காலங்கள் மழை முத லியவை இன்றியாம்
7. செ-2
8. இவ்
9. இடையூறு [யி]
10. கோடி
11. படங்கு = பெருங்கோடி; பாசத்திற்கும் உபலக்ஷணம்
12. [ன்]
13. [நல்பன்]
14. முன் விருத்தம் போன்றது

நடை

சண்டன்இப் படிஉரைத்து(த்) தன்முத்தி ரையைவைத்து
தெண்டனிட்ட தாலே சிவன்சிறுக வேநகைத்து
வன்ன முடன்பார்த்து "வாரா யடா!நமனே!
என்ன உனக்கு இடைஞ்சல்மிக வந்தது?சொல்'
என்று பரமசிவன் இந்தமொழி தான்[1]கூறி
குன்றிலுயர் தோள்காலன் கூறுவான் நாதன்முன்னே:
'பிறந்தநாள் தன்முதலாய் பேரான மாவேடன்
இறந்துவிடும் நாள்வரைக்கும் இரக்கமது சற்றுமில்லான்.
செய்ததெல்லாங் குற்றம். தினந்தோறும் வேட்டைசெய்து
நொய்ய பலயுயிரை நேராகவே கொன்றுதின்றான்.
சண்டாள மாவேடன் தன்பேரைச் சொன்னலும்
அண்டாது புண்ணியந்தான். ஆனலும் பாவியிவன்
என்ன தவஞ்செய்தான்! ஏதாகி லும்இவன்தான்
நன்னயமாய்ப் புண்ணியமோர் நாள்தனி லும் பண்ணினானே?
அன்பாக வேஅசுவ யாகமிகச் செய்தானே!
பொன்போலே [2]மாகஸ்நானம் புனல்மூழ்கி வாழ்ந்தானே?
[3]இன்ன தனிலும் இவன்பாவி மாவேடன்
வானவர்க்கும் எட்டாத வடிவான பூந்தேரில்
ஏறியிவன் இங்குவந்து இட்டமுடன் தானிருந்தால்
கூறுவதென் னய்யோ! கொலிவேடன் தன்னுலே
அடியேனுட தூதர்தன்னே அய்யோ! சிவகணங்கள்
கொடுமை யுடன்அடித்த [4]குத்தமே சொல்லாது.
எள்ளளவு தருமமின்றி [5]யியல்கொடுமை செய்வேடன்
வெள்ளி மலைசேர்ந்தால் வேதமுதல் வா[6]இனி[7]நான்
ஆரைப் பிடிப்பேன் அருநரகி லே[8]தள்ளுவேன்?
சிருடைய மூர்த்தி! சிறியேனுக் கென்னதொழில்?

---

1. கூறு: செய என்பதன் பொருளில் செய்து என்பது வரல்
2. [மாஹேந்தானம்]
3. இந்தத் தன்மையிலும்
4. குற்றமே; ஏ. ஓ என இன்றுவந்தம்
5. இகல் = மாறுபாடு;
6. [யி]
7. [னு]
8. "தள்ளு" நிரை

என்றுதான் காலன் [1]இந்தமொழி தான்கூற
மன்றில் நடக்கும் வாமதே வன்கேட்டு
'பாவியென்று வேடனைத்தான் [2]பாராமல் சொன்னையே!
பூவிலந்த வேடன் பூசைமெத்தச் செய்தனனே
நாட்டமுட னேஒருநாள் நற்பான மாவேடன்
வேட்டைசெய்யப் போனஅ[3]ந்நாள் மிக்க சிவனிசியில்
வில்வத்தால் என்னை மிகவே [4]முழித்திருந்து
செல்வத் துடன்பூசை கித்திரமாய்ச் செய்தான்காண்!
பொங்கமுள்ள வேடன் பூசைசெய்த புண்ணியத்தால்
இங்குவந்தான்' என்று இ[5]றையோன் மிகஉரைத்தான்.

விருத்தம்(7)

கூறு மிய[6]ற்சித்[தி]ர குப்தனுமே தானறியான்
[7]பாறுபடி வைவேலோய் நீயும் பகுத்தறியாய்
கோறல் புரியும் குலவேட னு(ம்)ம[8]றியான்
நாறு மலர்த்[9]தொடையாய் நாமே அறிந்திருந்தோம்[10]

நடை

பின்னுமந்த காலனைத்தான் பெருமான் மிகநோக்கி
நன்னய மா கவேதான் நவிலுவார் மன்னகேள்.
'இவ்வேடன் தான்முழித்து எனைப்பூசை செய்தவகை
செவ்வே கணக்கெழுதும் சித்திரகுப் தன்அறியான்;
நீயும் அறியாய்; நெடுஞ்சிலேவே டனறியான்.
தாயகமாய் நாமறிந்து தான்இருந்தோங் கண்டாயே.'
என்று சிவன்கூற [11]இனிய கணக்கெழுதும்
நன்றியுள்ள சித்திரகுப்தன் நாரிபங்கன் முன்பே[12]சி

---

1. [யி]
2. ஆராயாமல்
3. [ன்னு]
4. வி
5. [ரை]
6. [i]
7. பருந்து
8. [ி]
9. [து]
10. முன் விருத்தம் போன்றது
11. [யி]
12. கி என்றுமாம்

'வன்னச் சடையோனே! மறைப்பொருளே நாயகமே
சின்ன மதிவேடன் சிவன்ராத் திரியெனவே
தெரிந்திருந்து பூசை செய்தால்அல் லோபலன்தான்?
வருந்தியிவன் வேட்டைசெய்ய வந்த வனந்தனிலே
அன்று மிருகம் அகப்படா த-படியால்
வென்றி செறிவேடன் மெத்த மயக்கமொடு
மாங்கிஷமும் இல்லா [1]மலக்கடியால் [2]ராமுழுதும்
ஏங்கியே தூக்கமின்றி ஏரியிலே [3]கண்ணிகுத்தி
பரிவாக வேவாழ்ந்து பாரவில் வ-மரத்தில்
அரிதாக வேயிருந்து அம்பெடுத்து வில்பூட்டி
உருக்க முடனேதா னெளிவைத்தி ருந்தவேடன்
பொருக்கமுடன் விலங்குகளைப் [4]பிலமாக எய்[5]வோமென்றுன்
எய்தமுனி அம்பை [6]இனிக்கொம்பு தட்டுமென்று
கையறுவாள் கொண்டு கனத்திடும்வில் வத்தழையை
[7]அரிக்கியவன் தள்ளியதே அல்லாம லேவேடன்
[8]நரிக்கடுக்கை பூண்ட நாதன் தனக்குகந்து
சிவன்ராத் திரியெனவே சிவபூசை யோவியமாய்
இவன்அறிந்து [9]செய்தால் இனியபலன் உண்டாகும்.
சற்றும் இவனறியான். சதிகார வேடனுக்கு
உற்ற பெரும்பதவி யுண்டோ?' எனக்கேட்டான்.
சித்திர குப்தன் சிவனை மிகக்[10]கேட்க
[11]மத்த[12]ணிந்த நாதன் [13]மறுத்து முரைத்திடுவார்.

விருத்தம்(8)

ஓதியவா [14]றல்லாம் உளவே. உணர்வின்மை
யாதலினு லன்றே க[15]ணநாத னுயினுன்.
மூதுணர்வி னுலுணர்ந்து [16]செய்த(ா)னுல் முத்தனுய்
பேதமற யாமர யுறைவன்எனப் பேசினுன்[17]

1. மனக்கலக்கம்
2. இரா
3. கருக்குக் கயிறு வைத்து
4. பெலமாக
5. 'வோ' என ஒலிக்கும்
6. [யி]
7. அருக்கி = அழித்து
8. நரிக்கோவ்வை-செங்கொன்றை
9. முடிபு மாறுகிறது
10. வினவ
11. மத்து (ஊமத்தம்)
12. [னி]
13. மறித்தும் என்றுமாம்
14. [ர]
15. [னி]
16. செய்திருப்பானே ஆமானுல்
17. முன்விருத்தம் போன்றது

நடை

'சித்திர குப்தா! செப்பினதெல் லாம்நிசமே.
புத்திதனில் தோணுமல் புனவேடன் [1]இங்கிதமாய்
தவமுடைய பூசை தான்பண் ணினதாலே
சிவகெண நாதருடன் சேர்ந்திருந்தான் நம்மருகே.
செம்மை யுடனே தெரிந்துஇவன் பூசை[2]செய்தால்
நம்முடலில் வேடனுந்தான் நன்ருய்க் கலந்திடுவான்.
வண்ணமுட னேகோடி மாவிரதங் கள்நாளும்
பண்ணினு லும்வேள்வி பாங்காய் முடித்தாலும்
எக்கோடி தானபலன் இனிப்'பாகச் செய்தாலும்
மிக்க சிவனிசியின் விரதம்போல் முற்ருது.
இந்த விரதபலன் [3]இனியறியா ம-லுரைத்தாய்!
விந்தையுள்ள [4]ஏமா! வேண்டா மயங்காதே!
திட்டமுட னேநீயும் செங்கோ லெடுத்து[5]ன்தன்
பட்டணம்போய்ச் சேர்'எனவே பரமசிவ னும்கூற
சண்டன் மிகக்கேட்டு சந்தோச மாகவேதான்
அண்டர்பிரா னேத்தொழுது அவன்முத் திரைஎடுத்து
'சிறியேன் அறியாமல் செய்தபெரும் தீவினையை
நறுமலர்ப் பூந்தேவே! நற்பாகக் [6]காரும்'என்று
சட்ட முடன்வணங்கித் தன்கணக்கன் தன்னுடனே
பட்டணமும் போய்ச்சேர்ந்தான் பாங்கான காலனுந்தான்.
இந்த வனவேடன் [7]ஈசனுட பாதமதில்
விந்தை யுடனே விள[8]ங்குதெய்வப் பெண்களுடன்
கூடி யனுபவித்துக் கொடுமுடிசூழ் வெள்ளிமலை
வீடு தனிலே வீற்றிருந்தான் மன்னவனே!
இப்படியே வேடன் இனிமூன்று லோகமதில்
செப்பமுடன் வாழ்ந்திருந்து சென்ருன் சிவபதத்தில்.'
என்று தவவதிட்டன் [9]இனிய திலீபதிக்கு
வென்றி யுடனே விளம்பினன் இக்கதையை. 358

இருபத்தி ரண்டாம் அத்தியாயம் முற்றும்.

---

1. சமயோசிதமாய்
2. செய்திருந்தால்
3. [யி]
4. [யே]
5. [ந்]
6. காவும்
7. [யி]
8. [ஞ]
9. [யி]

இருபத்து மூன்றும் அத்தியாயம்

சிவன் ராத்திரி மான்மியம்

விருத்தம்(1)

வானுறையுந் தவமுனிவன் எடுத்துரைத்த
வகைகேட்டு மகிட்சி பொங்க
பானுகுலத் தினில்வேந்தன் ந(ன்)றிதுநன்
றெனப்பகர்ந்து பழைய வேத
ஞானமுனி யேஉரைத்தீர் இவ்விரதங்
கேட்டதினுல் நலங்கூர் சிந்தை
யூனமறப் பெரிதுவந்தேன் உணராத
வேடனுக்கீ துற்ற த(ன்)னுல்.[1]

நடை

வானவர்கள் கொண்டாடும் வசிட்டமுனி சொன்னகதை
பானு குலத்தில்வரும் பார்த்திபனுந் தான்கேட்டு
சிந்தை மிகமகிழ்ந்து திண்டோள் மிகத்தடித்து
"விந்தையிது நன்று"எனவே மெச்சிமயிர்க் கூச்செறிந்து[2]
"வேத முனியே! விளங்குங் குலக்குருவே!
போதமுட னிவ்விரதம் புகன்றதால் நன்மை பெற்றேன்!
நன்மையில்லா வேடன் நல்விரதக் காட்சியினுல்
சென்மமீ டேறிச் சிவலோகம் பெற்றதினுல்
அரிதரிது இவ்விரதம் யார்க்குங் கிடைக்காது!
பெரிதுசிவ ராத்திரியின் பெருமைதனைச் சொல்லரிது!
ஆனதினுல் மாமுனியே அறிந்துசிவ [னிசியெனவே]
தானுகந்து பூசை தளம்பாமல் செய்தவர்க்கு
தூய தொருபலனைச் சொல்லரிது![3]ஆகையினுல்
நேயமுட னேசிவனுர் நிசியின்விர த-முறையை

---

1. 4காய்+மா+தேமா என வரும் அறு சீர் விருத்தம்
2. சுவையனுபவம்
3. [வா]

செப்பவே ணும்"எனவே திலீபதிரா சன்கேட்க
தப்பில்லா வேதத் தவவதிட்டர் சொல்லிடுவார்.
"பொன்னிலவு மன்ன! பொருந்துசிவ ராத்திரியின்
வன்ன முனக்கு வழுத்துகிறேம் நன்முக.
மாசிமா தந்தனிலே வரும் அமர பட்சமதில்
பேசுபதின் மூன்றும்நாள் பெருமையுட ணேர்போது
உண்டு, மறுநாள் உற்றசதுர்த் தேசிதன்னில்
வண்டுலவும் பூங்கூந்தல் [1மானுருவி களந்து]
விடிய வெழுந்திருந்து மிக்கபுனல் தான்மூழ்கிப்
படிவுடனே பாதைவழி பாங்காய் வரும்போது
ஈனரொடு பறையர் இழிசூலமாங் கீழ்ச்சாதி[2]
ஆனவ ருடன்னெதிரே அண்டியே பேசாமல்
சீராய் ஒருவரையுந் தீண்டாமல் பாராமல்
நேராக நோன்பிருந்து நெடியவுச்சிக் காலமதில்
ஓவியமாய் நீராடி உலர்ந்திடு [3]சோ மன்னுடுத்தி
பா[4]விகமாய்த் தர்ப்பணங்கள் பண்ணி மிகமுடித்து
[5]கோமியத்தா லேயீசன் கோவில் தனெமெழுகி
பூமலரால் நற்று[6]கிலால் போத வலங்கரித்து
ஆசா னுரைத்த அம்மந்தி ரஞ்செபித்து
தேசாரும் வெண்ணீறு சீராக வேபூசி
சொல்லுஞ்சிவ தோத்திரங்கள் துதித்துப் புனிதமுடன்
நல்லபால் சர்க்கரைதேன் நற்பழத்தோ டே கலந்த
[7]பஞ்ச[ா] அமுர்தமொடு பாங்கா யபிஷேகம்
மஞ்சார் குழலுமையாள் மணவாள னேயாட்டி
பொன்னுடை சாத்தி பூமலருந்தான் சாத்தி
தன்னுலே [8]என்ற தமனியப்பொன் தான்சாத்தி
சந்தனத்தோ டேபுனுகு சாத்தி யொருமனதாய்

---

1. மானுர்ஆர்வுஇகழ்ந்து = மான்போன்ற பென் போகத்தை வெறுத்து என்று கொள்ளலாம்
2. தீண்டாமையின் கோடுமை
3. துளசி
4. [வ]; எதிரேஇருப்பதுபோல மனத்தால் பாவித்து
5. கோமயம்; சாணம்
6. [யி]
7. பஞ்சாமிர்தம்; பஞ்சாமுதம்; நெய் ஒன்று சேர்த்தால் ஐந்தாகும்
8. இயன்ற

சிந்தை குளிரச் சிறந்த சைவ நீதியொடு
வேதமுறை சொன்னபடி விளங்கும்[1]வைதி ய-நெறியால்
ஆதி சிவனே யன்புடனே பூசை செய்து
சைவ நெறியாளர் தானே யெடுத்து வந்த
துய்யவில் வத்தாலே சொல்லுஞ்சிவ லிங்கமதை,

விருத்தம்(2)

[2]சறுவனே [3]உக்கிரனே [4]பீமனே
சங்கரனே சிவனே தேவர்
பெறுகதியே [5]நல்கிடுமீசு வரனே[6]மா
வுக்கிரனே பேதா பேத
மறுவறுபூ தாதிபதி யேயென்று
மந்திரமோ ரெட்டு மோதி
குறைவறவே தூய[7]நெய் வேத்தியங்கள்
அனைத்தினையுங் குறித்துச் செய்தே.[8]

நடை

சறுவனே சங்கரனே தழைக்கின்ற உக்கிரனே
நறுமலர்சே ருஞ் சிவனே நல்[9]பீம னேயினிய
ஈசுபரனே தேவனே யெங்கள் மகாவுக்கிரனே
தேசார் பூ தாதியென்று செப்புமந்தி ரங்கள்தனை
ஓரெட்டுஞ் சொல்லி யுகந்தவில்வந் தானெடுத்து
சீர்பெற்ற வேந்தை சிறப்பாக வேசாத்தி
கற்பூர தீபமொடு கனிந்தசெழுஞ் சாம்பிராணி
பொற்பூறு நெய்வேத்தியம் பொங்கமுட னேபடைத்து
[8]வெள்ளிலையோ டேதேங்காய் வேண்டும் பழத்துடனே
உள்ளபல காரம்முதல் உகந்தவெல்ல மும்படைத்து

---

1. வைதிக [வயிற்றிய]
2. ஸர்வன்
3. [வு]
4. [யீமனே]
5. நல்கி = நிரை
6. [மகா]
7. நை; கால்ட்வெல் ஐயர் ஐ = எய் என்று கூறல் காண்க; ஐ = அய் என்பதே ஆம்; ஆனல் சிலஇடத்து வடமொழி அ தமிழில் எ ஆம்
8. முன் விருத்தம்போன்றது
9. [யீ]
10. வெற்றிலை

சோடசுப சாரமுடன் தூபதீ பங்கொடுத்து
நீடியவேற் கண்ணுமையாள் நேசனெனு மீசுபரனை
தாட்டிகமா கப்பணிந்து 'சங்கரனே யானடியேன்
நாட்டமுடன் செய்பூசை நாதாநீ யன்புடனே
ஒப்புக்கொள் ளு'மெனவே ஓவியமா கக்கூறி
செப்பமுட னேவிழுந்து செய்யமலர்க் கைகூப்பி
இந்தப் படியே யினிநாலு சாமமுந்தான்
சிந்தை யுடனே சிறப்பாய் [1]முழித்திருந்து
போசனமுஞ் செய்யாமல் புனிதமுட னேசிவனை
நேச முடனே நிரம்பவே பூசைசெய்து
மற்றநாள் வெய்யோன் வரும்போது [2]ஈசுபரனை
உற்ற நறுமலரால் [3]ஓவியமாய்ப் பூசைபண்ணி
தன்குருக்கள் சிந்தை சந்தோச மாகும்படி
அன்புடனே மன்னு [4]ஆகும் படிநடத்தி
தன்னுலே இயன்றமட்டும் தானதருமங் கள்கொடுத்து
பொன்னன வேதியர்க்குப் போசனமுந் தான்நடத்தி
அன்பான வேதியர்கள் ஆசீர்வா தங்கள்சொல்ல
நன்பாய் மனபுகுந்து நல்லமுது தானருந்தி
இந்தப் படியே இனிய சிவனிசியில்
வந்த விரதம் வழுவாம லேமுடித்தால்
சொல்லா[5]ரு மன்னு சொல்லுவதோ! அம்[6]மோச்சம்
[7]எல்லாத்திலும் பெரிது! எடுத்துரைக்க முற்றுது.
ஆரேனு மானலும் அழகு சிவனிசியில்
சீராக வேபூசை செய்து முடித்தாலே
பூலோக மெல்லாம் புகழும் படியாக
சாலோக சாமீப சாரூப முங்கடந்து
பூவார் கயிலாசம் புகுவார். அவர்களுட
மூவேழ் தலைமுறையும் [8]முத்திமோ தூரடைவார்."

---

1. வி
2. [யி]
3. [யோ]
4. [ய]
5. [று]
6. மோட்சம்
7. எல்லாவற்றிலும்
8. பதமுத்தி போலும்

என்றுதான் வேதம் இனிப்பாகச் சொல்லுதுகாண்
நன்றியுட னிப்படியே நடக்க வறியாதார்
பஞ்சாட் சரத்தைப் பரிவாக வேயோதி
நஞ்சார் கழுத்தோனை நல்லதொரு வில்வமதால்
இந்தப் படியே யினிநாலு சாமமூந்தான்
விந்தை யுடனே வீற்றிருந்து பூசைசெய்தால்
வெள்ளைக் கமலமதில் [1]வீத்திருக்கும் மாதேவன்
தெள்ளிமையாய்ப் பூசைசெய்த சித்திரம்போ லேசிவனுர்
மெத்த மகிழ்ந்திடுவார். வீராகே ளோவியமாய்!
உற்ற தொரு வேள்வி யோரா யிரந்தானே
செய்த மகாபலனும் சிறப்பாகத் தானதருமம்
செய்த பலனுஞ் சிறந்தபஞ்சாக் கினிநடுவே
இருந்து தவசு [2]இயற்று மகாபலனும்
திருந்தவே மாசிச் சிவராத் திரிவிரதம்
தந்த பலன்போலே தான்கொடுக்க மாட்டாது.
விந்தையுள்ள மன்னு! மெய்யிதுகாண் கண்டாயே!
மாகப் புனல்தான் மகிழ்ந்தாடும் அக்காலம்
ஆக மிகமகிழ அட்டமி[3]யே காதேசி
[4]சிவராத் திரியான செய்ய சதுர்த்தேசி
தவம்பெருகும் மாகஸ்நானம் தான்முழுகி நோன்பிருந்தால்
அந்தப் பலனை யாராலுஞ் சொல்லரிது.
விந்தையுடன் மாகஸ்நானம் விரும்பியா டும்பேர்கள்
தோத்திரங்கள் சொல்லிச் சுகமாக வேநீரில்
பார்த்திபா மூழ்கப் பலனுண்டாம் சொல்லுகிறேம்.

---

1. வீற்றிருக்கும்
2. [யி]
3. ஏகாதசி, சதுர்த்தசி என்பதில் த'தே' என்றே ஒலிக்கக் காண்கிறேம்
4. தை அமாவாசை முதல் மாசி அமாவாசை வரையும் மாகஸ்நானம்; ஆதலின் சிவராத்திரி இதற்குள் படுதல் காண்க; சூரியன் கணக்குப்படியான சௌரமானத்தில் மகர ரவியாம்; தை-மாதமாம்; சந்திரக்கணக்குப்படியான சாந்திராயணத்தில் மாகமாம்: மாசியாம்

விருத்தம்(3)

அகண்டபகி ரண்டமுதல் அனேத்தினையும் புரப்பவனே!
துண்டமதி முடியோனே! சிவனேநிற் றொழுமடியேன்
மண்டலமெண் மாகமதி மறுவிநீ ராடுகின்றேன்.
120. பண்டவினைத் தொடரறுத்துப் பவக்கடல்விட் டேற்றுதி
[யா[1]ல்[2]

நடை

'அண்ட பகிரண்ட மனேத்தையெல்லா மேகா[ர்]க்கும்
கொண்டலே! கொன்றைபுனே கோலச் செழுஞ்சடையாய்!
மூன்றுஞ் சிறுபிறையை முடிமே லணிந்திருக்கும்
சான்றோர் பெரும்பாவம் தான றுக்கும் பரசிவனே!
125. உன்னேத் தொழுது ஓவியமாய் மாகஸ்நானம்
நன்னயமாய் ஆடுகிறேன். நாதனே! என்பாவம்
தீர்த்துப் பவக்கடலேச் சிவனே! மிகக்கடத்தி
கா[ர்]த்தென்னே நாளுங் கருணையுடன் ஆள்வாயே!,

விருத்தம்(4)

மகர(ர)வி தனி[3]ற்புனலில் மருவிநீ ராடுகின்றேன்
130. அகரமுத லெழுத்தாம் அச்சுதா! கோவிந்தா
சிகரவட வரைதிரித்துத் தேவருக்கா யமுதளித்தோய்!
பகரவரி தாயபெரும் பலப்பேறு தருவாயே.[4]

நடை

'மகர(ர)வியான மாகஸ்நானம் பண்ணுகிறேன்.
அகரமெனும் எழுத்தாம் அச்சுதா! ஓராமா!,
135. கோவிந்தா! கோவிந்தா! கோவிந்தா! தேவருக்காய்
மாவிந் திர[5]மேரை மத்தாகப் பாற்கடலில்
நட்டுக் கடல்கடைந்து நற்பான தேவமுது

---

1. [ய்]
2. காய் நான்குவரும் கொச்சகக்கலி விருத்தம்
3. [ப்]
4. முன் விருத்தம் போன்றது. முன்னையது சீவனுர் வாழ்த்து; இது தீருமால் வாழ்த்து
5. மேருவை

திட்டமுட னேஅளித்த தேவா! அரிராமா[1]
சீராக வேஅடியேன் சிந்தை தனில்நினைத்த
140. பூராய மெல்லாம் போதவே நீதருவாய்!

விருத்தம்(5)

கந்தமலர்ச் சுருளழகா! கவுரிதருங் கற்பகமே!
தொந்தி[1]வயற் றைந்துகரத் தூயோனே! நினைத்தொழுதேன்.
இந்தவியன் மாகமதிப் புனலாடும் எளியோர்க்குச்
சிந்தையினில் விளைவனைத்துஞ் சேர்ந்திடநீ யருள்வாயே[2]

நடை

145. [1]கந்த மலர்(க்)குழலாள் கவுரிதரும் கற்பகமே!
தொந்திவயிற் றைங்கரனே! தூயனே! பிள்ளையரே!
உன்னைத் தொழுது உற்றதொரு மாகபுனல்
தன்னில் முழுகுகின்றேன். சாமி! யடியேனுன்.
நினைத்த வரமெல்லாம் நீயே மிகக்கொடுத்து,
150. கனத்த புகழ்மணக்கக் கா[ர்]ப்பதுனக் குக்கடனே'

விருத்தம்(6)

'செக்க(ர்)நிறத் [3]தாரகனே!செங்கதிரா யிரத்தோனே!
மக்களுறு துயர்களையும் வானவனே! நினைத்தொழுதேன்.
மிக்கதிரு மாகமதி வியன்புனலிற் படிகின்றேன்
இக்கணமே துயர்களைந்திட் டெனையெளிதிற் பு[4]ரப்பாயே[5]

நடை

155. சிவந்த [6]நி[7]றத்துடைய சிவசூ ரியப்பகவா!
தவந்தருமென் கோவே! தழைக்குமா யிரங்கழலோய்!
ஆதித்தா! வுன்னை அன்பாக வேநினைந்து
நீதிப் புனலில் நேசமுட னுடுகிறேன்.

---

1. வயிறு
2. முன்னைய விருத்தம் போன்றது இது பிள்ளையார் வாழ்த்து
3. காப்பவனே; சூரியனே என்றும் பாட மாகஸ்நம்
4. [ற]
5. முன் விருத்தம் போன்றது; இது சூரிய நமஸ்காரம்
6. நீறுமுடை
7. [ர]

மானிடர் கள்செய்யும் மாபாவத் தைத்தீர்க்கும்
160. [1]தானவனே என்னை தயவுடனே கா[ர்]ப்பாயே.'

விருத்தம்(7)

பேரின்ப மருள்வாளே! மகமாயைப் பெண்ணமுதே
பாரின்பம் பயந்தருளும் பராபரை!நின் பதம்போற்றி!
சீரொன்று மாகமதிச் செழும்புனல்யான் படிகின்றேன்.
தாரொன்றுங் குழலாளே! தமியேனைப் புரப்பாயே[2]

நடை

165. 'பேராகு மீ[3]சுவரியே! பேரின்பம் பெற்றவளே!
சீராறுந் தாயே! செகமா[4]யை யானவளே!
வண்ண முடனே வழுத்துகின்ற மானிடவர்
எண்ணும் வரத்தை யீகின்ற மாதேவி!
தாயே! பராபரையே! சங்கரியே! உன்பதத்தை
170. நேயமுடன் போற்றுகின்றேன். நீலநிறப் பூங்குயிலே!
மாகமதி நீரும் மகிழ்ந்துமிக மூழ்குகின்றோன்.
வாகுடைய தேவி! ம ஈதில் நினைந்தபடி
தந்திடு வா'யென்று தாட்டிக மாய்நினைந்து
இந்தப் படியே இனிதாகத் தோத்திரங்கள்
175. செய்துமா கப்புனலில் தீர்த்தமிக வேயாடி
கையா லருக்கியங்கள் [5]கட்டாக வேகொடுத்து
பரமேசு வரன்பதத்தைப் பாங்காக வேநினைந்து
வரிசையுள்ள வேதியர்க்கு மாதான முங்கொடுத்து
மாகஸ்நா ன-விரதம் மகிழ்ந்து முடித்தவர்கள்
180. [6]நாகத்தின் மேலிருக்கும் நற்பான மாவுலகில்
அட்டாங்க யோகமெல்லாம் அன்பா யனுபவித்து
மட்டார் புகழ்மீற வாழ்ந்துண்டு நன்றாக
தேவர் மிகப்புகழத் தெய்வலோ கமடைந்து

---

1. சந்திரனுக்குத் தானவன் என்ற பெய ருண்டு. சூரியனுக்கும் அதனால் அப் பெயரை இட்டனர் போலும்
2. முன் விருத்தம்போன்றது; சக்தி வணக் கம்
3. ஸ்
4. [ய்கை]
5. மிகுதியாக
6. சுவர்க்கம்

ஓவிய மாக உற்றபோ கங்கள்துய்த்து
185. [1]ஈசன் இருபையினுல் [2]ஈமதெண் டினைகடந்து
வாசமுட னேதான் வாழ்வார் கயிலாசம்.
மன்னு கேள்" என்று மாகஸ்நா ன-கதையை
பொன்னுர் தவவதிட்டன் புகன்ருன் எனச்சூதன்
நாட்ட முடனே நயமியசா ரண்ணியமதில்
190. கூட்டமெனச் சூழ்ந்திருக்கும் [3]கொடிய தபோதனர்க்கு
இந்தக் கதைதான் இருபத்து மூன்றையையும்
விக்தை யுடனே விளம்பினுர் சூதமுனி.

விருத்தம்(8)

வாழி மாதவர்! வாழி[4]சுருதி நூல்!
வாழி நீள்சைவம்! வாழி புராணங்கள்!
195. வாழி வையகம்! வாழி மழைமுகில்!
வாழி மாகரீ ராடு[வர்]மாந்தரே.[5]

நடை

வா[6]ழி மிகவாழி! மாதவர்கள் தான்வாழி!
நீளு மறைவேதம் நிரம்ப மிகவாழி!
சை[ய்]வரா க(ம)ம்தழைக்க! தரணி மிகத்தழைக்க!
200. அய்யன் இருபையினுல் ஆகமபு ரா[7]ணம்வாழி!
மாகப் புனலில் மகிழ்ந்தாடு வோர்வாழி!
நாகமதின் மேலுறங்கும் நாதன் மிகவாழி!

விருத்தம்(9)

இப்பு ராணம் இசைந்துடன் கேட்பவர்
தப்பி லாது படிப்பவர் தாமெலாம்
205. மூப்பு ராதி முதல்வ னருளினுல்
செப்ப லாத சிவன்பதஞ் சேர்வரால்.[8]

---

1. [யி]
2. ஏம தண்டனை; ஈ; ஏ இ; அ
3. கடுந்தவம் செய்வோர்
4. [த]
5. மா-வீள-மாவிளம் என வரும் கலி விருத்தம்
6. வி என்றே எதுகை கொள்ளும்
7. ணம்வா நிரை
8. முதற்சீர் மா; கடைச்சீர் விளம்; இடையில் இருசீர் வெண்டளாக் கேற்ப மாவாகவும், விளமாகவும் வரும்; அடிக்கு 11 எழுத்துக்கள்

நடை

இந்தப் புராணமெனும் [1]இனிமாகத் தின்கதையை
விந்தையுடன் சொல்பவரும் மிகமகிழ்ந்து கேட்பவரும்
முப்புரத்தைக் காய்ந்த [2]முனிவ னுடபதத்தை
210. தப்பில்லா மல்சேர்வார். சத்தியமாய்ச் சொன்னேமே.

விருத்தம்(10)

ஏது வேண்டும் இனித்தவ மாந்தரே!
ஒது நூலில் ஒருகவி யாயினும்
காத லோடும் பிழையறக் கற்றிடில்
போதில் நான்முகன் பொன்னுல கெய்தலாம்[3]

நடை

215. வன்னமுடன் மாகஸ்நானம் மாபெரிது மாந்தர்களே!
பொன்னிலகு மாகப் புராணத்தி லோர்கவிதை
ஆசை யுடனே அன்பாகக் கற்றலே
வாச மலர்மேல் மகிழ்ந்திருக்கும் மாதேவன்
பொன்னுடு சேர்வார் புகழான தர்மநெறி
220. [4]என்னாளும் பெற்றிடுவார் இருப்பார் கயிலாசம்.[5]

இருபத்து[6] மூன்றும் அத்தியாயம் முற்றும்.

---

1. இனிய
2. கடவுள்; முனிந்தவன்என்ற பொருளும் தவிக்கும்; தக்ஷிணமூர்த்திக் கோலமும் காண்க
3. முன் விருத்தம் போன்றது
4. எந்நாளும்; எதுகை நோக்குக
5. புராணத்தில் முடிவாக எல்லோருக்கும் வாழ்த்துக் கூறிவிட்டமையால் இத் தப் பகுதியோடு புராணம் முடிகிறது. பின்னேவரும் பகுதி வேறுகதையும் சேர்த்துப் பின்னவர் பாடியது போலும். பின்வரும் 24-ஆம் அத்தியாயத்தின் கீழ் முதல் அத்தியாயம் எனத் தொடங்குவதும், அங்கே தலியே கடவுள் வாழ்த்துத் தவிர நாலுக்குப்போல் வருவதும் காண்க. பின்வரும் ஏழு அத்தியாயங்களோ இரண்டாம் மாகப் புராணம் எனக் கொள்ளலாம். அதற்கு முடிவில் வாழ்த்துக்கள் வந்துள்ளன.
6. [தி] பேச்சு வழக்கு

[இரண்டாம் பகுதி
மாகப் புராண அம்மானை]

[இருபத்து நாலாவது அத்தியாயம்]

[பஞ்சாட்சர மகிமை]

முதல் அத்தியாயம்[1]

அருச்சிகை கதை

விருத்தம்(1)

ஆக்கையெனும் புழுக்குரம்பை யகிணந்தினை யாப்பொருளை
யருளொளியாம் பராபரத்துக் கப்புறமா மறிவை
நீக்கமின்றி [2]மயிரினுக்கு மிடமறவெவ் வுலகும்
நிறைந்துநின்ற முழுமுதலை நினைவினெழுஞ் சுடரை
பாக்கியங்கள் பழுத்தனந்தம் தவக்குறைகள் முடித்த
பழவடியார்க் கருளுதவும் பசுந்துணர்க்கற் பகத்தை
வாக்கில்மன விகற்பத்தில் அளவுபடா வொன்றை
மாசற்ற பெருவெளியை மனவெளியி லடைப்பாம்.[3]

நடை

5. திருந்துஞ் சிறுபுழுக்கள் சேருமிந்தக் கூடுதனில்
இருந்து மிராம லிருக்கும் தனிப்பொருளே!
பராபரத்தி லும்பரமாய்ப் பாங்காக அற்புதமாய்
சராசரமாய் நீள்வெளியாய் தழைக்கின்ற பேரறிவாய்
அருவுருவாய் மாயமதா யனுதியாய்க் காரணமாய்
10. பெருவெளியாய் மும்மலமாய் பேசவொட்டா த-பொருளாய்
நீக்கமின்றி ஐம்புலனுய் நி[4]ர்த்தனுய் நிர்மலனுய்
வாக்கு மனதினுக்கு மற்றொன்றுக் கெட்டாமல்
பசுபதியா யண்டப் பரப்பாய்ப் பரஞ்சுடராய்
நிசிவடிவா யெங்கும் நிறைந்திருக்குங் காச்[5]சியதாய்

---

1. முன்னைய பாகத்தோடு இதனையும் தொடர்புபடுத்தி ஒருநூலாகவே ஏட்டுப் பிரதிகள் எழுதியுள்ளன. ஆதலின் இருபத்து நாலாவது அத்தியாயம் பஞ்சாட்சர மகிமை என்று எழுதப்பெறுதல் காண்க. இருந்தாலும் பின்வரும் தனி நூலாம் என்பது முதல் அத்தியாயம் என்று தொடங்குவதால் புலனுகிறது
2. [மு]
3. 3காய்-மா இரட்டித்துவரும் எண் சீர்க் கழி நெடிலாசிரிய விருத்தம்; இதே பாடல் முற்பகுதியில் 'கடவுள் வாழ்த்து'என நாம் குறிப்பிட்டதில் மூன்றுவது செய்யுளாக வந்துள்ளது
4. [ற்]
5. ட

குற்றமில் லாததொன்றைக் குறையில்லாச் சூத்திரத்தை
உற்றதவத் தொண்ட ருக்கு உதவுகின்ற கற்பகத்தை
பார வெளியென்று பகருகின்ற [1ஈ][2]சுவரீன
சீருட னென்னுளும் சிந்தைவெளி யிலடைப்பாம்.
பாலுபோ லேகிறத்த பங்கயத்தின் மேலிருக்கும்
நீலக் கருங்குழலி னிறைந்தபடி க-நிறத்தை
செவ்வரிதோய் கண்ணுளை செய்யபஞ்சின் ருளாளை
கொவ்வை[ச்]செ[3]றி வாயாளை கொடிபோல் [4]மருங்காளை
நான்முகன்நா வில்வளரும் நாயகிச ர[5]சுவதியை
பூமல ராள்நாமும் போற்றி மிகத்தொழுவோம்.
கார்பூத்த மேனிக் கரிய்திரு மால்தனை யும்
[6]வார்பூத்த கும்பமுலை மாதுலட்சு மி-தனை யும்
மைக்கழுத் தன்பங்கில் வாழுகின்ற [7ஈ][8]சுவரியை
இக்கதைக்கு நாளும் இருத்துவே னுள்ளமதில்[9]

விருத்தம்(2)

மன்னவர் மகுடஞ் சூளா மணிபீடச் சிவந்த பொற்றுள்
பொன்னவிர் மார்பன் செங்கோல் புரவலன் திலீபன்
[மீண்டும்
சென்னியி லு[10]ற்ற கையன் சிந்தையி லுவகை யோடு
[11]வன்னியில் புனித ஞான வதிட்டனை வணங்கிச்
சொல்வான்.[12]

நடை

செகவேந்தர் நாளுந் தெண்டனிட வேயவர்கள்
மகுடத் தினில்படித்த மாசில்லா ரத்[13]தினமணி
சேர்ந்ததொரு காந்தியினுற் செம்பருத்தம் பூவெனவே
காந்தி செறிபதத்தான் மருணைவளர் மாமுகத்தான்

---

1. [யி]
2. ஸ்
3. [ரி]
4. இடையுடையாளை
5. ஸ் என ஒலித்தலின் ர நேரையாம்
6. பெண்கள் மார்பில் அணியும் கச்சு
7. [யி]
8. ஷ-5
9. இப்பகுதிக்கு எனக் கடவுள் வாழ்த்து வருதல் காண்க
10. த்த
11. தீப்போல் மாசு ஒட்டாத; தூய
12. வினை-தேமா இரட்டித்து வரும் அறுசீர் விருத்தம்
13. தீ ஒலியாது

பூமகள்தான் நாளும் புயத்திலே கூத்தாடும்
தாமமணி மார்பன் தளம்பாமல் நாடுமுற்றும்
நீதி வழுவாமல் நேசமுட னேர்ந்துடையில்
போதமென வாழும் புகழான மாவீரன்
மன்னர்க்கு மன்னன் வணங்காத ராசசிங்கன்
தென்னர்க்குத் தென்னன் திலீபதிரா சன்தானும்
கையெடுத்து வுச்சிமிசை கனிவாக வேகூப்பி
'அய்யனே' யென்றுமெத்த அன்பாய் மனமகிழ்ந்து
"எ[1]ந்தன் குருவே எங்கள் குடிக்கரசே
சிந்தை மகிழ்ந்தேன் தேசிகா [2]என்றுசொல்லி
அரசன்மி கப்புகழ்ந்து ஆச்சரிய மாகின்று
குருபதத் தைவாழ்த்திக் கும்பிட்டு வாய்புதைத்து
மல்லுலவு தோள்வீரன் வதிட்டர் தனைநோக்கி
சொல்லுவான் மெல்லத் தூயமலர் வாய்மலர்ந்து
"திருப்பாற் கடல்தனிலே திரமாக வேகடைந்து
விருப்பமுட னேயெடுத்த வேண்டமு[ர்]தம் வானவர்க்கு
வாயின்ருசி யல்லாமல் மற்றொன்று மேதுமில்லை.
தூயனே நீர்தாம் சொன்னகதை பாலமு[ர்]தம்
செவிக்கும் இனித்திருக்கும் செழும்வாய் ருசித்திருக்கும்
புவிக்குள் இருவினையைப் போக்கிவிடும்; மோட்சந்தரும்.
ஆனதா வின்னம் அடியே னுடகருத்து
ஞான முனியே நன்மைதரு மாகமதி
தன்னில் வருங்கதைதான் தமியேன் மிகக்கேட்க
நன்னயனே சிந்தை நற்பாக யிருக்குதுகாண்."
என்றுதான் வேந்தன் இரக்கமுட னேகேட்க
நன்றி வளர்கின்ற நல்ல வதிட்டரிசி
மன்ன னுடைய மனவிருப்பத் தைப்பார்த்து
[3]அன்னக் கடவுள் அரும்புதல்வன் கூறிடுவான்:
"நாடாளும் வேந்தே, நல்லதுநல் ல-துனக்கு
வாடாம வின்னம் வழுத்துகிறே மிக்கதைதான்

1. ன்
2. [யெ]
3. பிரம்மாவின் புதல்வனை வசிட்டன்

குற்றமில் லாதகதை கோமானே முன்னுளில்
பத்தியுள்ள சை[ய்]ல பரு[1]வதத்தி லேதானும்
பொங்கமுட னேவாழும் புனித தவத்தோரில்
சிங்கம்போல் வீறுபெற்ற [2]தெத்தாத் திரையமுனி
என்றுசொல்லும் பேருடைய இனிய பெருந்தவத்தோன்
வென்றிசெறி யுங்[3]கார்த்திய வீரியவ ருச்சுனர்க்கு
சொன்னரந் தக்கதையைச் சொல்லுகிறேன் னு[4]ந்தனுக்கு
முன்னோர்கா லந்தனிலே முதியமறை நான்முகன்தான்
நாரதற்குச் சொன்னகதை நல்மாகஸ் நானகதை
சீரணியு மன்னு! செப்புகிறே முந்தனுக்கே.
கார்த்தவீ ரியன்றனக்குக் கருதியதெத் தாத்திரையர்
நேர்த்தியுடன் சொன்னபடி நேசமெனச் சொல்லிடுவோம்.
[5]மன்னோர் புகழும் வாய்த்த திலீபதியே
[6]நன்னுகச் சொல்லுகிறேன் நற்புடனே நீகேள்மோ.
இன்னகா லந்தனிலே இன்ன இடந்தனிலே
வன்னமுடன் மாகஸ்நானம் மகிழ்ச்சியுட னுடினபேர்
பெற்ற பலனைப் பெருமையுடன் சொல்லுகிறேம்.
வெற்றிபுனை [7]வேந்தையெனும் வீரனே நீகேள்மோ
வன்னமுடன் பூமிதனில் வாழுகின்ற மானிடர்கள்
நன்னயமாய் மாகஸ்நானம் நயந்தாடா தேபோனுல்
இந்தப் பிறப்புதனில் [8]ஏங்கியவன் தான்மடிந்து
விந்தையுள்ள வேந்தே மிக்க மறுபிறப்பில்
மலமருந்தும் பன்றியென வாய்த்திடுஞ் [9]சென்னுயதுபோல்
நலமிழந்தும் அய்யோ நமன் பதிக்[10]கு ஆளாவன்.
எந்தத் தவங்கள் இனிப்பாகச் செய்தாலும்
சிந்தையுடன் மாகஸ்நானம் சென்றுடா தேபோனுல்
பரிவான சூரியன்தான் இல்லாப் பகல் போலும்.

---

1. [ப]
2. தத்தாத்ரேயர்
3. கார்த்த வீரியார்ச்சுனன்; 'தி' ஒலி யாது
4. ன்
5. மன்னவர்
6. நன்றுக
7. வேந்து என்னும்; வேந்தே என்பது வேந்தை என வருவது இந்நூல் வழக்கு
8. [யே]
9. செந்நாய்
10. [கி]

விரிவான சந்திரன்தான் இல்லா விராப்போலும்.

நல்ல வடிவிழந்து நற்குலமும் [1]துற்குலமாய்
சொல்லும் புலியரைப்போல் சோற்றுக்குந் தானேங்கி
மட்டி யெனத்திரிவான் வல்நரகுக் காளாவான்
கெட்டிடுவான் பின்னே கெதியேது மில்லை மன்னு!
வேத முறைப்படியே மிக்க அநேகயாகம்
போத முடனே புகழ்ந்துதான் செய்தாலும்
பஞ்சாக் கினிநடுவே பாங்காய்த் தவசிருந்தும்
அஞ்சாமல் ஊசிமுனை அன்பாக நின்றாலும்
மாகஸ்நா னம்மூழ்கி வைகுண்டம் பெற்றவர்போல்
வாகொற்[2]ற ரன்னவனே வாயாது ஒருவருக்கும்.

விருத்தம்(3)

அச்சுதன் அன்பு வேண்டின்
அருவினை [3]துலைக்க வேண்டின்
வச்சிரத் தடக்கை [4]வேந்தன்
வானுல காள வேண்டின்
நிச்சய [5]ஞான மூர்த்தி
நிமலன்பால் ஏக வேண்டின்
[6]நெச்சுழல் பிறவி மாந்தர்
மாகநீ ராடினில் தோய்வார்.[7]

நடை

அச்சுத னுகவளர் அரிராக வன்பாதம்
[8]நிச்சய மாகச் சேர நினைந்தாலும்
தீரா வினைகளெல்லாந் தீரவேணு மானாலும்
பூராய மாகப் பொன்னுலகத் தையாள
இந்திரப் பட்ட மினிவேணு மானாலும்

---

1. துர்க்குலம்
2. த்த
3. தொ
4. இந்திரன்
5. சிவன்
6. நச்சு; நைச்சு; நொந்து; நெ-ரீ மோனை
7. முன் விருத்தம் போன்றது
8. முதற் சீரும் கடைச்சீரும் மோனை

சந்திரனைப் பூண்ட சங்கர சதாசிவனை

115. கண்ணுலே மன்னு! காணவேணு மானுலும்
தண்ணுரு மண்ணுலகில் தானே பிறக்கின்ற
மனிதர்கள் தானென்ன மனத்தில் மிகநினைந்து
புனிதமுள்ள [1]மாகநதி புகழ்ந்தாட வேபலிக்கும்.
நாள்தோறு மேபோற்றி நன்முக வேவளர்த்த

120. பாழுடம்பை அய்யோ! பாழ்நரகில் தள்ளுவது
மானிடரே! நன்றியில்லை; மாகொடிது; ஞாயமில்லை.
ஆனதினுல் மாகஸ்நானம் அன்புடனே மூழ்கிடுவீர்.
[2]சோலியில்லைத் [3]தருமமிது [4]சூட்சாதி மாசூட்சம்.
வேலிலகு கைவேந்தா வினைமுழுக வொட்டாது.

125. ஆனதனு லேயெளிது அழகுமக ரந்தனிலே
பானுவரும் போது பரிவான மானிடரே!
துய்யமலர் வாவிதனில் சுகமாக மாகஸ்நானம்
செய்துநல்ல அன்புடனே தேவர்பதி சேராமல்
நாயி[5]லையும் பொல்லானுய் நரகத்தி லேவிழுந்து

130. பேயி[6]லையும் பொல்லானுய்ப் பிதற்றுவது நன்றேதான்!
வெள்ளெலும்பைக் கால்நாட்டி வெண்மையில்லா [7]ரத்தமதை
உள்ளதொரு மாங்கிஷத்தி [8]லூட்டிச் சுவரே[9]த்தி
நரம்பா லி[10]றுக்கி நாறுதோ லால்மேய்ந்து
[11]கரம்பூத்த வேந்தா கட்டுகின்ற வீடுவுடல்.

135. இந்த உடல்தனக்கு இனியொன் பதுவாசல்;
அந்தமில்லா பாழ்வீடு; அறைகிறைய வேமலத்தை
வைத்தடைத்த காயம்; மலம்நாறும்; சீநாறும்;
மெத்த [12]அசங்கியங்காண்! மெய்யென்று [13]இவ்வுடலை
நம்பிநீ வீணுய் நரகத்துக் காளாக

---

1. மாகமாதத்தில் முழுதும் தீர்த்தம்
2. பெரிய வேலை அன்று
3. ரு, ர் என ஒலிக்கும்
4. சூட்சுமத்திலும் அதி சூட்சுமம்
5. லே
6. ஷெ-1
7. இரத்தமதை
8. ஊற்றி என்றுமாம்
9. த்தி
10. [ரு]
11. கையானது தாமரை மலர்போல்திருக்கும்
12. அசுசியம்-போறுக்க முடியாத மலம்
13. [யி]

வெம்பிக் கொடுமைசெய்ய வேண்டா மெனக்கருதி
மாகஸ்நா ன[1]நாளும் வரிசையுட னேஆடில்
[2]வாகொற்ற மானிடர்கள் வாழ்வார்கள் சொர்க்கமதில்.
வரிசையுடன் மாகபுனல் வந்தாடா மா[3]ண்பர்கள்தான்
பெருமையன்றி நீரில் பிறந்த குமிழிபோ லும்
கருவில்லா முட்டையைப்போல் கருமசண் டாளரைப்போல்
தெருவில் மிக[4]விரந்து சீசி யெனவேச
வாடுவார். சொன்னேங்காண்! வல்நரகி லேவிழுவான்.
தேடியவன் மாகபுனல் சென்றுடாப் பாவியர்க்கு
ஏது பலனுமில்லை; என்றும் பவுசுமில்லை;
சூதுடனே நோய்கொளுவான் சோரு[5]வான் சோ[6]றுதனுக்கு.
இப்படியே வாடாமல் இனிமகர [7]மாத்தைதனில்
செப்பமுடன் மாகஸ்நானம் சிறப்புடனே மூழ்கினவர்
நல்ல பதம்பெறுவார்; நமனூர் பதியணுகார்.
மல்லுலவு தோளாய் வழுத்துகிறே மின்னமுந்தான்
துய்ய மகரமாதம் தூயபுன லில்தோய்ந்தால்
செய்யதெய்வ ரம்பையர்தன் செல்வமுலை யில்-தோய்வார்.
திருமால் தனக்கடிமை செய்யாதா னுனலும்
வரிசையுடன் வேதியரை வணங்காதா னுனலும்
பாத்திரந்தா னேயறிந்து பாங்காகப் பிச்சையள்ளி
[8]நேத்தி யுடனே நின்று[9]விடா னுனலும்
கொடிதாக நாளுங் கோபமுள்ளோ னுனலும்
வடிவான சைவநிலை மகிழ்ந்துநில்லா னுனலும்
இப்படியாக் கொத்தவர்கள் என்றுலும் மாகஸ்நானம்
செப்பமுட னேயாடில் [10]சேர்வான் பரகதிதான்.

---

1. [ஸ்நானம்]
2. வாகு ஒத்த
3. [ம்]: இழிவுக் குறிப்பு
4. இறந்து என்றும் இருக்கலாம்
5. [து]
6. i என ஒலிக்கும்போலும்
7. மாத்து=மாதம்
8. நேத்தி-ர ஒலியாமை
9. வ் உடம்படுமெய்.
10. ஒருமை பன்மை மயக்கம்

விருத்தம்(4)

165. குருவில்லான் விஞ்சை போன்றுங்
குணமில்லான் செல்வம் போன்றும்
மருவிய தெளிவி லாதான்
மாசறு ஞானம் போன்றும்
நிருபரைப் பிழைத்தார் போன்றும்
நிதியில்லான் இளமை போன்றும்
பொருவரு மாக மர்டான்
புகழொடு கெடுவான் மன்னு![1]

நடை

குருவில்லா மல்படித்த கோலமந்தி ரம்பாழாம்.
170. அ[2]ருமையில்லாப் பாவிபெற்ற அருஞ்செல்வ மும்பாழாம்.
மனத்தெளிவு [3]இல்லாத மாந்தர்ஞான மும்பாழாம்.
முனைக்களத்தில் சத்துருமுன் முதல்வன் றனைக்காட்டி-
கொடுத்தோடிப் போனவர்கள் குலமும்மிகப் பாழாகும்.
எடுத்தபொரு ளில்லாதா ளிளமை மிகப்பாழாம்[4].
175. திட்டமுடன் மாகஸ்நானம் சென்றுடான் தங்கள்குலம்
கெட்டு விடுமய்யோ! கீர்த்தி மழுங்கிவிடும்.
வண்ண முடனேதான் மாபொருள் மெத்தவாங்கி
பெண்ணைக் கொடுத்தானும் பேதமாய்க் கெட்டிடுவான்.
பங்க முடனே பகலான வேளையிலே
180. கொங்குகுழல் மாதர்தனைக் கூடினவ னும்கெடுவான்.
பிச்சையிட்டு உண்ணப் பெரும்பாத கன்தானும்
மெச்சியே மாகஸ்நானம் விரும்பியா டாதவனும்
ஏழு தல[5]முறையும் இழிகுலமா கப்பிறந்து
தாழுங் கொடுநரகில் தயங்கிக் கிடந்திடுவான்.
185. நிசமென்று பொய்சாட்சி நின்றுதான் சொல்பவனும்
அசலான பெண்க்ளின்மேல் ஆசைமிக வைத்தவனும்

---

1. முன் விருத்தம் போன்றது
2. [டு]
3. [யி]
4. எடுத்துக்காட் டுவமைகள்
5. லை

துய்யசெல் வக்களிப்பால் தோகையரை [1]மானமுற
கையைப் பிடித்து கடிதாய்ப் புணர்ந்தவனும்
பாலர் தனைச்சீறி பதற வடித்தவனும்
190. கோலமுள்ள மாகபுனல் குளியாதா னுங்கெடுவான்.

விருத்தம்(5)

அந்தணர் தம்மைக் கொன்றேன்
அரும்பொருள் களவில் கொண்டோன்
நிந்[2]தனை மதுவை யுண்டோன்
குரவர்நே ரிழையைச் சேர்ந்தோன்
பந்தமுற் றிவரைக் கூடிப்
பயில்வுற்றே ரென்று மிந்த
ஐந்துபா தகரு மாகம்
ஆடினுல் முத்த ராவார்.[3]

நடை

195. வன்னமுள்ள வேதியரை வஞ்சனையாய்க் கொன்றவரும்
கன்னமிட்டுப் பொன்னை களவாண்டு போனவரும்
நீசருட னேஇணங்கி நிரம்பமது உண்டவரும்
பேசுங் குருக்களுட பெண்டி(ர்)தனைத் தொட்டவரும்
இப்படியாய்க் கொத்த [4]இ(சை)கேடர் தன்னுடனே
200. செப்பமுட னேகூடிச் சினேகிதங்கள் செய்வோரும்
பஞ்சமா பாதகராம் பாரி[யி]ற் கொடியவராம்
நஞ்சி[5]லே யும்பொல்லார் நான்சொன்னேன் மன்னவனே!
இவ்வொரு மாகமதி யினி[6]ந்துதா [7]னுடுகின்றுல்
செவ்வே வரமீபெறுவான் சேருவான் முத்திகண்டாய்.
205. எந்த விரதமொடும் இனியதன்மஞ் செய்தாலும்
இந்தஅஞ்சு பாவமுந்தான் இட்டமுடன் நீராது

---

1. அவமானம்
2. [தி]
3. முன் போன்ற விருத்தம்
4. [யி]
5. லே
6. இனிதாக என்றபொருளில் வரும்வினை
7. ஆடுகின்றதால் ஆடாதின்றுல்; கின்ற காண்க

ஆனதா விந்த வைந்துபா தகந்தனையும்
பானுவெனும் வெய்யோன் பரிவாய் மகரமதில்
வரும்போது மாகஸ்நானம் மகிட்சியா [1]யாடுகின்ருல்
பெருமையாய்இப் பாதகத்தை [2]பிறம்போகச் செய்யு'மென்று
பூவுலகி லேவாழும் பொல்லாரைத் தான்பார்த்து
ஓவியமா வய்யோ வுறைக்கி[ற]தே [3]ர்த்தமெல்லாம்.
துய்யமக ரந்தனிலே சூரியன்[4]வா ற-பொழுது
அய்யய்யோ மாகஸ்நானம் அன்பாக மானிடர்கள்
நாட்டமுட னுடுகின்ருல் நாமிருக்க எங்[5]கையிடம்
தாட்டிகமாய் நொந்து தளம்பிடுமே பாவமெல்லாம்.
வாக்[6]கினுல் [7]சொல்பாவம் மனத்தில் நினைபாவம்
நோக்கிகுன்ற கண்ணுல் நோக்கி வரும்பாவம்
புத்தியி னுலே போத வரும்பாவம்
சித்திரமா க-உடலால் சேர்ந்த பெரும்பாவம்
இப்பாவ மெல்லாம் இனிதாக மாகஸ்நானம்
தப்பாம லேதீர்க்கும். சத்தியமாய்ச் சொன்னேமே.
பெண்டாட்டி பிள்ளையில்லே பிறவிதோ றும்பலந்தான்
கொண்டாட்ட மாகவேதான் கூடிவருங் கண்டாயே!
இப்பெரிய பாவமெல்லாம் இருளறுக்கும் சூரியன்போல்
செப்பமுடன் மாகஸ்நானம் சென்றுடப் போய்விடுங்காண்.
பி[8]றப்பென்னுஞ் [9]சேர்பூசிப் பிதற்றுகின்ற மானிடரே!
சி[10]றப்பென்னு மாகஸ்நானத் தெண்ணீரி னுல்கழுவீர்!
இந்தப் படிவேதம் இனிதாகச் சொல்கிறதால்
சிந்தையுடன் நாமினித்தான் செப்புவதென் கோமானே!
இவ்வண்ண மாக இனிமாக நீர்மூழ்கில்
செவ்வண்ண மான தேவர்பதி சென்றிருந்து
பேராக வேவாழ்ந்து பேசியவை குண்டபதி

---

1. ஆடினுல் கின்று காண்க
2. புறம்; பி, பு
3. [ற்]
4. ருகிற
5. கே
6. [கு]
7. [சொல்லால்]
8. [ர]
9. சேறு-உச்சரிப்பிலைக் காண்க
10. ஷெ-8

சீராக வாழ்வான் சிவபதங்கள் பெற்றிடுவார்.

சொன்னேனே இதுகதைதான் தூயவொரு பெண்மடவார்
தன்னுல் நடந்தகதை தானுனக்குச் சொல்லுகிறேன்.
பிருகுமுனி [1]வங்கிஷத்தில் பெருமையுட னேபிறந்தோன்;
இருசியெனும் மாமறையோன்; இனியவே தங்தெளிந்தோன்;
அம்மறையோன் தன்[2]வயற்றில் அருச்சிகையா ளென்றுவொரு
கொம்மைமுலைப் பெண்மடவாள் கொடிதான வேளுதனில்
தாலியறு மோரைதனில் தான்பிறந்து விந்தையென
கோலமுலை பெண்ணமுதாள் குலுங்கவே தான்வளர்ந்தாள்.
நஞ்சிலேயுந் தூயவிழி நாரி யருச்சிகைதான்
அஞ்சுவய தாகிநல்ல அன்னம்போ லேவளர்ந்தாள்.
அன்னம்போ லேவளர்ந்த அழகு அருச்சிகையை
வண்ணமுள்ள வேதமெல்லாம் வாகுடனே கற்றுணர்ந்த
மாலியவா னென்றுசொல்லும் வன்னப் பிராமணர்க்கு
தாலிகட்டி யேகொடுத்தான் சாதியோர் தானறிய.
நன்றியுடன் கலியாணம் நற்பாய் மிகமுடித்த
அன்றே யவன்மடிந்தான்; அருச்சிகையா ளானவளும்
தாலி தனையிழந்து தன்தகப்பன் தன்[3]வளவில்
வேலிலங்கு கண்ணுள் மிகவே துயரமுற்று
உண்ணுள்; உறங்காள் உற்ற விகாரமதால்
எண்ணுது யெண்ணி இருந்தாள்கைம் பெண்ணெவே.
மங்கை சலித்திருக்க வண்ணமுடன் பெற்றெடுத்த
பொங்கமுள்ள தாயும் புகழ்மீறு தந்தையரும்
சிந்தைமிக நொந்து திகைத்திருக்கு ம[4]ன்னுளில்
அந்தமுள்ள நாரதனும் அன்புடனே அங்குவந்தான்.
சீராறும் நாரதனுர் செப்பமுட னங்[5]கேவர
காராரர் குழலாள் கன்னி யருச்சிகையாள்
வந்த முனிவன் மலரடியி லேவீழ்ந்து
விந்தையுட னேபோற்றி மிகுத்த துயரமொடு

---

1. வம்சத்தில்
2. [வயத்தில்]
3. வீடு
4. ந்நா
5. கே எனை ஒலிக்கும்

நின்றுள்காண். அப்போது நெடியதவ நாரதனும்
குன்றூர் முலையாளைக் கூர்ந்து மிகப்பார்த்து
'பெண்ணே யருச்சிகையே! பேதாய்! மலர்க்குழலாய்!
தண்ணூர் மதிவதனத் தையலே' என்றுசொல்லி
மனது மிகமகிழ்ந்து மாமகிட்சி யோ[1]டேநின்று
அனநடையா ளைப்பார்த்து அம்முனிவன் சொல்லிடுவான்:
'பார்[2]வதியைத் தான்நினைந்து பரமசிவ னேநினைந்து
மார்கழிமா தந்தனிலே மாகதிரோன் வந்திடுநாள்
[3]பூறுவப[4]ச் சந்தனிலே பொருந்துதிரு வாதிரையில்
வீறுடனே நோன்பு மிகமுப் பதுவருசம்
வழுவாம லேவிரதம் மாதேயிருந்து வந்தாய்!
தெளிவான வெய்யோன் சிறந்ததொரு [5]காத்தியலாம்
என்றுசொல்லும் [6]மாதமதி லினிதாய் வரும்போது
நன்றி யுடனே நல்லமுதல் பக்கமதில்
வருமேகா தேசிமுதல் மார்கழியே காதேசி
வருமளவும் பூம்புனலில் மாகஸ்நா ன–மாடில்
மாதே இதுதேவ மாகஸ்நானம். கதிரோன்
போதமுடன் மார்கழியில் புகழாய் வரும்போது
இனிதான மார்கழியில் ஏகாதே சி-முதலாய்
புனிதமுடன் முப்பதுநாள் பொருந்துமேகா தேசிமட்டும்
கசிவாக ரீ[7]ண்நீரில் கனிந்தாடு மாகஸ்நானம்
ரிசிகள்மாகஸ் நானம்என்று நேசமுட னேவிளம்பும்.
சூரியன்சேர் தைமாதஞ் சொல்லுமேகா தேசிமுதல்
சீருடைய மாசிதனில் [8]சிறந்தேகா தேசிமட்டும்
பொன்னை நன்னீரில் புகுந்தாடு மாகஸ்நானம்
நன்னை மின்னே நற்பிதிர்க்கள் மாகஸ்நானம்
என்றுதான் வேத மினிமூன்று மாகஸ்நானம்

---

1. 'டே' னை ஒலிக்கும்
2. [ப]
3. ரு-துகைநோக்குக
4. [ட்]
5. காத்தீகை ஆம்
6. மாதமதில் (அது)
7. ண் என்பதனைப் பிரித்தெழுதும்வகை; நீள்+நீர்
8. சிறந்த ஏகாதேசி

290. [1]நன்றியென்று சொல்லுதுகாண். நாறுமலர்ப் பூங்குழலே!
இம்மூன்று மாகஸ்நானம் இனிமூன்று [2]மாத்தையிலும்
செம்மை யுடனே சிறந்தபிர யாகையிலே
கோதா [3]வரிதனிலே குளிர்ந்திடுகங் கைதனிலே
கோதாய்நீ முற்பிறப்பில் கோலமென மூழ்கிவந்தாய்!

295. அதுவுமன்றி நீதானும் ஆணவமா [4]யைவெறுத்து
விதிமுறையாய் மூப்பதுநாள் விரிபுனலி லேமுழுகி
செப்பமுடன் [5]அம்மாவாசி சிறந்தவிர த-மிருந்தாய்.
இப்படித்தான் நீவிரதம் இசைந்திருந்த தாகையினால்
இ[6]ப்பி[7]றப்பி லேயுனக்கு [8]இனியபலன் தானுமில்லை.

300. பிற்பிறப்பில் பெண்ணே பேரின்ப வாழ்வுமுண்டு.
என்றுதான் நாரதனு ரைத்தமொழி தான்கூற
குன்றுமுலை மாதுவெனுங் கோல வருச்சிகைதான்
நல்ல தவம்பெருகும் நாரதனைத் தான்பார்த்து
வில்லுலவு மாநுதலாள் விளம்புவா ளோவியமாய்:

305. 'ஐம்புலனை வென்றவரே! அடியாள் [9]பலன்செய் திருக்க
கைம்பெண்ணு யிப்பிறப்பில் காசினியி லேயிருந்து
வாடவந்த [10]காரியமென்? மாமுனியே! சொல்லு'மென்று
நீடிய வேல்கண்ணுள் நேசமுட னேகூற
நாரத னுங்கேட்டு நாரிதனை யேநோக்கி

310. சீருடனே வாய்மலர்ந்து செப்புவா னேவியமாய்:
'வா[11]ரா யருச்சிகாநீ வாகாக முற்பிறப்பில்
பேராக வாழும் பிராமணர்தன் [12]வங்கிஷத்தில்
[தினவளரன்] என்று சொல்லி செல்வமிக வுள்ளவனுய்
இனிய சிலைமதன்போல் எவரும் மனம்விரும்ப

315. பரிவான மண்ணுலகில் பாங்காக வேபிறந்து

---

1. நல்லது
1. மாதத்திலும்
2. [பு]
9. [ய்கை]
4. அமாவாசை
5. [ற்]
7. [ர]
8. [யி]
9. பலன் தரத்தக்கவை
10. பயன் காரியத்தை விளைவித்த காரணம்; விஷயம்
11. [ரு]
12. வம்சம்-வமிசம்-வங்கிஷம்

அரிதான வேதமொடு அறுப[1]த்து நால்கலையும்
நன்றுய் படித்து [2]நல்மாமன் தன்மகளை
மன்றோர் அறிய மாலையிட்டு வாழ்நாளில்
காசுலவுங் கொங்கைக் கன்னியெனும் வேசைமகள்
ஆசைமிகக் கொண்டு அவளாசை யில்விழுந்து
கலியாணஞ் செய்த கன்னிதனை வன்சிறையில்
மெலிய மிகப்போட்டு வேசைதனை யேவிரும்பி
கையி[3]ற் பொருளையெல்லாம் காமவெறித னஞலே
மை[யி]ப்பொருதும் [4]கண்ணிகைக்கே வாஞ்சையுட னேகொடுத்து
சே[5]ற்றில் பதியும் சிற்றுமை யைப்போல
கூத்திமய லாலே கொடுங்காமச் சேறுதனில்
தானே யிடைந்து [6][சாளையாய்] [7]நோயள்கெர்ண்டு
மானுருங் கண்ணுள் மயலாலே மேமடிந்தாய்!
உன்னை எமதூத ரோவியமா கப்பிடித்து
வன்னமுள்ள [8]ஏமன்முன்னே வாகாக விட்டனர்காண்.
காலன்உனைச் சிறிக் 'கருமசண்டா ள-னிவனை
கோல நரகுதனில் குளிக்கவே போடு'மென்றான்
தூய கொடுமறலி சொன்னபடி தப்பாமல்
தீய நரகுதனில் சேர்த்திட்டா ரு[9]ன்தனையும்.
இருபத்தெண் கோடி யெண்ணுங் கொடுநரகில்
கருமத்தொ டுங்கூடக் கடிதாய்க் கிடந்துழன்றாய்
மாலையிட்ட பெண்ணை வன்சிறையில் போட்டதினால்
ஓலமிட்டு வன்நரகில் [10]உழத்திப் பரதவித்தாய்!
அள்ளுங் கொடுநரக மய்யோவுனைத் தாங்காமல்
தள்ளிவிட்ட தாலே தரணி யிலேதானும்
பெண்ணை வந்து பி[11]றந்து [12]இளமையிலே

---

1. [தீ]
2. நல்லம்மாள் = தாயுடன் பிறந்தாள்
3. [ப்]
4. கன்னியுமாம்
5. த்தீ; தொகை நோக்குக
6. சளை நோய்க்கு அரண்மனை; அல்லது சளை = உடல் வெடித்து புண்கள் வாய் திறந்து நீர் வடியவிடல்.
7. நோய்கள்
8. [யே]
9. [ந்]
10. உழற்றி; கைகால் நோவால் புரண்டு
11. [ர]
12. [யி]

[1]தண்ணென தாலி தனையிழந்து நீஇருந்தாய்!
ஆனதினை லிவ்வுலகில் ஆரேனும் மாலையிட்ட
[2]வானக் குழலாளை வாழாமல் வன்சிறையில்
போட்டுமத வேசையொடு புல்கி யிருந்தவர்கள்
நாட்ட முடனே நற்பான பூவுலகில்
ஏழு பிறப்பு மினிதான பெண்ணுக
தாழப் பிறந்து தாலி தனையிழந்து
ஆசையாக வாடி [3]அலமல[ற்]ந்து வய்யோதான்
பேசியகைம் பெண்ணுப்ப் பிதற்றுவார் கண்டாயே!
அப்படித்தான் முற்பிறப்பில் ஆணுக நீபிறந்து
செப்பமுடன் மாலையிட்ட தேவிமுகம் பாராத
பாவத்தா லிப்பிறப்பில் பழுதான பெண்ணுக
பூவற்று [4]அய்யோ போக்கினுய் தாலியையும்.
அன்றுநீ செய்த அரும்பா தகத்தாலே
என்றும்பெண் ணுக எழுபிறப்பும் நீபிறக்க
வேணும்,நீ முன்னே மிகமூன்று மாகஸ்நானம்
தாணு பதம்நினைந்து தான்முழுகும் புண்ணியத்தால்
இந்தப் பிறப்புடனே [5]யேழாயுள் பாவவினை
[6]சிந்தி யொழிந்[7]ததுகாண்! தேனே மயங்காதே!
மானேகே ளின்னம் மறுபிறப்பு நீபிறந்து
வானோர் புகழ்ந்[8]தேத்த மாபுண்ணி யங்கள்செய்து
சொல்லாரு கின்ற சூரியபெ ரும்பதவி
[9]வல்லார் தனத்தாய்! வாகாக வேயடைவாய்!'
என்றுசொல்லி நாரதனும் [10]இங்கிதமா கப்போனுன்.
'நன்றுநன்று' [11]என்று[12]அந்த நல்ல அருச்சிகையும்
நாரதனுர் சொல்படியே நல்லாசை யைவெறுத்து

---

1. நீர்போல இன்பமான; அருளான
2. மேகம் போலக் கரிய
3. கலங்கி அலமலத்தல் என்பதும் அல மாறு (அலமரு) என்பதும் இயைந் தன போலும்
4. வ
5. ஏழாய்=ஏழை எபதன் விளி
6. அழிந்து
7. [தி]
8. [தியற்ற]
9. சொக்கட்டான் காய்போல்ற
10. [யி] இவிமையாக; அவ்விடத்திற்குத் தக்கபடி
11. [வெ]
12. வ

சிரிணங்கு தர்மமொடு சிறந்த தவங்கள்பல
தன்னுடனே மாகபுனல் தான்மூழ்கி ஞள்[1]பலது
வன்னமுள்ள தீர்த்தம் மலியருவிக் காசிகங்கை
370. கயிலை[2]நதியுடனே கனக[3]ரு மதையாறு
கயல்குதிகொள் கண்டகையில் கன்னி யிவள்தானும்,

விருத்தம்(6)

ஆர ணத்தின் அகம்புற மாய்நின்ற
கார ணத்தினைக் [4]கஞ்ச மடுவிலோர்
[5]வார ணத்துயர் மா[6]ற்றிய வள்ளலை(ப்)
375. பூர ணத்துளத் தெண்ணிப் பொருந்தியே.[7]

நடை

உற்பனமாய் வேதமதி [8]லுள்ளும் புறம்புமாக
நற்புட னேநின்று நாள்தோறு மேவளர்வோன்
கோதில்லாப் பூஞ்சுனையில் கொலை[9]முதலை வாயிலுற்று
'ஆதிமூல மே'யெனவே அலறுகின்ற யானைமுன்னம்
380. வந்து அதன்துயரம் மாற்றுகின்ற நாரணனை
புந்திதனில் பூரணமாய்ப் புனிதமுட னேநினைந்து
பஞ்ச விடையமொடு பாவகா மக்குரோதம்
நெஞ்சி லகற்றி நினைவையொன்று கத்திருத்தி
ஆடினுள் தீர்த்தம்; அருந்தவத்தோ டேபலனை
385. தேடினுள் மெத்த; தீயான பாவவினை
தன்னைத் [10]துலைத்தாள்; சடத்தை மிகப்போட்டு
அன்ன வருச்சிகையு மடைந்தாள் அமரபதி,
இந்தப் பலத்தாலே யிந்தமட மாது,மன்னு!

---

1. பல
2. கயிலையில் உள்ள மானசசரஸ் போன்ற தீர்த்தம்
3. [று]
4. தாமரை
5. கஜேந்திரன்
6. [த்தி]
7. மாமுதற்சீர்; விளம் கடைச்சீர்; இடைச் சீர்கள் வெண்டளை இரண்டாந்தளையும் மூன்றாந்தளையும்அமையவரும்; அடிக்கு 11 எழுத்து, கலிவிருத்தம்
8. [ளு]
9. மிதலை
10. தொ

சிந்துமலர்க் கற்பகஞ்சூழ் தேவர் பதிபுகுந்து

காச்[1]சி யுட[2]னேயொரு கற்பகோ டி-காலம்
மா[3]ச்சி யுடனிருந்து மங்கைகல்லாள் புண்ணியத்தால்
பொற்புடனே பின்னும் புகழ்கயிலா சந்தனிலே
கற்புடையாள் தானுமொரு கற்பகோ டி-காலம்
இருந்துமவள் பின்பு [4]இனியவைகுண் டந்தனிலே
திருந்து புகழ் மன்னு சித்திரம்போ லேயவள்தான்
கற்பகோடி காலமங்கே காட்சியுட னேயிருந்து
நற்புட னேபின்பு நான்முகத்தோன் வாழுகின்ற
சத்தியலோ கந்தனிலே தையலிவ ளன்புடனே
சத்தியமாய் நாலு ச[5]துர்யுகந் தானிருந்தாள்.
நாலு சதுர்யுகமும் நா(ன்)முகத்தோன் வாழ்பதியில்
வேலுல வுங்கண்ணுள் மிக்கசெழும் பூமகள்போல்
தானே மிகவிருந்தாள் சதுர்முகத்தோன் காரணத்தால்
மானேறுங் கண்ணுள் மாட்சியுடன் மாசெனனம்
[6]யோனி படாம லுற்றதவ யோனியெனும்
ஆனதொரு காட்சியினு லயன்வாழு மாவுலகில்
தேவர்குலப் பெண்களிலுஞ் சிறந்தமுவர் பெண்களிலும்
ஓவிய :ாக ஒருகோடி சந்திரன்போல்
மிக்க வழகுடனே மெல்லியபூங் கொம்பெனவே
திக்கிலுள்ள பாலர்களுந் தேவரொடு மாரிசிகள்
இயக்கரொடு விஞ்சையரும் எவருமே கண்டுகண்டு
மயக்கமுற லட்சுமிபோல் வளர்ந்தாளே பெண்ணெனவே.
[7]பெண்ணெனவே மங்கை பெருமையுட னேவளர
தண்ணுலவும் பூங்[8]கமலோன் தையல்தனை யேபார்த்து
மனதி லிரக்கமொடு மாமகிட்சி தன்னுடனே
இனியதொரு நா(ன்) முகத்தான்[9] எந்திழையே! பூந்திருவே!

---

1. [ட்]
2. 'னே' என்பது மாத்திரை குறைந்து வருவதனை இவ்வாறு, 'ன' என எழுதுவது காட்டும்
3. ஆ-ட
4. [யி]
5. [தி]
6. முதற்சீர் கடைச்சீர் மோனை
7. அந்தாதித்தொடை
8. கமலத்தோன்-பிரமன்
9. [ல்]

தேவர்பதி யில்வளருந் திலோ[ர்]த்[1]தமையென் றேயெவரும்
ஓவியமாய்ச் சொல்லுமரே உற்றசெழும் பூங்குயி[2]லே!
அன்னமே! கற்பகமே! யழகே! மலர்க்கொடியே!
வன்னமே! மாமயிலே! மணியே! மரகதமே!'
420. எனறுதான் நான்முகத்தோன் [3]இரக்கமுட னேஉரைத்து
வென்றியுடன் பின்னும் விளம்புவா னிங்கிதமாய்
'மான்இனிய கண்ணுய்! மருவே! மலர்க்கொழுந்தே'!
யான்உனக் கோர்செய்கை அன்புடனே சொல்லுகிறேன்.
கால்களிலே வீரமணி கட்டுகின்ற ராட்சதரில்
425. மேல்அதிக மானவர்கள் மிகுத்த[4]பல ராட்சதர்கள்
சுந்தோப சுந்தனென்று சொல்லுகின்ற பேரிருவர்.
அந்தோ [5]அவர்கள்வலு ஆருக்கு மில்லைமின்னே!
ஒருதாய் வயிற்றிலுற்றோர் ஒகெடுவாய் பொல்லாதார்.
பெரியவரம் பெற்றோர்காண். பேசரிது அக்கொடுமை.
430. அக்கொடிய பாவியர்க்கு அறியாம லேவரந்தான்
மிக்கவே யாங்கொடுத்தோம் மெல்லியலே அக்கொடியோர்
செய்யுங் கொடுமையினுல் தேவர்,பதி தானிழந்தார்.
துய்யதொரு விந்திரனும் துரைத்தனம்விட் டோடினர்காண்!
சண்டன் தொழில்மறந்தான்; தழைக்கும்புவ னத்தில்வளர்
435. அண்ட ரெல் லாமய்யோ! அஞ்சிமிகப் போனுர்காண்.
எல்லாப் பெருவுலகு(ம்) எப்பெரிய மாதவரும்
அல்லலொடு துன்பமுற அனியாயம் மீறிடவே
தருமந் தனையழித்து தவமுனிவ ரைக்கெடுத்து
[7]கருமந் தனைவளர்த்து காசினியைத் தான்கெடுத்து,
440. துட்டரி[8]களுஞ் செய்திருக்குஞ் சுந்தோப சுந்தனிடம்
மட்டுல வுங்கூந்தல் மாதேநீ தானேகி
சூ[9]ச்சாதி சூ[10]ச்சமதால் சுந்தோப சுந்தனைத்தான்

---

1. [ற்றி]
2. [லி]-லே, லி
3. [யி]
4. [பி]
5. [ய]
6. ன் ஓரிடத்தில் மரியாதைப் பன்மை யாக ர் என்பதும் மற்றோரிடத்தில் பழையபடியே ன் என்பதும் வருதல் காண்க
7. தினை; கொடுமை
8. 'க்க' என்றுளது; க என்பதன் வட மொழி ஒலியைக் காட்டல் போலும்; நாகரிகம் போல நாட்டரிகம் ராசரிகர் என்று சொற்களைப் படைப்பது காண்க
9. ட்,
10. ஷ-9

மா[1]ச்சியுடன் கொன்று மாதேசீ யிச்[2]சணமே
வருவாய்' எனப்பிரமன் மங்கையுட னேகூற
445. மருவாரும் பூங்கூந்தல் மா'துமிக நல்லது'என்று
வேதம்வளர் நா(ன்)முகனே [3]மெல்லிநல்லா ளும்வணங்கி
சீதமதி நல்முகத்தாள் சித்திரவீ ணைஎடுத்து
பாரமுலை யைச்சுமந்து பசும்பொற் கொடியிடைதான்
சோரமணி மேகலைதான் சோதிமய மாயிலங்க
450. ஆகாச வீதிதனில் ஆச்சரிய மங்கையிவள்
வாகான மின்னலொன்று வந்துபளீ ரென்றதுபோல்
முற்பிறப்பில் மாகஸ்நான முழுகும்நரு மதையாற்றின்
பொற்கரையி னோரம் பொலிந்திருக்கும் மண்மலைமேல்
அன்னம்போல் வந்தி[4]றங்கி அழகு நரு[5]மதையில்
455. வன்னமுடன் மூழ்கி மகிழ்ந்து கரையே[6]றி
விண்ணவர் கோன்தேவர் மெய்குழைந்து [7]இச்சைகொள்ள
வண்ணமிகு பட்டு மகிழ்ந்து மிகவுடுத்தி
கார்மேகம் போலக் கவிழ்ந்திருக்கும் மைக்குழலை
சீர்மேவுங் கையாலே சிறப்பாகக் கோதினளே.

விருத்தம்(7)

460. [8]புதுத்துளி [9]பிலிற்றிய புயலின் கற்றை[10]மேல்
விதுக்கொளுங் கதிர்புடை தவழு மேன்மைபோல்
க[11]துப்பினி லுறவனக் களிவண் டரற்றிட
மதுக்கமழ் மல்லிகை மாலை சூட்டினுள்[12].

நடை

கையாற் பூங்குழலைக் கனிய மிகக்கோதி
465. ஒய்யார மாக ஓவியக்கொண் டைமுடித்து

---

1. ட்
2. கணமே
3. மெல்லியல்
4. [ர]
5. [ரு]
6. [ரி]
7. [யி]
8. (அ)
9. (யி)
10. போ
11. (தீ)
12. வின-வின-மா-வின எனவரும் நாற்சீர்க் கலிவிருத்தம்

சூல்கொண்ட மேகமிசை துலங்குகின்ற சந்திரன்போல்
வேல்கொண்ட கண்ணுள் மிகமல்லி கைமுடித்தாள்.
வன்னச் சிலைமதவேள் வந்துபணிந் தேவல்செய்ய
பொன்னின் பிறைநுதலில் போட்டா ளொருதிலதம்.

470. தவ்வுஞ் செழுங்கயல்போல் தானிலங்கி யே[1]மதர்த்து
செவ்வரிதோய் வேல்விழிக்கு[2]த் தீட்டினுள் மைக்கோலம்.
பொன்னின் கமலமிசை பொ[3]றிவண் டிருந்ததென
வன்னமுகக் கன்னமிசை வைத்தா ளினிக்கரும்பு.
கள்ளுலவுந் தாமரைபோல் காட்டுமுகத் தி-னழகாம்

475. வள்ளைக் குழையிலங்க மணிக்[4]குந்த [5]ன-வோலை.
வன்னச் செழுங்கமுகை வான்மணிகள் மொய்த்ததுபோல்
பொன்னின் கழுத்தினுக்குப் பூட்டினுள் முத்துவடம்.
சந்தனத்தோ டேஇனிய சாந்துடனே மஞ்சள்ப[6]ச்சை
மந்தரம்போ லேதடித்து வளர்ந்திருக்கும் பொன்முலைமேல்

480. வன்னவன்ன மாக வானத்தின் வில்போல
அன்ன நடையுடையா ளன்பாகப் பூசினளே.
நவமணியால் கோ[ர்]வைசெய்த நல்லபொற்[7]காஞ் சி-வடத்தை
தவமுடையோ ராசைகொள்ள(த்) தனிமருங்கி லேபூட்டி
வேயினிய தோட்கிணங்க மிக்கமணி பொற்கடகம்

485. தூயபசு நல்வளையுஞ் சூட்டினுள் முன்கைதனில்.
வீணை தனைத்திருத்தும் மெல்லியபூங் கை[ய்]விரல்க்கு
ஆணிவயி ரம்பதித்த அழகுகணை யாழியிட்டாள்.
வெ[8]ற்றிகொள்ளும் மன்மதன்மேல் மிகவிருது போட்டதுபோல்
சித்திரமணி பொற்சிலம்பைச் சி[9]றப்புடனே காலிலிட்டாள்.

490. இந்தப் படியிவள்தா னினிப்பா யலங்கரித்து
விந்தையுட னேயழகாய் [10]வெள்ளிலையு மேயருந்தி

---

1. [மதற்று]
2. [கி]
3. [ரி]
4. பொன், அல்லது குந்தன வேலைப்பாடு மிக்க
5. [ல]
6. [ட்]
7. ஏழுகோவையாக இடையில் அணிவது
8. [த்தி]
9. [ர]
10. வெற்றிலை

நன்மை செ[1]றியும் நருமதையாற் றி-னருகே
பொன்மைசெறி செந்த[2]ளிரு பொருந்தும்அசோ க-வனத்தில்
பட்டுடைகள் மின்னப் பணிகள் பளபளென்ன
இட்ட சிலம்பா[3]ர்க்க இருவிழிவேல் தானிலங்க
மை[ய்]க்கரிய கூந்தல் மழைமேகம் போலிலங்க
ங்க[ய்]க்கடக மின்னக் கையிலொரு வீணைகொண்டு
கள்ளுல வும்வனத்தில் கா[4]ட்சியொடு வாழுகின்ற
கிள்ளையொடு நற்குயிலும் கிளிகளொடும் [5]நாங்கணவாய்
[6]பச்சி களுமிந்தப் பாவைகுர லோசைதனை
இச்சையுடன் கேட்டு இனமென்று கிட்டவர
இனியவழுது போலே யினிக்[7]குகின்ற [8]ஏழிசையை
கனிமை யுடனெழுப்பி கனகமணி வீணையிலே
வாசித்துக் கொண்டு வளர்ந்திடுபூஞ் சோலைதனில்
நேசத் துடனே நின்றனள்காண் மன்னவனே!
இச்சை யுடனே யினியமலர்ச் சோலைதனில்
பச்சை மயில்போலப் பாங்கா யுலாவிநி[9]ற்கும்
கன்னியுட[ன்] முகத்தின் காந்தி யழகுதனை
சொன்னபணி செய்துநிற்குஞ் சுந்தோப சுந்தனுட
தூதர் மிகநோக்கித் தோகையிவள் யாரோதான்
சீதமலர் மேலிருக்குந் திருமகளோ [10]இந்திரையோ
இந்தநல்ல பெண்தனக்கு இணையா யிணங்கியபெண்
விந்தையுட னெங்குமில்லை விரும்பிநாங் கண்டதில்லை
என்று நினைந்து 'இதாச்சரியம்' என்றுசொல்லி
நன்றியுள்ள தூதர் நடந்தோடி வேக[11]மன
கொந்தாரும் பூமாலை கோலமுட னேதுவளும்
சுந்தோப சுந்தனுட தூயமலர்ப் பொன்னடியில்

---

1. [தீ]
2. [தீ]
3. [ற்க்]
4. [ச்]
5. நாகனவாய்
6. பட்சீ
7. கு காண்க
8. [யே]
9. [க்] உச்சரிப்பு அவ்வாறு மாறியது
10. [யி] இந்திரை-இலக்குமி; இந்திராணி என்ற பொருளில் வருகிறது; சத்த கன்னிகளில் ஒருத்தியுமாம்
11. 'என' என்றதன் வழக்கினை காண்க

பங்கமில்லாத தூதர் பரிவாக வேவிழுந்து
இங்கிதமாய்ப் போற்றி யெழுந்துசெங்கை கட்டிநின்றார்.
விந்தை யுடன்பணிந்த மிக்கான தூதர்களைச்
சுந்தோப சுந்தனுந்தான் தூயமலர்க் கண்ணேக்கி
'மண்டலத்தி லேதானும் வாகா யதி[1]செயங்கள்
கண்டதுண்டோ? சொல்லும்'என்று காவலர்க ளைக் கேட்டார்.
வீரியமாய்த் தூதர் வேந்தர்முகந் தானேக்கி
சிருடனே நின்று[2]மெள்ளச் செவ்வே யுரைத்திடுவார்:

விருத்தம்(8)

'தேனுலவு தாமரையி ருந்ததிரு வேயோ!
வானவர்கு லந்தழைய வந்தமயி லேயோ!
தானவர்வி ளங்கவரு தையலிவ ளேயோ!
கானமலர் விஞ்சையினர் காம[ர்]குயி லேயோ![3]

நடை

மன்னர்மன்னர் கொண்டாடு மாவீர சூரர்களே!
நன்னயம தாக நாங்களொன்று கண்டுவந்தோம்.
செந்தா மரைமேல் சிறந்திருக்கும் லட்சுமியோ!
நந்தாத தேவர்புகழ் நல்லஇந்தி ராணியோதான்!
அசுரர் குலந்தழைய அன்றுவந்த மா[4]யையோதான்!
கலிவாக ராக[5]மிசை [6]காந்திருவப் பெண்மயிலோ!
இந்தவகைப் பெண்களிலே யினிதான பெண்தானும்
எந்தவகைப் பெண்ணே? இனிஅறிந்த தில்லைமன்னா!
உங்களைப் [7]போல்க்கொற்ற [8]ஓவியஞ்சேர் மன்னருக்கு
[9]பொங்கமே யல்லாமல் பொருந்தாது மற்றவர்க்கு.

---

1. ச-செ,என வருதல் காண்க
2. முன் ல 'மெல்ல' எனவும் வந்தது
3. தானதன தானதன தானதனதானன என்ற சந்தம் தானனென்பது தந்தனென்றும் வரும். கூவிளங்காய்+மா+ புளிமாங்காய்என வரும்நாற்சீருமாம்; காய் விளமாஞல் அடுத்தகாய்ச்சீர் நேரைமுதலாய்கரு விளம்காயாம் மாச்சீர்; புளிமா ஆம்; இவ்வாறு கொள்ளும்போது மோனை நயம்சிறக்கும் அடிக்கு 14 எழுத்துக்கள்; கலி விருத்தம்
4. [ய்கை]
5. இசை பாடும்
6. காந்தருவ
7. போலுக்கொற்ற
8. [யோ]
9. முறை-பொருத்தம்

அந்தநல்ல பெண்போல் அடியார்கள் விந்தையுடன்
எந்தலோ கந்தனிலு மினிக்கண்ட தில்லைஅய்யா!
[1]அப்படியாக் கொத்த அழகான மங்கைகல்லாள்
செப்ப முடனே சிறந்த நருமதையின்
வாவிக் கரையில் மலர்ந்திடும்பூஞ் சோலையிலே
ஓவியமாய் நின்று உலாவுகிரு ளின்னமுங்கேள்.
[2]ஞாயர் தனைக்கண்ட நட்சத் திரம்போலும்;
தூயகங்கை வந்தால் சொல்லுகின்ற பூவுலகில்
உற்ற நதிகள் உறங்குகின்ற வா[3]றுபோலும்;
வெ[4]ற்றிபுனை திண்டோளாய் மெல்லிநல்லா ளுங்களுட
அரண்மனையில் வந்தாலே அன்பாக வேநீங்கள்
பெருமையுடன் மாலையிட்ட பெண்கள[5]ழகக்.....து
வாடுவா ரல்லாமல் மன்னவரே வாள்போல
நீடுவீழியாள் தன்னே (டு) நிகரென்று சொல்லரிது.
பெண்கள தரசி[ப்] பெருமைமிகு ரத்தினமணி;
கண்கள் தனிலடங்காக் கட்டழகு பெற்றமின்னு;
தூய மணிவிளக்குத் துவர்வாய்ப் பகங்கிளிதான்;
சேய செழுமயி[6]லு தெவிட்டாத தெள்ளமுது!
[7]சிவன் பொருந்துகின்ற சித்திரமோ தானறியோம்.
ஓவியஞ்சேர் பெண்ணி யுலகில்லாக் கன்னிகையை
இந்திரனும் தேவர்களு மினியபிரம் மன்மாலும்
விந்தையுடன் கண்டாலே மெய்சோர்ந்து ஆசைகொள்வார்.
காணுர்கள் தேவர்கள்தான். கண்டாரே யாமானுல்
பூணுர் முலையாரோப் புதுமையுடன் கொண்டுசெல்வார்.
ஆனதால் நீங்கள் அண்டமொடு பூவுலகை
தானிசையா யாளுகின்ற தாட்டுக ரானதினுல்
அம்மடந்தை தன்னை யனுபோகம் நீங்கள்செய்தால்,
செம்மை யுடனே சி[8]லாக்கியங்க ளோப்பெறுவீர்.

---

1. அப்படிக்கு ஒத்த
2. ஞாயிறு-உச்சரிப்புக் காண்க; எதுகை நோக்குக
3. [i] உச்சரிப்பு
4. [த்தி]
5. ழ் என்றே உளது
6. உகர ஈறு காண்க; உச்சரிப்பு
7. உயிர் ஓவியம்
8. [ரு]

விருத்தம்(9)

சசியை யமரற் கிறைபெற்றான்
தாதார் கமலத் திருமகளைப்
பசிய நெடிய மால்பெற்றான்
பாமா தினநா(ன்) முகன்பெற்றான்
இசையு மிமையத் திளங்கொடியை
யிமையா முக்கண் ணி[1]றைபெற்றான்
நொசியு மருங்கி லிவளையும் நீர்
பெற்றீ ரென்[2]ப துயர்புகழே.[3]

நடை

"கொந்துலவும் பூங்கூந்தல் கோதையிந்தி ராணிதனை
விந்தைசெறி யிந்திரனார் விரும்பிப் புணர்ந்தான்காண்.
தாமரைப்பூ மேலிருக்கும் தையலெனும் லட்சுமியை
மாமறைகள் தான்போற்றும் மாலோன் மணமுடித்தான்.
கலைபயிலு மாவேதக் கன்னி சரசு[4]வதி
நலமுடைய [5]நால்வேத நா(ன்)முகன்நா வி-லிருந்தாள்
[6]இமையாரச னின்ற யினியபர மே[7]சுவரியை
இமையாத முக்கணிறை யின்பமூட னேபுணர்ந்தான்.
ஆனதால் நாங்கள் அழகுடனே கண்டுவந்த
தேன[8]னைய பெண்ணைத் திருந்தவே மாலையிட்டால்
மெத்தவே கீர்த்தியுண்டாம்; மேன்மேல் பவுசுமுண்டாம்;
சித்திரமாய்ச் சொன்னேம்'என்று செப்பினர் சதாதார்.
தூதர்மொழி தான்கேட்டுச் சுந்தோப சுந்தருந்தான்
காதளவோ டும்விழியாள் காதல்கொண்டார். மன்னவனே!
ஆசைமிகக் கொண்டு அறிவுமிகத் தானசந்து
[9]தேசிகஞ் சேர்வீரர் சித்திம்போ லேயிருந்தார்.

---

1. [ரை]
2. [பாத்துணர் புகழே]
3. "மா-மா-காய்" இரட்டித்து வரும் அறுசீர் விருத்தம்
4. [ப]
5. [நா]
6. இமைய அரசன்
7. ஸ் என ஒலிக்கும்
8. [னி] உச்சரிப்பு
9. ஒளி

மங்கைமே லாசைகொண்டு மயங்கிநின்ற மன்னவர்மேல்
சிங்கமெனும் வில்காமன் சினந்து கலகமிட்டு
கன்னல் சிலைவளைத்துக் காமவே ளம்புதொட
மன்னர்தொழு கின்றமுடி மாவேந்தர் மங்கையின்மேல்
சிந்தைவைத்து மெத்தத் [1]தேமுவார் காமமதால்.
மந்தரம்போல் நீண்ட மணித்தோள் மெலிந்திடுவார்.
பூமாது மேவும் புயத்திலணி பூமாலை
காமாக் கினியாலே கருகி யுலர்ந்திடுமாம்.
நித்திரையுங் கொள்ளார் நினைவுபல வெவ்வேறாய்
மெத்தையின்மேல் சோர்வார்; வெகுளியாய்ச் சோம்பிடுவார்.
வார்பூத்த கும்பமுலை மாதுதனை யுள்நினைந்து
பேர்பூத்த மன்னர் பெருமூச்சு விட்டிடுவார்;
உண்ணார்; பணிபூணார்; ஓகெடுவார்! மாதாதர்
கண்ணாரக் கண்டுசொன்ன காரணத்தால் நோய்கள்கண்டு
வாடுவார்; காம வலைதனிலே சிக்கிமெத்த
தேடுவா ரந்தச் சீமாட்டி ஆசையினால்.
[2]ஏமாறி மெத்த [3]இளகிமனம் நொந்துநொந்து
காமாக் கினியாலே கரிக்கட்டை யாகினரே.
கந்தமலர் பூத்தகுழல் கன்னிமே லேயிவர்கள்
இந்தவித மாசைகொண்டு இடைந்து தவித்தனரே.
மருமலர்க் கள்ளுண்ட வண்டெனுமால் மன்னர்முன்னே
உருவுவெளித் தோற்றமய்யோ ஓவியமாய்க் காட்டியதே.

விருத்தம்(10)

பார்த்த பார்த்த [4]இடந்தோறும்
பாங்கா(ய்) அசோக நறுநிழலு
மார்த்த நெடுவா ரிடைபரிய
வடிக்கொண் டெழுந்த வனமுலையில்
சேர்த்த மணிவீ ணையமுதுந்
தேனுங் கனியுந் தெள்விளியும்
[5]நீர்த்த மேகக் குழல்க்காடும்
நகைவெண் ணிலவு(ம்) நீங்காதே.[6]

---

1. தேம்பு = மெலி
2. மோகித்து
3. [யி]
4. [யி]
5. நீருடைய
6. முன்னதுபோன்றவிருத்தம்

நடை

பெண்ணுசை கொண்ட பேரான மன்னர்கண்ணில்
தண்ணுர் மலரோடும் தழைக்கும்மசோ க-நிழலும்
மின்னுலவு சிற்றிடையும் விளங்கியபொன் னுடையொடு
அன்ன நடையுடையும் அழகெழுந்த பொன்முகமும்
பணைத்தெழுந்து விம்மிப் பகட்டுமுலை மீதிலய்யோ
அணைத்திருக்கும் பொன்வீணை அழகோ? [1]பணியழகோ?
பாலோடு சர்க்கரைதேன் பரிவான முப்பழமும்
மேலாங்கற் கண்டுடனே விட்டு மிகப்பிசைந்து
ஒள்ளிய பூந்துகிலில் ஊ[2]ற்றி வடித்தெடுத்து
தெள்ளுமமு[ர்] தம்போலச் சிறப்பான சொல்லழகும்
கார்மேகம் போலக் கரிய மலர்க்குழலும்
சீர்மேவும் புன்னகையும் திருநுதலும் வாயழகும்
கொத்துமுத்துத் தா(ழ்)வடமுங் குலுங்கியபொற் ரோடழகும்
சித்திரப்பொற் கையழகும் சிறப்பாகக் காட்டியதே.
இந்தப்படி யேதான் [3]இனிய வுருவெளிதான்
விந்தையுடன் பார்த்த விடமெல்லாந் தோன்றியதால்.
தூய வலியுடைய சுந்தோப சுந்தருந்தான்
நேயமென வேதா னிரம்பமன மீடழிந்து
நன்னய மாக ந[4]ருமதையாற் றி-னருகே
வன்ன முடனே வளர்ந்த வசோகவனம்
தன்னையே நாடி(ச்) சத்துருக்கள் செங்குருதி
மின்னும்வீரத் தெண்டெடுத்து வெங்காமத் தீவெறியால்
பேடென்னுஞ் சிங்கமுன்[5]னே பெருகுமத[ய்] யானை[6]ரெண்டும்
நாடிவந்த வா[7]றதுபோல் நடந்துவந்தார் முன்வீணையால்.
அப்பொழுது மங்கையிவள் அசோக நிழலடியில்
செப்பமுட னேவீணை திருத்தியிசை யையெழுப்பி

---

1. ஆபரணம்
2. [த்தி]
3.]யி]
4. [ரு]
6. [ரை] உச்சரிப்புக் காண்க
6. இரண்டும்
7. [ர]

வன்னமுட னேராகம் வாசிக்குங் கன்னிமுன்னே
மன்னரிரு பேரும் மதவேள் கணைதாவ
கள்ளு மதிமயக்க காமம் விழிமயக்க
உள்ள பழவினைதான் ஓவியமாய்ச் சூழ்ந்துவர
இட்ட விளக்கை யினியபூ வென்று நத்தி
விட்டி(ல்) பறந்து மிகவந்து வீழ்ந்ததுபோல்
தேவர் மிகப்புகழுந் திலோ[1]த்தமையைப் போலநிற்கும்
ஓவியப் பெண்ணை யுகந்திருவர் கண்டாரே.
கண்டா ரசந்தார்; கைவிட்ட சூத்திரம்போல்
வண்டாரு மாலைபுனை மன்னர்பெரு மூச்செறிந்து
ஆசைமண் டைகொண்டு[2] 'வய்யோ' வெனப்பதறி
நேசமுட னேதான் நெடுமலைபோ லேயிவர்கள்
தட்டுண்டு வீழ்ந்து தடுமாறி யேயெழுந்து
மட்டுண்ட பூங்கூந்தல் மாதுவுட பேரழகை
கண்ணுல் மிகநோக்கிக் கலவி தனைக்குறித்து
தண்ணுர் மாலைமன்னர் தானே [3]மதத்துநின்று
ஒருவருக் கொருவர்மூந்தி [4]'உனக்கெனக்கு' வென்றுசொல்லி
இருவருமே தான்மடிய [5]ஏகினுர் பெண்ணருகே.

விருத்தம்(11)

முந்து காத விருவரினு முன்னேன் பின்னேன் முகம்நோக்கி
'விந்தை போலு மிவளழகுக் கெனக்கே விளங்கு மிவளோடீ
சிந்தை யாலுந் தீண்டாதே'யென(ன்)னத் தம்பி சினத்தெழுந்து
'சந்த முலையா ளெனக்குரியா ளுனக்கே விரும்பத் தகா!'தென்றுன்.[7]

நடை

இப்படியே மால்மிகுந்து [8]எனக்குனக்கு[9] வென்றுவந்த
செப்பமுள்ள மன்னவரில் சீராக மூத்தவன்தான்
பின்னை தம்பிதனைப் பெருமையுட னேநோக்கி

---

1. [ற்றி]
2. குற்றி யலுகரர் கெடாது உடம்படு மெய் பெற்று வருதல் காண்க
3. காமம்மிக்கு
4. குற்றியலுகரம் கெடவில்லை
5. [யே] .யகர உடம்படுமெய் வருதல் காண்க
6. [றி]
7. முன் விருத்தம் போன்றது
8. [யெ]
9. ஷெ-1

'மன்னு! கே ளிந்த மங்கையெனக்கு' என்று சொல்ல
தம்பி வெகுண்டெழுந்து தமையன் முகம்நோக்கி
'கும்பமுலைப் பெண்ணெனக்குக் கொற்றவரே! நீர்தானும்
சிந்தை தனிலிவளைச் சேர நினையாதே.
எந்தனுட பெண்'ணெனவே இசைத்தா னிளையோனும்.
தம்பிசொல் லுக்கேட்டு(த்) தமையன் எனக்கெனவே
வெம்பியிரு பேருமப்யோ வெகுண்டு சினமிகுந்து
வீரப் புயங்குலுக்கி வெண்பல் மிகக்கடித்து
கோரத் துடனெழுந்து கோளரிபோ லாக்[1]கிரமித்து
உத்தண்ட மாய்ச்சிரித்து[2]வுரசியேதான் மூங்கிலில்தீ
[3]பத்துங் கொடுமையைப்போல் பாழாக வேயிருவர்
கொண்டல்போ லேமுழங்கிக் கொடிதா யிருவருந்தான்
தண்டெடுத்துத் தானெதிர்த்துச் சண்டைமிகச் செய்தனரே.

விருத்தம்(12)

மலைக ளிடிந்தன திசைக ளிருண்டன மகுட வனந்தனெடுந்
தலையு மசைந்[4]தன வு[5]டுநிரை சிந்தின தவழ்மத [6]எண்டிசைமா
நிலைகள் குலைந்தன வயிறு குழம்பின நிரையும் நெடுங்கடலும்
மலையும் நடுங்கின கதிரு மொடுங்கின அமரரு மஞ்சினரால்.[7]

நடை

மலைக ளிடிந்துவிழ மகுடமணி சேடனுட
தலைகள் குலைந்திடவே தழைக்கும்வெளி மீனுதிர
எட்டு திசையிலுந்தா னினிதாக நிற்கின்ற
அட்ட கெசமெட்டு மலறி நிலைகுலைய[8]
சத்த சமுத்திரமுந் தான்கலங்கி யேகுழப்பி

---

1. 'கீ' உச்சரிப்பு இல்லை போலும்
2. உ கெடா ; உடம்படுமெய் பெறும்
3. பற்றும்
4. [றெ]
5 [டல்]
6. [யெ]
7. தனதனதந்தன தனதனதந்தன தன தனதந்தனன என்ற சந்தம்; தனன தனந்தன என்றுமாம். புளிமா கருவிளம, புளிமா, கருவிளம, புளிமா கருவிளங்காய் எனவரும் அறுசீர்; புளிமா-கருவிளமானால் அடுத்தசீர் கூவிளம் அல்லதுகூவிளங் காயாம்; அடிக்கு 22 எழுத்து
8. அடி விளம்பம் ஆதலால் வலியிகவில்லை

[1]சுத்தவே பொன்மேரு துவண்டு நடுநடுங்க
சந்திரனுஞ் சூரியனும் தானே மிகமறைய
இந்திரனுந் தேவர்களு மேங்கிப் பயந்தோட

690. சுந்த னுடனே சொல்லு [2]உப சுந்தனுந்தான்
விந்தை யுடனே விசைகொண்டு தெண்டெடுத்து
மேகங்கள் ரெண்டு மிகமுழங்கி மின்னுதல்போல்
வேகமுட னேமுழங்கி வீசுவார் தண்டெடுத்து.
தண்டோடு தண்டுபட்டுத் தான்சிதறு மக்கினியால்

695. வண்டோடு கற்பகஞ்சூழ் மர[3]நாடும் பூநாடும்
எட்டுத் திசையு மினியபிர மன்பதியும்
மூட்டியே சிந்தியனல் மூளப் புகைகள்மண்ட
சிங்கங்கள் [4]ரெண்டு சினந்து பொருத[5]னபோல்
துங்கமத யானைரெண்டுஞ் சோடாய்ப் பொருவதுபோல்

700. கரிய கருமலைகள் கனலெழுந்து கோபமொடு
பெரிய [6]பலக்காரர் பெண்ணுசை யால்சீ[7]றி
தண்டதினால் மண்டைகளில் சாடி யடித்ததினால்
மண்டை தகர்ந்து மழைபோல் ரணமொழுக
கற்றசண் டைத்தொழிலைக் காட்டிச் [8]சணப்பொழுதில்

705. உற்றபெரு மன்னர் ஒருவ ரொருவர்கையால்
அட்ட திசையும் அம்புவியுந் தானடுங்க
பட்டு நிலத்தில் பாரமலை போல்விழுந்தார்.
முன்னுள் விதித்த மு[9]றைமையது தப்பாமல்
மன்னே ரிருவருந்தான் மடிந்து விழுந்தனரே.

விருத்தம்(13)

710. சுந்தோப சுந்தர் தொலைந்துவரை போல்கிடப்ப
அந்தோ விதியே யெனவவுண ரெல்லோரும்
வந்தோல மீட்டு ம[10]றிகடல்போல் நின்றழுது
பைந்தோகை போல்நின்ற பாவையைக்கண் டுதுரைப்பார்.[11]

---

1. சுற்றவே
3. [சுந்தோப]
3. [னு] தேவருலகும் பூவுலகும்
4. இரண்டு
5. [னை]
6. [பி] உச்சரிப்பு
7. [ரி]
8. கூ
9. [ர]
10. [ரி]
11. காய்ச்சிர் வரும் கோச்சக் கலிவிருத்
தம்: காய்ச்சுப் பதில் மா வந்தால்
அடுத்து வெண்டளை பெற்ற நிலை
முதற் சீர் வரும்

நடை

[1]துடிமீறு கின்றதொரு சுந்தோப சுந்தனுந்தான்
715. இடியேறு போல்முழங்கி யிருந்து மலைபோல
மண்ணுமே லேகிடக்கும் மாவீரர் தங்களைத்தான்
[2]கண்ணுறவே வல்லவுணர் கண்டு சலிப்புடனே
" அய்யோ [2]இதுவிதியோ? அமைத்த படிதானோ?
பொய்யோ [3]இவர்வாழ்வு பொன்றினது காரணமே! "
720. என்றுதான் வல்லவுணர் எல்லோருங் கூடிநின்று
அன்று மிகவழுது அசந்து மயக்கமுற்று
'இந்த [4]இருவருக்கு மிதுவோ சா'வென்றுசொல்லி
சிந்தியகண் ணீர்துடைத்துத் [5]தேமித்தே மி-யேங்கி
ஆச்சரிய மாக அசோக நிழல்தனிலே
725. மாட்சியுடன் நிற்கும் மங்கைதனை யேபார்த்து
'இந்திரனுர் கையி லிருக்கும்வச்சி ராயுதத்தால்
விந்தையுட னேசாகார் வேந்தர்களை வஞ்[6]சனையால்
கொன்றுபழி தான்தீரக் கொடிதான காலனுந்தான்
இன்று[7]இந்தப் பெண்கோலம் எடுத்திங்கே வந்தானோ?
730. கட்டான மன்னருட காலக் கொடுமைபிந்த
மட்டாருங் கூந்தல் மங்கைபோல் வந்ததுவோ?
ஒருவயற்றி லேபிறந்த [8]வுத்தண்ட ராட்சதரை
ஒருகளத்தில் கொன்றுளே உயிரைரெண்டு நாழிகையில்.
கட்டான வேந்தருயிர் கண்டுநின்ற சீமாட்டி
735. நிட்டுர மாகயின்னம் நிற்கிறு ளென்வினையோ?
ஆரைக் கெடுத்திடவோ? ஆருயிரை மாய்த்திடவோ?
வீரியப்பெண் வீணையொடு வீணையாக நிற்குகிறுள்.
ஏதோ தெரியவில்லை? யிந்திரர்கள் செய்தவந்தான்
சூதாக மன்னருயிர் சூ[9]றைகொள்ள வந்தவளோ?

---

1. வலி
2. [யி]
3. ஷ-2
4. [ஷ]-2
5. தேம்பி = விம்மியழுது
6. [சி]
7. [யி]
8. [உலத்தாண்ட]
9. [ரை]

740. மண்ணுலகி லுள்ளதொரு மானிடர்கள் செய்தபலம்
புண்ணியத்தால் வந்தவளோ? பூராயந் தோணவில்லை
இவளை யனுப்பிவிட்டோர் எவரோ [1]யினிதாக
இவளையுமோ பெற்றவர்க ளெவரோ? அறியோமே.
வந்த மடந்தையென்ன மாயமோ? காரணமோ?
745. இந்த [2]வழிபாடும் ஏதோ [3]தெரியலையே.
மண்ணுலகை விண்ணுலகை மற்றபுவ னத்தைமுற்றும்
வண்ணமுட னேர்குடையில் மகிழ்ந்தாளும் ராசர்தனை
கொன்றுதான் போட்டிவரைக் கொன்றபோரா ரோ?'வென்ன
ஒன்றுமறி யாதவள்போல் ஓவியமாய் நிற்குகிருள்.
750. சூரனைவேல் கொண்டு சுழலவே விட்டெறிந்த
வீரியற்கு மிந்தநல்ல மின்போற் [4]றிரமில்லையே.

விருத்தம்(14)

கண்ணுல் உயிர்கவருங் காலனிவ ளாமென்பார்
பண்ணுரும் வீணையன்று பற்றியது பாசமென்பார்
மண்ணுளு மிறைவரைப்போல் மற்றுள்ளோ ராவியையும்
755. உண்ணுமு னுமகல வோடுவே மென்றுரைப்பார்.[5]

நடை

எண்ணுப் பலம்படைத்த யினிதான மன்னர்தனை
கண்ணுல் அவருயிரைக் காணவந்த காலனிவள்.
கையில் மிகவிருக்குங் கனகமணி வீணையது
மெய்யல்ல[ப்] பாரீர்! வினையான மாபாசம்!
760. கோலமணி நெஞ்சுதனில் குடம்போ லிருந்தமுலை
வாலிபஞ்சேர் மன்னருயிர் வாங்கவந்த யேம[6]படர்
இந்தவினை கொண்டு யெமக்கரச ஞகவளர்
சுந்தோப சுந்தனைத்தான் துடியாமல் கொன்றுவிட்டாள்.
செம்மையுட னேயவரைச் செயித்துநின்ற சீமாட்டி

---

1. 'ய்' உகும்படுமெய்
2. வழிமுறை
3. தெரிய இல்லை
4. [தி]
5. முன் விருத்தம் போன்றது
6. [படாளர்]

நம்மையுந் தான்கொன்றிடுவாள் [1]நாமள்நிற்கப் போகாது.
கூடியே வந்துநின்ற கொடியஅசு ரப்படைதான்
ஓடினு ரய்யோ! [2]உருபுகள்] சேர்மன்னுகேள்!
வந்த கொடியமன்னர் மண்மேல் மடிந்துவிழ
விந்தையுட னங்குநின்ற மெல்லியளுங் கண்பார்த்து
மெல்ல நகைத்து வினையொழிந்[3]த தென்றுசொல்லி
வல்லட ருங்கொங்கை மாது மகிட்சியொடு
மின்வெட்டி யங்கே மிகமறைந்த சித்திரம்போல்
பொன்னிட்ட கும்பமுலைப் பூவையவ ளும்விரைந்து
சத்தியலோ கம்புகுந்து சந்தோச மாகவேதாள்
புத்தியுள்ள நா(ன்)முகனைப் புனிதமுட னேபணிந்தாள்.
மயில்போல் மிகப்பணிந்த மங்கைமுகத் தைப்பார்த்து
பயிலுங் கலிமறையோன் பகருவா ளுவியமாய்.
"வாளுலவுங் கண்ணியிலே மானேகே ளுன்பொருட்டால்
ஏழுலகத் துள்ளவரும் [4]இமையோரும் மற்றுமுள்ள
அட்டதிக்குப் பாலகரும் அடங்காத வல்லவுணர்
[5]நட்டனையால் வாடுகின்ற நடுக்க மிகவொழிந்தார்.
இத்தனைபேர் தங்களுட[6] இடையூறு தீர்த்ததினால்
சித்திரஞ்சேர் பெண்ணே! திருவே!நீ யென்றென்றைக்கும்
சூரிய பதவிதன்னில் சுகவாழ்வு பெற்றிடுவாய்.
காரிகையே!" யென்று கமலத்தோன் வாக்களித்தான்.
ஆசையொடு கோபம் அடங்காத கருமவினை
பேசிய [கொஞ்சத்தொழிலப்] [7]பிறம்போக்கி எந்[8]நாளும்
தருமமொடு நற்றவங்கள் சதிராகச் செய்தவர்க்கும்
வரிசையுடன் தேவர்பதி வாகாக வேகிடைக்கும்.

---

1. நாம்
2. உறுப்புகள்-சதுரங்கம்
3. [து]
4. [யி] உச்சரிப்புக் காண்க
5. கொடுமை
6. 'ய்' உடம்படுமெய்
7. உச்சரிப்பு; மோனைகாண்க
8. [ன்னு]

790. இதுபதவி யல்ல யினிதான மாமயிலே!
விதியுடனே மாகஸ்நானம் விரும்பிநீ யாடுபலன்
இந்தப் பெரும்பதவி யினிப்பாய்க் கொடுத்ததுகாண்!
விந்தையுடன் மாகஸ்நானம் விரும்பியெவர் செய்தாலும்
நினைத்த வரம்பலிக்கும்; நெடியசெல்வ மும்பலிக்கும்;
795. சினத்தவிழிப் பெண்மயிலே சேர்வார் கயிலாசம்."
என்றுதா னேபிரமன் இந்தவரந் தான்கொடுக்க
அன்று[1]யந்தப் பெண்ணும் அடைந்தாள்சூ [2]ரிய-பதவி. 797

[இருபத்து நாலாம் அத்தியாயம் முற்றும்.]

முதலாம் அத்தியாயம் முற்றும்.

---

1. 'ய்' உடம்படுமெய்
2. ரி = ர் என்றே ஒலித்துச் சரியொன்று 184 வரி காண்க

[இருபத்தைந்தாவது அத்தியாயம்]

இரண்டாவது அத்தியாயம்[1]

குண்டல விகண்டலன் கதை

விருத்தம்(1)

உலகினில் தருமம் யாவு முரியமா கத்தின் பேறும்
அலகில்லா [2]வேதந் தானே அ[3]றிந்துநற் [4]தட்டிற் தூக்கத்
[5]துலைவில்லா மாகப் பேறே பாரமாய்த் தூங்கி[6]ற் றென்ரூல்
ம[7]லர்தலை யுலகின் யாரே மற்றதன் பெருமை சொல்வார்.[8]

நடை

5. உலகு தனிலே உயர்ந்த பலத[9]ர்மமும்
நலமுடைய மாகஸ்நானம் நல்லதர் மந்தனையும்
இந்தரண்டு தர்மத்தையும் இனிய திராசுதனில்
விந்தையுடன் வைத்து மிகவேதான் [10]தூக்குகின்ரூல்
பரிவான மாகபலன் பாங்காக வே[11]கனத்தால்
10. அரிதான மாகபல னுருதான் சொல்லிடுவார்.

விருத்தம் (2)

இப்பெருந் தருமந் தன்னு லியன்றதோர் காதை கேட்டி
செப்பிய முதலு கத்தில் நிடததே சத்தி லாங்[12]கண்
ஒப்பரு வணிகர் தங்கள் குலத்தினி லுதித்து வாழ்வோன்
தப்பறு வாய்மை யேம குண்டல னென்னுந் தக்கோன்.[13]

---

1. இதற்கு முன் பஞ்சாட்சர மத்தியாயம் என எழுதப்பெற்றுள்ளது
2. [பே]
3. [ரு]; இ, அ; ர.ற
4. தீராசின் தட்டில் வைத்துத் தூக்கி அளக்க
5. 'துலாவிலம்' என்றிருக்கலாம்
6. [தெ]
7. லி
8. 'விள-மா-மா' இரட்டித்து வரும் அறுசீர் விருத்தம்
9. [ற்]
10. தூக்கினுல்; கின்று காண்க
11. கனக்குமானுல்; இந்த வழக்கினைக் காண்க
12. [வ்]
13. முன்னைய விருத்தம்போல்றது

நடை

'பொன்னிலகும் வாளோய்! புகழ்சேர் திலீபதியே!
நன்னயம தாக நாமுனக்குச் சொல்லுகின்ற
கதையி லொருகதைதான் கனிவாகச் சொல்லுகிறேன்.
விதமுடைய மன்னு! விரும்பிநீ கேளு'மென
நற்[1]பு[2]று மாவதிட்டன் ராசன் முகம்பார்த்து
பொற்புறு மாகதைதான் புகலுவா னெவியமாய்.
நான்சொல்லு கின்ற நல்லமா கக்கதைதான்
தேன்போல் ருசிக்குந் தெவிட்டாத த[3]ரு'மமிது.
தருமத்தி னுலே தான்வந்த மாகதையை
வரம்பெற்ற வேந்தே! வாகுடனே நீகேளாய்!
[4]பேரால் முதலுகத்தில் பெருமை மிகவளரும்
[5]ரான நாட்டில் [6]சிறந்திட த-நாடு
அ[7]ன்னுட்டி [8]லேதான் அழகுவணி கர்குலத்தில்
பொன்னுக வந்தோன் புனித குணமுடையான்
[9]வார்த்தைரெண்டு சொல்லான்; வணிகர் குலத்தினுக்குள்
கீர்த்தி மிகப்பெற்றான்; கிளையால் மிகப்பெரியோன்;
ஏமகுண் டலனெனவே யினிய பெரும்பேரான்;
பூமலரு மார்பன் புகழ்மீறு விற்பனியில்
கொள்ளுந் தொழிலில் கோலமிகு நா(ன்)மறைதான்
விள்ளும்படி[த்] தப்பாமல் மிக்க திரவியந்தான்
மலைபோல் மிகக்[9]குமிய மாசில்லாச் செல்வமொடு
நலமீறு செட்டியுந்தான் நன்றுகச் சேகரித்தான்.
இப்படியெட் டுக்கோடி யினிய பொருள்தேடி
செப்ப முடனே சிறந்தகுலா சாரமொடு
நீதம் வழுவாமல் நிகரில்லா வேதியர்க்கு
போத மெனக்கொடுத்துப் புகழ்சேர் கிளையுடனே

---

1. [ப்]
2. [கு]
3. ரு-i எனஒலிக்கும்
4. [ரு]
5. ஷ-ச
6. சிறந்தது நிடத நாடு என்ற பொருளில் வருகிறது
7. ந்நா-தெருகை
8. சொன்ன பேச்சை மாற்றிச்சொல்லான்
9. குவிய; ம, வ

கூடிவிருந் துண்போண் [1]குணங்காமல் தேவருக்கு
காடி[2]யெக்கி யங்கள்செய்து நற்பாய் [3]மகிட்சிசெய்வோன்.

விருத்தம்(3)

எண்டொகைகொள்[4] கோடிபொனி யற்கைதனி லீட்டிக்
கொண்டொழுகு நாள்முதுமை கூடியது கண்டோ
அண்டர்முனி வோருமர ணத்தையக லா[5]ரேற்
கண்ட[6]ற னேயெனம னத்திடைக ணித்தான்.[7]

நடை

எட்டுக்கோடி செம்பொன் [8]இனிதாக வேதேடி
திட்டமுடன் தருமஞ் செய்துவளர் நாளேயிலே.
ஏமகுண்ட ல-ஞன [9]யினிதான செட்டியுந்தான்
தாம்வயது [10]முத்தித் [11]தளன்றுமிக மூப்பாகி
இருக்குமந்த நல்வணிகன் இனிதான சிந்தைதனில்
பெருக்கமுட னேர்நினவு பெரிதாய் நினைந்திடுவான்:
'அண்டரொடு தேவர்களும் அம்புவியாள் மன்னவரும்
எண்டிசைவாழ் வேந்தர்களு மினிய முனிவர்களும்
மாண்டு[12]போற தல்லாமல் மாளாம லிங்கிருக்க
[13]காண்டதில்லை யேதருமங் கைமேல் பலித்ததல்லோ!'
என்று அவன்நினைந்து யினிய பொருள்தனையே
நன்றியுட னறுபங்கு நன்மையுட னங்குவைத்து
ஒருபங்கு தன்னை ஓவியமா க-வெடுத்து
மருவுந்துங் கொன்றைபுனை வள்ளலார் கோயிலுக்கும்

---

1. மனந்தளராமல்; வெறுப்பின்றி
2. எஞ்சும்
3. மகிழ்ச்சி
4. [க]
5. [மே]
6. [ர]
7. தந்தன தானதன தந்தன தான என்ற சந்தம்; தந்த என்பது தான என்றும் வரும்; 3 கூவிளங்காய் + தேமா என வரும் நாற்சீர்க் கலி விருத்தம்; காய்வினம்என முடிந்தால் அடுத்த சீரிடையில் கருவிளங்காய் என்றும் கடையில் புளிமா என்றும் வரும்; மா என முடிந்தால் கடைச்சீர் புளிமாங்காயாம்; அடிக்கு 14 எழுத்து
8. [யி]
9. ய்-உடம்படுமெய்
10. முற்றி.
11. தளர்ந்து.த, ற
12. போகிறதல்லாமல்
13. கண்டதில்லை

செய்ய நறுந்துளபத் திருமால்தன் கோயிலுக்கும்
கை[1]குளிர வாரிக் கனக்க மிகக்கொடுத்து
மண்டபங்கள் செய்து மணித்தேர் மிகமுடித்தும்
தண்டுலவுஞ் செய்ய தாமரைப்பூ வாவிமுதல்
65. நந்தவனம் பூஞ்சோலை நல்லதண்ணீர்ப் பந்தலொடு
விந்தையுள்ள அன்னசத்[2]திர மிகுத்த கிணறு[3]கண்மாய்
மடங்க ளிடிந்தகுளம் வழிமேல் சுமைதாங்கி
இடைந்துவரு வோர்க்கு மினிய பிராமணர்க்கும்
[4]போரும்போரு' மென்றுசொல்லப் புகழாய்த் திரவியத்தை
70. வாரிக் கொடுத்து மனது சலியாமல்
இப்படியே தானதருமம் [5]இனிதாக வேநாளும்
செப்பமுடன் செய்துவருஞ் செட்டி தனக்குரெண்டு
மைந்தர் பிறந்தார்காண். வாகான மைந்தருக்கு
விந்தை யுடனே விருந்தளித்து [6]வுர்தனக்கு
75. சாதி சனம்[7]றியச் சகலோ[8]ருந் தானறிய
நீதியுட னேவணிகன் நிகரில்லா மைந்தருக்கு
குண்டல னென்றும் குணவிகுண்ட ல-னெனவும்
மண்டலமுற் று-மறிய வாகுடனே பேருமிட்டு
விந்தையுட னேவளர்த்தான் வீரியம தாகவேதான்.
80. இந்தரெண்டு பாலருந்தான் இணைசோடா க-வளர்ந்தார்.
பள்ளி தனிலிருந்து பாங்கான வித்தைமுற்றும்
தெள்ளிமையா கப்படித்துத் திறமானுர் மன்னவனே!
பெற்றதொரு மைந்தர் பிரபலமா கும்நாளில்
உற்றயேம குண்டலந்தான் ஓவியமா கப்பார்த்து
85. சிந்தை மகிழ்ந்து திரவியத்தி லஞ்சுபங்கு
விந்தையுள்ள பாலருக்கு மிகவே யவன்கொடுத்து
மீதமுண் டான் மிக்கபணங் காசுதன்னை
வேத ம[9]றையவ[10]ர்க்கு விரும்பி மிகக்கொடுத்து

---

1. [ய்]
2. தீ ஒலியாதுபோலும்
3. ஏரி பாண்டி நாட்டு வழக்கு
4. போதும்; த.,
5. [யி]
6. 'வ்' உடம்படுமெய்
7. [தி]
8. [று]
9. [ர]
10. [ற்]

மைந்தருக்குப் புத்திசொல்லி மற்றுமுள்ள பேர்களுக்கும்
விந்தை யுடன்புத்தி வேண மிகவுரைத்து
கானம் புகுந்து கடிய தவமிருந்து
ஞானம் பிறந்து நல்லறிவு தான்தெளிந்து
செய்யதிரு மால்தனையும் சிந்தைதனி லேநினைந்து
துய்யதவ மூற்றிச் சுமந்த வுடலைப்போட்டு
சின்மய மாகச் சிறந்திடும்வை குண்டபதி
நன்மை யுடனே நல்வணிக னு-மடைந்தான்.
மாவணிகன் முத்திபெற மன்னு! யிந்தப் பாலரிவர்
ஓவிய மாக உயர்ந்த[1]புத்தி சின்னமதாய்
தெள்ளிமை யாகச் சிறந்தகுலா சாரம்விட்டு
கள்ளு மிகக்குடித்து கனவழிப்பா டு-மிழந்து
நற்குண மும்விட்டு நல்லசெல்வத் தின்பெருக்காய்
துற்குணமும் பெற்று தூர்த்தனி னே வாகயிவர்
வாலிபத் தால்சொன்ன வார்த்தையொன்றுங் கேளாமல்
கேலித் தொழிலுங் [2]கிருத்துவமு மெக்களிப்பும்
துற்ச[3]ன ரோடுந் [4]துண்டு பழக்கமிட்டு
நற்ச[5]ன ரோடு நடுங்கக் கலகமிட்டு
சந்தனங் க[6]த்தூரி சாந்துசவ் வாதுடனே
கெந்தப் பொடியுங் [7]கிருத்துவமா கப்பூசி
மலைபெரிய தோள்மீதில் வர்ணப் பணிபூண்டு
விலைமதியாப் பட்டுடுத்தி வீதிதோ றும்[8]பிலிக்கி
[9]சட்ட ரசத்துடனே தானமுது கூட்டியுண்டு
கெட்டகுலத் தாருடனே கிளேபேசி யொக்கவுண்டு
சூதுடனே பந்தயஞ்சொல் சொக்கட்டான் பந்தாடல்
வாதுடனே [10]சாவல்போர் [11]மாதுகுத்தல் தன்னுடனே

---

1. சின்னபுத்தி; அற்பபுத்தி
2. கிருது=ஒய்யாரம்; இதனோடு 'த்வம்' சேர்த்துக் கிருத்துவம் ஒய்யாரத் தன்மைஎன்பது படைக்கப்பெற்றது
3. [ற]
4. துன்று
5. ஷ-2
6. [ஷ்த்]
7. ஷ-1
8. பகட்டுதல்
9. ஷட்ரஸம்.அறுசுவை ஷட்=சட்ட என அகரம் சுற்றில் பெறுகிறது
10. சேவல்
11. பின்னே விளையாட்டு என்பர்

காடைப்போர் தன்னுடனே [1]கதுவாலிப் [2]பாச்சல்கிடாய்
கூடப்போ ராடுவதுங் கூடாருட [3]னேகூடி
காடு தனில்புகுந்து கனவேட்டை யாடுவதும்
வீடு[4]படு கா[5]ற்களவு விரும்புகின்ற மாகுறவர்
பள்ளர் பறையரொடு பரிவா யுறவுசெய்தும்
வள்ளமுலை வேசையொடு மகிழ்ந்து கலவிசெய்தும்
ஆனையே றிக்குதிரை யன்பாக வேயேறி
தானினிய வீதி தனில்விந்தை யாய்வருவார்.
தம்புரு வீணையொடு [6]சாமண் டல] மெடுத்துச்
செம்பொன்மணி பூண்டு தெருவில் மிகவருவார்.
எங்கே யழகா யிருந்தாலும் வேசையரை
அங்கே பணங்கொடுத்து [7]யன்பா யழைப்பதுவும்
[8]சீதமுக வேசைதனைச் சென்றழைத்துக் கூட்டிவரும்
தூதர்தனக் குக்கூலி [9]சுகியமா கக்கொடுத்தும்
கேளிக்கை பார்த்துங் கெம்பீரமா கப்பொருளை
நாழிக் கணக்கிட்டு நற்பாய்க் சொடுக்கிறதும்
[x]ராகங்கள் பாடுவதும்[x] ராகம்பா டுபோர்க்கு
[x]ஆகமுடன் செம்பொன்[x] [10]அடைவாய்க் கொடுக்கிறதும்
[x]மூத்தார்[x] முலையாரை முன்கூட்டி வந்தவர்க்கு
[11]சத்தாங்க மும்கொடுத்து தானே மகிழுவதும்
இந்தப் படியேதான் [12]இதமில்லாச் செட்டிமக்கள்
விந்தையுட னேதேடு மிக்க திரவியத்தை
வீணி லழித்து மிகப்[13]போட்ட தல்லாமல்
பூணும் பணிதியெனப் பொன்போ லொருதருமம்

---

1. கௌதாரி
2. பாய்ச்சல் ஆடு
3. [னை]
4. வீடு மூடித் தூங்கும்போது
5. [ர்]
6. சேகண்டி சேமணி என்றவற்றின்மருஉ வே போலும்; சென்னையில் சேமகலம் எனவழங்கும்
7. 'ய்' உடன்படுமெய்; அ என்பதன் உச்சரிப்பு காண்க
8. குளிர்;கள் போலமயக்கும் என்றுமாம்
9. சுகந்தேடியலைவோன் சுகியன் அவன் தருவது சுகியம் போலும்
10. அன்பாய் பாடபேதம்
11. அரசின் 7 உறுப்பும்; முழுவதும் என்பது பொருள்; சத்தம்; கூலி என்ற பொருளும் த்வனிக்கும்
12. [யி]
13. 'அழித்துப் போட்டது' என்ற வழக்கு

செய்யாம லிந்தத் திரவியத்தைப் பாவியர்கள்

140. அய்யோதான் வீணுப் அழித்துமிகப் போட்டார்காண்.
இனிக்கும் பலாப்பழத்தி லீமொய்த்த விந்தையெனக்
கனக்கும்பொரு ளுள்ளமட்டுங் காத்திருந்த பேர்களய்யோ
உற்ற பொருள்தா னொன்றுமின்றிப் போங்காலம்
[1]அற்ற குளத்தி லரும்பறவை போலானார்.

145. இப்படியெட் டு-கோடி யினிய திரவியத்தை
உப்புவிலைக் காசுமின்றி ஒருமிக்க தோற்றாரே.
கையிலுள்ள து-மிழந்து கனத்தபுக ழு-மிழந்து
மெய்(ம்)மெலிந்து சோ[2]ர்தனக்கு மெத்த வறுமைகொண்டு
உண்ணச்சோ [3]றின்றி யுடுக்கப் [4]புடவையன்றி

150. வண்ண மிழந்து வங்கிசத்தி லீனமதய்
உள்ள விடம்பார்த்து ஒளித்திருந்து ராக்காலம்
கள்ளரைப்போல் கன்னமிட்டுக் கதவு பிடுங்[5]குவித்து
திட்டமுடன் சீவனந்தான் செய்துவரு மக்காலம்
பட்டணத்தோர் கண்டு பரிவான மன்னனிடம்

155. சொன்னு ரிதுகருமஞ். சொன்னவுட னவ்வேந்தன்
அன்னேரை யூரைவிட [6]யடித்து விரட்டிவிட்டான்.
இந்தரெண்டு பேரும் [7]இனியென்ன செய்வோமென்று
விந்தையுட னவ்வனத்தில் வேடரைப்போ லேநடந்து
அம்பெடுத்து வில்பூட்டி அழகான மான்மரையை

160. [x]வெம்பி விழக்கொ[x]ன்று வெண்சதையைத் தான[8]றுத்து
[x]தீயில் பொசிக்கியுண்டு[x] திரிகின்ற காலமதில்
[x]தூய வரிப்புலிதான்[x] துடியாக மூத்தவனை
[x]அடித்தங்கே[x] கொ[9]ன்றதுகாண் அய்யோ யிளையவ[10]னை
[x]வெடுக்கென்று[x] பாம்பு மிகக்கடித்து [11]கொன்றதுகாண்.

---

1. "அற்ற குளத்தில் அறுநீர் பறவை போல்" வாக்குண்டாம்
2. [று]
3. [று]
4. பிடவையின்றி
5. [கி]
6. ய் உடம்படு மெய்;ட்டு ஆம்
7. [யி]
8. [ருஞ்சு]-என்னும் பாடம்
9. [ன்ரிது]
10. [னை]
11. [கொன்றிது]

விருத்தம்(4)

165. பட்ட பாதகரை யந்த கன்சினவி
யேவ வந்தபடர் [1]பற்றியே
கட்டி ருயிர்வி சும்பி னூடுபல
காவ தங்கழிய வேகியே
திட்டி யூடுதழல் கக்க வை[ய்]குமொரு
தென்றி சாபதிமுன் [2]விட்டதும்
துட்டர் தங்கள்செய [3]லாதெ னக்கடிது
சித்[தி]ர குத்தனெடு சொல்லினன்.[4]

நடை

து[5]ற்மரண மாகத் தூயபெருங் காட்டிலேதான்
170. [x]கன்ம முடன்மடிந்த கடியகுண செட்டிகளோ[x]
[x]வட்டவிழி மாமறலி வரவிட்ட தூதரய்யோ[x]
[x]கட்டி யடித்துக் கதறிக் [6]கதறியழ[x]
மு[x]ள்ளுட்னே சேறுமொய்த்து முட்டி [7]வளைப்பாதைவழி[x]
தள்[x]ளி யிசித்தேயிழுத்துச் சண்டன்முன்னே விட்டனர்காண்[x]
175. அப்பொ [x]ழுது கால னவரை மிகச்சீறி[x]
[x8]செப்பமுட னேயிருக்கும் [9]சித்திரக்கூத்த னைப்பார்த்து[x]
'பாவியர் செய்தகுறை பரிவுடனே யேபார்த்து
ஓவியமாய்ச் சொல்'லெனவே யுற்றகணக் கைப்பார்த்து
சொன்னனே யப்போது தூயகொடு மாமறலி
180. முன்லுக ணிற்குகின்ற முனைத்தூத ரைப்பகர்வான்:
கும்[10]பி நரகினுக்குக் கூட்டிப்போய் மூத்தவனை
வெம்பவே தள்ளிவி[ட்]டீர் மிக்காக வேத(ா)னிந்த
இளையோனைப் பொற்றேரில் [11]ஏத்திச் [12]சுருக்காக

---

1. [த்தி] உச்சரிப்பு
2. [விடுதலும்]
3. ஆது+யாது யார் ஆர் ஆதல்போல
4. தானதானதன தானதானதன தான தானதன தானனு என்ற சந்தம் தேமா கூவிளங்காய் தேமாகூவிளங் காய் தேமாகூவிளங்காய்கூவிளம்என வரும் எழுசீர்விருத்தம்; காய் விளமா ஞல்அடுத்தசீர் கருவிளங்காய் ஆகும்
5. [ர்]
6. [கதரி]
7. [வளர்]
8. செப்பமுடன்கிட்ட தின்ற பாடபேதம்
9. சித்திர குப்தனைப் பார்த்து
10. [பும்]
11. [யே]
12. விரைவாக

[1]தழைமீறு கற்பகஞ்சூழ் தன்னூட்டில் விட்டிடுங்காண்
185. என்று நமன்கூற [2]எதிர்நின்ற மாதுதர்
நன்றியில்லா மூத்தவனே நற்கொடிய பாசமதால்
[3]கள்ளனேப்போல் கட்டிக் கதறிக் கதறியழ
தள்ளிக்கொண்டு போனார் தம்பியெனும். பின்னவனே.
வண்ணமுள்ள தேரில் வாகுடனே வைத்துமிக
190. விண்ணவர்கள் நாடுதனே மிகநோக்கி யேகுடந்தார்.
அப்போது குண்டலனும் அழகான தேவர்தனே
செப்பமுட னேநோக்கிச் சிலவார்த்தை சொல்லிடுவான்;
"ஒருவயற்றிலே பிறந்தோம் ஒருசோடா கவளர்ந்தோம்
சரிபாபம் [4]பண்ணுகின்றேரும் [x]தான்மடிந்தோ மோர்நாளில்[x]
195. இப்பொழுது சோடாக [x]இங்குவந்தோ மேமன்முன்னே[x]
[x]ஒப்புடனே நின்றே மொருதருமஞ் செய்தறியோம்"[x]
[a]ஆனதினு லென்னுடைய அண்ணர்தனைப் பாழ்நரகில்[x]
[x]தானடத்தி யென்னைத் தழைத்தமணித் தேரிலேதான்[x]
[5]போற்றும் புகழ்வேந்தா புண்ணியா சொல்லு"மென்று
200. வெம்பி மிகக்குழைந்து மிகத்தேவர் தூதனைத்தான்
தம்பி யவன்கேட்கத் தானுரைப்பா னெவியமாய்.

விருத்தம்(5)

[6]ஈன்ரு ரென்றுஞ் சு[7]ற்றமென்று
மீளைய துணைவ ரென்றுமுண்டோ
[8]ஆன்ரூர் கூட்ட மவையனைத்தும்
அரங்கிற் கூட்ட மவைகண்டாய்
தான்ரூன் செய்த தவப்பயன்கள்
தானே புகுந்து தனிதுய்க்கும்
205. தோன்ரூல்! நீங்க ளிருபேரும்
புகுந்த படியே துய்(க்)கின்றீர்.[9]

---

1. [தனை] எதுகை நோக்குக
2. [யை]
3. கள்ளரைப்போற் சேர்த்திருக்கிக் கதறிக் கதறியழ, தள்ளிக்கொண்டு போனர், தாழ்ந்த நரகினுக்கு. வண்ண முள்ள தம்பிதனை மலரான தேரில் வைத்து, விண்ணவர்களூர் நோக்கி விரசாய்க் கொடுபோனர். அப்போது தம்பியந்த அழகார் விருண்டலனும், ஒப்பில்லாத் தூதர்தனை ஓவியமாய்ப் பார்த்துரைப்பான். எனவேறு பிரதி யில்187-192 வரிகள் காணப்படுகின்றன. இந்நூல் வாய்ப் பாட்டாக வழங்கி வந்தமையால் மறந்தபோது பாடுவோர் எதுகை மோனைக்கு ஏற்ப நீரப்பிக்கொண் டனர் என விளங்குகிறது. பிரதி பேதம் காட்டுவதில் பயனில்லை
4. பண்ணி நின்ரும். கின்ரு சுண்க
5. போற்றும் புகழ் தூதர்களே பூராயம் சொல்லுமென்று-என்பதுவேறு பிரதி; பூராயம் = முழுவிவரம்
6. [யீ] உச்சரிப்பு அப்படிப்போலும்
7. [த்த]
8. அகன்றவர்; ஆன்டார் (ஆண்டிகள்) என்பதே மேல்; மான்ரார் (மான்டார்) கூட்டமவையனைத்தும் மடத்தீற் கூட்டம் அவை கண்டாய் என்றும் இருந்திருக்கலாம்; ஆன்ற என்றுமாம்
9. 'மா-மா-காய்' இரட்டித்து வரும் அறுசீர் விருத்தம்

நடை

தாயுடனே தந்தையென்று(ம்) தம்பித் தமையனென்றும்
நேயமுள்ள சுற்றமென்றும் நெஞ்சில் நினைப்பதுண்டோ?
நாட்டமுள்ள ஆண்டி[1]கள்தான் நன்மடத்தில் கூடினர்போல்
வீட்டில்வந்து கூடினதால் மெய்யோ [2]இதுவாழ்க்கை

210. அவரவர் செய்தபலன் அவரவர்க்கே யல்லாமல்
புவிதனிலே சே[3]ர்க்கையுண்டோ? புத்தி[4]யன்றிச் சொன்னயே!
ஆனதால் நீங்கள்செய்த அரும்பாவ பாக்கியத்தை
தானெருவர் கொள்ளத் தகாது பலியாது.'
என்றுதேவ தூதனுந்தான் [5]இந்தமொழி கூறினதால்

215. வென்றி யுடைய விகுண்டலனுந் தான்கேட்டு
அண்ணன் தனைநோக்கி 'யண்ணே' யெனமிகவே
வண்ணமு டன்மயங்கி ம[6]றுகி யுரைத்திடுவான்.
"[7]நாம்ப ளிருபேரும் நற்றாய் [8]வயத்திலுற்று
தாம்வந்த நாள்முதலாய்த் தருமமொன்றுஞ் செய்தறியோம்

220. முன்செய்த நல்வினையால் மோட்சபதி நானடைந்தேன்.
என்செய்தாயோ அறியே [9]னிமநாடு சேருகின்றாய்."
என்றுஅண்ண னைப்பார்த்து [10]இனியதம்பி தான்புலம்பி
துன்றுபுகழ் தேவதூதன் தூயமுகம் பார்த்துரைப்பான்:
'நன்னயமா யென்[11]துணைவன் நரகுபுக நானடியேன்

225. என்னதவஞ் செய்தேன் இனியதெய்வ நாடுபுக?
விள்ளு' மெனவே விகுண்டலனு மேகூற
தெள்ளு[12]தமிழ் வான்தூதன் செப்புவா னேவியமாய்:-

---

1. [ய]
2. [யி]
3. [ற்]
4. இன்றி என்பது-அன்றி என வருதல் காண்க
5. [யி] உச்சரிப்பு
6. [ரு]
7. நாம்
8. வயிற்றில்
9. மெல்நாடு
10. [யி] உச்சரிப்பு
11. உடன் பிறந்தான்
12. இனிய; அல்லது வானுலகில் தமிழ் வழங்கும் என ஆசிரியர் கருதுகின்றார் போலும்

விருத்தம்(6)

அரிமித் திர[1]னும் வேதியன்றன்
அரிய புதல்வன் சுமித்[தி]ரனென
மருவித் தெண்ணீ ரமுனையின்கண்
மாக மிரண்டு புனலாடி
நிருமித் திடுமத் தவப்பயனுல்
பாவ நீங்கி நிகரில்லாத்
தருமொய்த் திடுந்தண் [2]ணீழல்வாழ்
அமர பதியில் சார்கின்றாய்.[3]

நடை

'வா[4]ராய்! விகுண்டலா!நீ வாகாக மூற்பி[5]றப்பில்
[ஆரா ரு மே]புகழும் அரிமித் திரனெனவே
வாழுகின்ற நான்மறையோன் வயத்தில்சு மத்திரனென்று
நீளும் பெரும்புவியில் நேசமுட னேபிறந்து
அழகான தேவர்புகழ் [6]அமுனையா[7]று தன்னிலேநீ
வளமாக [8][வே] தானிரண்டு மாகஸ்நான [9]மாடுகின்றாய்
அந்தப் பலத்தாலே அரும்பாவந் தானீங்கி
இந்தப் பிறப்பி லிமையோர் பதியடைந்தாய்!
உன்கூடப் பிறந்தா னுன்தமையன் புண்ணியந்தான்
கனவி லுஞ் செய்தறியாக் கருமத்தா லிப்பிறப்பில்.
பாவங்கள் செய்து பாழ்நரகுக் காளாகி
ஓவியம தாக உற்றநமன் தெண்[10]டனையால்
வண்ணமுள்ள கத்தியினுல் மழுங்கச் சதையறிந்து

---

1. [நா]
2. [னி]
3. முன்விருத்தம் போன்றது
4. [ரு]
5. [ர]
6. யமுனை; ய=அ
7. [i] உச்சரிப்பு
8. கூன்போல் கொளல்வேண்டும்; மாகுறுகலாம்
9. 'கின்று' இறந்த காலம் காட்டுகிறது 'ஆடிநின்றாய்' எனக் கொளல்வேண்டும்
10. [டி] உச்சரிப்பு

245. [1]திண்ணக் கொடுத்துத் தீரகி லேநடந்து
மாயாம லேமாய்ந்து வருந்தமிகப் போரு'னென்[2]று
சேயார்விண் ணவர்தூ தன்செப்பமுட னேகூற
தம்பியவன் கேட்டுத் தயங்கியேகண் ணீர்சொரிந்து
வெம்பி மனம்புண்ணுய் மெலிந்து நடுநடுங்கி
250. 'அய்யனே! யென்தன் அருமைத் துணையாளன்
வெய்ய நரகில் விழுந்து பதையாமல்
எங்க ளிருவரையும் என்றும்பிரி யாதவண்ணம்
பொங்கமுடன் கா[ர்]த்திடுவீர், புண்ணியா!' என்றுதம்பி
மெத்த வணங்கி விளம்புவான் பின்னுமொன்று:.
255. 'சத்தி[4]யமுறை தப்பாமல் தன்மமிகச் செய்தவர்கள்
பாங்கான சொர்க்கப் பதவி பெறுவாரும்
தீங்கான பாவஞ் செய்தமகா பாவியர்கள்
நரகம் புகுவாரும் நான்றியச் சொல்லு'மென்று
வீர[5]வு விகுண்டலனும் விந்தையுட னேகேட்க
260. சீரான மா[6]வேந்தா! தேவர்தூ தன்றனும்
பூராய மாகப் புகலுவான் விந்தையென.

விருத்தம்(7)

[7]எட்டி(க்) குமாரன் றனக்குரைக்க
[8]இயல்பாய் நயந்து கேட்டியேல்
விட்ட மனத்தால் [9]வாக்கதனுல்
வினையி லீட்டுங் கருமத்தால்
சிட்டர் தமக்கு[10]க் கொடுந்தீமை
செய்யா திருக்குந் திறத்தினேர்
265. கட்ட நரகில் வீழாமல்
[11]கருணை லயத்தைக் கண்ணுறுவார்.[12]

---

1. தின்ன; ஏ, மை
2. குற்றியலுகரம் அலகு பெறவில்லை; கடையில் ஓரசை சீர் மிக்குவரும் போலும்
3. [ந்]
4. 'தீ' ஒலியாதுபோலும்
5. [வி]
6. திலீபதீயே
7. செட்டி எட்டிஎன்பதொரு பட்டம் வணிகர் பெறுவர்
8. [யி]
9. [விரகத்தால்] மனம், சொல் செயல் என வருதல் காண்க
10. [ங்]
11. சிவபெருமான்
12. முன்விருத்தம் போன்றது

நடை

செட்டிமகன் றன்னைத் தேவதூ தன்பார்த்து
'மட்டவிழும் பூமார்பா! மனத்தினுல் வாக்கதினுல்
பேரால் பெரியோர்க்குப்[1] பெருவினைகள் செய்யாமல்
[2]பூராய மாகப் புகழ்நன்மை செய்தவர்கள்
270. காலனை வென்றிடுவார்; கடுநரகில் வீழார்கள்.
பாலெனும்வெண் ணீ[3]றணியும் பரமன் பதம்பெறுவார்.

விருத்தம்(8)

ஏதி லாருக் கிடர்வினைப்போர்
ஏழு கோடி மந்திரமும்
வேத [4]நான்கும் பயின்றிடினும்
வேள்வி நூறு முடித்தாலும்
காதம் பலபோய் விரிதிரைநீர்(க்)
கங்கைப் புனலிற் கலந்தாலும்
275. [5]கோத மான வீழ்[6]நிரையக்
குழியில் வீழ்ந்து குலைந்திடுவார்.[7]

நடை

ஐம்புலனை வென்று அருள்பெற்ற ஞானியர்க்கு
வெம்புங் கொடியவினை மிகவேதான் செய்தவர்கள்
[8]எழுகோடி மந்திரத்தை யிருந்து[9]வுருச் செய்தாலும்
பாழில்லா வேதமதைப் பழுதறவே சொன்னாலும்
280. வண்ணமுட னேநூறு [10]மாவேள்வி செய்தாலும்
தண்ணளிசேர் கங்காநதி தான்முழுகி வந்தாலும்
ஏதுபல னுண்டோ? [11]இனிதான மாவேந்தா!

---

1. கொடுவினை
2. விரித்திரம்; அல்லது முழுதும்
3. [ர]
4. [ஞ]
5. பொல்லாங்கு; கோது
6. நரகம்
7. முன்பிறந்தம் போன்றது
8. நம சுவாகா, வஷட், ஹும், வௌஷட் பட், சுவாதா என்ற முடிபு (கோடி) உடைய மந்திரங்கள்; ஏழுகோடி என்றுமாம்
9. உருச் செய்தல் = ஜபித்தல்
10. அசுவமேதயாகம்; மா = குதிரை; பெருமை என்றுமாம்
11. [யி]

சூதுடனே பாழ்நரகில் வீழ்ந்து துடித்திடுவார்.
தன்னுயிர்போல் மன்னுயிரைத் தாரிரங்கிக் காப்போரும்
வன்னமுள்ள வேதியர்க்கு மகிழ்ந்துதன்மஞ் செய்தோரும்
உத்தமதா னங்கள்செய்தோர் உகந்துதண்ணீர் பந்தல் வைத்தோர்[1]ர்
நித்தம் விருந்துடனே நேசமுட னன்னம்உண்போர்
பசுவிடஞ்சல் தான் தீர்த்தோர் பசுவுக் கிரை[2]கொடுத்தோர்
நிசமுடனே சொன்னேமிவர் நேடி[3]கயிலே யேறுவார்.
ப[4]றவை மிருகங்களைப் பாங்காக வேவிரும்பி
நறுமலர்ப்பூங் காட்டிலய்யோ! நாள்தோறும் வேட்டைசெய்து
கொன்றுவய[5]று தான்வளர்க்குங் கொடியவினை பாவிகளை
வென்றியுள்ள வா[6]ளாலவர் மேலின் சதையறிந்து
உண்டுகோடி காலம்வ(ள) ருற்றவாய் தான்புழுத்து
சண்டலு[7]ட தூதர்கையால் [8]சளப்பட் டிடைந்துமெத்த
நரகந்தோ றுங்கிடந்து நாய்போல மிகவலைந்து
கருமந் [9]துலையாமல்பின்னும் காசினியி லேயவர்தான்
புழுவாக வேபி[10]றப்பார் போமோஅப் போதும்வினை?
வழுவாது பின்னுமந்த மாபாவந் தன்னாலே
தீராத குட்டமொடு செ[11]விடர் குருடாக
பாரோர் சிரிக்க பாங்(கு)[12]கூனு மூமையதாய்
இல்லா வறுமையினு ழிழிகுலத்தி லேபி[13]றந்து
நல்லோர் மிகச்சிரிக்க நாய்போல் திரிவார்காண்.
ஆனதினு லேகேளீர் அன்பான காசிதனில்
ஞான முடையவர்க்கு நாடிவினை செய்யாமல்
இகத்திலே யும்பின்பு [14]வினைய பரத்திலேயும்

---

1. [த்] காப்போர் என்று எதிர் காலத்தாலும், வைத்தோர், செய்தோர் என இறந்த காலத்தாலும். கூறுவது காண்க. வினையாலணையும் பெயர் காலம் காட்டவில்லேலேபோலும்
2. [றை]
3. கைலே என ஒலிக்கும்; மூன் வல்லினமும் மிகவில்லே
4. [ர]
5. [ரி]-உச்சரிப்பு
6. 'ளா' முழு நெடிலாக ஒலியாது; '"ளால" நீரையசையாம்
7. [டை]
8. துன்பப்பட்டு
9. தொ
10. [ர]
11. [கு]
12. [ஞ] பாங்குகூன் என்றுமாம்
13. [ர]
14. 'வி' உடம்படுமெய்

சுகத்தைப் பெறவேண்டித் துன்பம் நிகழவேண்டி
தன்னுயிர்போல் மன்னுயிரை தான்,[1]துன்பஞ் செய்யாமல்
வன்ன முடனே மகிழ்ந்து [2]யிருப்பவாக்கு
அலைகடலைத் தேடி அருநதிகள் வந்ததுபோல்
பலபினிய மாதருமம் பரிவாக வந்துசேரும்.
அஞ்சி யொருவருக்கும் ஆற்றும லேயிடைந்து
தஞ்சமென்று வந்தவரைத் தாங்கி நிறுத்தினவர்
இமைய முதல்,வளரு மினிதான சேதுவுக்குள்
அமைகின்ற தீர்த்தமொடு அழகான கெங்கைமுதல்
ஆடுவோர் பெற்ற அரிய பெரும்பலன்போல்
நாடு :வர்க்கு நாட்சொன்னே மின்னமுங்கேள்.
குற்றமில் லாமலவர் குலாசாரந் தப்பாமல்
உற்றபடி நடப்பார். ஒருதரும மும்வேண்டாம்.
தேவர் பதியடைவார். தேவர்போ கம்பெறுவார்.
ஓவியமாய்ச் சொன்னேம். உத்தமனே! யின்னமுங்கேள்,
நந்தவனம் வைத்தவர்கள் நல்லதிண ருறுகுளம்
விந்தையுடன் வெட்டினவர் மிகத்தண்ணீர் பந்தல்வைத்து
பிள்ளோப்பா [3]லெண்ணைப் பிள்ளேச்சோ[4]று கேட்டு[5]வந்தோர்-
அள்ளிக் கொடுப்போர் அட(ர்)ந்த பெருஞ்சமரில்
[6]மாத்தான்முன் அன்னமிட்ட மன்னவனைக் காட்டாமல்
[7]மாத்தான் முன்னின்று மடிந்து கொடுத்தவர்கள்
வாக்கா லொருவருக்கு வந்தவினை தான்நீக்கி
[8]தாக்காக நன்மைசொல்லித் தானின்ற புண்ணியர்கள்
வாகான செங்கதிரோன் மண்டலத்தை நல்வழியாய்
பாகான மொழியுமையாள் பாகன்பதி தானடைவார்.
குழந்தை யொடுகிழவன் கூறும[9]றை யோன்பசுக்கள்
வளர்(ர்)ந்தநோ யாளனொடு வறுமை யுடன்மெலிந்தோர்
தஞ்சமென்று வந்தவரைத் தயங்காமல் காத்தவர்கள்

---

1. [தும்பம்] உச்சரிப்பு
2. ய் உடம்படுமெய்
3. எள்ணெய்
4. [ர்] உச்சரிப்பு
5. வந்தோர்க்கு
6. மாற்றான் = பகைவன்
7. ஷ-6
8. விருப்பம்
[9. ரை]

அஞ்சலென ஈசன்நக ரடைவார்; நரகுபுகார்.
அரசுடனே வேம்புபுளி அழகான ஆலமரம்
வரிசையுடன் நெல்லிவில்வம் வளரும் விளாம்[1]ரமும்
தென்னமரம் தன்னுடனே சிறப்பாக வைத்தவர்கள்
நன்னயஞ்சே ரும்[2]வணிகர் நமன்பதிபால் அண்டார்கள்.
வழிநெடுகப் பூஞ்சோலை வளமாக வைத்தவர்கள்
[3]துளி[4]ர்ந்து கற்ப(க) நிழலில் துரைபோல வீற்றிருப்பார்.
செய்யசிவ ஞலையமுன் திருமால்தன் ஞலையமுன்
துய்யமனை வாசலில்முன் துளசிநட்[5]டுத் தண்ணீ(ர்)விட்டு
பாங்காய் வள[6]ர்த்தவர்கள் பார்முழுதுந் தானுண்டு
ஏங்காமல் நாளும் இருப்பார்வை குண்டமதில்.
துளசி யிருந்தவிடம் தூயசெழுந் தாமரைதான்
வளமா யிருந்தவிடம் [7]மால்பத்திக் காரர்கள்தான்
இருந்த விடங்கள்தனில் இனியதிரு மால்நாளும்
பொருந்தி யிருந்திடுவான். பொய்யல்ல கண்டாயே!
[8]நாறுந் துளசிவைத்து நாள்தோறுஞ் சு[9]ற்றிவந்து
வீறுடனே தான்பணிந்து பிக்கதுள சி-யிதழை
எடுத்து சிரதில்வைத்தே தினிதாய் முகர்ந்தவர்கள்
[10]வடிப்பமுடன் பூசைசெய்தோர் வைகுண்டம் பெற்றிடுவார்.
அமரபச்சம் பூ[11]ருவபச்சம் அதில்வருமே காதெசியில்
கமலமகள் கே[12]ள்வனேத்தான் கருத்தில் மிகநினைந்து
விண்ணே ருடன்முனிவர் வேதனெடு யாரேனும்
மண்ணேரு மிங்கிதமாய் வளருந் துளசிகொண்டு
பூசித்தா லத்துளசி பொருந்தும்விரை யெவ்வளவோ
நேசத்துட னேர்விரைக்கு நெடியதோர் கற்பகோடி
காலந் தளம்பாமல் கற்பகநாட் டிலிருப்பார்.

---

1. [ற]
2. வணிகர் செய்துவந்த தருமங்கள்; பிற நாடுகளிலும் வணிகர் கூட்டம் இவ் வாறு செய்து வந்தமை கல் வெட்டு களால் தெளியக்கிறது; வணிகர் குறிக்கோள் காண்க
3. நுவிந்து
4. [ற்]
5. [ட]
6. [ர்] ர்த=ர்த்த
7. நீருமாலிடம் அன்பு பூண்டவர்கள்; காரர் என்ற வழக்கினைக் காண்க
8. துளசி வழிபாடு காண்க
9. [த்தி]
10. செம்மை; அழகு. 'ல'ப ஆதல் காண்க
11. [ரு] 'ரு' 'ர்' போல் ஒலிக்கும்
12. [ழ்]

மேலுமவ ரய்யா! வி[1]ட்டுணுபதந் தான்சேர்வார்
புகழ்சேர் துளசிவைத்த வீட்டின் புனிதம்போல்
பகருகின்ற லோகமென்ன பற்றுமோ[2]பற்றுது.
அத்துளசி கொண்டு [3]அரியோனை நாள்தோறும்
365. புத்தியுடன் பூசைசெய்தோர் புண்ணியத்தை விள்ளரிது.
[4]கருடன்மேல் தானேறி கரியமால்வை குண்டபதி
பெருமையுடன் சேர்ந்திடுவார். பேசரிது அப்புதுமை.
கங்கைதனில் தோய்ந்தாலும் கனவேள்வி செய்தாலும்
பொங்கும் நறுத்துளபம் பூண்டவர்க்குப் புண்ணியங்காண்.
370. மாண்டுமாண் டிவ்வுலகில் மானிடரா கப்பிறக்கும்
[5]ஏண்டதொரு பேருக்கு மின்னமொன்று சொல்லுகிறேன்.
துளசிச் சருகுடனே தூயநன்னீ ருங்கூட்டி -
உளமகிழ வுண்டவர்க்கு உண்டானு(ச்) சத்தியலோகம்.
செய்ய துளபமதால் திருமாலை யீசு[6]வரனை
375. கைகுளிரப் பூசைசெய்தால் கருப்பக் குழிதனிலே
[7]விழுகார்; வறுமைகொள்ளார்; மெலியார்கா ணை[8]ந்நாளும்.
வழுவாத முத்திதனை வாகுடனே பெ[ர]ற்றிடுவார்:
செய்ய வெளிதாய்ச் சி[9]றப்பா யொருதருமம்
துய்ய வணிகா! சொல்லுகிறே னென்று[10]வுண்டு
380. காளகண்ட னென கண்ணுதலை யன்புடனே
சூ[11]ளு மிதழ்ப்பூவால் சொல்லும்பஞ் சா(ச்)சரத்தால்
[12]அச்சனை தான்செய்து அன்பாய்ப்பூ சித்தாலே
[13]நிச்சயமாய்ச் சொன்னேம் நெடும் பிறவி சாகரத்தை
கடந்துமுத்தி யென்னுங் கரைசே[14]ரத் தோணியிதே.
385. [15]துடர்ந்து வருந்தன்மம் துணையாம் வழிதனக்கு.

---

1. [ஷ்ட்டு] ட்-னு என்ற உச்சரிப்பும் காண்க
2. கடாகாது
3. திருமாலை அரியவனை
4. [கெ] மோனை காண்க
5. என்றதொரு; ற, ட
6. [ப]
7. 'கு' வருதல் காண்க
8. [ன்னு]
9. [ர]
10. 'வ்' உடம்படுமெய்
11. மு-தெதுகை காண்க
12. [அற்சினை]அருச்சனை; தெதுகை காண்க
13. [நிற்சய]
14. [ற]
15. தொ

விருத்தம்(9)

ஆதி யாய [1]வாணலிங்கம்
படிகம் பசும்பொ னவிர்வெள்ளி
சோதி நவமா மணியிவற்றுல்
துலங்கு மிலிங்கம் மண்ணுல்செய்
பேத விலிங்கம் சுயம்புலிங்கம்
பெரியோர் தாபித் திடுலிங்கம்
கோதி லாது வழிபடுவான்
சிவலோ கத்திற் குடிபுகுவான்.[2]

நடை

390. ஆதியாய் வாணலிங்கம் அழகு படிகலிங்கம்
சோதிசெழும் பொன்னின்லிங்கந் துலங்குகின்ற வெள்ளிலிங்கம்
நவமணியாற் செய்தலிங்கம் நல்லமண்ணுல் செய்தலிங்கம்
புவனமகிழ் சுயம்புலிங்கம் புகழ்பெரியோ ருண்டுபண்ணி
தந்தசிவ லிங்கமதை தான்வழிபா டாகவேதான்
395. விந்தையுடன் தோத்திரமாய் விரும்பியே பூசைசெய்தால்
இருப்பான் சிவலோக மென்றும் கெறிபெறுவான்.
விருப்பாகச் சொன்ன விந்தைசெறி லிங்கமதில்
சிந்தைக் குகந்த சிவலிங்கத் தைவிருப்பி
கந்த மலர்[ச்]சூட்டி கனிந்துமூன்று காலமுந்தான்
400. பூசைசெய் வோர்நல்லோர். பூசைசெய்ய [3]மூற்றுதார்
நேசமுட னேர்போது நெஞ்சி லுரி[4]மையென
சீரான லிங்கமதைச் சிவமந் திரத்தாலே
பூராய மாகப் போற்றி[5]யருச் சினைபுரிந்தால்
அவனைச் சிவகணங்கள் அடிவணங்கி யேபணிய
405. தவமுடைய சாரூபந் தானடைவான் கண்டாயே.

---

1. பாணலிங்கம் [வான]
2. முன்விருத்தம் போன்றது
3. முடியாதவர்
4. [ரு]-உச்சரிப்பு
5. [யற்றினை]

விருத்தம்(10)

[1]வன்பி னேனுங் [2]கைவதத்தை
மருவி யேனு மனங்குழையும்
அன்பி னேனும் [3]வினைதத்தி
னேனு மரும்பொன் பெறவேனும்
இன்ப வுலகில் புகழேற
எண்ணி யேனுஞ் சிவனடியை(த்)
துன்ப மறவே பூசித்தார்
பிரமா தியரால்த் தொ[4]ழுவிருப்பார்.[5]

நடை

410. அடிக்கஞ்சி பூசை அன் [6]பன்றிச் செய்தாலும்
வடிப்பமின்றிக் கைதவத்தால் மாபூசை செய்தாலும்
மனே[ர]தமாய்ப் பூசை மனங்குழைந்து செய்தாலும்
வினைதமுடன் பூசை விந்தையாய்ச் செய்தாலும்
[7]கூலிக்கிசைந்தாலு[ம்] கூறும்பொரு ளாசையின்றி
415. நாலு திசைக்கும் நற்பாகக் கீர்த்திபெற
பூசைமிகச் [8]செய்தாலும் புகழ்பிர மாதித்தரெல்லாம்
நேசமுட னேபணிய நெடிய பதம்பெறுவார்.
சிவனோமி கப்பழித்துச் சிறந்தவிட்ணு வைப்போற்றி
தவமுடனே பூசைசெய்து தான்வேறு செய்தவர்கள்
420. திருமால் தனைப்பழித்துச் சிவனை மிகப்போற்றி
வரிசையுடன் பூசைசெய்து [9]மதபேதம் பேசினவர்
வாய்புழுத்து நாயாக மண்ணில்மிக வேதிரிந்து
பேய்பிதற்றித் தீநரகில் பித்தரைப்போ லேகிடப்பார்.
சிவசேட[ன] மானதொரு சிறந்தநி[10]ரு மாலியத்தை

---

1. வற்புறுத்தலுக்காக
2. வஞ்சனை
3. வேடிக்கை
4. முழுமுற்றே உளது
5. முன்விருந்தும் போன்றது
6. இன்றி
7. கூலிக்குச் செய்தாலும்
8. [செய்தால்]
9. சமரம் நாட்டில் வேரூன்றியதனை இங்குக் காணலாம்
10. [நி] நிர்மாலியம் = ஆண்டவன் மேல் சூட்டிக் களைந்து

தவமுடனே தண்ணீர்தனில் தான்போடா ம-லெடுத்து
அணுவளவு கொஞ்சமய்யோ ஆரேனு முண்டாலும்
இனியுரைப்ப துண்டோ?சொல் இந்திரரும் தேவர்களும்
பிரமனெடு மால்முதலாப் பேசிய [1]நா ளுள்வரைக்கும்
நரகத்தி லேகிடப்பார். நல்வணிகா! தப்பாது.
புல்லால் மரத்தால் புதுச்செங்க லால்[2குறையால்]
கல்லால் நவமணியால் கலந்தபஞ்ச லோகமதால்
தன்னுலே [3]யேன்றதினுல் தழைக்குஞ் சிவன்கோவில்
பொன்னுருங் காசினியில் புனிதமுடன் கட்டிவைத்தால்
பாவத்தையெல்லாம் ப[4]னிப் போல் மிகத்துடைத்து
மேவிச் சிவபதத்தில் வீற்றிருப்பான் தப்பாது.
[5]எந்தெந்த தேவதைக்கு [6]இனிக்கோவில் கட்டினவர்
[7]அந்தந்த தேவதைகள் ஆளும் பதியடைவார்.
மடங்க ளுட[8]னேபசு மாடடைக்க [9]கொட்டமொடு
இடம்பெறும் யாகசாலே இனியமறை வேதியர்க்கு
வீடுகட்டித் தான்கொடுத்தோர் மிக்கான பூவுலகில்
நீடுபுகழ் தான்பெறுவார்; நேசமுடன் பின்னுலே
தேவர் பதியடைவார்; சிவபுண்ணி யம்பெறுவார்.
ஓவிய மாய்இன்னம் ஓதுகின்றேன். நீ கேள்மோ!
நிட்ட முடனே சிவன்கோவில் தான்புதிதாய்
கட்டுவதென்? முன்னுளில் கட்டியழிந் த-பணியை
புதுப்பித்துக் கட்டிப் பூசையில்லாக் கோவிலுக்கு
நிதப்பூசை தான்நடக்க நேசமுடன் பண்ணிவைத்தோர்
என்று(ம்) சிவபதந்தா னிருப்பார் புவிதனிலே.
வென்றி யுடனேய்யோ மீண்டும் பிறக்காரே;
பூசை[10]யன்றிப் பாழாய் புழுதிகொண்ட கோவில்தனை
ஆசையுடன் பி[11]டுங்கி [12]அப்புறத்தில் கட்டிவைத்தோர்

---

1. [னு]
2. இலே
3. என்றது=இயன்றது
4. [னி]
5. [யெ] எந்த+எந்த
6. [யி]
7. அந்த+அந்த
8. முழு நெடிலாய் ஒலியாது
9. கொட்டம்=கொட்டில்; தொழுவம்
10. இன்றி
11. [டி]-பிடுங்கி=இடித்து என்ற பொருளில் வருதல் காண்க
12. [அப்பிரத்தில்]

என்றைக்கும் பாவியென எழுபிறப்புந் தான்பிறந்து
நன்றியில்லாப் பாழ்நரகில் நாய்போல் [1]கிடந்திளைப்பான்.
பழையதொரு த[2]ருமமதைப் பாங்காக வேயழித்து
வளையுடனே புதிதாய் வகுப்பதினு லென்னபலன்?
குருச்[3]சேத் திரமுடனே கோவில்கணக் கு-மணியம்
விருப்பமுட னேமறையோர் வீற்றிருக்கு மூர்தனக்கு
பாங்காக உத்தியோகம் பண்ணிக் கொடுமைசெய்தோர்
இங்காகச் [4]சுற்றத்தொடு சே[5]ர்வான் கொடுநரகம்.
வாகில்லாச் சில [6]மடபதியோ ரைத்தீண்டில்
ஆகொடுமை! ஆடையொடு அன்றுபுன லில்[7]குளிப்பார்.
குளித்தா லதுபாவங் குலைந்தோடி யேபோகும்.
களிப்பா யவர்வீட்டில் கனிந்தமுது [8]வுண்டாலே
[9]பாந்திப மாயுண்ட பாவ வினைத்தானும்
சாந்திரா ய[10]ணவிரதந் தான்பண்ணி னலொழிய
தீராது சொன்னேம். [11]சேடஞ்[12]சுத்தி யாகாது.
பூசாய மாகப் புகன்றேமிது [13]யின்னமுங்கேள்.
புனிதமில்லா ஞனலும் பொல்லாதா ஞனலும்
[14]இனியசிவ யோகி யாக விருந்தாலும்
ஆரேனு மய்யோ அதிகபசி தன்னுடனே
சீராக வந்தவரை தேவர்களென் றேகருதி
அறுசுவையோ டன்னம் அன்பாய்க் கொடுத்தவர்கள்-
மு[15]றுடி[16]றவி யுண்டோ வாழ்வார் கயிலாசம்.
அனந்தங்கோ டிதருமம் அறிய கொடுத்தவசு

---

1. வைத்தோர் இரைப்பான் எவ முடுதல் காண்க இழிவுப்பொருள்
2. [ற்]
3. கேத்தீரம்
4. [சுத்த]
5. [ற்]
6. மடாதிபதி-சீலம் அழகில்லாத என்க
7. எதிர்காலம் காண்க
8. 'வ்' உடம்படுமெய்
9. பாந்தமாய்=உறவாய்
10. [ன]
11. அவர்கள் வீட்டில் உண்டது சேடப் பட்டது (தீண்டத்தகாத குற்றம் உடையது)
12. முழுநெடிலாய் ஒலியாது 'து' என்பதும் அலகு பெறுமல் போகலாம்
13. 'ய்' உடம்படுமெய்
14. முதல் சீரும் கடைச்சீரும் மோனை பெறல்
15. [ரு]
16. [ர]

475. மனங்[1]களிய நாள்தோறும் [2]வாஞ்சையுடன் செய்தபலன்
அதிதியாய் வந்த அ[3]ருமறையோ னுக்கமுது
மதியுடனே யீந்தால் வருமே [4]சணப்பொழுதில்.
அந்தப் பலனை [5]அரிபிரமன் ருத்திரனுல்
விந்தையுள்ள தேவர்களால் விளம்பத் [6]துலையாது.

480. மலையில்மக [7]மேரதிகம் மாநாதியில் கங்கை[8]மிச்சம்;
தொலைவில்லாத் தேவர்தனில் தூயவிந்தி ர-னதிகம்
அன்பான தர்மமதில் அன்னதா ன-மதிகம்;
பொன்போலச் சொன்னேம் புகலுகிறே மின்னமொன்று.
சிங்கத் துவசனென்று சிறப்புடைய மன்னனவன்

485. பொங்கமுள்ள சுவர்க்கமதில் போயிருந்தான் நல்வினையால்.
மீண்டுமவன் பூவுலகில் மிக்கதொரு கு[9]ற்றமதால்
"தாண்டிப்பி[10]ற" வெனவே சபித்தார்கள் விண்ணவர்கள்.
அப்பொழுது மன்னனவ னய்யோ வெனவருந்த
செப்பமுடன் பூவுலகில் சென்ம மெடுத்தாலே

490. திரும்பக் கைலாசம் சேர்வ தரிதெனவே
விரும்பியவனுரைக்க விள்ளுவா ரன்னேர்கள்:
மண்ணுதனில் நீ பி[11]றந்து வ[12]யிறு பசித்தவர்க்கு
வண்ணமுட னன்னம் வழங்கினுல் நீதானும்
அந்தப் [13]பலத்தால் [14]அதிகசொ[15]ர்க்கந் தானடைவாய்.

495. சிந்[16]தனையை விட்டுவிட்டு சிங்கத் துவசர்நீ
உ[17]ந்தனுக் குச்சொன்ன[18] உற்ற மொழியிதுதான்.
அந்தமுள்ள மானிடர்கள் அறியவுமே சொன்னதுகாண்.

---

1. களிப்பாக
2. விருப்பம்
3. [று]
4. க்ஷண
5. அரிபிரமன் ருத்திரன் எனச் செல்வேண் போல் வந்து உம்மைத் தோகை போல உருபேற்றல் காண்க
6. தொலையாது; எனம்பினுலும் முடியாது
7. மேரு + அதிகம்
8. அதிகம்
9. [த்த]
10. [ர]
11. [ர]
12. [ய]
13. பலனுல்
14. உயர்ந்த
15. [ற்க]
16. [தீ]
17. ன்
18. யுக்த வென்றுமாம்

விருத்தம்(11)

அன்ன தானம் புரிவதுபோல்
அரிய தரும மொன்றுமில்லை
அன்ன தானம் செய்வதுபோல்
அரிய தவமு மொன்றுமில்லை
அன்ன தானங் கொடுப்பதுபோ
லரிய பலன்க ளொன்[1]றுமில்லை
அன்ன தானஞ் செய்யுதவி
அன்னை தானுஞ் செய்யாளே.[2]

நடை

தரும மொடுதவசு தானமரி தானபலன்
பெருமைதனி லும்அதிகம் பேசுமன்ன தானபலன்.
அன்னதா னம்போல் அரிதான பேருதவி
வனனமுடன் பெற்றெடுத்த மாதாவுஞ் செய்யரிது.
காலைப் புனலாடல் கடுங்கோபத் தைவிடக்கல்
சீலமுட னூர்பாலுஞ் சிறந்தநன்மை யாய்ப்பேசல்
[3]துக்கமின்றி நாளுஞ் சுகத்தை யடைந்திருத்தல்
நற்குணமாய் நல்வாக்காய் நற்பும் பொ[4]றுமையதாய்
[5]ஆத்து மிரக்கமொடும் ஆசார நீதியொடும்
நேர்த்தியுடன் வாழ்பவர்கள் நெடியபத வியெறுவார்.
பொய்யுரைப்போன் பொய்சாட்சி பொருந்த மிக [6]வுரைத்தல்
கை[ய்]நலிந்து [7]சோர்வு செய்வோன் காணுக்[8]குறளி சொல்வோன்
பெரியோர் தனைப் பழித்தோன் பேசுகின்ற [9]முற்கதையை
அரிதான முற்கதையை அசங்கிதமா கவுரைத்தோன்

---

1. [றில்லை]
2. முன் விருத்தம்போன்றது
3. [துற்கம்] க்-ற் மாருட்டம்
4. [ரு]
5. ஆற்றும் அல்லது ஆர்த்தும் அல்லது ஆத்தும் இரக்கம்; எதுகைநோக்கின் ஆர்த்தும் எனல் வேண்டும்
6. உரைப்போள் முதலிய செய்வோரையும் உரைத்தல் முதலிய செயல்களையும் ஒருங்கு என்னுதல் காண்க
7. தீருடு
8. குறளை = கோள்
9. முற்கதை முன் நிகழ்ந்த பழங்கதை; புராணம்

இப்படியாக் கொடுமை [1]யெக்களிப்பாய்ப் பேசினபேர்
வெப்பமுடனே நரகில் விழுந்து தவித்திடுவான்.
வண்ணமுள்ள பூவுலகில் வாழுகின்ற தீர்த்தமதை
எண்ணுதற்கு மெட்டாத யினியகங்கை யென்றுமனம்
பற்றுவது மெத்தவன்றி. பாவியர்க ளானாலும்
உற்றகங்கை மாநதியில் ஒருபோது மூழ்கிடினும்
விட்டோடும் பாவம் வெயில்கண்ட பூம்பனிப்போல்
கெட்டோடுஞ் சொன்னேம். [2]கிருபைக் கடலடைவார்.

விருத்தம்(5)

ஓடும் புனல்கங் காநதியி
லுவந்து திரு[3] ராடினரும்
ஆட வெழுந்து சென்றரு
[3]மல்ல[ச்] செல்ல வென்றருரும்
பீடு பெறவே நினைந்தாரு
மாடி வந்த பெரியோரை
நாடித் தொழுது புகழ்ந்தாரும்
தாய்வ [4]யிற்றில் நண்ணரே.[5]

நடை

கங்கா நதியில் கடுகியே மூழ்கினரும்[6]
பொங்கமுடன் அந்நதியில் போயாட வேணுமென்று
நினைந்து நடந்தவரும் நிகரில்லா மாகாசி
நினைந்து விழுந்துவரும் நெடியகங்கை மாதீர்த்தம்
ஆடியே நாளும் அன்புடனே வந்தவரை
தேடியே ஓடித் தெண்டனிட்டு வாழ்த்தினவர்
தூயவணி கக்கொழுந்தே! சொல்லு(கி)றேன் சத்தியமாய்;
தாய்வயற்றி லேசெனித்து தரணிதனி லேபி[7]றக்கார்;

---

1. எக்களிப்பு எக்கு + களிப்பு = செருக்கும் மகிழ்ச்சியும்
2. கிருபைக் கடல் = கடவுள் [கிறுபை]
3. அல்ல; சென்றார் மட்டும் அல்ல
4. [ய]
5. முன்னிருந்தம் போன்றது
6. ஆர், அர் என வருதல் காண்க
7. [ர]

பிறவா நெறியடைவார் பேரின்பந் தானடைவார்.
ந[1]றஞ்சேர்க்-டுக்கைபுனை நாதன் திருமுடிமேல்
[2]இருக்கின்ற கங்கைதனை இ[3]ந்நிலத்தி லேதானும்
இருக்கும் நதிக்கிணையாய் இயம்புவரோ ஆரேனும்?
தேவர்பணி கங்கையொடு சிலநதியை யீடுபண்ணி
ஓவியமாய்ச் சொன்ன[ம]வர்கள் வு[4]றைவார் நரகமதில்;
நாடி மிகவிழுந்து நவதுவா ரத்தின்வழி
நீடும் புழுச்செ[5]றிய நீணிலத்தில் நாயெனவே
திரிவானிது நிசமே. செப்புகிறே மின்னமொன்று:
அரிதான தாயுடனே அன்புடைய மாதகப்பன்
தன்னை வணங்கினவன் தன்குருவைப் போற்றினவன்
வன்னமுட னேஒருவன் வைத்தபொருள் வேண்டாதான்
மற்றொருத்தன் தேவிதனை மனதில் விரும்பாதான்
உற்ற கணவனைத்தான் உகந்தினிதாய்ப் பேணினவள்
வண்ணமுட [6]னிவ்வோர்கள் வணிகா! கொடுநரகை
[7]கண்ணிலேயுங் காணுமல் கற்பகநா டு-புகுவார்.
வேதமொடு [8]சாத்திரங்கள் மிக்கமனு நீதிமுறை
போதமுட னே[9]வுரைத்த புத்திவழி தட்டாமல்
பாருலகில் நாளும் பரிவாய் நடந்திடுவோர்
[9]சூரியன்போ லோர்குடையில் தொல்லுலகை ஆண்டிடுவார்.
மன்னர்புகழ் செட்டிபெற்ற மகனே!நீ தான்கேளீர்
நன்னயமா மின்னமொன்று நாங்கள்சொல்ல வேமறந்தோம்
பரிவான மா[10]யேமன் பாங்காயெங்க ளாப்பார்த்து
திருமா லடியார்கள் சிறந்திருக்கும் நல்லிடத்தில்
போகவேண் டாமெனவே புத்திசொன்ன [11]னவ்வோர்கள்.

---

1. [நறுசே]
2. [யி] உச்சரிப்பு
3. [ன்னி]
4. [ரை]
5. [ரி]
6. இவர்கள் = இவ்வோர்கள் என வருதல் காண்க
7. கண்ணிலேயும்
8. [சரஸ்த்திரங்கள்]
9. "வ்" உடம்படுமெய்
10. சந்திரன் போன்ற குடை என வெண் கொற்றக்குடையின் வெண்மைக்குக் கூறுவர். இங்கு ஒப்பில்லாமைக்கும் எல்லாவற்றையும் கண்டிருப்பதற் கும் சூரியனை ஒப்புக் கூறியுள்ளமை புதிய வழக்கே ஆம்
11. 'ய்' உடம்படுமெய்
12 அவர்கள்

வாகுட னிருந்தவிடம் வைகுண்ட மென்றுசொன்னான்.
ஆனதினு லேதிருமால் அடியவரைக் [1]கண்டாக்கால்
தான்கனிந்து தொண்டுசெய்வோர் சார்வார் வைகுண்ட'பதி.
இன்னமொன்று [2]வு[3]ன்தனுக்கு [4]யினிப்பா யொருகதைதான்
வன்னமுடன் சொல்லுகிறேன்! வனவேட னென்றொருவன்
பாங்காக [5]வேதான் [6]ரெண்டு பாலர்தனை யேயீன்று
ஆங்கே யவர்களுக்கு அழகாக வேபேர்தான்
நாரைசின்ன நாளாயென்று நாடிமிகப் பேருமிட்டு
தாரணியி லேவேடன் தானிருந்து சாகும[7]ந்நாள்
தம்பி அருகிருந்தான்; தமையனெங்கே யோபோனான்;
வெம்பி [8]வுயிர்வேடன் விடும்போ தருகிருந்த
[9]நாரா யணன்றனைத்தா னுடியே கூப்பி'டென்று
பூ[10]ராய மாயுரைக்கப் போனதுவே வேடனுயிர்.
அவ்வேடன் செய்தவினை [11]அல்லாம் மிகத்தொலைந்து
செவ்வேபூந் தேரேறி(ச்) சென்றுன்வை குண்டபதி
என்ப துலகெல்லாம் இனிதா யுரைத்திடுமே.
நன்பெருமா னென நா[12]ரா யண[13]மூர்த்தி
ஆயிரம் பேர்தனிலே அன்பா யொருபேரை
வாயினுல் சொன்னுலு மனத்தில் நினைத்தாலும்
பூவுலகி லேதான் பொருந்தும்வினை தான்நீங்கி
தேவர்மட வார்சூழ(ச்) சி[14]றந்தவைகுண் டம்பெ[15]றுவார்.
சட்டமுடன் நாள்தோறும் சாளக் கிராமமதில்
[16]இட்டமுடன் மாலோன் இருப்பான் பிரியாமல்.
தப்பிதமில் லாத சாளக் கிராமமதில்
எப்படித்தா [17]னெம்மா னிருப்பா னெனக்கேட்கில்

---

1. கண்டக்கால்
2. 'வ்' உடம்படுமெய்
3. [ந்]
4. 'ய்' உடம்படுமெய்
5. 'வே' கூன்போலாம்
6. இரண்டு
7. [ன்னு]
8. 'வ்' உடம்படுமெய்
9 [நாரு] நாராய்+அ(ண்) ணவ் நணை
10. [ரு]
11. எல்லாம் அ=எ
12. [ரு]
13. [மூர்த்தி]
14. [ர]
15. [ரு]
16. [இஷ்ட்ட]
17. எம்மான் என்மான் என வந்துளது

அன்று தடங்கடலில் அமுர்தங்கடை யும்போது
வென்றியுடன் [1]மாநெருப்பு வெகுண்டெழுந்த காரணம்போல்
அப்படிப்போ லேமனதை அழுத்தி [2]வருந்துகின்றுல்
தப்பிதமில் லாமூர்த்தி சாளக் கிராமமதில்
[3]எந்நேரமும் [4]வாங்கா திருக்குமவ னேத்தொழுது
பொன்னுகப் போற்றுவர்முன் பொங்கமெனத் தோன்றிடுவான்;
[5]காச்சி கொடுப்பான் கருத்தில்நினைத் த-வரமும்
[6]மாச்சி யுடன்கொடுப்பான்; வைகுண்ட முந்தருவான்;
திருமாலுந் தன்னுடனே சிறந்திடும்வை குண்டமதில்
மருவாரும் பாம்பணைமேல் மகிழ்ந்திருக்கு மாமூர்த்தி
சாளக்கி ராமம்விட்டுத் தான்நீங்கா' னென்று[7]யெண்ணி
சாளக்கி ராமமதைச் சட்டமுட னேமகிழ்ந்து
கசிவுடனே பூசை கனிந்துமிகச் செய்தாலே
[8]அசுவயா கம்கோடி அமைத்தபல னுண்டாமே.
[9]தாச்சியொன் றில்லாச் சாளக் கிராமமதை
[10]மாச்சி யுடனே மணக்க [11]அபிசேகம்
செய்த புனலில் திருந்தவே ஓர்துளிநீர்
கைதனிலே யேந்தி கருத்தாய்த் திருத்துளசி
இலையிலொன்று கூட்டி யினிதாக வேயருந்தில்
[12]தொலையில்லை வைகுண்டம்; சொன்னே மிகக்கிடைக்கும்.
தப்பில்லா வேதியர்க்குச் சாளக் கிராமமொன்று
செப்பமுட னேதானம் சிறப்பா யளித்திடிலே
அண்டச் சுவர்சூழ அழகான மாபுவன
மண்டலத்தைத் தானம் வழங்கும் பலன்கிடைக்கும்.
செய்யசெழுந் தாமரைப்பூ சிறக்கவே தானெடுத்து
துய்ய சிவனைத் துதித்துநா லும்போற்றில்

---

1. ஆலகாலம்
2. வருந்துகின்றபோது; வருந்தினின்றுல்
3. [என்னேரமும்]
4. நீங்காது
5. காட்சி
6. மாட்சி
7. 'ய்' உடம்படுமெய்
8. அசுவமேதயாகம்
9. தாட்சி; தாழ்ச்சி
10. மாட்சி
11. அபிஷேகம்
12. தொலை = தூரம்

கோடி சிவலிங்கம் குறித்துஒரு காளிலிலே
நாடியேபூ சித்தபலன் நன்ருய்க் கிடைத்திடுமே.
ஏகாதே சிதனிலே யினிதான மாவிரதம்
வாகா யிருந்தாலு மவுனமெனக் கொண்டாலும்
தண்ணீர் தனில்முழுகி தவம்[1]பலது செய்துநன்ருய்
உண்ணுவது மின்றி யுறக்கமின்றித் தானிருந்தால்
நன்றியுடன் நல்விரதம் நற்பாய் தரும்பலன்போல்
ஒன்றுங் கொடாது [2]வுகந்துசொன்னேனுங் கண்டாயே!
ஏகாதே சி-விரதம் என்றும்இருக் காதவனை
ஆகாத பாவவினை அவனை விட்டு நீங்காதே.
அண்டர்தொழு மவ்விரதம் ஆசரனுங் கொண்டாலே
கண்டதென்ன! பாவங் காணுது மாண்டுவிடும்!
நாள்தோறு மவ்விரதம் நன்ரு யிருந்தாலே
தாழ்வேது? வி[3]ட்டுவுட சரீரத் துடன்சேர்வார்.
அரிகீர்த் தனமுடனே ஆதிசிவ கீர்த்தனமும்
ஒருபோதுந் தப்பாமல் ஓதிடுவான் மிக்கான
வெள்ளிமலே தான்சேர்வான். [4]விட்ணுபத மேபெறுவான்;
தெள்ளியதே வாவமூர்தம் சிறப்பாய்ப் புசித்திடுவான்;
என்றுதான் வேதமொடு எல்லாப் பலநூலும்
நன்றியுடன் சொல்லுதுகாண்; நாமு [5]மறிந்ததில்லே.
ஆனதா லே! வணிகா' அரிதான தருமமெல்லாம்
தானறிய வேயுனக்குச் சா[6]ற்றினேனுங் கண்டாயே!
என்று விகுண்டலனுக் கினிதான தூதர்சொல்ல
நன்றியுட னேகேட்டு நல்லதென வேமகிழ்ந்து
'தன்மநெறி தன்னைத் தான்உரைத்த தாலடியேன்
நன்மைபெற்றே னய்யா! நானுரைக்க நீகேளீர்!
எ[7]ன்தமைய னய்யா! [8]யினிநரகில் வீழாமல்

---

1. பல
2. 'வ்' உடம்படுமெய்
3. [விட்டு] விஷ்ணு
4. [விஷ்ட்டுனு] விட்ணு என்ற ஒலி போலும்; நீரல் நீரை காண்க
5. இதற்கு மாருக அறியவில்லே முழுதும் [அரிந்ததில்லே]
6. [த்தி]
7. [ந்] ஈதே எதுகைக்காம்
8. 'ய்' உடம்படுமெய்

விந்தையுடன் முத்திபெற விதமெனக்குச் சொல்லு'மென்று
அவ்வணிகன் தான்கேட்க அழகான மாதூதன்
'செவ்விதமா க-வுரைப்பேன் [1]செட்டிப்பிள்ளாய்! நீகேளீர்!
ஓவியமாய் நீதானும் உற்றதொரு முற்பிறப்பில்
மேவி ஒருதருமம் விந்தையுடன் செய்தனைகாண்!
அந்தப் பலனை அரிதாக வேமகிழ்ந்து
[2]ந்தை மய னுக்கு உதவினு யாமாகில்
அய்யோ நரகில்விழான் அன்பாக வுந்தமையன்
மெய்யாக வே[3]மோச்ச வீடுபெறு வான்கேளீர்!
தாட்டிகமாய் முற்பிறப்பில் தான்செய்த மாதருமம்
நாட்டமுடன் சொல்லுகிறேன். நற்பாய்நீ முற்பிறப்பில்
எட்டாந் தலைமுறையி லினிப்பா யொருதருமம்
மட்டாரும் பூமார்பா! வாகாகச் செய்தாய்காண்.
[4]அதிய வளம்பொருந்தும் அன்பான [5]காசினியில்
மதுவன மென்றுசொல்லி மணக்குமொரு பட்டணங்காண்.
வாகுடைய பட்டணத்தில் வளர்பிரம தேவனைப்போல்
சாகுலிய னென்றுசொல்லுந் தனியான மாரிசிகாண்.
அந்தரிசி மாலையிட்ட அழகுரே[6]வ தி-வயற்றில்
சுந்தரம்போல் ஒன்பதுபேர் தோன்றினர் பிள்ளையென.
பிள்ளையே ஒன்பதுபேர் பிறந்துவளர் நாளையிலே
தெள்ளிமையா யஞ்சுமக்கள் சிறந்தமட மாதரொடு
இல்லறத்தி லேயிருந்தா ரினிதாக நாலுமக்கள்
சொல்லுந் து[7]றவடைந்து சுகமா[கி]யோ கத்திருந்தார்.
மச்சவள நாட்டிலேநீ மாமறையோ னுகவேதான்
மெச்சுகின்ற பாக்கியனுய் மிகத்தரும முள்ளவனுய்
பிறந்துவளர் நாளையிலே பெருமையுட னுள்தோறும்
சிறந்தமுது கொள்போது செப்பமுட னே[சாட்சி]

---

1. ஒரசை கூறும்; வல்லெழுத்தினை விட்டென்னுவதும் இந்நூல் வழக்கு 'ப்' ஒலியாமை
2. ன்-றெனக் காண்க
3. மோக்ஷ
4. அதிக
5. பூமியில்
6. [ப]
7. [ர]

போசனத்துக் காள்தேடி புனிதமென வேநீதான்
நேசமுட னேதெருவில் நீதான் வரும்போது
இந்நாலு பேருமங்கே யெதிராக வந்தார்காண்!
அன்னோரைக் கண்டு அன்புடனே நீகூட்டி.
வந்து அவர்க்கமுது வரிசையுட னேபடைத்து
விந்தையுடன் நீயு [1]மிருந்தமுது கொண்டாய்காண்!
அந்தஅன்ன தானபலன் அத்தனையும் நீகனிந்து
உ[2]ந்தன் தமயனுக்கு [3]உதவினீ யாமாகில்
தேவர் பதியடைவான். திண்ணமிது பா'ரெனவே
ஓவிய மாக வுரைத்தா னதுகேட்டு
வண்ணப் பலனே வாய்த்த வணிகனுந்தான்
அண்ணன் தனக்கு அளித்தான்காண் அப்படியே.
அப்பொழுது குண்டலனும் அந்நரகத் தைக்கடந்து
செப்ப முடனேதான் சேர்ந்தான்காண் தம்பியிடம்.
அண்ணனொடு தம்பியுந்தான் அரிய விமானமேறி
வண்ணமுலை [4]ரம்பையர்கள் மணிக்கவரி தான்வீச
சென்றார்கள் மோட்சபதி செப்பமுடன் கே'ளெனவே
அன்று [5]கார்த் தியவீர அரசனுக்கு [6]யிக்கதையை
சொன்னர்இப் படியனந்தம் தூய கதையெனவே
மன்னு!கே' ளென்றுசொல்லி வாய்த்த திலீபதிக்கு
பொங்கமுள்ள மாதவசு பொருந்துந் தவவதிட்டன்
இங்கித மாக விசைத்தானே யிக்கதையை. 687.

[இருபத்தைந்தாம் அத்தியாயம் முற்றும்]

(இரண்டாம் அத்தியாயம் முற்றும்.)

---

1. நீயும் என்பதன் ற்றேடு கூடிய இ-மி என்ருய் வி என்பதனோடு மோனே கோளல் காண்க
2. ன்
3. [உதவுதி]
4. அரம்பையர்கள்; ர மொழி முதல் வருவது காண்க
5. கார்த்த வீர்யார்ச்சுனனுக்கு
6. 'ய்' உடம்படுமெய்

மூன்றுவது அத்தியாயம்

காஞ்சன மாலை கதை

விருத்தம்(1)

ஆயிரந் தடக்கை வேந்தன்
அருந்தவ முனியை நோக்கி
மாயிரு நிலத்தில் தீய
மனிதரைத் து[1]றக்கத் துய்த்தல்
தூயநன் மாகமென் றுய்
அதனிடைத் தூய்மை யின்னும்
தாயினு மினியா சொல்கென்
றிரக்கவத் தவத்தோன் சாற்றும்.[2]

நடை

5. செய்ய[த்] தவமுடைய தெத்தாத் திரையர்தனை
ஆயிரங் கையுள்ள அழகுகார்த் [3]திய-வீரன்
கண்ணுல் மிகநோக்கி கையா லடிதொழுது
'தண்ணரு மாமுனியே! தாரணியி லுள்ளவரை
வாகுடனே மா[4]மோச்சம் வரிசையாய்ச் சேர்ப்பதுதான்
10. [5]மாகஸ்நா ன-மெனவே வழுத்தினீ ரன்புடனே
இன்ன மதின்பெருமை யெந்தனுக்குச் சொல்லு' மென
மன்னவன் கேட்க வாகுள்ளதெத் தாத்திரையர்
பண்டு விளம்புகின்ற பாங்கான மாகதையை

---

1. [ர]
2. விள-மா-மா இரட்டித்துவரும் அறுசீர் விருத்தம்
3. 'தி' ஒலியாது
4. மோக்ஷம்
5. [மாகஸ்த்தானம்]

மண்டலத்தை யாளுகின்ற மன்னவன் திலீபனெனும்

அரசன் தனக்கு அரியதவ மாவதிட்டன்
வரிசை யுடனேதான் வாகாகச் சொல்லிடுவான்:
" வையமுழு தும்[1]புரந்த மாவேந்தா ! கேள்கேள்மோ !
துய்யநன்னீ ரின்பெருமை சொல்லரிது. அப்புனலின்
மகிமைதனை யாரேனும் வழுத்தவல்லா ருண்டாமோ ?

புகலரிய தண்ணீரும் புனிதமாய் நின்மலமாய்
ஆகாசத் தி-லிருந்து அழகுடைய பூமிதனில்
வாகாக வேயிறங்கி மண்மேல் நிலைமைபெற்று
பள்ளத்தி லேநிறைந்து பரிவான பூமிதனில்
உள்ளசிவ செந்துவுக்கு உற்ற[2]அமுர் தம்போல

சகலவுயிர் தன்னைமுற்றுந் தான்[3]காக்கு [4]மற்புதத்தால்
இகலுடைய [5]விட்ணுவைப்போ லினியழகு பெற்றதுகாண்.
ஆனதால் மன்னு அரிய மகரமாதம்
தானினிய தேவர்கள்தான் [6]தன்தனக்கெல் லாம்நீரில்
வந்துநிற்கு மந்த மகரமா தந்தனிலே

விந்தையுடன் மாகஸ்நான மிகமுழுகும் புண்ணியர்கள்
தேவர் பதிபெறுவார் திண்ணமிது [7]வென்றுசொல்லி
ஒலியமாய் யாரேனு முகந்து[8]வப்பில் மூழ்கிடுவார்
[9]தீட்டு மகரமதில் செழுங்கதிர்வந் தூர்போது
மாட்டுக் குளம்புதனில் ம[10]றுகுகின்ற தண்ணீரும்

இங்கிதஞ்சேர் கங்கைக் கிணையாகச் சொல்லிடலாம்.
பங்கமில்லை யாதலினல் பரிவான மாகஸ்நானம்
ஒலிய மாக வுகந்துதா னுடினபேர்
தேவலோ கம்பெறுவார் திண்ணமிது கண்டாயே.

---

1. [பி] உச்சரிப்பு
2. அமுதம், அமிர்தம் அமிழ்தம் என்றெல் லாம் வரும்
3. [காற்கு] ர் இடை எழுதியது
4. [அப்புதத்தால்] ற்-என்றதன் உச்ச ரிப்பு
5. [விஷ்ட்டுணு] விட்டுணு என்றே வரும் போலும்; விட்ணு என ஒலிக்கும்போ லும்
6. முடிபு காண்க
7. 'வ்' உடம்படுமெய்
8. உலப்பில் மூழ்கு என்ற வழக்கு
9. ஒலியம் எழுதியது போன்ற மகரம்
10. [ரு]

விருத்தம்(2)

அனையதோர் மாக மாதத்
தடையுறு மா[1]றைந் தாய[த்]
தினமெல்லாம் புனலி [2]லாட[த்]
திண்மையில் லாதி ளைத்தோன்
வினையற வெழுநாள் மற்றை
ஐந்துநாள் விரிநீர்[3] தோய்க
இனியவை மாட்டான் மூன்று
நாள்படிந் திடினும் நன்றே.[4]

நடை

மாக மதியில் [5]மகிட்சியுடன் முப்பதுநாள்
ஆகமுட னீராட[ல்] லய்யோ[6]பலனில்லாதான்
ஏழுநா ளானலும் இசைந்தாட வேவேணும்.
சூழுமந்தப் படிதான் துணிந்தாட மாட்டாதான்
அஞ்சுநாள் மாகபுனல் ஆட-வேணுங் கண்டாயே.
அஞ்சுநா ளுங்கூட ஆடத் திறமில்லாதான்
[7]அன்னுள் முடிவுதன்னில் அழகாக மூன்றுதினம்
பொன்னுர் புனலில் புகுந்தாட நல்லபலன்.
இந்தப் படிபுனலில் இன்பமுடன் மாகஸ்நானம்
விந்தை யுடனே விசைந்தாடும் போதிலேதான்
மாயவனே யீசுபரனே மகிழ்ந்துமூன் றுகாலம்
நேயமுட னேபோற்றி நிரம்பவே பூசைபண்ணி
திருவிளக்கு வைத்து சிறப்பு மிகநடத்தி
வரிசையுள்ள வேதியர்க்கு மகிழ்ந்துபோச ன-மீ[ய்]ந்து
தன்னுலே [8]யேன்றமட்டும் தானதரு மங்கள்செய்து
மன்னு புனலாடி மாகஸ்நா ன-முடிவில்

---

1. [ரை]
2. ஆடுக-வியங்கோள்
3. தோய்க; முழுகுக 'கு' தோய் என்ப தன் பின் வந்துள்ளது
4. விள-மா-மா-இரட்டித்து வரும் அறுசீர் விருத்தம்
5. மகிழ்ச்சி
6. வன்மை
7. அந்தகைய முப்பது நாட்களில்
8. இயன்ற

[1]தாக்குமறை வேதியர்க்குச் சந்தனத்தோ டேயரிசி

60. பாக்குவெற்றி லையுடனே பால்தயிர்மோர் நெய்யுடனே
முப்பழந்தேங் காய்பருப்பு [2]மூறுக்குவடை யப்பளமும்
உப்புடனே நல்மிளகு உடுத்தநல்ல மாபுடவை
குடையோடு நல்விசிறி கோதில்லாப் பால்பசுக்கள்
[3]சடையாம லேமனது தன்னுலே [4]யேன்றமட்டும்

65. வேதப் பிராமணர்க்கு மிக்க[க்] குருக்களுக்கும்
போதமுட னேகொடுத்துப் புத்திமகி ழும்படியாய்
ஏகா தெசிமுதலாய் இசைந்ததொரு மூப்பதுநாள்
ஈகா தெசிவரைக்கும் இனிமூன்று மாகஸ்நானம்
பொங்கமுடன் மூழ்கினபேர் புவியில்நெடு நாள்வாழ்ந்து

70. சங்குசக்[5]கர பாணியு[6]டே சரணமலர்[ப்] பெற்றிருப்பார்.
இப்படித்தான் மாகஸ்நான மிசைந்தாட நல்லபுனல்
செப்புகிறேன். இன்னமுங்கேள்! சீரான மாவேந்தே!
குளங்கள்மிக [7]வத்திக் குறைபுனல்தா னுனலும்
பழங்கிணறு, நூதனமாய்ப் பண்ணும் புதுக்கிணறு,

75. புதுக்குடத்தி லே[8]மோந்து பொங்கமென வைத்தபுனல்,
மதுக்கமலம் பூத்திருக்கும் வாவி,குளம் ஆறுசூன
தானிருக்கு மூரடுத்து(ச்) சார்ந்திருக்கும் [9]ஊருணியாம்
மீனிருக்கு மைக்கடலா மிகுத்ததொரு கங்கைநதி
இந்தப் படிதான் இசைந்தபிர யாகைதனில்

80. விந்தையுடன் மாகஸ்நான மிகச்சென்று [10]வாடுகின்ருல்
அன்புடைய மன்னு! அதுக்குள்ள மோட்சபலன்
பொன்போ லளிக்கும்; புகலும்பிர யாகைதனில்
வரிசையுடன் மாகஸ்நானம் மகிழ்ந்துதான் மூழ்குபலன்
பிரமனும் தன்வாயால் பேசவுந்தான் மாட்டானே.

---

1. எதிர்படும்; விருப்பமுள்ள
2. [முதுவடை]
3. சோர்தல்; சலியாமல்; வழக்கு
4. இயன்ற
5. கருடியாது போலும்
6. டை
7. வற்றி
8. முகந்து
9. [ஊறணி]
10. 'வ்' ஆடிதின்ருல்

விருத்தம் 3)

இந்திரன் [1]சசி[2]மால் [3]செய்யா
[4]ளீச[5]னம் பிகை[6]வி ரிஞ்சன்
சுந்தர [7]வாணி திக்கில்
சூழ்[8]மற்றை யெழுவ ரோடும்
[9]சந்திரா தித்தர் [10]விண்ணோர்
தானவ ரியக்கர் சித்தர்
[11]சிந்துரத் திலதக் கோலத்
திருநுதல் ரம்பை மாதர்.[12]

நடை

இந்திரன் இந்தி ராணியோடு இனிநெடுமால் சீதேவி
90. சந்திர மவுலியுடன் தழைக்கு மம்பிகைதேவி
நான்முகனெ டு-வாணி நல்லதிக்குப் பாலருடன்
மாமறை[ச்]சொல் விண்ணவரும் வளருஞ்சந்[13]திர சூரியரும்
தானவரும் விஞ்சையரும் சத்தகன்னி மார்களுடன்
ஆனதொரு [14]காந்துருவர் அழகுடைய மா[15]யியக்கர்
95. சத்த ரிசிகளுடன் சகலகலை நா[16]ரதரும்
சித்திரப் பூந்திலத தேவரம்பை தன்னுடனே
மற்றுமுள்ள தேவரெல்லாம் வளரும்பா வந்தீர
உற்றபிர யாகையிலே யுகந்தோறு மாகபுனல்
வந்து மிகமுழுகி வரிசையுட னேபோவார்;
100. இந்தக் கலியுகத்தி லினிதான மானிடர்கள்
கண்ணில் தெரியாமல் காசினியில் மானிடர்போல்

---

1. சசி = இந்திரன் மனைவி
2. விஷ்ணு
3. இலக்ஷ்மி
4. சிவபெருமான்
5. பார்வதி
6. பிரமன்
7. சரஸ்வதி
8. [மாதர்] சப்தகன்னிகள்
9. சந்திரன்; ஆதித்தன் (சூரியன்)
10. தேவர்
11. சிவந்த பொட்டு
12. முன்விருத்தம் போன்றது
13. 'தி' ஒலியாது போலும்; 'ருஞ்ச' நிரை
14. கந்திருவர்
15. 'ய்' உடம்படுமெய்
16. [க]

வண்ணமுட னேமுழுகி [1]மகிச்சியுட னேபோவார்.
மாவுலகி லுள்ள மனிதர்கள்தான் பூமிதனில்
ஓவியம தாக உகந்திருக்கு மாநதியில்
வந்து முழுகுவதால் மனிதருட பாவமெல்லாம்
அந்த நதிகள்தொறு மன்பா யுறைந்திருக்கும்.
மூழ்கி [2]வுறைந்திருக்கும் [3]மூத்துநதிப் பாவவினை
நாள்தோறும் தீர நல்மனித ரைப்போலே
அங்கே வடிவெடுத்து [4]வழகுபிர யாகையிலே
பொங்கமுட னேமுழுகிப் புண்ணியத்தைப் [5]பெற்றிடுமே.
மன்னு!கே ளாகையினல் வளரும்பிர யாகைதனில்
பொன்னுக வேமூன்று பொழுதுதான் மாகஸ்நானம்
ஆடினு லேகோடி அசுவமேத [6]யாக பலன்
தேடிய மன்னு! சிறப்பாக வேகிடைக்கும்.
வாஞ்சையுட னின்னம் வழுத்துகிறே னேர்க்கதைகேள்!
காஞ்சன மாலியென்று கன்னியொரு பெண்கொடிதான்
முற்கால மாகஸ்நானம் [7]முழுகுகின்ற ளன்னவளால்
நற்கொடிய மாபிரம ராட்சதனும் முத்திபெற்றுன்.
என்றதெத் தாத்திரைய ரிந்துமொழி கூறினதால்
[8]கன்றி(ன)ரை வெல்லவல்ல காத்தியவீ ரன்கேட்டு
அன்பாகப் போற்றி அடிதொழுது "மாதவரே!
பொன்போல வாழுமந்த(ப்) பொற்கொடியாள் தன்னுலே
பேரான மாகொடிய பிரம்மராட்ச தன்தானும்
சீராக முத்திபெற்ற செய்கையினைச் சொல்லு" மென்று
மன்னவன் கேட்க வா[9]குள்ளதெத் தாத்திரையர்
நன்னயம தாக நவிலுவா ரோவியமாய்.

விருத்தம்(4)

[10]வானு டுக்குலம் தன்னில் மதியெனக்
கானு லாவிய கற்பக நா(டெ)டுந்
தான மேவும் அரம்பையர் தம்முளும்
[11]பூர முங்குழல் பொற்பின் விளங்குவாள்.[12]

---

1. மகிழ்ச்சி
2. 'வ்' உடம்படுமெய்
3. முற்று
4. 'வ்' உடம்படுமெய்
5. பாவவினை புண்ணியத்தைப் பெற்றிடும்
6. [தி]
7. நீகழ் காலம் குறிக்கவில்லைபோலும்
8. சினந்து பகைத்தவரை
9. குள்ள-நீரை
10. வானில் நகூத்திரங்களில்
11. [பூனதுங்குழல்]
12. மா+3 ரசைச்சீர்; பின் இரண்டு தனியும் வெண்டளையாம்; அடுக்கு 11 எழுத்து: கலிவிருத்தம்

நடை

நச்சத் திரஞ்சூழ நடுவிருந்த சந்திரன்போல்
கச்சாறுந் தூயமுலை கன்னியர்க்கு [1]ரத்தினம்போல்
இனியதெய்வ ரம்பையரி லிலங்கியவிந் [2]தி ராணியைப்போல்
கனவழகு பெற்றமங்கை கயிலையோன் பாரியைப்போல்
135. மிக்க வடிவுடையாள் [3]மேலோர்க ளாசைகொள்ள
செக்கச் சிவந்தபொன்னல் செய்தசெழும் பாவையைப்போல்
செய்யசெழும் பஞ்சூட்டிச் சிவந்தினிதாய்த் தாமரைபோல்
துய்யமணிப் பொற்சிலம்பு துவண்டசையுஞ் செம்பதத்தாள்
அன்னந் தனைப்பழித்து அழகுமயி லைக்காட்டி
140. நன்னயமதாக [4]நடக்குகின்ற பொற்கொடியாள்
பத்து மதியைப் பதித்தபவ ளக்கொழுந்து
ஒத்திருக்குங் கால்விரல்க ளருண்டதிரா சு[5]கரண்டை
காலி லழகுடையாள்; கட்டுமதன் தூணிதனை
போலிலகு மய்யா புனிதகணைக் கால்கள்கண்டால்
145. ஆனைத் துதிக்கையென அழகாக வேதிரண்டு
கான் மலர்க்கணையான் கனகமாளி கைமுகப்பில்
சீருடனே நாளும் சிறப்பாக வேநாட்டும்
தோரணை வாழையெனத் துலங்கு மிரு[6]துடைகாண்.
சி[7]றுமர வப்படமோ சிலைமதவேள் [7a]தோன்முகமோ
150. வீறுடைய மான்குளம்பை [8]விளங்குகின்ற பெண்குறிகாண்?
ஆலந் தளிர்போல [9]அமைந்த வடி[10]வயறும்
கோல எறும்பொழுக்குக் கொண்டதுபோல் [11]ரோமவரை;
இல்லையோ வய்யோ [12]யிருக்குதோ யென்றெவரும்
சொல்லுகின்ற சிற்றிடையாள்; துலங்குமுந்தி யின்சுழியாள்;

---

1. ர-மொழிமுதல்
2. 'தி' ஒலியாது போலும்
3. தவசிகள்
4. 'கு' காண்க
5. கரடு = கற்பரடு; இடையில் மெல்லெழுத்துப் பெற்று ஐகாரச் சாரியையும் பெற்றுளது
6. தொடை
7. [சு]
7a. யானை முகபடமோ?
8. விளக்குகின்ற; பிறவினைப் பொருளில் தன்வினை வருதல் காண்க
9. அமைந்த அல்லது அமர்ந்த
10. வயிறு
11. ர மொழி முதல்
12. இருக்கிறதோ

155. பாரமகி போல பணைத்தெழுந்து விம்மிமிக
வாரடர்ந்து வீறுபெற்று வளருகின்ற பொன்முலையாள்;
மூங்கில்போல் தோளிலகு முள்கான கந்தனிலே
ஓங்கிவளர் காந்தளம்பூ உகந்துமலர்ச் செங்கையினு[1]ள்;
[2]பச்சைக்கிளி மூக்கெனவே பகட்டும் பவழநகம்
160. உச்சிதமா ன-கமுகை [3]யுகந்திருக்குங் கந்தரத்தாள்;
கண்ணுடி யோவதனங் கனிந்தகொவ்வை [4]யோயிதழ்தான்
தண்ணர்பவ ளத்துள[5]யில் தானமுத்து முத்தெனவே
இலகுந் திருநகையா ளினியகுமிழ் நாசியினுள்
அலைகடலின் நஞ்சோ அமுதோ வ[6]டிவேலோ
165. சீறுங் கயலோ தீட்டுகின்ற வாள்முனையோ
வீறுடைய மானி மிகப்பழித்து மன்மதன்கை
[6]நீலந் தனிமருட்டி நேசமுட னேபெரியோர்
கோல மனதுதனைக் கொள்ளைகொண்டு [7]வெங்காளும்
[8]நட்டனை செய்துவையோ நமன்பாசம் போற்கொடிதாய்
170. வட்டக் கருங்கடல்போல் வளைந்திருக்குங் கண்ணுடையாள்;
சுந்தரஞ்சேர் காமன் தூக்குங் கருஞ்சிலைபோல்
விந்தையுடன் பார்க்க விளங்குங் கரும்புருவம்;
[9]தாட்டிகஞ்சேர் மன்மதன் தான்மயங்கச் செந்திலதம்
தீட்டுஞ் சிறுநுதலாள்; சித்திரவள் ளைக்குழையாள்;
175. மையை யிருள்குடத்தில் வாரி யடைத்ததுபோல்
துய்ய நறுமலரைச் சூட்டுங்கருங் கூந்தலினுள்;
வாஞ்சையுட னிப்படியே வடிவுமிகப் பெற்றிருக்கும்
காஞ்சனமா லையென்னும் கன்னிகையா ளன்புடனே
ஈசன் கயிலைதனி லெ[10]ந்நாளு மேகுடியாய்
180. நேசமுட னேவாழ்வாள்; நெடிய [11]தவத்துடையாள்;

---

1. [ல்]
2. [பட்சை] ட்ச் மாருட்டம்; வல்லெழுத்தும் விட்டெண்ணப் பெறும்போலும்; சி 'க்' என ஒலிப்பதுபோலும்;
3. போன்றிருக்கும்
4. [ரை]
5. [ி]
6. நீல அம்பு
7. 'வ்' உடம்படுமெய் [வெண்ணுகும்]
8. கூத்து; கொடுமை; நட்டனை
9. பலம்-செருக்கு
10. [ன்ன]
11. தவமுடையாள்

அன்பாக நாள்தோறும் அழகுபிர யாகையிலே
பொன்போல மாகஸ்நானம் புனிதமுட னெப்பொழுதும்
உதிக்குமுன்னே தான்முழுகி உகந்துவளர் தென்கயிலே
பதிக்கேகு வாள்!வேந்தா! பரிவாகக் கண்டாயே.

185. இப்படித்தான் நாள்தோறும் இனியபிர யாகைதனில்
செப்பமுட னேமுழுகிச் சிறந்தஅந்த ர-மார்க்கம்
பாதையெனப் போவாள் பார்வேந்தா! வோர்போது
கோதில்லா மாகஸ்நானம் குளித்து[1]விந்தப் பைங்கொடியாள்
அந்தர மார்க்கமதாய் அதிகவேகந் தன்னுடனே

190. விந்தையுள்ள பூந்து[2]யிலே மிகவும் பிழியாமல்
ஈரத் தலையுடனே யிமையமலைச் சார்போரம்
பாரத் தனங்குலுங்க பைந்தொடியாள் போம்போது
பேராக வே[3]தாஞெரு பிரமராச்ச த-னிவளை
சீராகக் கண்டான் தீயகொடுங் கண்ணுலே.

195. பார்த்துமவ னிற்கையிலே பாங்கான மாதுவு[4]ட
பூத்த மலர்க்குழல்நீர் பொன்போ லவன்சிரசில்
துள்ளி [5]விழுந்ததினுல் தூயபெல [6]ராட்சதனும்
தெள்ளிமையாய்ப் பேரறிவு சிறப்பாக வேபிறந்து
கொடிய குணம்நீங்கிக் கோதைதனே யேநோக்கி

200. வடிவுட னேநின்று வாய்திறந்து சொல்லிடுவான்:
"பெண்ணே! யணங்கே! பேரான மாதரசே!
தண்ணுர் மலர்மகளே! தையலே! நீயாரு?
எங்[7]கேவந்தாய்; சொல்லு[8]யிப்ப எங்கேநீ தான்[9]போருய்?
மங்கையரே யிந்த வடிவுடனே நீதானும்

205. அந்தர மார்க்கமதாய் அன்னமே! [10]போறதற்கு
சிந்தையுட னிந்தவுரஞ் சிறப்பாய்க் கொடுத்தவரார்?
என்னதவஞ் செய்தாய்நீ யேந்திழையே சொல்லு"மென

---

1. 'வ்' உடம்படுமெய்
2. துகிலே
3. முழுநெடிலாய் ஒலியாது போலும்
4. டை
5. விழுந்ததனுல்
6. ரா-மொழி முதல்
7. 'கே' என்றும் படிக்கலாம்
8. இப்போது
9. போகிறுய்
10. போகிறதற்கு [போறதற்கு]

நன்னயமாய்ச் சொல்லி நவிலுவான் பின்னுலும்:
"[1]வாராய்நீ பெண்ணே! மகிட்சியுட னிப்போது
210. [2]பூராய மாகப் புனலில் மிகக்குளித்து
[3]யீரத் து[4]யிலுடனே யினியகுழ லீரமுடன்
ஆரத் தனமிலங்க அந்தர மார்[5]க்கமாக
விந்தையுட னே[6]போற வேகத்தா லேதுயில்நீர்
சிந்தியென்மேல் மாதே சிதறுகின்ற புண்ணியத்தால்
215. என்பாவந் தீர்ந்தே னினிக்கோல மும்[7]போச்சு.
பொன்போல நின்றேன். புத்திபெற்றேன்! பொற்கொடியே"
என்று[8]வந்த [9]ராட்சதனு மிரக்கமுட னங்[10]கேநின்று
நன்றியுடன் சொன்ன[11]தினுல் நற்பான மங்கையவள்
விரியுமலர்க் கண்ணுல் மிகநோக்கி ராச்சதனே
220. வரிசையுடன் வாய்திறந்து வாஞ்சையுடன் சொல்லிடுவாள்:-
"பொன்போல நின்று புகலுகின்ற [12]ராட்சதனே!
என்பேரு கேளா யினியகாஞ் சனமாலை;
திங்களொடு கொன்றைமலர் சிறக்க முடிமீதில்
பொங்கமுடன் வைத்தோன், புலித்தோ லுடுத்துகின்ருன்,
225. மானுருங் கையான், மாதையிடப் பாகம்வைத்தோன்,
தானுக நின்ருன், [13]தாட்சியொரு நாளுமில்லான்,
மண்ணுய்ப் புனலாய் மாவழலாய் வாயுவதாய்[14]
விண்ணுக நின்று விளையாடு மெங்கள்பிரான்,
ஆதி பரமசிவன், அன்பாக பாரு[15]வதி
230. நீதியுட னேயிருக்கும் நெடிய கயிலைமலை
தன்னி லிருப்பதுநான், தாக்குடைய [16]ராச்சதனே!

---

1. [வாருய்]
2. [பூருய]
3. 'ய்' உடம்படுமெய்.
4. சி
5. [ற்க]
6. போகிற
7. போயது
8. 'வ்' உடம்படுமெய்
9. ர மொழிமுதல்
10. 'கே' என்று ஒலிக்கும்; கெ என்றும் படிக்கலாம்
11. த
12. 'ர' மொழிமுதல்
13. தாழ்ச்சி
14. [வ்]
15. [ப]
16. [ராச்சதனே]

வன்ன முடனே வளரும்பிர யாகைதனில்
வரிசை யுடனேநான் மாகஸ்நா ன-முழுகி
திருவளரும் பொன்மலைக்குச் சிறப்புடனே நான்[1]போறேன்;
235. [2]பேரான புண்ணியஞ்சேர் பிரயாகை தண்ணீர்தான்
[3]சீராக வுன்[4]மேலில் சி[5]றப்புடனே பட்ட[6]தினால்
நன்னயம தாக[7]விப்போ ராட்சதகோ லம்நீங்கி
வன்ன வடிவுபெற்றாய், மதிபெற்றாய், பேறுபெற்றாய்.
அற்புத மாகவளர் அழகுபிர யாகைபலன்
240. முற்பிறப்பி லின்பமுத்தி முழுது மிகக்கொடுத்து
தெய்வ[8]ரம்பைப் பெண்களிலுஞ் சிறந்ததெய்வ ரம்பையென
மை[ய்]வளருங் கண்டன்மிக வளரும் பதியடைந்தேன்.
ஆன[9]தினால் ராட்சதனே அழகுபிர யாகைதனில்
நான்முழுகிப் பெற்றபலன் நன்றாகச் சொல்லுறேன்கேள்."
245. என்றுகாஞ்ச ன-மாலை யினியமலர் வாய்திறந்து
நன்றியுட னேதான் நவிலுவா[10]ள். மன்னுகேள்!
நற்புகழ் சேர்கின்ற ந[11]ல்க்கலிங்க தேசமதில்
முற்பிறப்பி லேநானு மு[12]ற்றுமுலை வேசையென
வரிசை யுடன்பிறந்து மதனரதி போலவேதான்
250. அரிய வழகுடனே அநேகம்ப ணத்துடனே
மிக்கான செல்வமொடு விரும்பு மிளமையொடு
அக்காலம் [13]வாழிலை[14]ன்தன் அழகுக்கு வாசைகொண்டு
[15]ராசாதி ராசர்களும் ராசகு மாரருடன்
[16]தேசாரு மந்திரிமார் செல்வக் களிப்புடனே
255. என்னை மிகவிரும்பி யென்வீட்டு வாசலிலே

---

1. போக்றேன்
2. [பேருள]
3. [சீருக]
4. மேனியில்
5. [ர]
6. த
7. இப்போது, ஒப்போ இப்ப இப்போ என ஒலிக்கும்
8. ர மொழிமுதல்
9. த
10. [ன்]
11. ல்க்=ற்
12. [த்து]
13. வாழில்-வாழுங்காலத்தில்
14. [ந்]
15. ரா-மொழி முதல்
16. ஒளி-புகழ்

பொன்னை[1]க் குவித் தெ[2]ந்நாளும் பொங்கமெனக்
கா[ர்]த்திருப்பார்.
எந்தநாட் டுள்ளோரும் இனியதொரு காமுகரும்
வந்தென்ன சைமயக்கால் மலை[ப்]போ[3] ல்ப் பணமீ[ய்]ந்து
புணர்வா ரொருபொழுது; போவார் கலகமிட்டு,
260. அ[4]ணையக் கிடையாமல் அய்யோ சிலபேர்கள்
சண்டையிட்டு [5]வொன்றொடொன்று தாவிமணி வாளாலே
கொண்டுவெட்டிக் கொண்டு கொடிதாய் மடிந்த[6]ர்சிலர்.
இந்தப் படியா லினியதுரை மக்களெல்லாம்
[7]எந்தன சைமயக்கா லினிமாண்டு போனர்காண்.
265. இவ்வண்ண மாக இருந்துநான் வாழ்நாளில்
மைவண்ணம் பூத்த மலர்குழலும் தான்வெளுத்து
மேனி தளர்ந்து மென்முலையுந் தான்தளர்ந்து
ஆனவடி வுங்குறைந்து அதி[8]கவய து-மானேன்.
[9]நன்ன(ய)ஞ்சேர் வண்டுவந்து ரசங்கள்தனை யுண்டுவிட்டால்
270. வனனமல ரெப்படித்தான் வாடி யுறங்கிடுமோ
அந்த விதம்போ லாடவர்செய் லீலையினால்
சுந்தரமுந் தோற்றேன்; [10]தோஞ்சேநான் மூப்படைந்தேன்.

விருத்தம்(5)

என்னையே விரும்பிய [11]யினைஞர் யாவரும்
பின்னையான் விரும்பவும் [12]பெயர்ந்து பா[13]ர்த்திடா
275. [14]துன்னிடா தொழியுநா ளிளமை யோந்திடத்
துன்னிய மூப்பினி லிரக்கந் தோன்றவே.[15]

---

1. 'க்' ஒலியாதுபோலும்
2. [ன்ன]
3. ல்ப்=ற்
4. [ணை]
5. 'வ' உடம்படுமெய்
6. [ற] மடிந்தார் உச்சரிப்பு
7. [யெ] உச்சரிப்பு
8. [ய]
9. ந-ர மோனை
10. தோய்ந்து=கீழ் வீழ்ந்து = வாடித் துவண்டு
11. 'ய்' உடம்படுமெய்
12. [வியர்ந்து]
13. [ற்றிடா]
14. [யின்விடந்]
15. வினை - வினை - மா - வினை என வரும்; கலி விருத்தம்

நடை

என்னையே விரும்பிநாளும் யென்பிறகே தான்திரிந்தோர்
தன்னைமிக நான்விரும்பி(த்) [1]தாயகமாய்ப் பேசிடினும்
கண்ணுலு மேபாரார் காரியமே துண்டெனவே
எண்ணுல் போயிடுவார்; இனிக்கேளார் சொன்னுலும்.
இந்தப்படி யேநானும் இருந்துவய தா[2]லேநொந்து
சிந்தை [3]மறுகித் தினமு மிரக்கமதாய்
வடிவுடனே [4]நாம்பளுந்தான் வாலிபத்தைக் [5]காணியென
கொடியவினை செய்தோங் குறித்துநன்மை செய்யவில்லே.
என்றைக்குஞ் செல்வ மிருக்குமென்று மெத்தவெண்ணி
நன்றிகெடக் கேடு நடத்தினேந் [6]தோணுமல்
செய்யமறை வேதியர்க்குச் சிறப்பாகத் தான்தருமம்
கையினு லேமனது கனிவாகச் செய்தோமோ?
நன்னயம தாகவேதான் நாட்டில் பசித்தவர்க்கு
அன்னங் கொடுத்தோமோ? ஆகுதிகள் செய்தோமோ?
கோவில்மடங் [7]கட்டினமோ? குளங்கிண[8]று வெட்டினமோ?
ஆவினத்துக் கய்யோ அன்பாயிரை யிட்டோமோ?
என்னபலன் செய்தோம்? [9]ஏதுமொன்று [10]செய்யலியோ?
வன்னமுடன் பாவம் மனதாரச் செய்தோ[11]மே.
இனி[12]நாம லென்னசெய்வோ மினியிந்தப் பாவவினை
தனையொழிக்க வேறினைந்து தங்கள்குருக் கடளிடத்தில்
வந்து பணிந்துபோற்றி வாழ்த்திபலர்த் தான்தூவி
விந்தையுடன் நின்று விளம்பக்கே ளென்குருவே!
அடியாள் நெடுகிலுமே [13]அறப்பாவஞ் செய்ததல்லால்
வடிவுடனே சுவாமி மகிழ்ந்து த[14]ர்மஞ் செய்திலேன்நான்.

---

1. அன்பாய்; அடைக்கலமாய்
2. "லே" என்றும் படிக்கலாம்
3. [ரு]
4. நாம்
5. பரம்பரை உரிமை எனக்கொண்டு
6. தோன்றுமல்; உச்சரிப்பு
7. கட்டினேமோ - உச்சரிப்பு; கட்டினம் என்பது பழைய வழக்கு
8. [ரு]
9. [யே]; உச்சரிப்பு
10. செய்யவில்லையே
11. ஏ தேற்றம்; ஓ-வினு
12. நாம்
13. [அர]-முழுதும்
14. [ற்]

ஆன[1]தினு லென்குருவே! அருநரகத் தி-லடியாள்
தான்விழுகா மல்நானும் தழைக்கு மமரபதி
சேரும் படியாகச் செப்பமுடன் சொல்லு"மென
நாரியவ ளுங்கூற நற்குருக்கள் தானுரைப்பார்:

305. [2]"பூராய மாகவளர் பூவையே! பொற்கொடியே!
வாராய்நீ யின்னம் [3]மலங்காதே சொல்லுகிறேன்.
உன்பாவந் தீர உபாயமொன்று மீமகிழ்ந்து
அன்பாக வேகனிந்து அழகுபிர யாகைதன்னில்
மாந்தர் மிகமகிழும் மாகஸ்நா னமாடில்

310. தீர்ந்து விடும்பாவஞ் சேருவாய்நீ தேவர்பதி.
அளவில்லாத பாவம் அறிவுகெட்டுச் செய்தாலும்
வளமையுள்ள மாகஸ்நானம் மணக்கும்பிர யாகைதன்னில்
தானுடச் சூரியனைத் தர்ன்கண்ட நொய்[ப்]பனிபோல்
தானோடு மாபாவம். தப்பாது. [4]யின்னமுங்கேள்!

315. பூமலருங் கற்பகஞ்சூழ் பொன்னுட்டு யிந்திரன்முன்.
காமமெனு மக்கினியால் க[5]ருகிநெடு யிந்திரன்முன்
மன்மதவே ளெய்யு மலர்க்கணையால் நாள்தோறும்
தன்மன தொந்து தாங்கா விகாரமதாய்
சீர்மேவு மகா[6]கெவுதன் தேவி [7]அகலிதனை

320. ஓர்போது யிந்திரன்மு னுகந்து [8]களவுசெய்தான்.
அப்பொழுது மாகெவுத ரந்தக் களவுதனை
செப்பமுட னேயறிந்து [9]தெய்வேந்தி ரன்தனையே
[10]பங்கமுக நோக்கிப் படபடென வேசீறி
செங்கண் சிவக்க திசையெட்டுந் தான்புகைய

325. இந்திரனைப் பார்த்து மிக "எண்ணும லென்மனையில்
வந்து களவுசெய்த வஞ்சகா! நீதானும்
ஒருயோனிக் காசைகொண்டாய்! ஓகெடுவா யுன்னையுந்தான்

---

1. த
2. பூராயம்=விசித்திரம்
3. மனம் கலங்காதே
4. 'ய்' உடம்படுமெய்
5. [கரி]
6. கௌதமன்-உச்சரிப்பு காண்க
7. அகலிகை தனை
8. வியபிசாரம்
9. தேவேந்திரன்
10. 'பங்கமுற ' என்றுமாம்; பங்கம்=குற்றம் தோல்வி; அவமானம்; இடர்

அருமையுட னேபா(ர்)த்து அனேவோருந் தான்சிரிக்க
வாகுடைய மேனிதனில் மாவா யிரம்யோனி
ஆகக் கடவ''தென்று அன்றுகெவு தன்மொழிந்தான்.
அப்பொழுது [1]யிந்திரர்க்கு அங்கமெல்லாம் யோனியென
செப்பமுடன் வெள[வ்]வால் சேர்ந்துமொய்த் ததுபோல
ஆயிரம் யோனி அப்போதுண் டான[2]தினுல்
சேயபுக ழிந்திரனும் சிந்தைமிக [3]நொந்தசந்து
மனது மிகச்சலித்து மா[4]லச்சை தன்னுடனே
[5]கனமு மிழந்து[6]வய்யோ கண்டவர்க்குத் தானுணி
பாங்கான பொன்மேரு பாரிசத்தி லேயிருக்கும்
தீங்கில்லாத் தாமரைப்பூச் சிறந்தநறும் வாவிதனில்
பரிவாக வேவிழுந்து பாவம் [7]பலித்துதென்று
தெரியாம லப்புனலில் தெய்வேந் திரனெளித்து
கிடந்துமன தாபமுடன் கிலேசத்தா லேபுலம்பி
[8]துடர்ந்துநம்மைப் பாவவினை [9]சூழ்ந்துதே யென்னவிதி!
அய்யய்யோ நம்மை [10]அனங்கன் கெடுத்தானே!
வையஞ் சிரிக்க வசையா யுடம்பெடுத்தோம்!
சந்திர [11]னல்லோ சதிகேடு பண்ணிவிட்டான்!
இந்த வினைநமக்கு யெங்கே யிருந்ததுகாண்.
[12]அகலி யு[13]டவழகு [14]வைய்யோ நமதழகை
செகமறியத் தான்கெடுத்துச் [15]சின்னமென விட்டதுவே.
மன்மத னெய்யும் வாகான பூங்கணையின்
தன்கொடுமை நீக்கத் தானெருவ ருண்டாமோ?
பாவி யெனுங்காமன் பாராம லெய்துவிட்ட
பூவின் கொடுமைதனை புகலமுடி யாது[16]வய்யோ!

---

1. இ
2. த
3. நொந்து; அயர்ந்து
4. வெட்கம்; 'ல' மொழிமுதல்
5. பெருமை
6. 'வ்' உடம்படுமெய்
7. பலித்தது
8. தொ
9. சூழ்ந்ததே
10. மன்மதன்
11. அல்லவோ
12. அகலிகை
13. டை
14. 'வ்' உடம்படுமெய்
15. அறிகுறி; சிறுமைவன்ற குறிப்பு முண்டு
16. 'வ்' உடம்படுமெய்

பஞ்சபா ணத்தாலே பாங்கான மாபிரமன்
அஞ்சு தலையிலொன்று [1]அன்றிழந்து நின்றானே."
என்று பலநினைவா யெண்ணிமனம் புண்ணாகி
நன்றியுள்ள சிந்தைநொந்து நல்லமலர்க் கண்ணாலே
பூணும் [2]பணிதிமேலில் பூத்தயோ னியைப்பார்த்து
நாணித் தலைகவிழ்ந்து [3]நல்லாச்சு தென்றுசொல்வான்.

விருத்தம்(6)

வரும்.[4]ணி யாவையு மருந்தில் தீர்க்கலாம்
[5]அரிவையர் காமநோய் அதனில் தீர்ந்திடா
தொருகணப் பொழுதினி [6]லூகம் போக்கியே
நரகி(ை)டப் படுத்திடு மென்று நாணினான்.[7]

நடை

எந்தப் பிணியு [8]மினிமருந்தால் தீர்ந்துவிடும்;
இந்த [9]மதப்பிணிதா னினிமருந்தால் தீராதே.
அப்யோ [10]சணப்பொழுதில் அழகுபுத்தி யைக்கெடுத்து
வெய்ய கொடுநரகில் [11]விழுந்தாட்டுந் தப்பாமல"
என்றுதனித் துப்புலம்பி யிந்திரன்பூ வோடைதனில்
நன்றியுள்ள பேருக்கஞ்சி நாணி யவன்கிடந்தான்.
அப்பொழுது விண்ணுட்டுக் கரசில்லா தாகையினால்
செப்பமுள்ள பொன்னுடு சீருகெட்டுப் பாழடைந்து
சந்திரனில் லாத தனியான வானமென
இந்திரனில் லாம லிமையோர் மிகக்கூடி
எங்கெங்குந் தேடி யிந்திரனைக் காணுமல்
அங்கவர்க ளேங்கி அசந்து[12]மனஸ் தாபமுடன்
"நம்முடைய விந்திரன்று ணுடுவிட்டுத் தான்போக
[13]நம்மள்குறை செய்ததுண்டோ? ராசத் துரோகமுண்டோ?

---

1. தான் படைத்த தீலோத்தமைமேல் காமங்கொண்டோடி ஒருதலே இழந்தான் பிரமன்
2. பணிதி = ஆபரணம் (பூணும்) மேலில் (மேனியில்)
3. நல்லதாயிற்று
4. [ற்க]
5. [அருவையர்]
6. [லுசம்]; அறிவு ; ஊக்கம்?
7. முன்விருத்தம் போன்றது
8. இனி = இனிய; இப்போதே
9. காமநோய்; மதன்பிணி
10. கணப் பொழுதில்
11. விழச்செய்து அலைக்கழித்தல்
12. மனவருத்தம் [மனஸ்தாபம்]
13. நாம்; நா-ரா மோனை?

ஏதோ தெரியாதே! [1]யிடஞ்சல்வந்த காரணமென்?"
வேதாக மந்தெளிந்த வியாழபக வானிடத்தில்
தேவரெல் லாம்வந்து தெண்டனிட்டுத் தான்வணங்கி
"ஓவியம்போ லேயிருக்கும் உத்தமரே! தேசிகரே!
எங்கள்துரை யாகவள ரிந்திரனே யுங்காணும்.
பொங்கமுட னேசொலுவீர் புண்ணியரே!" யென்றுசொல்லி
பாங்கான தேவர்கள்தான் பணிந்து மிகக்கூற
ஆங்கே வியாழமுனி அமரரைப் பார்த்துரைப்பான்:
"வரிசையுள்ள தேவர்களே! மாபன்ன ரானவர்கள்
திரவியத் தி-னலுஞ் செல்வக் களிப்பாலும்
பாவத்துக் கஞ்சார்; பழிக்குமிக நாணுர்கள்.
தேவர்களே! தருமம் சிறப்பாகச் செய்யார்கள்.
ஆன[2]தி னலுங்க ளண்ணலெனு மிந்திரன்முன்
மான மிழந்து மதிகெட்ட [3]மோடரைப்போல்
செய்ய [4]கெவுதமர்தன் தேவி யகலியெனும்
தையல்மே லாசைகொண்டு நான்களவு [5]செய்திடத்தில்
அந்த ரிசிவெகுண்டு அவனை மிகச்சபித்தார்.
இந்த விதத்தாலே யிந்திரனும் நாணமுற்று
வண்ணமகா மேரு மலையருகே வாவியினும்
தண்ணீர் தனிலமுங்கித் தான்கிடக்கி ருன்பாரில்."
என்று வியாழகுரு [6]இமையோர் தனக்குரைத்து
நன்றியுள்ள தேவரொடு நடந்தங்கே வந்துநின்று
தண்ணீர் தனில்க்கிடக்கும் தனிமகவா னைநோக்கி
"புண்ணிய வானே புனிதமுடன் வாரு"மென்று
அங்கே வியாழகுரு அன்புடனே தானழைக்க
[7]பங்கேரு கச்சனையில் பதுங்கி மிகக்கிடந்த
இந்திரனுங் கேட்டு எழுந்துபெரு மூச்சுவிட்டு

---

1. இடைஞ்சல்; இடையூறு
2. த
3. மூடரை
4. கௌதமர்
5. செய்த இடத்தில்
6. [யி]
7. தாமரைச்சுனை

சிந்தைநொந்து தன்னுடைய தீவினையை யுள்நினைந்து
தண்சார் புனலிலிட்டுத் தாண்டிக் கரையேறி
எண்சா ணுடம்பு[1]குன்னி யேங்கி யுடல்ந[2]டுங்கி
தலைகுனிந்து மெள்ளமெள்ள தாண்டைந்து அச்சமொடு
கலைபயில் வியாழகுரு காலடியி லேவிழுந்தான்.
தன்குருக்கள் பாதமதில் தான்விழுந்து தெண்டனிட்டு
அன்புருக வாய்திறந்து அமர(ர்)கோ னுங் [3]கூறுவான்;
"[4]எந்தன் குருவே! [5]எனையாளு மாபொருளே!
நிந்[6]தனை செய்தே னிரம்ப வருத்தமுற்றேன்.
அகலியுட புருவ அழகு[7]சா பத்தாலும்
மகிழம்பூ மாறன் வளைக்குஞ்சா பத்தாலும்
தழைக்குங் கெவுதமுனி சபித்திடுஞ்சா பத்தாலும்
இளைத்தே ன[8]முகிழ்ந்தே னினிமதியுங் கெட்டுவிட்டேன்.
சுடுகாட்டு மாலையெனச் சோர்ந்[9]தேனெரு பெண்ணுலே.
தொடியூட்டுஞ் செய்யசெங்கைத் தோகையரை யு-மறந்தேன்
தேவர் பதியிழந்தேன். சிரிக்க வுடம்பெடுத்தேன்.
ஆவிகு[10]றைந் தேனய்யோ அடியேனைக் காரு"மென்று
பாங்கா யிரக்கமொடு பணிந்து[11]விந் திரன்கூற
ஆங்கே வியாழமுனி அவனை மிகநோக்கி
"அஞ்சாதே யிந்திரனே அழ(கு)பிர யாகையிலே
நெஞ்சார மாகஸ்நானம் நீகனிந்து தானுடில்
உ[12]ன்தன்வினை தீர்ந்துவிடு முற்றபதி யும்பெறுவாய்.
என்தனுடன் வாருமென்று இந்திரனைக் கையுடனே
கூட்டியவர் வந்துநின்று குளிரும்பிர யாகைதனில்
தாட்டிகமா கத்தீர்த்தம் தானுடச் சொன்னர்காண்.
இந்தப்பிர யாகைதனி லினிமுழுகும் புண்ணியத்தால்
உந்தன் பவமொழிந்து உடல்முழுதுந் தானிருக்கும்

---

1. குன்றி
2. [டு]
3. [கூவான்] உச்சரிப்பு
4. [யெந்தன்]
5. [யினையாளும்]
6. [தி]
7. (புதுவமான)வில்லாலும்
8. 'மு' என்றே உளது
9. 'தெ' என்றும் படிக்கலாம்; உச்சரிப்பு
10. [ரை]
11. 'வ்' உடம்படுமெய்
12. [ந்] உச்சரிப்பு

ஆயிரம் யோனிகளும் ஆயிரம்பூங் கண்ணுக
சேய வுடல்தனிலே சிறக்கக் கடவ''தென்று
அன்று வியாழகுரு அன்பாகச் சொன்ன[1]தினுல்
நன்றெனவே யிந்திரனும் நல்லபிர யாகைதனில்
435. நேயமுட னேமுழுக நினறந்திருந்த யோனியெல்லாம்
ஆயிரங்[2]கண்ணுச்சு. அழகுபிர யாகையுட[3]
மகிமைதனைச் சொல்லரிது. மங்கையே! கே''ளெனவே
அகமகிழு மாசானும் அன்புடனே சொல்லிமெத்த
'ஆனதினுல் நீயும் அழகுபிர யாகைதனில்
440. தானடைந்து [4]மூழ்குகின்ருல் தான்தீரும் பாவ'மென்ருர்.
குருமொழிதான் தப்பாமல் குருவை மிகத்தொழுது
வரிசையுட னேதேடும் மாபொருளைத் தான்மீட்டு
வினைக ளறும்படியாய் மேதினியி லேயாசை
தினையளவும் வையாமல் செல்வமொடு [5]சுற்றத்தையும்
445. சுட்டகை போல்விட்டுச் சொல்லும்பிர யாகைதனில்
சட்டமென மாகஸ்நானம் தானெருமா தங்கனிந்து
பண்ணினே னிப்படிநான் பண்ணு[6]மாகஸ் நானமதில்
வண்ணமூன்று நாள்பலத்தால் [7]மாண்டுதுகாண் பாவ மெல்லாம்.
இருபத்தே மூ-நாளி லினிய தருமமதால்
450. வரம்பெற்ற [8]ரம்பையர்கள் மகிழ்ந்து [9]யெனே வணங்க
விஞ்சையர்கள் போற்று மினியசுமே தர்வ[10]யாற்றில்
[11]அஞ்சுகம்போ லேபிறந்து அழகுமக ளாய்வளர்ந்து
பரமேசு [12]வரிதனக்குப் பாங்கான தோழியென
திருமேவுந் [13]தென்கயிலை சென்றிருக்கப் பெற்றேன்நான்.
455. ஆன[14]தினுல் ராட்சதனே அழகுபிர யாகைதனில்
நான்முழுகும் புண்ணியத்தால் நல்லபெரும் பேறுபெற்றேன்.

---

1. த
2. கண்ணுயிற்று
3. டை
4. மூழ்கி தின்ருல்; மூழ்கினுல்
5. 'சுற்-பின் உயிரோடுகொண்டால் வல் லெழுத்துத் தள்ளுறும்
6. [மாஸ்தானம்]
7. மாண்டது
8. 'ர' மொழிமுதல்
9. 'ய்' உடம்படுமெய்-உச்சரிப்பு
10. யி
11. அழகிய கீனி
12. [ப]
13. கயிலையின் தென்பகுதியாம். அழகிய கயிலை என்றுமாம்; முல் தென் கயிலை என வந்துளது
14. த

முந்தும் பிறப்பறிந்தேன். முற்றும்கயி லேபெற்றேன்.
இந்தவரம் தந்ததுகாண் [1]இனிக்கும்பிர யாகைநதி.
கண்டா யடாஅரக்கா! கனிந்துமா கந்தோறும்
வண்டாடும் பூமலரும் வரிசைபிர யாகைதனில்
தினந்தோறும் வந்துபுனல் செப்பமுட னேயாடி
கனஞ்சேரும் பொன்மலைக்கு கனிவாகப் போவேன்நான்
சீறு முகத்தோய்! நிகழ்குணஞ்சேர் ராட்சதாநீ
பூறுவ சென்மமென்ன புகலுவா யென்னுடனே'
என்றுகாஞ்ச ன-மாலை யினிப்பாக வேகூற
வென்றியுள்ள மாவரக்கன் விளம்புவான்! மன்னவனே
காஞ்சன மாலைதன்னை கனிந்து மிகநோக்கி
[2]சாஞ்சலிக மாகத் தானுரைப்பான். 'பெண்ணேநீ
வேகியாய் நீபிறந்து மேலாம் பதமடைந்தாய்.
சீசீநா னென்னசென்மம்! சிரிப்பாரே கேட்டவர்கள்.
நேசமென் முற்பிறப்பில் நெடியபுகழ் தான்சேரும்
காசி நகரமதில் கலைமுற்றுந் தான்தெளிந்த
வேதப் பிராமணன்றன் [3]விடலை யெனப்பிறந்து
கோதில்லா வேதமுதல் குறையாத ஆகமங்கள்
எல்லாம் படித்திருந்து மினியமதி யில்லாமல்
பொல்லா மதியாலே பொருள்மேலே ஆசைவைத்து
பாங்கிலா [4]னன்முதல் பலபேர்க ளீ[ய்]ந்தாலும்
வாங்கினேன் தானம். [5]வரம்புதப்பி யேநடந்தேன்.
பாவமே செய்ததல்லால் பாவையே! பூமிதனில்
ஓவியமாய்த் தருமம் ஒருபோது செய்யவில்லை.
காசியிலே பாவங் கடுகளவு செய்தாலும்
[6]மாசி படரும் மலைபோலே யேபடரும்.
வரிசையுள்ள அத்தலத்தில் மாண்டுபோ ன-பேர்கள்
பரமசிவ ரூபமெனப் பரகதியைச் சேர்வாரே.

---

1. [யி] உச்சரிப்பு
2. சாஞ்சலியம்; மனம்நிலையாது தவிந்து
3. மகன்
4. [யி] உச்சரிப்பு 'ய்' உடம்படு மெய் யும் ஆகலாம்
5. அறத்தின் எல்லை
6. மாசி = மேகம்

நான்செய்த பாவவினை நல்லதொரு காசினியில்
தான்மடிந்துந் தீராமல் தாரணியி லேமீண்டு
பாவத்தினு லேகரும் பருந்துபோல் [1]ரண்டுவிசை
மேவிப் பிறந்தேன். வேங்கைப் புலிபோலே
மூன்று பிறப்பு மூர்க்கமுட னேபிறந்தேன்.

[2]கான்றும்விஷப் பாம்பெனவே கருதியே [3]ரண்டுபிறப்பு
நன்றிகெட்ட கூகையைப்போல் நாடி யொருபிறப்பு
பன்றிப் பிறப்பாய் பாங்குடன்ரண் டு-பிறப்பு
செப்பமுட னேயெலியாய் சிறந்தபத் துப்பிறப்பு.
இப்படிநான் மண்ணி லெடுத்தேன் பலபிறப்பு.

இந்தவித மாய்ப்பிறந்து யினைத்ததே யல்லாமல்
மூந்த மடிந்ததலம் முத்தி விசேசமதால்
எண்ணைக் கொடுநரகை யேந்திழையே யெ[4]ன்தனிரு
கண்ணு லுங் கண்டறியேன். கடைசிப் பிறப்பிலிந்த
இமைய மலைச்சார்பி லிசையில்லா ராட்சதன்போல்

அமையுங் கொடுமையுடன் அன்னமே! பன்னிரண்டு
ஆயிர மாண்டு[5] அ[6]றிவுகெட்டு நானசந்து
காயும் பசியுடனே காட்டிலலைந் தே[7]னிப்போ [ம்]
உன்[8]தன் திருமுகத்தை ஓவியமாய்க் கண்டவுடன்
எ[9]ன்தன் வினையொழிந்தேன். இனிப்பெருமை பெற்றேனுன்.

அன்னமே தாயே! அடியேன்நா னீடேற
வன்னத் திருமகளே! மனதிரங்க வேணு''மென்று
அங்கேநின்ற ராட்சதனும் அன்பாயப் பணிந்தேத்தி
மங்கைகாஞ்ச ன -மாலை வாய்திறந்து சொல்லிடுவாள்:
" சங்குசக்க ரந்தரித்த தாமோ தரன்தனையே

இங்கிதமா கத்தொழுது [10]இனியபிர யாகைதனில்

---

1. இரண்டு; உச்சரிப்பு
2. கக்கும்
3. இரண்டு; ரண்டு-நிரை
4. [ந்]
5. குற்றியலுகரம் கெடவில்லை உடம்படு மெய்யும் இல்லை
6. [தி]
7. இப்போது
8. ஷ-ட
9. ஷ-ட
10. [யி]

அளவில்லா மாகஸ்நானம் அன்புடனே மூழ்குகின்றேன்.
வளமையில்லா ராட்சதனே! வரிசையுட னேஅதிலே
ஒருமாக ஸ்நானபல னுனக்குத்தரு வே"னென்று
திருவாய் மலர்ந்தருளிச் சீலியீரத் தைப்பிழிந்து
515. "இந்தாவொரு மாகபல னினிப்பாகத் தந்தே"[1]னென்று
கொந்தார் மலர்க்குழலாள் குறித்துநீர் வார்த்தனளே.
அப்பொழுது மா[2]யரக்கன் அங்கையினு லேந்திநின்றான்.
செப்பமுடன் கோலஞ் சிறப்பாக வேமாறி
[3]ஈசன்விழி காணு தினியசெழுங் காமனைப்போல்
520. நேச முடனின்று நேரிழையைக் கொண்டாடி
'உன்னுலே நான்பிழைத்தே னுத்தமியே! லட்சுமியே!
பொன்னுன தாயே! பூரணியே! யென்னையுந்தான்
காக்கும் படியாகக் கருத்திரங்கிச் செம்பவள
வாக்குத் திறந்தெனக்கோர் மதிசொல்வாய் மாமயிலே!'
525. என்றிவனு மேகேட்க. [4]இனியகாஞ் சனமாலை
அன்றரக்க னைப்பார்த்து அதிசயப்பட் டேகூ[5]றுவாள்:
'ஒவியமாய் மண்ணுலகி லுதித்ததொரு மானிடர்கள்
தேவர்பதி சேரவென்று சிந்தையவர்க் குண்டானுல்
நன்னீதி [6]ஞாயமொடு நல்ல தருமமொடு
530. [7]தன்னீதி சேராமல் சதிகேடு செய்யாமல்
கொலைகளவு கள்காமங் குருங்ங் தனைகள்தனை
மலை[8]வன்றிச் செய்யாமல் [9]மகிட்சியுடன் நாள்தோறும்
கற்றுணர்ந்தோ ரைக்காத்து(க்) [10]காதல் தனைநீக்கி
உற்றவர்க்கும் யாவருக்கும் உபகாரந் தான்பேசி

---

1. 'தெ' என்றும் படிக்கலாம்
2. 'ய்' உடம்படுமெய்
3. சிவன் எதிர்வராத காமன் போல்
4. [யி] ய் உடம்படுமெய்யுமாம்
5. [i] உச்சரிப்பு
6. நியாயம்
7. தன்னலமான முறையாம்; அநீதி
8. இன்றி
9. மகிழ்ச்சி
10. காமம்

535. தன்னுயிர்போல் மன்னுயிரை தளம்பாம லேகாத்து
சொன்னமொழி தப்பாமல் சுகமாய் நடந்தவர்கள்
கற்பகஞ்சூழ் நன்னாடு கனக்கவே பெற்றிடுவார்.
பொற்புடனே [1]சொன்னமென்று பூவைசொல்லும் நேரமதில்
இந்திரவி மானமொன்று எண்டிசையு மேயிலங்க
540. விந்தையுட னங்கே விரைந்துமிக வந்ததுவே.
வந்தமலர்த் தேரேறி வரிசையுள்ள ராட்சதனும்
சுந்தரஞ்சேர் விண்ணவர்கள் சூழும்பதி தானடைந்தான்.
காஞ்சன மாலையுமோ களிகூர்ந்து [2]இன்பமுடன்
வாஞ்சையுள்ள பெண்களொடு மாகயிலா சமடைந்து
545. பரமேசு பரன்புணரும் பரிவான பார்[3]வதிக்கு
வரிசையுள்ள தோழியென மகிழ்ந்து [4]இருந்தனளே. 546

[இருபத்தாரும் அத்தியாயம் முற்றும்.]

(மூன்றுவது அத்தியாயம் முற்றும்)

---

1. சொன்னேம்-உச்சரிப்பு
2. [யி] ய் உடம்படு மெய்யுமாம்
3. [ப]
4. ஷ-2

[இருபத்தேழாவது அத்தியாயம்]

நான்காம் அத்தியாயம்

காந்திருவப் பெண்கள் கதை

விருத்தம்(1)

இக்கதைமு னருச்சுனன்கேட் டுளமகிழ
மாமுனிவ னிசைத்த தாகும்
செக்கரொளி மணிமாலைத் தேர்வேந்தே
மாகமதித் திறத்தை யோதும்
மிக்க(க)தை வேரொன்றியா னறைந்திடுவ
னதுதன்னை விரும்பிக் கேளென்
றுக்கவினை மாதவத்து வதிட்டமுனி
திலீப(னை)ப்பார்த் துரைக்க லுற்றான்.[2]

நடை

5. "கார்த்திய வீரன் கனிந்திக் கதைகேட்டு
நேர்த்தி யெனவே நிரம்ப மனமகிழ
தெத்தாத் திரையர் சிறப்பாகச் சொல்கதையில்
வித்தார மாக விளம்புகிறே மின்னமொன்று.
ஆங்கேநீ கேளு"மென்று [4]அதிய திலீபதிக்கு
10. பாங்காக வேவதிட்டன் பகருவா னேர்கதைதான்:
"பலபல வேள்விசெய்யில் பாங்கான தன்மஞ்செய்யில்
நிலையின்ற வேதங்களை நிரம்பவே யோ[4]திகினும்
பஞ்ச[5]விடையங்களைப் பாங்காக வேயடக்கி
அஞ்சுபஞ் சாக்கினியி லதியதவஞ் செய்தாலும்
15. ஆதி சிவன்முதலாய் அழகான தேவதையை
நீதியுடன் பூசை நிரம்பவே செய்தாலும்

---

1. [உளற்குள]
2. 4 காய்+மா+தேமா எனவரும் அறுசீர் விருத்தம்
3. அதிக
4. து
5. விடையம் = விஷயம் = ஐம்புலன்

[1]தாட்சியன்றி யேயோக சாதனையைச் செய்தாலும்
[2]மாட்சி யுடையதொரு மாகஸ்நா னம்பலம்போல்
ஒன்றுங் கொடாது. உத்தமனே கேளெனவே
நன்றியுடன் சொல்லி நவிலுவார் பின்னுலும்.
''நன்னயமாய் முற்காலம் நடந்தகதை யொன்றுண்டு,
வன்னமுடன் சொல்லுகிறேன். மாவேந்தா! நீ கேளும்.
[3]வாந்தகம தாக வளர்கின்ற மண்ணுலகில்
[4]காந்துரு தேசமென்று காவலா யோர்பதிகாண்.
அந்தப் பதிக்கு அரசாக வேயிருக்கும்
விந்தையுள்ள மன்னர்தனில் மிக்கசுமு கன்[5]வயிற்றில்
பிரமோகி யென்றுசொல்லிப் போரான பெண்ணொருத்தி-
[6]நறவுசேர் மலர்மார்பா! நற்சுர வே. தி- யென்பான்
நன்றி யுடன்பெற்ற நல்லதொரு சுற்சுரை
என்றொரு பெண்ணையா - [7]இனியசந்[8]திர காந்தனெனும்
மன்னவ னீன்ற மகளாஞ் சுதாரையென்று
அன்னநடை மாதொருத்தி -அழகுசுப்[9]பிர [தீ]பனென்று
வேந்த னொருவன் மிகத்தவத்தா லேயின்ற
[10]ஏந்துமுலைச் சுப்பிரபை யென்றுஒரு மங்கைநல்லாள்-
சீலனென்று ஓர்வேந்தன் சிறப்பாகப் பெற்றெடுத்த
சீலியாளி யென்றுசொல்லுஞ் சிங்காரப் பெண்ணொருத்தி-
[11]இந்தஞ்சு வேந்தர்கள்தா [12]னிட்டமுட னேயின்ற
விந்தைசெ[13]றி காந்துருவ் மின்னேர்க ளேவர்கண்டாய்.
அஞ்சுநல்ல பெண்களுந்தான் அழகிலேயும் புத்தியிலும்
மிஞ்சியோ ரிந்தநல்ல [14]மின்னேர்க் கிணையானேர்
இவ்வுலகி லுங்கிடையா தெங்குங் கிடையாது.
செவ்விய மான்போல சேர்க்கை பிரியாமல்

---

1. [தாச்சி]
2. [மாச்சி]
3. பாந்தகம்
4. காந்தாரம்
5. [வயத்தில்]
6. [நறு]
7. [பி]
8. 'தீ' ஒலியாதுபோலும்
9. 'பி' ஒலியாதுபோலும்
10. [யே] ய் உடம்படுமெய்யுமாம்
11. இந்த + அஞ்சு
12. இஷ்ட்ட
13. [றி]
14. [மின்னுக் கிணையானேர்]

கூடிவிளை யாடிடுவார். கூடவிருந் துண்டிடுவார்.
ஆடுவார் பந்து. அலங்கரிப்பார் பொற்[1]பணிதி.
மந்திரத்தி லும்வீணை வாசிக்கும் விந்தையிலும்
சுந்திரத்தி லுஞ்சரியாய் [2]சோடாய் வளர்வாரே.
ஆதித் திருமகள்போல் அனங்கன் ரதிபோல
தீதில்லா மன்னுகேள்! செய்ய திலோத் [3]தமைபோல்
இந்திரையைப் போல வினியகுண மேனகைபோல்
இந்தஅஞ்சு பெண்களுக்கு மிந்தவஞ்சு [3]பரிணையாம்.
பாங்காக [4]இம்மடவார் பரிவாய் வளர்நாளில்
ஆங்கேவே னி[5]ற்கால ம[6]டவாக வந்ததுவே.
வேனிற்கா லம்வரவே மின்னு ரைந்துபேரும்
[7][தேனிக்குஞ்]சூழும் செழுங்குபேர பட்டணத்தின்
அருகா(ண்)மை யாகவளர் அழகுமலர் பூங்காவில்
திருவார் முலைமாதர் [8]சேர்க்கையுடன் பூவெடுத்து
[9]அச்சோத வாவிதனில் அழகாக நீராடி
கச்சார் முலைமடவார் கரையில் மணல்[10]பரத்தி
திங்கள்தனைத் தான்முடித்த சிவனிடப்பா கத்துமையை
அங்கெழுதி(க்) கையால் அருச்சினைசெய் தேதொழுது
சந்தனம்பன் னீர்புனுகு சாத்தி[11]வெள் ளிலைபடைத்து
[12]அந்தமுடன் கைதொழுது ஆடிப்பா டிப்போவார்.
இப்படியே நாள்தோறும் இமையமயி லக்கனிந்து
செப்பமுடன் பூசைசெய்து [13]சிங்கார மாய்ப்போவார்.
மன்னு! வொருநாளில் மங்கையிந்த ஐவருந்தான்
மின்னு ரிடைதுவள மெல்லியபூங் கொம்பெனவே
அன்ன மெனநடந்து அச்சோத வாவிதனில்
வன்ன முடன்குளித்து மகிழ்ந்துவிளை யாட[14]யிலே,

---

1. பணிதி = ஆபரணம்
2. இணையாய்
3. [ற்றி]
4. [யி]
5. [க்] உச்சரிப்பு
6. டை
7. தேனிற்கும் சூழல்?
8. கூட்டுறவுடன்
9. வாவியின் பெயர்
10. பரப்பி
11. வெற்றிலை
12. அழகுடன்
13. அழகாக
14. டை; உச்சரிப்பு

வேதநிதி யென்று சொல்லு மிக்கமறை யோன்களிந்து
போதமுடன் பெற்றெடுத்த புத்திரனும் அக்கினிபன்
அந்தவா விக்கரையி லனுட்டானஞ் செய்வதற்கு
வந்தனன்காண்; வந்தவனை மங்கையர்கள் கண்ணுலே
கண்டார்; மனங்கனிந்தார்; காமனோ? சந்திரனோ?
வண்டாடுங் [1]கற்பகஞ்சூழ் வானவர்கள் போற்றுகின்ற
சுந்தரஞ்சேர் வேலவரோ? தோகையே பாரு'மென்று
மந்தரஞ்சேர் கும்பமுலை மங்கையர்கள் தான்வாடி
அடர்ந்தவேல் கண்வலையா லக்கினிபன் தன்னழகை(த்)
[2]துடர்ந்துவீ சிப்பிடித்துச் சோர்ந்து பரதவித்து
ஆசையெனும் வண்டால் [3]அழகான பூந்தேனை
நேசமென வுண்டு நெடுமூச்சுத் தானெ[4]றிந்து
'பரம சிவனுடைய பங்கிருக்கும் தேவிதனை
வரிசையுடன் பூசைசெய்யு மருத்துவத்தா லே[5]நாமள்
மன்மதன்போ லேயழகும் வயசுமிவ னேப்போல
நன்மையுடன் கண்டதில்லை; நற்பலனுல் கண்டோங்காண்.[6]
[x]பூவுலகில் [7]நாமிவனைப் புண[8]ராமல் விட்டாலே
பாவிகளு[9]நாமளய்யோ! பாங்காய்ப் பிழைப்பதில்லை.
காமனைப்போல் வந்தவனைக் கண்டுநாம்விட்டு விட்டால்
காமனென்ன? கெட்டோம்! நாரியரே! பாரு'மென்று
[10]ஒன்றுக்கொன்று பேசி யுகந்திவனைத் தான்பிடிக்க
அன்றிந்த மாதர்கள்தா னுசையுட னேவகூந்தார்.
அக்கினி பகனிந்த ஆயிழையார் தன்கருத்தை
இக்கெனவே தானறிந்து சிவன்செயலென் றேயறிந்து
அன்பான வேதமெல்லா மறிந்துகற்ற அக்கினிபன்
பொன்போல நின்றுமங்கே புத்தி[11]கு புத்திசொல்வான்;
'மனமே மயங்காதே! மாதவத்தை நீக்காதே.

---

1. கற்பகச்சோலை சூழ்ந்த வானுலகில் வாழ்கின்ற தேவர்கள்
2. தொ
3. அவனுடைய அழகு என்னும் தேன்
4. [ரி]
5. நாம்
6. இதன்பின் 241 ஆம் ஏடு இல்லை
x மற்றேர் பிரதியில் கண்டது?
7. [னு]
8. [ரு]
9. நாங்கள்
10. ஒன்று நீலயசையாம்;
11. [த்] தன் மனத்திற்கு

ஏறக்குறைய 40 வரிகள் மறைந்தன; வேறு ஏட்டிலிருந்து எழுதியுள்ளோம்

சினமீறுங் கண்மடவார் தீவினையை [1]நத்தாதே.
மாதருட ஆசை வலையென்ற கண்ணியிலே
போத[2]மு ழையாதே. பூண்டுசிக்கி மாயாதே.
சங்கரனும் வேதாவுஞ் சங்குசக்[3]கர மாயவனும்
பங்கமில்லாத் தேவர்களும் பைந்தொடியார் [4]ஆசைதனில்
[5]விழுந்தா ரசந்துழன்று மெய்த்தவமும் பாழாகி
[6]யிழந்தார் மதிதனையு மீடேற மாட்டார்காண்.
[7]எந்த முனிவர்களு மெப்பெரிய நாதர்களும
சந்[8]திர வதனமின்னர் தன்னுசை தள்ளரிது.
பெண்ணுசை யாலே பிரமன் [9]தலையிழந்தான்.
தண்ணரு மிந்திரனுஞ் சரீரமெல்லாங் [10]கண்ணுளனன்.
[11]ஆனதி னாலே யனேகபேர் பெண்ணாலே
மான மிழந்து மதிகெட்டுப் போனார்கள்.
செல்வந் தனைக்கெடுக்குஞ் சிறப்பை மிகக்கெடுக்கும்.
கல்வி தனைக்கெடுக்குங் கனத்தை மிகக்கெடுக்கும்.
அறிவை மிகக்கெடுக்கு மானகுலத் தைக்கெடுக்கும்.
நிறையைக் கெடுக்கு நெடியதவத் தைக்கெடுக்கும்.
மலர்பெரிய கும்பமுலை மங்கையர்கள் பாழாசை
வலையிலகப் பட்டோர் மனந்தெளியா' ரென்றுசொல்லி
தன்மனத்தைத் [12]தேற்றித் தனியான அக்கினிபன்
மின்மயக்கம் போலொளித்து மெல்லியர்கை சிக்காமல்
ஓடியவன் போனன். உற்றதொரு பெண்களுந்தான்
தேடியவ னைப்பார்த்துத் தியங்கியே காணுமல்
திரவியமில் லாதவர்கள் திரவியத்தைக் கண்டெடுத்து
திரவியத்தைக் காணுத [13]செய்கைபோ லேமயங்கி

---

1. நச்சாதே
2. நுழையாதே
3. சி ஒலியாது
4. [யு]
5. விழுந்தானல்
6. தேற்றம்பற்றி இறந்த காலம்
7. [யே]
8. தி ஒலியாது
9. தான் பெற்ற பெண்ணும் தீலோத் தமை பிற்சென்றதற்காகச் சிவனால் தலை இழந்தான்
10. அகனிகை கதை
11. [ஆனது தாலே] இந்தப் பிரதி மிகப் பிழைபட்ட பிரதி நன; ர ற மாருட் டம் பெரிது. எல்லாவற்றையும் நாம் காட்டவில்லே
12. தேற்றி
13. உவமை நயம்

உலைவாய் மெழுகதுபோ லுடைந்துமன துள்ளுருகி
சிலையார் நுதல்மடவார் தியங்கிநின்று சொல்லிடுவார்:
"அய்யோ! பிராமணனே! யாசைகொண்டு வன்மீதில்
மெய்யாகச் சேர விரும்பியே வந்தவற்கு[x]
125. மின்வெட்டி [1]யார்த்ததுபோல் மிகவொளித்து நீபோனாய்!
தன்மமில்லாப் பாவி சதிபண்ணிப் போயின[2]யே.
வள்ளமுலைப் பெண்கள் வலியவே யாசைகொண்டால்
தள்ளுவரோ ஆண்பிறந்தார்? தள்ளினால் பாவ[3]மல்லோ?
காமுகரா ன-பேர்கள் கன்னியரைக் கண்டாலே
130. தாமயங்கிக் கெஞ்சி தவிக்கவல்லோ ஞாயமிது!
அன்பாக வேவிரும்பி அணையவே நாங்கள்வந்தால்
பொன்போல நீயொளித்துப் போவதுதான் காரியமோ?
பாங்கான விஞ்சையில் பரவையரா கப்பிறந்தும்
நாங்க ளுனைவிரும்பி நற்புடனே வந்தோமே.
135. எங்கள் தனைவிரும்பி யின்பஞ் [4]சுகியாமல்
[5]பங்கமென வேயொளித்துப் பாவிநீ போவாயோ?
அம்பு வியிலுன்னை ஆணுக வேபிரமன்
நம்பிப் படைக்[6]கயிலே நல்லகருங் கல்லாக
மனதைப் படைத்தானோ? மாயமா கப்போனாய்.
140. உனதழகு போலொருவ ருண்டோ யடாபாவி!
ஆசை யுடனிந்த அச்சோத வாவிதனில்
நேசமுட னீவரவும் நெடியதவ மென்னசெய்தோம்!
இன்னமிந்த வாவிதனி லி[7]ட்டமுட னீவரவே
வன்னமுட னென்னதவம் வாகுடனே நாங்கள்செய்வோம்?
145. என்றுவிந்தப் பெண்களுந்தா [8]னெண்ணுது மெண்ணிமிக
நின்றுகண் ணீர்சோர நி[9]னவழிந்து அக்கினிபன்
தன்னைச்கா ணுமல் [10]தட்டழிந்த மான்போல

---

1. மின்வெட்டென விரைந்து தோன்றி மறைந்தது போல என்ற பொருளில் வந்துளது
2. னோ-உச்சரிப்பு
3. அல்லவா?
4. சுகம் அனுபவியாமல்
5. தவறு என்றுகருதி
6. கை உச்சரிப்பு
7. [ஒட்ட]
8. என்னுதலும்
9. னோ
10. தீகைத்த; நீலகேட்ட

அன்ன நடைமாத [1]ரசந்து வுடல்மெலிந்து
நாமள்செய்த புண்ணியத்தால் நாலையுமிந் த[2]-இடத்தில்
மாமறையோன் பிள்ளை வருவா னணை[3]வோமென்று
மனதைத் திடப்படுத்தி மங்கையர்க ளைவருந்தான்
நினைத்து[4]ப்பெரு மூச்சுவிட்டு நெடுநேர மிங்குநின்றுல்
தாய்மார் [5]சலிப்பரென்று [6]சலிப்பாக வேயவர்கள்
போய்மா ளிகைபுகுந்தார் பொழுது மடைந்ததுவே.
[7]மாலைப் பொழுதாகி [8]மம்மலாக [9]யிருட்ட.
பாலி[10]யொத்த சொல்லார் பைந்தொடியா ரைவருந்தான்
உண்ணுவது மின்றி யுறங்கமுமில் லாமலையோ!
வண்ணமுட னேவளர்த்த [11]வரிசைகளிப் பிள்ளைக்கு
பாலுங் [12]கொடாமல் பஞ்சபா ணத்தாலே
மாலு[13]றவே முத்துவட மாலைபொரிந் தேகருகப்
பஞ்சணைதி யாயெரியப் பாரமுலை மீதிலேதான்
[14]அஞ்சனக்கண் ணீரொழுக அழகுமுகந் தான்வாட
[15]கடலுங் கொடுமைசெய்யக் கலைமதியுந் தீங்குசெய்ய
மடல்விரிபூஞ் சோலையிலே வந்துகுயில் தான்கூவ
இந்தவித மய்யோ [16]இனிதான [17]ராமுழுதும்
வெந்து [18]மதத்தியால் மேலெல்லாங் கன்றிமெத்த
[19]எப்போ விடியுமென விக்கொடுமைக் காற்றுமல்
செப்பார் முலையார் தியங்குகின்ற வேளைதன்னில்
'வந்தான் [20]கதிரெனவே [21]வான்கோழி தான்கூவ

---

1. அயர்ந்து
2. [யி]
3. 'வொ' என்றும் படிக்கலாம் உச்சரிப்பு
4. 'ப்' ஒலிப்பதில்லைபோலும்
5. வெறுப்பர்
6. சோர்வாக
7. பொழுது அடங்கிற்று என்பதுபோல-ஆம்; பொழுது=சூரியன் அடைந்தது=தன் இடமாம் அஸ்தமன மலைக்கும் போய்ச் சேர்ந்தது என்றுமாம். அல்லது, பொழுது=மாலைப் பொழுது வந்தது என்றுமாம்
8. அந்தீநேரம் அல்லது மயக்கமாக
9. 'ய்' உடம்படுமெய்-உச்சரிப்பு
10. (யொற்ற)
11. தகுதியுள்ள அல்லது தங்களால் பராட்டுப்பெறும்
12. [கு]-உச்சரிப்பு
13. [ர]
14. மை
15. காமங் கொண்டவருக்குக் கடல் ஒலியும் சந்திர ஒளியும் குயில் பாட்டும் துன்பம் தரும் என்பது கவி மரபு
16. [மி] அய்யோம் என்ற உச்சரிப்பே?
17. இர-உச்சரிப்பு.
18. காமக்கீ
19. எப்போது
20. சூரியன்
21. கீறந்த; வான்கோழியுமாம்

170. [1]இந்தார் நுதல்மடவார் [2]ஏழுந்துஅதி சீக்[3]கிரமாய்
வானவர்கள் கொண்டாடு மச்சோத வாவிதனில்
மானினிய கண்ணூர் [4]மகிட்சியுட னீராடி
இங்கிதம தாக [5]இனியந[6]றும் பூவனத்தில்
பொங்கமுடன் பூவெடுத்துப் புகலுமணல் மேட்டில்வந்து
175. அங்கே மணல்பரப்பி வழகுசேருங் கையாலே
சிங்கார மாகத் தேவிதனே யேவகுத்து
வாச முடைய மலர்கள்தனே யேசாத்திப்
பூசை மிகச்செய்து பூசைமுன்னே நின்றுமெத்த
வாயாலே தோத்திரங்கள் வரிசையுட னேபாடி.
180. சேயார் மயில்போல் திருநடஞ்செய் தேகனிந்து
'தாயே! பரசாபரையே! சங்கரியே! லட்சுமியே!
ஆயே! சிவன்பாகத் தன்னமே! யம்மணியே!
மலையரசன் பெற்றெடுத்த மானே! மரகதமே!
கலைபயிலும் பூரணியே! கருணைவள ருத்தமியே!
180. உன்னையே நாங்க ளுகந்துபூ சித்தபலன்
அன்னையே! [7]நேத்து அச்சோத வாவிதனில்
[8]வாலமத னைப்போல் வந்துநின்ற வேதியனை
சிலமுட னேபுணரத் தேவிகரு ணைசெய்வாய்.'
என்று [9]இவர்சொல்லி [10]யினிந்துதொழும் வேளையிலே
190. வென்றியுள்ள வேதநிதி விரும்பியே பெற்றெடுத்த
அக்கினிப ஞனேன் அச்சோத வாவிதனில்
மிக்கவினை சூழுகின்ற [11]விணையந் தெரியால்
[12]சந்திபண்ண வேண்டி தனியே யவனடந்து
வந்துபுன லி-லிறங்கி மகிட்சியுட னேயவனும்

---

1. இந்து=(எட்டாம் பிறைச்) சந்திரன், ஆர்=போன்ற, நுதல்=நெற்றி
2. [யெ] உச்சரிப்பு
3. உச்சரிப்பு
4. மகிழ்ச்சி
5 [யி] உச்சரிப்பு; ய் உடம்படு மெய்யு மாம்
6. [து]
7. நேற்று-உச்சரிப்பு
8. பாலனும் மன்மதன்
9. [யி]
10. இவிது; இடையே மெல்லெழுத்து வந்தது
11. சூழ்ச்சி
12. சந்தியாவந்தனம்

195. காலைக் கருமமய்யோ கருத்துடனே செய்போது
நீலக் கருங்குழலார் [1]நேசமெனக் கண்டாரே.
'நேற்றெருளித்துப் போன நெடியமறை யோன்பாலன்
[2]பார்த்தீர்களோ வந்[3]தானிந்தப் பரமேசு [4]வரிதனை நாம்
பூசைசெய்த புண்ணியந்தான் போனவினை யேதிரும்ப
200. நேசமுடன் கூட்டிவந்து நெஞ்சமுன்னே விட்டதுதான்.
அன்றுபோ லின்னமிவன் அங்கொளித்துப் போகாமல்
இன்றுபத்தி ர-மாக யெல்லவரு மேகூடி
பாங்காக வேயிவர்கள் பையநட்ந் தேவனைந்து
ஆங்கே மிகப்பிடித்தா ரன்னோர் வித்தியாலே.
205. அப்பொழுது [5]வக்கினிப னைவர்கள் தனைப்பா(ர்)த்து
''செப்பமுட னென்னையுமே தீண்டவேண் டா''மெனவே
வேதநிதி பாலகனும் மிக[6]வேகின்று சொல்லிடவே
மாதர்களு மந்த மறையோனைப் பார்த்துரைப்பார்:
'ஏங்காணும் வேதியனே யிச்சைகொண்டு [7]போதரவாய்ப்
210. [8]பாங்காக நேற்றுவந்தோம் பாவி நீயோடிவிட்டாய்.
[9]எப்போவரு வீரெனவே யிங்கு[10]வழி கட்டிநின்றோம்.
இப்போது வந்தீர்காண். இனி[11]நாங்க ளும்மையுந்தான்
[12]வடியுடனே யேபுணர்ந்து [13]மாலாசை தீராமல்
விடுவதில்லை' யென்று[14]விந்த [15]மெல்லிநல்லார் சொன்னார்கள்.
215. [16]வல்லடர்ந்த பொன்முலையார் வார்த்தையைக்கேட் டக்கினிபன்
மெல்லச் சிரித்து விளம்புவா னேயியமாய்:
''ஏனிந்தப் புத்திகள்தா னிப்படிச்செய் வாருமுண்டோ?
நான்பிரமசாரி [17]நமக்காகா திந்தமொழி

---

1. தகுதி
2. [பார்த்தியளோ] உச்சரிப்பு
3. தா-முழுநெடிலாய் ஒலியாதுபோலும்
4. [ப]
5. 'வ்' உடம்படுமெய்
6. 'வே' நெடிலாய் ஒலியாது போலும் அல்லது 'று' அலகு பெறுதுபோம்
7. பேணி; உபசாரமாய்; ஆதரவாய்
8. பட்சம்
9. எப்போது உச்சரிப்பு
10. வழிகட்டி = வழிமறித்து
11. 'நாமள்' என வந்த வடிவம் இங்கே நாங்கள்' என்றே உளது
12. உடல், உள்ளத்தாலன்றி உடலாலும்
13. காம ஆசை
14. 'வ்' உடம்படுமெய்
15. மெல்லியல்
16. வல் = சொக்கட்டான் காய்
17. தன் னுயர்வினைக் காட்ட 'நமக்கு' என் கிறுள்

என்னைவிடு" மென்றுசொல்லி யிந்தமறை யோன்கூற
அன்ன நடைமாத ரன்புடனே சொல்லிடுவார்:
"நல்லது நல்லதுகாண் நல்ல மொழியுரைத்தீர்
வல்லவரே யுன்னுசை [1]மட்டுமிதந் தானில்லையே.
அப்படியே தானுங்க ளாசைகொண்டு தானிருக்கில்
இப்படிநீ சொன்ன லினிவிடோங் கண்டீரே.
எங்களா சைதீர [2]பட்டமுட னேநீர்தான்
கொங்கையா ர-மருவிக் கூடுரே யாமாகில்
பெண்பாவம் பொல்லாது. பேரான வேதியரே!
[3]தண்மேவும் பூங்காடன் சமரை விலக்கு"மென்று
மங்கையர்கள் சொல்லிடவே மானமுள்ள வக்கினிபன்
பொங்கமென வாய்திறந்து புனிதமுட னேசொல்லுவான்:
'நான்பிரம சாரி நன்சொல்லைத் [4]தட்டிவிட்டீர்
ஆனு லொருசொல் அ[5]டவாகக் கேட்[6]டிடுரோ
[7]எங்கள் மனைசென்று [8]யெந்தகப்பன் தாயிடத்தில்
பொங்க முடன்சொல்லிப் பூவையரே [9]வாரேனென்.'
[10]என்றக் கினிபன் [11]இந்தமொழி சொல்லிடவே
[12]குன்றெழுந்த கொங்கைக் கோதையர்கள் கூறிடுவார்:-
'நல்லது நல்ல'தென நகைத்துமலர் வாய்திறந்து
'சொல்லுகலை வேதியாநீ சொன்னவகை [13]யென்னுச்சு!
கையி லகப்பட்ட கனக நவமணியை
[14]மையின் கடல்நடுவே மனதறிய வேபோட்டு
தேடுவா ருண்டோதான்? தேடினு மு-மாமோ?

---

1. மட்டுமதியம் எங்களாசைக்குச் சரியளவு
2. [ஷ்ட்ட]
3. குளிர்ச்சி பொருந்திய பூஅம்புகொண்ட மன்மதனது போரை
4. கெடுத்துவிட்டீர்
5. மடை; அடைவுமுறை
6. [லீ]
7. [மொ] உச்சரிப்பு 'ய்' உடம்படு மெய்யும் ஆகலாம்
8. ஷ எங்கள் என்பதற்கு ஏற்ப எம் தகப்பன் எனல் காண்க; என் என்றும் இருக்கலாம்
9. வருகிறேன் நான்
10. ஷ-7
11. [யி] உச்சரிப்பு
12. உயர்வு நவிற்சி
13. என் ஆயது; நீ சொல்வதன் பொருள் என்ன ஆயிற்றுத் தெரியுமா? அவள் திரும்பி வாரான் எனக் கருதுகின்றவர்
14. மைபோன்ற

[1]மோடியென பண்ணுகிறீர்! முற்றுந் தவத்திலேதான்
இருக்கும் பெரியோர்கள் இந்தச்சுகத் தைவேண்டி
மருக்குலவு சோலிதனில் மாதவசு பண்ணுகி[2]ரூர்.
நாங்களுன்மே லாசைகொண்டு நல்லவா[3]ர்த் தைபேச
பாங்குடன்நீ தள்ளுவது பாவங்காண்! ஞாயமில்லை.
பொங்கமுட னேகோடி புண்ணியங்கள் செய்தாலும்
[4]எங்கள்தனை யேமருவ [5]எவர்க்குங் கிடைப்பாதே.
தேவரொடு [6]இயக்கர் சி[7]றந்ததவ யோகி[8]களும்
மூவர்களும் பெண்ணைச முற்றும் வெறுத்தாரோ?
வலியவே யாசைகொண்டு மங்கையர்கள் வந்தாலே
மெலிவாக ஆண்[9]பிகா[10]யள் வேண்டா மெனவேதான்
சொல்லுவது ஞாயமல்ல [ச்] சொன்னலும் பாவம்வரும்.
நல்லதல்ல; ஆசைகொண்டு [11]நத்தியெவர் வந்தாலும்
தான[12]ணந்து மேவுவது தருமங்காண் அல்லவென்றுல்
ஈனமெனப் பூமிதனி லிழிகுலத்த ராய்ப்பிறந்து
வாடுவா ரென்று மறைநான்குஞ் [13]சொல்லு'தென்று
ஆடியவேல் கண்ணுர்க ளழகுமனு நீதிமுறை
தன்னுடனே சா[14]த்திரங்கள் தான்சொல்லு தென்றுமிவர்
நன்னயமாகச் சொல்லிடினும் நான்மறையோன் பாலகனும்
மனது பொருந்தாமல் மனம்வேரூய் நிற்கிறதை
[15]இனிமொழியார் கண்டு [16]இவனிப் படித்தானும்
இணங்கா னெனவேதா னினியமத வாசையினுல்
மணங்கார் குழல்மடவார் [17]மல்லாடி யேபிடித்து

---

1. மோடி; வேடிக்கைக் காட்சி; பிணக்கும் ஆம்; மோடிபோல என்றேனும் 'என்ன மோடி' என்றேனும் கொள்ளலாம்
2. [தீ]
3. [ர்தை]
4. [யெ]
5. ஷை-4
6. [யி]
7. [ர]
8. [ய]-'க' மொழிக்கிடையில் 'ய' என்று வருகிறது
9. பின்னு-இடைக்குறை; பாட்டில் உச்சரிப்புக் காண்க
10. ஷை-8
11. விரும்பி; நச்சி
12. [ணை]
13. சொல்லுகிறது
14. [சாஸ்த்திரங்கள்]
15. இவிய
16. [யி]
17. போராடி; கட்டாயப்படுத்தி

265. வலிதாய் [1]விழுத்தாட்டி மண்மீதி லேகிடத்தி
வலிதாக வேயமுக்கி மாறிமாறி ஐவருந்தான்
பண்ணுத [2]கோட்டியெல்லாம் பண்ணியவ னீப்புணர்ந்து
தண்ணுர் குழல்மடவார் தானுசை தான்தீர்ந்தார்.
சிலையார் நுதல்மடவார் சீரான வேதியனே
270. வலிய விழுத்தாட்டி மருவினதா லேயவனும்
அங்கவரைப் பார்த்து அலல்போல் விழிசிவந்து
பொங்குபெருங் கோபமுடன் புகலுவான். 'நீகெடுவீர்
இப்படித்தான் செய்வாருண்டோ? எங்குமில்லா ஞாயமுண்டோ?
தப்பிதங்கள் பண்ணிவிட்டீர்! சண்டாள மங்கையரே!
275. உங்களோகா னய்யோ உகந்து விரும்பினேனே?
[3]பங்கமுட னென்னைப் [4]பழுதுபண்ணி விட்டீரே!
[5]கூட மனதுசற்றுங் [6]கூடாமல் நின்றவனை
ஓடிவந்து பேய்களைப்போ லுரமாக மல்லாடி
கெட்ட பசாசுகள்போல் கெடுதொழிலைப் பண்ணினதால்
280. வட்டமுலை மங்கையரே வையகத்தி லேநீங்கள்
பேயாகப் போங்க'ளெனப் பெரியமறை யோன்மகனும்
வாயாலே சாபமிட மங்கையர்கள் தான்பார்த்து
[7]ஏங்காண் பிராமணனே யிப்படிநீ சாபமிட்டால்
பாங்காக வேயுமக்கும் பரிவாக வேயெமக்கும்
285. [8]உள்ளவிதி யாகையினு லுன்னை விரும்புகின்றேரும்!
[9]விள்ளுவதே [10]னில்லாட்டால் விரும்பாது [11]எங்கள்மனம்.
ஆனதினுல் வேதியனே ஆகாத சாப மிட்டீரோய்.
ஏ[12]னதுசொல்? நீயும் [13]எங்களுட னேசரியாய்
ஆண்பேயாய்ப் போ'வெனவே அஞ்சுபெண்க ளுஞ்சீறி

---

1. கீழேதன்னி; விழச்செய்து அலைக் கழித்து
2. துன்பம்
3. தோல்வி; அவமானம்; துன்பம்
4. சிதைவு; குற்றம்
5. புணர
6. பொருந்தாமல்
7. [யே]
8. விதி உள்ளது என்பது உள்ள விதி என வருதல் காண்க
9. இதனை ஏன் புதிர்போல விளக்கிச் சொல்லவேண்டும்; 'இல்லையானால் உன்னை அணைவது ஏன்' என்றும் ஆம்; விள் = ஆலிங்கனம் செய்
10. இல்லாவிட்டால் என்பதன் மரூஉ
11. [யெ]
12. அது = சாபமிட்டது
13. டி 11

290. [1]பூண்பூணும் வேதியனைப் பொல்லாங்கா கச்சபித்தார்.
அஞ்சுபெண்க ளுங்காட்டில் அழகில்லாப் பேயானுர்.
மிஞ்சுமறை வேதியனும் மிக்கஆண் பேயானுன்.
[2]ஆவாறு பேயும் அக்கான கந்தனிலே
[3]சேகரமா க-வோடித் [4]திரிந்ததுவே மன்னவனே!

விருத்தம்(13)

295. ஓடுவர் மறித்திடுவ ரோரொருவர் தம்மில்க்
கூடுவர் பிடிப்பர்வறி தேகுழறி வாயால்
பாடுவர் களிப்பர்அழு வார்பலவி தத்தால்
வாடுவர் சிரிப்பருழல் வார்வனம டங்க.[5]

நடை

இந்தார் நுதலாரு மினிய மறையோனும்
300. [6]கந்தாருங் காட்டில் கடிய பிசாசெனவே
ஓடுவா ரைய்யோ ஒன்றுகையொன் று-பிடித்து
ஆடுவார் கட்டி யழுவார்: கதறிடுவார்;
மல்லுக்கட் டி-விழுவார்; வாயைப் பிளந்துநிற்பார்;
மெல்லுவார்; பல்கடிப்பார்; வெகுளியா கப்[7]பிடிப்பார்;
305. 'அய்யோ' வென்பார் [8]ஆங்கார மிட்டிடுவார்
கையோடு கைபிடித்துக் காட்டில் திரிந்தனரே
இப்படியே யிப்பேய்கள் இந்தவனத் தில்திரிய
செப்பமுட னே[9]யவரைச் சிறப்பாகப் பெற்றவர்கள்
பாங்குடனே யிக்[10]கருமம் படிப்படியா கக்கேட்டு

---

1. பூணூல்
2. ஆ = ஆக அல்லது அவ் ஆறு என்று மாம்
3. கூட்டம் (சேர்)
4. ஒருமை முடிபு காண்க
5. தானன, தனந்நதன தானதன தானு என்ற சந்தம்; கூவிளம் கருவிளங் காய் கூவிளங்காய் தேமா என வரும் கலிவிருத்தம் காய் விளமானுல் பின் சீர் நிறையில் தொடங்கும் அடிக்கு 14-எழுத்துக்கள்
6. பேய்கள் தங்க உள்ளதறி
7. பேசுவார்; பாடுவார்; பிடிப்பார் என்றும் இருக்கலாம்
8. ஊங்காரம் ஊம் எனக் கத்துவது; அதுபோல ஆ எனக் கத்துவதனை ஆங்காரம் என்றனர்போலும்
9. இகரச்சுட்டும் அகரச்சுட்டும் தடுமாறி வருதல் காண்க
10. கருமச்செயல்; நிகழ்ச்சி என்றுமாம்

310. ஆங்கே வ[1]யறெரிந்து அழுது[2]சலித் தேயிருந்தார்;
தாயாரு மற்றவருஞ் சலித்துத் துயர்பெருக
பேயாக ஆ[3]றுபேரும் பிதற்றிப் பரதவித்து
தன்னினைவுந் [4]தோணுமல் தன்மார்க்க மு-ஙறந்து
[5]அன்னெடிய காட்டி லய்யோ வெனவழுது
315 பாங்காய் மனிதர்களைப் பறவை மிருகங்களை
ஆங்கே மிகப்பிடித்து அக்காட்டி லேபொசித்து
வழியில் வருபவரை மண்ணுலுங் கல்லாலும்
வழியிலே நின்றெறிந்து [6]மருட்டிப் பயமுறுத்தி
[7]துட(ர்)ந்து விரட்டுவதுந் துடிச்க[8]த்துடிக் கப்பிடித்து
320. அட[9](ர்)ந்துமிகக் கொல்லுவது [10]மதட்டியே [11]முழிக்கிறதும்-
இப்படிப் பசாசெனவே இந்தஆ[12]று பே[13]ர்களுந்தான்
செப்பமுள்ள பூங்காட்டில் திரிகின்ற நாளையிலே,
பொற்புடைய மாகதிங்கள் பூசநட் [14]சத்திரத்தில்
அற்பு தமதாக வச்சோத வாவிதன்னில்
325. பேராரும் சோமசரும் பெருமையுடன் மாகஸ்நானம்
பூராய மாகப் [15]பொழுதும் யெ[16]ழும்புமுன்னம்
விந்தைசெறி செங்கமலம் விளங்குமச்சோ த-கரையில்
வந்தனர்கா ணிந்தமுனி; வரக்கண்டு அப்பேய்கள்
'இவனைப் பிடித்துநாம லெல்லோரும் [17]திம்ப'மென்று
330. தவமுடைய சோமசனைத் தானே [18]விரட்டிவந்தார்.
இந்தத் தவமுனிவ னினிய மகிமையினுல்

---

1. யி
2. மனம் சோர்ந்து
3. [ற்] உச்சரிப்பு
4. தோன்றுமல்
5. அந்நெடிய
6. மயங்கச்செய்து
7. தெ டர்ந்து
8. வல்லோற்று இல்லாதபோல் கொள்ளப்பெற்றதோ, 'துடி' கூள்போல் கொள்ளப்பெற்றதோ ஆதல் வேண்டும்
9. இடையில் ரகரம் இல்லாமல் வருவது காண்க. உச்சரிப்பு
10. அதட்டி = உரக்க; உறுக்கி
11. விழிக்கிறது; அச்சம்தோன்றல் பார்த்தல்
12. [ரு]
13. [ற்]
14. ச 'சே' என ஒலித்தல் காண்க
15. சூரியன்
16. 'எ' 'யே' என்றே ஒலிக்கப்பெற்றது போலும் எழும் என்பது எழுப்பு என வந்துளது
17. திம்போம் என்பதன் மருஉ வல்லெழுத்தில் 'ஸகரம்' இன மெல்லெழுத்தாகந் தீர்வதனையும் இடையில் வரும் நெடில் குறிலாவதனையும் காண்க
18. வெருட்டி; அச்சுறுத்தி

வந்த பசாசுகள்தான் வரவுமே மாட்டாமல்
நாட்டிய கல்போல நல்முனிபா லண்டாமல்
வாட்ட முடனே வரிசையாய் நின்றதுவே.
இந்தநல்ல வேளைதவி வினிதான ஆண்பேயை
விந்தையுட னேயின்ற வேதநிதி வேதியனும்
அங்குவந்தான். கண்டா னரிய[1]ரோ மேசனைத்தான்.
பொங்கமுடன் பணிந்தான்; போற்றினன் மெத்தமெத்த:
'எங்குருவே! யெந்தேவே! யெம்பிரா னே!சுவாமி!
இங்குவர நானடியேன் [2]என்னதவஞ் செய்தேனே?
பாரினிரு ளேவிலக்கப் பாங்கான சூரியன்முன்
சீருட்னே வந்ததுபோல் தேவரீ ரெந்தனுட[3]
துன்ப மெனுமிருளைத் தூளாக்க வேணுமென்று
இன்ப முடன்வந்தீ ரினிக்கவலை விட்டுவிட்டேன்;
அடியேன் மனத்துயர மய்யனே! சொல்லுகிறேன்.
வ்டிவுடனே யேகேட்டு மனதிரங்க வேவேணும்.
எந்தன் மகனொருவ னினிதான வக்கினிபன்
விந்தையுள்ள மாதவரே மிகவுமே நல்லபிள்ளை.
இப்புனலி லேமுழுக [4]யேகிவந்தா னிவ்விடத்தில்
செப்புமுலைக் கன்னியர்கள் [5]சேரவரச் சொன்னார்கள்.
'மாட்டோ 'மென்றென்பாலன் மனவெறுப்பா கக்கூற
கேட்டிந்தப் பெண்கள் [6]கிருத்துவமா கப்பிடித்து
[7]பங்கப் படுத்திவிட்டார். பாலனுமே கோபமதாய்
அங்கவரை நோக்கி 'அலகையாய்ப் போங்க'ளென்று
சாப மிகக்கொடுத்தான்; [8]சந்தமுலைக் கன்னியரும்
கோப மிகக்கொண்டு கூறியெதிர் சாபமிட்டார்:

---

1. ரோமசன் என முன்வந்துளது; ரோமசன்; ரோமமுனி; ரோமசன்மர் என மூன்று வேறு முனிவர்கள் கூறப்படுகின்றார்கள். ரோமசன் பிரமனுடைய தலை மயிரிலிருந்து உண்டாகிப் பிரமனுடன் வாதிட்ட முனிவர்களுள் வென்றவன்; ரோமமுனி புகண்ட முனிவர் மகனர்; உடம்பெலாம் மயிருள்ளவர்; ரோமசன்மர் அருச்சுனன் தேவலோகம் சென்றபோது அவன் வீரத்தைத் தருமருக்குத் தெரிவிக்க இந்தீ தீரனுல் அனுப்பப் பெற்றவர்
2. [யெ] உச்சரிப்பு
3. டை
4. 'ய்' உடம்படுமெய்
5. புணர
6. செருக்கு; வற்புறுத்தல்
7. பிரமசரியத்தைக் கெடுத்துவிட்டார்
8. அழகு

இந்தப் படியா லிருவரு[1]ட சாபமதால்
சிந்துமலர்க் காட்டில் [2]திரியுமுர் பேய்போலே.
இவ்வினை யைத்தீர்ப்பீ ரெங்குருவே' யென்றுசொல்லி
360. [3]செவ்வியமான வேதநிதி செப்பமுட னேபணிந்தான்.
ரோமச னுங்கேட்டு நோக்கியவ னீப்பார்த்து
'மாமறையோ [4]யின்னி மனது மயங்காதே
உன்பக னெஞ்டிந்த ஒண்டொடியா ரைவருந்தான்
நன்மை பெறுவார்கள் நாதன் கிருபையினால்;
365. சேயமட மாதரையுஞ் செல்வக் குமாரனையும்
பேயுருவ [5]மாற்றிவைப்போம்; பெருங்கவலை விட்டுவி[ட்]டு.'
என்றுசொல்லி ரோமசரு மெதிராக வந்துநிற்கும்
வென்றியுள்ள பேய்கள்தனை மிகநோக்கி யேபார்த்து
[6]ஓவியப் பூங்காட்டில் ஒளிந்தோடிப் போகாமல்
370. [7]தாவிய மந்திரத்தால் [8]தம்பிக்க வேநிறுத்தி
'போதமுட னேநானும் புகலுங் கதைகளிவர்
காதில்விழக் கேட்கக் கடவ'தெனச்[9]சபித்து,
விந்தையுடன் கிட்டநின்ற வேதநிதி யைப்பா(ர்)த்து
சுந்தரஞ்சேர் ரோமசனும் சொல்லுவா னேவியமாய்;
375. 'நம்மைவந்து சார்ந்தவரை நற்பான மாமறையா!
[10]நம்மைப் படுத்தாமல் நாம்[11]போற தில்லை'யென்று
நன்னயமா கக்கூறி நலமாக [12][மாஷத்தைபலன்]
தன்னை யுரைத்திடுவேன் தப்பாமல் [13][கேளெனவே]
யென்றுரோ மசமுனிவ னினியவே த-நிதிக்கு
380. நன்றியுடன் சொல்கதைகேள் நாடாளு மன்னவனே!
வாகுடனே வெய்யோன் மகரத்தி லேவருநாள்,
ஆகமுட்டன் மாகஸ்நானம் அன்பாக முப்பதுநாள்

1. டை
2. திரிகிருர்
3. செவ்வி நீரையசை
4. இவி = இன்வி; இன்று என்றுமாம்
5. மாற்றி
6. "சித்திரச் செய்கைப்படாம் போர்த்த துவே ஒப்பத்தோன்றிய உபவனம்" என வரல் காண்க. மணிமேகலை III-168
7. எதிர்த்த; ஒளிபோல் பரந்த
8. ஸ்தம்பனம்; மந்திர சக்தியால் அசை யாதிருக்கச் செய்துவிடல்
9. ஜபம் செய்து
10. நன்மை: மோனை காண்க. உச்சரிப்பு
11. போகிறது
12. மாத பலன் (மாதை பலன்)
13. 'கேளேன் நீ' என்பதுபோன்ற வழக் காம்; இல்லையானால் 'எனவே என்று' வருவதும் வழக்குப்போலும்

பரிவாக வேமுழுகில் பஞ்சமா பாதகமும்
வரிசையுட னேதீரு மாபலனு முண்டாகும்.

விருத்தம்(3)

385. மருவி மானச வாவிவா(ய்)
அ[1]ரிதின் மாகம தாடினேர்
[2]பெரிது தாமுறு பேறு;சீர்
விரியும் ஞானமும் [3]வீடுமே.[4]

நடை

[5]மானத வாவிதனில் மாகஸ்நான மூழ்கினபேர்
390. ஞானம் பெறுவார் நல்லசொர்க்க மும்பெறுவார்.
பரமேசு [6]டாபி[7]றந்த பனிமலையின் சார்புதனில்
வருமருவி தன்னில் மாசஸ்நானம் [8]பண்ணுகின்ருல்
எப்பாவ முந்தீரும் [9]என்றுங்கயி லாசமதில்
தப்பாம லெ[10]ந்நாளும் சார்ந்திருப்பார் கண்டாயே!
395. அன்பாக நாளும் [11]அச்சோத வாவிதனில்
பொன்போல [12]மூழ்குகின்ருல் புனிதவைகுண் டங்கிடைக்கும்.
[13]விதரிகா னமெனவே விளங்குகின்ற வாவிதனில்
இதமுடனே மூழ்கினபே ரிப்புவியி லேபிறக்கார்.
வன்னநரு மதையில் மகிழ்ந்துதான் மூழ்கினவர்
40. [14]பொன்னின் பதியடைந்து போகபோக கியம்பெறுவார்.
[15]அந்த மிகுந்த யமுனை தன்னில் மூழ்கினபேர்

---

1. [ரு]-உச்சரிப்பு
2. ஆடினேர் தாமுறும் பேறு பெரிது
3. சொர்க்கம் எனக் கீழே பொருள் தரப் பெற்றுளது: பதமுத்தி
4. புளீமா-கூவிள-கூவிளம் என மூச்சீராய் வரும் வஞ்சிவிருத்தம் தனனதானன; தானன என்ற சந்தம்; அடிக்கு 9 எழுத்துக்கள்
5. மானசரோவர; கைலைக் கருகுதோன்று வது
6 வ
7. [ர]
8. பண்ணி நீன்ருல்; 'கின்ருல்' என்ற வழக்கு நோக்குக
9. [யெ] உச்சரிப்பு
10. [ன்ன]
11. அச்சோதர்=சோதை என்னும் ஆற் றின் தொடங்கிடமாம் போய்கை; காஷ்மீரத்திலமர்நாண்டம் என்னு மிடத்தருகே இந்த ஆறு உளது. மரீ சியின் பிள்ளைகளாகிய பிதுர்க்களின் பெண்ணே அச்சோதநதி வடிவமா னுள் என மச்ச புராணம் கூறும்
12. டி-8 பார்க்க
13. பதரிகாவனம்?
14. பொன்னுடு; தேவலோகம்
15. அந்தம்=அழகு; அ-ய, மோ னை அமுனை எனவும் வருகிறது

சொந்தமென வையா! சூரியபத விபெறுவார்.
சரசு நதியில் தான்கனிந்து மூழ்கினபேர்
பிரமலோ கத்தனிலே பேருக [1]வீற்றிருப்பார்.
405. [2]சானவி தன்னில் தலைமுழுகும் புண்ணியர்கள்
தேனுலவும் பூந்துளபச் செங்கண்மால் நாடடைவார்.

விருத்தம்(4)

[3]சரையு[4] [5]கண்டகை [6][கேசனி] [7]சந்திர பாகை
வரைகி ழித்துவீழ் [8]கௌதமி வரு[9]துங்க பத்[தி]ரி
இரைபு னல்[10]பொன் னி [11]சிந்துவோ டி[12]யல்தெரி [13]வைகை
410. [14]பொருநை [15]கங்கையி ஞடுவார் வைகுண்டம் புகுவார்.[16]

நடை

சுந்தரஞ்சே ருஞ்சரையுஞ் சொல்லுகண்ட கைகேசனி
சந்திர பாகைநதி தழைக்குந்துங்க பத்திரிநதி
[17]மருசேர் [18]கவுதமியம் வளம்பொருந்துங் காவேரி
திருமேவு சிந்துநதி சிவனழைத்த வைகைநதி
415. பொருநைநதி கங்கைநதி புகுந்துமா கஸ்நானம்
[19]வரிசையுடன் மூழ்கினபேர் வைகுண்டம் பெற்றிருப்பார்.
நாலுமறை யுந்தெளிந்த நல்லதொரு வேதநிதி!
சீல முடனின்னம் செப்புகிறேம். நீர் கேளீர்!

---

1. வீற்றிருப்பார்
2. கங்கை
3. சரயு-அயோத்தியில் உள்ளநதி
4. [ய]
5. கண்டகி; சாளாக்ராமம் உண்டாகும் நதி மகத தேசத்தில் உள்ளது என்னும் அபிதான சிந் தாமணி
6. கேதாரம்? கோதகி
7. பண்டரி புரத்தில் இருப்பது
8. கௌதமி=கௌதமி கவுதமி; க கே என்றுயது' கோதாவரியின் பெயர்
9. துங்கபத்திரை நதி
10. காவிரி
11. சிந்து நதி
12. [யி]
13. வைகை ஆறு
14. தாமிரபர்ணி நதி [நை]
15. 'இங்கிவையாடுவார்' என்பது மாகபுரா ணப் பாடம்
16. மா-வினம்-வினம்-வினம்-மா என 5 சீர் வரும் கலித்துறை; வீளம் காயாகவும் வரும்
17. மரு=வாசனை
18. கௌதமி என்றது கவுதமியம்மன வந் துளது 'கவுதமியும்' என்றிருக்கலாம்; கோதாவரி
19. முறையாக

பரிவான [1][நீலகண்டம்] பகருகின்ற மா[2]புக்கரம்
மருவாரு நேப [ர]ள மணக்கும் [பிரகாசம்]
கூறுங் குரு [3]க்ஷேத்திரமாங் குற்றமில்லாத் [4]தேலகூடம்
வீறுடைய மாக[5](ர)ள மிகுத்துவரு [மோங்காரம்]
[6]தாட்சியில்லா மா[ஞானம்] தானுக்கோடி ராமே[7]சுவரம்
மாட்சியுட னேதான் வளரு[8]நய்மி சாரணியம்
இதுமுதலா கக்கூறு மியல்பு[9]ண் ணியருதியில்
அதிக பலன்கொடுக்கும் அழகான மாகஸ்நானம்
விரியுலகி லாரேனும் விரும்பியே மூழ்கினபேர்
பரிவாக வே[10]மூன்றும் பதமடைவார். சொன்னேங்காண்!
இந்த நதிகள் தனி லினியபிர யாகைநதி
விந்தையுடன் சொல்லரிது; மெத்தவே நல்லநதி
ஆனதி னுலே அழகுபிர யாகைதனில்
தான்மிக வாடினபேர் [11]சாயுச் சியம்பெறுவார்.
வாரும் பிராமணனே! வையகத்தி லேதானும்
ஆரும் புகழும் அசுவயா கம்பெரிது;
[12][பேராறு கின்ற] பிரயாகை மாநதியில்
பூராயமா மாகஸ்நானம் புனிதமுட னுடுவது
அதிகங்காண் வேதநீதி! அன்பா யுனக்கு[13]வொரு
கதையொன்று சொல்லுகிறேன். காசினியோர் கொண்டாடும்
வந்திக ரென்று[14]வொரு வாகான[ப்] பட்டணங்காண்!
அந்தகர் தானுளு மதிவீர சேனனென்போன்

---

1. குண்டம் என வழங்கும் தீர்த்தங்களில் எதுவோ இது?
2. ஆஜ்மீரில் இருந்து ஆறு கல் தொலைவில் இன்று பொக்ரா என வழங்கும் தீர்த்தமாம்
3. கர்நால் ஜில்லாவில் டெல்லிக்குவடக்கே இப்பெயர் உள்ள புகைவண்டி நிலையம் உண்டு; இங்கே பாரதப்போர் நடந்த இடம் என்பர்; புண்ணிய தீர்த்தம் எனச் சுந்தரரும் பாடுகின்றார்
4. ஒருநதி என்பர்
5. காளாமுகச் சைவரின் முதலிடம்; பின்னர்ப் பிற இடமும் மாகாளம் எனப் பெயர் பெற்றன
6. தாழ்ச்சி
7. தனுஷ்கோடி
8. க ஒலியாதுபோலும்; மே என்பதும் நெடிலாகாது போலும்
9. நைமி
10. சாமீப, சாலோக, சாரூபம் என்ற மூன்று பதம்
11. நாலாம்பதம்
12. 'பேராறு என்ற' அல்லது "பேராறு கின்ற" 'பேராறு தம்மில்' என்று கொள்க
13. குற்றியலுகரம் கெடாது உடம்படு மெய் பெற்றது
14. வெ

[1]நறுமதையாற் றின்கரையில் நற்பாக வேகடந்து
[2]நறுமலர்சேர் மார்பனவன் ராச சூ[ரி]யயாகம்
தன்னிலொன்று செய்தான். தழைக்கு மசுவயாகம்
தன்னி லீரெட்டுத் தான்வளர்த்த தல்லாமல்.
கோடான கோடிதருமங் குறையொன்று மில்லாமல்
வாடாத வீரசேனன் [3]மகிட்சியுடன் செய்தனன்காண்.
விந்தையுடன் வேள்விசெயும் வீரசேனன் வாழுகின்ற
வந்தி நகர்தனிலே வாழும் பிராமணரில்
வேத மறந்தோன் [4]மிகுத்ததொரு சைவை நறி-
நீதி மறந்தோன் நிசமொன்றுஞ் சொல்லாதான்,
[5]கலப்பை[ப்] பிடித்துழுது காரினியோர் தானேச,
மலைப்பில்லாமல் பாவம் மனதாரச் செய்கொடியோன்-
அய்யோ யவன்கொடுமை யாராலும் சொல்லரிது!
வையகத்தி லேயிவனும் வரம்புதப்பிச் செய்ததினால்
சாதியோர் தான்கூடி தன்னெழுக்கந் தப்புகின்ற
பாதகனை [6]யூருவிட்டுப் [[7]பத்தென்று பத்திவிட்டார்.]
அந்தப் பிராமணனும் 'அய்யோ' வெனவேங்கி
இந்த வுலகமெல்லாம் யிரந்துபிச்சை வாங்கியுண்டு
மெத்த வயதாகி மெலிந்து மிகந[8]ரைத்து
புத்தி தடுமாறிப் போயிருக்குங் காலமதில்
மாகிமா தந்தனிலே வழங்கும்பிர யாகையிலே
ஆசையுடன் மாகஸ்நானம் அழகுடனே யேகாலு
நாள்முழுகி ஞன்காணும்; நன்மைசெறி வந்திநகர்
[9]ஆளயனு மாண்டான்; அருமறையோ னுமாண்டான்.
பாங்காக வேள்விபல பண்ணுகின்ற மன்னவனும்
தீங்காக வேகொடுமை செய்ததொரு வேதியனும்
ஒருநாள் தனில்மடிந்து[10] உற்றஇரு பேர்களுந்தான்

1. நர்மதை; உச்சரிப்பு தெலுகைக்கு ஒத்தது
2. ந-ரா மோனே
3. மகிழ்ச்சி
4. பிறவற்றினும் சிறந்த அல்லதுமேலான
5. உழவுத்தொழில் உயர்ந்தோருக்கு உத வாது என்ற கொள்கை பரவிவிட்ட காலம்
6. ஊரு என நற்றில் உகரம்பெற்று ஒலிக் கும் [று]
7. ரு த்தீவிட்டார் என்ற பொருளில் வந் துளது; அவனுடைய பற்றுகளைப் பற்றிக்கொள் என்று பற்றிக்கொண்டு விட்டார்களா?
8. [றை]
9. ஆள் ஐயனும்-ஐயன் அரசன்
10. குற்றியலுகரம் கெடவில்லை. இரண்டாம் சீரின்பின் வளம்பம் வருவதால் உடம்படு மெய்யும் வரவில்லை போலும்

[1]திருமாது மேவிவளர் தெய்வலோ கம்புகுந்து
இருவர்களுந் தான்சரியா யிந்திரபோ கங்கள்[2]துய்த்து
வரிசையுட னேயிருந்த மகிமைதான் என்னவெனில்,[3]
எப்பாவஞ் செய்திருந்து மிந்தப் பிராமணன்முன்
தப்பாமல் மாகஸ்நானம் தழைக்கும்பிர யாகையிலே
நன்னய மாகவே[4]தா னுலுநாள் மூழ்கியதால்,
வன்னமுட னேவேள்வி வளர்த்தவீர சேனனெடு
சரிபோக போக்கியங்கள் தான்[5]பகுந்து விண்ணுட்டில்
வரிசையுட னேசுகித்து [6]வாழ்ந்திருந்தார் கண்டேன்நான்.
இந்தப் படிதா னினியபிர யாகையுட[6]
விந்தைதனைச் சொல்வரி[7]து வேதிதிபா லாகையினுல்
ராசசூ[ரி]ய யாகம் நன்முகச் செய்தாலும்
வாசமுள்ள பூமிதனில் [8]மறித்தும் பிறந்திருப்பார்.
அன்புட்னே நானும் அழகுபிர யாகைதனில்
இன்பமுடன் மூழ்கினமேர் [9]என்றும்புவி யில்பி[10]ற(க்)கார்'
என்றுசொல்லி ரோமசனு ம் 'இன்னமொரு நற்கதைதான்
வென்றியுடன் சொல்லுகிறன். வேதிதிபி கேளு'மென
பரிவான ரோமசனும் பார்த்துவே [11]தனிதிக்கு -
அரிதான புண்ணியகதை அங்[12]கேயின்று சொல்லிடுவான்:
'[13]காட்சி வளரும் [கமலை]நாட் டினருகே
[14]மாட்சியுட னேடிவரு மாசரசுவ தி-[15]யெனவே:
என்றுசொல்லு மா[16]ற்றருகே யினிதான மேல்கரையில்

---

1. செல்வம்
2. [துய்ற்ற] உண்டு
3. அற்று அற்று முடியாமல் வாக்கியம் ஒன்றுகவே நீண்டுபோதல் காண்க
4. பகிர்ந்து
5. வாழ்ந்திருந்தான் என வேண்டுவது வாழ்ந்திருந்தார் என்றனது
6. டை
7. [ர]ீ-ர எனவலிக்கும்போதும்; சொல்லது சொல்லருது என்ற மலையாள உச்சரிப்புக் காண்க
8. [ரு] ர,ற உ,இ; மாருட்டம்
9. [யெ] உச்சரிப்பு
10. [ர]
11. இவ்வாறு வரும் இடங்களில் பின்வரும் சீரும் ஒன்றுக ஒலித்து ஒரு வகைப் பொதுச் சந்தம் பெறலாம்
12. (அங்கை) உச்சரிப்பு
13. [காசி]
14. [மாசி] உச்சரிப்பு
15. எனவே ஓடிவரும் என முடிக்க; அல்லது எனவே என்ற என்பதும் விழுக் காண்க
16. [த்த]

நன்றியுட னேவாழும் நல்மறையோர் தங்களிலே
தேவர் துதியெனவே சிறப்பாகப் பேருகொண்டு
[1]ஓவியம தாகவள ருற்ற [வயிட்டனவன்]
மெத்த புனிதமுள்ளோன்; மிகு[த்]தவசு செய்பலத்தால்
[2]சுத்த மகிழச் [3]சுமுத்திரனென் றேர்பிள்ளையை
வரிசையுட னேயீன்று [4]வைத்தவனு மேதுறவில்
திருமால் தணிநினைந்து திருமந் திரமோதி
பஞ்ச விடையமென்று [5]பஞ்சாக் கினிநடுவே
மிஞ்சத் தவசிருந்து மிகுத்த சில[6][வர்சம்]
பண்ணியு மன்புடனே பரிவாக வேவர[7]யுவை
வண்ணமுட னே[8]பொசித்து மலைப்பொந்தி லேவாழும்
கொடிய புலியுடனே கூடிப்பழ கி-யிருந்து
நெடிய தவப்பெருமை நீள்புவியில் சொல்வாருண்டோ?
இப்படித்தா னய்யா? வினிய வயிட்டனவனும்
செப்ப முடனே திருமால் தணைப்போற்றி
ஓரா யிரம்வருசம் உகந்து பெருந்தவசு
பூராய மாயிருந்து பொருந்து மகரமதில்
சொல்லுங் கதிரோன் சுகமாய் வருநாளில்
நல்லமா கப்புனல்தா னுட்டமுட னேமூழ்கி
பாங்குடனே [9]நோன்பிருந்து பச்சைமா லைப்போற்றி
ஆங்கு துளசிகொண்டு அ[10]ர்ச்சித்து [11]வோவியமாய்
தோத்திரங் கள்செய்தான் தோத்திரத்தி ன[12]ன்பாலே
பூத்த நறுந்துளபப் புண்ணியமால் தோன்றினரே.

---

1. ஒ உ மோனை
2. சுற்றும்
3. சுமித்திரன்; இ-உ
4. வாக்யம் தீண்டு போதல் காண்க
5. பஞ்சாக்னி 5-தீ நாலுபுறம் மூட்டிய தீயும் மேலே சூரியனும் தீயும் என ஐந்துதீ; இராகம், வெகுளி, காமம், மடம், தீபனம்என்று தத்துவார்த்தம் கூறும் பிங்கலந்தை; இங்கே இந்த ஆசிரியர் ஐம்புலன்களையே ஐந்து தீயாகக் கூறுகிறார்; புலனடக்கலே தவம் என்ற கொள்கை காண்க விடையம் புலன்; பொறிகள் உணர் பெருளாவது
6. வர்சம் = ஆண்டுகள் எனலாம்
7. உ ஓவியாதுபோலும்
8. புரிந்து
9. [நோம்பிருந்து] ன்-ம்
10. [ற்சி]
11. வ்-உடம்படுமெய்
12. [ம்] ன்-ம்

சங்குசக்க ர-மிலங்கத் தரித்தகுண்ட ல-மிலங்க
பொங்குவன [1]மாலிகைதான் பொன்மார்பி லேயிலங்க
515. மாணிக்கச் செம்பொன் மகுட மிகத்துலங்க
ஆணிக் [2]கெருடன்மே லழகுடனே தானேறி
கோல மழைமுகில்போல் கோவிந்த ரானசெங்கண்
நீலமா(ல்) மாமறையோன் நெஞ்செதிரே வந்துநின்றான்.
அப்பொழுது வேதியனும் அச்சுதனைக் கண்டுசிந்தை
520. [3]செப்ப மெனமகிழ்ந்து திருமால் மலரடியில்
தெண்ட மெனப்பணிந்து தேன்மாரி [4]பேய்ந்ததுபோல்
வண்டுலவும் பூந்துளப மாயோனைக் கொண்டாடி
ஆடினன், மெத்த; அரிகோவிந் தாவெனவே
பாடினன்; தோத்திரங்கள் பண்ணினனிம்மறையோன்.
525. அப்பொழுது செந்திருமால் அவனை மிகநோக்கி
'செப்பமுள்ள வேதியாநீ [5]சிறப்புடனே நம்மையுந்தான்
விந்தையுடன் தோத்திரம்நீ மிகவேதான் செய்ததினால்
சிந்தை மகிழ்ந்தோங்காண். செல்வப் பிராமணநீ!
வேண்டிய நல்வரத்தை விந்தையுடன் கே'ளெனவே
530. பூண்டதுள பத்திருமால் புனிதமுட னேகூற
வேதியனுங் கேட்டுருகி மெத்த [6]மகிட்சியொடு
மாதவனை நோக்கி வாய்திறந்து சொல்லிடுவான்.
'[7]வடிவுடைய மாமூர்த்தி! வந்தடியே னைக்கனிந்து
அடிமைகொண்ட தேயெனக்கு அதிகவர' மென்றுசொன்னான்.
535. சொன்னவுட னேமணிமால் 'தூய பிராமணநீ!
என்னை நீனைந்து [8]இனித்தோத் திரமாக
பாடினபா டல்தன்னைப் பழு[9]தன்றி யாரேனும்
தேடிப் படித்துச் செப்பினு ராமாகில்
[10]எந்தவினை யும்நீங்கி யெப்பாவ முந்[11]துலைந்து

---

1. துளசி மாலை
2. க-கெ
3. திருப்தி
4. பெய்ததுபோல்
5. இரண்டாம் சீரின்பின் வினம்பம் இருத் தலால் வெண்டளை வரவில்லை
6. மகிழ்ச்சி
7. அழகு
8. [யி] உச்சரிப்பு
9. இன்றி (வழக்கு)
10. [யெ] உச்சரிப்பு
11. தொ

சிந்தை கனிவாகத் தேவர் பதியடைந்து
நம்மடியார் தம்மிலுந்தான் நல்லமே லாம்பதமாய்
செம்மை யுடனிருப்பார். செல்வ மிகப்பெறுவார்.
சொன்னே' மெனமாயன் சொல்லி வரங்கொடுத்து
மின்னு னதுபோல மிகமறைந்து போயினர்காண்.

ஆன[2]தினு லம்மறையோன் ஆதிரு [3]மாலுதனை
வானவர்போல்ப் போற்றிசெய்து மண்ணி[4]ல்நெடு நாளிருந்தான்.'
என்றுதான் ரோமசனு மினியவே த-நிதிக்கு
நன்றியுடன் சொல்லிடவே நல்லதொரு வேதநிதி
[5]ரோம சனைப்பார்த்து லோகமெல்லாங் காலாலே

தாமளந்த மாயவனை தப்பாமல் தேவதுதி
யென்னும் பிராமணன்தா னினித்தோத் திரமாக
சொன்னதொரு பாடல்தனைச் சொல்லவே னு-மெனவே
வேத நிதிகேட்க மிக்கதவ ரோமசனும்
போத முடன்சொல்வான் 'பூசுரா! நீகேள்மோ

மாத்[6]திரைப் பொழுதில் வடிவான பாடல்தனை
[சித்திர] னென்றமுனி சிறப்புடனே தான்படித்து
என்னை யழைத்து [7]எனக்கு[8]வருத் தி-வைத்தார்.
வன்னமுள்ள தோத்திரத்தை வாயாலே சொல்லரிது.
வேதியா[9][ய்] கேளெனவே மிக்கதவ ரோமசனும்

மாதவனுர் தோத்திரத்தை வரிசையுட னேயுரைப்பான்,

விருத்தம்(5)

'வாசு தேவனை மலர்மகள் கொழுநனை
மண்முழு துண்டானை
நேச முற்றிடும் அடியருக் கெளியனை
நெடுநில மளந்தானை
[10]பேசு கின்றதும் பேசவே படுவதும்
பேச்சுமாய் நின்றானை
ஓசை[11] பாற்கடல் முகட்டினி லுறங்கிய
ஒருவனைத் தொழுவோமே.[12]

---

1. மா முன் நிரையாக வருவது அழகு
2. த
3. மாலு என வரல் காண்க
4. உச்சரிப்புக் காண்க
5. ரோ.லோ மோ
6. 'தி'ஒலியாதுபோலும்
7. ['யெ'] வுச்சரிப்பு; 'ய்' உடம்படு மெய்யுமாகலாம்
8. வருத்தி=வரும்படி செய்து
9. ஆ என்பது 'ஆய்' என்பதாய் விளியுருபாயிற்றுப்போலும்
10. தீர்புடி
11. [மா] மாக்கடல் என்பது புராணம்
12. மா-விளம் விளம்-விளம் - விளம் - மாங்காய் எனவரும் அறுசீர் விருத்தம்
தான தானன தானன தானன தானன தந்தான எனவரும்

நடை

565. வாசுதே வா! முகுந்தா! [1](மலர்)மாது சேர்கணவா
மாசில்லா மண்ணையுண்டோய் வளருமடி யாற்[2]கெளியோய்!
சொல்லாகிச் சொல்லுகின்ற சொல்லுக்குப் பொருளாகி
எல்லாம் [3]நிரந்தரமா யிருக்கும் பழம்பொருளே!
ஓசைக் கடல்நடுவி லுறங்குகின்ற காரணனே!

570. பேசு மறையும் பிரமனுமே காணுத
ஆதிப் பொருளே! [4]அட்ட(ர)ட் சரப்பொருளே!
சோதிப் பொருளே சொல்லும்வே தப்பொருளே!
பாங்காக வேதான் பகரும்பஞ்ச பூதமென
தீங்கன்றி யெங்குஞ் சிறப்பாக நின்றவனே!

575. மன்னுயிர் கட்கெல்லாம் மாபொருளா க-விருந்தாய்!
[5]வன்னமந்தி ர-வடிவாய் [6]மறைதோறு மேயிருந்தாய!
[7]பாரமலி போலும் [8]பறக்குமணு வைப்போலும்
சீருடனே தானிருந்தாய்! சிறந்த[9]பஞ் சாயுதம்பூண்ட
பொன்போலு[10] மந்த(ப்) பொற்பணிதியைப் போலும்

580. அன்பாகவே வேரூய் அமைந்திருந்த [11]அற்புதமே!
பத்தருக்குத் தொண்டனெனப் பாங்கா யிருப்பவனே!
முத்தியென்றுஞ் சொல்லுகின்ற முத்திதா னல்லவென்றும்
பல்லா யிரங்கோடி அண்டப் பரப்புவெளி

---

1. விருத்தம் பார்க்க
2. 'ர்க்கே' என்றுமாம்
3. இடையீடின்றி
4. எட்டெழுத்து 'ஓம் நமோ நாராயணய' எட்டட்சரம் என்பது அட்டட்சரம் என்னும் மயங்கிவந்தீருக்கலாம்
5. வர்ணம்; எழுந்து வண்ண வள்ள னை வந்ததனது; மந்திரம் அட்டாட்சரமாய் உள்ளது கூறப்பெற்றது; வர்ணம் அழகுமாம்
6. [மறைந்தோரு]
7. மகிமா என்ற சித்தி
8. அணிமா என்ற சித்தி அல்லது பேரிதிற் பேரது சிறிதிற்சிறிது (Infinite and infinitesimal) என்றுமாம்
9. (1) சங்கு; (2) சக்கரம்; (3) கதையாயுதம் தண்டு; (4) சார்ங்கவில்; (5) வாள் என்ற ஐந்து படை
10. பொன்னும் பொன்னுலகியகாரியமாம் பொன்னுபரணமும் வேரூய் இருப்பதுபோல அனைத்திற்கும் காரணமான மேல்நிலையிலும் அனைத்துமாய காரியநிலையிலும் இருக்கின்ற வியாப்பு = கடவுள் இயலுள் என்ற நிலை;பொன்போ லமைந்த அல்லது பொன்போலமைந்த என்றும் கொள்ளலாம்;பொன்போலும்என்பது போல் எனவந்தது எனல் வேண்டும்
11. [அப்புதமே உச்சரிப்பு]

எல்லாந்தா னென்று மில்லையென்று முண்டுவென்றும்
585. தத்துவங்க ளென்றுந் தத்துவங்க ளில்லையென்றும்[1]
[2][இத்துலகைப்] பெற்றதென்று மினிப்பிறவி யில்லை[3]யென்றும்
ஆதிமூ ல-மெனவே ஆணையன்று கூப்பிடவே
சோதிக் [4]கெருடன்மேல் தோன்றிநின்று கார்த்தவனே!
தெய்வலோ கத்தில் சிறந்துவள ரைந்தரு[5]வை
590. [6]தை[7]யல் பொருட்டால் தான்கொண்டு வந்துமணி
வாசல் தனிலே வரிசையுடன் நட்டுவைத்தோப்!
நேச முடனே நெடியமறை மாவேதன்
கங்கையினு லேகமுவிக் கனிந்துமிகப் [8]பூசைசெய்து
செங்கையினு லேபோற்றுஞ் செந்தா மரைப்பாதா!
595. [9]வேதனுய் மாயவனுய் மிக்கதொரு ருத்திரனுய்
போத [10]மயேசுவரனுய்ப் பொருந்துஞ் [11]சதாசிவமாய்
இருந்துலக மெல்லாம் இட்டமுட னே[12]காக்கும்
மருந்தே [13]பிணிரசமே! வாக்கு [14]மனதுவுக்கும்
எட்டாப் பொருளே! இனிதான முத்தொழில்க்கும்!
600. [15]தட்டாமல் நின்றவனே! [16]தானுக நின்றவனே!
[17]வாயாலே வைதவர்[18]க்கும் மல்லாடி நின்றவ[19]ர்க்கும்

---

1. முன்பட்ட நிலை எலாம் முனழிய நின்ற வியப்பினைக் கூறுவது காண்க. பரமுத்தி பதமுத்தி; உயிர்க்குயிராம் நிலையில் எல்லாம் அவர்; அவற்றின் குற்றப்பட்ட நிலையில் அவர் ஒன்றும் இல்லை
2. இற்று = இத்தன்மைத்தாக
3. என்றும் பொருள்தர
4. க-கெ
5. [வே] ஏ-ஐ-மயக்கம்
6. சத்தியபாமையின் கதை
7. இரண்டாம் மெய் மட்டும் எதுகை
8. திருமால் உலகளந்தபோது மேல் நீட்டிய திருவடி பிரமலோகம் சென்ற போது பிரமன் வழிபட்டானும்
9. ஐந்தொழிலும் இவன்வழி நடக்கும்; ஆதலில் பஞ்ச மூர்த்தியும் இவனே ஆம்; ஐந் தொழில் = படைப்பு, காப்பு, அழிப்பு, மறைப்பு, அருளல்
10. மகேசுரன் மறைப்பவன். உயிர்களின் வினை பக்குவமாகும்வரையில் மேலும் மேலும் மரியாமல் மறைக்கப்பெற்று உலகில் உடுபடும் [மயேசுவரனுய்]
11. [சித்திர சிவமாய்] சதாசிவன் அருள்பவன். அருள்செய்யும் வியப்புநோக்கிச் சித்திர சிவம் என்றார் எனலுமாம்
12. [காற்கும்]
13. இனிய
14. மனதுக்கும் என்பது இவ்வாறு வழங்கியது
15. அகப்படாமல்
16. கேவலநிலை
17. சிசு பாலன்-கம்சன் முதலாய் எதிர்த்து நின்றோர் இறைவன் வாயில் காப்பாளராய் இருந்து பின் பழையநிலை அடைந்தவர் என்பது கதை
18. [நு]
19. கெ-18

சேயார் துளபமதால் சிறந்து[1]பூ சித்தவர்க்கும்
முத்தி கொடுக்கும் முதல்வாபூ சித்தவரை
[2]பத்தி யடிமைகொள்ளும பச்சைமா லே!'யெனவே
605. தேவதுதி யன்று சிறப்பாகப் பாடியதை
ஓவியமாய் ரோமசனு மூரைத்தா னழகாக.
இப்பாடல் தன்னை யெவருந்தான் கற்றுரைத்தால்
[3]தப்பார்; வைகுண்டம் தானடைவார் கண்டாயே!'
என்றுரோம ச-முனிவ னினியவே த-நிதிக்கு
610. நன்றியுடன் சொன்னரென்று நல்லதெத் தாத்திரையர்
கா(ர்)த்திய வீரனுக்கு கனிந்துவுரைத் தாரெனவே
பா(ர்)த்துத் திலீபனுக்குப் பாங்காய் வதிட்டர்சொன்னார். 612

[இருபத்தேழாம் அத்தியாயம் முற்றும்]
(நான்காம் அத்தியாயம் முற்றும்)

---

1. பிரகலாதன் விபீஷணன் முனிவர்கள் போன்றார்
2. பற்றி; பத்தியுள்ள தொண்டராக என்றுமாம்; பராபத்தி
3. வைகுண்டம் இடைவிளக்கு; வைகுண்டம் தப்பார்; வைகுண்டம் தானடைவார்

[இருபத் தெட்டாம் அத்தியாயம்]

[பஞ்சாட்சர மான்மியம்]

ஐந்தாவது அத்தியாயம்

சித்திரசேனன் கதை

விருத்தம்(1)

மீட்டும் ரோமசன் விளம்புவான்-
'வேதிய ரேறே!
நாட்டில் தென்றிசை நரபதி,
நளிர்மதி மரபின்
கோட்ட மின்றியே உதித்தவன்,
குல[1]கிரிப் பிடரில்
தீட்டு செங்[2]கயல் கொடி[3]யினன்,
சித்திர சேனன்.[4]

நடை

5. நற்புடைய ரோமசனும் நலலவே த-நிதிக்கு
பொற்புடனே முற்கதையைப் பூராய மாயுரைத்து
பின்னுமந்த வேதியனைப் பெருமையுட னேநோக்கி
நன்னயஞ்சேர் ரோமசனும் நற்பாக வேயுரைப்பார்:-
'தென்றிசையி லய்யா சிறந்த தமிழ்நாட்டில்
10. வென்றியுட னேவாழ்வோன் மிக்கசந்தி ரகுலத்தான்,
பொங்கமுள்ள மேருதனில் புனிதமாய்ச் சென்றதிலல்
இங்கிதமா க-வடித்தோ னிலங்குமீ னக்கொடியோன்
[5]வெற்றிகொண்டு [6]எண்டிசையும் வீறுடனே தானுளும்
சித்திர சேனனென்று தென்றிசைவாழ் பாண்டியன்காண்!

---

1. [க]
2. [கையால்]
3. [ய]
4. மா, விளம், விளம், விளம், மா என
5-சீரால் வரும் கலித்துறை
6. வெத்தீ-எதுகை நோக்குக
6. [யெ] உச்சரிப்பு

15. நாலுவகைச் சேனை தனில் நாட்டும் புகழுடையான்;
வேலிலங்கு கையான்[1] வேதமுறை தப்பாதான்;
செங்கோல் தளம்பாமல் தேசமெல்லா மோர்குடையில்
பொங்கமுட னேயாள்வோன்; பொருந்துமனு நீதியுள்ளோன்;
வித்தையிலும் புத்தியிலு மினிய பொ[2]றுமையிலும்
20. சத்தியத்தி லும்பெரியான் [3]தாட்சியொன்று மில்லாதான்;
சை[ய்]வ நெறியுடையான் தளம்பாநீ தி-யுடையான்;
மை[ய்]வளர்கண் மாதருக்கு மதன்போ லழகுடையான்;
பாங்காக வேவேள்வி பலகோடி செய்துத[4]ர்மம்
[5]வாங்காமல் செய்திடுவோன்; [6]மதபேத மில்லாதான்;
25. மும்[7]மூர்த்தி கள்தனையே முந்துமொரு வ-னென்று
அம்[8]மூர்த்தி கள்தனையே அ[9]ருச்சிக்கும் புண்ணியவான்;
தேவரம்பை போல[10] சி[11]றந்தழகுப் பெண்களிலே
ஓவியமாய் [12]லட்ச முகந்து மணமுடித்து
அத்தனைப் பெண்களுக்கு மழகான காமனைப்போல்.
30. [13]முத்து முலைதழுவி முகங்கோணை மல்சேர்வோன்.
இந்தப் படியா யிருந்தரசாள் வேந்தனுக்கு
[14]தொந்தப் பழவினைதான் சூழ்ந்துமதி யைக்கெடுத்து
வந்தபடி யாலேயந்த ம்கராச ஞனமலனன்
நிந்தனையாய்ச் சை(ய்)வ நெ[15]றியை மறந்துவிட்டு.[16]
35. பொல்லாதான் தன்னுடனே பொருந்தியே [17]நற்பாகி
மல்லாருந் தோளான் மதபே தகமாகி

---

1 விளம்பம் சீர் நிரப்பும்
2. [ரு]
3. தாழ்ச்சி
4. [ற்]
5. தான் பிறரிடம் தருமம் வாங்காமல் பிற ருக்குத் தருமம் செய்வோன்
6. சமரசப் போக்கு
7. [மூற்தியன்] ர-ற; க-ய; மாரூட்டம்
8. ஷ
9. [ற்சி]
10. விளம்பத்தால் 'ச்' மிகவில்லை
11. [ர]
12. [லச்ச]-உச்சரிப்பு 'ல' மொழிமுதல்; பல மனைவியர் வாழ்க்கை ஒரு சிறப்பு
13. முத்து மாலை அணிந்த; முற்று என்று மிருக்கலாம்
14. ஒட்டிய; கர்மம் வந்தேறியானாலும் இயல்புபோலாய் விடுகிறது
15. [ரி]
16. வாக்கியம் நீளுதல் காண்க
17. நட்பாகி என்ற பொருள் தோன்றுகிறது; இடையிலுள்ள வல்லெழுத்துஅடுத்த வல்லெழுத்தோடு ஒன்றாக ஒலிக்கும் போது நட்பும் நற்பு ஆம்; நற்பும் நற்பு ஆம்

[1]பாசாண்ட மென்று பகரு மதந்தனிலே
[2]போச(ன்) நிகர்மன்னன் புத்திவைத்து ஆசையுடன்
[3][மாசனத்தீ] வெண்பொடியை மகிட்சியுட னேபூசும்
40. [பாசண்ட வாகனிடம்] பார்[4]வேந்தனும் போனான்.

விருத்தம்(2)

ஆய தீமையி லரசனைப் புகுத்துவா னெடுத்த
மாய வேடத்தான் வைதிகச் சைவம்போல் மருவி
தூய[5]வான [தள்க்]கஞ்சுக(ம்) [6]போர்த்த [7]வெண் சுழல்கட்
காயும் வெம்புலிக் கைதவ வேடத்தைக் கலந்தான்.[8]

நடை

45. [9]குழைச்சிடாமல் பூசுங் குருக்களு[10]ட பாதமதில்
வீழ்த்து முடிசாய்த்து வணங்கினன்போ[11]ர்வேந்தன்.
சேய முடன்வணங்கு[12] நிகரில்லா வேந்தனைத்தான்
மாயவே டக்குருக்கள் மகிட்சியுட னேயெடுத்து
வைதிக மென்ன வளர்ந்தோங்கு வேதமுறை
50. சைவவிதி போலத் தழைக்கும்பா சண்டமதம்
தன்னை யரசனுக்குத் தானே களிவுபெற
வன்னப் பசுத்தோலை வரிப்புலிதான் [13]போர்த்துதல்போல்
கொடியபா சண்டமதக் குருக்களுந்தான் வஞ்சகமாய்
வடிவுடைய வேந்தனுக்கு வைத்தா னுபதேசம்.
55. இந்தப் படியேதா னினிக்க வுபதேசம்
சுந்தரஞ்சேர் வேந்தனுக்குச் சொல்லிப்பின் சொல்லிடுவான்:-
'வா[14]ரா யுலகுமுற்றும் [15]வாழும் புகழ்வேந்தே!

---

1. வேதத்திற்கும் புறம்பு
2. போஜன் கவிவாணரால் போற்றிக் கல்வியிற் சிறந்த அரசனுய்ப் பேரும் புகழும் பெற்று வினங்கியவனுய் பின்னுளில் கருதப்பட்டான்; 11-ம் நூற்றுண்டில் இருந்தவன்
3. மாசனத்தீயோ?
4. [ரு] என்று திருத்தப்பெற்றுளது
5. பசுத்தோ
6. போற்ற
7. [வெண்சுழகக்]
8. முன் விருத்தம் போன்றது
9. நீர் விட்டுத் திருநீற்றைக் குழைத்திடாமல் தூளாகவே பூசிக் கொள்ளும்; 'குளோச்சு' எனுமைக்கு ஏற்கும்
10. டை
11. [ற்]
12. விளம்பத்தால் வெண்டளை பிறழும்; பின்னும் இப்படி வரும்
13. [போற்றுதல்]
14. [ரு]
15. புகழ் உலகமுற்றும் வாழும்

பூ[1]ராய மாகப் புகலுகிறேன் கேளு'மென்று
வை(ய்)தீக மென்ன மறையோர்கள் தானுமென்ன?
சை(ய்)வநெறி யென்ன? தாரணியா ளும்வேந்தே!
நேசமுள்ள வெண்ணீற்றை நீரில் மிகக்குழைத்து.
பூசுவ தென்?[2]நாமம் போட்ட-திரு லென்னபயன்?
ஆதிதிரு மாலெனவும் ஆனசைவ மந்திரமென்[3]றும்
வேதிய னென்றும் வேள்வியென்றும் வேதமென்றும்
சொல்லால் பயனேது? சூதுக்க ணேதுமில்லை.
எல்லா முலகிலுள்ளோ [4]ரெடுத்துவைத்துக் கொண்டதுகாண்.
ஒருவனு யெங்கு முகந்திருக்கு மாமூ[5]ர்த்தி
அருகுபர மேசு[6]வரனே அடி[7]வணங்கு மன்னுநீ!
[8]உந்தனுக்கு முத்தியுண்டா முகந்தபெரு வாழ்வுமுண்டாம்.
விந்தையுடன் சொன்னேன்.விட்டுவிடு வைதீகத்தை.'
என்றுபா சண்டமத மினிக்கும் படியாக
அன்றரச னுக்குரைத்து அனுப்பிவிட்டா னக்குருக்கள்.
மல்லுலவுந் தோள்வேந்தன் வரும்வினைக் குள்ளாகி
'நல்லது நல்ல'தென்று நல்லசைவத் தைநீக்கி
கயல்கொடிக்கு [9]மன்னோன் கனிந்து மனம்புகுந்து
மய்க்கும்பா சண்ட மதத்தை யவள்விரும்பி
தன்னுடைய தூதர்களைத் தார்வேந்த னு-மழைத்து
'வண்ணமுட னுமாளும் மண்டலத்தி லுள்ளவரை
வை(ய்)தீகத்தை விட்டு வளருஞ்சை வத்தைநீக்கி
[10]துய்யபா சண்டத் துறையி லிறங்குமென்று
ஆணையே றி-முரசு அடியு' மெனவேந்தன்
தானுரைக்க வப்படியே தானறைந்தார் நாடுமுற்றும்
எங்கு ம[11]றிய யினிப் [12]பறைதான் போட்டதினல்

---

1. [ரு]
2. [ரமம்] ந-ர மாருட்டம்
3. [னு]; தீ ஒலியாது
4. கட்டி வைத்த வழக்கு
5. [ற்]
6. [ப] சு-ஸ்வர ஒலிக்கும்
7. ஓவல்
8. உன்
9. மன்னவன்
10. தூய
11. [தீ]
12. [பரை]

அங்குள்ள பேர்கள் அனைவோரு [1]மாட்சிகொண்டு
அரியசைவத் தைவிடுத்து அவர்கள்தான் சொற்படியே
மருவியே பாசண்ட மதத்தி லிறங்கினரே.
இந்தப்படி யம்மதத்தி லிறங்கின பேர்களுக்கு
விந்தையுள்ள வேந்தன் மிக்க[2]பரி யானைசெம்பொன்
சிவிகையுட னேதேருஞ் செம்பொன்னு டைபணிதி
கவிகையுட னே[3]பலது கனிந்து மிகக்கொடுத்தும்
[4]தன்மந் தனைமறந்து தாரணியெல் லாம்நடுங்க
கன்மந் தனைவளர்[5]த்தான் கடியகுரு சொல்படியே.
நீதிவிட்டு வேந்தன் நெடும்புவியை யாளுவதால்
[6]வேதையெனு மம்மதத்தில் விழுந்துகெட்ட மா[7]மூடர்
பாங்கான சைவமொடு பாரில் வளர்ப்பவரை
ஆங்கே சினந்து மடித்துமிதித் தும்வலுவில்
சைவந் தனைக்கெடுத்துந் தன்மந் தனைக்கெடுத்தும்
வைதிகத்தை நிந்தைசெய்து மந்திரத்தை பொய்யெனவும்
இ[8]ட்ட மூடனே யினிதாக வேவளரும்
வி[9]ட்ணு தலத்தை வேரோடே தானிடித்தும்
[10]திருவுருவைத் தான்பிடுங்கி[11]சலத்தில் மிகப்போட்டும்
அருமறையோர் தன்னை [12]அடிதண்டமா க-வடித்தும்
அய்யோ! அவ்வேந்தன் அனீதியுடன் வாழுவதால்
செய்யாள்சேர் மன்னுட்டில் சிறப்புடனே வாழ்வோர்கள்
[13]தேசம்விட்டுப் போனவரும் செல்வம்விட்டுப் போனவரும்,
பாசம்விட்டுப் போனவரும் பாவமென்று போனவரும்,
இந்தப்படி யாக[14]சில ரிடைந்தோடி யேபோனர்.
தொந்தவினை யென்றுசிலர் [15]சூடினர் நிந்தமதம்.

---

1. [மாச்சி]
2. குதிரை
3. பல
4. தர்மம்
5. [த்]
6. மெல்லத் தூங்குவதுபோல வருத்தும் வருத்தம்
7. [மோடா] உச்சரிப்பு
8. [ஷ்ட]
9. [ஷ்ட்டுணு]
10. விக்ரகம்
11. [சி] நீரில்
12. தலை எடுக்க ஒட்டாதபடி அடித்தலே தண்டனையாக
13. ஒரே சந்தம் இரண்டடியில் வரும்
14. ஒற்றுமிகக் காணும்
15. 'மதம்' சூடுதல் என்ற வழக்கு

[1]தவமில்லான் தன்னூரில் தானே குடியிருந்தால்
110. [2]பாவமென்று சொல்லி[3]சிலர் பாழிலே மாண்டுவிட்டார்.
இந்தப் படிகொடுமை யே[4]றி மிகவோங்கி
செந்தழல்போல் [5]மண்டச் செல்வமொடு நன்னீதி
யெல்லாம்பா ழாகிவிட [6]இனித்தருமங் கெட்டுவிட
பொல்லாத மன்னனவன் புவியாளும் நாளையிலே
115. நீதியில் லாததினல் நெடும்[7]பாண்டிய தேசமெல்லாம்
[8]வேதினையா லல்யோ ! வெறும்பாழ்ய்க் கேடுவுற்று
மழையின்றி யேபயிரும் வாடி மிகத்[9]தீஞ்சு
விளைவின்றிச் சோறுமின்றி மெத்தக் கொடும்பசியால்
சாவாகிக் கேடாகிச் சனங்கள் மிகமெலிய
120. பூவாரும் பாண்டியனும் பூமியாள் நாளையிலே
பண்டு வினைப்பொருட்டால் பாவியென்று பேராகி
மண்டியநோய் கொண்டு வளமைகெட்டு மூப்பாகி
தருமப் பயிர்தழைய சத்தியமுந் தான்பெருக
கரும வினைமடியக் காவலனுந் தான்மாண்டான்
125. அப்பொழுது மாமறலி அனுப்பிவிட்ட மாதூதர்
வெப்பமுட னேசினந்து வேந்தன் தனைப்பிடித்து
கட்டி யடித்து கனத்தமுள்ளு தண்டதினல்
[10]கொட்டி யடித்துக் கொலைசெய்யு மாதூதர்
வாகுடைய [11]தெண்டதினல் மண்டைமிக வே[12]நெறிந்து-
130. போகவே, செங்குருதி பொழியக் [13]கருக்கரிவாள்
தன்னு லவன்சதையைச் சன்னஞ்சன்ன மாயரிந்து
'தின்னு' யெனக்கொடுத்துத் தீயான பாதைவழி

---

1. தவமில்லாத அரசன்
2. பவம்; பிறவிக்கு வழி
3. ஒற்று மிகக் காணேம்
4. [மி]
5. எரிய; நெருங்க
6. [யி] ய் உடம்படுமெய்யும் ஆகலாம்
7. பாண்டிய நாடென அழைக்கப்பெறல் காண்க; பாண்ட்ய
8. வேதனை எதுகை நோக்குக
9. தீய்ந்து
10. சம்மட்டியால் அடிப்பது போலவும் பஞ்சடிப்பது போலவும், தெல்லைக் குத்துவதுபோலவும் அடித்தல்
11. த-தெ
12. நெரித்து; நொறுக்கி. தன்வினை பிற வினைப் பொருளில் வந்துள்ளது. மண்டை நெரிந்துபோகவே என்று மரம்
13. [கறுக்கறுவாள்] ர-ற; இ-உ மாறுட்டம்; பல் பல்லாக இருக்கும் அரிவாள்

கட்டிக் கொடுபோய்க் கடிய மறலிமுன்னே
விட்டனர் காணந்த வேந்தன் றனிமறலி
135. கண்ணுல் மிகநோக்கிக் கனன்று[1]இவ னைக்கொடுபோய்
எண்ணு நரகமதில் [x]இப்போதே போடும் என்ருர்
கூறும் படியேதான் [x]கொடுபோய் நமன்றூதர்
நாறுங் கொடுநரகில் [x]நடுங்கவே தள்ளிவிட்டார்.
இருபத்தெண் கோடி [x]யெரிவாய் நரகத்திலும்
140. கருமத்தோ டேயிவனுங் [x]கலங்கி[2]க் கிடந் தேயுழந்து
வாடி மனம்[3]தளர்ந்து [x]வாழ்ந்தமலைப் பாரிசத்தில்
ஓடித் திரியு முதுபசா [x]சு-இனத்தில்
[4]எக்கும் [5]யறுடனே யி[x]ருண்டகரு [6]மேலுடனே
வக்கிரப்பல் [7]மின்ன மா[x]கொடிய பேயெனவே
145. வந்து பிறந்து [8]மணத்த[x]மலர்க் காட்டுடே
நொந்து திரியும்; நோக்கும்; [9]பரதவிக்கும்
ஓடுந் திரும்பும்; உதடுகடிக் குஞ்சிரிக்கும்;
பாடு மழு[10]கும் பச்யால்ஷ[11]யற் றையெக்கும்;
நாவுலர்ந்து [12]வய்யோ! நடுங்கி[13]த்தனி யேபுலம்பி
150. சாவுமில் லாமல் தனிப்பேயா கத்திரிந்து
'என்னை[14]ரட்சிப் பாரினியா ரினியாரோ?' [15]என்பசியை
கன்னயமா கத்தீர்க்கும் நல்லபுண்ணி யராரோ?
இந்தப் பி[16]றப்பு [17]வினி யெப்போ தொழியு'மென்று
சிந்தும்லர்க் காட்டில் திரிகின்ற நாளையிலே
155. அங்கோர் மலைச்சார்பி லாச்சிரமத் தில்நாளும்

---

1. [யி]
2. மெலியிடைபோல வல்லெழுத்தும் இல்லாததுபோல அலகிடப் பெறல் காண்க
3. [தளன்று] ந-ள; த-ற மாருட்டம்
4. வயிற்றை உள்ளுக்கிழுத்தல்
5. யி
6. மேலியுடனே
7. காட்டி என்றும் பாடம்
8. [மணத்த]
9. பரிதபிக்கும்-எம தண்டனையின் பின் உலகில் பேயாய்த் திரிவான்
10. கு வரல் காண்க
11. யி
12. வ் உடம்படுமெய்
13. 'த்' ஒலியாதுபோலும்
14. [ல] ர-ல மாருட்டம்
15. [யெ] ய் உடம்படு மெய்யும் ஆகலாம்; பின்வரும் 'எ' என்ற எழுத்திற் கேற்ற உடம்படுமெய்-on-glide
16. [ர]
17. வ் உடம்படுமெய்; பின் சென்ற 'இ' என்ற எழுத்திற்கேற்றது off-glide

சிங்கார மாயிருக்கும் [x]தேவதுதி யென்றொருவன்
வந்தார்கா ணந்தவழி [x]வரும்போதி லப்பேயும்
நொந்தேதங்கி வாய்[1]புலத்தி [x2]நாம்பித் திரியுமதை
கண்டார்காண் பேயெனவே [x]கண்ணுறவே தானேக்கி
அண்டாமல் நிற்கும் [x]அலகையைப்பார்த் தென்சொலுவான்
'என்னவினை செய்தாயோ'? [x]எப்பாவம் [3]பண்ணுகின்றாய்?
வன்னமுட னு[4]ர்க்குமய்யோ [x]வஞ்சகங்கள் செய்தாயோ?
தனியே புலம்புகிறாய்! [x]தயங்கியழு தேவாட
மனம்நோ[5]கக் காரியமென்? [z]வருத்துயர மென்னுடனே
சொல்லுவா யுன்னுடைய [x]துயரத்தை நான்தீர்ப்பேன்.'
வல்லதவத் [6]தேவதுதி வாஞ்சையுட னேகேட்க
காட்டில் திரியும் கியபே யும்நோக்கி
தாட்டிகமாய் வாய்திறந்து தானே வுரைத்திடுமே :-
'அய்யரே! நானடியேன் அவனி தனில்[7]வாழில்
[8]எய்யில்லாப் புண்ணியந்தா னென்னசெய்தே னேவறியேன்?
உம்மைநான் கண்டேன்; உத்தமனே முற்பிறப்பில்
செம்மை யுடனே திருமால்தன் பேர்தனிலே
நாவினு லய்யோ நா[9]ராய ணவெனவே
ஓவியமா யோர்போது மோதாத பாவவினை
காட்டில் பசாசெனவே கதறித் [10]திரிகிறேன்காண்.
நாட்டில்[11]நீ தி-கெடுத்து [x]நடந்த அநீதியினால்
சைவந் தனைக்கெடுத்து [x]தர்மந் தனையழித்து
வைதிகநூல் வேதியரை [x]வரம்பழித்து வாயாலே
'கோவிந்தா'வென்று [x]கூறுத பாவவினை
ஆவி நடுங்கவைய்யோ அலகை[x]யா கப்பிறந்தேன்.
நாலு மறைதனையும் ந[x]ன்முகக் கற்றறிந்து

---

1. பிதற்று; வெறுத்துக் கூறி பிதற்றி என்னும் பாடல்
2. நொந்து
3. கீன்று-இறந்த காலம்; பண்ணி கின்றாய் பண்ணுகின்றால் என்றுமாம்
4. [ற்கு] வே நீயும் என்னும் பாடம்
5. வ
6. அப்பேயுருவம் பெற்ற கித்திரசேனனே தேவதுதி கண்டான்; மனமிரங்கிக் கேட்கிறான்
7. வாழ்கையில்
8. எய்தலில்லாத அடைமுடியாத
9. [று]
10. [திரியிறேன்] ய-க மாருட்டம்
11. [னீ] ந-ன

மேலவா! [1]என்வினையால் மெலிந்துவிட்டேன் காண்பீரே!'
இன்னி யடியே னீடேறு மாபொருட்டால்
நன்மையா யென்னையுந்தான் [x2]லட்சிக்க வேணும்"என்று
185. பேயிரங்கிச் சொல்லப் பெரியோ [x]னவன்பார்த்து
'காயுங் கொடும்பேயே! கலங்காதே யஞ்சாதே!
உந்தன் வினை தீரு முயர்ந்த வரம்பெறுவாய்!
சிந்தை கவலைவிடு. செப்புகிறேன். நீ கேளு!
மிக்க கொடும்பாவ விறகென்னுங் காட்டுக்கொரு[3]
190. அக்கினிபோ லேயிருக்கும் அழகுபிர யாகைநதி.
அந்தப்[4]பிர யாகைதனி லானமா சி-ாதம்
வித்தையுடன் மாகஸ்நானம் மிகவேதா [5]ளுடுகின்ரூல்
பேயுருவ மாறிவிடும். பிரயாகை தன்னுடைய
[6]சேயபுது மைவாயால் செப்பரிது அ[7]ந்நதிதான்
195. பட்ட மரமென்னும் பாவ விலங்கதனை
வெட்டுதற்குத் தீட்டிவைத்த வெய்[x]யமுனைக் கோடாலி
மாயப் பிறவியென்[8]னு [x]மா-ா [ர]லைப் பாம்புதனை
காயுங் கருடனிந்தக் காசினியி [x]லுற்றவர்க்கு
போகமொடு போக்கியத்தைப் [x]பொங்கமுட னேயீயும்
200. வாகுடைய கற்பகங்கரண்! [x]மாபேயே நீகேளாய்;
முன்னொருகா லந்தனில் [x]மூற்றும்பே யானவர்கள்
[9]அன்னதியில் நன்னீரில் [x]அழகா யொருதுளிதான்
பட்ட [10]பொழுதில்ப் [x]பசாசுருவந் தானீங்கி
விட்டகதை யொன்றுசொல்வேன் [x]மிக்க வளமைசெறி
205. சேரமா னுரைகின்ற [x]செல்வ மலைநாட்டில்
பேருடனே யேவாழும் பேசுமறை யோர்தனிலே
வசுவன்வசுவ னென்று மறையோன் [11]அறிவுடனே

---

1. [யெ]
2. ரக்ஷிக்க; ல, ர; ல, ந மோனை
3. 'உ' அலகுபெறுதுபோலும்
4. பி ஒலியாதுபோலும்
5. ஆடிநின்ரூல்; 'கின்ரூல்' என்ற வழக்கு
6. உயர்வான புதுமை; செய்யும் புதுமை
7. [ன்ன] ந-ன
8. ற-பாடபேதம்
9. அந்நதி-எதுகை காண்க; ந-ன
10 பொழுதிலேதால் என்றும் பாடம்
11. [ந] நெற்புடனே என்றும் இருந்திருக்கலாம்

சுகியுடனே மண்ணுலகில் சுகமாய் வளர்நாளில்
